162004 315

AN : 162004

Total pages : 318

எட்டிபழுத்தென்ன? ஈயாதார்வாழ்க்கை

# FRIENDLY INSTRUCTO[R]

# நற்போதகர்

JULY. 1867.

CONTENTS.

Recreations in Astronomy. ... ... ...
Christian Church History.... ... ... ... 124
A Metrical Index to the Bible. ... 127
The Miracles of Christ. ... ... ... .. 128
On the Historical books of the Old Testament. ... ... ... ... ... ... 130
News. ... ... .. ... ... ... ... ... 139

அட்டவணை.

வானசாஸ்திரத்தைக் குறித்தது. ... ௱௨௨
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ௱௨௪
வேதாத்தியாயப் பொழிப்பு. ... ... ௱௨௭
கிறிஸ்துநாதர்செய்த அற்புதங்கள். ௱௨௮
பழயஏற்பாட்டுச் சரித்திராகமங்களின் பேரில் ... ... ... ... ... ௱௩௰
சொர்ப்பனம். ... ... ... ... ... ௱௩௧
சென்னபட்டணத்து சுதேச சபைப்பொக்கிஷம். ... ... ... ... ... ௱௩௩
நானாது சங்கதிகள். ... ... ... ... ௱௩௯

PALAMCOTTAH :
PRINTED AT THE CHURCH MISSION
1867.

எட்டியுடனேசேர்ந்த இலவு

ஜுலாய்மீ. ௲அ௱௬௰௭.

# (R)ECREATIONS IN ASTRONOMY.

## ...வானசாஸ்திரம்.

### VIII. அதிகாரம்.

...ரியனைச்சுற்றிய கிரகங்களின் விவரம்.

### 7. வியாழன்.

(தொடர்ச்சி.)

...னைச் சேர்ந்த சந்திரர்களை, முப்பது மடங்கு பெரிதாய்க்
...க்கத்தக்க ஒரு தூர திருஷ்டிக் கண்ணாடியாற் பார்க்கலாம்.
...ம் மப்பில்லாமல் வெளியாயிருந்தால் அதனிலும் தாழ்ந்த சத்
...ண்ணாடியாலும் பார்ப்பது அரிதன்று. அவைகள் கிரகத்தைச்
சுற்றிவருங்காலத்திலும் வேகத்திலும் வித்தியாசப்படும். எப்படி
யென்றால் முதலாஞ் சந்திரன் ஒருநாள் பதினெட்டு மணி நேரத்தி
லும், இரண்டாவது மூன்றுநாள் பதிமூன்று மணி நேரத்திலும், மூன்
றாவது ஏழுநாள் மூன்று மணி நேரத்திலும், நாலாவது பதினாறுநாள்
பதினாறு மணி நேரத்திலும் சுற்றிவருகின்றனவாம். கிரகத்துக்கும்
அவைகளுக்குமுள்ள தூரம் முறையே இரண்டு லட்சத்து அறுபதினா
யிரம், நாலு லட்சத்து இருபதினாயிரம், ஆறு லட்சத்து ஐம்பதினாயி
ரம், பதினொரு லட்சத்து ஐம்பதினாயிரம் மைல்போலிருக்கும். பூகோ
ளத்தின் விட்டத்துக்கு முதற் சந்திரனின் விட்டம் மூன்றிலொன்றும்,
...ண்டாவதின் விட்டம் முக்காற் பங்கும், மூன்றாவதின் விட்டம்
...கியும், நாலாவதின் விட்டம் மூன்றிலொன்றுமாகும்.

...மற்படி உபக் கிரகங்கள் வியாழனைச் சுற்றிய நடையினால் சாஸ்
...விர்த்திக்கு உண்டான அனுகூலம் சொற்பமல்ல. ஒளியானது
...ளவு அதிவேகமாய்ச் சென்றபோதிலும், எவ்விடத்திலும் ஒரே
...த்திலுண்டாகாமல் தூரத்துக்குத்தக்கதாய் காலதாமதமாகிற
...கண்டுகொள்ளவும், பூகோள விலாசத்தில் அந்தந்த விடங்
...சாந்தர ரேகைகளைத் தீர்மானிக்கவும் இந்த உபக் கிர
...கமாயின. அவைகள் கிரகத்தின் முகத்திலிருக்கையில
...ண்ணாடியாலும் அவைகளைப் பார்ப்பது அரிது. அங்
...கிற க்ஷணத்தில் மாத்திரம் கிரகத்தைப் பார்க்க
...குச் சற்று சமீபமாகி அதிகப் பிரகாசமாய் விளங்
...வியாழனின் பிரபையான முகத்தில் அவைகள்
...ல காணப்படுகிறதுமுண்டு. நமது சந்திரவிலா
...இந்த உபக் கிரகங்களிலும் பொட்டுகளிருப்ப
... காரணமென்று கே...



தோற்றப்படுகிறதும் குறித்த அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துகிறது. பூகோளத்திலுள்ள நமக்கு அதின் ஒரே புறமே எப்பொழுதுங் காணப்படாதே.

வியாழனைச் சேர்ந்த உபக் கிரகங்களில் வேறொரு விநோதமுங் கவனிக்கத்தக்கது. நமது சந்திரனைப்போல அவைகளும் தன்தன் அச்சில் ஒரு முறை சுற்றிக்கொள்ளுகிற காலத்திலேயே முதற் கிரகத்தையும் ஒரு முறை சுற்றிக்கொள்ளுகின்றது. வான சாஸ்திரிகள் எவ்விதமாய் நமது சந்திரனைப்பற்றி இவ்விசேஷத்தைத் தீர்மானித்தார்களோ அவ்விதமாகவே அவைகளைப் பற்றியும் தீர்மானித்தார்களாம். அவைகளின் முகத்திலுள்ள சில பொட்டுகள் பூகோளத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு காலத்துக்குக்காலம் மாறினபோதிலும், வியாழன் விஷயத்தில் இடமாறுகிறவைகளாய் விளங்குகிறதயில்லை. ஆகையால் மேற்படி உபக் கிரகங்கள் வியாழனுக்கு ஒரே முகத்தையே எப்பொழுதுங் காட்டுமென்று சொல்லத்தக்கது தானே.

குறித்த உபக் கிரகங்களில் மூன்றினுடைய அயனங்கள் வியாழனின் அயனப் பரப்போடு கொஞ்சங்குறைய பொருந்தி நிற்பதினால், அக்கிரகங்கள், சூரியனுக்கும் வியாழனுக்கும் இடையில் வருகையில், வியாழனுக்குச் சூரியனை மறைக்கும். நாம் எவ்வளவோ தூரத்திலிருந்தபோதிலும் நல்ல சத்துள்ள தூர திருஷ்டிக் கண்ணாடி ஒன்றினால் அத்தோற்றத்தைப் பார்ப்பது அரிதல்ல. உபக் கிரகங்களில் ஒன்று சூரியனுக்கும் வியாழனுக்குமிடையில் நிற்கையில் வியாழனின் முகத்தை ஒரு நிழல் மூடியிருந்தாற்போல தோற்றப்படும். என்றாலும் பூகோளத்துள்ள நமக்கு அதிகத் துலாம்பரமாய்க் காணப்படுகிற கிரகணங்கள மேற்படி சந்திரர் வியாழனுக்குப் பிற்புறத்தில் வரும்பொழுது அதின் நிழலுக்குள் அகப்பட்டு மறைவதனால் உண்டாகிறவைகளே. இவ்வுபக் கிரகங்கள் சீக்கிரம்சீக்கிரம் முதற் கிரகத்தைச் சுற்றிக்கொள்ளுங் காரணத்தால் கிரகணங்கள் அடிக்கடி நடக்கின்றன.

பூகோளத்திலிருந்து பார்க்கிற ஒருவனுக்கு வானதோற்றங்களுள் சிறப்பில் இதற்கு நிகரானது காண்பது அரிது என்னலாம். தூர திருஷ்டிக் கண்ணாடியால் அவைகளெல்லாவற்றையும் ஒரு நேரத்தில் கிரகத்தின் ஓர் புறமாய் ஒரே நேரிற் காணலாகும். இன்னொரு நேரத்தில் இருபுறமாயும் ஒரே நேரிலிருக்கவும் காணலாம். இரண்டொரு மணிநேரம் அவற்றைப் பார்த்துக்கொண்டேயிருந்தால் அவற்றின் இடச் சம்பந்தம் மாறுகிறதும் விளங்கும். சற்று நேரத்துக்குள் அவைகளில் ஒன்றோ இரண்டோ வியாழனுக்குப் பிறகேபோய் நிழலுக்குள் அகப்பட்டு மறைந்துகொள்ளும். அப்பால் சிறிதுநேரத்துக்குள் நிழலிலிருந்து வெளிப்படும். இவைகளே கிரணங்கள். மேற்படி சந்திரர் கிரகத்தை வெகுவேகமாய்ச் சுற்றிக்கொண்டு வருங்காரணத்தால் கிரகணங்கள் அடுத்து அடுத்து நடக்கும். இச்சந்திரர் கிரகத்தின் முகத்தைத் தாண்டிப்போவதையும் குறித்தவாறே உணர்ந்துகொள்ளலாம்.

வியாழனைச் சேர்ந்த சந்திரர் வியாழனின் நிழலுக்குட் பிரவேசிக்கத் தொடங்குகிற நேரங்களையும் நிழலைவிட்டு வெளிப்படுகிற நேரங்களையும் அவைகள் கிரகத்தின் முகத்தைத் தாண்டிப்போகிறதில் பிடிக்கும் நேரங்களையும் வான சாஸ்திரத்துக்குரிய பஞ்சாங்கங்களில் திட்டமாய்க் காட்டியிருக்கும். இதுகளைக்கொண்டு கடலோடிகள் உலகத்தின் எவ்விடத்திலிருந்தாலும் அவ்விடத்தின் ரேகாந்தரத்தை அறிந்துகொள்ள ஏதுவுண்டு எப்படியென்றால் அவர்களிருக்கின்ற இடத்

கும் நேரத்துக்கு ஒரு மணிநேரம் முந்தி நடக்கிறதாய்க் காணப்பட்
டால் அவர்கள் கிரினிச் பட்டணத்துக்கு மேற்கே பதினைந்து பாகை
தூரத்திலிருக்கிறோமென்று அறிந்துகொள்வார்கள். சூரியன் பூமி
யைச் சுற்றிவருவதில் உதயமாவது அஸ்தமனமாவது மத்தியானமா
வது கிழக்கிலுள்ளவர்களுக்கு முந்தியும் மேற்கேயுள்ளவர்களுக்குப்
பிந்தியும் உண்டாகவேண்டுமே. மேலும் பூகோளமானது இருபத்து
நாலு மணிநேரத்துக்கு ஒரு விசை தன்னைச் சுற்றிக்கொள்ளுகிறபடி
யால் சூரியன் மணி ஒன்றுக்கு பூமியில் பதினைந்து பாகை கடந்து
போகுமே. ஆகையால் கிரீனிச் பட்டணத்தில் பன்னிரண்டு மணியா
யிருக்கும்பொழுது அதற்கு பதினைந்து பாகைக்கு மேற்கிலுள்ளவர்
களுக்கு பதினொரு மணியாய் மாத்திரமிருக்கும். அவ்வாறே பஞ்சாங்
கத்திற் குறித்த நேரத்துக்கு ஒரு மணி பிந்தமானால், அப்போது
கிரினிச்சுக்குக் கிழக்கே பதினைந்து பாகை தூரத்திலிருப்பதாக அறிந்
துகொள்வார்கள்.

---

## CHRISTIAN CHURCH HISTORY.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

---

### 2. அதிகாரம்.

கிறிஸ்தவர்களுக்குண்டான முதலாவது துன்பமும், சவுலின்
குணப்படுதலும், சமாரியாவில் சுவிசேஷம் பிரபலியமானதும்,
தந்திரவாதியான சீமோன் வரலாறும் காட்டியது.

இஸ்தேவானுடைய மரணம் துன்பங்களுக்கு ஆரம்பமாய்மாத்திரமி
ருந்தது. அப்போஸ்தலர் இதற்குமுன் சனங்களால் நன்குமதிக்கப்
பட்டு கனிசமாய்க் கொண்டாடப்பட்டுவந்ததும், அவர்கள் அதிகம்
துன்பப்படாததற்கு ஒரு காரணம் என்று சொன்னோமே. அந்த
நல்லெண்ணம் வரவரக் குறைந்துபோயிற்று என்று நிதானிக்கத்தக்
கது. அப்போஸ்தலர் தேவாலயத்துக்கும் நியாயப்பிரமாணத்துக்
கும் கெடுதியாய்ப் பிரசங்கித்துவருகிறார்களென்ற அவதூறைச் சனங்
கள் பெரும்பாலும் நம்பியிருந்தாலுமிருக்கலாமே. தற்காலத்தில்
பட்டணத்தில் நிறைந்திருந்த பிறதேச யூதர்கள் அதை நம்பிக்கொண்
டார்களென்பதற்குச் சந்தேகமில்லை. பிரதான ஆசாரியர் வேதபார
கர் முதலியவர்களுடைய பகை சிறிதுகாலம் அடங்கியிருந்தாலும்,
இப்பொழுது அதிக மும்முரமாய் வெளிப்பட்டிருக்குமே. இப்பொழு
து உண்டான துன்பத்தில் விசேஷமாய் ஒரு வாலிபன் தன் சிரத்தை
யையுஞ் சாமர்த்தியத்தையுமெல்லாம் செலுத்தினதாக வாசிக்கி
றோம். கிறிஸ்துமார்க்கத்தை வேருடன் பிடுங்கிவிடத்தோன்றினவன்
...னோ என்று யாரும் எண்ணத்தக்கதாய் காச்சித்துக்கொண்டு வந்
...ன். இவனே சவுலென்னப்பட்டவன். சிலிஷியாநாட்டுத் தரிசுப்
...த்தான். பரிசேயவகுப்பைச் சேர்ந்தவன். பலகலை பயின்ற
...ர். இக்காலத்தில் மிகுதியும் பிரஸ்தாபமடைந்திருந்த சன்
பாட்...லைகளில் புறச்சமய சம்பந்தமான கலைகள
...ணுமென்று ...



வியாக்கியானியென்று கீர்த்தியுற்றிருந்த கமாலியேலின் பாதத்தில்
வேதநூற்பயிலும்பொருட்டு எருசலேமுக்குவந்திருந்தான். இந்தப்
பரிசேய வாலிபன் எவ்வளவு கல்வித்திறமையுள்ளவனோ அவ்வளவு
பதஷ்டகுணமும் மூர்க்கவெறிகொள்ளத்தக்க சுபாவமுமுடையவன்
என்றாலும் இக்குணங்கள் திவ்விய ஊழியத்திலன்றி மற்ற விஷயங்
களிற் செலுத்தத்தக்கவைகளல்லவென்றுணர்ந்து அடக்கிக்கொண்
டிருந்தவன். மேலும் துன்மார்க்கமும் மாய்மாலமும் நிறைந்த அக்
காலத்தில் சன்மார்க்கநெறி தவறாமல் நடந்து குற்றஞ் சாற்றுதற்கிட
மில்லாமல் விளங்கினவன்.

இப்பேர்ப்பட்ட படிப்புஞ் சுபாவமுமுள்ள சவுல் என்பவனுக்கு அப்
போஸ்தலர் பிரசங்கித்த உபதேசங்கள் மிகவும் விபரீதமாகவேதோன்
றியிருக்கும். அவன் தான் பரிசேயனானதால், மரித்தோர் உயிர்த்தெ
ழுதலுண்டென்று சொன்னதை ஒப்புக்கொள்வான். ஆனால் சிலுவை
யிலறையுண்ட ஒருவர் உயிர்த்தெழுந்தாரென்றுசொல்லி அதைக்
கொண்டு அவ்வுபதேசத்தை ஸ்தாபித்ததினாலே அவர்களை மதவெறி
கொண்டவர்களென்றும், எத்தரென்றும் பழிப்பான். மேலும் இவ்
வாறு சிலுவையிலறையுண்டவரே மேசியாவென்றும், நியாயப்பிர
மாணத்தைக் கைக்கொள்வதினால் நீதியுண்டாகாதென்றும், இயேசு
வின்பேரில் விசுவாசமில்லாமல் விருத்தசேதனத்தினாலும் தேவால
ய ஆராதனைக்குரிய மற்றும் கருமங்களினாலும் எவ்வளவேனும் பிர
யோசனமில்லையென்றும், இவை முதலிய நூதன உபதேசங்களைக்
கேட்கும்பொழுது சவுல் என்பவன் தன் முழுப்பெலத்தாலும் இவர்
களை யெதிர்ப்பது கடமையென்றுணர்ந்து வைராக்கியங்கொள்ளாதி
ரான். இந்தச் சமயத்தில் அவன் தன் சுயதேசத்தாரான பலரோ
டு பண்டிகைக்காக எருசலேமுக்குவந்திருந்தானென்றும், அப்போது
ஸ்தேவானை மடிவித்ததிற் சம்பந்தப்பட்டானென்றுந் தோன்றுகிறது.
இஸ்தேவானோடு தர்க்கம் ஆரம்பித்து அதில், பிறதேச யூதர்கள் எருச
லேமிற் பிரபலியப்பட்டிருந்த இப்புதிய உபதேசங்களை நிராகரிப்ப
தற்கு ஒப்புக்கொண்டிருப்பார்கள். சவுலும் அவர்களோடே சேரா
திருப்பானோ? சவுல் ஸ்தேவானைவிட கல்வித்திறமையுள்ளவனாயிருந்
திருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் ஸ்தேவானே நியா
யமெடுத்துக்காட்டினதில் மேற்கொண்டானென்று தோன்றுகிறது.
அதினாலேயே அவன் சத்துருக்கள் உக்கிரங்கொண்டு சீறி அவனை
இழுத்து அடித்துக் கொடுமைசெய்யத் தலைப்பட்டார்கள் என்றாலும்
சவுலின் வைராக்கியம இதோடு திருப்திகொள்ளவில்லை. இப்பொ
ழுது முதல் விசையாகச் சிந்தப்பட்ட கிறிஸ்தவனுடைய ரத்தத்துக்
கும் குற்றமுள்ளவனானான். சவுல் தானே ஒருவேளை ஸ்தேவான்மீது
கல்லெறியாமலிருந்தாலுமிருந்திருக்கலாம். எப்படியும் ஸ்தேவானைக்
கொலைசெய்ய மற்றவர்களை யேவினானென்பதற்கும் ஸ்தேவான்
தன் ஆவியைத் தேவனுக்கு ஒப்புவித்தபொழுது கூட நின்றானென்ப
தற்கும் சந்தேகமில்லையே.

அப்போஸ்தலர் நடப்பித்த அற்புதங்களினாலுண்டான அனுகூலத்
தைக் கெடுக்கிறதற்கு இப்படிப்பட்ட ஒருவன் தோன்றினதால் பிர
தான ஆசாரியனும் சங்கத்தாரும் மிகுதியும் சந்தோஷப்பட்டிருப்
பார்கள். இஸ்தேவானைக் கொலைசெய்தபின் கிறிஸ்தவர்களான மற்
றநேகருக்கும் அநியாயஞ்செய்யத் தொடர்ந்தார்கள். பட்டணத்தி
லிருந்து ... கப்பிக்கொண்டவர்களுமுண்டு. மீதியானவர்களில்

யெ கடவுள். சுழல்கால்சுழல்காற்று. ஓதம்கடல். ஆழ்கடல்.

அப்போஸ்தலர்கள் பட்டணத்திலேயே நிலைத்துக்கொண்டார்கள். உதவிக்காரரும் சபையாரில் மிகுதியானவர்களும் பற்பல இடங்களுக்குப்போய்ச் சரணமடைந்தார்கள். கிறிஸ்து சபைக்குண்டான இந்த முதலாந் துன்பத்தில் அதிக ஊக்கமும் வைராக்கியமும் பாராட்டினவர்களில் சவுல் முக்கியமானவன். பண்டிகைமுடிவில் அவன் எருசலேமைவிட்டுப் புறப்படுகிறசமயத்தில் மற்ற இடங்களிலும் இவ்விதமே கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தும்படி பிரதான ஆசாரியரிடத்தில் உத்தரவுகேட்டுப் பெற்றுக்கொண்டான்.

அவன் தருசுவிலிருந்து எருசலேமுக்குப் பலமுறையும் பிரயாணம் பண்ணினவனானதால் தமஸ்கு நகரத்தைக் குறித்துக் கேட்டும் பார்த்தும் நன்றாயறிந்திருப்பானே. இக்காலத்தில் அதைப் போய்ப் பார்த்துவந்ததினாலேயோ, அவ்விடத்திலிருந்து பண்டிகைக்கு வந்திருந்த யூதர்கள் சொல்லக் கேள்விப்பட்டதினாலேயோ அந்நகரத்தில் ஆணும் பெண்ணுமான பலரும் இந்தப் புதிய உபதேசங்களை யனுசரித்திருக்கிறார்களென்று அவனுக்குத் தெரிந்தது. அந்நகரம் தற்காலத்தில் அரபிதேசத்து சிற்றரசனும் மகா ஏரோதுவின் மக்களில் ஒருவனான அந்திப்பா ஏரோதுக்குப் பெண்கொடுத்த மாமனுமான அரீத்தா என்றவன் வசத்திலிருந்தது. ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியைச் சேர்த்துக்கொண்டபொழுது அரித்தாவின் மகள் புருஷனை விரோதித்து தகப்பனிடம் திரும்பிவிட்டதின்பேரில், அரீத்தா தன் மருமகனுக்கு விரோதமாய்ச் சண்டைதொடுத்து முறியடித்தான். அத்தறுவாயில் ரோமர் ஏரோதுக்குத் துணைநிற்க மறுத்ததால், அரித்தா அவனிராச்சியத்தில் ஓர் பாகத்தைக் கைப்பற்றினதோடு தமஸ்கு நகரிலும் ஓர் காப்புச் சேனையை வைத்துக்கொண்டான். எப்படியும் ரோமருக்குப் பயந்துகொண்டிருந்த அவன் அப்பட்டணத்தில் ஏராளமாயிருந்த யூதர்களை நயப்படுத்திக்கொள்ள விரும்புவானே. அதினால் சவுல் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்க்கொண்டிருந்த நோக்கம் சித்திபெறுதற்கு அதுவே ஏற்ற இடமென்று நினைத்திருப்பான்.

தமஸ்கு நகரிக்கும் எருசலேமுக்கும் சுமார் நூற்றைம்பதுமைல் தூரம். சவுலின் இந்தப் பிரயாணசம்பந்தமாகவே சுவிசேஷம் அவ்வளவு தூரம் பரவியிருந்ததாய் முதலாவது அறிகிறோம். இதற்குள்ளே சுவிசேஷம் பலதேசங்களிற் பிரவேசமாயிற்றென்று நினைக்கவும் இடமுண்டு. பெந்தெகொஸ்துப் பண்டிகைநாளில் ஞானஸ்நானம்பெற்றுக்கொண்ட மூவாயிரம்பேருக்குள் சிலராவது பிறதேசங்களிலுள்ள யூதராயிருந்திருக்கவேண்டுமே. அவர்களால் இப்புதிய உபதேசங்கள் இரண்டொருவாரத்துக்குள் உலகத்தில் தூரமான தேசங்களிலும் சென்றிருக்குமல்லவா? ஆகவே தமஸ்குவில் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்களென்று சவுலுக்குத் தெரிந்தது ஆச்சரியமல்ல. அவ்விடத்திலுள்ள யூத அதிகாரிகளுக்கு எருசலேம் பிரதான ஆசாரியனிடத்திலிருந்து கடிதங்களைப் பெற்றுக்கொண்டு, அங்குள்ள கிறிஸ்தவர்களைச் சீக்கிரம் சிறைபிடித்துக்கொண்டு திரும்பும் நோக்கமாய்ப் புறப்பட்டான். தேவனோ வேறுவிதமாய்த் தீர்மானித்திருந்தார். சபையைப் பாழாக்கிக்கொண்டுவந்த சவுல் தான் அழிக்கத் தேடினமார்க்கத்தைப் போதிக்கிறவனாகவேண்டுமென்பது தேவ சித்தம். இப்படிப்பட்ட மாறுதல் நடக்கத் தீர்மானித்தவருக்கு அதை நிறைவேற்றுவது வருத்தமோ!



# A METRICAL INDEX TO THE BIBLE.

# வேதாத்தியாயப் பொழிப்பு.

## யோபு.

(தொடர்ச்சி.)

அதிகாரம்.

29 ஏளித முற்ற யோபு இயம்புமுன் னிலைமை தன்னை
30 மீளவுந் தனக்கு வந்த நிந்தனை தனைவி ளம்பல்
31 நாளுமே தனது சுத்த நடையினை நவிலு மார்க்கம்
32 கேளனும்இலியூவென்போன்ஙளத்திடத்தொடங்கல்சொற்றல்.
33 ஐயுறு திலியூ தேவற் காயறை வான்பல் ஞாயம்
34 மெய்யனில் ஞாய பேதம் விளங்கிடா தெனவி ரித்தல்
35 வைதலுற் றிரங்கப் பாவம் நசிவதில் லெனவு ரைத்தல்
36 ஐயவன் செயற்க டங்க றகுஇயா மெனத்தொ குத்தல். (124)
37 ஒப்பிலான் கிரியை ஞான மிவற்றினை யுரைக்கும் லீயு
38 தப்பிலான் சுழல்கா னின்று தாசன்யோ பினுக்கி யம்பல்
39 செப்பினுர் காட்டா டாதி செந்துவின் விசேஷந் தன்னை
40 அப்புறம்பீகேமோத்தின்வலிமையைஅறைந்தாரெந்தை. (125)
41 ஓதமுங் கலங்கச் செய்லி வியாதனின் வலியு ரைத்தல்
42 வேதனை நீங்கி யோபு மீட்டும்வாழ் வெய்தல் சொற்றல்
மேதினி யோர்க டம்மின் வினையொழித் தாளும் யேசு
நாதனை நாளு மேத்தி யோபின்புத் தகம்ந வின்றும். (126)

## தாவீதின் சங்கீதங்கள்.

(வேறு.)

சங்கீதம்.

1 அத்தனைத்தொழு தய்யவன் வாழ்வினை யறைதல்
2 பத்த ருக்கருள் கிறிஸ்துவி னுளுகை பகர்தல்
3 புத்தி ரற்கொழித் தோடையிற் புகன்றிடு கீதம்
4 உத்த ரந்தரு மிறையினை வேண்டுத லுரைத்தல். (127)
5 ஆதி யின்னரு வினைப்பினை வேண்டுத லறைதல்
6 வேத னையுறுங் காலையிற் புலம்புதல் விளம்பல்
7 பேத மேபுரி கூஷின்மா கொடுமையைப் பேசல்
8 நாத னுங்கிறிஸ் தியேசுவின் மகிமையை நவிலல். (128)

ஏளிதம்=நிந்தை. கேளன்=நண்பன். ஙளத்தல்=பேசுதல். ஒப்பிலான்=தனக்குவமையில்லாதனுகிய கடவுள். தப்பிலான்=குற்றமொன்றுமில்லாதனுகிய கடவுள். சுழல்கால்=சுழல்காற்று. ஓதம்=கடல். ஆதி=கடவுள்.

## XVIII. பிறவிக் குருடனுக்கு பார்வை அளித்தது.

யோவா. 8. 9.

(தொடர்ச்சி.)

இந்த அற்புதத்தைச் செய்வதற்கு இரக்ஷகர் சொல்லுகிற காரணத்தைப் பாருங்கள். "பகற்காலமிருக்குமளவும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியையைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யாத இராத்திரி வருகின்றது. என்ன மோசம் நேரிட்டாலும் இந்த கிரியையை நான் நிறைவேற்றவேண்டும். நான் சனங்களுக்குள் நடமாடி நன்மைசெய்யக்கூடிய பகற்காலமாகிய என் சீவநாள் சீக்கிரம் முடியும். இப்படிப்பட்ட கிரியையைச் செய்யக்கூடாதபடிக்கு இராத்திரியாகிய மரணம் சீக்கிரம் வரும்." பகலிலே அவர் வேலைசெய்ததுபோல பகலின் வெளிச்சமாயுமிருந்தார். பகற்காலம் வேலைக்கேற்றது. அப்போது மனிதன் தன் வேலைக்கும் தன் பண்ணைக்கும் சாய்ங்காலமட்டாக புறப்படுகிறான். இரவிலோ வேலைசெய்கிறதுகூடாது. இரக்ஷகர் பூமியில் இருக்கிறவரையில் பூமிக்கு ஒளியாயிருக்கிறேன் என்று சொன்னதுபோல, குருட்டுக் கண்களை திறக்கவும், ஆத்துமாவுக்குரிய பரம ஒளியை ஈகிறதிலும் தம்முடைய பகல் காலத்தை செலவழித்தார். அவர் சொஸ்தமாக்கின வகையைப் பாருங்கள். இப்படி அவர் சொல்லி பின்பு தரையிலே துப்பி உமிழ்நீரினால் சேறுண்டாக்கி அந்தச் சேற்றை குருடனின் கண்ணில் பூசினார். நம்முடைய இரக்ஷகர் மாற். 7. 8ம் அதிகாரங்களில் குருடனின் கண்களைத் திறந்தபோதும், செவிடனுடைய காதைத் திறந்தபோதும் உமிழ்நீரை பிரயோகித்ததாக பார்க்கிறோம். இது அவசியமென்றல்ல. ஏனெனில், வேறு சமயங்களில் தம்முடைய வார்த்தையைக் கொண்டு மாத்திரம் குருடருக்கு பார்வையளித்திருக்கிறார். மத்தேயு 20. 30—34. ஒருவேளை இவன் பெலவீன விசுவாசத்துக்கு உதவியாக இப்படிச் செய்திருப்பார். நீ சீலோவாக்குளத்தில் போய் கழுவு என்று சொன்னதின் பொருளென்ன? கழுவுகிறதினால் பார்வை உண்டாகுமென்றல்ல, இவனுடைய விசுவாசத்தைச் சோதிக்கும்படி அப்படிச் சொன்னார். யோவான் அப்போஸ்தலன் இந்த இடத்தில் சீலோவா என்ற வார்த்தைக்கு அருத்தம் இன்னதென்று அறிவிக்கிறார். கழுவும்படி குருடன் அனுப்பப்பட்டதற்கு இந்த வார்த்தையின் பொருள் ஒத்திருக்கிறதினாலேயோ, இரக்ஷகர் அனுப்பப்பட்டவரென்று அழைக்கப்பட்டதினாலேயோ இன்ன காரணமென்று திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை. இங்கே இரக்ஷகர் குருடனை அனுப்புகிறதாயிருந்தபோதிலும் அவர் பிதாவினால் அனுப்பப்பட்டவராயுமிருந்தார். யோ. 7. 29, 8, 42. இதினால் நமது இரக்ஷகர் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுகிறார். எபிரே. 3. 1. சீலோவாவின் தண்ணீர் ஞானஸ்நான சுத்திகரிப்புக்கும், ஆத்துமத்தின் உள்ளான சுத்திகரிப்புக்கும் முன்னடையாளமாயிருக்கலாம். இதினாலந்த பேர் தற்செயலாய் வரவில்லை என்று தோன்றுகிறது.

அந்தப்படியவன்போய் கழுவி பார்வையடைந்து திரும்பிவந்தான். இரக்ஷகரண்டைக்கு அவன் திரும்பி வந்ததாகத் தோன்றவில்லை. அவன் சிநேகிதரும் அயலகத்தாரும் அவனை கண்டவுடனே ஆச்ச-



ரியப்பட்டு இவன் அவன் தானோ என்று சந்தேகப்பட்டார்கள். பார்வையடைந்ததினால் அவன் முகமும் வேறுபட்டது. இவன் எப்படி பார்வையடைந்தானென்றும், இவனுக்கு பார்வை யளித்தது இன்னாரென்றும் அறிந்துகொள்ள ஆசையுள்ளவர்களாய் பரிசேயரிடத்திலவனை அழைத்துவந்தார்கள். அவனுக்கு விரோதமாயாவது, இரக்ஷகருக்கு விரோதமாயாவது தீங்குசெய்யவேண்டுமென்று அவர்கள் எண்ணவில்லை. ஓய்வுநாளிலது நடந்தபடியால் அதையிட்டு சந்தேகங்கொண்டு பரிசேயரிடத்தில் வந்ததாகத் தோன்றுகிறது. சனதிரீம் சங்கத்தில் பரிசேயர் மாத்திரமல்ல, சதுசேயருமிருந்தார்கள். அப். 23. 6. காய்பா ஓர் சதுசேயன். ஆகிலும் பரிசேயர் தான் தொகையில் அதிகப்பட்டவர்களாயும், இரக்ஷகருக்கு முக்கிய விரோதிகளாயுமிருந்தார்கள்.

எவ்விதமாய் பார்வையடைந்தாயென்று கேட்டபோது சேற்றை என் கண்களில்மேல் வைத்தார், பின்பு நான் கழுவினேன், இப்பொழுது காண்கிறேனென்றான். அவன் குருடனாயிருந்தபடியால் உமிழ்நீர் துப்பினதைப் பார்க்கவில்லை. அது ஓய்வுநாளில் நடந்தபடியால், அவர்செய்த அற்புதச் செய்கையை கறைப்படுத்தப்பார்த்தார்கள். அது அற்புதமாயிருந்தபோதிலும் ஓய்வுநாளிலதைச்செய்ததினால் அவர் தேவனாலனுப்பப்பட்டவரல்ல, பிசாசின் வல்லமையினாலே அதைச் செய்தார் என்றெண்ணினார்கள். வேறொரு சமயத்தில் இவன் பிசாசுகளின் தலைவன் ஆனபடியால் பிசாசுகளைத் துரத்துகிறான் என்று சொன்னதுபோல இப்பவும் நினைத்தார்கள். ஆனால் சனதிரீஞ் சங்கத்தில் நீக்கோதேமு, யோசேப்பு என்றவர்களைப்போல தெய்வபத்தியுடைய சிலர் இருந்தபடியால் பாவியாயிருக்கிற ஒருவன் இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்வதெப்படி என்றாக்ஷேபித்தார்கள். இப்படி கேள்வியாய் அவர்கள் கேட்டதினால் சந்தேகங்கொண்ட பெலவீனராய் இரக்ஷகர் பட்சத்தில் பேசினார்களென்று தோன்றுகிறது. உன் கண்களைத் திறந்த அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாயென்று குருடனைக் கேட்டபொழுது அவர் தீர்க்கதரிசியாயிருக்கிறாரென்றான். பராபரனுடைய குமாரனென்றும், மேசியாவென்றும் அவன் அறியவில்லை. இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்தபடியால் அவர் பராபரனால் வந்த போதகரென்றுமாத்திரமறிந்தான். யோவா. 3. 2: 4. 19: 6. 14: அவனுடைய அபிப்பிராயத்தையறியவேண்டுமென்று கேட்கவில்லை. அவன் வாயிலிருந்து தங்கள் நோக்கத்துக்கிசைவானது ஏதாவது புறப்படுமென்றெண்ணிக் கேட்டார்கள். தங்கள் கருத்தையவனறிந்துகொண்டு அதற்கிசைவாகப்பேசுவான் தங்கள் காரியம் வாய்க்கும் என்று நினைத்தார்கள். அவனோ அவர்களுக்கு பயப்படாமல் கர்த்தர் தனக்குக்கொடுத்த தயிரியத்தைக்கொண்டு தனக்குத் தெரிந்த சத்தியத்திலுறுதியாய் நிற்கிறான். கிரியை செய்தவனும் அவன் செய்த கிரியையும் தெய்வீகமுடையதென்று உறுதியாய் சாதித்தான். அவன் மூலமாய் காரியம் வாய்க்கவில்லை என்று கண்டவர்கள் அவன் பெற்றோரை வரவழைத்து, இவன் குருடனாய் பிறக்கவில்லை என்று சொல்லும்படி பிரயாசப்பட்டார்கள். அவர்களாலுமிவர்கள் காரியம் பலிக்கவில்லை. அவர்களைப் பார்த்து மூன்று கேள்விகள் கேட்டார்கள். இவன் உங்கள் குமாரனோ? இவன் குருடனாய்ப் பிறந்தவனோ? இவனுக்கெப்படிப் பார்வை உண்டாயிற்று என்றார்கள். முந்தின இரண்டு கேள்விகளுக்கு இவன் எங்கள் குமாரனென்றும், குருடனாய்ப் பிறந்தானென்றும் ஒத்துக்கொண்டார்கள். மூன்றாவது கேள்-

விக்கோ இவன் பெரியவனாயிருக்கிறானே இவனிடத்தில் கேளுங்கள் தன்னைக்குறித்திவனே பேசுவானென்றார்கள். ஏசுவை கிறிஸ்துவென்றறிக்கையிடுகிறவனை சபைக்குப் புறம்பாக்கவேண்டுமென்று சங்கத்தார் தீர்ப்புச்செய்திருந்தபடியால் பயந்து இப்படிச் சொன்னார்கள். சனகிரீஞ் சங்கத்தார், ஏசுவை கள்ளனென்றும் எத்தனென்றுஞ் சொல்லாவிட்டாலும், தாங்கள் அவரை மேசியாவென்று ஒப்புக்கொள்ளுமுன்னே ஒருவருமவரை ஏற்றுக்கொள்ளக்கூடாது, அப்படி ஏற்றுக்கொள்ளுகிறவர்களை செப ஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டும் என்று ஒழுங்குசெய்திருந்தார்கள். சபைக்கு புறம்பாக்குதல் யூதருக்குள் மூன்றுவகையாயிருந்தது. இது கொடிய தண்டனையாயிருந்தபடியினாலும், தம்முடைய சீஷர் இதற்கு உள்ளாகவேண்டியது வருமென்று இரக்ஷகர் அறிந்திருந்தபடியாலும் இதுகளைக்குறித்து அடிக்கடி பேசியிருக்கிறார். முதலாவது முப்பதுநாள் செப ஆலயத்துக்கு புறம்பாக்கினார்கள். இதினால் சீரடையாவிட்டால் இன்னும் முப்பது நாளைக்காவது அதிகமாயாவது சபைக்குப் புறம்பாக்கினதுமல்லாமல், அவனை சபித்து அவனோடுமவன் குடும்பத்தோடும் ஐக்கியமாய் இருக்கக்கூடாதபடிக்கு விலக்கி வைத்தார்கள். கடைசியாக இதிலும் சீரடையாவிட்டால் முற்றிலும் சபைக்கு புறம்பாகத்தள்ளி முற்றுமவனை தெய்வகாரியங்களுக்கு விலக்கிவைத்தார்கள். இதைத்தான் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிறதென்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறான். 1 கொரி. 5. 5: 1 தீமோ. 1. 20. இந்த மூன்றுவிதமான தண்டனையைக்குறித்துத்தான் இரக்ஷகர் லூக்கா. 6. 22 ல், பேசுகிறதாக சிலர் நினைக்கிறார்கள்.

———— 0 ————

## பழையவேற்பாட்டுச் சரித்திர ஆகமங்களின்

### உண்மையை ரூபிக்கும் நோக்கமில்லாத இசைவுக் குறிப்புகள்.

(தொடர்ச்சி.)

XV. முதலாவது. ஒருவன் யோசுவாமுதல் நாளாகமம் வரையிலுமுள்ள சரித்திர ஆகமங்களைக் கவனமாய் வாசித்தும், எப்பிராயீம் ஒரு தலைமையான கோத்திரமாயிருந்ததென்றும், அநேகரால் அப்படி எண்ணப்பட்டு வந்ததென்றுங் கண்டுபிடியாமல் போகலாம். இந்த புஸ்தகங்களில் எங்குஞ் சிதறுண்டு ஒன்றோடொன்று சம்பந்தப்படாத பல வாக்கியங்களை ஒன்றாய்ச் சேர்த்துப் பார்ப்பதினாலேயே அது தெரியவரும். அந்தக் கோத்திரம் மேன்மையடைகிறதற்கு ஆசரிப்புக் கூடாரம் அதில் ஏற்படுத்தப்பட்டது முக்கியமான காரணமாயிருந்ததென்பதும் இப்படியே தெரியவரும். ஆசரிப்புக்கூடாரம் தற்செயலாய் அங்கே ஏற்படுத்தப்பட்டதென்று சிலர் சொல்லுவார்கள். நாமோ அப்படியல்ல, அது தெய்வச்செயலென்று சொல்லவேண்டும். எல்லா இஸ்ரவேலரும் முந்நூறு வருஷங்களாக தேவனை ஆராதிக்க சீலோவுக்குப்போனது எப்பிராயீம் கோத்திரத்திற்கு மிகவும் அநுகூலமாயிருந்தபோதிலும், அதினாலே உடம்படிக்கைப்பெட்டி அங்கேயிருந்த காலத்தில் மற்றக் கோத்திரங்களைவிட எப்பிராயீமுக்கு மேன்மையுண்டாயிற்றென்றாவது, உடம்படிக்கைப்பெட்டி அதைவிட்டு எடுக்கப்பட்டபோது, யூதாவின்மேல் அதற்குக் காய்மகாரமுண்டாயிற்றென்றாவது, யூதாவும் எப்பிராயீமும் பின்னுக்கு மேன்மையடைவார்களென்று யாக்கோபு சொன்ன தீர்க்கதரிசனம் இதினால் நிறைவேறிற்றென்றாவது எங்குந் தெளிவாய்க் காட்டவேயில்லை. ஆசரிப்பின் கூடாரம் சீலோவிலே ஸ்தாபிக்கப்பட்ட சங்கதியைச் சொல்லியிருக்கிறதில் சீலோ எந்தக் கோத்திரத்தில் இருக்கிறதென்று முதலாய்க் காட்டவில்லை. நாமாய் விசாரித்துப் பார்த்து அது எப்பிராயீமிலிருக்கிறதென்று நிதானிக்கிறோம்.



இரண்டாவது. யூதாவுக்கும் பென்யமீனுக்கும் இருந்த ஐக்கியத்தைக்குறித்தும் இப்படியே சொல்லலாம். அவைகள் ஒன்றுக்கொன்று சமீபித்திருந்ததைத் தவிர நாமாய் அறிந்துகொள்ளவேண்டியதாயிருக்கிறது. மற்றக் கோத்திரங்கள் ஒன்றோடொன்று சேர்ந்திருந்ததுபோல இவர்களும் ஒருவருக்கொருவர் உடந்தையாயிருந்தார்களென்றும் பொதுவாய்ச் சொல்லலாமேயொழிய வேறு காரணங்கள் எங்குஞ் சொல்லப்படவில்லை. ஆகிலும் ஒரு இடத்தில் முதல் அரசனாகிய சவுல் பென்யமீன் கோத்திரத்தானென்றும், இரண்டாம் அரசனாகிய தாவீது யூதாக்கோத்திரத்தைச் சேர்ந்தவனென்றும் நாம் பார்க்கும்போது, இந்த சலாக்கியத்தினாலேயே அவ்விரண்டிற்கும் ஒரு வகையான ஐக்கியமுண்டென்று எண்ணலாமே. சவுல் தாவீதென்பவர்களுடைய குடும்பங்களும் விவாக சம்பந்தத்தினாலே இணைக்கப்பட்டபடியினாலே அந்த ஐக்கியம் உறுதிகொண்டது. மேலும் தேவாராதனைக்கென்று கட்டப்பட்ட ஆலயம் ஒரு வாக்கியத்தில் யூதாவிலிருந்ததென்றும், வேறொரு வாக்கியத்தில் பென்யமீனிலிருந்ததென்றும் சொல்லியிருக்கிறபடியால் அது இரண்டு கோத்திரங்களின் எல்லையில் கட்டப்பட்டிருந்ததென்றும், தேவாலயமும் இரண்டு கோத்திரங்களுக்கும் நடுவே கட்டப்பட்டிருந்ததென்றும் அறிந்துகொள்ளுகிறோம். இதுகளையும் இன்னும் இப்படிக்கொத்த குறிப்புகளையும் பார்க்கும்போது எழுதினவர்கள் அந்த நோக்கமாய் எழுதாவிட்டாலும் அந்த ஐக்கியத்திற்கு இது போந்த காரணமென்று லேசாய் அறிந்துகொள்ளலாம்.

மூன்றாவது. எரோபெயாம் சீகேமைத் தனக்கு இருப்பிடமாகவும், தாணை விக்கிரக ஆராதனைக்கேற்ற இடமாகவுந் தெரிந்துகொண்டதற்குக் காரணம் சொல்லப்பட்டிராவிட்டாலும், விவேகமாய் அவைகளைத் தெரிந்துகொள்ளுகிறதற்குப் போந்த காரணமிருந்தது. அவன் சதியோசனை வெளிப்பட்டபோது அல்லது அகியா சொன்ன தீர்க்கதரிசனத்தினால் சாலோமோன் பயமடைந்தபோது அவன் எகிப்துக்கு ஓடி சாலோமோன் மரித்தபிறகு திரும்பிவந்ததாகச் சொல்லியிருந்தபோதிலும், எகிப்தில் நடத்திவந்த விக்கிரக ஆராதனையைக் கண்டதினாலே கன்றுக்குட்டிபோல விக்கிரகங்களைப் பண்ணுவித்தான் என்று சாடையாய்ச் சொல்லுகிற குறிப்பை முதலாய்க் காணோம். ஆகிலும் இரண்டும் ஒன்றுக்கொன்று இசைவாயிருப்பதுமல்லாமல், சரித்திரம் உண்மையுள்ளதென்பதை உறுதிப்படுத்துகிறதுமாயிருக்கிறது.

———— 0 ————

## சொர்ப்பனம்.

சர்ப்பங்களுக்கு அஞ்சுகிறவனாகிய நான் என் பிரயாணத்தில் நட்க்

துபோகையில் காட்டில் இருளுண்டாகவே அதில் என் தலையைச் சாய்க்கவேண்டியதாய் நேரிட என் தலைமாட்டில் நேத்தியான கல் ஒன்றைவைத்துத் தூங்கும்போது ஒரு சொர்ப்பனங்கண்டேன். அதாவது;

திரள்கூட்டமான பாம்புகள் எனக்கு நேராய் வந்தது. நான் பார்த்துக்கொண்டேயிருக்கும்போது, அவைகள் எனக்குச் சமீபமாய் வர வர நான் பயமடைந்து அவைகளைக் கொல்லவேண்டுமென்று துணிந்து என் கையில் ஒன்றுமில்லாதிருக்க, என் தலைமாட்டிலிருந்த கல்லையெடுத்து பெரிதுஞ் சல்தியில் கொல்லுகிறதுமான விஷச்செந்துக்களைக் கொல்லவே, மற்றவைகள் உடனே ஓடிவிடாமலும் வேகங்கொண்டெழும்பாமலும் அடங்கிக்கிடக்கிறதுபோல் கண்டு, அவைகள் எனக்குப் பயப்படுகிறதாக நினைத்து அவைகளைக் கொல்லாமல், எனக்குச் சமீபமாய் நகர்ந்துகொள்ள இடங்கொடுத்ததுமன்றி அவைகளுடன் விளையாடினேன். இப்படியிருக்க அவைகள் என்னைக் கடித்து மோசம்போக்காதென்று அசதியாய், எண்ணமில்லாதிருக்கும்போது அவைகள் வர வர பெலன்கொண்டு என்னைக் கடிக்கவே நான் சல்தியில் மரித்து பிரேதக்குழிக்குட்பட்டவனாகக்கண்டு திடுகென்று விழித்துக்கொண்டு என் சொர்ப்பனத்திற் சிந்தையாயிருக்கும்போது நான் அறிந்துகொண்டதாவது;

பாவங்களுக்கு அஞ்சுகிறவனாகிய நான் மோக்ஷபிரயாணத்திற் செல்லும்போது பாவ இருள்சூழ்ந்த ஓரிடத்தில் திகைத்திருந்தேன். அப்போது பசாசானவனால் விடப்பட்ட பல பாவங்கள் என்னை மோசம்போக்கவந்ததாகவும் அவைகளில் எது என்னை அதிகமாய் மோசம்போக்கும் பெரிய பாவங்களென்றெண்ணினேனோ அவைகள் என்னைச் சல்தியில் மோசம்போக்கிவிடுமே என்று எண்ணி "கோடிக்கல்" ஆகிய இயேசுவைக்கொண்டு அவைகளை ஜெயித்தும் சிறிய பாவங்கள் என்றெண்ணுகிறவைகளில் சந்தோஷப்பட்டும் அவைகளைச் செய்தும் வந்ததாகவுங் கண்டுகொண்டேன். இப்படி அவைகள் என்னை மோசம்போக்காதென்றெண்ணி பல நாட்களாய்ச் செய்துகொண்டேவர அவைகள் என்னில் பலத்துக்கொண்டு கடைசியில் ஒரு நாள் என்னை மோசம்போக்குமென்றுஞ் "சடுதியிலுங் குணமாகுதலில்லாமலும் நொறுங்குண்பேன்" என்றும் நரக பாதாளத்துக்கே ஆளாவேனென்றுமறிந்துகொண்டேன்.

இதை வாசிக்கிற நண்பர்களே! கிறிஸ்தவர்களில் அநேகர் பெரிய பாவங்களென்று தாங்கள் எண்ணுகிறவைகளைக் கொடிய பகையாய்ப் பகைத்து அவைகளைத் தங்கள் இரட்சகருடைய மரணத்தைக்கொண்டு ஜெயித்துத் தள்ளிவிட்டாலுஞ் சிறியவைகளென்றெண்ணுகிற பாவங்களில் சந்தோஷப்பட்டும் பின்பு நடப்பித்துக்கொண்டும் வருகிறார்கள். ஆனால் அவைகளே பலத்துக்கொள்ளும் என்றும் அவைகளே தங்களை மோசம்போக்குமென்றும் எண்ணுகிறதில்லை. ஆகையால் இதை வாசிக்கிறபோதே சிறியவைகளென்று நீங்கள் எண்ணுகிற பாவங்களை வெறுத்துத்தள்ள உங்களை மன்றாடுகிறேன்.

தேவன் பாவங்களைப் பகைக்கிற பரிசுத்தர். ஆதலால் அவருக்கு முன்பாக சிறு பாவங்களை நடப்பிக்கிறவர்களும் பெரும் பாதகங்களை நடப்பிக்கிறவர்களும் ஒன்றுபோலவே அசுத்தராயிருக்கிறார்கள். ஆகையால் எப்பாவங்களுக்கும் இடங்கொடாமல் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

விபசாரஞ்செய்த இஸ்ரவேலருக்குங், களவுசெய்த ஆகானுக்கும்,



பொய்சொன்ன அனனியா சப்பீராள் என்பவர்களுக்கும், பெருமையான ஏரோதுவுக்கும், தன்னூரை எட்டிப்பார்த்த லோத்துவின் பெண்சாதிக்கும் வந்த தண்டனை ஒன்றே என்பதையும் நினைத்துக் கொள்ளுங்கள்.

———— 0 ————

## சென்னபட்டணத்து

# சுதேச சபைப்பொக்கிஷம்.

### சென்னபட்டணத்திலுள்ள சர்ச்சுமிஷன் சங்கத்தைச்சேர்ந்த சுதேச சபையாருக்கு எழுதிக்கொள்வது.

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவில் பிரியமான சகோதரர்களே!

உங்களை இவ்வளவுகாலம் சிநேகித்து, உங்களுக்காகக் கவலைப்பட்டு வந்திருக்கிற கமிட்டிமார் நான் கொஞ்சக்காலம் உங்களோடே நெருங்கின சம்பந்தங்கொண்டிருக்கும்படி ஒரு புது உத்தியோகத்தில் என்னை நியமித்திருப்பதால், அதைக்குறித்து இக்கடிதத்தின் மூலமாய்ச் சில காரியங்களைச் சொல்ல விருப்பமுற்றிருக்கிறேன்.

சென்னபட்டணத்திலுள்ள திருச்சபையின் விருத்தாந்தம் உங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கும். அதைச் சற்று யோசித்துப்பாருங்கள். அநேக வருஷங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தில் பரோபகாரகுணத்திலும், பக்தியிலும் சிறந்த கிறிஸ்தவர்கள், நீங்கள் பேரின்பவாழ்வை அடையும் மார்க்கத்தை உங்களுக்கு அறிவிக்கும்பொருட்டு உண்மையுள்ள குருமாரை அனுப்பினார்கள். கிறிஸ்து இரட்சகருடைய கட்டளையை நிறைவேற்றவும், அக்காலத்தில் அந்த அருள்நாதனது கிருபைகளை மதியாமல், அறியாமையிலும் அஞ்ஞானத்திலும் அமிழ்ந்திக்கிடந்த உங்களிடத்தில் தங்களுக்கிருந்த அன்பைப் பாராட்டவுமே அப்படிச் செய்தார்கள். துவக்கத்தில் எல்லாரும் தங்கள் ஆத்தும ஈடேற்றத்தைப்பற்றி நிர்விசாரமுள்ளவர்களாய் இருந்தபோதிலும், இவ்வுலகப்பொருட்களில் ஏழைகளும், தேவகிருபையில் ஐசுவரியமுள்ளவர்களுமாயிருந்த பக்திமான்கள் இளக்கரியாமல் தங்கள் அன்பின் ஊழியத்தை ஊக்கமாய் நடத்தி அதற்கு அநேகம் பணங்களைச் செலவிட்டுவந்தார்கள். நாளாவட்டத்தில் மற்ற இடங்களில் நடந்ததுபோல் இவ்விடத்திலும் தேவவசனம் பயன்பட்டமையால், அநேகம்பேர் தங்களுடைய புராதனமார்க்கத்தைத் தள்ளி, கிறிஸ்துவின் அருள்வேதத்தை அநுசரித்துக்கொண்டார்கள்.

சென்னபட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்கள்பேரில் இங்கிலாந்து தேசத்திலுள்ள பக்திமான்கள் வெகு அபிமானம் வைத்து, வருஷாவருஷம் அநேகம் பொருள்களைச் செலவுசெய்து, அவர்களுக்காகப் போதகன்மார், உபதேசிமார், உபாத்திமார்களை நியமித்தார்கள். சுவிசேஷத்தைச் சர்வசிஷ்டிக்கும் பிரசங்கியுங்கள் என்ற திருவாக்கின்

படி மிஷன் கமிட்டிமார் மற்றத் தேசங்களிலும் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கிக்கும்பொருட்டு செய்த முயற்சிகள் பயன்படும்படி தேவன் கிருபைபாலித்தார். அவர்கள் விதைத்த தேவவசனமாகிய விதை பரிசுத்த ஆவியின் அருள்மாரியால் முளைத்து பலன்கொடுத்தது. அப்படியே அவர்கள் தங்கள் வேலையை நடத்திக்கொண்டு போகும்போது, அதைச் சற்று மாற்றி வேறுவிதமாய்ச் செய்யவேண்டும்; இல்லாவிடில், அதை முற்றிலும் விட்டுவிட்டு, பரகதி அடையும் வழிதெரியாமல் மதிமயங்கிக்கிடக்கும் மற்றச் சனங்களிடத்தில் போகவேண்டுமென்று அறிந்துகொண்டார்கள். இப்போது இருக்கப்பட்ட சபைகளை விசாரிப்பதற்கும், புதுச்சபைகளை ஸ்தாபிப்பதற்கும் வேண்டிய ஆட்களையும், பொருட்களையும் அவர்களே கொடுப்பது அசாத்தியம். அவர்கள் எங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்று இயேசுநாதர் கட்டளையிட்டாரேயன்றி, அந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக் குணப்பட்டவர்களிடத்தில் எப்போதும் இருந்து அவர்களைப் பாதுகாக்கவேண்டுமென்று அவர் கட்டளையிடவில்லை. ஆகையால் தேவவசனப் பிரசங்கங்களும், கிருபையின் எத்தனங்களும் உங்களுக்கு எப்போதும் தடையின்றி நிலையாய்க் கிடைக்கும்படி நீங்களே முயற்சிசெய்வது உங்களுடைய கடமையென்று கமிட்டிமார் நினைக்கிறார்கள்.

இதுவுமன்றி, அவர்கள் உங்களுக்கு ஞானப்பிதாக்களாயிருப்பதால், நீங்களே சுதாவாய் உங்கள் சபையின் காரியத்தை முயற்சியாய் நடத்தும்படி உங்களைப் பழக்குவது தங்கள் கடமையென்று நினைக்கிறார்கள். ஒரு தகப்பன் பெரிய சீமானாய் இருந்தபோதிலும், தன் பிள்ளைகளைத் தங்களுக்கடுத்த காரியங்களைத் தாங்களே சுயமாய் யோசித்து, சம்பாதித்துக்கொள்ளும்படி பழக்காவிட்டால், அந்தப் பிள்ளைகள் விஷயத்தில் அவன் விவேகமாயும் நியாயமாயும் நடப்பித்தானென்று சொல்லமாட்டோம். அந்தப் பிள்ளைகள் சகல காரியங்களையும் சுதாவாய் நடத்தும்படி பழகுவது எப்படி அவசியமோ, அப்படியே சுதேசசபைகளும் சுய ஆதரவு, சுய ஆளுகை, சுய விருத்தி என்னும் விஷயங்களில் பழகுவது அவசியமாம். இப்படிப்பட்ட சுயமுயற்சிகள் அவைகளுக்கு இல்லாவிட்டால், அவைகள் நாட்பட்ட சபைகளாயிருந்தபோதிலும், பெலனும், ஐக்கியமும், பெருக்கமுமுள்ள சபைகளென்று சொல்லக்கூடாது. மற்றவர்கள் பார்வைக்கு அவைகள் பிள்ளைகள்போல இருக்குமேயன்றி, பெரிய மனுஷர்போல அரியகாரியங்களை முயற்சியாய்ச் செய்யமாட்டாது.

இது முகாந்தரங்களினிமித்தம் கமிட்டிமார் உங்கள் தேர்ச்சியைக் கரிசனமாய்ப் பார்த்துவந்ததுமன்றி, உங்களுக்குச் சரியானபடி போதிக்கும்படியாகவும் பிரயாசைப்பட்டுவருகிறார்கள். உங்களுக்கு வேண்டிய காரியங்களை நீங்களே யோசித்து ஒழுங்கு செய்யத்தக்ககாலம் வந்துவிட்டது. அப்படிச் செய்யும்படி உங்களை ஏவுகிறது கமிட்டிமாருடைய முக்கிய கடமையாயும், உங்களுக்குச் சலாக்கியமாயுமிருக்கிறது. தேவன் நமக்குக் கடாட்சித்திருக்கிற வரங்களுக்குத்தக்கபடி நாம் அந்தச் சலாக்கியத்தை உபயோகிக்கவும், அந்தக் கடமையை நிறைவேற்றவும் பார்ப்பது உத்தமம்.

தோட்டக்காரர் சில மரங்களை வைத்துப் பரிபாலிப்பதில், ஒரு கொப்பை வெட்டிப் பிரத்தியேகமாய் நடாமல், ஒரு சட்டியில் மண் போட்டு, அதில் ஒரு கொப்பை வளைத்துப் பதிபோடுவார்கள். அப்பதி பெரிய மரத்திலிருந்து சாரத்தை வாங்கி, பூமியில் வேர்களை



விட்டு ஓங்கிவளரும். வளர்ந்து அது தானாய் நிற்கச் சத்துவமுண்டாகும்போது, தோட்டக்காரர் அந்தக் கொப்பை மரத்திலிருந்து வெட்டிப்போடுவார்கள். அப்பால் அது தானாய் வளர்ந்து, பூத்துக் காய்ப்பதுமன்றி, அதைப்போலொத்த அநேக மரங்களுண்டாகி விர்த்தியடைவதற்கும் ஏதுவிருக்கும். கொப்புகளுக்கு ஒப்பாயிருக்கிற உங்களுக்குள் இவ்விதமாய்ச் சுய ஆதரவு, சுய ஆளுகை, சுய விருத்தியுண்டாகும்படி கமிட்டிமார் விரும்புகிறார்கள். அந்தக் கொப்புக்கும் சட்டியிலுள்ள மண்ணுக்கும் எப்படிச் சம்பந்தமிருக்கிறதோ, அப்படிச் சபையாருக்கும், சுதேச சபைச்சங்கத்தாருக்கும் சம்பந்தமிருக்கும். சர்ச்சுமிஷன் சங்கமாகிய பிரதான மரத்தோடே சபையார் தங்கள் சங்கத்தின் மூலமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கும்போது, அவர்கள் பிரதான மரத்தின் சாரத்தால் நன்றாய் வேரூன்றி வளரும் மரம்போல, ஸ்திரமும் சீவனுமுள்ளவர்களாவார்கள். அதுவரைக்கும் அந்த மரத்துக்கும கொப்புக்கும் இருக்கிறதுபோல, சங்கத்தாருக்கும் சபையாருக்கும் இருக்கிற சம்பந்தம் நீங்கவுமாட்டாது; அந்தக் கொப்பு வேரூன்றி வளர்ந்து கனிகொடுக்கவுமாட்டாது. அது இப்படி வளர்ந்தால் பெரிய மரமாகி, அதினால் இன்னம் அநேகம் மரங்களுண்டாவதற்கும் அனுகூலமாயிருக்கும்.

இந்தச் சபைச்சங்கம் எப்படிப்பட்டதென்றும், அதின் கடமைகள் எத்தன்மையுள்ளனவென்றும் சொல்லுகிறேன். அது கமிட்டிமாருடைய பழைய உயிரும், சபையாருடைய புது உயிருங்கூடிய ஒரு உடல்போலிருக்கும். சில காலம் அதற்கு இவ்விருபட்சத்தாருடைய ஆலோசனைகளும், பொருள் சகாயங்களும் இருப்பதால், அதற்குத் தற்காலத்தில் வேண்டிய பலனிருப்பதுமன்றி, பிற்காலத்துக்கு வேண்டிய உறுதியுமுண்டாகும். சென்னபட்டணத்திலுள்ளசுதேசசபையார் தங்கள் போதகன்மாருக்குத் தங்களாலியன்றமட்டும் பொருள் சகாயஞ்செய்வார்கள். இந்தச் சகாயம் வருஷாவருஷம் அதிகப்படுமேயன்றி, குறையமாட்டாதென்று நம்புகிறேன். இத்தன்மையான முயற்சிகள் அந்தச் சிறுமரத்து வேர்கள்போலிருக்கின்றன. முதலில் சிறு கன்று ஊன்றும் வேர்கள் சொற்பமாயும் பெலவீனமுள்ளதாயும் இருக்குமாகையால், தாய்ச்சங்கத்தார் அவர்களுக்கு இருக்கும் குறைவை நிவிர்த்திக்கும்பொருட்டு, வேண்டிய பொருள்களைக் கொடுப்பார்கள். துவக்கத்தில் கமிட்டிமார் மேற்சொன்ன சுதேச சபைச்சங்கத்திற்குத் தங்கள் சொந்த இங்கிலிஷ் ஐயன்மார்களில் ஒருவரை அக்கிராசனாதிபதியாக நியமிப்பார்கள். அவர் தமக்கு நல்லாலோசனை சொல்லத்தக்க வேறு இரண்டுபெயரைத் தெரிந்துகொள்வார். சபையில் இராப்போசனம் பெற்றவர்கள் தங்களுக்குள் மூன்றுபேரைத் தெரிந்துகொள்வார்கள். இவ்வாறுபேரும் இப்போது சென்னபட்டணத்திலுள்ள சுதேச குருமார் மூன்றுபேரும் கூடி, ஆக ஒன்பதுபேர் முதலாவது இச்சங்கத்தின் அங்கமாயிருப்பார்கள்.

இச்சங்கத்தார் ஒரு மாசத்துக்கொருவிசை, அல்லது இரண்டுவிசை கூடி, சுதேசசபையின் காரியாகாரியங்களையும், அதை மேல் நடத்த வேண்டிய முறைகளையும்பற்றி ஆலோசிப்பார்கள். சுதேச குருமாரும், தாழ்ந்த உத்தியோகஸ்தர் எல்லாரும் தங்கள் ரிப்போர்ட்டுகளை இச்சங்கத்தாருக்கு அனுப்புவார்கள். சுதேச சபைப்பொக்கிஷம் ஸ்தாபகமானபின், அதற்கு உதவியாகக் கமிட்டிமாரும் மாதாமாதம் இச்சங்கத்தாருக்குப் பணம் அனுப்புவார்கள். அப்பொக்கிஷத்தில் பணம் அதிகப்பட்டால், புதிதாய் என்ன வேலைகளைத் துவக்க

லாமென்று இச்சங்கத்தார் யோசித்துத் தீர்மானஞ் செய்துகொள்வார்கள்.

இந்த ஏற்பாடுகளினாலே மிஷன் வேலையில் பெரிய மாறுதலிருக்குமென்று நினைக்கவேண்டியதில்லை. பிரசங்க முறைகளும், பள்ளிக்கூட விசாரணைகளும் வழக்கப்படியே நடந்துவரும். ஐரோப்பிய ஐயன்மாருடைய சேகரங்கள் சுதேச குருமாருடைய சேகரங்களுக்குப் பிரத்தியேகமாயிருக்குமாகையால், அவைகளில் ஒரு மாறுதலும் இருக்கமாட்டாது. சுதேச போதகன்மாரை விசாரிப்பதிலும், அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதிலுந்தான் மாறுதலிருக்கும். அவர்களை இனி ஐரோப்பிய ஐயன்மாராவது, சென்னபட்டணத்துக் கமிட்டிமாராவது விசாரியாமல், புதுச்சபைகளுக்கிருக்கிற ஒழுங்கின்படி, கண்காணியாரும், சபையின் உத்தியோகஸ்தரும் விசாரித்துவருவார்கள். சர்ச்சுமிஷன் சங்கத்தார் சுதேசசபைக்குப் பொருள் உதவிசெய்வதினாலும், அச்சங்கத்தில் தங்கள் உத்தியோகஸ்தரை நியமித்திருப்பதினாலும், அதில் தங்களுக்கிருக்கும் பாத்தியதையைக் கொண்டாடுவார்கள்.

சீமைக் கமிட்டிமார் அபிப்பிராயப்படி இச்சங்கமும் அதின் கடமைகளும் இத்தன்மையுள்ளவைகளாயிருக்கும். நாம் காலதாமதமன்றி செய்யப்போகிற இச்சப் புது ஏற்பாட்டினாலே, சுதேசசபைகள் தங்களை ஆதரிப்பதற்கும், ஆளுவதற்கும், அபிவிர்த்தியடைவதற்கும் ஏற்ற நல்ல ஸ்திதிக்கு வரும். இந்த ஏற்பாடு மேல் ஆப்பிரிக்காவிலுள்ள சீரலியோன் மிஷனிலுண்டாகி, மிகவும் பிரயோசனமுற்றிருக்கிறது. சுயாதீனமடைந்த அடிமைகள் வசிக்கிற அந்நாட்டில் சுதேச போதகன்மாருக்கு வேண்டிய பணங்களேயன்றி, அஞ்ஞானிகளுக்குக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டியதற்கும் போதுமான பொருளைச் சபையாரே உற்சாகமாய்க் கொடுத்துவருகிறார்கள். அதைச்சேர்ந்த ஓர் மிஷன்ஸ்தானத்தில் இந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கமும் சித்தியாயிருக்கிறது. அவ்விடத்தில் ஒரு சுதேச கண்காணியார் இருந்துகொண்டு, சுதேசசபைகளை விசாரித்துவருகிறார்.

இந்த ஏற்பாட்டில் முதலாவது: கமிட்டிமார் ஒரு ஐரோப்பிய குருவை அக்கிராசனாதிபதியாய் நியமிப்பதினாலும், அவர் வேறிரண்டு ஐரோப்பிய ஐயன்மாரைத் தெரிந்துகொள்வதினாலும் அவர்களுக்கே அச்சங்கத்தில் அதிக அதிகாரமிருக்குமென்றும்; இரண்டாவது: சீமைக் கமிட்டிமார் கொடுக்கும் பணத்தையும், சபையார் கொடுக்கும் பணத்தையும் ஒரே பொக்கிஷத்தில் வைத்துக்கொண்டு செலவிட்டால், வலியசபை எளியசபைக்குக் கொடுத்து கைதாழ்ந்து போகும் என்றும் சிலர் ஆட்சேபிக்கிறார்கள்.

சர்ச்சுமிஷன் சங்கத்தாருடைய சட்டப்படி சுதேசசங்கத்திற்கு அக்கிராசனாதிபதியாய் ஐரோப்பியர் ஒருவர் இருப்பதும், அல்லது ஐரோப்பியரில் யாதாமொருவராவது அதைச்சேர்ந்த அங்கமாயிருப்பதும் அவசியமல்ல. காரியம் கைகூடும்பரியந்தம் துவக்கத்தில் ஐரோப்பிய ஐயன்மார் அச்சங்கத்தைச் சேர்ந்து, அதைச் சற்று தலைமையாயிருந்து நடத்துவது அவசியமாயிருந்தபோதிலும், அதைச் சேர்ந்த சுதேசிகள் காரியசமர்த்துள்ளவர்களாகி, சுதேசசபையார் அதிகப் பணங்களைக் கொடுக்கும்போது, சீமைக் கமிட்டிமார் தாங்கள் செய்துவரும் பொருளுதவியைக் கொஞ்சங்கொஞ்சமாய் நிறுத்த, சுதேசசங்கத்திலுள்ள ஐரோப்பிய ஐயன்மாரும் அதை விட்டுவிடுவார்கள். அப்போது சுதேசசபைகள் முற்றிலுஞ் சுயாதீனமடைந்து, சகலத்தையும் தாமே நடத்தும்படி சம்பவிக்கும். இதுவே முதலாம் ஆட்சேபனைக்குச் சமாதானம்.



இரண்டாம் ஆட்சேபனைக்கும் சமாதானமிருக்கிறது. கிறிஸ்தவர்கள் பெலவீனரைத் தாங்கவேண்டுமென்று தேவன் தமது திருவசனத்தில் கற்பித்திருக்கிறார். அப்படிச் செய்யாவிட்டால் ஒவ்வொரு சபையும் பிரத்தியேகப்பட்டு, தன் தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டுபோகுமேயன்றி, எல்லாச் சபைகளும் ஏக ஐக்கியமாய்த் தங்கள் சொந்தக் காரியங்களையும், அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் விஷயங்களையும், ஒருமித்து ஆலோசித்து நடத்த ஏதுவிருக்கமாட்டாது. இப்படிப்பட்ட ஐக்கியமே பெலன். சென்னபட்டணத்துச் சபைகளில் முன்னிலும இப்போது அதிக வருமானமிருந்தபோதிலும், சர்ச்சுமிஷன் சங்கத்தார் சுதேச போதகன்மார் விஷயங்களில் செய்யுஞ்செலவுக்கு அது எவ்வளவேனும் ஈடாகவேமாட்டாது. சபையார் கொடுக்கும் பணத்தோடே, இதற்குமுன் சபை மானியத்துக்கென்று கொடுக்கப்பட்ட பணத்திற்கு வருஷவட்டி சுமார் 210 ரூபாயும் சேர்த்தால், சபை பொக்கிஷத்துக்கு அநுகூலமாயும் ஸ்திரமாயும் இருக்கும்.

இப்படி நீங்கள் வரவரத் தேர்ச்சியடைவதைப் பார்ப்பது சந்தோஷம். இதினாலே இங்கிலிஷ் குருமார் உங்களைவிட்டு மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஏதுவிருப்பதினாலும், விசேஷமாய் உங்கள் விர்த்தியைப்பார்ப்பதினாலும் எங்களுக்கு அதிகச் சந்தோஷமுண்டாகும். இத்தேசத்திலுள்ள சுதேச சபையை நீங்கள் ஆதரிக்கவும், ஆளவுந்தக்க சக்தியும், கரிசனமும் உண்டாவதால் உங்களுக்கு நன்மையேயன்றி தீமையல்ல. உங்களைச் சுற்றியிருக்கிற புறமதஸ்தர் கிறிஸ்துமார்க்கம் உங்களுக்குள் இப்படி ஸ்திரப்பட்டுவருவதைப் பார்க்கும்பொழுது, உங்களுக்கு எவ்விதத்திலும் அதிக அநுகூலமுண்டாயிருக்கும். இங்கிலிஷ் சபையாகிய மரத்திலுள்ள கொப்பு இந்துதேசத்தில் வேரூன்றி, தானாய் ஓங்கிவளர்ந்து, படர்ந்து, ஸ்திரமடைந்துவரும். அப்போது உங்களைப் பார்க்கிற எல்லாச் சனங்களும், தேவகடாட்சம் உங்களுக்குள் வீற்றிருப்பது வாஸ்தவம் என்று சொல்லிக்கொள்வார்கள்.

மேற்சொல்லப்பட்ட சபை சங்கத்திற்குத் தகுந்த மனுஷரை நீங்கள் சீக்கிரம் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அவர்கள் பக்தியிலும், அறிவிலும், அன்பிலும் சிறந்தவர்களாயும், கிறிஸ்துமார்க்கத்துக்குப் பொருந்தாத சாதிவேற்றுமையை அநுசரியாதவர்களாயும், இப்படிப்பட்ட முக்கிய விஷயங்களை ஆலோசித்து நடத்தச் சமர்த்துள்ளவர்களாயும் இருக்கவேண்டும். இந்த ஏற்பாட்டினால் சபைகளுக்கும், சபைகளைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும், அக்குடும்பங்களைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் மேலான நன்மையும் பக்திவிர்த்தியுமுண்டாகும்படி பிரார்த்திப்போமாக.

இப்படிக்கு,
கிறிஸ்தவ சகோதரரே!

உங்கள் உண்மையும் பட்சமுமுள்ள
சென்னபட்டணத்து சர்ச்சுமிஷன் சபைசங்கத்தின்
அக்கிராசனாதிபதி,
**பி. எஸ். ரூய்ஸ்டன்.**

௧௮௬௭-ம் ௵
ஏப்பிரல் ௴.

### சபைச்சங்கத்தின் அங்கமாயிருக்கப்பட்டவர்கள்

கையொப்பம் வைக்கவேண்டிய

## சாதிவேற்றுமை நிராகரணப்பத்திரம்.

இந்துக்களுக்குள் வழங்கிய சாதிவேற்றுமை ஒழுக்கமானது, பிறப்பினாலேயே ஒருவன் தீட்டானவனென்ற தப்பெண்ணத்தை உண்டாக்கி, அவன் பிறந்த அந்தஸ்திலேயே அவனும், அவன் குடும்பமும் சதாகாலமுமிருக்கவேண்டுமென்றும், எப்பேர்ப்பட்ட யோக்கியதையும், திறமையுமுடையவனென்றாலும், அவன் உயர்ந்த அந்தஸ்தை அடையக்கூடாதென்றும் கட்டாயஞ்செய்வதினாலும், கொள்வினை கொடுப்பினை, போசனபானம் முதலிய உபசார ஒழுக்கங்களில் கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற சுயாதீனத்தின்படி மனச்சாட்சியறிய உண்மையோடு நடக்கவேண்டுமென்றிருக்கிறவர்களைத் தடுக்க மற்றவர்களுக்கு அதிகாரமுண்டெனபதுபோல கட்டுப்பாடு செய்வதினாலும், இந்தச் சாதிவேற்றுமைக் கட்டுப்பாடு கிறிஸ்துநாதருடைய சுவிசேஷத்தின் தன்மைக்கும், பிரமாணத்துக்கும் விகற்பமாயும், சாதிவேற்றுமையை அநுசரிக்கிறவர்களுடைய ஆத்துமாக்களுக்கு மிக மோசமாயும், கிறிஸ்தவர்களுக்குள் இருக்கவேண்டிய சகோதர சிநேகத்திற்குக் கெடுதலாயும், இத்தேசத்திலே சுவிசேஷம் பரம்புவதற்குத் தடையாயுமிருக்கிறதென்று நான் நிச்சயித்து, சாதிவேற்றுமையைத் தப்பென்று தீர்த்து வெறுத்துத் தள்ளுகிறேன். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இப்படியே மனப்பூர்வமாய் அதை வெறுத்துவிடக் கடமைப்பட்டவனென்றும் காண்கிறேன். என்னாலியன்றமட்டும் என் சம்பாஷணையினாலும், நடக்கையினாலும் அதைத் தடுக்கும்படி முயலுவேன். கிறிஸ்துமார்க்கத்துக்குரிய சுயாதீனத்தைத் தழுவி, சாதிவேற்றுமையாகிய கட்டுப்பாட்டைக் குலைத்து நடக்கிறவர்களுக்கு நான் சார்பாயிருந்து, அவர்களுடைய கோரிக்கை ஈடேறுவதற்கு உதவியாகவே நடப்பேன். இப்படி நடக்கக் கர்த்தர் சகாயஞ்செய்வாராக.

———0———

## நாளது சங்கதிகள்.

**பிரான்சியா, புருஷியா.** அங்கிலோ, ஔஸ்திரிய, ருஷிய ஆலாத்தனத்தார் கேட்டுக்கொண்டபடி, பிரான்சியரும் புருஷியரும் லக்ஸெம்பர்க் விவகார விஷயத்தைப்பற்றிக் கூட்டங்கூடிப்பேசித் தெளியச் சம்மதித்தார்கள். கூட்டம் நாளது மீ 7உ லந்தன நகரத்தில் கூடும். பிரான்சிய புருஷிய ஆலாத்தனத்தார்கள் தாம் செய்த சண்டைக்கு உரிய எத்தனங்களை நிறுத்துவதாக வெளியிட்டார்கள். விக்டோரியா ராக்கினியும், ருஷிய சக்கரவர்த்தியும் புருஷிய அரசனை நேரே கண்டு பேசியதனால், அவர் மனம் சற்று இளகிற்றும். வட ஜர்மானிய சம்பந்த அரசாட்சித்திட்டத்தை ஊர்ஜிதமாக்கும்பொருட்டுப் புருஷிய பார்லிமெந்து சபைகூடிற்று. ஔஸ்திரிய சக்கரவர்த்தி ஜூன்மீ 2உ ஹங்கரி அரசனாக முடிசூட்டப்



படுவார். அதற்காக மிகுந்தப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றது. அங்கிலேய இளவரசர், எடின்பர்க் டியூக் பிரபு, பெல்ஜிய அரசன்—ராக்கினி, போர்த்துக்கல் ராக்கினிமுதலிய ராஜபிரபுக்களும் பத்தினிகளும் பரீஸ் நகரத்தில் இருக்கிறார்கள். ருஷிய சக்கரவர்த்தியும், புருஷிய அரசனும் ஜூன்மீ அவ்விடத்திற்குப் போய்ச் சேர்வார்களாம்.

**ஸ்பானியா.** கடந்த இரண்டொருவருஷத்தில் இங்கிலீஷருக்கு ஆதீனமான 2 கப்பல்களை ஸ்பானியர் அநியாயமாய்க் கவர்ந்து கொண்டார்கள். இது விஷயத்தை ஸ்பானியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் சாமோபாயமாய்த் தீர்த்து திட்டவட்டங்கள் செய்யவேண்டும் என்பதாய் மிகுந்த பிரயத்தனம்பண்ணப்பட்டது. என்றாலும் ஸ்பானியர் தாங்கள் நடப்பித்த தப்பிதத்துக்கு நிவிர்த்திசெய்யாமல் நெடுங்காலமாய் முரண்டிருந்தார்கள். ஆதலால் இவ்விரு தேசத்தாருக்குள்ளும் கொடிய போருண்டாகும் என்ற தோற்றங்காணப்பட்டது. ஆகிலும் இப்போது ஸ்பானியா தன் தப்பிதத்துக்கு ஈடுசெய்ததால் மீட்டும் சமாதானம் ஸ்தாபிதமாயிற்று.

**இத்தாலியா.** இத்தேசத்தின் பழைய மந்திரிகள் ராசினாமா கொடுத்து உத்தியோகம் நீங்கவே, அவர்களுக்குப் பதிலாக புதிய மந்திரிகள் ஏற்பட்டார்கள். இத்தாலிய ராச்சியத்தின் காரியாதிகள் மகா அதிச்சய ஸ்திதியில் இருக்கிறதுந்தவிர, அத்தேசத்தார் வெகு கடன்பட்டவர்களாயும் இருப்பதால், அவர்களுடைய தற்கால நிலைமை தாரதம்மியங்களுக்கு ஏற்றதான நூதன அமைச்சர்கூட்டம் அவசியந்தான் என்று அரசன் விளம்பினார்.

**மெக்சிக்கோ.** இவ்விராச்சியத்தில் இதுவரையும் யுத்த கலாபங்கள் நடந்துகொண்டே இருக்கிறது. மக்ஸிமிலியன் என்னும் சக்கரவர்த்தியினது தண்டுகள் மெக்ஸிக்கருடைய தண்டுகளை முறியடித்ததாக கடைசியாய் வந்த சமாசாரத்தில் கண்டிருக்கின்றதாகிலும், மேற்படி சக்கரவர்த்தி இனி அத்தேசத்தில் செங்கோல் செலுத்துமட்டும் திறமையாய்ச் சனங்களை வென்று கீழ்ப்படுத்திக்கொள்வார் என்பது நம்பிக்கையில்லாத காரியமாய்த் தோன்றுகிறது.

## நோட்டீஸ்.

பாளையங்கோட்டையில் நாளது ஜூலாய் மீ ௩உ. சங்கங் கூடும் பொழுது, மகா கனம்: கண்காணியாரவர்களுடைய பந்தய் பரீட்சை நடத்தப்படுமென்று அறிந்துகொள்க.

———0———

ஜூலை நாள் 31—ஆனிமீ 18உ முதல், ஆடிமீ 16உ வரை.

| வாரம். | ஆங்கிலத் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | கஅ | உன் இருதயஞ் செம்மையாயிருக்கின்றதோ ? 2 இராசா 10 : 15. |
| செ | 2 | கசு | கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். 12 : 2. |
| பு | 3 | உ0 | கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தினன். 13 : 4. |
| வி | 4 | உக | கர்த்தர் அவனைக் கேட்டார். 4. |
| வெ | 5 | உஉ | இஸ்ரவேலருக்கு இரட்சகனைக் கொடுத்தார். 5. |
| ச | 6 | உங | அவர்களை அழிக்கச் சித்தமாயிராதிருந்தார். 23. |
| ஞா | 7 | உச | தம்முடைய முகத்தைவிட்டுத் தள்ளாமலுமிருந்தார். 23. |
| தி | 8 | உரு | அவர்கள்மேல் மனதுருகி அவர்கள் வசமாய்த் திரும்பினர். 23. |
| செ | 9 | உசு | அவனவன் தன் பாவத்தினிமித்தங் கொலையுண்பானாக. 14: 6. |
| பு | 10 | உஎ | உன இருதயம் உன்னை மேட்டிமையாக்கிற்று. 10. |
| வி | 11 | உஅ | கர்த்தருடைய நாள் வருகிறது. யோவேல் 2 : 1. |
| வெ | 12 | உசு | அது சமீபமாயிருக்கிறது. 1. |
| ச | 13 | ங0 | அது இருளும், அந்தகாரமுமான நாள். 2. |
| ஞா | 14 | ஙக | அது மப்பும், மந்தாரமுமான நாள். 2. |
| தி | 15 | ஙஉ | கர்த்தருடைய நாள் பெரிதும், மகா பயங்கரமுமாயிருக்கும். 11. |
| செ | 16 | க | உங்கள் முழு மனதினலே நம்மண்டைக்கே திரும்புங்கள். 12. |
| பு | 17 | உ | அழுகையோடும்,புலம்பலோடும்,நம்மண்டைக்கே திரும்புங்கள். 12. |
| வி | 18 | ங | உங்கள் இருதயத்தைக் கிழித்து கர்த்தரண்டைக்குத் திரும்புங்கள். 13. |
| வெ | 19 | ச | அவர் இரக்கமும், மன உருக்கமுமானவர். 13. |
| ச | 20 | ரு | நீடியசாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். 13. |
| ஞா | 21 | சு | தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவராயிருக்கிறர். 13. |
| தி | 22 | எ | கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது. அப்போ. 20 : 14. |
| செ | 23 | அ | இரத்தத்திற்கு விலகியிருக்கவேண்டும். 25. |
| பு | 24 | கூ | வேசித்தனத்திற்கு விலகியிருக்கவேண்டும். 25. |
| வி | 25 | க0 | பராபரனைக்குறித்து வைராக்கியமுயிருந்தேன். 22 : 3. |
| வெ | 26 | கக | ஆண்டவரே நான் என்னசெய்யவேண்டும். 10. |
| ச | 27 | கஉ | தம்முடைய சித்தத்தை நீ அறியப்பண்ணினர். 10. |
| ஞா | 28 | கங | குமாரன் மூலமாய் நம்முடனே திருவுளம்பற்றினர். எபி. 1: 2. |
| தி | 29 | கச | அவரைச் சகலத்திற்குஞ் சுதந்தரவாளியாகவைத்தார். 2. |
| செ | 30 | கரு | அவராலே உலகத்தையும் உண்டாக்கினர். 2. |
| பு | 31 | கசு | அவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமாயிருந்தார். 3. |

## விசேஷித்த நாட்கள்.

1. பௌரணமி.
7. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், மூன்றும் ஞாயிறு.
14. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், நான்காம் ஞாயிறு.
16. அமாவாசை.
21. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், ஐந்தாம் ஞாயிறு.
28. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், ஆரும் ஞாயிறு.
31. பௌரணமி.

எய்தவனைவிட்டு அம்பைநொந்ததுபோல.
எரிகிறதைப்பிடுங்கினுல் கொதிக்கிறது அடங்கும்.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

AUGUST. 1867. ஆகஸ்டுமீ.

### CONTENTS.


Recreations in Astronomy. ... ... ... 142
The Miracles of Christ. ... ... ... ... 146
A Metrical Index to the Bible. ... ... 150
On the Historical books of the Old Testament. ... ... ... ... ... ... 151
Christian Church History.... ... ... ... 154
News. ... ... .. ... ... ... ... ... 159


### அட்டவணை.


வானசாஸ்திரத்தைக் குறித்தது. ... ௱சஉ
கிறிஸ்துவானவர்செய்த அற்புதங்கள். ... ௱சசு
வேதாத்தியாயப் பொழிப்பு. ... ... ௱ரு0
பழயவேற்பாட்டுச் சரித்திராகமங்களின் பேரில் ... ... ... ... ... ௱ருக
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ௱ருச
நானாது சங்கதிகள். ... ... ... ... ௱ருகூ



PALAMCOTTAH:
PRINTED AT THE CHURCH MISSION PRESS.
1867.


எரிகிறநெருப்பில் நெய்விட்டதுபோல.
எரிகிறவீட்டில் பிடுங்கினது லாபம்.

எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா?
எருமைவாங்குமுன் நெய்விலை கூறினதுபோல.

எதிர்த்தவனை ஜயபாருல் கோபங்கொண்டான்.
எத்தனைபட்டிபட்டாலும் இருப்புக்கொள்ளுமோ?

௮. ஆகஸ்டுமீ. ௲௮௱௭௰௯.

## RECREATIONS IN ASTRONOMY.

## வானசாஸ்திரம்.

### VIII. அதிகாரம்.

#### சூரியனைச்சுற்றிய கிரகங்களின் விவரம்.

#### 7. வியாழன்.

(தொடர்ச்சி.)

இவ்விதமாய் ரோகாந்தரம் கண்டுகொள்வது எப்பொழுதும் யதார்த்தமாகவே இருக்குமென்று நினைக்கலாகாது. பார்க்கிறவர்கள் அநுபவசாலிகளாயும் கருவிகள் செவ்வையானவைகளாயும் பஞ்சாங்கத்திற்காட்டிய கணக்குகள் சரியாயுமிருக்குமாயின் ரோகாந்தரமும் திட்டமாயிருக்கும். வியாழனைச்சேர்ந்த நாலு சந்திரன்களில் கிரகத்துக்கு அதிக சமீபமானதுதான் இவ்விஷயத்தில் மிகுதியும் உபயோகமுள்ளது. இதின் நடை மற்றவைகளுடைய நடையைப்பார்க்க அதிகத் தெளிவாயிருப்பதே காரணம்.

ஒளியானது ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளுக்கு உடனேபடாமல் தூரத்துக்குத்தக்கதாக காலதாமதமாகுமென்று முதல் முதல் கண்டுகொள்வதற்கு வியாழனைச்சேர்ந்த உபக்கிரகங்களே ஏதுவாயிருந்தது. குறித்தபிரகாரம ஒளி உடனே திடீரென்று பிறக்கின்றது என்பதுதான் வெகுகாலமாய் நிலைபெற்ற சித்தாந்தம். ஆகிலும் அது அனர்த்தமென்பதுபோல் யாது காரணத்தினாலோ சாஸ்திரிகள் மனதிலெழும்ப, அதின் யதார்த்தத்தைக் காணவேண்டுமென்று அநேக பரிட்சைகளைச் செய்தும், வெகுகாலம் அவர்கள் முயற்சிகளெல்லாம் அனுகூலிக்காதே போயின. கடைசியில் 1675ம் ௵ தில் டென்மார்க்கு தேசத்து ரோமர் என்ற வானசாஸ்திரி ஒளி சூரியனிலிருந்து பூகோளம் வந்து சேர்வதற்குக் கொஞ்சநேரம் பிடிக்கிறதென்று உணர்ந்தார். இந்த முக்கிய விசேஷத்தை அவர் கண்டுகொண்டது எப்படியென்றால், வியாழனைச் சுற்றிவரும் நாலு சந்திரரும் கிரகணகாலத்தில் கிரகத்தின் நிழலிற் பிரவேசிக்கவேண்டிய நேரங்களுக்கு வித்தியாசப்படுகிறதையும், மேற்படி வித்தியாசம் ஒருகாலத்தில் விளங்குகிறதைப்பார்க்க ஆறுமாதத்துக்குப்பின் அதிகப்படுகிறதையுங் கவனித்தார். இதைக்கொண்டு குறித்தநேர வித்தியாசம் அதிகமாகும்பொழுது மேற்படி சந்திரரிலிருந்து பூமிக்கு வரும் ஒளிக்கதிர் அதிகதூரம் செல்லவேண்டியதாயிருக்குமென்று நிச்சயித்தார். அவ்வாறே ஒருசந்திரன் கிரகத்தின் நிழலுக்குள் மறையாததற்குமுன் அதிலிருந்து புறப்பட்ட கடைசியான ஒளிக்கதிர்



சந்திரன் மறைந்து சற்றுநேரத்துக்குப்பின்பே தன் கண்ணிற்பட்டதென்றும் அறிந்தார். ஆகையால் வியாழனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் அதிகப்படுகிறதற்குத்தக்கதாக ஒளி அதிகம் பிந்துமென்றும் யூகித்தார். மேற்காட்டிய விசேஷங்களைக்கொண்டு, ஒளியானது உடனே உண்டாகாமல், மற்றும் பொருட்களைப்போலவே ஓரிடம் விட்டு வேறிடஞ்சேர்வதில் காலதாமதமாகுமென்று நியாயங்காட்டி ஸ்தாபித்தார். இவ்வாறு பிரதான வானுலகங்கள் ஒன்றுக்கொன்றுள்ள தூரங்களையும் வியாழனைச்சேர்ந்த சந்திரரில் நடக்கும் கிரகணங்களால் அவற்றில் நேரிட்ட ஏகதேசங்களையும் கவனித்து, அவைகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டு நிதானித்து, ஒளிக்கதிர் பூகோள அயனத்தைக் குறுக்கிட்டுச்செல்ல உத்தேசம் பதினொரு நிமிஷம் பிடிக்குமென்றும் ரோமர் கணித்தார். ஆகிலும் பிந்திய பரிட்சைகளால் பதினாறு நிமிஷத்துக்கு அதிகம் பிடிக்குமென்றும், சூரிய ஒளி பூமிக்கு வந்துசேர எட்டு நிமிஷத்துக்கு அதிகமாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. சூரியனுக்கும் பூமிக்கும் சுமார் ஒன்பதுகோடி ஐம்பது லட்சம் மைல் தூரமானதால், ஒளிக்கதிர் விநாடி ஒன்றுக்கு உத்தேசம் இரண்டுலட்சம் மைல் தூரஞ் செல்லுமென்று அறியலாம்.

சூரியனுக்கு வியாழன் சுமார் 50 கோடி மைல் தூரத்திலும் பூகோளம 10 கோடி மைல் தூரத்திலுமிருக்கின்றன என்று பாவித்துக் கொள்வோம். சூரியன் பூகோளத்துக்கும் வியாழனுக்கும் இடையில் நிற்கையில், சூரிய கதிர்கள் முதலில் 50 கோடி மைல் சென்று வியாழனிலும் அதைச்சேர்ந்த சந்திரரிலும் பட்டுத்திரும்பி, பின்னும் 60 கோடிமைல் பிரயாணம்பண்ணி பூமிக்கு வந்து எட்டும். ஆகையால் ஒளிக்கதிர் வியாழனிற்பட்டுத் திரும்பி பூமி வந்துசேர, 110 கோடி மைல் குறையாமல் பிரயாணஞ்செய்யவேண்டியதாகும். பூமி சூரியனுக்கும் வியாழனுக்கும் இடையில் நிற்கும்பொழுதோவெனில் ஒளிக்கதிர் மேற்சொல்லியவாறு போய்த் திரும்புவதற்கு 90 கோடி மைலுக்கு அதிக தூரம் நேரிடாதே. இந்த வித்தியாசத்தைக்கொண்டே ரோமர் மேற்காட்டிய விசேஷத்தை கண்டுபிடித்தார்.

#### 8. சனி.

சனி என்ற கிரகத்துக்கும் மற்ற வானுலகங்களுக்கும் ஒரு விசேஷித்த வித்தியாசமுண்டு. அதைக்கொண்டு மேற்படி கிரகத்தை எளிதில் அறிந்துகொள்ளலாம். பூகோள உருண்டையிலாவது வான உருண்டையிலாவது அடிவானத்தைக் காட்டும்பொருட்டு சேர்க்கப்பட்டிருக்கிற மரவளையத்தைப் பார்த்திருப்பீர்களே. அதற்கொப்பாகவே மோதிரம்போன்ற பிரகாசமான ஓர் வளையம் சனியைச்சுற்றி நிற்கிறதாம். இந்த வளையமே மேற்குறித்த விசேஷம். வெகுகாலம் வரையில் இந்தக் கிரகத்தையே சூரியமண்டலத்தில் கடைசியானதென்றும் அதிக தூரமானதென்றும நினைத்து வந்தார்கள்.

சனியானது சூரியனுக்கு 90 கோடி மைல் தூரத்தில் நின்று அதைச் சுற்றி நடக்கிறது. மேற்படி தூரம் பூமிக்குள்ள தூரத்துக்கு ஒன்பதரை மடங்காகுமே. மேலும் பூகோளவிட்டம் பத்துக்கொண்டது சனியின் விட்டம் ஒன்றாம். சனியின் மொத்தப் பரிமாணம் பூமியினுடையதற்கு உத்தேசம் ஆயிரமடங்கு என்பார்கள். சூரியன் நமக்குக் காணப்படுகிற பருப்பமாய் சனிக்குங் காணப்படாதே. நமக்குத் தோற்றப்படுகிற சூரிய முகத்தில் என்பதில் ஒருபங்குதானும் அவ்வளவு தூரத்தில் தோன்றாதாம். ஆகவே சனியில சனங்கள் வாசஞ்

செய்வதுண்டானால், அவர்களுக்குக் கிடைக்கத்தக்க ஒளியும் உஷ்ணமும் மேற்காட்டிய விதமாய்க் குறையுமென்பதற்குச் சந்தேகமில்லையே. சில கல்விமான்கள் கணக்கிட்டிருக்கிறபடி, நாம் அநுபவிக்கும் சூரிய ஒளியானது பௌரணமியில் நமக்குக் கிடைக்கும் சந்திர ஒளிக்கு மூன்று லட்சமடங்குபோலிருக்க, சனிக்குக் கிடைக்கத்தக்க சூரிய ஒளி ஐஞ்ஞூறு மடங்குக்கு அதிகப்படாதாம்.

சனி மணி ஒன்றுக்கு சுமார் 21,000 மைல் வீதம் தன் அயனத்தில் நடந்து, கொஞ்சங்குறைய முப்பது வருஷத்துக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றிக்கொள்ளுகிறது. அது தன் அச்சில் பத்தேகால் மணிக்கு ஒருவிசை சுழன்றுகொள்ளுகிறதுமுண்டு. அச்சில் சுழன்றுகொள்வதால் மற்றக் கிரகங்களிலுண்டாகும் தோற்றங்களெல்லாம் சனியிலுமுண்டாகின்றன. அப்படியே சனியும் துருவங்களிற் சப்பியும் சமரேகையில் விம்மியுமிருக்கிறது. ஆகிலும் இந்தத் தோற்றத்தில் ஒரு வித்தியாசமும் விளங்குகிறது. மற்றக் கிரகங்களிலெல்லாம் சமரேகையிலேயே அதிகமாய்ப் புடைத்திருக்கும். இதிலோ அதிகப் புடைப்பு சமரேகையிலல்ல. சமரேகைக்கும் துருவத்துக்கும் சரிபாதியில் அப்படியிருக்கிறதாம். குறித்த விசேஷத்தினாலே சனி, மற்றக் கிரகங்களைப்போல், சாதாரண உருண்டையாய்த் தோற்றப்படாமல் விருத்த மூலைகளுள்ள சதுரமாய்த் தோற்றப்படும். தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டு ஆவக்கத்தில் கண்டுபிடித்த நூதனங்களில் இதுவும் ஒன்று. இக்கிரகத்தின் ஜடத்திரட்சி தண்ணீருக்கு அரைவாசியுமிராதாம். இதின் அயனமும் கிராந்திமண்டலமும் இரண்டரைப் பாகை கோணமுண்டாகத்தக்க விதமாய் ஒருச்சாய்ந்திருக்கிறது. மேலும் அதின் அச்சு அயனத்துக்கு உத்தேசம் அறுபது பாகை சாய்ந்திருப்பதுதொட்டு அதின் காலங்கள் வெகுவாய் பேதப்படும். தூரதிருஷ்டிக் கண்ணாடியில்லாமலும் சனியைக் காணலாம். வியாழனைப் பல கச்சைகள் சுற்றி நிற்கிற பிரகாரமே, இந்தக் கிரகத்தையும் சில கச்சைகள் சுற்றி நிற்பதாய்த் தோற்றப்படும்.

கலிலேயா என்பவர் தமது தூரதிருஷ்டிக் கண்ணாடியை சனிக்கு நேரே உயர்த்திப் பார்த்தபொழுது, கிரகத்தின் பக்கமாய் இரண்டு சிறிய உலகங்களைக் கண்டு, சனியில் மூன்று உலகங்கள் அமைந்திருப்பதாய் உத்தேசித்துக்கொண்டார். ஆகிலும் அவர் பின்னும் கவனித்ததில், பக்கமாயிருந்த இரண்டும் முந்திய தோற்றமாதிப்போக, கிரகத்தைச் சூழ்ந்த ஓர் வளையமாக விளங்கியது. ஒரு பந்தை எடுத்து அதில் வார்ந்த ஓர் ஓலையைச் சுற்றி சற்று தூரத்தில் பிடித்துத் திருப்பிக்கொண்டிருந்தால், மேற்படி ஓலை பந்தைச் சுற்றி ஓர் கோடுபோலும் விளங்கும். சற்று நீண்ட விருத்தமாயும் தோற்றும். பூரணவிருத்தமாய்க் காணப்படுகிறதுமுண்டு. சனியினிடத்திலும் குறித்த தோற்றங்களையெல்லாங் கவனிக்கலாம். வளையமானது நம்முடைய பார்வை செல்லுகிற நேராய் நிற்கையில் ஓர் கோடுபோலும் சற்று சாய்ந்து நிற்கும்பொழுது நீண்ட விருத்தமாயுங் காணப்படும். வளையம் கிரகத்தைத் தொடுகிறதில்லை. மற்றப்படி இரண்டுக்கும் இடையில் இருண்ட வெளி ஒன்று தோற்றப்படமாட்டாது. சூரிய ஒளி வளையத்திற் படும்பொழுதுதான் அது நமக்குத் தெரிகிறது. கிரகத்தின் ஒளியினாற் காணப்படவேமாட்டாது. இந்த முகாந்தரத்தினாலே வளையம் நமக்குத் தென்படாமலிருக்கிறதுமுண்டு. பூமியிலுள்ளவர்களுக்கு பதினைந்து வருஷத்துக்கு ஒரு முறை சனி வளையம் கோடுபோல் விளங்கும். கிரகம் சூரியனை ஒருவிசை சுற்றுகிறதுக்குள்ளாக இரண்



டுவிசை மேற்படி தோற்றமுண்டாகும், மற்றவேளைகளிலெல்லாம் நீண்ட விருத்தமாகவே தோற்றப்படும்.

இந்த வளையத்தின்பேரில் வில்லியம் ஹாஷல் என்பவர் அநேக பரீட்சைகள் செய்ததில், அதில் இரண்டு வளையங்களுண்டென்றும் அவைகள் இடையிலே வெளி கிடக்கத்தக்கதாய் ஒன்றுக்குள் ஒன்றாக நிற்கிறதென்றுங் கண்டார். மேலும் கிரகத்தைப்பார்க்க வளையமே அதிகப் பிரகாசமானதென்றும், வளையம் கிரகத்தின்மீது நிழலிடுங் காரணத்தால் அது தற்பிரபையற்றதென்றும் தெளிந்துகொண்டார். அடியில் நிற்கும் அட்டவணையில் வளையங்களின் பல அளவுகளைக் கண்டுகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| புறவளையத்தின் வெளிவிட்டம் | 176,418 | மைல். |
| ௸ உள் விட்டம் | 155,272 | ௸ |
| உள் வளையத்தின் வெளிவிட்டம் | 151,690 | ௸ |
| ௸ உள் விட்டம் | 117,339 | ௸ |
| கிரகத்தின் சமரேகை விட்டம் | 79,160 | ௸ |
| உள் வளையத்துக்கும் கிரகத்துக்குமுள்ள தூரம் | 19,090 | ௸ |
| வளையங்களுக்கு இடையிலுள்ள வெளி | 1791 | ௸ |
| வளையங்களின் பருப்பம் உத்தேசம் | 100 | ௸ |

மேற்காட்டியபடி இரண்டு வளையங்களாயமைந்திருக்கிறது என்பதல்லாமலும், புறவளையமும் பல வளையங்களாய்ப் பிரிந்து நிற்கிறதென்று சொன்னவர்களுமுண்டு. என்றாலும் சிரேஷ்டமான கருவிகள் வைத்துப் பரீட்சித்த ஹார்ஷல் முதலியவர்கள் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளவில்லை. கப்தன் கேற்றர் என்ற ஒருவர் 1825ம் வருஷத்தில் இந்தக் கிரகத்தை மிகவும் நுட்பமாய்ப் பரிசோதித்ததில், புறவளையம் பல விருத்தங்களாய்ப் பிரிந்து நிற்கிறதென்றே கண்டு சாதித்தார். அதற்கு அநேக வருஷத்துக்கு முன்னமேயே ஷார்ட்டு என்ற ஒருவரும் அவ்விதமே கவனித்துக் குறிப்பித்திருந்தாராம். இவ்விதமாய் புறவளையம் பிரிந்திருப்பதைக்குறித்து மிகுந்த சந்தேகம் பிறக்கவே, அதை மேலுமேலும் பரிசோதிக்க ஏவப்பட்டார்கள். இவ்வளையங்கள் கிரகத்தைச் சேர்ந்த சந்திரரின் கூட்டமென்று உத்தேசித்தவர்களுமுண்டு. எப்படியும் இவைகளும் மற்ற ஏழு சந்திரரும் சூரிய ஒளியில் தூரத்தால் நேரிடும் குறைவை நிவாரணமாக்கும் என்று நினைப்பது தப்பிதமாகாது.

ஏழு சந்திரர் அல்லது உபக்கிரகங்கள் சனியைச் சுற்றிக்கொண்டிருக்கிறதாய்க் கண்டிருக்கிறார்கள். அவற்றில் கிரகத்துக்குச் சமீபமான இரண்டு சந்திரனையுங் கண்டுபிடித்தவர் ஹார்ஷல் என்பவர். அதிகதூரத்தில் நிற்கும் சந்திரனே எல்லாவற்றிலும் பெரிது. அதற்கடுத்ததும் லேசாய்க் காணக்கூடியதுதான். பின்பு வருகிற மூன்றும் மிகவும் சிறியவைகளாயிருப்பதால் அதிக சத்துள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடிகளாலே மாத்திரம் காணப்படக் கூடியவைகள். கடைசியான இரண்டுமோ மிகுந்த சத்துள்ள அபூர்வக் கருவிகளாலேயன்றி மற்றப்படி காணப்படவேமாட்டாது. மேலும் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளின் சத்துவையும் தெளிவையும் வெளிப்படுத்துகிறதற்கு சனியின் வளையங்களும் சந்திரர்களும் நன்றாய் உதவுகின்றன.

இதுவரையும் விவரித்துவந்த சந்திரர்களும் வளையங்களும் சனியிலுள்ளவர்களுக்கு எவ்வளவு பிரயோசனமுள்ளவைகளாயிருந்தபோதிலும், வியாழனைச்சேர்ந்த உபக்கிரகங்களைப்போல பூமியிலுள்ள நமக்கு அவைகள் எவ்வகையிலும் உபயோகப்படுகிறதில்லை.

அலைகளிருக்கும் மிருத்துரமே நாமலைகளைத் தாராளமாய்ப்
பார்க்கக் கூடாமலிருக்கவும் அலைகள் நமக்கு உபயோகப்படாமற்
போகவும் ஏதுவாகிறது. ஆகிலும் சிருஷ்டிகர்த்தாவால் அலைகளுக்
குக் குறிக்கப்பட்ட வேலையை அலைகள் தவறாமல் நிறைவேற்றிக்
கொண்டிருக்கின்றனவென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் அலைகளைக்
காணும்பொழுது மகத்துவம்பொருந்திய தேவனுடைய மட்டில்லாத
வல்லமையைப் புகழ்ந்து போற்றாதிருக்கக் கூடுமோ?

சனியின் வளையம் கிரகாயனப் பரப்பிலேயே சுமார் பத்துமணி
முப்பத்திரண்டு நிமிஷத்துக்கு ஒருவிசை கிரகத்தைச் சுற்றிக்கொள்
ளுகிறதாம். இவ்வளவு தீவிரமாய்ச் சுற்றுவதினால் பிறக்கும் மைய
விலக்குச்சத்து வளையத்தின் தூரம் வேறுபடாமல் நின்று இயங்கிக்
கொண்டேவருவதற்கு உபயோகப்படுகிறது.

———0———

## XVIII. பிறவிக் குருடனுக்கு பார்வை அளித்தது.

யோவா. 8. 9.

(தொடர்ச்சி.)

பெற்றோரிடத்தில் விசாரணைசெய்தபொழுது அவனைத் தனியே
விசாரணைசெய்தபடியால் பிறகு இரண்டாந்தரமவனை அழைத்து, நீ
பராபரனை கனஞ்செய்வாயாக அம்மனிதன் பாவியாயிருக்கிறானென்
று நாங்கள் அறிந்திருக்கிறோமே என்றார்கள். உன் தாய் தகப்பன்
மார் எங்களுக்கிசைவாய்ச் சொல்லியிருக்கிறார்கள் நீயுமப்படியே
அறிக்கையிடு, இதெல்லாம் பொய்யென்றெங்களுக்குத் தெரியும். எ
ங்களுக்கதற்கேற்ற சாக்ஷிகளுண்டு. ஆதலால் கர்த்தருக்கு மகிமை
யைச்செலுத்தி நீயும் பொய்யென்று அறிக்கையிடு என்றார்கள். பரா
பரனுக்குத் தோத்திரஞ்செலுத்து என்றவர்கள் சொன்னபொழுது,
நீ அடைந்த பார்வைக்காக தோத்திரஞ்செலுத்தென்று சொல்ல
வில்லை. ஏனெனில் அற்புதம் நடக்கவில்லை என்று மற்றவர்களெண்
ணும்படி விரும்பினார்கள். கர்த்தரை மகிமைப்படுத்து என்கிறது
ஓர்வகை ஆணை. யோசுவாவும் ஆகானைப்பார்த்து, நீ இப்போது இஸ்
ரவேலின் பராபரனுக்கு மகிமையைச்செலுத்தி அவருக்கு முன்பாக
அறிக்கைபண்ணி, என்னசெய்தாயென்றெனக்கறிவி என்றான். குணப்
படும்பொழுதும், அறிக்கையிடும்பொழுதும் இப்படி பராபரனை மகி
மைப்படுத்தென்று சொல்லுகிறதுண்டு. (1 சாமு. 6. 5: எரே. 13.
16: வெளி. 16. 9.) நீயும் இயேசுவானவருங் கூடிக்கொண்டு இப்படி
பொய்சொல்ல ஆரம்பித்தீர்கள். கர்த்தரோ எல்லா இருதயங்களையும்
ஆராய்கிறவர். அவருக்கு முன்பாக எந்தப் பொய்யும் நிற்கமாட்டாது.
ஆதலாலவரை மகிமைபடுத்து. இந்த மனுஷன் பாவியாயிருக்கிறான்.
அவன் கர்த்தருக்கு விரோதமாய் பாவஞ்செய்தபடியால் இப்படி
அற்புதம் செய்யத்தக்க திராணியைக் கொடுத்திருக்கமாட்டார். நீ
சொல்லுகிறது உண்மை அல்ல, உன்னைவிட அதிக அறிவுள்ள நாங்
கள் அப்படிச் சொல்லுகிறோம். உன்னைவிட எங்களுக்கு அதிகம் தெ



ரியும் என்று சொன்னார்கள் அவனோ தன்னறிவுக்கு மிஞ்சின காரியத்
தை ஒத்துக்கொள்ள மனதில்லாதவனாய் அவர் பாவியோ அல்ல
வோ எனக்குத் தெரியாது, எனக்குத் தெரிந்ததைமாத்திரம் நான்
விசுவாசிக்கிறேன், நான் குருடனாயிருந்தேன், இப்போது காண்கி
றேன், இது ஒன்றே அறிந்திருக்கிறேனென்றான்.

இவன் கொஞ்சமாவது பிடிகொடாததைப் பார்த்து அவர்கள்
அவன் மறுபடி சொல்லும் வாக்கு மூலத்தில் ஏதாவது விகற்பம்
கண்டுபிடிக்கலாம் என்று எண்ணி உனக்கென்ன செய்தான், உன்
கண்களை எப்படி திறந்தானென்று மறுபடியும் கேட்டார்கள். அவ
னோ விசாரணையினால் சடைவடைந்துபோனபடியால் ஏன் மறுபடி
யுஞ் சொல்லவேண்டும்! முன்னே அதை உங்களுக்குச் சொன்னேன்
நீங்கள் செவி கொடுக்கவில்லை, மறுபடியும் கேட்க என்னத்தினாலே
விரும்புகிறீர்கள்? நீங்களுமவருக்கு சீஷராக மனமுள்ளவர்களாயி
ருக்கிறீர்களா? என்றான். நான் அவருடைய சீஷன் நீங்களும் அப்படி
யாவீர்களா? அவரை நீங்கள் இவ்வளவாய்ப் பகைக்கும்பொழுது
உங்களுக்கு நூறுவிசை சொன்னபோதும் நீங்களதை ஒத்துக்
கொள்ளவுமாட்டீர்கள், நீங்கள் அவருடைய சீஷராகவுமாட்டீர்கள்
என்பதுபோல பேசினான். ஒருவேளை நீங்கள் மறுபடியுங் கேட்டு
நான் சொன்னதை உண்மை என்று ஒப்புக்கொண்டு அவர் சீஷராக
மனதாயிருப்பீர்களாக்கும் என்பதுபோலுஞ் சொல்லியிருப்பான்.
அவர்களிதைக் கேட்டவுடனே அவனை வைது நீயே அவனுக்குச்
சீஷன், நாங்கள் மோசேயின் சீஷர். மோசேயானவருடன் பராபரன்
பேசினதை அறிந்திருக்கிறோம். அவனுக்கு ஆண்டவர் அற்புதம் செய்
யும் வல்லமையைக் கொடுத்தனுப்பினார். இவனைப்பற்றி எங்களுக்
கொன்றும் தெரியமாட்டாது, அவன் வந்த இடத்தை அறியமாட்
டோம் என்பதுபோல மோசேயை இரக்ஷகருக்கு விரோதப்படுத்தப்,
பேசினார்கள். இவனோ கூர்ந்த புத்தியுள்ளவன் ஆனபடியால் அவர்
கள் சொன்னதைக்கொண்டே அவர்களுக்கெதிர் நியாயஞ்சொல்லு
கிறான். இது ஆச்சரியமல்லவா? இவர் என் கண்களைத் திறந்தார். இது
மனுஷனால் கூடாத காரியம். இத்தேசத்து அதிகாரிகளாகிய நீங்கள்
சகலத்தையும் விசாரித்து ஆவிகளை வகையறுத்து கர்த்தரால் வந்
ததையும் வராததையும் அறிந்து நிதானிக்கவேண்டியவர்கள். எங்க
ளுக்கு இன்னவிடத்திலிருந்து வந்தவரென்று தெரியாதெனகிறீர்கள்.
நீங்கள் சொன்னபடி இவன் பாவியாயிருப்பானாகில் கர்த்தர் இவ
னுக்குச் செவி கொடுக்கமாட்டாரே. பாவிகளுக்கு பராபரன் செவி
கொடுக்கிறதில்லை. இவனுக்கோ அவர் செவிகொடுத்து இப்படிப்
பட்ட அற்புதத்தைச்செய்ய திறமையளித்திருக்கிறார். இதனால் இவர்
எவ்விடத்தாரென்று எனக்குத் தெரியும். இவர் பராபரனிடத்திலி
ருந்து வந்தவர் இல்லாவிட்டால் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்
யமாட்டார். உங்களுக்குத் தெரியாவிட்டாலும் எனக்குத் தெரியும்.
நீங்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் இது சத்தியம் என்று உறுதி
யாய்ச் சொன்னான்.

இந்த மனுஷனுடைய விசுவாசமும் தயிரியமும் எவ்வளவு சீக்கி
ரம் வளர்ந்ததென்று பாருங்கள். சற்றுமுன்னே அவர் பாவியோ
அல்லவோ எனக்குத் தெரியாதென்றவன இப்பொழுது பாவிகளுக்
குத் தேவன் செவிகொடுக்கிறதல்லை என்று திட்டமாய்ச் சொல்
லுகிறான். இந்த வாக்கியத்துக்குப் பொருளென்ன? சாதாரணமாய்
எல்லா மனிதரும் பாவிகள்தான், ஆதாமின் மக்கள் ஒவ்வொருவருக்

கும் அவனவனுக்கேற்ற பாரச்சுமையுண்டு. இந்த விதமாய்ப் பார்க்
கும்பொழுது எந்த மனிதனுக்கும் ஆண்டவர் செவிகொடுக்கிறதில்லை
என்று சொல்லக்கூடாது, விசேஷித்த பாவங்களைச்செய்து பாவச்
சேற்றில் அமிழ்ந்தியிருக்கிறவனுமுண்டு. இப்படிப்பட்டவர்கள் குணப்
பட்டால் பராபரன் அவர்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை என்று
சொல்லக்கூடாது. குணப்படாமல் சீரடையாமல் தங்கள் பாவத்தி
லே நிலைத்திருக்கிறவர்களுக்கு கர்த்தர் செவிகொடுக்கிறதேயில்லை.
இப்படிப்பட்ட பாவிகளுடைய விண்ணப்பமும் பராபரனுக்கு அரு
வருப்பாயிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் கேட்டாலும் பெற்றுக்
கொள்ளமாட்டார்கள். (ஏசா. 1. 11—15 வரை. ஏசா. 59. 1. 2: வாக்
கி. 1. 28: வாக். 15. 8. 29: சங். 50. 16: 66. 18: யோபு 27. 9: 35.
13: எரே. 14. 12: ஆமோஸ் 5. 21. 23: மீகா. 3. 4.)

இப்படி குருடன் சொன்னதைக் கேட்டவுடனே அவன்மேல் கோ
பமூண்டவர்களாகி அவன் தங்களுக்குப் போதிக்கவந்தது அவர்கள்
எரிச்சலை மூட்டிவிட்டபடியால் நீ முழுவதும் பாவத்தில் பிறந்தவன்,
உன் சரீரமாத்திரமல்ல, உன் ஆத்துமாவும் பிறப்புமுதல் அந்தகாரப்
பட்டு தாயின் கெர்ப்பம் முதல் தேவதண்டனைக்குள்ளானவன், நீயா
எங்களுக்குப் போதிக்கிறது? என்று கோபமாய்ப் பேசினார்கள். சற்
றுமுன்னே அவன் குருடனாய் பிறக்கவில்லை பொய்யாய் அப்படிச்
சொல்லுகிறான் என்று குற்றஞ்சாற்றினவர்கள் இப்பொழுதவன் குரு
டனாய்ப் பிறந்ததை ஒத்துக்கொண்டு முழுவதும் பாவத்தில் பிறந்த
வன் என்கிறார்கள். இப்படிச்சொல்லி அவனை புறம்பேதள்ளினார்கள்.
அதாவது, செப ஆலயத்துக்கு புறம்பாக்கினார்கள். இவ்விதமாயவன்
கிறிஸ்துவுக்காக துன்பத்தைச் சகிக்க ஆரம்பித்தான். மனிதகுமார
னிமித்தமாக மனிதர் உங்களை பகைத்து உங்களை புறம்பாக்கி நிந்தித்
து உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்பொழுது நீங்
கள் பாக்கியவான்களாயிருப்பீர்களென்று இரக்ஷகர் சொன்ன வச
னம் இப்போதுதான் நிறைவேறிற்று. தாழ்ந்த ஐக்கியத்தினின்றும்,
சீக்கிரம் நீங்கிப்போகும் ஐக்கியத்தினின்றும் தள்ளப்பட்டபோதி
லும் மேலான ஐக்கியத்துக்கும் அசையாத இராஜ்யத்துக்கும்
பங்காளியானான். யூதருடைய செப ஆலயத்திலிருந்து புறம்பாக்
கப்பட்டவன் கிறிஸ்துவின் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டான்.
யூதர்களால் தள்ளப்பட்டபோதிலும் கிறிஸ்துவினால் அங்கீகரிக்கப்
பட்டான். சங்கீதக்காரன் சொல்லுகிறதுபோல, அவன் தகப்ப
னும் அவன் தாயும் அவனைக் கைவிட்டார்கள். கிறிஸ்துவே அவ
னைச் சேர்த்துக்கொண்டார். சபையின் திறவுகோலையுடையவர்கள்
அநியாயமாய் கதவைப் பூட்டும்பொழுது தாப்பாளை காதாங்கிக்
குபுறம்பே விடுவார்களே ஒழிய குற்றமற்றவனுக்கு மோக்ஷவாசலை
அடைக்கமாட்டார்கள். இந்த குருடன் வெட்கமடையாமல் கிறிஸ்
துவை அறிக்கையிட்டபடியால் கிறிஸ்துவானவர் தம்முடைய மகி
மையையும் தன்மையையும் அவனுக்கு வெளிப்படுத்த சித்தமானார்.
ஆதலால் இதுவரையில் தீர்க்கதரிசியென்றறிந்தவன் இப்போது தே
வகுமாரனாக அறிந்துகொள்கிறான். உள்ளவனுக்குக் கொடுக்கப்படு
மென்றவரே சொன்னார். ஆதலாலவன் புறம்பாக்கப்பட்டதை கேள்
விப்பட்டவர் நல்லமேய்ப்பனைப்போல தன்னாட்டைத்தேடி அதைத்
தன்னுடையதாக்கி கிடையில் சேர்க்கும்படியாய் அவனைக் கண்டு
பிடித்து நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா
என்கிறார். தேவகுமாரனென்பது மேசியாவுக்குத்தான் பெயரென்



று அறிந்தபோதிலும், அவர் இன்னாரென்று அறியாதபடியால் ஆண்ட
வரே நான் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யாரென்
றான். இயேசு அவனுக்குச் சொன்னது, நீ அவரைக் கண்டாய் உன்
னுடனே பேசுகிறவர் அவர்தானென்றார். முன்னே அவரைக் காணா
விட்டாலும், இப்பொழுது பேசும்போது அவரைக் கண்டதைத்தான்
நீ அவரைக் கண்டாயென்கிறார். நீ அவரைக் கண்டிருக்கிறாயே உன்
னுடனே பேசுகிற நான்தானே அவர், ஆகையால் இப்பொழுதே அவ
ரைக் காண்கிறாய் என்று அவர் சொன்னபோது, ஆண்டவரே நான்
விசுவாசிக்கிறேன் என்றுசொல்லி அவரைப் பணிந்துகொண்டான்.
இப்போதுதான் தேவனுடைய மகிமை அவனில் நிறைவாய் வெளிப்
பட்டது. கிறிஸ்துவைப்பற்றிய அறிவு வர வர சம்பூரணமடைந்
தது. விதையானது முளையும் பயிருமாய் வளர்ந்து பூத்துக் காய்த்
துக் கனிகொடுத்ததுபோல இருந்தது. அவருடைய பாதத்தில்
விழுந்து பயத்தோடும் நடுக்கத்தோடும் அவரை வணங்கித் தொழுது
கொண்டான். படிப்படியாய் கர்த்தர் தனக்குக் கொடுத்த ஒளியைப்
பின்சென்று தடைகளை செயித்து உண்மையாய் நடந்தபடியால்,
அவனுடைய விசுவாசம் பலப்பட்டு அவனிருதயத்தில் விழுந்தவிதை
வேரூன்றி, துன்பத்துக்கஞ்சாமல் அதிக கிருபையும் அதிக அறிவை
யும் பெற்றுக்கொள்ள பாத்திரனானான்.

இவன் பார்வையடைந்ததுபோல அந்த சதுசேயரும் மற்றவர்க
ளும் துன்மார்க்கத்தில் கடினப்பட்டுப்போனபடியால், இரக்ஷகர்
அவர்களைப்பார்த்து, காணாதவர்கள் காணும்படியாகவும் காண்கிற
வர்கள் குருடர் ஆகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கொடுக்கிறதற்
காக நானிந்த உலகத்தில் வந்தேனென்றார். அவனவன் நிலைமையை
அவனவனுக்கு வெளிப்படுத்தவந்தேன். நான் ஒரு உரைகல், என்
னைத தொடுகிறவர்கள் பார்வைக்கு நல்லவர்களாயிருந்தாலும் கள்ள
ரென்று வெளிப்படுவார்கள். அற்பரென்று அசட்டைபண்ணப்படுகி
றவர்கள் என்றால் நல்லவர்களாக கடைசியில் வெளிப்படுவார்கள்.
அறிவுள்ளவர்களென்று அழைத்துக்கொண்டவர்கள் குருடராயும்,
அறிவீனரென்றும் புறக்கணிக்கப்படுகிறவர்கள் மெய்யான ஒளியுள்ள
வர்களாகவும் வெளிப்படுவார்கள். அவர் நாமம் சத்தியம். அவர்
பாரிசமானவர்கள் சத்தியமுள்ளவர்கள். அவருக்கு விரோதிகள்
பொய்யர். சிமேயோன் சொன்னபடி அநேகருடைய சிந்தனைகள்
வெளிப்படத்தக்கதாக இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்
திருக்கிறதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த கல்லின்மேல்
அனேகர் அஸ்திபாரம்போட்டு தங்கள் மாளிகையைக் கட்டுகிறார்
கள். சிலரோ இதற்கு விரோதமாய் இடறிவிழுகிறார்கள். 1 பேது.
2. 6, 8. 2 கொரி. 2. 16. பரிசேயர் நாங்களும் குருடராவென்று
விரோதமாய்க்கேட்டபோது, இரக்ஷகர் அவர்களுக்கு மாறுத்தரமாக
யோவான் 10. 21 வரையிலுள்ள உவமையைச்சொல்லி இவனை சபைக்
கு புறம்பாகத் தள்ளினபடியால், வலாத்காரமாய் கடூரமாய் ஆண்டு
வந்த கெட்ட மேய்ப்பரென்றும், தான் உண்மையுள்ள நல்லமேய்ப்
பரென்றும் காட்டுகிறார். ஏசே. 34 ம் அதிகாரத்தை யோவான் 9.
10 ம் அதிகாரங்களோடு ஒத்து வாசித்துப்பார்த்தால் இது நன்றாய்
விளங்கும்.

# A METRICAL INDEX TO THE BIBLE.

# வேதாத்தியாயப் பொழிப்பு.

## தாவீதின் சங்கீதங்கள்.

(தொடர்ச்சி.)

சங்கீதம்.

9 இன்னல் நீக்கிடு தேவனைத் துதித்திட லியம்பல்
10 துன்னு பாவிகள் செயல்களைத் தவிதுமே சொற்றல்
11 மன்னு தெய்வமொன் றேபுக லிடமென வழுத்தல்
12 பின்ன மேபுகல் நாத்துணித் திடப்படல் பேசல். (179)

13 ஈறி லாதவன் றுமதத் தாலவ னிரங்கல்
14 கூறு தெய்வமொன் றின்றென நாஸ்திகன் குயிறல்
15 மாறி லாதுதெய் வத்துடன் யாவனோ வசிப்பன்
16 கோற துண்டயே சுயிர்த்தெழுந் திடுதலைக் கூறல். (180)

17 உன்ன லர்க்குவி லக்கிட வேண்டுதே துரைத்தல்
18 நன்மை யேசெயுந் தேவனைப் போற்றுதல் நவிலல்
19 மன்னு சிஷ்டிகள் தேவனின் மகிமையை வழுத்தும்
20 என்றுந் தூயவர் நித்தனை நம்புவா ரென்னல். (181)

21 ஊக்க மாயருள் செயத்தினுக் காய்த்துதி யுரைத்தல்
22 நோக்க மாய்க் கிறிஸ் தியேசுவின் பாடுகள் நுவலல்
23 மாக்கள் யாவரும் தேவனின் மந்தையி ருடாம்
24 பாக்கி யந்தரு மேகன்ராச் சியந்தனைப் பகரல். (182)

25 எங்கு மேயுளான் கிருபையை வேண்டுதே லியம்பல்
26 புங்க மாய்மன நேர்மையைப் புகன்றவ ணிரத்தல்
27 துங்கன் மாவலி தனிற்றிடன் கொள்ளலைச் சொற்றல்
28 பங்க மேபுரி மருவலர்க் காயுரை பகரல். (183)

29 ஏக தேவன்மா மகத்துவங் களையவ னியம்பல்
30 வாகு சேர்கிர கப்பிர திஷ்டைமா கீதம்
31 தாக மாயம லன்றையை வேண்டலைச் சாற்றல்
32 போக மேயுடை யவனெவ னென்றவன் புகறல். (184)

இன்னல்=துன்பம். குயிறல்=சொல்லல். உன்னலர்=பகைவர். எங்குமேயுளான்=சருவ வியாபியாகிய கடவுள். துங்கன்=கடவுள். மாவலி=சர்வ வல்லபம். மருவலர்=விரோதிகள். போகம்=பாக்கியம்.



# பழையவேற்பாட்டுச் சரித்திர ஆகமங்களின் உண்மையை ரூபிக்கும் நோக்கமில்லாத இசைவுக் குறிப்புகள்.

(தொடர்ச்சி.)

XV. இதிலெல்லாம் இசைவுகளேயன்றி நோக்கத்தைக் காணோம். ஒரு குழப்பம் நடந்ததென்று பார்க்கிறோம். அதற்கேற்ற விதைகள் அநேக தலைமுறைகளுக்குமுன்னே விதைக்கப்பட்டு வளர்ந்துவந்ததையும் பார்த்தோம். சடுத்தங்களும் பிரிவினைகளும் இஸ்ரவேலருக்குள் உண்டாயிற்றென்று வாசிக்கிறோம். நன்றாய் ஆராய்ந்து பார்த்ததின் பேரில் அப்படிப்பட்ட காரியங்கள் நடக்கிறதற்கேற்ற காரணங்களையும் கண்டோம். இடங்களிலும், ஆட்களிலும் அவர்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறதை நன்றாய்ப் பார்க்கப்பார்க்க அவர்கள் சம்பந்தப்பட்ட சரித்திரங்களுக்கிசைவான குறிப்புகளைக் கண்டோம். இதுகள் தெளிவாய்ச் சொல்லியிராததினால் முதலிலே தோன்றவில்லை. இதுகளெல்லாம் உண்மைக்குரிய குறிப்புகளானபடியால் சரித்திரத்தைக் குறித்துச் சந்தேகியாமல், அது உண்மையென்று ஒத்துக்கொள்ளுகிறேன். ஆகிலுங் காரியங்கள் மெள்ளமெள்ள, யாக்கோபு அநேக வருஷங்களுக்குமுன்னே தீர்க்கதரிசன ஆவியைக்கொண்டு முன்னறிவித்தபடியே ஒவ்வொன்றாய் நடந்துவந்ததைப் பார்க்கும்போது ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. மனுஷரைப் பணிமுட்டுகளாகவல்ல, கருவிகளாகப் பிரயோகித்து, அவர்களிஷ்டப்படி நடக்கவிடும்பொழுதே தன் சித்தத்தை நிறைவேற்றச்செய்து, அவர்கள் சுயாதீனத்திற்குப்பழுதுவராமல் தாம் சொன்னதை உண்மையாய் நிறைவேற்றிவருகிற அதிசயமான வல்லமையுடையவரின் செய்கைகள் நம்முடைய புத்திக்கு எட்டாதவைகள்.

XVI. இப்பொழுது யூதா இஸ்ரவேலென்னும் இராஜியங்கள் பிரிந்தபிறகு அவர்களுடைய நிலைமை எப்படிப்பட்டதென்று பார்த்து, அதிலிருந்து சரித்திரத்தின் உண்மையைக் காட்டப் பார்ப்போம்.

1. இரா. 15. 17 ல் ஒருவரும் புறப்பட்டு யூதாவின் இராசாவாகிய ஆசாவின் வசமாய்ச் சேராதபடிக்கு இஸ்ரவேலின் இராசாவாகிய பாசா யூதாவுக்கு விரோதமாய் ஏறிவந்து ராமாவைக் கட்டி எடுபித்தான் என்றிருக்கிறது. ராமா என்னும் பட்டணம் இரண்டு இராஜியங்களுக்கும் நடுவாக இரண்டுக்கும் விசேஷித்த ஸ்தலமாயிருந்தது. யூதா இராசாவல்ல, இஸ்ரவேலின் இராசாவே அதை பெலப்படுத்தப் பிரயாசப்பட்டான். யூதாவின் இராசாவோ 2 நாளா. 16. 6 ல் கண்டிருக்கிறபடி பாசாவின் பிரயெத்தனங்களைத் தகர்த்து அது தன் வசமிருக்கவேணுமென்று விரும்பினபோதிலும் ராமாவைப் பலப்படுத்தவேணுமென்று கவலைகொள்ளவேயில்லை. ஏனெனில், பாசா தொடங்கின வேலையைத் தடுத்த அந்த ஆசா தானுவது அதை முடியாமல் மரங்களையுங் கற்களையுங் கொண்டுபோய் வேறு வேலைக்கென்று பிரயோகித்தான். காரியத்தைப் பார்க்கும்போது இஸ்ரவேலின் இராசா அதை பலப்படுத்தப் பார்த்தான். யூதாவின் இராசா அதைத் தடுக்கப் பார்த்தான். பிரிவினைக்குப் பிறகு இஸ்ரவேலின் தொ

னை அதிக மிச்சமாயும், யூதாவின் தொகை அதிக சொற்பமாயுமிருந்ததென்று அறிந்திருக்கிற நமக்கு இது ஆச்சரியமாயிருக்கிறது. யூதாவைச் சேர்ந்தவர்கள் நூற்றெண்பதினாயிரம் பேராயிருந்தார்கள். 1 இரா. 12. 21. எரோபேயாமோ சில வருஷங்களுக்குப் பிறகு எண்ணூறாயிரம் பேரோடு யுத்தத்திற்குப் போனதாக வாசிக்கிறோம். 2 நாளா. 13. 3. யூதா சிறுத்துப்போனபடியால் இஸ்ரவேல் தன்னோடு யுத்தஞ்செய்ய வருமென்று பயந்து தன் எல்லையிலிருந்த அந்தப் பட்டணத்தை அரணிப்பானதாக்குமென்று நாம் எண்ணிக்கொள்ளுவோம். காரியமோ முற்றிலும் இதற்கு விரோதமாயிருந்தது. இதெப்படி தற்செயலாய் ராமாவைக்குறித்துக் கொஞ்சமாவது சம்பந்தப்படாமல் சொல்லியிருக்கிற ஒரு சங்கதி இதின் காரணத்தைத் தெளிவாய்க் காண்பிக்கும். எரோபேயாம் தன் மனதிலே இந்தச் சனம் எருசலேமிலிருக்கிற கர்த்தரின் வீட்டிலே பலிகளைச் செலுத்த ஏறிப்போனால் இராக்ஷியபாரம் தாவீதின் வீட்டு வசம் திரும்புமென்றெண்ணி, பேத்தேலிலும் தாணிலும் தனக்கிஷ்டமான ஆராதனையை ஏற்படுத்தினான். 1 இரா. 12. 26, 27.

2 நாளா. 11. 14ல் எரோபேயாமென்பவன் லேவியரைக் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யாதபடிக்கு அவர்களைத் தள்ளி வேறு மனிதர்களைத் தன்னிஷ்டப்படி ஆசாரியர்களாக்கினான். இப்படி அவன் செய்வானென்று நாம் எண்ணவேண்டியதுதானே. இவ்விதமாய் அவன் பராபரனுடைய சபையைப் புரட்டினதினால், இஸ்ரவேலெங்குமிருந்த ஆசாரியரும் லேவியருந் தங்களெல்லா எல்லையிலுமிருந்து யூதாவண்டைக்கு வந்து சேர்ந்தார்கள். தேவ ஊழியக்காரராகிய இவர்கள் மாத்திரமல்ல, அவர்கள் பிறகாலே இஸ்ரவேலின் கோத்திரங்களிலெல்லாம் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்குத் தங்கள் இருதயத்தை நோக்கினவர்களும் வந்து, யூதாவின் இராக்ஷியத்தை பலக்கப்பண்ணி, சாலோமோனின் குமாரனாகிய ரெகாபெயாமைத் திடப்படுத்தினார்களென்று வாசிக்கிறோம். நேபாத்தின் குமாரன் தன் காரியத்தில் மகா சமர்த்தனாயிருந்தபோதிலும், நீதியானது ஒரு சாதியை உயர்த்துமென்றும், அதின் பத்தியுள்ள குடிகளாலேயே அதின் இராசாங்கம் நிற்குமென்றும் இன்னுங் கற்க வேண்டியிருந்தது. இப்படிப்பட்டவர்களையே அவன் இழந்துவிட்டான். இவனும் இவனுக்குப் பிறகுவந்த கெட்ட இராசாக்களும் தங்கள் கண்களுக்குமுன்பாகவே இப்படிப்பட்ட நல்ல சனங்கள் அக்கிரமத்தாலுண்டான இராக்ஷியத்தைவிட்டுப் பிரிந்து வேறொரு இராக்ஷியத்தில் சேர்ந்துகொள்ளுகிறதைக் கண்டார்கள். இதினாலேயே அவர்கள் கவலைகொண்டு அந்த நல்ல குடிகள் தங்களைவிட்டுப் போகாதபடிக்குத் தடுப்பதற்காக ராமாவென்னும் பட்டணத்தை பலப்படுத்தினார்கள். இது ஒன்றினாலுஞ் செயிக்கக்கூடாத தேவபத்திக்கடுத்த ஆவியைக் கற்சுவரினால் தடுக்கப் பார்த்ததுபோலிருந்தது. இதினாலேயே யூதாவும் அந்தக் கட்டிடத்தை முற்றிலும் பேர்க்க வகைபார்த்தது. அந்தப் பத்தியுள்ள இஸ்ரவேலர் எங்கேயிருந்தாலும் பலத்த அரணாயிருப்பார்களென்று அறிந்தபடியால், அவர்கள் வருவதைத் தடுத்த எந்த அற்ப இடறலையும் நீக்கப் பிரயாசப்பட்டான். இந்த இசைவுக்குறிப்பு எவ்வளவு திருப்தியானதென்று பாருங்கள். இஸ்ரவேல் ராமாவைக் கட்டினதும், யூதா அதைத் தடுத்ததும், எரோபேயாமின் விக்கிரக ஆராதனையினாலே இஸ்ரவேலில் அநேகர் யூதாவில் போய்க் குடியேறினதும் ஒன்றுக்கொன்று நன்றாய் இசைந்திருக்கி



றது. இப்படி சங்கதிகள் ஒன்றுக்கொன்று இசைவாயிருக்கிறதைக் குறித்துச் சரித்திரம் ஒன்றுஞ் சொல்லுகிறதுமில்லை. அதுகளெல்லாம் ஒரே தொடர்ச்சியாய் ஒரே அதிகாரத்தில் வருகிறதுமில்லை.

---

XVII. பத்துக்கோத்திரத்திலுள்ள பத்திமான்கள் வெறுப்படைந்து யூதாவுக்குப்போய்விட்டதை நாம் மனதில்வைத்துக்கொள்ளுவோமானால், யூத இராக்ஷியத்துச் சேனைகள் வரவர தொகையில் அதிகரித்ததையும், இஸ்ரவேலின் இராணுவங்கள் வரவர தொகையில் சிறுத்துப்போன வகையையும் இலேசாய் அறிந்துகொள்ளலாம். இந்த இரண்டு இராக்ஷியத்தின் சரித்திரத்தில் இங்கும் அங்கும் தற்செயலாய்ச் சொல்லப்பட்டிருக்கிற குறிப்புகளினால் இது நமக்குத் தெரியவருகிறது. பிரிவினையுண்டானவுடனே ரெகாபெயாம் தன் இரண்டு இராக்ஷியத்தின் இராணுக்களையும் ஒன்றாய்த் திரட்டினபோது அவர்களில் நூற்றெண்பதினாயிரம் போர் வீரர்களிருந்தார்கள். பதினெட்டு வருஷங்களுக்குப்பிறகு, அவன் குமாரனாகிய அபியா எரோபெயாமுக்கு விரோதமாய் யுத்தஞ் செய்யப்போனபோது நானூறாயிரஞ் சேவகரோடு போனான். 2 நாளா. 13. 3. அவ்வளவு சீக்கிரத்தில் எவ்வளவாய்ப் பெருகினார்களென்று பாருங்கள். ஆறேழு வருஷங்களுக்குப் பிறகு எத்தியோப்பியர் திரள் கூட்டமாக அபியாவின் குமாரனாகிய ஆசாவின்மேல் யுத்தஞ்செய்யவந்தபோது எரோபெயாமோடு செய்த யுத்தத்தில் அநேகர் மரித்தபோதிலும், யுத்தக்களத்திற்கு ஐந்நூற்றெண்பதினாயிரம்பேரோடுவந்தான். முப்பத்திரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஆசாவின் குமாரனாகிய யோசப்பாத்து இராசாவாயிருந்தபோது யூதசேனையில் பதினொருலட்சத்து அறுபதினாயிரம்பேரிருந்தார்கள். இவ்விதமாய் யூதமனுஷர் கொஞ்சங்கொஞ்சமாய் அதிகரித்ததைப் பார்க்கிறோம். 2 நாளா. 17. 16-18.

இஸ்ரவேலின் இராக்ஷியமோ வரவரத் தொகையில் குறைந்துபோனதாய்ப் பார்க்கிறோம். நாமாய் இதை ஆராய்ந்து கண்டறிகிறோமேயொழிய சரித்திரத்தில் இதைப்பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லை. எரோபெயாமிடம் துவக்கத்திலிருந்த போர்ச்சேவகர் எண்ணூறாயிரம் பேர். இந்தச் சேனை வரவரக் குறைவானதென்று முந்தினதைப்போல் தொகையினால் அறிந்துகொள்ளக்கூடாவிட்டாலும் சரித்திரத்தில் சொல்லிய சங்கதிகளால் நன்றாய் அநுமானிக்கலாம். எரோபெயாமுக்குப் பின்வந்த அரசர்களில் ஒருவனாகிய ஆகாப் என்பவன் யோசபாத்தின்காலத்தில் இஸ்ரவேலை ஆண்டுவந்தபோது, பெனாதாதும், சீரியரும் அவனைப் பயமுறுத்தி தங்கள் ஊழியக்காரரை அவனண்டைக்கனுப்பி, அவன் வீட்டிலும் அவன் ஊழியக்காரர் வீடுகளிலுமிருந்து அவனுக்குப் பிரியமானவை எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுபோவார்களென்று சொல்லியனுப்பினான். 1 இராசா. 20. 6. இஸ்ரவேல் பெலவீனப்பட்டுப்போனபடியினாலே தன்னோடு போர் கலக்கமாட்டார்களென்றெண்ணி, இப்படி அகந்தையாய்ச் செய்தியனுப்பினான். சடுதியான பயத்தினாலே ஆகாப் இந்தவிசை ஜெயமடைந்தபோது பெனாதாத் மறுவருஷம் வந்தான். இதைக்குறித்து தீர்க்கதரிசி ஆகாப்பை எச்சரித்து, நீர்போய் உம்மைப் பலப்படுத்திக்கொள்ளுமென்று தயவாய்ப் புத்திசொன்னபடியே தன்னாலானமட்டும் அப்படிச் செய்தும், இஸ்ரவேலர் இலக்கம் பார்க்கப்பட்டு தேவையானதைப் பராமரித்துக்கொண்டு அவர்களுக்கெதிராகப் புறப்பட்டு

அவர்களுக்கெதிரே இரண்டு சிறிய வெள்ளாட்டு மந்தையைப்போல் பாளையமிறங்கினார்கள். ஆனால் சூரியரால் தேசம் நிரம்பியிருந்தது. 22ம் 27ம் வசனங்கள். ஆகாபின் குமாரனாகிய யோராமின் நாட்களில் இஸ்ரவேல் மெத்தப் பெலவீனப்பட்டுப்போனபடியால், சூரியர் தைரியங்கொண்டு இஸ்ரவேல் தேசத்தில் அடிக்கடி தண்டுகளை அனுப்பி, சிலவேளைகளில் சனங்களைச் சிறையாக்கிப்போனார்கள். சிலதருணங்களில் பெரியபட்டணங்களையும் முற்றிக்கைபோட்டார்கள். 2 இரா. 5: 2. 13. 21. 6; 14, 23. அவனுக்குப்பிறகு ஏகூ இராசாவானபோது, சூரியருக்கு இராசாவாயிருந்த ஆசகேல இஸ்ரவேலை மிகவும் ஒடுக்கி யோர்தானுக்குக் கிழக்கே ஆரோவேர்முதற்கொண்டிருக்கிற கிலேயாத்திலும் பாசானிலுமுள்ள காதியர், ரூபனியர், மனாசே மனுஷருடைய தேசமாகிய முழுக் கிலேயாத்தையும் முறியடித்தான். 2 இரா. 10. 33. கடைசியாக அவனுக்குப் பிறகு இஸ்ரவேலின் இராசனாகிய யோவகாசுக்கு இருந்த சேனையெல்லாம ஐம்பது குதிரைக்காரரும், பத்து ரதங்களும, பதினாயிரங் காலாட்களுந்தான் மற்றதெல்லாவற்றையுஞ் சூரியர் அழித்துப்போட்டார்கள். 2 இரா. 13. 7. இவ்வகையாய் இஸ்ரவேலின பெலன நாளடைவில குறைவாயிற்று.

நாம் சொல்லுகிற நியாயம பெலனுள்ளதென்று அறியும்படிக்கு நாமொரு காரியத்தை மறக்கக்கூடாது. இப்படி யூதா பலத்துப்போனதையும, இஸ்ரவேல் சிறுத்துப்போனதையும் சரித்திரம ஒப்பிட்டுப் பேசுகிறதுமில்லை. நம்மை ஒப்பிட்டுப்பார்க்கச் சொல்லுகிறதுமில்லை. அதற்கேற்ற குறிப்புகளை அதலே காண்கிறோம. அதுகளும் விஸ்தாரமான சரித்திரத்தில இங்கும் அங்குஞ் சிதறுண்டு இரண்டு இராஜ்யங்களின் சங்கதியைக்காட்டக் கூடியதல்லாததுமாயிருக்கிறது. யூத இராஜ்யந் தொகையில் வளர்ந்ததையும், இஸ்ரவேலின் இராஜ்யம குறைந்ததையும் தொகையினாலல்ல, வேறு குறிப்புகளால் நாம அறிந்துகொள்ளுகிறதே சரித்திரக்காரன இதை நோக்கத்தோடெழுதவில்லை என்றும், லேவியரைத்தள்ளி வேறு ஆசாரியரை ஏற்படுத்தினதைவிட்டு சனங்கள் கோபங்கொண்டு இஸ்ரவேல் தேசத்தைவிட்டுப் போனார்களென்று தற்செயலாய்த்தான் சொன்ன சங்கதியோடு இசைந்திருக்கவேணுமென்று எழுதவில்லையென்றும், ரூபிக்கப் போதுமானதாயிருக்கிறது.

———— o ————

# CHRISTIAN CHURCH HISTORY.

# கிறிஸ்துசபைச சரித்திரம்.

## 2. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

சவுலின் குணப்படுதலோடு சம்பந்தப்பட்ட அற்புத சங்கதிகளை இங்ஙனம் விவரிப்பது அவசியமல்ல. இயேசுவானவர் தாமே வழியில அவனுக்குத் தரிசனையாகி அவனைக்குறித்து தாம் கொண்டிருந்த நோக்கங்களை அவனுக்கு வெளிப்படுத்தினாரென்று சொல்வது போதுமே. புறத்தேசத்தாருக்கு அவன் இயேசுவின் மார்க்கத்தை அறிவிக்கவேண்டுமென்றும் கற்பிக்கப்பட்டது. தான் துன்பப்படுத்தின



மார்க்கத்தை அனுசரித்துக்கொள்வதைப் பார்க்க மேற்குறித்த கட்டளையே அதிக வெறுப்பாயிருந்திருக்கும். புறத்தேசத்தாருக்கும் இரட்சிப்புண்டென்று ஒரு யூதனை நம்பப்பண்ணுவது அற்புதமாயன்றிக் கூடியதோ? இந்தச் சத்தியம் சவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டபொழுது, வெகுகாலமாய் சுவிசேஷ போதனை யடைந்த மற்றெல்லா அப்போஸ்தலர்களையும் பார்க்க, அவன் குணப்பட்ட துவக்கத்திலேயே அவனுக்கு இவ்விஷயத்தைப்பற்றி அதிகத தெளிவு உண்டாயிற்றென்று யதார்த்தமாய்ச் சொல்லலாம். சவுல் தான் அடைந்த தரிசனையினால் பார்வை யிழந்துபோய், தமஸ்குவில் மூன்று நாள் வரையும் பார்வையில்லாமலேயிருந்து, ஞானஸ்நானத்தின் மூலமாய் கிறிஸ்துமார்க்க உடம்படிக்கைக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டான். அப்பால் தன் குணப்படுதலை மற்றக் கிறிஸ்தவர்கள் நம்பமாட்டார்களென்றோ, தான் பிரசங்கிக்கவேண்டிய உபதேசங்களைப்பற்றி அதிகப் போதனை யடையவேண்டுமென்றோ கொஞ்சக்காலம் அரபிதேசத்துக்குப் போயிருந்தான்.

இதனிடையில் எருசலேமில் சபைக்குண்டாயிருந்த துன்பம் கொஞ்சங்குறைய நின்றுபோயிற்று. பண்டிகைநிமித்தம் வந்த பிரதேச யூதர்கள் பட்டணத்திலிருந்தவரையில் பிரதான ஆசாரியர் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்க் கொண்டிருந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏவலாட் குறைவிராது. கிறிஸ்தவர்கள் செப ஆராதனைக்கென்று கூடிவருமிடங்களும் தெரிந்திருக்கும். அதினால் ஆராதனை நேரத்திலேயே அநேகரைப் பிடித்து மோசேயின் நியாயப்பிரமாணத்தை யகற்றுவதற்கு சதியோசனை செய்தார்களென்று குற்றஞ்சாற்றி சமையத்துக்குத்தக்கதாய் தண்டனைசெய்து வந்தார்கள். பட்டணம் சனங்களால் நிறைந்திருந்த வேளைகளில் வீதிகளில் சண்டைகள் சச்சரவுகள் நடப்பதும் வழக்கமானதால், இந்தக் குரூர செய்கைகள் அங்கிருந்த ரோம காப்புச்சேனைக்குத் தெரியாமலும் போய் விடுமே. சில கிறிஸ்தவர்கள் கொலையுண்கவே, வேறு அநேகர் அதற்குத் தப்பிக்கொள்ளும்பொருட்டு எருசலேமைவிட்டு ஓடிப்போனார்கள். ஸ்தேவானைச் சேர்ந்த மற்ற உதவிக்காரரையும் பிடிக்க சத்துருக்கள் வகைசெய்திருப்பார்களே. ஆதலால் அவர்களெல்லாரும் தப்பியோடி விட்டார்களென்று தோன்றுகிறது. இவ்விதமாய்ச் சுவிசேஷத்தை யழிக்கும்படியாகப் பிரயோகிக்கப்பட்ட எத்தனமே யூத போதகர்களால் ஒருபொழுதும் வரமாட்டாதென்று நினைக்கத்தக்க தேசத்துக்கும் அதைக்கொண்டு வந்தது. இந்ததேசம் சமாரியாவே. சமாரியர் இன்னமும் யூதர்களுக்கு பகை சாதித்து வந்தார்களே. அதினால் பண்டிகைக்கு வந்திருந்தவர்களால் கிறிஸ்துமார்க்கம் தூரமானதேசங்களுக்கும் போயிருக்க, சமீபமாயிருந்த சமாரியா அதைக்குறித்துக் கேள்விப்படாதென்று எண்ணவும் இடமிருந்ததே.

சமாரியாவானது கிழக்கிலிருந்து கொண்டுவரப்பட்ட பல சாதியாரால் குடியேறியிருந்ததென்றும், அந்தச் சமாரியர் ஆபிரகாமின் தேவனும் மோசேக்குத் தரிசனையானவருமான ஒரே மெய்த்தேவனையே வணங்குகிறோமென்று சொல்லியும் விக்கிரகபத்திக்குரிய பல அனர்த்தங்களையும் தங்கள மதாசாரத்தோடு கலந்திருந்தார்களென்றும் தெரியுமே. மேலும் பத்துக்கோத்திரத்தார் அசிரியாவுக்குச் சிறைப்பட்டுப்போன காலத்தில் இஸ்ரவேலரில் அநேகரும் தேசத்தில் மீந்திருந்தார்களென்றும் நினைக்க இடமுண்டு. சமாரியர் இதுவரையும், பாபிலோன் சிறையிருப்புமட்டும் பன்னிரு கோத்திரத்

சாரும் பேசின பாஷையையே பேசிவந்தார்கள். இது கவனிக்கத்தக்க ஓர் விசேஷந்தான். பாபிலோனிலிருந்து திரும்பின யூதர் தங்கள் ஜனன பாஷையாகிய எபிரேயுவை ஒழித்து, தாங்கள் போயிருந்த தேசத்து கலதேயப் பாஷையைப் பேசப் பழகிக்கொண்டார்கள். அவர்களுக்குள் மூலபாஷையிலேயே தங்கள் வேதத்தை யுணர்ந்துகொள்ளக் கூடியவர்கள் அநேகரிருக்கவில்லை. செப ஆலயங்களில் வாசிக்கிறதற்கு அப்பின்பு வேதாகமப் பிரதிகள் பல எழுதப்பட்டபோதிலும், எபிரேய மொழிகளை கலதேய அட்சரங்களில் எழுதவேண்டியதாயிற்று. என்றாலும் சமாரியரோ இதுவரையும் எபிரேயுப பாஷை அட்சரங்களையே வழங்கிவந்தார்கள்.

யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி எருசலேமைக் கட்ட ஆரம்பித்தபொழுது அவர்களுக்கும் சமாரியருக்கும் பகை உற்பத்தியான விவரம் வேதாகமத்தில் காட்டியிருக்கிறது. அப்பொழுது தொடங்கின அந்தச் சாதிப் பகை இரட்சகர் தோன்றின காலத்திலும் மும்முரமாகவேயிருந்தது. ஆராதனை விஷயத்தில் இவ்விரு தேசத்தார்களுக்கும் அவ்வளவான வித்தியாசமில்லை. யூதர்களுடைய தேவனையே சமாரியரும் ஆராதித்துவந்தார்கள். ஆனால் எருசலேம் தேவாலயத்திலேயே ஆராதிக்கவேண்டுமென்று யூதர் சொன்னதை மறுத்து, சீயோன் மலையில் ஆராதிக்கிறதுபோலவே கெரிசீம் மலையிலும் ஆராதிக்கலாமென்று சாதித்தார்கள். இவ்வாறு அவர்கள், சுவிசேஷத்தினால் ஏற்படுத்திய சுயாதீனப் பிரமாணத்தில் ஓர் பகுதியை, அறியாதவிதமாய், பற்றிக்கொண்டிருந்தார்களென்று சொல்லலாம்.

அவர்களுக்கும் யூதருக்குமிருந்த வேறொரு வித்தியாசம் யாதென்றால், மோசேயினால் எழுதப்பட்ட ஐந்தாகமங்களைத் தவிர மற்றெல்லா வேதாகமங்களையும் அவர்கள் தள்ளிவிட்டதே. ஆகிலும் இவ்வைந்தாகமங்களையும் யூதர்கள் எவ்வளவு வணக்கமாய் எண்ணிவந்தார்களோ அவர்களும் அவ்வளவு வணக்கமாயெண்ணி வந்தார்கள். முக்கியமாய் இவ்வாகமங்களினாலேயே மேசியா வருவாரென்று அவர்கள் அறிந்து எதிர்பார்த்திருக்கவேண்டும். எப்படியும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவானவர் தோன்றப்போகிறாரென்று சிறிதுகாலமாய் யூதருக்குள்ளிருந்த எண்ணமே சமாரியருக்குள்ளுமிருந்ததென்பதற்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

ஆதலால் பலவிதத்தில் பார்த்தால் யூதர்களைவிட சமாரியரே சுவிசேஷத்தை யேற்றுக்கொள்ள லேசில மனமுடையவர்களாவார்களென்று நிதானிக்கலாகும். யூதருக்கிருந்த பெரிய இடையூறுகளில் ஒன்று என்னவென்றால், மேசியாவினுடைய இராச்சியத்தின் மகிமைகளில் தங்களைத் தவிர வேறு யாருக்காவது பங்குண்டு என்பதுதான். புறத்தேசத்தாரைப்போலவே சமாரியருக்கும் பாத்தியமில்லையென்பதே அவர்கள் அபிப்பிராயம். நமது இரட்சகர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தமது சீஷரை அனுப்பின ஓர் சமயத்தில் சமாரியருடைய பட்டணத்தில் பிரவேசிக்க வேண்டாமென்று கற்பித்தது இந்த முகாந்தரமாயிருந்தாலுமிருக்கலாம். அவ்விரு தேசத்தாரும் ஒருவருக்கொருவர் இன்னமும் கம்பகை சாதித்துவந்தமையால் அது சுவிசேஷ பிரசங்கத்துக்கு அனுகூலமான வேளையல்லவென்று அவர் உணர்ந்திருக்கலாமே. ஆகிலும் அவர் பரத்துக்கு எழுந்தருளச் சமீபிக்க அப்போஸ்தலர்களுக்கு உண்டாகும் அனுகூல சித்தியை முன்னறிவிக்கையில் உலகமெங்கும்போய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சொன்னதோடு சமாரியாவிலும் அறி



விக்க அவர்களுக்குத் தெளிவாய்க் கற்பித்தார். இவ்விரண்டு கற்பனைகளும் அக்காலத்தில் அவர்களுக்குத் திகைப்பைக் கொடுத்திருக்கலாம். சமாரியரை கிறிஸ்துவின் இராச்சியத்தில் சேர்த்துக்கொள்ளுகிற காரியம் அப்போஸ்தலர்களுக்குமுதலாய் விபரீதமாகவே தோன்றியிருக்கும். ஆகிலும் சுவிசேஷம் அங்கே பிரபலியமாகத் தொடங்கின இந்த முதல் ஆரம்பம் ஸ்தேவானுடைய மரணத்துக்குப்பின் அநேக கிறிஸ்தவர்கள் எருசலேமிலிருந்து ஓடிப்போனதினால் திவ்வியசெயலாய் விளைந்தபயனே.

உதவிக்காரரில் ஒருவனான பிலிப்பு சமாரியாவில் சரணமடைந்து சனங்களுக்கு மேசியாவானவர் வந்துவிட்டார், இயேசுவே அவர் என்று அறிவித்தான். அற்புதஞ்செய்கிறவரம் அப்போஸ்தலர்களுக்குத்தான் உண்டு என்றல்ல. அவர்கள் தம் கைகளை வைக்கப்பெற்ற அநேகரும் அந்த வரத்தையடைந்து அற்புதங்களை நடப்பித்துவந்தார்கள். அப்படியே இந்தப் பிலிப்பு என்பவனும் தான் பிரசங்கித்த உபதேசத்தை தன் அற்புதங்களினால் உறுதிப்படுத்தினபடியால் சொற்பகாலத்துக்குள் சமாரியாவில் அநேகர் அவனைச் சேர்ந்துகொண்டது ஆச்சரியமல்லவே.

பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்குள் ஒருவன் திருச்சபை சரித்திரத்தில் பிரபலமடைந்தவன், அவன் பேர் சீமோன் அவன் தன் மந்திரதந்திரங்களினால் சனப்பிரீதி பெற்றிருந்தமையால் அவனுக்கு மந்திரவாதி என்று அர்த்தங்கொள்ளும் மாகுஸ் என்ற துணைப்பெயரும் வழங்கும். இக்காலத்தில் எழும்பின நாஸ்தியர் என்ற கொள்கைக்காரருக்கு இந்தச் சீமோனே முதல்வன் என்று பல நூலாசிரியரும் எழுதியிருக்கிறார்கள். மேற்படி நாஸ்தியர் தேவனைக்குறித்து தங்களுக்குப் பூரண அறிவுண்டென்று பிதற்றிவந்ததினால் அவர்களுக்கு இந்தப்பெயர் வழங்கியது, அவர்கள் கொள்கை அலெக்சந்திரியாவில்த்தான் மிகுதியும் பிரபலியமாயிருந்ததென்று தோன்றுகிறது. அதில் அஞ்ஞான சித்தாந்தங்களும் யூதமதக் கோட்பாடுகள் சிலதும், நன்மை தின்மைகளுக்கேதுவான இரண்டு மூலக்காரணங்கள் உண்டென்னும் கிழக்கத்திய கொள்கையும் கலந்திருந்தது. ஜடப்பொருள் நித்தியமாயுள்ளதென்றும், அதுவே தீமைக்குக் காரணமெனறும், தேவனால் தோன்றின பலரில் ஒருவரால் தேவனுக்குத் தெரியாதவிதமாய் இவ்வுலகம் உண்டாயிற்று என்றும் இவைபோல வேறு சிலவற்றையுஞ் சாதித்துவந்தார்கள். அதனாலேயே உலகத்தில் இவ்வளவு கேடும் நிர்ப்பந்தமுமிருக்கிறதாம். நாஸ்தியர் தங்களுக்கிருந்த மேலான திவ்விய அறிவினாலே கேட்டுக்கு தப்பிக்கொள்வார்களாம். சீமோன் இந்த நாஸ்தியரில் முதல்வனென்று சொல்லும்போது, அவலட்சணமான இந்தக் கொள்கையில் முதல்முதல் கிறிஸ்துவின் நாமத்தைச் சேர்த்தவன் என்பதே கருத்து. எப்படியெனறால் கிறிஸ்துமார்க்கம் அப்போஸ்தலரால் பிரசங்கிக்கப்பட்டு பிரபலியமாகவே, நாஸ்தியர் தங்கள் நோக்கத்துக்கிசைவானவ்வளவு அதிலிருந்து எடுத்துக்கொண்டு தேவனில் தோன்றினவர்களில் கிறிஸ்துவும் ஒருவரென்றும் கேட்டினின்று இவ்வுலகத்தை மீட்டுக்கொள்ளும் பொருட்டு அவர் அனுப்பப்பட்டாரென்றும் போதிக்கத் தொடர்ந்தான். இவ்வாறு ஏராளமான பித்தலாட்டங்களோடு இயேசுக்கிறிஸ்து தேவகுமாரன், அவர் நம்மை நமது பாவத்தினின்று ரட்சிக்க இவ்வுலகத்தில் தோன்றினாரென்ற மகா சுவிசேஷ உபதேசங்களிரண்டும் கலந்துகொள்ளலாயிற்று.

உதவிக்காரனான பிலிப்பு சமாரியாவில் பிரசங்கித்தபொழுது சீமோன் சுவிசேஷ உபதேசங்களைக் கேட்டதல்லாமலும், தான் செய்த அற்புதங்களெல்லாம் தந்திரமும் பித்தலாட்டமுமானதால் பிலிப்பு நடப்பித்த மெய்யான அற்புதங்களைப்பார்த்து மிகுந்த எழுப்புதலையுமடைந்திருப்பான். அதன்பேரில் மற்றவர்களோடு அவனும் ஞானஸ்நானம் பெற்றான். ஆயினும் அச்சமயத்தில் அவன் இயேசுக்கிறிஸ்துவை எதார்த்தமாய் விசுவாசித்தானோ இல்லையோ என்று திட்டமாய்ச்சொல்ல ஏதுவில்லை. அவனும் சமாரியனானதால் மெசியாவானவர் தோன்றப்போகிறார் என்று அவனும் எதிர்பார்த்திருந்திருப்பான். இயேசுவின் சரித்திரத்தைப் பிலிப்பு சொல்லக் கேட்டபொழுது, மெசியாவைக்குறித்த முன்னுரைக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்கள் இயேசுவானவரிடத்தில் நிறைவேறினவென்று உணர்ந்து நம்பியிருப்பான் என்று நினைக்கலாம். இவ்வாறு அவன் மெசியாவைப்பற்றிக் கேட்டும் வாசித்தும் அறிந்துகொண்ட விசேஷங்களோடு தான் படித்திருந்த அஞ்ஞான சாஸ்திர சித்தாந்தங்களையுங் கலந்துகொண்டான்.

இவன்காரியம் எப்படியிருந்தபோதிலும சமாரியாவில் ஏராளமானபேர்கள் குணப்பட்டார்கள். அதை எருசலேமிலேயே எக்காலமும் தரித்திருந்த அப்போஸ்தலர் கேள்வியானபொழுது பிலிப்பு இவ்வளவு செய்சித்தியோடு தொடங்கின கிரியையை உறுதிப்படுத்தும்படி பேதுருவையும் இயோவானையும் அவ்விடத்துக்கு அனுப்பினார்கள். பிலிப்புவுக்கு, அன்னியபாஷை பேசுதல் வியாதியைச் சொஸ்தமாக்கலாகிய ஆவியின் வரங்களைப் பிறருக்குக் கொடுக்கத்தக்க சத்துவமிருந்ததில்லை. ஆகையால் அப்போஸ்தலர் வந்து, பிலிப்புவினால் ஞானஸ்நானமடைந்தவர்கள் மீது கைகளை வைக்க அவர்களும் அற்புதஞ்செய்யும் வரங்களைப் பெற்றுக்கொள்ளவே அதினால் முன்னையிலும் அதிமான சந்தோஷமும் ஆச்சரியமுமுண்டாயிருக்குமே. சுவிசேஷ உபதேசத்தினால் சீமோனுடைய இருதயம் எவ்வளவு சீர்ப்பட்டிருந்தது என்று இப்போதுதான் விளங்கியது. அவன் இன்னமும் தன் பழய பித்தலாட்டத்தை எப்படி நடப்பிக்கலாமென்றே யோசித்துக்கொண்டிருந்தான். ஆவியின் வரங்களை மற்றவர்களுக்குத்தானும் கொடுக்கத்தக்க சக்தி தனக்குமுண்டாகவேண்டுமென்று அப்போஸ்தலர்களிடத்தில் பணங் கொண்டுவந்தானே. அவன் கொண்டுவந்த பணத்தை அசட்டைசெய்தார்களென்று சொல்லவேண்டுமோ? இக்காலமுதல் அந்தச் சீமோனுடைய சரித்திரம் கட்டுக்கதைகளோடு கலந்திருப்பதுதொட்டு அதில் சத்தியமிது அசத்தியமிது என்று சொல்வது எளிதல்ல. ஆகிலும் அவன் ரோமைக்கும் வேறு அநேக இடங்களுக்கும் போய்த் தன் கொள்கைகளை யறிவித்திருப்பானென்றும், அப்போஸ்தலரால் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாத பல தேசங்களிலும் அவனால் கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டதென்றும் நினைக்க இடமுண்டு. ஏராளமானவர்கள் அவனுக்குச் சீஷரானார்கள். அவர்க்குள்ளும் பல வகுப்பு அமைந்தது. அஞ்ஞானிகள் கிறிஸ்மார்க்கத்துக்கு இணங்காமற்போகச்செய்தும், கிறிஸ்தவர்களில அநேகரைத் தங்கள் கேட்டுக்கு இழுத்துக்கொண்டும் அவர்கள் கிறிஸ்துமார்க்கத்துக்கு நடப்பித்த கேடு கொஞ்சமல்ல.

———o———



## நாளது சங்கதிகள்.

**ஐரோப்பா வர்த்தமானம்.** ருஷ சக்கரவர்த்தி பரீஸ் நகரத்தில் பதிவிருந்து கொல்லும் துஷ்டன் ஒருவன கையால் பிராணச்சேதப்படுவதற்கு மயிர்க்கிடை தப்பினார். அவர் ராணுவ சிக்ஷையின் அதிசயம் பார்த்துத் திரும்பிவரும் மார்க்கத்தில் பொலாந்து தேசத்து வாலிபன் ஒருவன் அவரை இலக்காய் வைத்துப் பிரயோகித்த துப்பாக்கிக் குண்டு, ராஜ[illegible]னங்களில் ஒருவன் சவாரிசெய்த குதிரைமேல் பட்டது. சற்றுமுன் அத்துஷ்டன் பதுங்கி நின்று, இரட்டைக் குழாய்த் துப்பாக்கியைச் சக்கரவர்த்திக்கு நேரே பிடித்துச் சுட எத்தனித்ததைக் கண்ட மேற்படி குதிரை வீரன் சக்கரவர்த்திக்கும் துஷ்டனுக்கும் இடையில் எதிர்ப்பட்டுத் தடுக்கக் கருதிக் குதிரையை முடுக்கினான். அது ஒரு துள்ளில் அவன் கருதிய இடத்திற் சேர்ந்தது; சேரவே, அவன் பிரயோகித்த குண்டு அக்குதிரையின் நாசித் துவாரத்தின் வழியாய்ச் சென்று, ராஜ ரதத்தில் இருந்த பிரான்சிய சக்கரவர்த்திக்கும், கிராண்ட்டியூக் பிரபுவிற்கும் இடையிற் பறந்து, ரதத்தின் எதிர்ப்பக்கத்தில் உட்கார்ந்த ஒரு பெருமாட்டியைச் சிறிது காயப்படுத்தது. காயம்பட்ட குதிரை நின்ற இடத்திற்கும், சக்கரவர்த்தி ரதத்திற்கும் இடையில் உள்ள தூரம் மிகச் சொற்பமானதினால், குதிரையின் நாசியில் உண்டான காயவழியினின்று தெறித்த ரத்தத் துளிகள் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தி பத்தினி இருவர் வஸ்திரங்களிலும் பட்டன. பதிவிருந்து சுட்ட துரோகி மற்றக் குழாயிலும் குண்டு கெட்டித்துப் பிரயோகிக்க, குண்டு பாயுமுன் குழாய் வெடித்தது. உடனே சூழ நின்ற திரளான ஜனங்கள் பரிதபித்துக் கூவி, "சக்கரவர்த்தி வாழ்க," "சண்டாளன சாக" என்று ஓலமிட்டு, அந்த ராக்ஷஸனை வதைசெய்யத் தீவிரித்தார்கள். அடுத்து நின்றவர்கள் அவர்கள் கைக்கு அவனை ஒருபடி தப்புவித்து அகப்படுத்தினார்கள். சக்கரவர்த்திகள் இருவரும சற்றாயினும் தடுமாற்றமின்றிக் குதிரைகளை மந்தகதியாய்ச் செலுத்திப் போகக் கற்பித்தார்கள். குழாய் வெடித்தபொழுது துரோகியுடைய கையின் பெருவிரல் சின்னாபின்னமாய்ச் சிதறியதனால், அவன் விழுந்து அறிவு மயங்கி, சற்று நேரமட்டும் மூர்ச்சித்துக் கிடந்தான். மூர்ச்சை தெளிந்து எழுந்தபின், அவன் ருஷ சக்கரவர்த்தியைக் கொல்லும்பொருட்டு பெல்ஜியத்தினின்று இரண்டு தினங்களுக்குமுன் தான் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்ததாக அறிக்கைசெய்தான். முதல் வெடிச்சத்தம் கேட்டவுடன் நப்போலிய சக்கரவர்த்தி ருஷ சக்கரவர்த்தியைப் பார்த்து, 'அரசனே, நாம் இருவரும் சடிதி மரணத்திற்கு ஏதுவான ஸ்திதியிலிருந்து தப்பினோம்' என்ன, ருஷ சக்கரவர்த்தி 'ஆம் ஆம், ஜீவனும் மரணமும் தேவன் கரத்தில் இருக்கின்றன' என்று உத்தரம் சொன்னாராம். ரதத்தில் சக்கரவர்த்திகள் உட்கார்ந்தது பின்சொல்லப்படும் கிரமப்படி.—ஆசனத்தின் மத்தியில் நப்போலிய சக்கரவர்த்தி, வலப்பக்கத்தில் ருஷ சக்கரவர்த்தி, இடப்பக்கத்தில் புருஷிய அரசர். பரீஸ் நகரத்தில் உள்ள பொலாந்தர்கள் அனைவரும் தங்கள் தேசத்து வாலிபன செய்த துரோகத்தைப்பற்றி அவனைத் திட்டினார்கள். குண்டு பட்ட குதிரை இறந்துபோயிற்று. அதன்மேல் சவாரிசெய்த வீரனுக்கு வெற்றிப் பதக்கம் கொடுக்கப்பட்டது. சக்கரவர்த்திக்கு நேரிட்ட ஆபத்தைப்பற்றி பரீஸ் நகரத்து பிரஜைகள் பரிதபித்தார்கள்.

———o———

ஆகஸ்டுமீ நாள் 31—ஆடிமீ 17உ. முதல், ஆவணிமீ 16உ வரை.

| வாரம். | சா. தேதி. | தமிழ் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௧௭ | நீவிரும்படி பொல்லாப்பைத்தேடிக்கொள்வானேன்? 2இரா. 14:10. |
| வெ | 2 | ௧௮ | கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். 15:3. |
| ச | 3 | ௧௯ | பாவங்களை, அவன் விட்டு விலகினதில்லை. 28. |
| ஞா | 4 | ௨௰ | வேறே தேவர்களுக்குப் பயந்து நடந்தார்கள். 17:7. |
| தி | 5 | ௨௧ | நரகலான தேவர்களைச் சேவித்துக்கொண்டிருந்தார்கள். 12. |
| செ | 6 | ௨௨ | உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள். 13. |
| பு | 7 | ௨௩ | தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். 13. |
| வி | 8 | ௨௪ | திடச்சாட்சியாய், எச்சரித்துக்கொண்டிருந்தோம். 13. |
| வெ | 9 | ௨௫ | கர்த்தர்மேல் விசுவாசியாதேபோனார்கள். 14. |
| ச | 10 | ௨௬ | சபையைப் பரிசுத்தம்பண்ணுங்கள். யோவே. 2:16. |
| ஞா | 11 | ௨௭ | நிந்தைக்கு உமது சுதந்திரத்தை ஒப்புக்கொடாதிரும். 17. |
| தி | 12 | ௨௮ | தம்முடைய சனத்தைத் தப்பவிடுவார். 18. |
| செ | 13 | ௨௯ | கர்த்தர் பெரியகாரியங்களைச் செய்வார். 21. |
| பு | 14 | ௩௰ | சீயோனின் குமாரரே கர்த்தருக்குட் களிகூருங்கள். 23. |
| வி | 15 | ௩௧ | நம[illegible] சனம், என்றைக்கும் வெட்கப்பட்டுப்போவதில்லை. 26. |
| வெ | 16 | ௧ | நாமே உங்கள் பராபரனாகிய கர்த்தர். 27. |
| ச | 17 | ௨ | சகல மாமிசத்தின் மேலும், நமதாவியை யூற்றுவோம். 3:1. |
| ஞா | 18 | ௩ | உன்னை முன்குறித்திருந்தார். அப்போ. 22:15. |
| தி | 19 | ௪ | தம்முடைய சித்தத்தை நீயறியப்பண்ணினார். 15. |
| செ | 20 | ௫ | உன்னை, நீதிபரனைக் காணப்பண்ணினார். 15. |
| பு | 21 | ௬ | அவருடைய திருவாயின் சத்தத்தைக் கேட்கவும்பண்ணினார். 15. |
| வி | 22 | ௭ | இப்பொழுது நீ, தாமதிக்கிறதென்ன? 16. |
| வெ | 23 | ௮ | உன் பாவங்களை நீக்குவாயாக. 16. |
| ச | 24 | ௯ | என்மனது நற்சாட்சிகொடுக்கத்தக்கதாக நடந்துவந்தேன். 23:1. |
| ஞா | 25 | ௰ | உன்சனத்தின் தலைவனைக்குறித்து, தீது சொல்லாதிருப்பாயாக. 5. |
| தி | 26 | ௧௧ | தம்மாலே, நம்முடையபாவங்களை நிவர்த்திசெய்தார். எபி. 1:3. |
| செ | 27 | ௧௨ | மகத்துவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். 3. |
| பு | 28 | ௧௩ | பராபரனே உமது சிங்காசனம் என்றைக்குமுள்ளது. 8. |
| வி | 29 | ௧௪ | உமது, செங்கோல் செம்மையான செங்கோலாயிருக்கிறது. 8. |
| வெ | 30 | ௧௫ | நீதியில் அன்புகூர்ந்து, அக்கிரமத்தைப் பகைத்திருக்கிறீர். 9. |
| ச | 31 | ௧௬ | கர்த்தாவே, நீர், ஆதியில் பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். 10. |

## விசேஷித்த நாட்கள்.

4. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், ஏழாம்ஞாயிறு.
11. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், எட்டாம்ஞாயிறு.
15. பௌரணமி.
18. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், ஒன்பதாம்ஞாயிறு.
25. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், பத்தாம் ஞாயிறு.
29. அமாவாசை.

எலி பூனையை வெல்லுமோ?

எவ்வளவானாலும் அவ்வளவே வேண்டும்.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

SEPTEMBER. 1867. செப்தெம்பர்மீ.

CONTENTS.

Recreations in Astronomy. ... ... ... 162
Christian Church History.... ... ... ... 164
On the Historical books of the Old Testament. ... ... ... ... ... ... 166
The Miracles of Christ. ... ... ... ... 173
News. ... ... ... ... ... ... ... ... 178

அட்டவணை.

வான சாஸ்திரத்தைக் குறித்து. ... ௱௬௨
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ௱௬௪
பழயவேற்பாட்டுச் சரித்திர ஆகமங்களின் பேரில் ... ... ... ... ... ௱௬௬
கிறிஸ்துவானவர்செய்த அற்புதங்கள். ௱௭௩
நாளது சங்கதிகள். ... ... ... ... ௱௭௮

PALAMCOTTAH:
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY
L. DEVANAYAGAM PILLAY.
1867.

எள்ளுக்குள் எண்ணெய்போல.

எறும்பூரக் கற்குழியும்.

௧. செப்றெம்பர்மீ. ௲௮௱௫௰௭௵.

# RECREATIONS IN ASTRONOMY.

## வானசாஸ்திரம்.

### VIII. அதிகாரம்.

### சூரியனைச்சுற்றிய கிரகங்களின் விவரம்.

### இயூரானஸ்.

(தொடர்ச்சி.)

சூரிய மண்டலத்தைச் சேர்ந்த கிரகங்களில் ஒன்றுதவிர இதுவே கடைசியானது. சூரியனுக்கும் இயூரானஸ் கிரகத்துக்குமுள்ள தூரம் 180 கோடி மைலிருக்குமாம். பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரத்தின் பத்தொன்பது மடங்குகொண்டது ஒருவாறு மேற்காட்டிய தூரத்துக்குச் சரியாகும். இந்தக் கிரகத்தின் விட்டம் உத்தேசம் 35112 மைலிருக்கும். எண்பத்துமூன்று வருஷம் நூற்றைம்பது நாளில் ஒருவிசை சூரியனைச் சுற்றிக்கொள்ளும் அதாவது நமது எண்பத்துமூன்றே சொச்சம் ௵ இயூரானஸுக்கு ஒரு வருஷமாம். ஆகையால் கொஞ்சங்குறைய நாற்பத்திரண்டு ௵ அதற்கு வேனிற்காலமும், அத்தனை ௵ அதற்கு மாரிகாலமுமாகுமே. பூமியிலுள்ள நமக்குக் காணப்படுகிற சூரிய முகத்தில் நானூற்றிலொரு பங்கு தானும் இந்தக் கிரகத்துக்குத் தோன்றமாட்டாது. அப்படியானால் அதற்குக் கிடைக்கத்தக்க வெளிச்சமும் வெப்பமும் அந்த அளவாகக் குறையுமே. ஆகவே இக்கிரகத்தில் ஜலமிருக்குமென்று நினைக்க ஏதுவில்லை. மேலும் பூகோள வாசிகளைப்போன்ற பிராணிகள் ஜீவிக்கவும் அது வசதியாகாது. அவர்களுக்குக் கிடைக்கத்தக்க சூரிய ஒளி இருநூற்றுநாற்பது பூரண சந்திரரின் ஒளிக்குச் சமமாயிருக்குமாம்.

இந்தக் கிரகத்தைக்கண்டு பிடித்தவர் ஸ்ரீ வில்லியம் ஹர்ஷல் என்பவர். அவர் தாமே சமைத்துக்கொண்ட மிகுந்த சக்தியுள்ள ஓர் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு 1781 ௵ மார்ச்சுமீ 13௳ பாத் நகரத்தில் கண்டுபிடித்தார். இதைக் கிரகமென்று நினைக்க அவரையேவிட்ட காரியம் யாதென்றால், அது கண்ணுக்கு ஏழாந்தரமான நட்சத்திரங்களிலொன்றுபோல தோன்றினபோதிலும், தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்த்தபொழுது முதலாந்தர நட்சத்திரம்போல தோற்றப்பட்டதுதான். நட்சத்திரங்கள் எண்ணிறந்த தூரத்திலிருப்பதினால் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் அதிகப் பிரபையுள்ளவைகளாய் விளங்குமேயல்லாது பெரியவைகளாய் ஒருபொழுதும் தோன்றவேமாட்டாது. ஆகவே ஹர்ஷல் என்பவர், தூரதிருஷ்டிக் கண்ணா



டியில் அதன் பரிமாணம் அதிகப்படுகிறது கண்டு, அது நட்சத்திரமல்லவென்று உணர்ந்து முதல் வால் நட்சத்திரமென்று நினைத்தார். பின்பு செய்த பரிட்சைகளாலே சூரியனைச் சுற்றிவரும் கிரகம் என்று திட்டமாயறிந்துகொண்டார். வான மண்டலத்தில் அது மேற்கிலிருந்து கிழக்காக இயங்கினதும், பூகோள அயனத்துக்குத் தூரப்படாமலேயிருந்ததும், சூரிய மண்டலத்தைச் சேர்ந்த கிரகந்தானென்று உறுதிப்படுத்தியது.

இயூரானஸ் என்ற கிரகத்தின் விலாசம் ஒன்றுபோல பிரகாசமாய்த் தோற்றப்படும். அதில் வளையங்களாவது கச்சைகளாவது மறுக்களாவது காணப்படவேயில்லை. அதின் பருப்பம் எண்பது பூமிக்குச் சரியாயிருக்குமாம். அதன் ஜடம் தண்ணீர் அவ்வளவு திரட்சியாயுமிராதாம். அதன் அயனம் கிராந்தி மண்டலத்தோடு நாற்பத்தாறு பாகை கோணமுண்டாக ஒருச் சாய்ந்திருக்கும்.

நிலவு வெளிச்சமில்லாத வெளிப்பான இரவில் இந்தக் கிரகம் கண்ணுக்குத் தென்பட்டாலும் தென்படலாம். என்றாலும் தூரதிருஷ்டிக் கண்ணாடியில்லாமல் இதுவரையும் காணப்பட்டதேயில்லை. வெகு காலத்துக்குமுன்னமேயே இக்கிரகத்தைக் கண்டிருந்தபோதிலும், அப்போது அதை நட்சத்திரமென்று எண்ணியிருந்தார்கள். அவ்வாறே திக்கோ பிரகீ என்பவர் எழுதிய நட்சத்திர அட்டவணையில் இதையும் ஒரு நட்சத்திரமாகக் குறித்திருந்ததாம். மேலும் 1756 ம் ௵த்தில் மேயர் என்ற ஒருவரும் அவ்வாறே எழுதியிருந்தாராம். ஹர்ஷல் என்பவர் அதைக் கிரகமாகக் கண்டுபிடித்தபொழுது தமது அரசனாகிய மூன்றாம் ஜார்ஜ் என்பவருக்குப் பெருமையாக ஜார்ஜ் நட்சத்திரம் என்று அர்த்தங்கொள்ளும் ஜார்ஜியம் சைடஸ் என்று அதற்குப் பெயரிட்டார். பிறதேச சோதிசாஸ்திரிகள் அதைக்கண்டு பிடித்தவருடைய பெயரையே அதற்குஞ் சொல்வார்கள். என்றாலும் இயூரானஸ் என்ற பெயரே இப்பொழுது மிகுதியும் வழங்கிவருகிறது.

இந்தக் கிரகத்தைச் சூழ ஹர்ஷல் என்பவர் முன்னும் பின்னுமாய் ஆறு உபக்கிரகங்கள் கண்டுபிடித்தார். சனி வியாழன் முதலிய கிரகங்களைச் சேர்ந்த சந்திரர் அந்தந்தக் கிரகங்களுக்கு எவ்விதமாய் உபயோகப்படுகிறதோ அவ்விதமே இந்தக் கிரகத்துக்கு இதைச் சேர்ந்த சந்திரரும் உதவுகின்றன என்று நிதானித்துக்கொள்ளலாம். இந்தச் சந்திரரை சிரேஷ்டமான தூரதிருஷ்டிக் கண்ணாடியாலேயன்றி காண்பதரிது. ஸ்ரீ வில்லியம் ஹர்ஷல் இரண்டு சந்திரரைச் சுழுவில் அறிந்துகொண்டார். மற்ற நாலு சந்திரரையும் சனியைச் சேர்ந்த சந்திரரில் உள்ளான இரண்டையும் காண்பது எவர்க்கும் எளிதல்ல. இயூரானஸ் கிரகத்தைச் சேர்ந்த சந்திரர் நடக்கிற அயனங்கள் பூகோள அயனத்துக்குச் செங்குத்தாயிருப்பதும், இச்சந்திரர் மற்ற கிரகங்களைப்போல மேற்கிலிருந்து கிழக்காக நடவாமல் அதற்கு திருப்ப முறையாய் மேற்படி அயனங்களில் கிழக்கிலிருந்து மேற்காக சுற்றி நடப்பதும் கவனிக்கவேண்டிய முக்கிய விசேஷங்களே. ஆகிலும் இந்த உபக்கிரகங்களைக் காண்பதும் பிரயாசமானதால் அவற்றின் ஜடத் தன்மையையும் நடையையும் பற்றி திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை.

# CHRISTIAN CHURCH HISTORY.

# கிறிஸ்துசபைச் சரித்திரம்.

## 2. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

எப்படியும் சமாரியாவில் சுவிசேஷம் நிலைத்துக்கொண்டது. சமாரியரைப்பற்றி யூதர் கொண்டிருந்த விபரீத எண்ணமும் குலைந்தது. மேலும் பிலிப்பு உடனே தேவ உத்தரவு பெற்றுப்போய் எத்தியோப்பியா தேசத்து மந்திரியாகிய ஓர் அண்ணகனை ஞானஸ்நானம்பண்ணுவித்ததினால், அண்ணகர் கர்த்தருடைய சபையிற் பிரவேசிக்கக் கூடாதென்று அறிந்திருந்த யூதர் அவர்களை கிறிஸ்து மார்க்க உடம்படிக்கைக்கும் புறம்பானவர்கள்தானென்று நினைக்க ஏதுவான வேறொரு விபரீத எண்ணத்தை நீக்கும்பொருட்டே அப்படி நடந்ததென்று நினைப்பதும் தவறன்று. இவ்விதமே சுவிசேஷம் உலகமெங்கும் பிரபலியமாவதற்கு யூதர்கள் படிப்படியாய் ஆயத்தமானார்கள். சிறிதுகாலம் சுவிசேஷம் யூதர்களுக்கே பிரசங்கிக்கப்பட்டதென்பது நிசம். சீக்கிரம் பலஸ்தீனா முழுமையும் பரவியதென்றும் சவுல் குணப்பட்டபின் சிலவருஷமாய் தடையின்றி நடந்தேறியதென்றும் தோன்றுகிறது. சவுல் வெகுகாலம் அராபிதேசத்திலிருந்து தன் ஊழியத்துக்கு ஆயத்தமாகும்போது மற்ற அப்போஸ்தலர்கள் எருசலேமிலிருந்துபோய் அங்கங்கே தாங்கள் உண்டுபண்ணியிருந்த சபைகளை விசாரித்துக்கொண்டுவந்தார்கள்.

இவ்வாறு அடிக்கடி அவர்கள் எருசலேமைவிட்டு தூரமானவிடங்களுக்கும் போகவேண்டிய அவசியம் நேரிட்டபடியால், எருசலேமிலேயேயிருந்த சபையை சகலவிதத்திலும் தகுதியான ஒருவன் நிலையாயிருந்து விசாரித்துக்கொள்ளும்படி திட்டஞ்செய்தார்கள். இந்த வேலைக்கு ஏற்படுத்தப்பட்டவன் நமது ஆண்டவருக்கு இனத்தானான யாக்கோபே. வேதத்தில் இவனும் சீமோன் யோசே யூதா முதலியவர்களும் இயேசுகிறிஸ்துவின் சகோதரர் என்று வாசிக்கிறோமே. ஆகிலும் இவர்கள் அவருடன் பிறந்த சகோதரர் என்றாவது இயோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்த பிள்ளைகளென்றாவது நினைக்க ஒண்ணாது. இயோசேப்பின் முதல்தாரத்துக்குப் பிறந்தவர்களென்று எண்ணுவாரும் பலருண்டு. என்றாலும் அவர்கள் கன்னியின் சகோதரியாகிய வேறொரு மரியாளுக்கும் கிலேயோப்பாவுக்கும் பிறந்தவர்கள் என்பதே யதார்த்தம் என்று தோன்றுகிறது. தாயுடன்பிறந்த சகோதரி பிள்ளைகளையும் சகோதரரென்று சொல்வது நமக்குள்ளும் வழக்கந்தானே. இவ்வழக்கத்துக் கிசைவாய் இயாக்கோபும் கர்த்தருடைய சகோதரனெனப்படுகிறான்.

இவன் பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவனல்ல. ஆகையால் அல்பேயுவின் குமாரன் இயாக்கோபு என்னப்படுகிறவன் இவன்தானென்று நினைக்க ஒண்ணாது. பூர்வ சரித்திர நூலாசிரியரில் மிகுதியானவர்கள் இந்த அபிப்பிராயமே கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாரும் ஏக ஐக்கியமாய் இவனை எருசலேமுக்கு முதலாவது கண்காணி என்று எழுதியிருக்கிறார்கள். இதைக்கொண்டு அவன் சீவகாலத்திலே



யே கண்காணி என்ற பட்டப்பெயர் அவனுக்கு வழங்கி வந்தது என்று நினைப்பது பிசகாயிருந்தாலுமிருக்கலாம். அவனுடைய கண்காணியாட்சி ஒரே ஒரு பட்டணத்துக்கு அதிகமல்லவே. ஆதலால் அவனுக்கு அந்தப் பட்டப்பேர் சொல்லுகிறவர்கள் பிற்காலங்களில் சபையிலுண்டான கருத்தாகச் சொல்லாமல் அவ்வார்த்தையின் முதல் அர்த்தப்படிக்கு சொல்லியிருப்பார்கள். ஆகவே அவர்கள் இயாக்கோபை எருசலேமுக்கு முதற் கண்காணி என்று சொல்லும்பொழுது அப்போஸ்தலர்கள் அங்கங்கே போய் வர நேரிட்டகாலத்தில் அநேகாயிரமான அப்பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் அவனுடைய விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்டார்களென்பதுதான் கருத்து. மேலும் எருசலேம் சபையில் டீக்கன் என்னப்பட்ட கீழ் அலுவற்காரர்களுமிருந்தார்களே. இவர்கள் முதலில் அப்போஸ்தலர்களுக்கு உதவியாக நியமிக்கப்பட்டபோதிலும், பின்பு இயாக்கோபுக்கும் அவ்விதமே உதவிசெய்துவந்திருப்பார்கள். சில வருஷங்களுக்குப்பின் பிரஸ்பித்தர் என்னப்பட்ட மூப்பர்களைக்குறித்து வாசிக்கிறோம். அவர்கள் முதல்முதல் நியமகம் பெற்றது எப்பொழுதென்று சொல்லப்படாவிட்டாலும், உதவிக்காரரும் இயாக்கோபும் தெரிந்துகொள்ளப்பட நேரிட்ட காரணங்களாலேயே அவர்களும் தெரிந்து ஏற்படுத்தப்பட்டார்களென்று நிதானிக்கத்தக்கது. அக்காரணங்கள் எவையென்றால் கிறிஸ்தவர்கள் அதி தீவிரமாய்ப் பெருகினதும் அப்போஸ்தலர் அடிக்கடி எருசலேமைவிட்டு பலவிடங்களுக்குப் போக நேரிட்டதுமே. பிரஸ்பித்தர் அல்லது மூப்பன் என்ற பட்டம் யூத சபையிலிருந்து வந்ததாயிருக்கலாம். அல்லது அந்தப்பெயர் சொல்லப்பட்டவர்கள் வழக்கப்படி மூப்பராகவேயிருந்துமிருக்கலாம். இவர்கள் அந்நிமித்தமே ஒருவேளை சபையின் இகபர நன்மைகள் பெருகுவதற்கேதுவாய் இயாக்கோபுக்கு ஓர்வித ஆலோசனைக்காரராக உதவிக்காரரிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டிருப்பார்கள்.

அப்போஸ்தலர்கள் எங்கேயாவது ஓர் சபையை ஸ்தாபித்தால் அதை இந்தபடிக்கே நடத்திவந்தார்கள். முதலில் ஒரு மூப்பனாவது ஒரே டீக்கனாவது போதுமானதாயிருக்கும். பின்பு கிறிஸ்தவர்கள் தொகை பெருகப்பெருக அவர்கள் தொகையும் பெருகியிருக்கும். ஆனால் அப்போஸ்தலர்கள் பலஸ்தீனாவுக்குள்ளேயே பிரசங்கித்துக் கொண்டிருந்த காலமெல்லாம் அவர்கள் நாட்டின சபைகளைத் தாங்களே விசாரித்துக்கொண்டும் வந்தார்கள்.

அப்போஸ்தலர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பட்டணத்தோடு சேர்த்திக்கையாகிக்கொண்டார்களென்று நினைப்பதைப்பார்க்க மேற்சொல்லியவாறு நடந்தார்களென்று எண்ணுவதே யதார்த்தமாய் விளங்குகிறது. அப்போஸ்தலரெல்லாரும் பற்பல சபைகளை நாட்டினார்களென்பதும் ஒவ்வொரு சபையும் ஒவ்வொரு அப்போஸ்தலனை ஸ்தாபித்தவனாக நோக்கிக்கொண்டிருந்ததென்பதும் நிசமே. அப்போஸ்தலர் இன்னின்ன சபைகளுக்கு முதற் கண்காணிகள் என்று சொல்லப்படுகிறதுமுண்டு. ஆகிலும் இந்தப் பட்டப்பெயர் அவர்கள் சீவகாலத்திலேயே வழங்கிவந்ததென்பதற்கு அத்தாட்சியில்லை. அதன்றியும் பல சபைகளை ஸ்தாபித்த ஒருவனை அவைகளெல்லாவற்றிற்கும் கண்காணியென்றாவது அவைகளில் விசேஷித்த ஒன்றிற்கு கண்காணியென்றாவது சொல்வதும் சரியன்று.

———— 0 ————

# பழையவேற்பாட்டுச் சரித்திர ஆகமங்களின் உண்மையை ரூபிக்கும் நோக்கமில்லாத இசைவுக் குறிப்புகள்.

(தொடர்ச்சி.)

**XVIII.** சரித்திரத்தின் இப்பங்கில் இன்னொரு இசைவுக்குறிப்புண்டு. இராசாக்களின் முதலாம் புஸ்தகம் 15 அதிகாரம் 27 ம வசனத்தில் ஈசஷார் வீட்டானாகிய அகியாவின் குமாரனாகிய பாசா, அவனுக்கு அதாவது, எரோபேயாமின் குமாரனாகிய நாதாப்புக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணி நாதாபும் இஸ்ரவேலனைத்தும் பெலிஸ்தியருக்கிருந்த கிபேத்தோனை முற்றிக்கைபோட்டிருந்ததாக வாசிக்கிறோம். தாண் கோத்திரத்தைச் சேர்ந்த கிபேத்தோனென்னும் பட்டணம் எந்த வகையாகவோ, பெலிஸ்தியர் கைக்குள் அகப்பட்டுப் போயிற்றென்றும், இஸ்ரவேலர் அதைத் தங்கள் வசமாக்கிக்கொள்ளப் பிரயெத்தனம்பண்ணினார்களென்றும் பார்க்கிறோம். கானான் தேசத்திலுள்ள ஒரு பட்டணத்தை மூவாயிரம் வருஷங்களுக்குமுன்னே சத்துரு எவ்வகையாய்த் தன் வசமாக்கினானென்று விபரமாய்க் காண்பிப்பது இந்தக் காரியத்தில் முடியாததென்று காணப்படும். ஆகிலும் அவ்வளவு காலத்திற்குமுன் நடந்தாலும், அது நடந்த வகையை அறிந்துகொள்ளலாமென்று தோன்றுகிறது. யோசு. 21. 23 ல் கிபேத்தோனும் அதின் பேட்டைகளும், லேவியருக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எரோபேயாம் லேவியர் யாவரையும் இஸ்ரவேலைவிட்டு துரத்தினதாய்ப் பார்த்தோமே. கிபேத்தோன் இவ்விதமாய்க் காலியானபிறகு தேசத்தில் இங்கும் அங்கும் சிதறுண்டிருந்த பழைய சத்துருக்களான பெலிஸ்தியர் எப்பொழுது இடங்கிடைக்குமென்று காத்திருந்தபடியால், கிபேத்தோன் ஆதரவற்றதாகவிடப்பட்டதைக் கண்டு, அதில் பிரவேசித்து அதைத் தங்களுடையதாக்கிக்கொள்ளலாமே. பெலிஸ்தியர் தேசத்தின் பல இடங்களிலே சிதறியிருந்தார்களென்பதற்குப் பல குறிப்புகளுண்டு. யூதாவிலும் அவர்கள் இருந்தார்களே, இஸ்ரவேலில் எத்தனை அதிகம். பெலிஸ்தியரிலுஞ் சிலர் யோசப்பாத்துக்குப் பகுதியின் திரவியத்தோடேகூட காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். 1 இராசா 15. 12 ல் ஆசாத் துரத்தினதாகச் சொல்லியிருக்கிற புணர்ச்சிக்காரரும், 22. 47 ல் அவன் மகன் யோசபாத்து துரத்தினவர்களும் 2 இராசா 23. 7 ல் எருசலேமிலிருந்து யொசியா இராசாவினால் துரத்தப்பட்டதாய்ச் சொல்லியிருக்கிறவர்களும் பெலிஸ்தியராயிருந்திருக்கலாம். தங்கள் சுய இராசாக்களால் ஆளப்பட்ட எத்தியரும் சமீபத்திலிருந்ததாக 1 இராசா 10. 29. 2 இராசா 7. 6னால் தெரியவருகிறது. சூநேமியாள் பஞ்சகாலத்தில் பெலிஸ்தியரின் தேசத்தில் போயிருந்ததாக வாசிக்கிறோம். 2 இராசா 8. 2. இதுகளெல்லாம் பலஸ்தீனாவின் பூர்வக் குடிகள் இன்னும் அங்கு வாசஞ்செய்ததாக ரூபிக்கிறது. கிபேத்தோனுக்கு நடந்ததுபோல இஸ்ரவேலின் மற்ற லேவியருடைய பட்டணங்களுக்கும் நடந்திருக்கலாம். இஸ்ரவேலுக்குள் நடந்த சூழப்பத்திற்கும், கலகத்திற்கும் தாறுமாறுக்கும் இதொரு குறிப்பாயும், இப்படிக்கொத்த மற்றச் செய்கைகளுக்கு ஓரடையாளமாகவுமிருந்தது. எரோபேயாமின் பாவம் இந்த வகையாயும் அவன் இராஜியத்



திற்குக் கெடுதியுண்டாக்கி அதை அழித்துப்போட்டதாகப் பார்க்கிறோம். நாம் அநுமானித்தபடி காரியம் நடந்ததோவென்று திட்டமாய்ச் சொல்லக்கூடாவிட்டாலும் அப்படியல்லவென்று நிச்சயமாய்ச் சொல்லவுங் கூடாதே. நம்முடைய அநுமானத்திற்கு ஆதாரமான காரியங்கள் வெகு இசைவாயிருக்கிறது. நான் நினைக்கிறபடி அவைகள் உண்மையாயிருக்குமானால், லேவியருடைய பட்டணமாகிய கிபேத்தோன பெலிஸ்தியர் கையில் அகப்பட்டதும், எரோபேயாமின் பாவத்தினால் லேவியர் இஸ்ரவேலைவிட்டுப்போனதும், நோக்கமில்லாமல் ஒன்றோடொன்று செவ்வையாய் இசைகிறதாயிருக்கும்.

---

**XIX.** இதைவிட அரிதான இன்னொரு இசைவுக்குறிப்பு இந்தச் சரித்திரத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. அநேக விசேஷங்கள் இதோடு சேர்ந்திருக்கிறபடியால், இது பொய்யாயிருக்குமாகில் அது லேசாய்த் தெரியும். அதினாலேயே அதிக அரிதானதென்று சொன்னேன். எலியா கர்மேல் பர்வதத்தின்மேல் அந்தப் பெரிய அற்புதத்தைச்செய்து வானத்திலிருந்து வந்த அக்கினியால் தன் பலியைத் தகித்தபிறகு தன் ஜீவன் தப்ப ஏசபேலுக்கு பயந்து ஓடினான். ஏனெனில், அவள் மறுநாளுக்குள்ளாக தன் தேவனாகிய பாகால் தீர்க்கதரிசிகளுக்கு அவன் செய்ததுபோல அவனுக்குச் செய்வேனென்று ஆணையிட்டு அவனைக் கொல்லப் பார்த்தாள். 1 இரா. 18. 40 : 19. 2. இஸ்ரவேலில் பத்தியுள்ளவர்கள் தங்களுக்கு வந்த இடுக்கணில் தங்கள் பிதாக்களின் தேவனைத் துன்பம் நிந்தையில்லாமல் வணங்குகிறதற்கு யூதாவுக்கு வழக்கமாய்ப் போனபடியால், எலியாவும் அங்கே போவானென்று நாம் எண்ணவேண்டி வரும். அதுவே தகுந்த இடம். ஏனெனில், அவன் கர்த்தருக்காகப் பத்திவைராக்கியமாயிருந்தபடியால துரத்தப்பட்டான். இதுவே வசதியான இடம். ஏனெனில், அது சமீபமாயிருந்தது. அவன் இஸ்ரவேல் எல்லையைக் கடந்தவுடனே அச்சமற்றிருக்கலாம். ஆகிலும் இச்சமயத்திலும் மூன்று வருடம் பஞ்சமுண்டானபோது, ஆகாப் அவனைக் கொல்ல வகைபார்த்த சமயத்திலும் அடைக்கலத்திற்காக அவன் யூதாவுக்குப் போகவில்லை. முந்தி அவன் யோர்தானுக்குச் சமீபமாயிருந்த கேரீத ஆற்றண்டையிலே போய் ஒளித்துக்கொண்டான். கேரீத எந்த இடத்திலிருந்ததென்று நிச்சயமாய் தெரியாவிட்டாலும், சமாரியாவில் அவனிருந்தபொழுது கேரீத் ஆற்றண்டை போகக் கிழக்கே திரும்பென்று அவனுக்குச் சொல்லப்பட்டபடியால் அது யூதாவிலில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பிறகு சீதோனைச் சேர்ந்த சற்பாத்தூருக்குப்போனான். கடைசியில ஏசபேல் அவனைக் கொலைசெய்ய தீர்மானித்தபோது அவனுக்கு அதிக வருத்தம் நேரிட்டபடியால் யூதாவைச் சேர்ந்த பேர்சேபாவுக்குப் புறப்பட்டுப்போனான். அவன் போன வகையைப் பார்க்கும்போது அங்கே போக அவனுக்கு முற்றும் மனமில்லாதிருந்தது போல காண்கிறது. அங்கே அவன் தாமதிக்கவேயில்லை. தனக்குத் தன் வேலைக்காரனுக்கும் மோசம்வராதபடி அவனைவிட்டுப் பிரிகிறான். வனாந்தரத்தில் ஒருநாள் பயணம்போய் அதிகத் துக்கத்தோடும், மனவருத்தத்தோடுஞ் சாகவேண்டுமென்று கேட்கிறான். பிறகு பராபரன் அவனுக்குக் கற்பித்தபடியே இராவும்பகலும் நாற்பதுநாள் அலைந்துதிரிந்து பராபரனுடைய பருவதமாகிய ஓரேப்மட்டும் வந்து அங்கே ஒரு குகையில் ஒளித்துக்கொள்ளுகிறான். இதற்குக் காரணமின்ன

றென்று தெரியவேயில்லை வெகு திகைப்பாயிருக்கிறது. கர்த்தருடைய தீர்க்கதரிசி பத்தியுள்ள யோசப்பாத்தென்னும் இராசாவால் ஆளப்பட்டு வந்த யூத சனத்தை வேணுமென்று அவ்வளவு வெறுப்பாய்த் தள்ளின காரணமென்ன? யூதராக்ஷியம் அவனுக்குச் சமீபமாயும் ஏற்றதாயுமிருந்ததே. இதற்கென்ன நியாயஞ் சொல்லலாம்?

எலியாவைக் கொல்லவேணுமென்றிருந்த ஆகாப் ஏசபேலென்பவர்களுடைய குமாரத்தியாகிய அத்தாலியாளை யோசபாத்தின் மகனாகிய யோராம் இந்தச் சமயத்தில் கலியாணம்பண்ணியிருக்கவேண்டும். அல்லது கலியாணஞ் செய்யப்போகிற சமயமாயிருந்திருக்கவேண்டும். 2 இரா: 18. 2 நாளா. 18. 1. ஆகையால் யூத இராச்சியத்திற்கு எலியா இச்சமயத்தில் போகிறது அவனுக்குப் பிரயோசனமாயிருக்கமாட்டாது. இந்தக் கெட்ட சம்பந்தத்தினால் யோசபாத் ஆகாப் என்பவர்களுடைய குடும்பங்கள் ஒன்றோடொன்று அதிகமாய் ஐக்கியப்பட்டுபோயிற்று. இராமோத் கீலேயாத்துக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய யோசபாத்து தன்னோடேவர ஆகாப் அவனை அழைத்தபோது அவன் சொன்னதென்ன? "உம்மைப்போல நானுமிருப்பேன் உம்முடைய சனத்தைப்போல என்னுடைய சனமும், உம்முடைய குதிரைகளைப்போல என்னுடைய குதிரைகளுமிருக்கும் என்றான். 1 இராசா 22. 4. இந்த இரண்டு இராசாக்களும் அவ்வளவாய் ஒருமனப்பட்டிருந்தபடியால், ஒரு இடத்தில் யோசபாத்து இஸ்ரவேலின இராசாவென்றழைக்கப்பட்டிருக்கிறான். 2 நாளா. 21. 2. இந்த விவாக சம்பந்தம் ஆகாப் இராசாவான பத்தாம் பதினோராம் வருஷத்தில் நடந்திருக்கவேணுமென்று சொல்லத்தகுந்த நியாயமுண்டு. எலியாவையடுத்த இச்சரித்திரம் ஆகாப் இராசாவான துவக்கத்தில் நடந்திருக்கமாட்டாது. அவன் இராசாவான பிறகே தன் அக்கிரம அனலை நிறைவேற்றினான். அதற்குப் பிறகுதான் இந்தத் தீர்க்கதரிசியைக்கொண்டு கர்த்தர் அவனைக் கடிந்துகொண்டார். இந்த இரண்டு காரியங்களைக் கவனிக்கும்பொழுது, கலியாணத்திற்குச் சற்றுமுன்னேயே எலியாவுக்கு இது சம்பவித்திருக்கவேணுமென்றும் இரண்டும் ஒன்றுக்கொன்று இசைவாயிருந்ததென்றும் திட்டமாய்ச் சொல்லலாம். ஆகாப் அரசாண்ட, பத்தாம் பதினோராம் வருஷத்திற்குள்ளாக இந்தக் கலியாணம் நடந்திருக்குமென்பதை பின்வரும் நியாயங்கள் திருஷ்டாந்தரப்படுத்தும்.

முதலாவது. இந்தக் கலியாணத்தினால் பிறந்த எகோராம் அத்தாலியாளென்பவர்களுடைய மகனாகிய அகசியாவென்பவன். இஸ்ரவேலின் இராசாவாகிய ஆகாப்பின் மகன் யோராம் அரசாண்ட பன்னிரண்டாம் வருஷத்தில் இராசாவானான். 2 இராசா 25. 25, 26.

இரண்டாவது. ஆனால் யோராம் யூதாவின் இராசனாகிய யோசபாத்து அரசாண்ட பதினெட்டாம் வருஷத்தில் இராசாவானான். 2 இராசா 3. 1.

மூன்றாவது. ஆதலால் யோராமின் பன்னிரண்டாம்வருஷம் யோசபாத்தின் முப்பதாம் வருஷத்திற்குச் சரியாயிருக்கவேண்டும். அவன் அவ்வளவு காலம் அரசாண்டிருந்தால் யோசபாத்தின் மகன் ஏகோராமுடைய ஏழாம் வருஷத்திற்கு அது சரியாயிருந்தது. 2 இராசா 3. 1: 8. 18. இந்தக் கணக்கைத் ஆரவைத்து யோசபாத்து அரசாண்டிருக்கும் முப்பதாம் வருஷத்திலே அகசியா அரசாளத் துவக்கியிருக்கவேண்டும்.

நாலாவது. அவன் இராசாவாகும்போது இருபத்திரண்டு வயதுள்



ளவனாயிருந்தான். ஆதலால் யோசபாத்து அரசாண்ட எட்டாம் வருஷத்திலே அவன் பிறந்திருக்கவேண்டும். யோராம் அத்தாலியாளைக் கலியாணம்பண்ணினது யோசபாத்தின் ஆறும் அல்லது ஏழாம் வருஷமாயிருக்கவேண்டும்.

ஐந்தாவது. இஸ்ரவேலின் இராசாவாகிய ஆகாப்பின் நாலாம் வருஷத்திலே யோசபாத்து இராசாவானான். ஆதலால் ஆகாப்பின் பத்தாம் அல்லது பதினோராம் வருஷத்திலே இந்தக் கலியாணம் நடந்திருக்கவேண்டும். இதற்குச் சற்றுமுன்னேயாவது நடந்திருக்கலாம். திட்டமாய்ச் சொல்லக்கூடாது. இது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது. எலியா ஓடிப்போனதோடு இது சம்பந்தப்பட்டதாக சரித்திரக்காரன் ஒரு வார்த்தையுஞ் சொல்லுகிறதில்லை. அதை நாம், மனதில் வைத்துக்கொண்டு காரியத்தை விசாரிக்கும்போது எலியா போயிருப்பானென்று, யாவரும் எண்ணக்கூடிய இடத்திற்குப் போகாததற்குக், காரணமின்னதென்று இது தெளிவாய்க் காண்பிக்கிறது. இப்படியிராவிட்டால் இவன் அங்குபோயிருப்பான். அவர்கள் இவனை ஏற்றுக்கொண்டிருப்பார்கள், இது உண்மைக்குரிய குறிப்பாயிராவிட்டால் வேறு எதை உண்மையென்று சொல்லலாம். இங்கே உண்மையிருக்கிறது. எலியாவின் சரித்திரம் சில இடங்களில் வெகு ஆச்சரியமாயிருந்தாலும் கட்டுக்கதையல்ல. அப்படியிருக்குமாகில் இவ்வளவாய் அதைப் பரிசோதிக்கும்போது அது கட்டுமானமென்று வெளிப்படும். உண்மையாகவேயிருந்த ஒரு மனுஷனுடைய உண்மையான சரித்திரந்தான். இதினால் கர்த்தர் அக்காலத்தில் தாம் தெரிந்துகொண்ட சனங்கள் நடுவில் வாசம்பண்ணித் தம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு இஸ்ரவேலில் மெய்யாகவே வேறொருவருண்டென்று அடையாளங்களால் ரூபித்தார் இக்காலத்தில் அந்தச் சரித்திரங்களிருக்கிறபடியால் உலகத்தின் கடைசிக்காலத்திலிருக்கும் நமக்கு முற்காலத்தில் தாம் பூமியில் வெளிப்படுத்தின வல்லமையை ஞாபகப்படுத்துகிறதாகத் தோன்றுகிறது. முன் காட்டின அதிசயங்களை, மறைத்துவைத்தாலும் இனனும் அவர் நம்மெல்லாருக்குஞ் சமீபமாயிருக்கிறாரென்றும் இந்தத் தீர்க்கதரிசியைக் காப்பாற்றினதுபோல அவரை நம்முடைய தேவனென்று எண்ணி ஒப்புக்கொண்டு நடந்தோமானால் தமக்கிஷ்டமானபடியே நம்மைப் பொல்லாங்கினின்று விலக்கிக் காப்பாற்ற ஆயத்தமாயிருக்கிறாரென்றும், அவரை நம்பினோமானால் பஞ்சகாலத்தில் அவனைப் போஷித்ததுபோல, எந்த இடுக்கணிலும் நமக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுத்து நம்மைத் திருப்தியாக்க அவரால் கூடுமென்றும், பூமியில் அவரோடுகூட நாம் நடந்தோமானால், அவனைத் தம்முடைய இராக்ஷியத்திற்கு உயர்த்தினதுபோல அக்கினி இரதத்திலல்ல, இப்பொழுது நம்முடைய பிதாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற ஒரு தூதனைக்கொண்டு நமக்குப் பணிவிடைசெய்து நமக்குத் தெரியாமல் நம்முடைய மரணப்படுக்கைக்குச் சமீபமாய்க் காத்திருந்து, நம்முடைய ஆத்துமங்களைப் பரதீசுக்குக் கொண்டுபோக ஆயத்தமாயிருக்கிறாரென்றும், அவனை ஆவியில் மறுபடியுங் கொண்டுவந்ததுபோல, பூலோகத்தில் சம்பாஷித்ததைவிட, அதிகச் சகிதமாய் மறுரூபப்பட்ட நமது கர்த்தரோடு சம்பாஷித்து நமக்காக அவருண்டுபண்ணின நித்திய வாசஸ்தலங்களில் எப்பொழுதும் அவரோடு வாசம்பண்ண நம்மை ஆவிக்குள்ளாக்க, ஆயத்தமாயிருக்கிறாரென்றும் படித்துக்கொள்ளுகிறோம்.

XX. முந்தின பிரிவுகளில் எலியாவின் சரித்திரத்தை இஸ்ரவேலின்
இராசாங்கத்திற்குரிய சங்கதிகளோடு ஒத்துப்பார்த்து அது உண்மை
யாகவே நடந்த சரித்திரந்தானென்று ரூபித்தோம். இந்தச் சரித்தி
ரத்தில் நாமின்னும் கவனிக்கவேண்டிய விசேஷங்களுண்டு. அடிக்
கடி நான் முக்கியப்படுத்திச் சொல்லிய ஒரு காரியத்தை மறுபடியும்
நானிங்கே ஞாபகப்படுத்துகிறேன். உண்மைக்குரிய இந்தக் குறிப்பு
கள் அற்புதங்களோடு கலந்துவருகிறபடியால் அற்புதங்களின் உண்
மையையும் ரூபிக்கப் போதுமானவைகள். அற்புதங்களும் சரித்தி
மும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கிறபடியால் ஒன்றை ஏற்
றுக்கொண்டு மற்றதைத் தள்ளக்கூடாது, அப்படிச்செய்வது சரித்
திரத்தைக் குறைவுப்படுத்துகிறதாயிருக்கும். ஏற்றுக்கொண்டால்
இரண்டையும் ஏற்றுக்கொள்ளவேண்டும், தள்ளினால் இரண்டையும்
தள்ளவேண்டும். எலியா இஸ்ரவேல் தேசத்தை விட்டோடிப்போ
னது உண்மையென்று நான் காண்பித்தேனல்லவா? அதற்குக் காரண
மாயிருந்த சங்கதியிலுள்ள ஒரு சிறு குறிப்பை இப்போது நாம் கவ
னிக்கவேண்டும். தீர்க்கதரிசி கொடுத்த உத்தரவின்பேரில் பன்னி
ரண்டு குடம் தண்ணீரை ஊற்றி வாய்க்காலை நிரப்பினதாக வாசிக்
கிறோம். காலம் கொடுமையான பஞ்சமாயிருந்தது. இராசாவும்
அவன் வீட்டு விசாரிப்புக்காரனும் மற்றவர்களை நம்பாமல் தண்ணீ
ருள்ள இடங்களைத்தேடி மீதியாயிருந்த மிருகஜீவன்கள் சாவாதப
டிக்கு தேசமுழுவதும்போய்ச் சோதிக்க அதைத் தங்களுக்குள்ளே
பங்கிட்டுக்கொண்டார்கள். கேரீத்து ஆற்றிலே தண்ணீர் வற்றிப்
போனபடியால் தீர்க்கதரிசி அதைவிட்டு சர்ப்பாத்தூருக்கு வந்து
அந்த விதவையினிடத்தில் குடிக்கக்கொஞ்சம் தண்ணீர் கொண்டு
வரகேட்டுக்கொண்டான். இப்படிப்பட்ட சமையத்தில் நாவைக்
குளிரப்பண்ண ஒரு துளி தண்ணீர் கிடைக்கிறது அபூர்வமாயிருந்த
போது, எலியா இவ்வளவு தண்ணீரை வீணாய்ச் செலவழித்தானென்
று சொல்வது உண்மையாயிருக்குமா? அதுவுமல்லாமல் அவ்வளவு
தண்ணீரும் யாதொரு பிரயாசமில்லாமல் உடனே கிடைத்ததாகச்
சொல்லியிருக்கிறதே இதெப்படி? கர்மேல் எந்த இடத்திலிருந்த
தென்று சற்றே கவனியுங்கள். அது சமுத்திரக் கரையோரம் இருந்
ததாகச் சரித்திரத்தில் சொல்லியிருக்கிறது. 43 ம் வசனத்தைப்பார்.
ஆதலால் இந்தத் தண்ணீர் கடல் தண்ணீராயிருந்திருக்கவேண்டும்.
ஆனால் நாமிப்படி நினைப்போமென்று சரித்திரக்காரன் எண்ணாத
தினால் இதை அவன் நமக்குத் தெளிவாய்ச்சொல்லக் காணோம். அவன்
உண்மையுள்ளவன், அவனெழுதின சரித்திரமும் உண்மையாய் நடந்
தது. ஆதலால் ஆக்ஷேபனையைக்குறித்து ஒன்றும் கவலைப்படாமல்,
தன் பாட்டுக்கு எழுதிக்கொண்டு போகிறான். இல்லாததைக் கட்டுப்
பாடாய் எழுதுகிறவனானால் தன் காரியம் சித்தியடைய இவ்வளவு
தண்ணீர் ஊற்றினதைக்குறித்து ஒன்றுஞ் சொல்லாமல் விட்டுவிட
லாமே. அதைப்பற்றிச் சொல்லவேண்டியிருந்தாலும், (தீயை ரகசி
யத்தில் வைத்து இப்படி பலியைத் தகனிக்கும்படி ஏற்பாடு செய்தார்
களென்று ஆக்ஷேபியாதபடிக்கு) கர்மேல் சமுத்திர ஓரத்திலிருந்
ததென்றும், அது சமுத்திரத்திலிருந்து வந்த தண்ணீரென்றும் தெளி
வாய்ச்சொல்லி, சந்தேகத்திற்கிடையில்லாதபடி செய்யலாமே. எலி
யாவின் சரித்திரத்தில் இத்தனை பங்குகள் உண்மையுள்ளதென்று
ரூபிக்கிற தெளிவான திருஷ்டாந்திரங்களை நாம்காணும்போது, அவன்
சரித்திரத்தின் மற்றப்பங்குகளை உண்மையற்றதென்று தள்ளலாமா?



அவன் ஓடினது உண்மையென்றும், கர்மேல் பருவதத்தில் பலிசெ
லுத்தினது உண்மையென்றும் நாம் ரூபித்தபடியினால் அதினால் விளைந்
த ஏசபேலின் கோபத்தையும், அந்தக் கோபத்திற்கு காரணமாயி
ருந்த அந்தப் பூசாரிகள் கொல்லப்பட்டதையும் உண்மையென்று
ஒத்துக்கொள்ளவேண்டுமல்லவா! அந்தப் பூசாரிகளை அவன் சத்து
ருக்கள் நிறைந்திருந்த இடத்தில் தனக்கு யாதொரு உதவியில்லா
திருக்க தானாய் அத்தனைபேரையும் கொன்றபடியால் பராபரன்தானே
அவனுக்கிந்த அதிகாரத்தைக்கொடுத்து, அக்கினி எரியும்படிக்கு மலை
யைத்தொட்டு அவன்மூலமாய் இத்தனை பெரிய அற்புதத்தை நடப்
பித்தாரென்று நாமெண்ணவேணுமல்லவா?

---

XXI. யூதா இஸ்ரவேலோடு செய்த விவாகசம்பந்தத்தைக்குறித்து
இன்னொரு விசேஷத்தை நாம் கவனிக்கவேண்டும். யோசபாத்தின்
மகன் ஆகாப் ஏசபேலென்பவர்களுடைய மகளைக் கலியாணஞ் செய்
தது யூதாவுக்குத் தீமையாயிருந்தது. தாயும் மகளும் குணத்தில்
ஒன்றுபோலிருந்ததை சரித்திரக்காரன் சொல்லாவிட்டாலும், பல
சங்கதிகளில் அவர்களுடைய நடக்கையை ஒத்துப்பார்க்கும்பொ
ழுது அநேக காரியங்களில் இரண்டுபேரும் ஒத்திருப்பதை நாம் கவ
னிக்கலாம. இரத்தஞ் சிந்தவேணுமென்கிற பிரியம், வீட்டிலும் இரா
சாங்கத்திலும் அதிகாரம் செலுத்தவேணுமென்கிற விருப்பம், தங்கள்
புருஷர்களுக்கு மேலாக துரைத்தனஞ் செய்யவேணுமென்கிற நாட்
டம், இதுகளை இரண்டுபேருக்குள்ளும் காணலாம். பாகால்வணக்
கத்தை ஏசபேல் இஸ்ரவேல் இராஜ்யத்திலும், அத்தாலியாள்யூத
இராஜ்யத்திலும் ஏற்படுத்தினார்கள். இதினாலேயே அழிவு இஸ்ர
வேலுக்கு சல்மனாசராலும், யூதாவுக்கு நேபுகாத்நேசராலும் வந்
தது. அந்த நல்ல இராசாவான யோசபாத்து இந்தத் தகாத கலியா
ணத்திற்குச் சம்மதித்த முகாந்தரம் திட்டமாய் நமக்குத் தெரியவரா
து. தனக்கே பிரியமாயிருந்ததினாலே இரண்டு இராஜ்யங்களையும் இவ்
வகையாய் ஒன்றுபடுத்தலாமென்று செய்தானோ, அல்லது தனக்குப்
பிரியமில்லாமலிருக்க தன் மகனுடைய மனதுக்கு இணங்கி அப்படிச்
செய்யச் சம்மதித்தானோ, ஏனெனில் தன் மக்களால் அதிக வருத்த
மடைந்து அதினால் கடைசியில் தன் இராஜ்யத்தையும் விட்டுவிட்டா
னென்று நாமெண்ண இடமுண்டு. எப்படியிருந்தாலும் இதினால்
யூதாவுக்குக் குறைவு நேரிடலாயிற்று. எரோபெயாமின் பாவம் அவன்
இராஜ்யத்திற்குக் கெடுதியுண்டாக்கினதுபோல இந்தப் பாவம்
யூதாவின் இராஜ்யத்திற்குக் கெடுதியுண்டாக்க ஏதுவாயிருந்தது.
யோசபாத்தின் காலம்வரைக்கும் யூதா வாழ்வடைந்தது. அதுமுதல்
பாகால் வணக்கம் இராசவம்மிஷத்தில் ஒட்டியிருந்தபடியால், கருத்
தருடைய சாபம் அந்த இராஜ்யத்தின்மேல் நெடுநாளாக இறங்கிற்
று. இதுமுதல் இரண்டு இராஜ்யங்களும் கையோடு கை கோர்த்து
நடந்ததுபோல, சகலத்திலும் ஒரோவிதமாய் நடந்துவந்தன. அப்படி
நடந்துவந்ததினால் நோக்கமில்லா இசைவுக் குறிப்பொன்று விசே
ஷமாய் நமக்குத் சுட்டுப்படுகிறது. அதை இங்கே சொல்லுகிறேன்.

முதலாவது. ஆகாபின் மகனாகிய அகசியா, யூதாவின் இராசாவா
கிய யோசபாத்தின் பதினேழாம் வருஷத்திலே சமாரியாவில் இஸ்
ரவேலின்மேல் இராஜ்யபாரம்பண்ணத் துவக்கினதாக வாசிக்கி
றோம். 1 இரா. 22. 52.

இரண்டாவது. இந்த அகசியா மரணமடைந்தபடியால், அவனுடைய சகோதரனாகிய யோராம் யூதாவின் இராசாவாகிய யோசபாத்தின் பதினெட்டாம் வருஷத்திலே சமாரியாவில் இஸ்ரவேலின்மேல் இராஜ்யபாரம்பண்ணினான். 2 இரா. 3. 1.

மூன்றாவது. இந்த ஆகாபின் மகனாகிய யோராம் யூதாவின் இராசாவாகிய யோசபாத்தின் மகன் யோராமின் இரண்டாம் வருஷத்திலே இராசாவானதாக வேறொரு இடத்தில வாசிக்கிறோம். 2 இரா. 1. 17.

நான்காவது. ஆதலால் யோசபாத்தின் மகனான யோராமின் இரண்டாம் வருஷம் யோசபாத்தின் பதினெட்டாம் வருஷமாயிருந்திருக்கவேண்டும். அல்லது யோராம் யோசபாத்தின் பதினேழாம் வருஷத்திலே இராசாவாயிருக்கவேண்டும்.

இதுகளை நான் விளைவாய்ச் சொல்லிவந்தபடியால், இந்த விவரங்களைக் கவனித்து, நியாயத்தை உணர்ந்துகொள்ளுகிறது லேசல்ல. வேதாகமத்தின் பல இடங்களிலிருந்து இடங்களின் பெயரையும், ஆட்களின் பெயரையும் ஒன்றாய்ச்சேர்த்து இந்த நோக்கமில்லா இசைவுக்குறிப்பை வெளியாக்கவேண்டியிருக்கிறபடியால், இது தப்பிதமாய் அல்லது கட்டுப்பாடாய் உண்டானதென்று ஒருபோதுஞ் சொல்லக்கூடாது. இப்போது இதனால் நமக்குத் தெரியவருகிறதென்ன? இஸ்ரவேலின் இராசாவான ஆகாபின் மகன் அகசியாவும், யூதாவின் இராசாவான யோசபாத்தின் மகன் யோராமும் ஒரே வருஷத்தில் தங்கள் பிதாக்கள் உயிரோடிருக்கும்போதே அவர்களுக்குப் பதிலாக இராஜ்யபாரம் செய்யத் தொடங்கினார்கள். இந்த வாலிபர் ஒரே வருஷத்தில் ஒன்றுபோல, தங்கள் பிதாக்கள் பார்த்துவந்த அலுவலைப் பார்க்கத் தொடங்கின முகாந்தரமென்ன? இரண்டு இராஜ்யங்களிலும் இந்த விசேஷம் ஒரேசமயத்தில் ஒன்றுபோல நடந்திருக்கிறபடியால், தற்செயலாய் இப்படி உண்டாயிற்றென்று சொல்லக்கூடாது. இந்தச் சங்கதிகள் நடந்த வருஷத்தில் அதாவது, யோசபாத்தின் பதினேழாம் வருஷத்தில் ஏதாவது விசேஷம் நடந்ததாவென்று பார்ப்போம்.

ஆகாபின் நாலாம்வருஷத்தில் யோசபாத்து இராசாவானான். 1 இரா. 22. 41. ஆனால் ஆகாப் இருபத்திரண்டு வருஷம் அரசாண்டு, ராமோத்துக் கிலேயாத்திற்கு விரோதமாய்ச்செய்த யுத்தத்தில் மரித்தபடியால், அவன் யோசபாத்தின் பதினெட்டாம்வருஷத்திலே மரித்திருக்கவேண்டும். 1 இரா. 16. 29. ஆகலால் அந்த இராசாவின் பதினேழாம் வருஷத்தில் அல்லது நாம் ஏதாவது விசேஷம் நடந்ததோவென்று ஆராய்ச்சி செய்கிறவருஷத்தில் இந்த இரண்டு இராசாக்களும் ராமோத்துக்கு விரோதமாக யுத்தஞ்செய்யப் பிரயெத்தனப்பட்டார்கள். இந்தக் காரியத்தை அவர்கள் நன்றாய் யோசித்து இதற்கென்று படைகளை முஸ்திப்பாக்கி தீர்க்கதரிசிகளோடு ஆலோசித்து அந்த யுத்தத்தில் பிரவேசித்தார்களென்று நாம் அறிவோம். 1 இரா. 22. ம் அதிகாரம்.

இவ்வளவு எச்சரிப்போடு இந்தக் காரியத்தில் பிரவேசித்தவர்கள் தாங்கள் தங்கள் தேசத்தைவிட்டுத் தூரப்போயிருக்கும்பொழுது தங்களுக்குப் பதிலாக இராசாங்கத்தை நடத்தவும், தாங்கள் மரிக்கும் காலத்தில் தங்களுக்குப் பதிலாக இராஜ்யபாரம்பண்ணவும், தங்கள் குமாரரை ஏற்படுத்திவிட்டுப்போனார்களென்று நாம் நன்றாய் அனுமானிக்கலாமே. இது இப்படியே நடந்ததென்று சரித்திரத்தில்



கொஞ்சமாவது சொல்லாவிட்டாலும், இந்த விதமாகவே காரியம் நடந்ததென்று நாம் சந்தேகமற நிச்சயிக்கலாம்.

———— o ————

## XIX. சூம்பின கையுடையவனைக் குணமாக்கினது.

மத். 12. 9—13. மாற். 3. 1—5. லூக். 6. 6—11.

நம்முடைய இரக்ஷகர் ஏழு அற்புதங்களை ஓய்வுநாளில் செய்திருக்கிறார். கப்பர்நாகூம் செப ஆலயத்தில் பிசாசு பிடித்தவனை சொஸ்தமாக்கினார். மாற். 1. 21. சீமோனுடைய மாமியை சுகமாக்கினார். மாற். 1. 29. பெதஸ்தா குளத்தில் வியாதியாய்க்கிடந்தவனைச் சுகமாக்கினார். யோவான் 5. 9. இங்கே சூம்பின கையுடையவனைச் சுகமாக்கினார். பிறவிக் குருடனுக்குப் பார்வை யளித்தார். யோவான் 9. 14. கூனியாயிருந்த ஒரு ஸ்திரீயைக் குணமாக்கினார். லூக். 13. 14. நீர்க்கோர்வையுள்ள ஒருவனைக் குணமாக்கினார். லூக். 14. 1. இன்னும் அனேக அற்புதங்களை ஓய்வுநாளில் செய்ததாக மாற். 1. 34ல் வாசிக்கிறோம். நம்முடைய இரக்ஷகருடைய விரோதிகள் இதற்காக எப்பொழுதுமவரிடத்தில் குற்றம் பிடித்து விரோதம் பேசினார்கள். இந்தச் சமயத்திலும் இதற்குச் சற்று முன்னே அவர் பண்ணின பிரசங்கத்திலும் அவர்கள் சாற்றின குற்றத்துக்கு எதிர் நியாயஞ்சொல்லி ஓய்வுநாளின் தன்மை விபரமாய் காட்டியிருப்பதால், அதை இந்த இடத்தில் விசாரித்தறிந்துகொள்ளுவது நல்லது.

சீஷர்கள் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து தின்றதையிட்டு பரிசேயர் விரோதம்பேசினார்கள். கதிர்களை கொய்து சாப்பிட்டது தப்பிதமென்றல்ல, ஓய்வுநாளிலப்படிச் செய்வதே தப்பிதமென்றார்கள். ஏனெனில், அடுத்தவன் விளைச்சலுக்குள் பிரவேசித்தால் அரிவாளைக் கொண்டு அறுக்கிறது தப்பிதமாயிருந்தாலும், பசிக்காக கையினாலே கதிர்களைக் கிள்ளலாமென்று மோசே கற்பித்திருந்தார். கர்த்தர் இஸ்ரவேலருக்கு இராசாவாயிருந்தபடியால், தேசமவருடையதென்று காட்டும்படி இப்படிச் சட்டங் கொடுத்திருந்தார். பரிசேயர் சீஷர் மேல் குற்றஞ்சாட்டி, இதோ ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களென்றார்கள். அவர்கள் செய்ததைக் குற்றமென்றெண்ணிக்கொள்ளுவாரா? இல்லாவிட்டால் அவர்கள் செய்தது சரியென்று சொல்லி தாமும் குற்றவாளியாவார். எவ்விதத்திலும் அவரிடத்தில் குறைவைக் காட்டலாம் என்றெண்ணினார்கள். அவர்களெண்ணமோ வாய்க்கவில்லை. அவர்கள் விசுவாசித்துவந்த வேதாகமத்திலிருந்தே இரண்டு திருஷ்டாந்தரங்களை எடுத்துச்சொல்லி தம்முடைய சீஷர்கள் செய்தது வேதவசனத்துக்கு விபரீதமல்லவென்று ரூபித்தார். முதல் திருஷ்டாந்தரம் அவர்களுடைய சரித்திர ஆகமங்களிலிருந்தும், இரண்டாவது, அவர்கள் தேவாலய ஆராதனையினின்றும் எடுக்கப்பட்டது. 1 சாமுவேல் 21ம் அதிகாரத்தில் தாவீது சவுலுவுக்குத் தப்பி ஓடினபோது பசியாயிருந்தபடியால், பிரதான ஆசாரியனிடத்தில் தேவசமுகத்தப்பங்களைக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டானென்று பார்க்கிறோம். தாவீது மிகவும் பெரிய பரிசுத்த தீர்க்கதரிசியாக எண்ணப்பட்டபடியால், இது அவர்களுக்கு பலத்த திருஷ்டாந்தரமாயிருந்தது. ஆசாரியர்மாத்திரஞ் சாப்பிடத்தக்க அப்பத்தை

கேட்டு வாங்கின தாவீதும் அதைக் கொடுத்த பிரதான ஆசாரியனும் தப்பிதக்காரரென்று சொல்வார்களா? இரண்டாம் திருஷ்டாந்தரம். அவர்கள் ஆராதனையைச் சேர்ந்தபடியால், அதையும் அவர்கள் லே சாய்த்தள்ளத்தக்கவர்களல்ல, ஓய்வுநாளிலும் தேவாலய ஊழியம் நடக்கவேண்டும். தேவாராதனை விசேஷித்ததானபடியால், அதைச் செய்யாமல் ஓய்வுநாளிலும் ஓய்ந்திருக்கக்கூடாது. மற்ற நாளைவிட அந்த நாளில் அதிக பலிகளைச் செலுத்தி, அதற்கேற்ற வேலைகளை ஆசாரியர் செய்யவேண்டியது. அப்படிச் செய்வதினால் ஆசாரியர்கள் ஓய்வுநாளை மீறுகிறார்களென்று சொல்லக்கூடாது. அப்படிச் செய்யாமல் விட்டால் தப்பிதமாயிருக்கும் என்று வேதத்தில் வாசிக்கிறதுமல்லாமல் நீங்களுஞ் சொல்லுகிறீர்களே. 4 மோ. 28. 9. என்பதுபோல நியாயஞ் சொன்னார். வேறொரு சமயத்தில் விருத்தசேதனத்தை ஓய்வுநாளில்செய்து ஓய்வுநாளைவிட சடங்குப்பிரமாணம் முக்கியமுள்ளதென்று காண்பித்தார். எட்டாம் நாள் விருத்தசேதனஞ் செய்யவேண்டுமென்று மோசே கற்பித்தார். அது ஓய்வுநாளாயிருந்தாலும் ஓய்வுநாளென்றும் பாராமல் விருத்தசேதனம்பண்ணுகிறீர்கள். ஓய்வுநாளைவிட விருத்தசேதனம் விசேஷித்தது, ஆனால் என்னுடைய அற்புதங்கள் எவ்வளவு அதிக விசேஷித்ததென்று பாருங்கள். விருத்தசேதனத்தினால் ஒரு அவயவத்தைச் சுத்தமாக்குகிறீர்கள். நானோ மனுஷன் முழுமையும் சுணப்படுத்துகிறேன். இப்படிப்பட்ட நல்ல கிரியைகளை செய்யக்கூடாதென்று சொல்லலாமா என்று கேட்டார். யோவான் 7. 22, 23. ஒருவேளை பரிசேயர் அது தேவாலயத்திற்குரிய ஆராதனை. இவர்களோ தங்கள் சொந்தக்காரியத்தைப் பார்த்தார்கள் என்று ஆட்சேபிப்பார்களென்று நினைத்து தேவாலயத்திலும் பெரியவரிங்கேயிருக்கிறபடியால், அவருக்காக ஓய்வுநாள் ஊழியஞ் செய்வதும் தப்பிதமல்லவென்று காண்பித்தார். மல்கி. 3. 1. எபிரேயர் 11. 15. தம்முடைய சீஷர்கள் புது உடம்படிக்கையின் ஆசாரியராகவும் தாமே சரியான தேவாலயமாகவும் எண்ணிப்பேசினார். அவருடைய ஊழியத்திலவைகள் முயற்சியாயிருந்தபடியால் தான் அவர்கள் தங்கள் சாப்பாட்டைத் தேட நேரமில்லாமல் போச்சுது. அதினால் தான் பசியினால் வருத்தப்பட்டு, அவர்கள் சத்துருக்கள் எண்ணினபடி ஓய்வுநாளை மீறும்படி நேரிட்டது. மெய்யான தேவாலயத்துக்கு நிழலாட்டமாயிருந்த தேவாலயத்திலுள்ள ஊழியத்தைச் செய்கிறவர்கள் குற்றமற்றவர்களாவார்களானால் மனுஷனாலல்ல கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டு கைகளில்லாமல் கட்டப்பட்ட மெய்யான தேவாலய ஊழியத்தைச் செய்கிறவர்களுடைய சலாக்கியம் எவ்வளவு அதிகம்.

தமது சீஷரிடத்தில் தப்பிதமில்லை என்று காட்டுவது போதாது. பொறாமையினால் குற்றஞ்சாட்டினவர்களைக் கண்டிக்கவேண்டும். இந்த நோக்கத்தோடே பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேன் என்கிற வாக்கியத்தின் கருத்தை நீங்கள் அறிந்தீர்களானால் குற்றமில்லாத இவர்களைக் குற்றப்படுத்தமாட்டீர்களென்றார். வேதவசனத்தை எவ்வளவோ ஆராய்ந்து அதிலுள்ள எழுத்தைமுதலாய் எணக்குப்பார்க்கிற நீங்கள் அதின் உள்ளான சரியான கருத்தைக் கவனித்தீர்களானால், இப்படிக் குற்றஞ் சாட்டமாட்டீர்கள். இந்த வாக்கியம் ஓசெயா 6. 6 லிருந்தெடுக்கப்பட்டது. பலியைவிட இரக்கமே பிரியமென்று ஆண்டவர் சொல்லுகிறார். பலவாக்கியங்களில் பழைய உடம்படிக்கை குறைவுள்ளதென்றும் அது பெலனற்றதென்றும் அதைவிட பிரயோசன



முள்ள வேறொன்றை கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்காக ஆயத்தப்படுத்த போகிறாரென்றும் திட்டமாய்ச் சொல்லியிருக்கிறது. இந்த வாக்கியமே அதற்குத் திருஷ்டாந்தரம். எசேக்கியேல் 20 25. எபிரேயர் 8. 8 மி. வாக்கியங்களைப் பார். பழையேற்பாட்டின் தீர்க்கதரிசி புதியேற்பாட்டின் அப்போஸ்தலனைப்போல பேசுகிறார். நான மனிதர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும அன்பு எனக்கிராவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம்போலும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவுமிருப்பேன். நான் தீர்க்கதரிசனங்களை யடைந்தாலும் சகல இரகசியங்களையும் கல்விகளையுமடைந்தாலும் எனக்குண்டான ஆஸ்திகள் யாவையும் ஏழைகளுக்குக் கொடுத்தாலும் சுட்டெரிக்கப்படுவதற்கு என் சரீரத்தைக் கொடுத்தாலும அன்பெனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோசனம் வராது. 1 கொரிந்தியர் 13. 1—3 வரை. வெளியரங்கமான சடங்குகளையும் பலிகளையும் அல்ல, இருதயக் காணிக்கையையே கர்த்தர் விரும்புகிறார். இதுதான அவர் பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றது. சடங்குகளையல்ல, வெளியரங்கமான வேஷத்தையல்ல, புறம்பான ஆசாரங்களை அல்ல, உள்ளான அன்பை விசுவாசத்தை கீழ்ப்படிதலையே கர்த்தர் மிகவும் விரும்புகிறார். எபிரேயர் 10. 5—10. இதை நன்றாயறிந்திருந்த சில பரிசுத்த போதகமார் சிறையிருப்பிலிருந்து கர்த்தருடைய பிள்ளைகளை மீட்டுவிடவும் கொடியபஞ்சத்திலவர்களைக்காப்பாற்றவும் தேவாலயத்தின் பாத்திரங்களையும் விற்றார்கள். கர்த்தருக்கது அதிக பிரியமென்று அறிந்திருந்தார்கள்.

இரக்ஷகர் பலியைவிட இரக்கத்தையே விரும்புகிறேனென்று இங்கே சொன்ன வார்த்தையின் கருத்தென்ன? சீஷருக்காக இதைப் பேசியிருப்பாரானால் கர்த்தருக்கெது பிரியமென்று நீங்கள் அறிந்துகொண்டவர்களானால் என் சீஷர்மேல் குற்றஞ்சாட்ட இடமிராது. அவர்கள் அழிந்துபோகிற ஆத்துமாக்களின்மேல் உருக்கமாயிருந்தபடியால் தங்கள் சாப்பாட்டையும் பெரிதென்றுபாராமல் கர்த்தருக்கூழியஞ் செய்தார்களே. அதினால் தானிந்த சமயத்தில் கதிர்களைக்கொய்து தின்னும்படி நேரிட்டது. புறம்பான வணக்கத்தை கட்டளையின்படியே செலுத்துகிறதைவிட இப்படிப்பட்ட அன்பான ஊழியத்தையே கர்த்தர் ஏற்றுக்கொள்ளுகிறார் என்கிற கருத்தாய்ச் சொல்லியிருப்பார். அல்லது பரிசேயரைக் கண்டிக்க இப்படிச் சொல்லியிருப்பாரானால் கர்த்தருக்குப் பிரியமானதின்னதென்று அறிந்துகொண்டவர்களானால் இவர்களை வீணாய் கடிந்துகொள்ளுதலைவிட்டு, சாந்தத்தினாலும் இரக்கத்தினாலும் மற்றவர்களைக் குறித்து அன்பாய் எண்ணுவதினாலும் கர்த்தரை முழு இருதயத்தோடு நேசிப்பதினாலும் அவருக்குப் பிரியமான ஊழியத்தைச் செய்யப்பார்ப்பீர்கள். தகனப்பலி முதலான பலிகளிலும இதுவே கர்த்தருடைய பார்வைக்கு மேன்மையாயிருக்கிறது. என்கிறதுபோல கண்டித்திருப்பார். குற்றங் கண்டுபிடிக்கத் தேடின பரிசேயரிடத்தில் இந்த அன்பும் இரக்கமும்தான் குறைவாயிருந்தது. சீஷர்களை சீர்திருத்தவேண்டுமென்றுவது, கர்த்தருடைய காரியத்தில் வைராக்கியத்தைக் காட்டவேண்டுமென்றுவது, அவர்கள் சீஷருடைய குற்றத்தை எடுத்துப்பேசாமல் பொறாமையினாலும் எரிச்சலினாலும் ஏவப்பட்டு அவர்களுக்கு விரோதஞ்செய்யவேண்டுமென்றும் கர்த்தருடைய பக்ஷத்தில் பேசுகிறதுபோல பேசி சீஷர்களைக்கொண்டு கர்த்தரையே துன்பப்படுத்தப்பார்த்தார்கள். அவர்கள் ஏழைகளாயிருந்ததினாலல்ல பசியினால்

படிசெய்தபடியால் குற்றமற்றவர்களாய்த்தானிருந்தார்கள். கிறிஸ்துவுக்காகத் தங்கள் தொழிலைவிட்டார்கள். தேவனுக்காகப்பட்ட பிரயாசத்தினால் பசியினால் வருத்தப்பட்டார்கள். ஆதலால் தாவீதிருந்த நிலைமையிலேயே இவர்களும் அவசியத்தினாலிப்படிச்செய்தார்கள். தேவாலயத்தில் ஊழியஞ்செய்த ஆசாரியரைப்போல் கர்த்தருக்கூழியஞ்செய்ததினாலேயே ஓய்வுநாளை மீறுகிறவர்களாகக் காணப்பட்டார்கள். தேவசமுகத்து அப்பங்களையுமவர்கள் சாப்பிட்டாலும் இவர்கள்மேல் குற்றஞ்சுமராது. ஏனென்றால் கர்த்தருடையது அவர்களுடையதுதான்.

மாற்கு சுவிசேஷகன் மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை. ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது என்கிற வார்த்தையும் இரக்ஷகர் சொன்னதாகச் சொல்லுகிறார். ஓய்வுநாளைக் கைக்கொள்ளும்படிக்கு பராபரன் மனிதனை உண்டாக்காமல் மனிதனுடைய நன்மைக்கும் பிரயோசனத்துக்குமென்றே ஓய்வுநாளை ஏற்படுத்தினார். வெளியரங்கமான ஏற்பாடெல்லாவற்றையுங் குறித்திப்படியே சொல்லலாம். மனிதனுக்காக நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தாரே ஒழிய நியாயப்பிரமாணத்திற்காக மனிதனை உண்டாக்கவில்லை. மனிதன் தான் கர்த்தருடைய பார்வையில் விசேஷித்தவன். மற்றவைகளெல்லாம் அவனுக்காக ஏற்படுத்தப்பட்ட கருவிகள். அவைகளாலவன் ஒழுங்குப்படுத்தப்பட்டு சீரடைந்து தம்மை வணங்குவதற்குத் தகுந்தவனாவதே அவர் நோக்கம். யூதர்களுடைய தல்மூதலும் ஓய்வுநாள் உங்கள் கைகளிலிருக்கிறது. நீங்கள் ஓய்வுநாளுக்குள்ளானவர்களல்ல, ஆதலால் தான் கர்த்தர் ஓய்வுநாளைக் கொடுத்தாரென்றெழுதியிருக்கிறது என்று யூதர்கள் வாசித்தார்கள். 2 மோசே 16. 29. இந்த காரணங்களெல்லாவற்றையும் அவர்களுக்குச் சொல்லி கடைசியில் மனிதருடைய குமாரன் ஓய்வுநாளின் கர்த்தனாயிருக்கிறான் என்றார். சிலர் மனிதகுமாரன் என்பதை முந்தின வாக்கியத்திலுள்ள மனுஷனென்று அருத்தம்பண்ணி மனுஷனுக்காக ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டபடியால் ஓய்வுநாளுக்குக் கர்த்தனாயிருக்கிறான். அவன் இஷ்டப்படியே ஓய்வுநாளைக் கைக்கொள்ளலாமென்பது பெரிய தப்பிதம் புதிய ஏற்பாட்டில் மனித குமாரனென்று எண்பத்தெட்டுவிசை வந்தாலும் எப்பொழுதும் கிறிஸ்துவானவரைக்குறித்து அப்படிச் சொல்லியிருக்கிறதே ஒழிய ஒருவிசையாவது மனுஷனைக்குறித்து சொல்லியிருக்கிறதாகக் காணோம். பவுலப்போஸ்தலனும் கிறிஸ்துவினால் மனிதருக்குக்கிடைத்த பெரிய சலாக்கியங்களைக்குறித்துப் பேசும்பொழுது நியாயப்பிரமாணத்துக்கு எவ்வளவோ நீங்கினவனென்று சொன்னபோதிலும், நியாயப்பிரமாணத்துக்கு கர்த்தனென்றழைக்கவேயில்லை. மீட்கப்பட்ட மனிதன் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனல்ல, நியாயப்பிரமாணமவன்மேல் அதிகாரஞ் செலுத்துகிறதில்லை என்றாலும் சிநேகிதனைப்போல அவனோடிருக்கிற தோழனைப்போல் அவனோடிருக்கிறது. மாமிசத்திலிருக்கிறவரையில் தேவ நியாயப்பிரமாணம் அவனை மட்டுத்திட்டப்படுத்தவேண்டியது அவசியந்தான். கிறிஸ்துவின் ஊழியமாகிய சுயாதீனத்தினின்று விழுந்த உடனே மறுபடியும் அதற்குக்கீழாகிறான். சடங்குப்பிரமாணத்தினின்றும் மனிதன் முற்றிலும் நீங்கலானவனல்ல, அதற்கவன் கர்த்தனல்ல. அதைக் கொடுத்தவரோ அதற்கதிபதி. மனிதகுமாரன் தேவ குமாரனுமாயிருப்பதால், எல்லாபபிரமாணங்களுக்கும் கர்த்தனாயிருக்கிறார். முதலாவது அவைகளைக் கொடுத்தவர் கர்த்தரே. அதனாலே அவர் கொண்ட நோக்கம் நிறைவேறி



னபிறகு அதுகளை நீக்கத்தக்கவருமவரே. எபிரேயர் 9. 11-15.' மனித சுபாபத்தின்படி நியாயப்பிரமாணத்துக்குக் கீழானார். தெய்வ சுபாபத்தின்படி நியாயப்பிரமாணத்துக்குக் கர்த்தனானார். நிழலாட்டம் போய் பொருளெப்பொழுது வருமென்று அவரே தீர்மானிக்கத்தக்கத் தக்கவர். பொருளைப் பிடித்துக்கொண்டு நிழலைத் தள்ளத்தக்கதெப்பொழுதென்று அவரே நிரணயிக்க வல்லவர். எல்லா ஈவுகளுக்கும் மேலான ஈவான அவர் வந்ததினாலே மற்றப் புறம்பான ஏற்பாடுகளெல்லாம் நின்று போவதற்குக் காலம் வந்ததென்றறிகிறோம். அவரோ நியாயப்பிரமாணத்தின் முடிவு. அவரோ அதை நிறைவேற்றினார். அவரையே அது முன்குறித்தது. அவரோ சரியானபடி நியாயப்பிரமாணமாயுமிருக்கிறார். அவர் சத்துருக்கள் சொன்னபடி அழிக்க அவர் வரவில்லை, அதை நிறைவேற்றவே வந்தார். அதின் அருத்தத்தை வெளிப்படுத்தினார். அதை மகிமைப்படுத்தினார். நிழலைத் தள்ளி பொருளை ஸ்தாபித்தார். எழுத்தையல்ல, ஆவியை உறுதிப்படுத்தினார். மத். 5. 17-18.

ஓய்வுநாளைப்பற்றி இரக்ஷகர் இந்த நியாயங்களைச் சொன்னபிறகு உடனே இந்தச் சங்கதி நடந்ததாக மத்தேயு சொல்லுகிறார். லூக்கா இது மறு ஓய்வுநாளில் நடந்ததாகச் சொல்லுகிறார். கூனியாயிருந்த ஸ்திரியைக் குணமாக்கினதுபோலும் கப்பர்நகூமில் பசாசைத் துரத்தினதுபோலும் இந்த அற்புதத்தை கர்த்தர் செப ஆலயத்தில் தான் செய்தார். அவர்களுடைய செப ஆலயத்தில் அதாவது அவர்களோடு தர்க்கமாடின பரிசேயருடைய செப ஆலயத்தில் பிரவேசித்தபோது, சூம்பினகையுடைய ஒருவனைக் கண்டார். இது வலதுகை என்று லூக்கா சொல்லுகிறான். இது கொடிய வியாதி. இரத்த ஓட்டமில்லாமல் அவயவஞ் சிறுத்து வரவர செத்து கடைசியில் முற்றிலும் கெட்டுப்போம். இது மனுஷரால் லேசாய்த் தீரக்கூடியதல்ல. நசரேனரும் எபியோனியரும் வழங்கிவந்த எபிரேயச் சுவிசேஷத்தில் இவன் கொத்தவேலை செய்தவனென்றும், இரக்ஷகரைப் பார்த்து நான் கையினால் சீவனம்பண்ணுகிறவன் எனக்குச் சுகமளிக்கவேண்டிக்கொள்ளுகிறேன் ஏசுவே இல்லாவிட்டால் வெட்கத்தோடு இறக்கவேண்டும் என்று கெஞ்சினதாகச் சொல்லியிருக்கிறது.

மத்தேயு பரிசேயர் முதலாவது இரக்ஷகரைப் பார்த்து ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமாவென்று கேட்டதாகச் சொல்லுகிறார். மாற்கும், லூக்காவும் நம்முடைய இரக்ஷகர் முந்திக் கேட்டதாகச் சொல்லுகிறார்கள். பரிசேயர் முந்தியப்படி கேட்டிருக்கலாம். நம்முடைய இரக்ஷகரும் அந்தக் கேள்விக்கு மாறுத்தரமாக வேறொரு கேள்வியைக் கேட்டிருப்பார். இது அவருடையவழக்கம். மத்தேயு 21. 24. லூக்கா சொல்லுகிறதைப்பார்த்தால தெளிவாகும். நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன் ஓய்வுநாட்களில் நன்மைசெய்வதோ, தீமைசெய்வதோ, சீவனைக் காப்பதோ, அழிப்பதோ எது நியாயமென்று கேட்டார். அளவற்ற ஞானமுடைய அவர் வேறொரு சமயத்தில் எனக்குப்பிறன் யாரென்று கேட்ட நியாயசாஸ்திரிக்கு மறு உத்தரவு சொன்னதுபோல் அவர்கள்மேலேயே காரியத்தைப்போட்டு ஆர் பக்ஷத்தில் நியாயமுண்டென்று பார்க்கச் சொல்லுகிறார். செய்யலாமா செய்யக்கூடாதா என்றல்ல, நன்மை செய்யலாமா அல்லது நன்மை செய்யாமலிருக்கலாமா என்பதுதான் கேள்வி என்று பிடித்துக்கொண்டார். நன்மைசெய்யாமல் விடுவது தீமை செய்வதற்குச் சமானம். காக்காமலிருப்பது அழிப்பதுதான். வாக்கியப் புஸ்தகம் 24.

11-12. இதைக் குறித்தொருவரும் சந்தேகிக்கமாட்டார்கள். பாவஞ்செய்வது ஒருபோதும் நல்லதல்ல, ஓய்வுநாளில் சில காரியங்களைச் செய்யலாமென்றுமாத்திரமல்ல, செய்யவேண்டிய கடமையும் உண்டு. நான் செய்யப்போகிற காரியங்களை விட அற்பக் காரியங்களை நீங்களே செய்யாமல் இருக்கமாட்டீர்கள். உங்களுடைய ஆடு ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால் அதை எடுத்துவிடாமலிருப்பீர்களா? நல்ல மேய்ப்பனாகிய நான் என்னுடைய மந்தையிலுள்ள ஆட்டை விட விலையேறப்பெற்ற மனுஷனை இரக்ஷிக்கவேண்டாமா? அது ஓய்வுநாளுக்கு வேலையானால் இது எவ்வளவு அதிகம். ஓய்வுநாளில் சொஸ்தமாக்கலாமாவென்று கேட்கிறீர்களா? ஓய்வுநாளில் நன்மைசெய்யலாம் ஆதலால் சொஸ்தமாக்கலாம் என்று மறுமொழி சொன்னபோது அவர்கள் பதில் சொல்ல ஒன்றுமில்லாமல் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களிருதயத்தின் கடினத்தினாலே விசனப்பட்டு கோபத்தோடே அவர்களை சுற்றிப்பார்த்து பின்பு அந்த மனிதனை நோக்கி உன் கையை நீட்டென்றார். பாவியைக் கண்டு விசனப்பட்டார். பாவத்தைக் கண்டு கோபமடைந்தார். இரண்டும் அவரிடத்திலிருந்தது. நாமோ பாவிகளானபடியால் பாவமில்லாமல்கோபங்கொள்வது வருத்தம். நம்முடைய கோபம் கீழேயிருக்கும் மண்டியை அதாவது பாவச்சுபாவத்தை கலக்குகிறதுபோலிருக்கிறது. அவருடைய கோபமோ மேலேயிருக்கும் தண்ணீரை அடிக்கிறதுபோலிருக்கிறது. இரக்ஷகருடைய முகக்குறிப்புகளை அடிக்கடி சொல்லுகிற மாற்கு மாத்திரந்தான் அவருக்குக் கோபம் உண்டாயிற்றென்று சொல்லுகிறான். அந்த மனுஷன் சொன்னபடியே நீட்டினான். உடனே மற்ற கைபோல் சொஸ்தமாயிற்று. உடனே அவருடைய சத்துருக்களின் கோபமதிகமாகி பித்தங்கொண்டவர்களைப்போலானார்கள். அவருடைய பாரம்பரை நியாயங்களைத் தகர்த்துப்போட்டார். அவர்கள் வாயை அடைத்துப்போட்டார். சனங்களுக்குமுன்பாக அவர்களை வெட்கத்துக்குள்ளாக்கினார். அவர்கள நோக்கம் நிறைவேறாததினால் அவர் பேரிலுள்ள விரோதத்தினால் மதியில்லாமல் நிறையப்பட்டு கையில் அகப்பட்டதைப் பிடிக்கிறதுபோல் எரோதியரோடு அவருக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணினார்கள். இவர்கள் கலிலேயாவை ஆண்டுவந்த அந்திப்பாசுடைய கூட்டத்தார் உரோமர் பட்சமாயிருந்தார்கள். பிறகு ஒரு சமயத்திலும் அவரை வார்த்தையில் பிடிக்கும்படிக்கு இவர்களோடேயே சேர்ந்துகொண்டார்கள். மத்தேயு 22. 16. உலோகத்தாருடைய நடக்கை இப்படிப்பட்டதுதான். சத்தியத்துக்கு விரோதமாய் எழும்பத் தங்களுக்குள்ளிருக்கும் விரோதத்தையும் மறந்து ஒன்றுகூடிக்கொள்வார்கள். ஒளியின் இராஜ்யத்தை அழிக்கும்போது தங்களுக்குள்ளேதானே பிரிந்திருக்கமாட்டார்கள். கிறிஸ்துவைக் கொல்ல ஏரோதும் பிலாத்துவும் சிநேகிதரானார்கள். லூக்கா 23. 12. அவர் உபாயங்களை அறிந்து அவர் அவர்களுடைய வன்மத்துக்குத் தப்ப கலிலேயாக் கடலோரத்துக்குப் போனார். மாற்கு 3.

—————o—————

## நாளது சங்கதிகள்.

**இங்கிலாந்து.** லுக்ஸெம்பர்கு நாட்டையிட்டு புருஷியாவுக்கும், பிரானஸியாவுக்கும் உண்டான விபரீதத்தைத் தீர்க்கும்படி



ஐரோப்பாவின் பிரதான ராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்ட ஸ்தானாபதிகள் லண்டன் நகரத்தில் சங்கங்கூடி ஆலோசித்தார்கள். அதின்மேல் மேற்படி நாட்டை அவ்விருதேச அரசாட்சியாரில் ஒருவரேனும் கைவசப்படுத்தி ஆளப்படாதென்றும், புருஷியர் அங்கிலே காவற்சேனைகள் நிறுத்தப்படாது என்றும், அந்நாட்டின் அலங்கமானது பிரான்ஸியாவின் எல்லையை அடுத்திருப்பதினால் இனிமேல் அதைக்கொண்டு மேற்படி தேசத்துக்கு விக்கினம்வராதபடி அதை இடித்துப்போடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டதுமல்லாமல், அதைக்குறித்து ஓர் உடன்படிக்கைப்பத்திரமும் எழுதி கையொப்பம் வைக்கப்பட்டது. இவ்வாறு தற்காலத்தில் அவ்விரு தேசத்தாருக்குள்ளே சமாதானம் உண்டுபண்ணப்பட்டிருந்தாலும், எவ்விதத்திலாவது புருஷியாவுக்கும், பிரான்ஸியாவுக்கும் தம்மில் யுத்தம் உண்டாவதற்கேற்ற ஏதுக்கள் சீக்கிரம் உற்பவிக்கும் என்பது அநேகருடைய எண்ணம். துருக்கிய அரசனாகிய சுலத்தான் பாரீஸ்நகரத்தில் நூதனப்பொருள் வேடிக்கைபார்த்துவிட்டு, இங்கிலாந்துக்குப்போக விருப்பங்கொண்டதினால், அவரை ஏற்று உபசரிக்கும்படி அங்கே நாள் ஆயத்தங்கள் செய்யப்பட்டது. சுல்த்தான் ஒருவர் எப்போதாவது இங்கிலாந்தைத் தரிசித்த முதல் தருணம் இதுதான். கடந்த ஜூலை மீ 15௳ காருண்ய இராக்கினியவர்கள் தம் போர்க்கப்பல்கள் அனைத்தையும் அணிநிறுத்தி சிறந்த யுத்த பரீட்சைசெய்வதற்கு யோசித்திருந்தார்கள். சுல்த்தானும் அது சமயத்தில் அங்கே கூட இருந்திருப்பார். சீர்திருத்த பத்திரம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் பரிசோதித்து மிகவும் மாற்றப்பட்டது. இனி எவ்விதத்திலும் அதிசீக்கிரமாய் ஸ்தாபிக்கப்படுமென்ற நிச்சயம் தோன்றியிருக்கிறது.

**மெக்ஸிக்கோ.**—இங்கே நடந்த தேச சண்டையில் குடியரசுக் கட்சியார் ஜெயித்துக்கொள்ளவே, அவர்களது தேசாதிபதியாகிய ஜியுவரொஸ் (Juarez) என்பவரின் அனுமதிப்பிரகாரம் மக்ஸிமிலியன் சக்கரவர்த்தி கொலைபுரியப்பட்டதாக விசனசெய்தி வந்தது. மக்ஸிமிலியன் என்பவர் ஐரோப்பாவின் பற்பல ராஜ குடும்பத்தாருக்கு உறவினராய் இருந்ததுந்தவிர, பலராலும் நன்குமதிக்கப்பட்டும் வந்தபடியால், மெக்ஸிகர் புரிந்த இக்கொடூர அக்கிருத்தியத்தின் நிமித்தம் ஐரோப்பா அடங்கலும் சொல்லரிய துயரம்பிறக்கவே, அங்குள்ள ராஜவம்சத்தார் அனைவோரும் அவருக்காக துக்கங்கொண்டாடினார்கள். ஒரு பங்கு ஸ்பானியரும் மறுபங்கு சுதேச இந்தியருமாக சாதிக்கலப்பாய்த்தோன்றியிருக்கிற அந்த மெக்ஸிக்கர் மிகவும் கேடுகெட்ட அழிம்பரும் நிஷ்டூரருமாய்க் காணப்படுகிறபடியால், அந்நிய தேச அரசாசனத்தாரால் பலவந்தமாய் அடக்கி ஆளப்படவேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்.

—————o—————

செப்தெம்பர் ௴ நாள் 30 ஆவணி ௴ 8 உ முதல், புரட்டாசி ௴ 1[illegible] வரை.

| வாரம். | ஆங்கில தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | கஅ | தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள். 2 இராசா 17: 14. |
| தி | 2 | கக | அவருடைய கட்டளைகளை வெறுத்தார்கள். 15. |
| செ | 3 | உ0 | அவருடைய உடம்படிக்கையை வெறுத்தார்கள். 15. |
| பு | 4 | உக | மாயையைப் பின்பற்றி, மாயக்காரரானார்கள். 15. |
| வி | 5 | உஉ | கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினார்கள். 16. |
| வெ | 6 | உங | அவர்களைத் தம்முடைய முகத்தைவிட்டு அகற்றினார். 18. |
| ச | 7 | உச | கர்த்தருக்குப் பயந்து நடக்கிறதில்லை. 34. |
| ஞா | 8 | உரு | வேறே தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள். 35. |
| தி | 9 | உசா | வேறே தேவர்களுக்குப் பலியிடாதிருங்கள். 35. |
| செ | 10 | உஎ | அவைகளைப் பணிந்துகொள்ளாதிருங்கள். 35. |
| பு | 11 | உஅ | கர்த்தருடைய, பெரிதும் பயங்கரமுமான நாள்வரும். யோவே. 2: 4. |
| வி | 12 | உகூ | கர்த்தருடையநாமத்தைத் தொழுதுகொள்பவன் விடுவிக்கப்படுவா |
| வெ | 13 | கூ0 | கர்த்தர் நியாயஞ்செய்யும் நாள், சமீபமாயிருக்கிறது. 19. [ன். 5. |
| ச | 14 | கூக | கர்த்தர் தமது சனத்திற்கு அடைக்கலமாயிருப்பார். 21. |
| ஞா | 15 | க | கர்த்தர் சீயோனிலே வாசமாயிருக்கிறவர். 26. |
| தி | 16 | உ | நம்பிக்கையை, பராபரன்மேல் வைத்திருக்கிறேன். அப். 24: 15. |
| செ | 17 | ங | மரித்தோர் உயிரோடெழுந்திருப்பார்கள். 21. |
| பு | 18 | ச | மனந்திரும்புதற்கேற்ற கிரியைகளைச் செய்யவேண்டும். 26: 20. |
| வி | 19 | ரு | பராபரன் எனக்கு உதவிசெய்தார். 22. |
| வெ | 20 | சா | சத்தியமான வார்த்தைகளை வசனிக்கிறேன். 25. |
| ச | 21 | எ | பராபரன் உனக்குத் தயவுபண்ணினார். 27: 24. |
| ஞா | 22 | அ | பராபரனை நம்புகிறேன். 25. |
| தி | 23 | கூ | பராபரனைத் தோத்திரித்தான். 35. |
| செ | 24 | க0 | எங்களுக்கு, மிகுந்த அன்பைக் காண்பித்தார்கள். 28: 2. |
| பு | 25 | கக | இருதயத்தினால் சிந்தித்துக்கொள்ளாமலுமிருக்கிறார்கள். 26. |
| வி | 26 | கஉ | மனந்திரும்பாமலுமிருக்கிறார்கள். 26. |
| வெ | 27 | கங | கடினமாக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயிருக்கிறார்கள். 26. |
| ச | 28 | கச | நீர்மாத்திரம் நிலை நிற்பீர். எபிரேயர் 1: 11. |
| ஞா | 29 | கரு | உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. 12. |
| தி | 30 | கசா | மனிதனை, நீர், நினைக்க, அவன் எம்மாத்திரம்? 2: 6. |

## விசேஷித்த நாட்கள்.

1. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், பதினோராம் ஞாயிறு.
8. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், பன்னிரண்டாம் ஞாயிறு.
13. பௌர்ணமி. [14உ காலை ஏறக்குறைய 4¾ மணிக்கு கிரகணமுண்டாம்.]
15. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், பதின்மூன்றாம் ஞாயிறு.
22. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், பதினான்காம் ஞாயிறு.
27. அமாவாசை.
29. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், பதினைந்தாம் ஞாயிறு.

ஒடிந்தகோலும் ஊன்றுகோலாகும்.
இண்ணைப்பெற்றாலும் கண்ணைப்பெறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

NOVEMBER. 1867. நவம்பர் ௴.

CONTENTS.


Recreations in Astronomy. ... ... ... 202
Christian Church History.... ... ... ... 206
On the Historical books of the Old Testament. ... ... ... ... ... ... 211
The Miracles of Christ. ... ... ... ... 216
News. ... ... .. ... ... ... ... ... 219


அட்டவணை.


வான சாஸ்திரத்தைக் குறித்தது. ... உ0உ
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... உ0சா
பழயவேற்பாட்டுச் சரித்திர ஆகமங்களின் பேரில் ... ... ... ... ... உகக
கிறிஸ்துவானவர்செய்த அற்புதங்கள். உகசா
நானாது சங்கதிகள். ... ... ... ... உககூ


இருகைகட்டிருக்கில் இசைகேடுமா?
ஒருகையைமுடக்கு நாலிலுஞ்செய்வது.

ஒருகல்லிலிரண்டாக்கிலையா?
ஒருவனே நீக்கரால் உலகமதிக்கதுபோல.

PALAMCOTTAH :
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY
L. DEVANAYAGAM PILLAY.
1867.

ஒருவிரல் சொடியிடாது.
ஒருஉறையில் இரண்டுகத்தியா?

கிரேக்கரோடு சண்டைசெய்து செயமடைந்துகொண்டிருந்தது பற்றி, ஐரோப்பாக் கண்டத்தாரெல்லாம் அவர்களுக்குக் கீழ்ப்பட்டுப்போவோமோவென்று அஞ்சிக்கொண்டிருக்கையில், இந்த வால் வெள்ளியையும் அதின் வால் அவர்கள் பாவனைப்படிக்கு துருக்கர் கத்திபோல அமைந்திருந்ததையும் அவர்கள் பார்த்து தங்கள்பேரில் தேவ கோபாக்கினை வெளிப்படப்போகிறதென்று நடுங்குகிறதற்கு ஏதுவாயிற்று. இந்தக் காலமுதல் நாளதுவரையும் மேற்படி வால்வெள்ளியின் தோற்றங்கள் கிரமமாய் குறிக்கப்பட்டிருக்கின்றன. பதினேழாம் நூற்றாண்டில் அது தங்கநிறமாய் விளங்கினதாம். 1682 ௵த்தில் அது வியாழன் அவ்வளவு பருப்பமும் பிரகாசமுமாயிருந்ததென்றும், அதின் வால் முப்பது பாகை நீளமாயிருந்ததென்றும் ஹாலி என்பவர் எழுதியிருக்கிறார். அதின் அயனம் பூகோளாயனத்துக்கு சுமார் பதினேழு பாகை ஒருச்சாய்ந்திருக்கிறதாம். 1835 ௵த்தில் அதின் வால் கண்ணுக்கு ஆறு பாகை நீளமாயும், தூர திருஷ்டிக் கண்ணாடியில் அதைப் பார்க்க சற்று அதிக நீளமாயுமிருந்தது.

எங்கி என்பவருடைய வால் வெள்ளியும் விசேஷித்ததுதான். சுமார் 1208 நாளில் அது சூரியனை ஒருவிசை சுற்றிக்கொள்ளுகிறது. இந்த வால் வெள்ளி 1789, 1795, 1801, 1805. வருஷங்களில் பலவிசையாய்த் தோற்றப்பட்டது. வாலோடு காணப்பட்டதுமுண்டு. வாலின்றிக் காணப்பட்டதுமுண்டு. 1818 ம் ௵த்தில் தோன்றினபோது, பெர்லின் பட்டணத்து சோதி சாஸ்திரியான எங்கி என்பவர் மேற்காட்டியபடி அதின் சுற்றோட்டத்தைக் கணித்து 1822 ம் ௵த்தில் திரும்புமென்று முன்னறிவித்தார். அந்தப்படியே குறித்த வருடத்தில் திரும்பி வந்தது. அப்பால் 1825, 1828, 1832, 1835, 1839. முதலிய வருஷங்களிலுங் காணப்பட்டது.

மேலே விவரித்திருக்கின்ற இரண்டு வால் வெள்ளிகளையுங்கொண்டு, அவற்றின் அயனங்கள் மிகவும் நீண்ட விருத்தங்களென்று உணர்ந்துகொள்ளலாமே. எங்கி என்பவருடைய வால்வெள்ளி சூரியனுக்குச் சமீபமாகும்போது, புதனின் அயனத்துக்குள்ளிருக்கும். அப்படியானால் வேறெந்த கிரகத்தையும் பார்க்க இந்த வால்வெள்ளிதானே சூரியனுக்கு அதிகச் சமீபமானதாகும். அது சூரியனுக்கு அதிக தூரமாகும்போது வியாழனின் அயனத்தருகிலிருக்குமாம். ஆகவே இவ்வெள்ளியின் ஒரு முனைக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் அதன் மறுமுனைக்கும் சூரியனுக்குமுள்ள தூரத்துக்குப் பத்து மடங்கு ஆகுமென்று சுளுவில் அறிந்துகொள்ளலாம். ஹாலி என்பவருடைய வால்வெள்ளி சூரியனைக் கிட்டும்பொழுது புதனுக்கும் சுக்கிரனுக்கும் இடையிலிருக்கும். தூரப்படும்பொழுது, யூரானஸ் என்ற கிரகமிருக்கும் தூரத்துக்கும் இரட்டிப்பான தூரம்போகுமாம். மேற்சொல்லிய வால்வெள்ளிகள் மூன்றும் சூரிய மண்டலத்தைச் சேர்ந்த உலகங்களென்பதற்கு எவ்வளவேனும் சந்தேகமில்லை. அவைகள் கவர்ச்சிப் பிரமாணத்துக்குள்ளமைந்து சூரியனை மையமாகக்கொண்டு சுற்றிவருகின்றனவே. எங்கி என்பவருடைய வால்வெள்ளியின் அயனம் பூகோளாயனத்துக்கு உத்தேசம் பதின்மூன்றேகால் பாகை ஒருச்சாய்ந்திருக்கிறது. கிரகங்களைப்போலவே இதுவும் மேற்கிலிருந்து கிழக்காக சுற்றி நடக்கிறது. இந்த வால்வெள்ளியானது தற்காலங்களில் ஒரு சிறு வட்டமேகம்போல வாலின்றி விளங்கும். ஓரங்களைப்பார்க்க மையத்தில் அதிகப் பிரகாசமாயிருந்தபோதிலும், அதை வருத்தமின்றி பார்க்கப் போதுமானதல்ல. சூரியமண்டலத்தைச் சேர்ந்த மற்ற உலகங்



களுக்கு இது கொஞ்சமென்கிலும் இடையூறுசெய்கிறதில்லை. மற்றவைகளின் கவர்ச்சியால் இதின் நடையில் தடுக்கல் நேரிடுகிறதுண்டு. இந்த விசேஷத்தைக்கொண்டு, வால் வெள்ளிகளில் மிகுதியானவைகளைப்போல இதுவும் கட்டிப்பொருளாயிராமல் நீராவியின் சேர்க்கையாய் மாத்திரமிருக்குமென்று நிதானிக்க ஏதுவுண்டாகின்றது.

ஒளியின் தன்மையைத் தீர்மானிக்கிறதற்கு இது அநுகூலமானதினாலேயே இந்த வால்வெள்ளியை இவ்வளவாய்க் கவனிக்கிறோம். இதைக்கொண்டு ஒளியைக்குறித்துத் தெரியவந்தது என்னவென்றால், கிரகங்களைச் சூழ்ந்த வாயுகோளங்களேயன்றி மற்றும் வெளியெல்லாம் வெறுமையாயிராமல் ஈதர் என்னப்பட்ட ஒரு நுண்ணிய வாயுவினால் நிறைந்திருக்கிறதென்றுதான். அது அலைபோல அசைந்து ஒளி பரவுகிறதாம். மேற்படி மெல்லிய பொருள் கிரக ஓட்டத்துக்கு இடையூறு செய்யமாட்டாததென்றாலும், வால்வெள்ளியைப்போன்ற ஆவிப்பொருட்களுக்குக் கொஞ்சமேனும் தடுக்கல்செய்யாதிருக்கமாட்டாதே. அப்படியே எங்கி என்பவர் வெளியெல்லாம் வெறுமையென்று பாவித்துக்கொண்டு இந்த வால்வெள்ளி இத்தனைநாளில் திரும்புமென்று திட்டமாய்க் கணித்திருக்க, அது குறித்த காலத்துக்கு இரண்டு நாள் பிந்திவந்தது. அதினால் வெளியை நிரப்பியிருக்கிற நுண்ணிய வஸ்துவினாலே குறித்த பேதம் நேரிட்டிருக்கவேண்டுமென்று நிதானிக்க ஏதுவாயிற்று. ஆகிலும் இந்தத் தடுக்கலினாலே வால்வெள்ளி கடைசிவரையும் பிந்தாமல் தீவிரமாய்த் திரும்புமென்றும் தீர்மானிக்கப்பட்டது. எப்படியென்றால், வெளியை நிரப்பும் நுண்ணிய வாயு வால்வெள்ளியின் நடையைத் தடுக்கல்செய்ய, அதின் மையவிலக்குச் சத்து குறையும். அதனால் சூரிய கவர்ச்சி அதிகமாகி வால்வெள்ளி நாள் வட்டத்தில் சூரியனைக் கிட்டிவரும். ஆகவே அது சூரியனைச் சுற்றி நடக்கிற காலமும் வரவரக் குறைந்துபோகுமல்லவா? இது யதார்த்தமென்றால் இந்த வால்வெள்ளி கடைசியில் சூரியனில் விழுந்துபோகுமென்றுஞ் சொல்லலாமே. மேற்காட்டிய நியாயங்களை மற்ற வால்வெள்ளிகளுக்கும் பூமிமுதலிய கிரகங்களுக்குஞ் செலுத்தினால், சகல சிருஷ்டிகளுக்கும் முடிவுண்டு என்கிற சத்தியம் துலாம்பரமாகும். சங்கீதக்காரன் சர்வத்துக்கும் வல்லமையுள்ள தேவனை நோக்கி, "சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன், உம்முடைய கற்பனையோவென்றால் மகா விஸ்தாரம்" என்று சொல்வதினால் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் எத்தனை ஏராளமான காலம் நிலைத்திருந்தபோதிலும் சிருஷ்டி கர்த்தாவினால் சமஸ்தமும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று நன்றாய் உணர்ந்துகொள்ளலாம்.

பீலா என்பவர் பெயர் வழங்கிய வால் வெள்ளி 1772, 1806 ம் வருஷங்களிற் காணப்பட்டது. அது 1826 ல் காணப்பட்டபோது ஜர்மனிதேசத்து பீலா என்னும் சோதிசாஸ்திரி அதன் சுற்றோட்டத்தைக் கணித்து 1832 ம் ௵த்தில் திரும்புமென்று முன்னுரைத்தார். அந்தப்படிக்கும் நடந்தது. அது 2440 நாளில் சூரியனை ஒரு முறை சுற்றிக்கொள்ளுமாம். அதற்கு வாலுமில்லை. அத்தனை பெரிதுமல்ல. இந்த வால்வெள்ளியின் அயனம் பூகோளாயனத்துக்கு மிகவுஞ் சமீபமாயிருப்பதினாலே, 1832 ம் ௵த்தில் பூமி ஒரு மாசப்பயணம் முந்தியிருக்குமாகில் இரண்டும் ஒன்றையொன்று மோதியிருக்கும். அல்லது பூமி வால்வெள்ளியைக் கலைத்து அதை யூடுருவி நடந்திருக்கும்.

கூடிய அளவு திட்டமாய்த் தெரிந்திருக்கிற வால்வெள்ளிகள் இது தனே. வேறு இரண்டு வெள்ளிகளின் அயனங்களும் நடைகளும் கணிக்

கப்பட்டிருக்கின்றன. இவைகள் யதார்த்தமோ அல்லவோ என்று சொல்வதற்கு இன்னங் கொஞ்சக்காலம் கழியவேண்டும். இவ்விரண்டில் கடைசியானதைக் கணித்தவர் சர் ஈசாக்கு நியூற்றன். இந்த வெள்ளியின் வாலைப்பற்றி சரித்திரத்தில் பலமுறையுஞ் சொல்லியிருக்கிறது. வெள்ளி அடிவானத்திலிருக்கையில் அதன் வால் வானத்தின் உச்சமட்டும் பரவி நிற்குமாம்.

1770 ம் ௵த்தில் விநோதமான ஒரு வால்வெள்ளி காணப்பட்டதுண்டு. அது சுமார் ஐந்து வருஷத்துக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றிக்கொள்ளுமென்று கணித்திருந்தார்கள். ஆகிலும் அது குறித்த காலத்தில் திரும்பி வரவில்லை. இது தவறினதற்கு ஒரு முகாந்தரமுஞ் சொல்வார்கள். மேற்படி வால்வெள்ளி தன் ஓட்டத்தில் வியாழன் என்ற பிரமாண்டமான கிரகத்தை மிகவுங் கிட்டிப்போக நேரிட்டதினால், வியாழனுக்காவது அதின் சந்திரருக்காவது எவ்வளவும் இடையூறு நேரிடாவிட்டாலும், அவைகள் வால்வெள்ளியை அதின் வழக்கமான பாதையைவிட்டு தூரத் தள்ளிவிட்டனவென்றும், அதினாலேயே அப்புறம் காணப்படவில்லையென்றும் சொல்லிக்கொண்டார்கள். இந்த அபிப்பிராயம் எதார்த்தமாகில், வால்வெள்ளியின் ஜடம் மிகவும் நுண்ணியதாயிருக்கவேண்டுமே. எங்கி என்பவருடைய வால்வெள்ளி சூரியனைக் கிட்டும்பொழுது சிறுத்து, தூரப்படும்பொழுது திரும்பவும் பெரிதாகிக்கொள்ளுகிறதாம்.

நியூற்றன் என்பவர் 1680 ல் கணித்த மகத்துவமான வெள்ளியின் வாலானது இரண்டு நாளைக்குள்ளே வெள்ளியிலிருந்து தோன்றி பன்னிரண்டு கோடி மைல் நீளமாய்ப் பரவிவிட்டதாம். மேற்படி வால் சூரியனுக்கு நேர் எதிராய் அமைந்திருந்தபடியால் சூரியனே அது உண்டாகக் காரணமென்பார்கள். மேலும் 1769 ம் ௵த்தில் தோன்றின வெள்ளியின் வால் நாலு கோடி என்பது லட்சம் மைலும், 1811 ம் ௵த்திற் காணப்பட்ட வெள்ளியின் வால் பத்துக்கோடி என்பது லட்சம் மைலும் நீண்டிருந்தன.

கடைசியிற் குறிக்கப்பட்ட வெள்ளியின் விட்டம் 50,000 மைலாம். வால்வெள்ளிகளின் ஜடம் சூரியனின் முயற்சியால் தோன்றும் அவற்றின் வால்களால் நாள்வட்டத்தில் கரைந்துபோகுமென்றும், வெள்ளிகளின் திண்மைக்கவர்ச்சி அதைத் திரும்பச் சேர்த்துக்கொள்ள போதுமான பலமுள்ளதல்லவென்றும் சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

## BRITISH CHURCH HISTORY.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 2. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

அப்போஸ்தலர் சமையா சமையங்களில் மனிதருடைய அந்தரங்க நினைவுகளையுமறிந்து வெளியிடக் கூடியவர்களாயிருந்ததுபோலவே,



பின்னடக்குங் காரியங்களை முன்னுரைக்கவுஞ் சக்தியுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லையே. அவ்வாறே தீர்க்கதரிசன வரம் ஆதிக்கிறிஸ்தவர்களுக்குள் மிகவும் சாதாரணமாயிருந்ததென்று நினைக்கவும் நியாயமுண்டு. புதிய ஏற்பாட்டு ஆகமங்களில் தீர்க்கதரிசன வரம் என்பது பின் நடப்பவைகளை முன்னறிவிப்பதையே எப்பொழுதுங் குறிக்கிறதில்லை என்று தெரியுமே. வேத வாக்கியங்களின் பொருளை உணர்ந்து வியாக்கியானம்பண்ணுந் திறமையைக் குறிக்கிறதாயும் அப்படிச் சொல்லியிருக்கிறது. இந்தத் திறமை படிப்பினாலும் முயற்சியினாலும் ஒருவாறு உண்டாகக் கூடியதானாலும், துவக்கத்திலிருந்த விசுவாசிகள் அநேகருக்கு அற்புதமானவிதமாயும் அருளப்பட்டது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு தீர்க்கதரிசிகள் என்று பெயர் வழங்கியது. ஆதிச்சபைக்கு இதனிலும் அதிக அனுகூலமான வரமில்லையென்று சொல்லத்தக்கது. ஓயாமற் சபையிற் சேர்ந்துகொண்டிருந்த ஏராளமானவர்களைப் போதிக்க ஆட்கள் வேண்டும். ஆகையால் இந்தக் கருத்தின்படி தீர்க்கதரிசிகளானவர்கள் பின் நடப்பவைகளை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசிகளைப் பார்க்க அதிகமாயிருந்தார்களென்று நினைப்பது தப்பிதமாகாது. என்றாலும் பின்னடப்பவைகளை முன்னறிவிக்குஞ் சக்தியுள்ள தீர்க்கதரிகளும் ஆதிச்சபையிலிருந்தார்களென்பதும் நிசமே. மேற்சொல்லிய ஆகாப் என்பவனுக்கு அந்தச் சக்தியிருந்தது. அவன் கிலவுதியு ராயன் காலத்தில் சம்பவிக்கவிருந்த பஞ்சத்தை முன்னறிவித்தான். அதினால் யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்கள் வருத்தப்படுகிறார்களென்று அந்தியோகியாவிலுள்ள சகோதரர் கேள்வியாகி, அவர்களுக்காக கொஞ்சம் பணஞ் சேர்த்து அதை சவுல் பருனபா வசமாய்க் கொடுத்து எருசலேமுக்கு அனுப்புவித்தார்கள்.

யூதர்கள் இப்பொழுது திரும்பவும் தங்கள் சொந்த ராசாவினால் ஆளப்பட்டார்கள். அகிரிப்பா ஏரோதுவுக்கு கலிக்குலா ராயன் ஒரு சிறு நாடு மாத்திரங் கொடுத்திருந்தான். கிலவுதியு ராயன் பட்டத்தில் வந்தபோது யூதேயாவையும் சமாரியாவையும் அதோடு சேர்த்துவிட்டபடியால், அகிரிப்பாவினிராச்சியம் கொஞ்சங்குறைய அவன் பேரனான மகா ஏரோதுவினிராச்சியத்துக்குச் சரியாயிற்று. அகிரிப்பா உள்ளபடி ரோமருக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தபோதிலும், யூதர்கள் ஓர்வகையான சுயாதீனம்பெற்றிருந்தார்கள். அவர்கள் பிறதேசத்தாரால் ஒடுக்கப்படாமல் சற்று சுகமாயிருக்கும்போதெல்லாம் கிறிஸ்தவர்களை ஒடுக்க வகைபண்ணுகிறார்கள். அகிரிப்பாவும் இந்த விஷயங்களில் யூதர்களுக்கு அனுசரணையாயிருப்பதே தனக்கு அனுகூலமென்று எண்ணியிருப்பானே. அவ்விதமே சவுலும் பருனபாவும் அந்தியோகியாவிலிருந்து வந்து சேர்ந்தபோது, அவன் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்தான்.

இக்காலத்தில் அப்போஸ்தலரில் இரண்டுபேர் எருசலேமிலிருந்ததாகத் தோன்றுகின்றது. இப்புதிய மதஸ்தருக்குத் தலைவராயிருந்த அவர்களையே கைவசப்படுத்துவது அவசியமென்று ஏரோது நினைத்து, பேதுருவும் இயோவானின் சகோதரனான இயாக்கோபுமாகிய அவ்விருவரையும் பிடித்து, இயாக்கோபை உடனே சிரச்சேதம்பண்ணுவித்தான். அப்போஸ்தலரில் முதலாவது கொலையுண்டவன் இந்த யாக்கோபுதானென்று தோன்றுகிறது. இதற்குமுன் அவனுடைய சரித்திர வரலாறு ஒன்றும் நிச்சயமாய்த் தெரியாது. அவன் இதுவரையில் தூரதேசங்களுக்குப் பிரயாணஞ்செய்தானென்று நினைக்க இடமில்லை.

யூதேயாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இவ்விய ஊழியத்தைச் சாக்கிரதையாய் நடத்திவந்திருப்பான்.

பஸ்காப்பண்டிகை முடிந்தபின் பேதுருவைச் சற்று பகிரங்கமாய்க் கொலைசெய்விக்கக் கருதியிருந்தான். பண்டிகைக் காலத்தில் பிறதேச யூதர்கள் பட்டணத்தில் ஏராளமாய் வந்திருப்பார்களே. மேலும் மேலே ஓரிடத்திற் குறித்திருக்கிறபடி பண்டிகை நாட்களே கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துகிற நாட்கள். ஆகிலும் இந்தச் சமையத்தில் ஏரோதுவின் நோக்கம் அவமாயிற்று. பேதுரு சிறைச்சாலையிலிருந்து அற்புதமாய் விடுதலையாகி எருசலேமிலிருந்து தப்பிக்கொண்டான். ஏரோது அநியாயமாய்ச் சிந்தின குற்றமில்லாத ரத்தத்துக்காக சீக்கிரம் அவனிடத்திற் பழிவாங்கப்பட்டது. தேவதூதன் அவனை யடிக்க, மிகவும் அருவருப்பான கொடிய வியாதியினால் சிறிதுநாளைக்குள் மாண்டுபோனான். இதனிடையில் சவுலும் பருனபாவும் தாங்கள் கொண்டுவந்திருந்த திரவியத்தை அவர்களுக்கு ஒப்புவித்துவிட்டு அந்தியோகியாவுக்குத் திரும்பிவிட்டார்கள்.

பஞ்சம் இன்னும் நிவர்த்தியாகவில்லை. அதுவும் கிறிஸ்தவர்களுக்கு அநுகூலமாகவே இருந்திருக்கலாம். எப்படியெனில், யூத அதிகாரிகள் தங்கள் தேசத்துக்கு நேரிட்டிருந்த நிர்ப்பந்தத்தை நீக்கும் முயற்சியாயிருந்திருப்பார்களே. அதன்றியும் கிறிஸ்துமார்க்கத்து எதிரிகளில் சிலரொன்றிலும், மேற்படி மார்க்கம் ஒருவரையொருவர் சிநேகிக்கவும் துன்பகாலத்தில் ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்யவும் போதிக்கிற போதனையைக் கவனித்தும், கிறிஸ்தவர்கள் அதற்கிசைந்து ஒழுகிற ஒழுக்கத்தைப் பார்த்தும் அதை மெச்சிக்கொள்ளாதிருப்பார்களோ? கிறிஸ்தவர்கள் துன்பப்பட்ட தங்கள் சகோதரர்களுக்கு சில வருஷக்காலமாய் தர்ம சகாயம்பண்ணி தங்கள் உதார குணத்தை வெளிப்படுத்திக்கொண்டே வந்தார்கள். மேலும் அகிரிப்பாவின் மரணத்துக்குப்பின் யூதேயாவிலுள்ள சபைகளுக்கு துன்பம் நேரிடவில்லையென்று நினைக்கவும் இடமுண்டு. அகிரிப்பாவின் மகன் அகிரிப்பா, தகப்பன் மரித்தபொழுது பதினேழு வயசாய் மாத்திரமிருந்தபடியால், அவனுக்கு இராச பட்டங் கிடைக்கவில்லை. யூதேயா திரும்பவும் ரோம துரையால் ஆளப்பட்டது. முதல் வந்த துரைக்கு கஸ்பியு பேது என்றும், அப்புறம் வந்தவனுக்கு திபேரியு அலக்சாந்தர் என்றும் பெயர். இவர்கள்பேரில் யூதர்கள் மிகவும் வெறுப்படைந்திருந்தனாலும், ரோமர் பேரிலிருந்த பகை இப்பொழுது தேசமெங்கும் வியாபிக்கத் தொடங்கியபடியாலும், யூத அதிகாரிகள் கிறிஸ்தவர்களைச் சும்மா விட்டிருப்பார்களென்றும் நினைக்கலாகும்.

---

## 8. அதிகாரம்.

பவுலுவின் முதலாம் பிரயாணம்—புறத்தேசத்தாரான கிறிஸ்தவர்களைப்பற்றி அந்தியோகியாவிலுண்டான பிரிவினை—எருசலேமிற் கூடிய பொதுவான சங்கம்—பவுலுக்கும் பேதுருவுக்கும் நேரிட்ட விபரீதம்.

---

சவுலினுடைய சரித்திரத்தில் நாம் இப்பொழுது தொடங்கி விவரிக்கப்போகிற பகுதி மிகவும் முக்கியமானது. சுவிசேஷ பிரபலியத்



தைக்குறித்தும் அவ்வாறே சொல்லத்தக்கது. அப்போஸ்தலரில் மிகுதியானவர்களுடைய பிரயாசங்களைப்பற்றி அவ்வளவாய்ச் சொல்லப்படாவிட்டாலும், அவர்கள் தங்கள் ஆண்டவருடைய கற்பனைக்கிசைவாய் தூரதேசங்களிற்போய் பிரசங்கித்தார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை. அவர்களெல்லாருமல்லாவிட்டாலும், மிகுதியானவர்கள் இக்காலத்தில்தான் அங்கங்கே பிரயாணப்பட்டுப்போயிருப்பார்களென்று தோன்றுகிறது. இதுவரையும் கலிலேயா சமாரியா நாடுகளுக்குள்ளேயே தங்கள் ஊழியத்தை நடப்பித்துக்கொண்டுவந்தார்கள். இப்பொழுதோ மேற்படி நாட்டுச்சபைகள் ஒழுங்காய் ஸ்தாபகமாகியிருந்தபடியாலும், உலகத்தின் மற்றப் பகுதிகளில் கிறிஸ்துமார்க்கம் அதி தீவிரமாய் விர்த்தியாகிக்கொண்டு வந்தபடியாலும், அப்போஸ்தலர் மற்றிடங்களுக்கும் பிரயாணஞ்செய்வது மிகவும் தகுதியாயிற்று. அவர்கள் இன்னமும் தாமதித்திருப்பார்களாகில், புதிதாய் கிறிஸ்துமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சுவிசேஷ உபதேசங்களோடு தப்பறைகளையும் அநுசரிக்க ஏதுவாகும். நாஸ்திகருடைய கள்ள உபதேசங்கள் பிரபலியமாகியிருந்த இடங்களில் விசேஷமாய் அப்படி நடக்குமல்லவா. மேலும் அப்போஸ்தலர் மாத்திரந்தானே ஆவியின் அற்புத வரங்களை மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடியவர்களாயிருந்தார்கள்.

இக்காலத்திலேயே புறத்தேசத்தாருக்கு விசேஷமாய் அப்போஸ்தலனான சவுல் தன் முதற் பிரயாணத்தைத் தொடங்கினது. சவுலுவையும் பருனபாவையும் இந்த வருத்தமான வேலைக்காகப் பிரித்து அனுப்பும்படி அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளுக்கு தேவ உத்தரவு பிறந்தது. அப்படியே அவ்விருவரும் புறப்பட்டு சீப்புரு தீவுக்கு வந்தார்கள். அங்கே சில வருஷங்களுக்கு முன்னேயே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதினால் இவ்வப்போஸ்தலருடைய பிரயாசம் நன்றாய்ப் பயன்பட்டது. அத்தீவின் பிரதான துரையும் ரோம அதிகாரியுமான செர்கியு பவுல் குணப்பட்டது அவ்விடத்தில் நடந்த முக்கிய சங்கதி. அப்போஸ்தலர் நடப்பித்த அற்புதங்களே அதற்கு அநுகூலம்பண்ணினது. அந்தத் தீவு முழுமையையும் கடந்துபோன பிறகு, அவர்கள் அங்கிருந்து கப்பலேறி எதிரிலிருந்த தேசம் போய்ச் சேர்ந்து பிசிதியா லிக்கோவொனியா பம்பிலியா முதலிய நாடுகளில் பல சபைகளை ஸ்தாபித்தார்கள். அவர்கள் போனபோன இடத்திலெல்லாம் புறத்தேசத்தார் சுவிசேஷத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். யூதரோ முரட்டாட்டங் காண்பித்து எதிர்த்து நின்றார்கள். கூடியபொழுதில்

பலமுறையும் அவர்களுக்கு மோசம் நேரிட்டது. கூடியபொழுதில் வேறிடங்களுக்கு ஒடி தப்புவித்துக்கொண்டார்கள். கூடாத வேளைகளில் அற்புதமாய் சத்துருக்கள் கையினின்று காப்பாற்றப்பட்டார்கள். யூதர்கள் ஓயாமல் எதிர்த்து முறட்டாட்டஞ்செய்துகொண்டே வந்தமையால், அப்போஸ்தலரிருவரும் தாங்களினிமேல் புறத்தேசத்தாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப்போகிறோமென்று தங்கள் நோக்கத்தை பகிரங்கமாய்த் தெரியக் காட்டினார்கள். இந்தப் பிரயாணத்தில்தான் சவுல், தனக்கு பவுல் என்ற பெயரை வழங்கத் தொடங்கினானென்று தோன்றுகிறது. தன் தேசஸ்தரில் அநேகருக்குள் வழக்கமாயிருந்தபடி அப்போஸ்தலனுக்கு அவ்விரண்டு பெயரும் எப்பொழுதுமிருந்தாலும் இருந்திருக்கலாம். அல்லது அவன் அஞ்ஞான தேசங்களில் பிரயாணம்பண்ணி திரிந்த காலங்களில் ரோமபேரை வைத்துக்கொள்வது நல்லதென்று அப்படிச் செய்தாலும் செய்திருக்கலாம்.

ஆகையால் இதுமுதல் சவுல் என்ற பேரை விட்டுவிடுவோம். சவுல் என்ற பேர் வழங்கினபொழுது அவன் சபையைத் துன்பப்படுத்தினவன். பவுல் என்னும் பேரால், அவர் சிலுவையின் உபதேசத்தைப் பிரசங்கித்து, எக்காலத்திலுமுள்ள தேவபக்தர்களின் விசுவாசத்துக்கும் நம்பிக்கைக்கும் ஆதாரமாகும் நிருபங்களையும் எழுதினாரே.

உத்தேசம் 45 ம் ௵த்தில் பவுலும் பருனபாவும் சின்ன ஆசியாவின் இத்தென்னாடுகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்களென்று நினைக்கலாகும். அவர்கள் முன் சீப்புரு தீவிலிருந்து வந்து கரைபிடித்த பெருகாப் பட்டணத்துக்குத் திரும்பி மறுபடியுங் கப்பலேறி அந்தியோகியாப் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் நடப்பித்த கிரியைகளை யறிவித்தபொழுது உண்டான வாக்குவாதத்தைக் கவனிக்குமிடத்து, கொர்நேலியு என்பவனுடைய ஞானஸ்நானத்தினால் புறத்தேசத்தாரான கிறிஸ்தவர்களுடைய காரியம் தீர்மானமாகவில்லையென்று மேலே காட்டிய ஓர் குறிப்பு எதார்த்தமென்று விளங்கும். அந்தியோகியாச் சபை எந்தவிதத்திலும் எருசலேம் சபையோடு சம்பந்தப்பட்டிருக்கவில்லை. ஆதலால் துவக்கமுதலே அதில் புறத்தேசத்தாருஞ் சேர்ந்திருப்பார்கள். பவுலும் பருனபாவும் இப்பொழுது போய் வந்திருந்த பிரயாணத்தில், புறத்தேசத்தானை ஒருவன் கிறிஸ்தவனாகுமுன்னாவது ஆனபின்னாவது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள அவசியமேயில்லையென்று திட்டமாய்க் காட்டியிருந்தார்கள். ஆயினும் இது எருசலேம் சபையிலுள்ள மிகுதியானவர்களுடைய கொள்கையல்ல. இவர்களிற் சிலர் இக்காலத்தில் அந்தியோகியாவுக்குப்போய், புறத்தேசத்தார் மோசேயின் நியாயப்பிரமாணத்திற் காட்டிய சடங்காசாரங்களையெல்லாங் கைக்கொள்ள வேண்டியதல்லாமலும், அவர்கள் இரட்சிக்கப்பட விரும்பினால் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளவே வேண்டுமென்றும் போதித்து புறத்தேசத்தாரான கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த கலக்கத்தை யுண்டுபண்ணினார்கள். இந்தப் போதனை கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசத்தினாலே இரட்சிப்பைக் கூறிய சுவிசேஷ உடன்படிக்கைக்கு முற்றும் விரோதமென்று சொல்லவேண்டியதில்லையே.

யூதர்களைப் பிரியப்படுத்திக்கொள்ளும்பொருட்டு, மோசேயினாற் கற்பிக்கப்பட்ட நியம நிஷ்டைகளிற் சிலவற்றைக் கைக்கொள்ள உடன்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டாலன்றி, விசுவாசத்தினாலே மாத்திரம் நீதிமான்களாகக் கூடாதென்று கேட்டபொழுது அவர்கள் நம்பிக்கையெல்லாம் அவமாய்ப்போனதாகத் தோன்றுமே. பவுல் அப்போஸ்தலன் ஒரு நிமிஷமேனும் இவ்வுபதேசத்தை ஏற்றுக்கொள்ளுவாரோ? விசுவாசத்தினாலே நீதிமானாகவேண்டுமென்ற உபதேசத்தைப் புறத்தேசத்தாருக்குப் பிரசங்கிக்கும்படி தேவனாற் கற்பனையடைந்திருந்தாரே. சில நாட்களுக்கு முன் புறத்தேசத்தாரில் அநேகருக்கு, யூதர்களுக்கு அருளப்பட்ட அற்புதவரங்களையெல்லாம் கொடுத்துமிருக்கிறாரே. ஆகையால் இந்தக் காரியம் கிறிஸ்து சபை முழுமையினாலும் உறுதியாய்த் தீர்மானிக்கப்படவேண்டியது எவ்விதத்திலும் அவசியமே. இவ்விஷயத்தில் அப்போஸ்தலருடைய அபிப்பிராயமும் தெரியவேண்டும். அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் இப்பேர்ப்பட்ட சமயத்தில் எருசலேமிலுள்ள தங்கள் சகோதரரை நோக்குவதும் இயல்புதான். அப்போஸ்தலர் இப்போது சிறிதுகாலமாக எருசலேமில் நிலையாய் வாசம்பண்ணாவிட்டாலும், அவர்களில் சிலர் வேளாவேளை அங்கே போக்குவரவாயிருந்



தார்கள். புறத்தேசத்தார் குணப்படுதலுக்கு முக்கிய கருவிகளாயிருந்த பவுலும், பருனபாவும் எருசலேமுக்குப்போய் மேற்படி விவாதத்தைப் பேசித் தெளிந்து முடிவான தீர்மானங்கொண்டுவரும்படி அவ்விருவரையும் நியமித்து அனுப்பினார்கள்.

இந்தக் காரியமாக கூடிவந்த சங்கமானது அப்போஸ்தலருடைய சீவகாலத்தில் நடந்த முக்கிய சங்கதிகளில் ஒன்று. பேதுருவும், யோவானும் இக்காலத்தில் எருசலேமிலிருந்தார்கள். ஆகையால் பவுலும், பருனபாவும் வந்த காரியத்தைப் பூர்த்தியாய்ப் பேசித் தெளிந்துகொள்வதற்கு அனுகூலமான சமையந்தான். பவுல் தான் அருமையாகக்கொண்டிருந்த இந்த விஷயத்தை நிலைநிறுத்திக்கொள்ளும்படிக்கு, தன் மன உறுதியையும் வைராக்கியத்தையுமெல்லாம் பிரயோகிக்கவேண்டியதாயிற்று. பவுலோடு கூடப் போனவர்களில் தீத்தும் ஒருவன். அவன் அஞ்ஞானியாயிருந்து குணப்பட்டவன். யூதரில் மத வைராக்கியங்கொண்ட சிலர் தீத்து விருத்தசேதனம்பண்ணப்படவேண்டுமென்று நின்றார்கள். பவுல் அதற்குப் பிடிவாதமாய்த் தடைசெய்ததினால், தீத்து விருத்தசேதனம்பண்ணப்படவில்லை. அதன்பேரில் விசுவாசிகளெல்லாரும் கூடியிருந்து காரியத்தைப் பேசித் தெளிந்தார்கள். புறத்தேசத்தாரான கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளவும், நியாயப்பிரமாணத்தின் சடங்காசாரங்களைக் கைக்கொள்ளவும் அவசியமேயில்லையென்று, பவுல் சொல்லக்கூடிய தெளிவாய் பேதுரு நியாயங்காட்டி, தன் அபிப்பிராயத்தை வெளியிட்டதின்பேரில் சங்கத்தாரெல்லாரும் அதற்கிணங்கிப்போனபடியால், எருசலேம் சபைக்கு முதலாளியாயிருந்த இயாக்கோபு அப்போஸ்தலன் தீர்மானத்தையெழுத, அதை பவுல், பருனபா என்பவர்கள் வசத்திற் கொடுத்தனுப்பினார்கள். இந்தத் தீர்ப்பினால் விருத்தசேதனத்தைப்பற்றிய வாக்குவாதம் முற்றும் தீர்ந்தது. புறத்தேசத்தானை எவனும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளவேண்டியதுமில்லை. இரட்சிப்புக்கு அவசியமாக நியாயப்பிரமாணத்தின் எந்தப் பகுதியையும் கைக்கொள்ளவேண்டியதுமில்லை. ஆனால் புறத்தேசத்தார் யூதர்களுக்கு மனமடிவுண்டாகத்தக்கவிதமாய் நடவாதிருக்கும்படி மாத்திரம் கற்பிக்கப்பட்டார்கள்.

———— 0 ————

## பழையவேற்பாட்டுச் சரித்திர ஆகமங்களின்

### உண்மையை ரூபிக்கும் நோக்கமில்லாத இசைவுக் குறிப்புகள்.

(தொடர்ச்சி.)

XXIV. ஆகாப் ஏசபேலை விவாகம்பண்ணினது இஸ்ரவேலுக்குமாத்திரமல்ல, யூதாவுக்கும் கெடுதியாயிருந்தது. ஏனெனில், யூத இராஜ்யத்தில் ஆகாபுக்குப் பிந்தின தலைமுறையில் இப்படிப்பட்ட காரியமே நடந்து, இப்படிப்பட்ட கெடுதிக்கே காரணமாயிருந்தது. ஆகாப் அஞ்ஞான ஸ்திரீயை விவாகம்பண்ணினதினால், இஸ்ரவேலரில் பாதிப்பேரை அஞ்ஞானிகளாக்கிவிட்டதுபோல, யூதாவில் யோராம் ஏசபேலின் குமாரத்தியான அத்தாலியாளை விவாகம்பண்ணினான். மகள் சகலவிதத்திலும் தாயைப்போலவேயிருந்தாள். அதுமுதல் யூதாவும் விழத் தொடங்கிற்று. இஸ்ரவேலைப்போலவே விழுந்தது. அந்தக்

காரணத்தாலேயே விழுந்தது. ஆகாபைப்பற்றிச் சொல்லியிருக்கிற
தென்ன! "ஆகாபை அவன் பெண்சாதியாகிய ஏசபேல் இழுத்துவிட்
டபடியே கர்த்தரின்பார்வைக்குப் பொல்லாப்பானதைச்செய்யத் தன்
னை விற்றுப்போட்ட அவனைப்போல ஒருவருமில்லை. 1 இரா. 21. 25.
அவன் செய்த கலியாணத்தால் வந்த பலன் இதுவே. யோராமைக்
குறித்தும் இப்படியே சொல்லியிருக்கிறது. "அவன் இஸ்ரவேல் இரா
சாக்களின் வழியில் நடந்து ஆகாபின் வீட்டார் செய்ததுபோல செய்
தான். ஏனெனில் ஆகாபின் குமாரத்தி அவனுக்குப் பெண்சாதியாயி
ருந்தாள். கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்."
2 இரா. 8. 18. இவனுடைய கலியாணத்தால் வந்த பலனிது. இந்த
இரண்டு பெண்பிள்ளைகளும் தங்கள் புருஷர் ஆண்ட இராஜ்யங்களுக்
குச் சாபமாயிருந்தார்கள். ஏசபேலினால் இஸ்ரவேலுக்கு வந்த கேவ
லத்தைப் பார்த்தோம். இதுவரையில் வாழ்ந்திருந்த யூத இராஜ்யத்
திற்கு அவளுடைய குமாரத்தியாகிய அத்தாலியாளால்வந்த கேடு
இன்னதென்று இப்பொழுது விசாரிப்போமாக. இப்படி விசாரிக்கும்
போது, இந்தச் சரித்திரம் உண்மையுள்ளதென்று ரூபிப்பதே என்
நோக்கம். யோசபாத்து ஆகாப் என்பவர்களுடைய குடும்பத்தில் விவா
கசம்பந்தம் நடந்துவந்தது நிச்சயமென்று ரூபிக்கத்தக்க ஒரு குறிப்
பை இங்கே எடுத்துக் காண்பிப்பேன். அது அற்பமாயிருந்தாலும் உண்
மையை ஸ்தாபிக்கிறதாயிருப்பதால் அதை விட்டுவிடுகிறது சரியல்ல.
வேத உதாரணமென்னும் பொக்கிஷத்தை இப்படிப்பட்ட குறிப்புகள்
பெருக்கிப் பெரிய காரியங்களில் மாத்திரமல்ல, அற்பத்திலும் வேத
எழுத்துகளுக்குச் சத்தியமே ஆதாரமென்று ரூபிக்கும்.

யூத இராசனின் மகன் இஸ்ரவேலின் இராசனின் குமாரத்தியை வி
வாகஞ்செய்துகொண்டதாய் வாசிக்கிறோம். இதற்கு இசைவாகச் சில
வருஷங்களாய் இவ்விரண்டு குடும்பத்தாருடைய பெயர்களும் ஒன்று
போலிருக்கிறது. இதினாலேயே அக்காலச் சரித்திரம் சிக்குண்டிருக்
கிறதாகத் தோன்றுகிறது. ஆகாபுக்குப் பிறகு அவன் மகனாகிய அகசி
யா இராசாவானான். யோராமுக்குப் பின் பட்டத்திற்குவந்த அவன்
மகன்பேரும் அகசியாதான். இஸ்ரவேலின் இராசனாகிய அகசியா
மரித்தபிறகு யோராம் என்பவன் இராசாவானான். அக்காலத்தில் யூதா
வை ஆண்டவனுக்கும் யோராம் என்ற பேரே இருந்தது. ஆகாபின்
குடும்பம் அழிந்து, ஏகூ இராசாவாக ஏற்படுத்தப்படாவிட்டால் இப்
படிப் பேர்கள் கெடுகிலும் ஒன்றுபோலவேயிருக்கும். ஆயினும் சரித்
திரம் உண்மையுள்ளதென்பதற்கு இதுவே போந்த குறிப்பு. இப்ப
டிப் பேர்கள் ஒன்றுபோலிருக்கிறதைப்பற்றியாவது, அதுகளின் கார
ணத்தைப்பற்றியாவது எங்குஞ் சொல்லியிராவிட்டாலும், அந்த இரு
குடும்பத்திற்கும் உண்டாயிருந்த விவாக சம்பந்தமே இதற்குச் சரியா
ன காரணமென்று நமக்கு உடனே தெரியவரும். அந்தச் சம்பந்தம்
அவ்வளவு நெருங்கினதாயிருந்தது.

XXV. யூதச்சனங்களுக்கு இந்த விவாகத்தால் உண்டான வருத்தம்
இன்னதென்று வேதவசனத்தைக்கொண்டு ஆராய்வது அவசியம்.
2 இராசா 8 18ல் யோராமை அக்கிரமம் செய்யத் தூண்டினவன் இன்
னானென்று சொல்லியிருக்கிறது. 22ம் வசனத்தில் ஏதோமியர் மருள
விழுந்தார்களென்று சொன்னபிறகு, லிப்னா பட்டணமும் மருளவிழுந்



ததாகச் சொல்லியிருக்கிறது. இதற்கு முகாந்தரம் ஒன்றும் சொல்
லப்படவில்லை. அவ்வளவுமாத்திரஞ் சொல்லப்பட்டிருக்கிறது. நாளா
கமப் புஸ்தகத்தைப் பார்க்கும்பொழுது, இதற்குக் காரணம் இன்ன
தென்று தெரியவரும். திட்டமாய்ச் சொல்லாவிட்டாலும், "அவன்
தன் பிதாக்களின் பராபரனை விட்டபடியினாலே அக்காலத்திலே லிப்
னா பட்டணமும் அவன் கையின் கீழிருந்து மருளவிழுந்ததென்று
வாசிக்கிறோம். 2 நாளா. 21. 10. ஏசபேசலின் வார்த்தையைக் கேட்டு
ஆகாப் துன்மார்க்கமாய் நடந்ததுபோல, அவளுடைய குமாரத்தியா
கிய அத்தாலியாளின் வார்த்தைக்கு இடங்கொடுத்து, யோராம் தன்
இராஜ்யத்தில் விக்கிரகாராதனையை ஏற்படுத்தினான். லிப்னா மருள
விழ இதுவே காரணம். ஏனெனில் லிப்னா யூதாவின் பட்டணங்களில்
ஒன்று. யோசுவாவின் புஸ்தகத்தில் நாம் பார்க்கிறபடி இது ஆரோ
னின் குமாரராகிய ஆசாரியருக்குக் கொடுக்கப்பட்டது. யோசுவா
15. 42: 21, 13. ஆகையால் அந்த ஊரார் மெய்த்தேவனைத் தள்ளி,
அதற்குப் பதிலாக, சீதோனியருடைய அருவருப்பை வணங்கும்படி
சொன்ன இராசாவின் அதிகாரத்தை அசட்டைசெய்து அவனிடத்திலி
ருந்து மருளவிழ மூர்க்கிக்கொண்டார்கள். லிப்னா மருளவிழுவதற்குக்
காரணமாயிருந்த இந்த முகாந்தரம், அறிந்தகொண்டபின் தெளிவா
யிருந்தாலும், அறியுமுன் இலேசில் விளங்கக்கூடியதல்ல. லிப்னா
மருளவிழுந்ததென்று சொல்லியிருந்தாலும், பாகால் வணக்கம் ஏற்
பட்டதே அதற்கு முகாந்தரமென்றாவது, அத்தாலியாளை விவாகஞ்
செய்தது அதற்கு மூலகாரணமென்றாவது மற்றநேக பட்டணங்களி
ருக்க லிப்னா இப்படி மூர்க்கிக்கொள்ளவேண்டிய நியாயமின்னதென்
றாவது எங்குஞ் சொல்லியிருக்கவில்லை. ஏனெனில் லிப்னா எங்கிருந்த
தென்றும், அது எப்படிக்கொத்த பட்டணமென்றும், அதின் குடிகள்
எப்படிப்பட்டவர்களென்றும் இராசாக்கள், நாளாகமம் என்ற புஸ்த
கங்களைமாத்திரம் வாசிப்பவர்களுக்குத் தெரியாது. யோசுவாவிலுள்
ள இரண்டொரு குறிப்புகளைக் கவனியாவிடில் ஒருபோதும் இதை
அறிந்துகொள்ளமாட்டார்கள். நடவாததை எழுதுகிறவன் இப்படி
எழுதுவானா!

XXVI. பாகால் விக்கிரகாராதனையையிட்டு ஆசாரியருக்கு உண்டா
ன எரிச்சலே லிப்னா மருளவிழுவதற்குக் காரணமாயிருந்ததென்பதை
அக்காலத்தில்நடந்த வேறு சரித்திரங்களால் அறியலாம். ஆகாப்போ
டு சம்பந்தம் கலக்கும் காலம்வரையில் யூதா மெய்த்தேவ ஆராதனை
யில் உண்மையுள்ளதாயிருந்தபோதிலும், பிறகு விக்கிரகாராதனையில்
வீழ்ந்து கெட்டுப்போனார்களென்றும், இதினிமித்தமே தேவ பணிவி
டைக்காரர் அதிக மனஸ்தாபமடைய ஏதுவிருந்ததென்றும் வேறு சங்
கதிகளால் தெரிய வருகிறது. அத்தாலியாளுடைய பேரனாகிய யோவ
காஸ் எருசலேம் தேவாலயத்தைப் பழுதுபார்க்க எத்தனப்பட்ட
போது, அவளுடைய அக்கிரமச் செய்கைகள் தற்செயலாய் வெளிப்
பட்டது. தேவாலயத் தட்டுமுட்டுகளைப் பாகால் வீட்டுக்குக் கடத்தி
னதுமன்றி, தேவாலயத்தின் மதில்கள்முதலாய் அநேக இடங்களில்
சேதப்பட்டிருந்தபடியால், அதற்கென்று சேகரித்த பணங்களை தே
வாலயத்தை அலங்கரிக்கிறதற்காகவல்ல, கல், மரம் முதலானவைக
ளுக்காகச் செலவிடவேண்டியிருந்தது. மேலும் 2 நாளா. 24. 14ல்

யோய்தாவின் நாளெல்லாம் நித்தம் கர்த்தருடைய வீட்டிலே தகனப் பலிகளைச் செலுத்திவந்தார்களென்பதைப் பார்க்கும்போது, அத்தாலியாளுடையகாலத்தில் பலிகளேமுதலாய் நடந்தேறவில்லையென்று நாம் எண்ண இடமுண்டு. பராபரன் தெரிந்துகொண்ட யூதாக்கோத்திரமும், அவர் சிநேகித்த சீயோன் பருவதமும் கர்த்தருடைய ஊழியத்தில் குளிர்ந்துபோனபடியால், உண்மையானபட்டணம் வேசியாய்ப் போனதுபோலிருந்தது. யோராம், அகசியா, அத்தாலியாள் இவர்களுடைய காலத்தில் யூதாவின் நிலைமை இப்படியே இருந்தது. காரியமிப்படியிருக்க, யூத இராசாங்கத்திற்குப் பாத்திபப்பட்ட யோவாஸ் கொலைபாதகியான தன் பேத்திகைக்குத் தப்பி, அத்தாலியாளுடைய அரண்மனைக்குச் சமீபத்திருந்த கர்த்தருடையவீட்டில் தன் மாமியாரால் போஷிக்கப்பட்டுவந்தான். அத்தனை சமீபமாய் தனக்கு ஒரு சத்துரு காக்கப்பட்டுவந்ததை அத்தாலியாள் அறியாதே போனாள். பிரதான ஆசாரியன் அவன் சவரக்ஷணைக் கர்த்தாவும், ஆசாரியர்கள் அவன் பக்ஷத்தாருமாயிருந்தார்கள். அத்தாலியாளைத் தள்ளி, மயங்கிக்கிடந்த கர்த்தருடைய சனங்களுக்குத் தலைமையாக யோவாசை நேமகஞ்செய்தார்கள். ஆசாரியராலேயே அவன் சிம்மாசனம் நிலைவரப்பட்டது. சதி சதியென்று அவள் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே சிம்மாசனத்திலிருந்து தள்ளுண்டாள். தாயைப்போல சீவனம்பண்ணினபடியால், தாயைப்போல் தன் வீட்டிலேயே குதிரைக் குளம்புகளின் கீழ் விழுந்து மடிந்தாள். 2 இராசா 11. 16. பதினான்கு வருஷத்திற்கு முன்னே லிப்னா மருளவிழுந்ததினாலுண்டான கலகம் இதிலே முடிவடைந்தது. இவ்விரு சங்கதிகளுக்கும் நடுவான காலத்தில் பாகாலைச் சேவித்தவர்களுடைய அக்கிரமம் நிறைவடைந்தது.

இதை வாசிக்கிறவனாவது, சரித்திரக்காரன் இச்சங்கதிகளை நோக்கத்தோடு ஒன்றை முன்னும் மற்றொன்றை பின்னும்வைத்து எழுதினானென்றுசொல்ல இடமுண்டா? முதலாவது ஒரு பட்டணம் கலகமெழும்பினதை தற்செயலாய் எழுதி, அதின் வகை காரணமுதலானவைகள் ஒன்றும் சொல்லாமல், யூத இராஷியத்தின் சங்கதியை முற்றிலும் விட்டு, இஸ்ரவேலின் காரியங்களைக்குறித்து எழுதி, பிறகு ஆசாரியரால் உண்டான பெரிய கலகத்தைத் தெரியப்படுத்தினவன் முதலிலும் கடைசியிலும் தான் எழுதின சங்கதிகள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை வாசிக்கிறவர்கள் கவனித்து, அதில் காணப்படும் நோக்கமில்லா இசைவினால் சரித்திர உண்மையை அறிந்துகொள்வார்கள் என்ற நோக்கத்தோடு இப்படி எழுதியிருப்பானோ? இப்படியாராகிலும் சொல்லுவார்களா? இந்த நோக்கத்தோடேயே எழுதினானென்று சொல்வதும் நம்புவதும் கூடாதகாரியம்.

இவ்விதமாய் இஸ்ரவேலிலும் யூதாவிலும் விக்கிரகாராதனை உண்டான விதமும், அதினால் அவர்களுக்கு வந்த அழிவையும் பார்க்கிறோம். காரணத்தைக்கொண்டு காரியத்தை ஆண்டவர் இயல்பாய் நடத்துகிறார். அவருடைய தண்டனைகள் நமது பாவத்திற்குரியபலன்தான். அவர்களுடைய பாவங்களென்ன? எரோபெயாமின் கன்றுக்குட்டிகளும், பாகால் தோப்புகளுமே. இந்தப் பாவத்திலிருந்து நல்ல இஸ்ரவேலருடைய வெறுப்பும், உள்ளுக்குள்ளான குழப்பமும், தேவாராதனைக்குத் தடையும், சன்மார்க்கக் குறைவும் உண்டாயிற்று. இவைகளாலே சில தலைமுறைகளுக்குள்ளாக சருவ நாசம் நேரிட்டது. இந்த இரு இராஷியங்களிலும் அழிவு ஒரேவிதமாய்த் தொடங்கி



நடந்தேறி சம்பூரணமடைந்தது. முதலாவது இஸ்ரவேல் பாவஞ்செய்தது. எரோபெயாமும் ஆகாப்பும் அதற்குக் காரணராயிருந்தார்கள். அந்தப் பாவத்திற்கு விரோதமாய்ச் சனங்களை எச்சரிக்கும்படிக்கு இஸ்ரவேலண்டைக்கே தீர்க்கதரிசிகள் அனுப்பப்பட்டார்கள். ஆனால் இஸ்ரவேல் கேளாததினால், அந்தத் தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்திக் கொன்றதினால் சிறையாக்கப்பட்டது. அதன்பின் யூதாவும் சில வருஷங்களுக்குள்ளாக இஸ்ரவேலைப்போல பாகாலை வணங்கி, விக்கிரகாராதனை என்னும் உளையில் விழுந்தது. அநேக நல்ல தீர்க்கதரிசிகள் அந்தப் பாவத்தைக்குறித்து எச்சரிக்கும்படி அனுப்பப்பட்டார்கள். இந்தத் தீர்க்கதரிசிகளைக் கல்லெறிந்து கொன்று, பாவத்தில் நிலைநின்றபடியால் சிறையாக்கப்பட்டுப் பாபேலின் ஆற்றண்டையிலே உளுக்கார்ந்து அழவேண்டியதாய் வந்தது. பாவம் ஒன்றுபோலிருந்தது. பாவத்திற்கு வந்த தண்டனையும் ஒன்றுபோலவேயிருந்தது.

இந்தத் தீர்க்கதரிசிகள் வரப்போகிற காரியங்களை முன்னறிவித்ததுமல்லாமல் பாவத்தைக் கண்டிக்கிறவர்களாயுமிருந்தார்கள். தீர்க்கதரிசிகளும், கண்டிக்கிறவர்களுமாயிருந்தார்கள். எலியா, எலிசா, அகியாமுதலானவர்கள் கண்டிக்கிற தீர்க்கதரிசிகள். இவர்கள் யாதொன்றை எழுதினதாகக் காணோம். ஓசேயா, ஆமோஸ், ஏசாயா, எரோமியாமுதலானவர்கள் எழுதின தீர்க்கதரிசன ஆகமங்கள் நம்மிடத்திலுண்டு. இவர்கள் எழுதினதை அவர்கள் காலத்தில் நடந்த சரித்திரங்களோடு ஒத்துப் பார்த்தோமானால், இதுவரையில் நாம் கண்டுபிடித்த இசைவுகளைப்போல வேறே இசைவுகளை அங்கேயுங் கண்டு, தீர்க்கதரிசன ஆகம உண்மையை ரூபிக்கலாம். அப்படிச் செய்வது மிகவும் பிரயோசனமாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இப்படி வேத உதாரணங்களை ஒன்றின்பின் ஒன்றாய் இவ்வளவு ஏராளமாகச் சொல்லவேண்டிய அவசியமென்ன? கிறிஸ்துமார்க்கத்தின் அஸ்திபாரமாகிய மூலாதாரம்போன்ற இவ்வுபதேசத்தை நிறுத்தி, அதிகப் பிரயோசனமானவைகளைச் சிந்தித்துக் காலம்போக்கலாமே என்று சொல்வாருண்டு. அது சரிதான். தற்காலத்தில் இப்படிப்பட்ட உதாரணங்கள் அவசியமானதென்று ரூபிக்கவேண்டியதில்லை. அவ்விசுவாசம் தன்னில்தானாய் முடிவடைவது நிச்சயமாயிருந்தாலும், ஏற்றகாலத்தில் விசுவாசத்தினாலுண்டாகும் நிச்சயத்தையும், ஆறுதலையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பெற்றனுபவிப்பது சின்னக்காரியமல்ல. தேவனில்லை என்று சொல்லுகிற பைத்தியகாரன் முதலாய் உலகச் சிருட்டிப்பையும், பயங்கரமாயும் ஆச்சரியமாயும் உண்டாக்கப்பட்டிருக்கும் தன் சொந்த தேகத்தையும் பார்க்கும்போது, திகிலடைந்து திகைத்து நிற்கிறான். தன் சுகம், பெலன்முதலியவைகளைக்குறித்து மேன்மை பாராட்டிச், சிற்றின்பமாகிய லோக வாழ்வில் தன் ஆசையை வைக்கிறானோ? ஒரு வியாதி அவனைக் கீழே தள்ளி, அவன் நகைப்பை துக்கிப்பாகவும், அவன் இன்பத்தைத் துன்பமாகவும் மாற்றிப்போடுகிறதினால், தன் தேகம் அழிவுக்குரியதென்று அறிந்துகொள்ளுகிறான். உலக கீர்த்தியும் பெரும் அவனுக்கு ஒரு விக்கிரகம்போலிருந்தாலும், அவன் தேகம் தளர்ந்து விருத்தாப்பியனாகித் தனித்துவிடப்படும்போது அதை ஒரு குப்பையைப்போல தள்ளுகிறான். தன் சிநேகிதரையும் இனத்தாரையும் நம்பி, அவர்களோடு கொஞ்சிக் குலாவுகிறது அவனுக்கு மோக்ஷமாய்த் தோன்றினாலும், அவன் நினையாதநேரத்திலே மரணம் என்கிற கோலால் அந்த மண்பாண்டம் நொறுக்கப்படும்போது, நிலைநிற்கத்தக்க வேறு பாக்கியங்களைத் தேடி

வான். இவ்விதமாய் தேவன் அனிருய வேதத்தின் உண்மையை ரூபித்து நித்தியத்தைக்குறித்து நினைக்க நம்மை ஏவிவிடுகிற அநேகங் காரியங்களை நம்முடைய சில விருத்தாந்தத்திலேயே பார்க்கிறோம். காரியம் இப்படியிருக்க, வேத உதாரணங்களை நன்றாய் ஆராய்ந்து இளமையிலேயே வேதவசனம் தேவ வாக்கென்றும், அதுவே தங்களுடைய வழிகாட்டியென்றும், அதின்படி நடப்பதினாலேயே ஓர் வாலிபன் தன் பாதைகளைச் சுத்தம்பண்ணுவானென்றும் உணர்ந்துகொள்பவர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்! அப்படி மறுபிறப்பு அடைந்தவர்கள் தேவனுக்குத் துதிசெலுத்தி, தங்கள் சகோதரரை சத்தியத்தில் உறுதிப்படுத்துவதோடுங்கூட அப்படிப் பிரயாசப்படுகிற மற்றவர்களுக்காக கர்த்தரை நோக்கிச் ஜெபம்பண்ணக்கடவர்கள். அவர் தமது ஆவியானவரைத் தந்து, பிரசங்கியின் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளையும், நான் இதுவரையில் சொல்லிவந்த இப்படிப்பட்ட வேத உதாரணங்களையும் பயன்படும்படி செய்தால்தான், கவலையற்றவர்கள் கவனத்தோடு இதை ஏற்றுக்கொள்வார்கள். வேதவசனத்தையறிய அவர்கள் புத்தியின் கண்கள் திறக்கப்படும். அதைப்பற்றிய தியானத்தினால் சத்தியத்தில் நிலைத்திருப்பார்கள். அவர்கள் பிரயோசனமடைவது யாவருக்கும் தெரியவரும். அவர்கள் உள்ளான மனுஷத்துவமும் வரவர மறுரூபமடைந்து, மரணமுதலாய் லாபமாக முடியும்.

—— 0 ——

## XXII. பத்து குஷ்டரோகிகள் சுத்தமானது.

**லூக்கா 17 11—19 வரை.**

யூதருக்கும் சமாரியருக்கும் எப்போதும் விரோதமிருந்தபடியால், கலிலேயாவிலுள்ளவர்கள் எருசலேமுக்குப் பண்டிகை ஆசரிக்கப் போனபோது, நேரே சமாரியா வழியாய்ப் போகாமல் யோர்தானைக் கடந்து, பழையேற்பாட்டில் கிலேயாத்தென்றழைக்கப்பட்டிருக்கிற பிரேயா நாட்டுக்குப்போய், அப்புறம் எருசலேமுக்குப் போவார்கள். ஏனெனில் அவர்கள் எருசலேமுக்குப்போனது கெரிசீம் மலையில் தேவனை ஆராதிப்பது சரியல்லவென்று சொன்னதுபோலிருந்தது. விசேஷமாகப் பண்டிகைச் சமயங்களில் அவர்கள் நாட்டின்வழியாய்ப் பிரயாணம்பண்ணின யூதர்களை அபகரிக்கிறதும், உயிர்ச்சேதம்பண்ணுகிறதும் வழக்கமாயிருந்தது. இந்த அற்புதம் நடந்த கொஞ்ச காலத்துக்குப் பிறகும் கலிலேயரிலனேகரை சமாரியர் கொன்றதாக யோசேப்பூஸ் எழுதியிருக்கிறான். நம்முடைய இரக்ஷகர் இவைகளையெல்லாம் கவனியாமல், எருசலேமுக்குப்போன இந்தக் கடைசிச் சமயத்தில் சமாரியாவழியே நேர் பாதையாய்ப் பிரயாணம்பண்ணினார். லூக். 9. 51,56. யோவான் 4. 9. சமாரியாவின் நடுவே அவர் பிரயாணம்பண்ணாவிட்டாலும், சமாரியாவுக்கும் கலிலேயாவுக்கும் நடுவே இரண்டெல்லைகளின் ஓரத்தில் வலதுபுறம் சமாரியாவும், இடதுபுறம் கலிலேயாவுமாய்ப் பிரயாணம்பண்ணி, எரிகோவின் சமீபத்திலிருந்த துறைமுகத்திலே சித்தப்போலி என்னும் ஊருக்கருகே யோர்தானைக் கடந்திருப்பாரென்று தோன்றுகிறது. லூக்கா 18. 35.



அவரொரு கிராமத்தில் பிரவேசித்தபொழுது குஷ்டரோகமுள்ள பத்துப்பேர் அவருக்கெதிராக வந்தார்கள். ஒரேவிதமான வியாதியுள்ளவர்களானபடியால், சமாரியர் யூதரென்கிற பிரிவினையில்லாமல் ஒன்றாய்க் கூடினார்கள். 2 இராசா 7. 3. கலிலேயாவும் சமாரியாவுஞ் சேருகிற இடமானபடியால், ஒரு சமாரியனும் அந்தக்கூட்டத்திலிருந்தான். குஷ்டரோகம் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எவ்விதமாய் எண்ணப்பட்டதென்று முன் சொல்லியிருக்கிறோம். அது பாவக் கறைக்கும், பாவத்தினால் நமக்கும் தேவனுக்கும் உண்டான பிரிவினைக்கும் குறிப்பாயிருந்தது. ஆத்தும வியாதிக்குமாத்திரமல்ல, ஆத்துமமரணத்துக்கு மிது அடையாளம். நியாயப்பிரமாணத்தின்படியே இந்தக் குஷ்டரோகிகள் 3மோ. 13. 46. தூரத்தில் நின்று தங்கள் வருத்தத்தை உணர்ந்தவர்களாய் தங்களுக்கு நன்மை கிடைக்குமென்று நம்பிக்கையுடையவர்களாய் இயேசு ஐயரே! எங்களுக்கிரங்குமென்று கூப்பிட்டார்கள். இரக்கம்பெற இவ்வளவு ஆசையைக் காண்பித்தவர்கள் பிறகு நாம் பார்க்கிறபடி நன்றியறிதலைச் செலுத்த மனமற்றவர்களாயிருந்தார்கள். அவர்களை அவர் பார்த்து நீங்கள் போய் ஆசாரியருக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். இந்த நல்ல வயித்தியன் தன்னிடத்தில்வந்த பல வியாதிக்காரருக்குப் பலவகையாய் நன்மை செய்தாரென்று பார்க்கிறோம். ஞானத்தோடும் தயவோடும் தன்னிடத்தில் வந்த பிணியாளிகளுக்குத்தக்கவிதமாய் அவர்களை நடத்தினார். பலமுள்ள விசுவாசத்தைக் கண்டாரா? அதை அதிகப் பலமுள்ளதாக்கும்படிக்கு முந்தி வெறுப்பாய்ப் பேசினார். பெலவீன விசுவாசத்தைக் கண்டாரா? அது தளர்ந்துபோகாமல் ஆதரித்தார். ஒரு மனிதனுக்குப் பாவமன்னிப்பைக் கொடுத்து பின்பு குணமாக்குகிறார். வேறொருவனுக்குச் சரீர நன்மையைக் கொடுத்து சொஸ்தப்படுத்தி பிறகு பாவமன்னிப்பைக் கொடுக்கிறார். மத்தேயு 8ல் சொல்லியிருக்கிற குஷ்டரோகியைச் சுத்தமாக்கி அப்புறம் ஆசாரியரிடத்திற்கனுப்புகிறார். இந்தக் குஷ்டரோகிகளையோ சுத்தமாக்குமுன்னேயே ஆசாரியரிடத்திற் போகச் சொல்லுகிறார். இவ்விதமாய் அவர்கள் விசுவாசத்தைச் சோதித்தார். சுத்தமானதற்கு யாதொரு குறிப்புக் காணப்படுமுன்னேயே சுத்தமாக்கப்பட்டவர்கள் செய்வதைச் செய்யச் சொன்னார். இரக்ஷகருடைய வார்த்தை பொய்யாய்ப்போனால், இவர்கள் போனது வீணும் சிரிப்பாணிக் கோலமாயுமிருக்கும். இவர்கள் உடனே போனதினால் தங்களுக்கு விசுவாசமுண்டென்று காண்பித்தார்கள். ஆசாரியர் குணமாக்கும்படி அவர்களைப் போகச்சொல்லவில்லை என்றவர்களுக்குத் தெரியும். சுத்தமானார்கள் என்றுசொல்ல அவர்களால் ஆகுமே ஒழிய, சுத்தமாக்க அவர்களால் ஆகாது. வியாதியை நீக்காவிட்டாலும், வியாதி தீர்ந்த பிறகு செய்யவேண்டிய சடங்குகள் செய்து சபையில் சேர்த்துக்கொள்வதுதானவர்கள் வேலை.

இந்தக் குஷ்டரோகிகள் நன்றிகேட்டுக்கிடங்கொடுத்து, அப்படிப்பட்ட சோதனையில் விழ இடமிருந்தது. தங்களுக்குச் சுகமுண்டானதைக்கண்டபோது, சுகமளித்தவர் அவர்கள் முன்பாக நிற்கவில்லை. நன்றிசெலுத்தும்படி திரும்ப வரவேண்டியதிருந்தது. எவ்வளவு தூரம்போனார்களென்று தெரியமாட்டாது. போகையில் சுத்தமானார்களென்று வாசிக்கிறோம். சிலர் திரும்பிவந்த சமாரியன் எருசலேமுக்குப் போய் காணிக்கை செலுத்தி சபையில் சேர்க்கப்பட்டபிறகு நன்றிசெலுத்தத் திரும்பவந்தானென்றும், அதுகளெல்லாவற்றையும்விட்டுத், திரும்பி வந்ததைமாத்திரம் சுவிசேஷகன் உடனே நடந்ததாகச்

சொல்லியிருக்கிறானென்றும் சிலர் எண்ணுகிறார்கள். அற்புதத்தை வாசிக்கிறவர்களுக்கு, கொஞ்சதூரம்போன உடனே அவர்கள் சுகமானதைக் கண்டு, பராபரனை மகிமைப்படுத்தி, தனக்குச் சுகமளித்த இரக்ஷகருக்குத் தோத்திரஞ்செலுத்த இவன் ஒருவன்மாத்திரம் திரும்பினானென்று காணப்படும். சூரியனாகிய நாகமானும் இந்தக் கொடிய வியாதியினின்று சுகமானபோது தன் கூட்டத்தாரோடுகூடி திரும்பி வந்து, பராபரனுடைய மனிதன் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ளக் கெஞ்சினான் என்று பார்க்கிறோம். இவர்களோ திரும்பிவர மனமில்லாமல், உபகாரஞ்செய்தவருக்கு நன்றிசெலுத்தாமல் நன்றிகெட்டவர்களானார்கள். ஒரு பரிசுத்தவான் சொல்லுகிறபடி இந்தப் பாவம் சாதாரணமாய் நமக்குள் காணப்படுகிறது. இவர்கள் கெஞ்சினது போல, கர்த்தர் தம்முடைய கையைத் திறக்கிறவரையில் நம்முடைய வாயை விரிவாய்த் திறக்கிறோம். அவர் நம்முடைய வாயை நிரப்பின உடனே நம்முடைய தொண்டை அடைபட்டுப்போனதுபோல, மனமும் வாயும் அடைபட்டு மவுனமாயிருக்கிறோம். நன்றிசெலுத்தினவன் சமாரியன், உடம்படிக்கைக்கு அன்னியன். மற்ற ஒன்பதுபேரோ ஆபிரகாமின் வித்தாகிய இஸ்ரவேலர். புறச்சாதிகளுக்குரிய இந்தச் சுவிசேஷத்தில் இது சொல்லியிருக்கிறது மிகவும் இசைவாயிருக்கிறது. ஏனெனில், லூக்கா சுவிசேஷம் புறச்சாதியாருக்கென்றே எழுதப்பட்டது. இதினால் புறச்சாதியார் பராபரனுடைய இராட்சியத்துக்குப் புறம்பானவர்களல்ல, இராட்சியத்தின் புத்திரருக்கு முன்னே இவர்கள் பரலோக இராட்சியத்தில் சேருவார்களென்று இதினால் அறிகிறோம். அவர்களுடைய நன்றிகேடு அவர்களுடைய வழியை அடைத்துப்போட்டது. இவர்களுடைய விசுவாசம் இவர்களுக்கு ஆசீர்வாதத்தை வருவித்தது.

மனிதருடைய இருதயத்திலுள்ள யாவையுமறிந்தவரோ, எவ்வளவோ நன்றிகேட்டை மற்றவர்களிடத்தில் கவனித்தவரோ, இவர்களுடைய நன்றிகெட்ட தன்மையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, சுத்தமானவர்கள் பத்துப்பேரல்லவா ஒன்பதுபேரெங்கே! தேவனை மகிமைப்படுத்துவதற்கு இந்த அன்னியனே ஒழிய மற்றொருவனைத் திரும்பிவரக் காணோமே என்று சொன்னதுமல்லாமல், இவன் நன்றியறிதலுக்குப் பலனாக சரீர நன்மையோடு ஆத்தும சுகத்தையும் கட்டளையிட்டார். அவனைப் பார்த்து நீ எழுந்துபோ உன் விசுவாசம் உன்னை இரக்ஷித்தது என்றார். அந்த ஒன்பதுபேர் பெற்றுக்கொள்ளாததை இவன் பெற்றுக்கொண்டான். ஏனெனில் அந்த ஒன்பதுபேரில் காணப்படாத நற்குணம் இவனில் காணப்பட்டது.

இந்த அற்புதம் கர்த்தருடைய பிள்ளைகள் நிலைமைக்கு மிகவும் ஒத்திருக்கிறது. ஞானஸ்நானத்தில் கர்த்தர் நீ இன்று சுத்தமானாய் என்று சொன்னதுபோலிருக்கிறது. ஞானஸ்நானம் பெற்றபிறகு பாவக்கறை நம்மில் காணப்பட்டாலும் நாம் விசுவாசத்தோடு வேதவசனத்தையும் சாக்கிரமெந்தையும் வாங்கிவருவோமானால், முழுவதும் சொஸ்தமடைவதைக் காணலாம். இப்படி சொஸ்தமாகிவரும்போது தாங்கள் பாவத்தினின்று கழுவப்பட்டோமென்பதை மறக்கக்கூடாது. அப்படி மறக்கிறவர்கள் இந்த ஒன்பதுபேரைப்போல பாவஞ்செய்வார்கள். அவர்கள் குஷ்டரோகிகளாயிருந்ததை முற்றிலும் மறைக்கும்படி திரும்பிவராதிருந்திருக்கலாம். தாங்கள் மிகவும் அசுத்தராயிருந்ததையும், கர்த்தரை நோக்கி எங்களுக்கிரங்குமென்று கெஞ்சினதையும், இப்பொழுது இரக்ஷகர்மூலமாய் பெற்றுக்கொண்ட சமாதா



னத்தையும் சந்தோஷத்தையும் நினைவுகூர்ந்து, நன்றியறிதலோடு இரக்ஷகரை மகிமைப்படுத்தி அவருக்கு உண்மையாய் ஊழியஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களுடைய பாவத்தை விட நமது பாவம் அதிகமாயிருக்கும். அவர்கள் சரீர நன்மைமாத்திரம் பெற்றுப்போனார்கள். நாமோ விலையேறப்பெற்ற ஆத்தும நன்மைகளைப் பெற்றனுபவிக்கிறோம். நம்முடைய சலாக்கியங்களுக்குத்தக்கதாக நம்முடைய குற்றமுமதிகப்படும்.

---

## நாளது சங்கதிகள்.

**இத்தாலியா.** பூர்வகாலத்து ரத்தசாட்சிகளில் சிறிதுபேரை புண்யாத்துமாக்களாக பிரதிஷ்டை செய்யும்படிக்கும், பேதுரு அப்போஸ்தலன் ரோமைபுரியில் கண்காணியானானென்று ரோமானித்தார் எண்ணுகிற 1800ம் வருஷோற்சவம் கொண்டாடும்படிக்கும் ஜூன் மீ 29உ ரோமை நகரத்து சாந்து பேதுரு கோவிலில் மகா வேடிக்கையான ஓர் உற்சவம் நடத்தப்பட்டது. உலகத்தின் நாலு தேசங்களிலுமுள்ள 500 சபைக் கண்காணிமாரும் 5000 சனங்களும் அதற்குக் கூடியிருந்தார்கள். பாப்பானவர் அத்தருணத்தில் ஓர் பிரசங்கம்பண்ணி, கூடிவந்திருந்தவர்களுக்கு பாவ சங்கீர்த்தனம் செய்தார்.

மேற்படி அத்தியட்ச குருமார் பற்பல அன்னிய தேசங்களிலிருந்து 30 லட்சம் ரூபாய் வரும்படியான காணிக்கைகள் சேர்த்துக்கொண்டு வந்து, பாப்புவிடத்தில் ஒப்புவித்தார்கள். மேலும் பாப்பானவர் சபைக்குரிய சாதாரண ஆலோசனை சங்கம் ஒன்று கூட்டப்போகிறாரென்றும், சகல ரோமானித்தரும் விசுவாசிக்கும்படியாக பாப்பு சர்வ விஷயங்களிலும் தவறாமையுள்ளவர் என்னும் ஓர் புதிய உபதேசத்தை ஸ்தாபிப்பதற்காக அந்த சங்கத்தாரை வினவிக்கொள்ளப் போகிறார் என்றும் கேள்வியாகிறது.

**இந்தியா.** இந்துதேசத்தை சம்பந்தித்த ஓர் முக்கிய விஷயத்தைப்பற்றி இங்கிலாந்தில் வாதாநுவாதம் நடந்தது. யூகமும் வித்பத்தியும் உள்ள சுதேசிகளை இந்துதேசத்தில் பிரிட்டிஷ் சிவில் உத்தியோக வகுப்பில் சேர்த்துக்கொள்வது யுக்தமென்றும், அவ்வுத்தியோகத்திற்கு அவர்களைப் பக்குவப்படுத்தத்தக்க வித்யாயத்தனம் இந்து தேசத்தில் இல்லாமையால் அவர்களை இங்கிலாந்தில் தேற்றுவிப்பது உத்தமமென்றும் யோசித்தார்கள். நாளாவட்டத்தில் இது சித்தியடையும் என்று நம்ப ஏதுவிருக்கிறது.

---

நவம்பர்மீ நாள் 30. ஐப்பசிமீ 17உ முதல், கார்த்திகைமீ 16உ வரை.

| வாரம். | ஆங்கிலத் தேதி. | தமிழ்த் தேதி. | அனுதினத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ௧௭ | உமக்கு முன்பாக உண்மையாய் நடந்தேன். 2 இராசா 20:3. |
| ச | 2 | ௧௮ | மன உத்தமமாய் நடந்துகொண்டேன். 3. |
| ஞா | 3 | ௧௯ | உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன். 3. |
| தி | 4 | ௨௰ | உன் விண்ணப்பத்தைக் கேட்டோம். 5. |
| செ | 5 | ௨௧ | சத்துரு அவனை ஏய்ப்பதில்லை. சங்கீ. 89:22. |
| பு | 6 | ௨௨ | இதோ நாம் உன்னைக் குணமாக்குகிறோம். 2 இரா. 20:5. |
| வி | 7 | ௨௩ | எனக்காக கருத்தனைக் கேளுங்கள். 22:18. |
| வெ | 8 | ௨௪ | நமக்கு முன்பாக அழுதபடியால், நாமுங் கேட்போம். 19. |
| ச | 9 | ௨௫ | கருத்தராகிய ஆண்டவரே மன்னியுமேன். ஆமோஸ் 7:2. |
| ஞா | 10 | ௨௬ | கர்த்தரின் வசனத்தைக் கேட்கப் பசியுண்டாயிருக்கிற நாள்வரும். |
| தி | 11 | ௨௭ | உன்னிருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்கிறது [8:11. |
| செ | 12 | ௨௮ | கருத்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது. 15. [ஒ. ஒபதி. 3. |
| பு | 13 | ௨௯ | சீயோன் பர்வதத்தில் தப்பியிருப்பாருண்டு. 17. |
| வி | 14 | ௩௰ | அவர்கள் பரிசுத்தராயிருப்பார்கள். 17. |
| வெ | 15 | ௧ | அவர்கள் பொல்லாப்பு நமக்கு விரோதமாய் வந்தது. யோனா 1:2. |
| ச | 16 | ௨ | நீ நித்திரைபண்ணிக் கிடக்கிறதென்ன 6. |
| ஞா | 17 | ௩ | எழுந்திருந்து உன் தேவனை நோக்கிக் கூப்பிடு. 6. |
| தி | 18 | ௪ | தங்கள் பாவங்களை அறிக்கையிட்டார்கள். மத்தேயு 3:6. |
| செ | 19 | ௫ | வருங் கோபத்திற்குத் தப்பிக்கொள்ள வகைகாட்டினவனெவன்? |
| பு | 20 | ௬ | மனந் திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள். 8. [7. |
| வி | 21 | ௭ | இப்பொழுதே கோடரி மரங்களின் வேருக்கே வைத்திருக்கிறது. |
| வெ | 22 | ௮ | நல்ல கனி கொடாத மரங்கள் வெட்டப்படும். 10. [9. |
| ச | 23 | ௯ | தமது கோதுமையைக் களஞ்சியத்திற் சேர்ப்பார். 12. |
| ஞா | 24 | ௰ | பதரை அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார். 12. |
| தி | 25 | ௧௧ | சகல நீதியையும் நிறைவேற்றுகிறது நமக்கேற்றது. 15. |
| செ | 26 | ௧௨ | இயேசு மாம்ச இரத்த தேகமுள்ளவரானார். எபி. 2:15. |
| பு | 27 | ௧௩ | அவர் தாமே சோதிக்கப்பட்டு பாடனுபவித்தார். 18. |
| வி | 28 | ௧௪ | கிறிஸ்து இயேசுவை உற்றுப்பாருங்கள். 3: 1. |
| வெ | 29 | ௧௫ | தேவன், சகலத்தையுமுண்டாக்கினவர். 3. |
| ச | 30 | ௧௬ | இயேசு அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். 4. |

## விசேஷித்த நாட்கள்.

3. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், இருபதாம் ஞாயிறு.
5. பாப்புமார்க்கத் துரோகம்.
10. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், இருபத்தோராம் ஞாயிறு.
12. பௌரணமி.
17. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும், இருபத்திரண்டாம் ஞாயிறு.
24. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும், இருபத்துமூன்றாம் ஞாயிறு.
26. அமாவாசை.

ஒடம்விட்ட ஆற்றிலும் அடிச்சுடும்.
ஓடம்வண்டியிலே வண்டிலோடத்திலே.

இடமாட்டோன் சிறுபுள்கோட்டான் பட்டது போல.
இடைகாறிக்குப் புண்கட்டினது போல.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

DECEMBER. 1867. டிசம்பர்மீ.

CONTENTS.


Recreations in Astronomy. ... ... ... 222
A Metrical Index to the Bible ... ... 226
On the Historical books of the Old Testament. ... ... ... ... ... ... 227
Evidences of Christianity... ... ... ... 231
Christian Church History.... ... ... ... 233
Cholera. ... ... .. ... ... ... ... 237
News. ... ... .. ... ... ... ... ... 238


அட்டவணை.


வானசாஸ்திரத்தைக் குறித்தது. ... ௨௨௨
வேதாத்தியாயப் பொழிப்பு. ... ... ௨௨௬
பழயவேற்பாட்டுச் சரித்திர ஆகமங்களின் பேரில் ... ... ... ... ... ௨௨௭
கிறிஸ்துமார்க்க உதாரணம் ... ... ௨௩௧
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ௨௩௩
விஷபேதி. ... ... ... ... ... ௨௩௭
நானாது சங்கதிகள். ... ... ... ... ௨௩௮



PALAMCOTTAH:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,

BY

L. DEVANAYAGAM PILLAY.

1867.


கடல்பெருகினால் கரையுண்டா?
கடலிலிட்ட பெருங்காயம்.

கடுங்காற்றடித்துக் கடுக்கெனக் கட்டைக்கூட்டிப்.
கடுச்சாற்றுக்குக் காரியஞ் சொல்லப்போமா?

## RECREATIONS IN ASTRONOMY.

## வானசாஸ்திரம்.

### X. அதிகாரம்.

#### நட்சத்திரங்களைக் குறித்தது.

(தொடர்ச்சி.)

சோதிமண்டலத்தின் சிறப்பு யாவருக்குந் தெரிந்த காரியந்தானே. ஆகையால் அதை அவ்வளவாய் விவரிக்காமல் நட்சத்திரங்களைக் குறித்து சில விசேஷங்களை எடுத்துரைப்போம்.

இதுவரையும் இரண்டு வகையான வானுலகங்களைக் கவனித்துவந்திருக்கிறோமே. அதுகளுக்கும் இப்போது விசாரிக்கப்போகிற நட்சத்திரங்களுக்கும் விசேஷித்த வித்தியாசமுண்டு. அதினாலே ஒருவன் வானமண்டலத்தை கண்ணூன்றிப் பார்க்கையில் அவனுக்குத் தோற்றப்படும் உலகங்களில் இன்னின்னது கிரகம், இன்னின்னது நட்சத்திரமென்று அறிந்துகொள்வது வருத்தமன்று. நட்சத்திரங்கள் ஒன்றுக்கொன்றுள்ள தூரத்திலும் இடச்சம்பந்தத்திலும் ஒருபொழுதும் வேறுபடாமல், அசைந்துஅசைந்து மின்னிமின்னிப் பிரகாசிக்கும். கிரகங்களோ ஓயாமல் இடமாறுகிறவைகளாய், அசைவின்றி ஒரே நிலையாய் நின்று பிரகாசிக்கும்.

அந்தக இருளான இரவிலும் ஒரே விசை அலாம்பரமாய் ஒருவன் பார்க்கக்கூடிய நட்சத்திரங்கள் பெரும்பாலும் ஈராயிரத்துக்கு அதிகப்படாது. ஆயினும் எண்ணிறந்த நட்சத்திரங்களைப் பார்க்கிறதுபோல நினைத்துக்கொள்வது வழக்கந்தான். இந்த விபரீத காட்சிக்குப் பல நியாயங்கள் சொல்லலாம் அவற்றில் முக்கியமானவை எவையெனில், நட்சத்திரங்களிலிருந்து பூமியின் மீது வீசும் ஒளிக்கதிர்கள் பூமியைச் சூழ்ந்த வாயுகோளத்தினது அடர்த்தி வேற்றுமையினால் மேலும் வளைந்து செல்லுவதும் பிரதிவிம்பிப்பதுமே. மேலே ஓரிடத்திற் குறித்தபடி நட்சத்திரங்களைப் பற்பல கூட்டங்களாகப் பிரித்து ஏற்படுத்தி, அவைகளுக்கு பல மனிதர் மிருகங்கள் பொருட்கள் இவைகளின் பெயர்களையுங் கொடுத்திருக்கிறார்கள். மேற்படி இராசிகளும் பெயர்களும் ஏற்பட்டது தற்காலத்திலல்ல, பூர்வீகமாயே வழங்கிவந்ததென்பதற்கு பலத்த அத்தாட்சிகளுண்டு. அன்றியும் அந்தந்த நட்சத்திர இராசி அந்தந்தப் பெயரையுடைய மனுஷனை அல்லது பொருளைக் காட்டுமென்று நினைக்க ஒண்ணாது. இரண்டொரு விஷயத்தில்



கொஞ்சம் ஒற்றுமை விளங்குகிறதுண்டு. பூர்வீகத்தார் அந்தப்படிப் பாவித்துக்கொண்டபோதிலும் எல்லோருக்கும் ஒன்றுபோல தோற்றப்படமாட்டாதே.

நட்சத்திரங்களை அவற்றின் பருமனுக்குத்தக்கதாகவும் பல வகுப்புகளாக வகுத்திருக்கிறார்கள். தூரதிருஷ்டிக்கண்ணாடியால் மாத்திரம் பார்க்கக்கூடியவைகள் ஒன்பது. ஆகப் பதினாறு வகுப்புகளாம். இவ்வாறு நட்சத்திரங்களை பலதரமானவைகளாக வகுத்திருந்தபோதிலும், எதார்த்தமாய் அவைகளுக்குள் பருப்ப வேற்றுமையே விளங்குகிறதில்லை. ஹர்ஷல் என்பவர் செய்த தூரதிருஷ்டிக்கண்ணாடி ஒரு பொருளை ஆறாயிரம் மடங்கு பெரிதாய்க் காண்பிக்கக்கூடியது. அதைக் கொண்டு பார்க்கும்பொழுதுங் கூட, நட்சத்திரங்கள் அதிகப் பிரபையாய்த் தோற்றப்படுகிறதேயல்லாமல் அவைகளின் தேகந் தெரிகிறதுமில்லை, பருப்ப வித்தியாசம் விளங்குகிறதுமில்லை. இதைக்கொண்டு நட்சத்திரங்கள் எவ்வளவோ எண்ணிறந்த தூரத்திலிருக்கவேண்டுமென்று உணர்ந்துகொள்ளலாமே.

தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்க்கையில் நட்சத்திரங்களின் தேகம் தோன்றாமலும் பருப்பம் அதிகப்படாமலுமிருந்தபோதிலும், பிரகாசம் அதிகப்படுகிறதுண்டு. சிறிதுவேளைகளில் கண்ணுக்கு நோவின்றிப் பார்க்கக்கூடாத விதமாய் அதிகப் பிரபையுமாகிவிடும். நட்சத்திரங்களிலெல்லாம் அதிகப் பிரபையான சிரியஸ் தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குள் வரும்போது அதைக் கண்கொண்டு பார்ப்பது மிகவும் பிரயாசம். ஆகவே நட்சத்திரங்களை பருப்பத்துக்குத்தக்கதாகத் தாம் ஏற்படுத்தாமல், அவற்றின் பிரகாசத்துக்குத்தக்கதாக ஏற்படுத்தியிருக்கிறதென்று உணர்ந்துகொள்ளவேண்டும். எந்த நட்சத்திரமும் எப்பேர்ப்பட்ட சத்துள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடியிலும் பிரகாசமான நுண்ணியபொட்டுப்போல மாத்திரம் விளங்குகிறபடியால், சோதிசாஸ்திரிகள் நட்சத்திரங்களின் தூரங்களைக் கணிக்கிறதற்கு ஏதுவில்லாதிருக்கிறார்கள்.

மேற்காட்டியபடி நட்சத்திரங்களைப் பாரித்துக்காட்ட ஏதுவில்லாதிருப்பதன்றியும், எத்திசையினின்று பார்த்தபோதிலும் ஒரே நேரிலேயே காணப்படுகிற காரணத்தினாலும் சாஸ்திரிகள் நட்சத்திரங்களின் தூரங்களைப்பற்றிச்சொல்லிய விவரமெல்லாம் உத்தேசமும் யூகையுமேயல்லாமல் எதார்த்தமல்ல. தூரதிருஷ்டிக் கண்ணாடியால் நட்சத்திரங்களைக்குறித்து ஒரு விசேஷமாத்திரம் தெரிய வருகிறது. மேற்படி கருவியின் சத்து அதிகப்படுகிறதற்குத்தக்கதாக வானமண்டலத்தில் மேன்மேலும் புதிய நட்சத்திரங்கள் காணப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகையால் நட்சத்திரங்கள் இத்தனையென்று எவர்களுஞ் சொல்லமாட்டார்கள். அவைகள் கடற்கரையின் மணலைப்போல எண்ணிக்கைக்குளடங்காதவைகளென்றேசொல்லவேண்டியதாகிறது.

இதுவரையில் 50,000 நட்சத்திரங்கள் வரையில் கணக்காகியிருக்கிறது. பூகோள விலாசத்திலுள்ள இடங்கள் குறிக்கப்பட்டிருக்கிறபிரகாரம் இவைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. குறித்த நட்சத்திரங்களுக்கெல்லாம் அச்சமும் ரேகாந்தரமும் கணித்து ஏற்படுத்தியுமிருக்கிறது. என்றாலும் பூலோக அளவுகளுக்கும் வானுலக அளவுகளுக்கும் வித்தியாசமுண்டு. வானமண்டலத்தில் சூரியனானது பூமியைச் சுற்றிக்கொண்டு வருகிறாப்போல தோற்றப்படுகிற பாதை கிராந்திமண்டலம் என்னப்படும் என்று மேலே ஓரிடத்திற் குறித்திருக்கிறதே. பூகோளத்தில் அச்ச அளவுகளெல்லாம் சமரேகை என்னப்ப

நம் விருத்தந்தொடங்கி அளவிடப்படுவதுபோல, வானுலகங்களின் அச்சமெல்லாம் மேற்படி கிராந்திமண்டலந் தொடங்கி அளவிடப்படுகின்றன. அப்படியே பூகோளவிலாசத்தில் இன்னவின்ன இடம் சமரேகைக்கு வடக்கே அல்லது தெற்கே இத்தனையாம் அச்சபாகையிலிருக்கிறதென்று நாம் சொல்வதுபோலவே, இன்னவின்ன நட்சத்திரம் கிராந்திமண்டலத்துக்கு வடக்கே அல்லது தெற்கே இத்தனையாம் அச்சபாகையிலிருக்கிறதென்று சொல்வது வழக்கந்தான். மேலும் பூகோள ரேகாந்தரமானது அச்ச அளவின் துவக்கமாகிய சமரேகை மீது அளவிடப்படுவதுபோலவே, வான ரேகாந்தரமும் வான அச்சத்தின் துவக்கமாகிய கிராந்திமண்டலத்தின் மீதே அளவிடப்படுகிறது. ஆகிலும் ரேகாந்தர அளவைத்தொடங்குவதற்கு ஓரிடம் வேண்டுமே. இதற்கென்று ஏற்பட்டிருக்கிற இடம், கிராந்திமண்டலமும் சமரேகையும் ஒன்றையொன்று ஊடுருவிப்போகும் இடங்களில் ஒன்றாகிய வசந்தகால விசுவமே. இதை மேஷத்தின் துவக்கமென்று சொல்வதும் வழக்கந்தான். இந்த இடத்திலிருந்தே சோதிகளின் ரேகாந்தரம் இவ்வளவென்று கணக்கிடுவார்கள். இவ்வாறு ஒரு வானுலகத்தின் அச்சம் இன்னது ரேகாந்தரம் இன்னது என்று தெரியுமாகில், மேற்படி வானுலகம் இன்ன இடத்திலிருக்கிறதென்று தக்ஷணமே சொல்லலாம்.

ஆகிலும் சோதிகளின் இருப்பிடத்தைப்பற்றிப் பேசும்போது சாஸ்திரிகள் கிராந்திமண்டலத்தைப்பார்க்க சமரேகையையே மிகுதியுங் கையாள்வார்கள். வானத்தின் சமரேகைக்கு விசுவரேகை என்ற பெயரும் வழங்கும். என்னத்தினாலெனில் சூரியன் மேற்படி ரேகையின்மீது வரும்போது, உலகமெங்கும் இரவும் பகலும் சமானமாயிருப்பதினாலேயே. பூமியின் சமரேகையை சோதிமண்டலம் வரை நீட்டினால் வானத்தின் சமரேகையாகும். இந்தச் சமரேகைக்கும் துருவ நட்சத்திரத்துக்குமுள்ள தூரத்தை 90 பாகையாக வகுத்து, ஓர் வானுலகம் அதற்கு வடக்கேயாவது தெற்கேயாவது உள்ள தூரத்துக்குத்தக்கதாக அது இத்தனை பாகை அபமம் கொண்டது என்பார்கள். ஒரு சோதியின் கிழமேல் அளவு கிராந்திமண்டலத்தின்மீது அளவிடப்படுமென்று மேலே குறித்திருக்கிறதே. ஆகிலும் அந்தக் கிழமேல் அளவு சோதிகளின் இருப்பிடத்தைத் தீர்மானிக்கிறதற்கு அவ்வளவாய் உபயோகப்படுகிறதில்லை. வழக்கமாய் இன்ன வானுலகம் இத்தனை மணி உயர்ந்திருக்கிறது என்பார்கள். உதாரணமாக சூரியன் மேஷத்துக்கு நேர் எதிரிலிருக்குமாகில், அது பன்னிரண்டுமணி உயர்ந்திருக்கிறது என்று சொல்வது வழக்கம். பன்னிரண்டு மணி நூற்றெண்பது பாகைக்குச் சமமாம். ஆகையால் அந்த நிலையில் சூரியன் துலாம் என்ற இராசியிலிருக்கிறதென்று அறிந்துகொள்ளலாமே. மேற்காட்டிய இரண்டுவகைகளையுங்கொண்டு, பூகோளவிலாசத்திலுள்ள எந்த இடத்தையும் அறிந்துகொள்ளுகிற பிரகாரம், எந்த வானுலகத்தையும் திட்டமாயறிந்துகொள்ள ஏதுவுண்டாகிறது. மேலும் நட்சத்திரங்களை பற்பல இராசிகளாக ஏற்படுத்தி அந்தந்த இராசியைச்சேர்ந்த நட்சத்திரங்களுக்கு கிரேக்குப்பாஷையின் அக்ஷரங்களை முறையாய்ப் பேர்களாகக் கொடுத்திருப்பதும் அதற்கு அநுகூலமே. அதிகப் பிரகாசமான சில நட்சத்திரங்களுக்கு தனித்தனியான பெயர்களும் இடப்பட்டிருக்கின்றன. திருஷ்டாந்தம், ஓரையன் என்ற இராசியில் ஒரு நட்சத்திரத்துக்கு சிரியஸ் என்றும், சிங்கம் என்ற இராசியில் ஒன்றுக்கு ரெகுலஸ் என்றும், போவோற்றீஸ் என்ற இராசியில்



ஒன்றுக்கு ஆர்கற்றூரஸ் என்றும் இவைபோல பிறவும் சொல்லப்படுகின்றன.

நட்சத்திரங்களை அவற்றின் பிரகாசத்துக்குத்தக்கதாக ஏழுதரமாய் ஏற்படுத்தியிருக்கிறதென்று மேலே குறித்தோமே. நட்சத்திரங்களெல்லாம் இந்த ஏழுதரத்துக்குள் அடங்கிப்போயினவென்று நினைக்க ஒண்ணாது. கண்ணால் பார்க்கக்கூடியவைகள் மாத்திரம் மேற்படி வகுப்புக்குள்ளமைந்தவைகள். கண்ணுக்குத் தென்படாமல் தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்க்கக்கூடிய நட்சத்திரங்களும் ஏராளமாயுண்டு. நாம் ஒரே நேரத்தில் எத்தனையோ எண்ணிறந்த நட்சத்திரங்களைக் காண்கிறதுபோல நினைத்துக்கொண்டபோதிலும், ஒரோ விசை கண்ணுக்குத் தென்படுகிறவைகள் ஈராயிரத்துக்கு அதிகப்படாது. இந்த விபரீத காட்சிக்கு, ஒளிக்கதிர் ஆகாயத்திற்பட்டு வக்கிரித்தலும் பிரதிவிம்பித்தலுமே முக்கிய காரணங்கள். தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்க்கும்பொழுதுதான் ஏராளமான நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. சர்வில்லியம் ஹர்ஷல் என்பவர் வானமண்டலத்தில் 15 பாகை நீளமும் 2 பாகை அகலமுமான ஓரிடத்திற்குள் 50,000 நட்சத்திரங்களிருக்கக் கண்டிருக்கிறார். அதுபோலவே எங்குமிருக்குமாகில், மேற்படி கருவியினால் ஏழுகோடி ஐம்பது லட்சம் நட்சத்திரங்களுக்குக் குறையாமல் பார்க்கலாமே. இந்தத் தொகையினால் மனதுக்கு எவ்வளவு ஆச்சரியமுண்டானபோதிலும், அதனிலும் அதிகமான சோதிகளை நாம் காணாதிருப்பதற்கு நமது கருவிகளின் குறைவே காரணமென்று நினைக்கவும் இடமுண்டு. பல சாஸ்திரிகள் உத்தேசிக்கிறபடி தூரதிருஷ்டிக் கண்ணாடியால் விஷயமாகிற சோதிகளுக்கு அப்பாலும், அவைகளிருக்கிற தூரத்துக்கு மிகுதியான தூரத்திலும் அனந்த நட்சத்திரங்களுண்டாம். சிலவற்றிலிருந்து உலகஞ் சிருட்டிக்கப்பட்ட காலத்திற் புறப்பட்ட கதிர்கள் இன்னமும் பூகோளம் வந்தெட்டாமலுமிருக்கலாமென்று சாதிப்பாருமுண்டு. சந்திர வெளிச்சமும் மப்புமில்லாத இரவில் வானத்தைப் பார்க்கையில் பிரகாசமான ஓர் கச்சை அதைச் சுற்றி நிற்கிறாப்போல தோன்றுகிறதே. அதற்கு பால்வீதி மண்டலம் என்று பெயர் சொல்லுவார்கள். தற்காலத்துத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் சாஸ்திரிகள் அதைப்பார்த்து, அது எண்ணிறந்த நட்சத்திரராசிகளின் கூட்டமே என்றும் அவைகள் மனிதனாலுங் கிரகிப்பதற்கு அரிய தூரத்திலிருக்குங் காரணத்தால் அப்படி வெள்ளையாய்த் தோற்றப்படுகிறதென்றும் தெளிந்திருக்கிறார்கள். வில்லியம் ஹர்ஷல் என்பவர் தமது தூரதிருஷ்டிக் கண்ணாடியில் 600 நட்சத்திரத்தை ஒருமிக்கப் பார்த்ததல்லாமலும், கால்மணிநேரம் வரையும் மேற்படி தொகை குறையாதபடிக்குப் போய்க்கொண்டிருந்ததாம். மேலும் பால்வீதி மண்டலத்தின் ஓர் பாகத்தில் அவர் இரண்டுலட்சத்தைம்பதினாயிரம் நட்சத்திரம்வரையும் எண்ணினாராம்.

நட்சத்திரங்களை அசைவில்லாத சோதிகள் என்று சொல்வது வழக்கந்தான். அசைவில்லாதவைகளாகவே தோன்றுகின்றன. ஆகிலும் தற்காலத்து சோதிசாஸ்திரிகள் சில நட்சத்திரங்களின்விஷயத்தில் சற்றே அசைந்து இடமாறியிருக்கிறதுபோல கவனித்திருக்கிறார்கள். ஒரு இராசியிலுள்ள நட்சத்திரங்கள் ஒரு காலத்திலிருந்த சம்பந்தமாய் எப்பொழுதுமிருக்கிறதில்லையாம். ஆகிலும் அவர்கள் கவனித்த அசைவு மிகவும் சொற்பமானதினால், நட்சத்திரங்களைச் சாதாரணமாய் அசைவற்றசோதிகளென்று சொல்லலாம். மேற்படி விசேஷத்தைக்குறித்து இங்ஙனம் பேசுவதும் யுக்தமல்ல.

# A METRICAL INDEX TO THE BIBLE.

# வேதாத்தியாயப் பொழிப்பு.

## தாவீதின் சங்கீதங்கள்.

(150 ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

சங்கீதம்.

33 ஐய தாற்றல்மா தகவினுக் காய்த்துதி யறைதல்
34 மெய்ய தாயபி மேலெக்கு தாத்திடில் விளம்பல்
35 கைய ராமிக லோர்க்கெதிர் வேண்டுதல் கழறல்
36 மையல் சேர்நரர் தீங்கினை யிங்கவன் வழுத்தல். (185)
37 ஒப்பில் நல்லவர் தீயவர் நிலைமையை யுரைத்தல்
38 செப்பு வானவ னுகுல மனைத்தையுந் தெளிவாய்
39 மெய்ப்பு டன்மனு வாயுளி னளவினை விளம்பல்
40 தப்பி லாக்கிறிஸ் தியேசுவின் பலியினைச் சாற்றல். (186)
41 ஓகை யோடெளி யர்க்கிரங் கிடுபவ னுயர்வு
42 ஆகு லத்தொடு தேவனை விரும்புத லறைதல்
43 வாகு றத்திரு வாலய வாஞ்சையை வழுத்தல்
44 சோக மாய்ச்சபை யார்புலம் பிடுதலைச் சொற்றல். (187)
45 ஔவி யம்மிலான் கிறிஸ்துவின் சௌந்தர மறைதல்
46 செவ்வை யாய்த்தொழும் பர்க்கென் றுந் தேவனே தஞ்சம்
47 எவ்வ கைப்படு மார்தரு மேகனைப் போற்றல்
48 நவ்வி சேர்திருச் சபைமகத் துவங்களை நவிலல். (188)
49 கணத்தி லேயுல கப்பொரு ளழிவதைக் கழறல்
50 உணர்த்து வான்கிறிஸ் தெமைநடுத் தீர்த்தலை யுயர்வாய்
பிணக்கொ ழித்தடி யவர்பிழை பொறுப்பவன் பாத
வணக்க மோடுசங் கிதமோ ரைம்பதும் * வரைந்தாம். (189)

ஐ=கடவுள். ஆற்றல்=வல்லமை. தகவு=கிருபை. மையல்=மயக்கம். ஆகுலம்=வருத்தம். ஓகை=விருப்பம். சோகம்=துன்பம். நவ்வி=அழகு.

* கவனிப்பு. தாவீதின் சங்கீதங்கள் நூற்றைம்பதையும் மூன்று பங்காகப் பிரித்து, ஒவ்வோர் பங்கையும் அகரவரிசையால் வேறுபடுத்தியிருக்கிறது. ஆகையால் முதற் பங்கில் அகரத்தில் தொடங்கும் பாட்டின் முதலடி முதலாம் சங்கீதத்தையும், இரண்டாம் பங்கில் அகரத்தில் தொடங்கும் பாட்டின் முதலடி ஐம்பத்தோராம் சங்கீதத்தையும், மூன்றாம் பங்கில் அகரத்தில் தொடங்கும் பாட்டின் முதலடி நூற்றோராம் சங்கீதத்தையும் குறிக்குமென்பதையும், அவ்வாறே மற்ற அக்ஷரங்களின் கிரமத்தையும் தெரிந்துகொள்க.



# வேதாகமத்தின் உண்மையை ரூபிக்கும்

## மோசமில்லா இசைவுக் குறிப்புகள்.

## மூன்றாம் பங்கு.

### தீர்க்கதரிசன ஆகமங்கள்.

முதற்பங்கில் மோசேயின் ஐந்து ஆகமங்களிலும் இரண்டாம் பங்கில் சரித்திர ஆகமங்களிலுமுள்ள ஒற்றுமைகளைக்கொண்டு அவைகள் உண்மையுள்ளதென்று ரூபித்தோம். இப்போது தீர்க்கதரிசன ஆகமங்களில் அப்படிப்பட்ட ஒற்றுமைகளுண்டாவென்று பார்ப்போமாக. தீர்க்கதரிசிகள் எழுதின புஸ்தகங்களை இராசாக்கள், நாளாகமமென்னும் புஸ்தகங்களில் அடங்கியிருக்கும் அவர்கள் காலச் சரித்திரங்களோடு ஒத்துப்பார்க்கும்போது, அப்படிக்கொத்த ஒற்றுமைகள் வெளியாகும். மற்றப் பங்குகளிலிருக்கிறதுபோல அத்தனை ஏராளமாக இதிலிராது. தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்கள் சுருக்கமாயிருப்பதுமன்றி, இராசாக்கள், நாளாகமமென்னும் புஸ்தகங்களில் அப்படிப்பட்ட ஒற்றுமைக்கு ஏதுவான சரித்திரங்களும் வெகு சுருக்கமாகவேயிருக்கிறது. மேலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிறது பெரும்பாலும் விளங்காததும், உருவகமும் ஒப்பனையுமான திருஷ்டாந்தரங்கள் அடங்கியதுமாயிருப்பதால், சரித்திரத்தில் அதைப்பற்றிச் சொல்லியிருந்தாலும் இன்ன காரியமென்று தெளிவாய் அறிந்துகொள்வது இலேசல்ல.

ஆயினும் இதில் நாம் கண்டுபிடிக்கக்கூடிய ஒற்றுமைகள் மிகவும் விசேஷித்தவைகள். அவைகள் சரித்திரக்காரனையும் தீர்க்கதரிசியையும் இருவரையும் உண்மையுள்ளவர்களென்று ரூபிக்கும். சரித்திரக்காரன் உண்மையுள்ளவனாயிருப்பதினால் அவன் எழுதின சரித்திரமும், தீர்க்கதரிசி உண்மையுள்ளவனாயிருப்பதினால் அவன் எழுதின தீர்க்கதரிசனமும் இரண்டும் சத்தியமுள்ளதென்று விளங்கும். மேலும் இதினால் தீர்க்கதரிசியிருந்த காலமின்னதென்றும் திட்டமாய்த்தெரியவரும். அக்காலத்தை நாம் அறிந்துகொள்வதினால், அவன் முன்னறிவித்த அநேக சங்கதிகள் இவ்வளவு காலத்திற்குமுன்னே சொல்லப்பட்டபடியால் தேவ அருளைப் பெற்றே அவனிப்படிப் பேசினானென்று அறிந்துகொள்ளலாம். உலகத்தின் கடைசிக் காலங்களிலிருக்கும் நமக்குத் தீர்க்கதரிசிகள் சொன்னதை உறுதியாய் விசுவாசிக்கத்தக்க அத்தாக்ஷிகள் அத்தனை அவசியமில்லையென்று சிலர் ஒருவேளை எண்ணுவார்கள். ஆனால் தீர்க்கதரிசிகள் இரண்டுவிதமாய்த் தீர்க்கதரிசனமுரைத்தார்கள். யூதா, இஸ்ரவேல் என்னும் இராஜ்யங்களைக் குறித்துமாத்திரமல்ல, வரப்போகிற மேசியாவைக்குறித்தும் தீர்க்கதரிசனமுரைத்தார்கள். பிந்தின காரியத்தைக்குறித்துப் பேசும்போது அவர்கள் தங்களைச் சுவிசேஷ இராஜ்யத்திற்குக் கட்டியக்காரரென்று தெரிவித்தார்கள். இதிலேதான் அவர்களுடைய அத்தாக்ஷி மிகவும் பெலனாயிருக்கிறது. ஏனெனில் இராஜாக்களைக்குறித்தும், அவர் செய்ததைக்குறித்தும் எழுதியிருக்கிறவைகள் ஏசாயாமுதலானவர்கள் முன்னறிவித்ததற்கு நன்றாய் ஒத்திருக்கிறது. ஆனால் தீர்க்கதரி

களின்காலத்தில், அல்லது அதற்குச் சற்று பிந்தியகாலத்திலிருந்தவர்
கள். இவர்கள்தான் இந்தத் தீர்க்கதரிசன ஆகமங்களை வேதாகமத்தி
லொருபங்காகச் சேர்த்துக்கொண்டவர்கள். இவர்களுக்கு நமக்குக்
கிடைத்த உறுதியான அத்தாக்ஷி கிடைக்கவேயில்லை. அவர்களுக்குத்
தங்கள் காலத்தில் நிறைவேறின இராசாங்கத்திற்குரிய தீர்க்கதரிகள்
மாத்திரந்தான் அவர்களைத் தீர்க்கதரிசிகளென்று ஒப்புக்கொள்ளப்
போதுமானதாயிருந்தது. சிறையிருப்பைக்குறித்த தீர்க்கதரிசனங்
களும், அவைகளைப்போலொத்த மற்றவைகளும் அவர்களைத் தீர்க்கத்
தரிசிகளென்று ஒப்புக்கொள்ள யூதர்களைஏவுமானால், மேசையாவைக்
குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியிருப்பது அந்த அத்தாக்ஷிக்
கு மேலாக அவர்களை தீர்க்கதரிசிகளென்று ஒப்புக்கொள்ளவும்,
அவர்கள் சொன்னதை நம்பவும் நம்மை அதிகமாய் ஏவிவிடவேண்டும்.

இதுமாத்திரமல்ல, தீர்க்கதரிசன ஆகமங்களிலுள்ள ஒற்றுமைகள்
சில தீர்க்கதரிசிகள் அநேக காலமாக தீர்க்கதரிசனம் சொன்னார்
களென்று ரூபிக்கும். திருஷ்டாந்தரமாக, ஏசாயாவின் தீர்க்கதரிச
னப் புஸ்தகம் ஒரு நிமிஷத்தில், ஒரேகோத்தில் எழுதப்படாமல் வெவ்
வேறான சமயங்களில் ஆவியானவர் அவனுக்கு வெளிப்படுத்தின பல
தீர்க்கதரிசனங்கள் அடங்கின ஆகமமென்றும், தலைப்பில் சொல்லி
யிருக்கிறபடியே அது உசியா, யோத்தாம், ஆகாஸ், எசேக்கியா என்
னும் யூதாவின் இராசாக்களின் நாட்களில் யூதாவையும், எருசலே
மையும் குறித்து அவன் கண்ட தரிசனமென்றும் திட்டமாய் அறிந்து
கொள்ளுகிறோம். இது அற்பக் காரியமல்ல. ஏனென்றால், ஏதோ ஒரு
சமையத்தில் தற்செயலாய்த் தீர்க்கதரிசியானவன் சொன்ன ஒரு
காரியம் குருட்டுவாய்ப்பாய் நிறைவேறினபடியால் அவன் தீர்க்கத்
தரிசியென்று அழைக்கப்படாமல், தன் சீவநாள் முழுதும் பல காரி
யங்களைக் குறித்தும் பல தருணங்களில் சொல்லிவந்தான் என்று
ரூபிக்கிறபடியால் அவர்கள் எத்தர்களல்ல, மோசக்காரரல்ல, உண்
மையுளவர்கள் நிசஸ்தர்கள் என்று திட்டமாயறிந்துகொள்ளுகிறோம்.
எத்தர்களிடத்தில் ஒருபோதும் இந்தக் குறிப்புக் காணப்படமாட்
டாது.

துவக்கத்தில் இவ்வளவு சொன்னது போதும். இப்பொழுது ஒற்று
மைகளை ஒவ்வொன்றாய்க் கவனிப்போமாக.

1. ஏசாயா 7ம் அதிகாரத்தில் சூரியாவின் இராசாவும், இஸ்ரவேல்
இராசாவும் யூதாவுக்கு விரோதமாக யுத்தஞ்செய்ய வந்தபோது,
பராபரன் ஏசாயாவை ஆகாசண்டைக்கனுப்பி, அந்த யுத்தமெப்படி
முடியுமென்றும், அறுபத்தைந்து வருஷங்களுக்குள்ளாக அந்த இரு
இராக்ஷியங்களும் நிர்மூலமாகுமென்றும் அறிவிக்கச்சொன்னதாக
வாசிக்கிறோம். "கர்த்தர் ஏசாயாவுடனே சொன்னதாவது, இப்போ
து நீயும் உன் மகன் சேயார் யாசூபுமாய் வண்ணான் துறைகளிலுள்ள
மேற்குளத்து மதகின் கடைசிமட்டும் ஆகாசுக்கு எதிர்கொண்டுபோங்
கள்" என்கிறார். மேற்குளத்து மதகின் கடைசியென்று அவன் தீர்க்
கத்தரிசனஞ் சொல்லவேண்டிய இடத்தைக் குறிக்கிறார். அங்கேயே
அவன் தீர்க்கதரிசனமுரைத்தான். இப்படி யாதொரு காரணமின்
றி, தற்செயலாய் இவ்விடத்தைக்குறித்ததே அவன் சொன்னது சரி
யான தீர்க்கதரிசனமென்று ரூபிக்கும். மேற்குளத்து மதகின் கடை
சிக்கு ஏன் போகச்சொன்னார்? ஆகாசின் அரமனைக்கு, அல்லது
பட்டணவாசலுக்குப் போகச் சொல்லலாமே. மேற்குளத்து மதகின்
கடைசிக்குப் போகச்சொல்வதற்கு யாதொரு காரணமும் சொல்லப்



படவில்லை. 2 நாளா. 32ம் அதிகாரத்தில், ஏறக்குறைய முப்பது வரு
ஷங்களுக்குப்பிறகு சனகரீப் அசீரியரோடே எருசலேமுக்கு விரோத
மாய் யுத்தஞ்செய்யவந்தபோது, எசேக்கியா இராசா அவன் வராத
படி செய்த பிரயத்தனங்களில் அடியில் கண்டிருக்கிறதுமொன்றாயி
ருந்தது. பட்டணத்துக்குப் புறம்பேயிருந்த நீரூற்றுக்களைத் தூற்றுப்
போட தன் பிரபுக்களோடும், பராக்கிரமசாலிகளோடும் ஆலோசித்
தான். அதற்காக அவனுக்கு ஒத்தாசைபண்ணினார்கள். அசூரின் இரா
சாக்கள்கூடி, அநேகந் தண்ணீரைக்கண்டு பிடிப்பானேன்" என்று
எல்லா ஊற்றுகளையும், நடுத்தேசத்திற்பாயும் ஆற்றையும் தூற்றுப்
போட்டார்கள். 2 நளா. 32. 3, 4.

ஆகாசின் சரித்திரத்தில் நமக்கு விளங்காத மேற்சொல்லிய கேள்
விக்கு எசேக்கியாவின் சரித்திரத்திலுள்ள இச்சங்கதி உத்தரவுசொல்
லும். மேற்குளத்து மதகின் கடைசிமட்டும் ஆகாசுக்கு எதிர்கொண்டு
போக ஏசாயா உத்தரவுபெற்றான். இந்தக் குளத்து மதகு, பட்ட
ணத்திற்கு வெளியேயிருந்தபடியால் சத்துருவுக்கு உபயோகப்படக்
கூடியதாயிருந்தது. ஆதலால் எசேக்கியா பிறகு செய்ததுபோல
ஆகாஸ் தன் சனங்களோடே சத்துரு பட்டணத்திற்குட்பிரவேசியா
தபடி. தண்ணீரூற்றுகளைத் தூற்று, மதகுகளை அடைத்துப், பட்டணத்
தைக் காக்க இவ்வளவாய்ப் பிரயத்தனம்பண்ணிக்கொண்டிருந்தா
னென்று நினைக்க இடமுண்டு. அந்த இடம் அவன் கொண்டுபோன
செய்திக்கு ஏற்றதாயிருந்தது. கர்த்தரே பட்டணத்தைக் காக்க எண்
ணங்கொண்டிருந்தபடியால் அவர்கள் அவ்வளவாய்ப் பிரயாசப்பட
வேண்டியதில்லையென்று சொல்லப்போனான். மேலும் இராசாவோடு
அநேக சனங்களும் கூடியிருந்தபடியால் அவர்கள் யாவரும் அச்செய்
தியைக் கேட்கிறதற்குத் தகுந்த சமயமாயுமிருந்தது. தீர்க்கதரிசி
அந்த இடத்திற்கேன் போகவேண்டும்? தன் செய்தியைச்சொல்ல
அதெப்படித் தகுதியுள்ள இடமாயிருந்தது? என்று ஒன்றுஞ்சொல்
லாமல் "ஆகாசைச் சந்திக்க மேற்குளத்து மதகின் கடைசிவரைக்கும்
போ" வென்றுமாத்திரம் சொல்லியிருக்கிறான். அதற்குச் சரியான
முகாந்திரத்தை நாமாய் வேறோரிடத்தில் கண்டுபிடிக்கிறோம். ஏசாயா
ஆகாசைச் சந்தித்தபோது, பட்டணத்தைக் காப்பாற்றும்பொருட்டுப்
பிரயத்தனம்பண்ணிக்கொண்டிருந்தானென்று திட்டமாய்த் தெரியவ
ருகிறது. அப்படியிருக்குமானால் யுத்தஞ் செய்யுமுன்னே, அதைத்
தடுக்கத்தக்க சமயமிருந்தபோதே அது இன்னவிதமாய் முடியுமென்
று ஒருவருக்குந் தெரியாதிருக்கையில் யுத்தத்திற்கு அநேக வருஷங்
களுக்குப் பிறகு நடக்கப்போகிற காரியங்களையும் ஏசாயா முன்னறி
வித்திருக்கிறான். ஆகையால் அவன் சரியான தீர்க்கதரிசியாயிருந்தி
ருக்கவேண்டும். இந்தச் சின்னக்காரியத்தைக்கொண்டு இவ்வளவு
பெரிய காரியத்தை ஸ்தாபிக்கிறேனென்று எண்ணாதேயுங்கள். காரி
யம் அவ்வளவு அற்பமாயிருக்கிறதினாலேயே நம்முடைய காரியத்திற்கு
மிகவும் அனுகூலமாயிருக்கிறது. காரியங்கள் நடந்த பிறகு சம்ப
வித்ததையறிந்து தீர்க்கதரிசனமாக பொய் விசேஷங்களை எழுதுப
வன் தான் எழுதினது உண்மையுள்ளதுதானென்று ரூபிக்கத், தான்
சொன்ன தீர்க்கதரிசனம் மேற்குளத்து மதகின் கடைசியில் உரைக்
கப்பட்டதென்று குறிப்பாய்ச் சொல்லமாட்டான். அப்படிச் சொல்
லியிருப்பானானாலும், அதினின்று தான் வருவிக்க விரும்பின காரியத்
தை எடுத்துக் காட்டாதிருக்கவுமாட்டான்.

II. ஏசாயா 8. 2ஐ 2 இராசா 16. 10; 18. 2; 2 நாளா. 29. 1 முதலிய வாக்கியங்களோடு ஒத்துப்பார்த்து அவைகளினின்று தோன்றும் ஒற்றுமைகளினால் ஏசாயாத் தீர்க்கதரிசி ஆகாசின் காலத்திலிருந்தானென்று தீர்மானிக்கலாம். இவன் பாபிலோன் சிறையிருப்பைக் குறித்து அதிகமாய் முன்னறிவித்திருக்கிறபடியால் அது நிறைவேறுவதற்கு 140 வருஷங்களுக்குமுன்னையே தீர்க்கதரிசனமுரைத்தானென்று இதினால் தெரியவரும். பின்வருவதைக் கவனித்தால் அந்த ஒற்றுமை இன்னதென்று விளங்கும்.

சூரியாவும் இஸ்ரவேலும் யூதாவுக்கு விரோதமாய்ப் போர்செய்ய வந்தபோது அசூரியாவிடத்தில் உதவிதேடப்போகாதபடிக்கு யூதாவை இவன் அடிக்கடி எச்சரித்துவந்தான். அக்காலத்திலிருந்த யூதக்கோத்திரத்தார் அசூரியா பாபிலோனோடு ஒன்றித்திருக்கும்போது அவ்வளவு பேராசையுள்ளதாய்ச் சகலத்தையும் தன்வசப்படுத்தப்பார்க்குமென்றாவது, சூரியாவும் இஸ்ரவேலும் சீக்கிரம் அழிந்துபோமென்றாவது எண்ணாமல் போனார்கள். தீர்க்கதரிசியோ சத்துருக்களைவிடத் தனக்குத் துணையாயிருக்குமென்று இஸ்ரவேல் எண்ணின இராஜ்யத்தைக்குறித்து அதிக எச்சரிப்பாயிருக்கவேண்டுமென்று ஆவியானவரால் அறிந்துகொண்டான். ஓசேயா 5. 13; 7. 11; 8. 9. ஆகாஸ் இராசன் அசூரியாவோடு அதிக உறவாயிருந்தபடியால் (2 நாளா 28. 16.) அப்படிச் செய்வது மோசமென்று அவனுக்கு நன்றாய்க் காட்ட ஒருசுருளை எடுத்து அக்காலத்து வழக்கப்படியே அதில் மாஹேர்ஷாலல் ஹாஷ்பாஸ் என்று எழுதினான். இவ்வார்த்தைக்குக் கொள்ளைக்குக் கடுகிச், சூறைக்குத் தீவிரிப்பான் என்று அர்த்தம். இது அசூரியா இராஜ்யம் சூரியாவையும் இஸ்ரவேலையும் அழித்து கல்தேயாவோடு ஒன்றுபட்டபோது யூதாவையும் நிர்மூலமாக்குமென்பதைக் குறிக்கும். இராசாவின் மனதில் இது நன்றாய்ப் பதியும்படி செய்ய ஆசாரியனாகிய ஊரியாவையும் பெரேகியாவின்குமாரனாகிய சகரியாவையும் அதற்குச் சாக்ஷிகளாகவைத்துக்கொண்டான். ஏசாயா 8. 2.

இவர்கள் யார்? இன்னாரெனத்தெரியாதென்று சொல்லலாம். அல்லது ஆட்களல்ல, வெறும் பெயர்களென்று சொல்லலாம். ஆயினும் 2 இரா. 16ம் அதிகாரத்தைப் பார்த்தால் ஊரியாவென்னும் ஆசாரியன் இராசாவோடு அதிகமாய்ப் பழகினவனென்றும், யூதாவில் விக்கிரகாராதனையை ஏற்படுத்த இராசா அவனை ஓர் கருவியாகப் பிரயோகித்துவந்தானென்றும், தமஸ்குவில்செய்த பலிப்பீடத்தைப் போல ஓர் பலிப்பீடத்தை இவன் உண்டுபண்ணி இராசாவாகிய ஆகாஸ் கற்பித்தபடியெல்லாம் செய்தானென்றும் வாசிக்கிறோம். 16ம் வ. சாக்ஷியாகிய ஊரியா இவனாயிருப்பானாகில் சாக்ஷிகளிலொருவன் இராசாவின் உண்மையுள்ள ஊழியக்காரரில் ஒருவனென்று தெரியவருகிறது. சகரியாவென்ற மற்றச் சாக்ஷி 2 இரா. 18. 2ம் வசனத்தினால் இன்னானென்று தெரியவருகிறது. அங்கே என்ன வாசிக்கிறோம்? "எசேக்கியா இராசாவாகும்போது 25 வயதாயிருந்து எருசலேமில் 29 வருஷம் அரசாண்டான். சகரியாவின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் ஆபி." ஆகையால் எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாஸ் சகரியாவுக்கு மருமகனாயிருந்திருக்கவேண்டும். சாக்ஷியாகிய சகரியா இவனாயிருந்திருப்பானாகில் இரண்டாவது சாக்ஷியும் இராசாவின் கிட்டின இனத்தாரிலொருவனென்று அறியலாம். இருபேருடைய நாமங்களும் இரண்டு ஆகமங்களிலும் வருகிறபடியால் ஆட்கள் ஒன்றேயென்று எண்ண இடமுண்டு. சகரியா அல்லது ஊரியா என்



று ஒருவன் பேர்மாத்திரம் காணப்பட்டு, அந்த ஒருவன்மாத்திரம் இராசாவுக்குக்கிட்டினவனென்று இராசாக்களின் புஸ்தகத்தினால் தெரியவருமாகில், இரண்டு இடத்திலும் சொல்லப்பட்ட ஆள் ஒருவனேயென்று நிச்சயமாய்ச் சொல்வது இலேசல்ல. ஆனால் ஊரியாவின் பேரும் சகரியாவின்பேரும் தீர்க்கதரிசனத்தில் வருவதுபோல சரித்திரத்திலும் வருகிறபடியால் இரண்டிடத்திலும் சொல்லப்பட்டிருக்கிற ஆள் ஒருவனேயல்லாமல் இருவரல்ல. ஓரிடத்தில் இருபதுபேர் சொல்லப்பட்டிருக்க வேறிடத்திலும் அப்படியே சொல்லப்பட்டிருக்குமானால் இரண்டும் ஒன்றென்று யாதொரு சந்தேகமறச் சொல்லலாமே.

தான் எழுதினது உண்மையென்று இராசாவுக்கு ரூபிக்க அவருக்கு மிகவும் நெருங்கின இரண்டு சிநேகிதர்களை சாக்ஷிகளாக ஏற்படுத்திக்கொண்டது நியாயந்தான். இதினால் ஆகாசின்காலத்தில் ஏசாயா இருந்தானென்று திட்டமாயறிந்துகொள்ளுகிறோம். அவன் சொன்னது நடந்தபின் எழுதப்பட்ட பொய்த் தீர்க்கதரிசனமாயிருக்குமானால் இவ்வளவு சொற்பத் திருஷ்டாந்தரம் அதின் உண்மையை ரூபிக்கத்தக்கதாயிராது. தன்னுடைய சாக்ஷிகளை இராசாவுக்கு அறிமுகமானவர்களிலிருந்து தெரிந்துகொள்ளவுமாட்டான். பொய்யை எழுதுபவன் ஒருவேளை அப்படிப்பட்டவர்களைத் தனக்கு அநுகூலமாகத் தெரிந்துகொண்டாலும் இந்த ஊரியா, இராசாவுக்குப் பழக்கமாயிருந்தவனென்றும், சகரியா, இராசாவுக்கு இன்னவிதமாய் இனத்தானாயிருந்தானென்றும் சொல்லுவானல்லவா? சொல்லாமல் விடுவானா?

—— 0 ——

# கிறிஸ்துமார்க்க உதாரணம்.

## மூன்றாம் பங்கு.

### கிறிஸ்துமார்க்கத்திற்கு விரோதமாய்ப் பெரும்பாலும் கூறப்படுகிற ஆட்சேபனைகள்.

## 1. அதிகாரம்.

### சுவிசேஷங்கள் ஒன்றுக்கொன்று இருக்கிற விகற்பங்கள்.

நடந்த ஓர் சங்கதியைப்பற்றிச் சொல்லப்படுகிற வரலாற்றிலே சில வித்தியாசங்கள் தோன்றுவதால், அந்தச் சங்கதியை முழுவதுமாய்ப் பொய்யென்று சிலர் சொல்லும்படி துணிவது ஆச்சரியமே. மனித அத்தாட்சியானது, பெரும்பாலும் பொருள் சத்தியமும், வரலாறு வித்தியாசமுமாயிருக்கும். நியாயம் விசாரிக்கப்படுங் கோடுகளில் எங்கேயாவது போய்க் கவனித்தாலும், இப்படியே விளங்கும். பலபேர் ஒரு சங்கதியைப்பற்றிச் சாட்சிசொல்லும்பொழுதில், அவர்கள் சொல்லிய குறிப்புகள் ஒன்றுக்கொன்று விகற்பங்கள்போல காண்பது வழக்கந்தானே. எதிரி பட்சத்தில் பேசுகிற வக்கீல் அந்த விகற்பங்களை மிகுதியும் பாராட்டி, சொல்லப்பட்ட சங்கதி ஒன்றுமில்லையென்று சாதிக்கப் பார்ப்பான். சகலத்தையும் சீர்தூக்கிப் பார்க்கிற நியாயாதிபதிகளோ, அந்த விகற்பங்களை ஒத்துக்கொண்டும், சங்கதி மெய்தான் என்பதாய் அநேகம் விசை தீர்மானிப்பார்கள். பலபேர் சொல்லுகிற வரலா

றெல்லாம் ஒன்றுபோல் விகற்பமில்லாமல் சொல்வார்களானால், உடனே இது கட்டுச் சாட்சி என்றே தீர்மானிப்பார்கள். பலபேர் சரித்திரங்களை எழுதுவதிலும், இப்படியே யுண்டு. இன்ன சங்கதி இன்னவிதமாய் நடந்தது என்று ஒருவர் சொல்ல, வேறொருவர் அந்தச் சங்கதி நடந்தது வேறுவகைபோல் காட்டுகிறார். அப்படியிருந்தும், அந்தச் சங்கதி நடக்கவேயில்லை என்று யாராவது சாதிப்பார்களா? திருஷ்டாந்தரமாக, கிலவுதே இராயன் தன்னுடைய சொரூபத்தை தேவாலயத்தில் நிறுத்திவைக்கும்படியாகக் கொடுத்த கட்டளையை மாற்றும்படியாக, யூதர்கள் தானாபதிகளாகச் சிலரை, ரோமை நகரிக்கு அனுப்பினதாகச் சொல்லும் விஷயத்தில், பைலோ என்பவர், அவர்கள் புறப்பட்டது அறுப்புக்காலம் என்றும், இயோசேப்புஸ் என்பவர், அவர்கள் புறப்பட்டது விதைப்புக்காலமென்றுஞ் சொல்லுகிறார்கள். இந்தச் சரித்திரக்காரரிருவரும் ஒரே காலத்திலிருந்தவர்கள். இவர்களிடத்தில் விளங்கிய இந்த விகற்பத்தினாலே யாராவது இப்படித் தானாபதிகளை அனுப்பவேயில்லையென்று சொல்லுவார்களா? இங்கிலாந்துதேசத்துச் சரித்திரத்திலும் இதற்கு நல்ல திருஷ்டாந்தரங் காணலாம். இங்கிலாந்து தேசத்தை யாண்ட 2 ம் சார்ல்ஸ் என்பவர் காலத்தில் ஆர்கைல் என்ற பிரபுவினுடைய மரணத்தைப்பற்றி பெரிய விகற்பங் காணப்படுகிறது. கிலாரெண்டன் என்னும் சரித்திரக்காரன் அவர் தூக்குமரத்தில் சாகத் தீர்ப்புபெற்றாரென்றும், அன்றையே அந்தத் தீர்ப்பு நிறைவேற்றப்பட்டதென்றுஞ் சொல்லுகிறார். ஆனால் பர்னெற்றுமுதலான சில சரித்திரக்காரர் அவர் சிரச்சேதம்பண்ணப்பட்டு மரித்தாரென்றும், அந்த ஆக்கினைத்தீர்ப்பு சனிக்கிழமையிலே தீர்மானித்துத் திங்கள்கிழமையில் நிறைவேற்றப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். இந்த விகற்பத்தையிட்டு புத்திமான் எவனாவது ஆர்கைல் என்ற பிரபு மரண ஆக்கினை அடையவில்லையென்று சாதிப்பானா? ஒருவனும் அப்படிச் சாதிக்கமாட்டான். இதற்கொப்புமையாய்ச் சுவிசேஷத்தில் சொல்லிய சில சங்கதிகளை நடக்கவேயில்லையென்று சிலரும், நடந்ததோ இல்லையோ என்று சந்தேகத்திலிருக்கிறதாகச் சிலருஞ் சொல்லப் பார்க்கிறார்கள். திருஷ்டாந்தரமாக, கிறிஸ்துநாதர் சிலுவையிலறையப்பட்ட மணி நேரத்தைப்பற்றி இயோவான் அப்போஸ்தலன் சொல்லிய குறிப்புக்கும் மற்றவர்கள் சொல்லிய குறிப்புக்கும் வித்தியாசமுண்டு. அந்த வித்தியாசத்தை வைத்துக்கொண்டு கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்படவில்லையென்று சொல்லத் தகுமோ? அது எதிர்க்கப்படாத நிச்சயந்தானே. ஆனாலும் சிலபேர்கள் இப்படிப்பட்ட வித்தியாசங்களைக்குறித்து வைராக்கியமாய்ச் சாதிக்கிறதைப் பார்த்தால், கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்படவில்லையென்று நிச்சயிக்கவேண்டும், அல்லது சிலுவையில் அறையப்பட்டாரோ இல்லையோ என்று சந்தேகிக்கவேண்டும் என்கிறதுபோல வருகிறது.

சுவிசேஷ ஆகமங்களில் காணப்படுகிற விகற்பங்கள் சரியானபடி விகற்பங்களல்ல. ஒரு சுவிசேஷகன் சொல்லியதை வேறொரு சுவிசேஷகன் ஒருவேளை சொல்லாதிருக்கிறான். இப்படிச் சொல்லாதிருக்கிற குறிப்பை வைத்துக்கொண்டு, சிலர் அந்தச் சங்கதியை ஆட்சேபிக்க ஏற்படுகிறார்கள். உலக சரித்திரங்களை நாம் இப்படி ஆராயவும், ஆட்சேபிக்கவும்போனால் எல்லாம் விகற்பமென்றும், எல்லாஞ் சந்தேகமென்றுஞ் சொல்லவேண்டியதாய் வரும். ஆனாலும் சுவிசேஷகர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சங்கதியையும் எழுதவேண்டிய கட-



மையுள்ளவர்களல்லவே. அவர்களுக்கு எல்லாச் சங்கதிகளுந் தெரிந்திருந்தாலும், அவரவருடைய யுக்திக்குப் போதுமென்று தோன்றினதை மாத்திரம் எழுதினார்கள். கிறிஸ்துநாதர் பன்னிரண்டு சீஷர்களைத் தெரிந்துகொண்ட வரலாறு மற்றச் சுவிசேஷங்களில் சொல்லியிருக்க, யோவான் சுவிசேஷத்திலே அந்தச் சங்கதி சொல்லாததால், கிறிஸ்துநாதர் பன்னிரண்டு சீஷர்களைத் தெரிந்துகொள்ளவில்லையென்று யாராவது சாதிக்கத் தகுமா? யோவான் அப்போஸ்தலன், கிறிஸ்துநாதர் பன்னிரண்டு சீஷர்களைத் தெரிந்துகொள்ளவில்லையென்றாவது, கிறிஸ்துநாதர் ஏழு பேரை மாத்திரந் தெரிந்தாரென்றாவது எழுதியிருப்பாரானால் அது விகற்பமாகும். இப்போதுஇருக்கிறபடி விகற்பமில்லை. இதுபோல்வன அநேகமுண்டென்று காண்க.

அந்தந்தச் சுவிசேஷகன் சகல சங்கதிகளையும் அறிந்திருந்தாலும், தன் மனதில்கொண்ட நோக்கத்துக்கு இசைவான சங்கதிகளை மாத்திரம் எழுதுவானென்று நினைக்கத்தகுமே. அப்படியே மத்தேயு சுவிசேஷகன் கிறிஸ்துநாதருடைய உயிர்த்தெழுதலைக்குறித்து எழுதும்பொழுதில், கிறிஸ்துநாதர் பாடுபடுமுன்பு சீஷர்களுக்கு கலிலேயாவில் தம்மை வெளிப்படுத்துவதைக்குறித்துச் சொல்லியிருந்த வாக்குத்தத்தத்தை முக்கியமாக நினைத்து, அதனுடைய நிறைவேறுதலை நிச்சயிக்கும்பொருட்டு, அந்தச் சங்கதியையே முக்கியமாக எடுத்துக் காட்டுகிறார். ஆனாலும் கிறிஸ்துநாதர் வேறே எந்தச் சமயத்திலும் காட்சியாகவில்லையென்றாவது, அவர் கலிலேயாவிலே தான் காணப்பட்டது முதல்காட்சியென்றாவது இவர் சொல்லவில்லையே. ஆகையால் விகற்பமில்லை.

—— 0 ——

## CHRISTIAN CHURCH HISTORY.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 8. அதிகாரம்.

*பவுலுவின் முதலாம் பிரயாணம்—புறத்தேசத்தாரான கிறிஸ்தவர்களைப்பற்றி அந்தியோகியாவிலுண்டான பிரிவினை—எருசலேமிற் கூடிய பொதுவான சங்கம்—பவுலுக்கும் பேதுருவுக்கும் நேரிட்ட விபரீதம்.*

(தொடர்ச்சி.)

யூதர்கள் அனுசரித்த சில ஆசாரங்கள் மற்றவைகளைப்போல பிரயோசனமில்லாதவைகளாயிருந்தபோதிலும், அவர்கள் கிறிஸ்தவர்களானபிறகும் அவைகளைவிட்டு விடுவார்களென்று நினைக்கத்தகாது. இரத்தத்தோடே எந்த மாமிசத்தையாவது போசிப்பார்களா? விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போசனத்தைச் சாப்பிடுவார்களா? புறத்தேசத்தார் அதுகளை அரோசிக்கமாட்டார்கள். தங்கள் சொந்தச் சனத்தாரோடன்றி வேறெவர்களோடும் உட்கார்ந்து சாப்பிடச் சம்மதிக்கமாட்டாத யூதர்களோ புறத்தேசத்தார் மோசேயினால் வெகு கண்டிப்பாய்க் கற்பிக்கப்பட்டிருக்கிற இந்தக் கற்பனைகளை மீறி நடப்பதைப் பார்க்கும்போது எப்படியும் மனத்தாங்கலடையாதிரார்களே.

ஆகையால் சங்கத்தார் எழுதிய நிருபத்தில் யூதர்களுக்கு மனநோவு உண்டாகாதபடிக்கு சில விஷயங்களுக்கு விலகியிருக்கும்படி பலமாயேவுகிறார்கள். யூதர்களுக்கு அருவருப்பாயிருக்கத்தக்க எதையுஞ் சாப்பிடாதபடி புத்திசொல்லுகிறதோடு, அஞ்ஞானிகளுக்குள் சன்மார்க்க ஒழுக்கம் மிகவுங் குறைந்துபோயிருந்தமையால் வேசித்தனமாகிய பாவத்தைக்குறித்து விசேஷித்த ஓர் கற்பனையையும் எழுதுகிறார்கள்.

எருசலேமிற் கூடின சங்கத்தின் விவரமும், அதிற் பிறந்த தீர்ப்பின் தன்மையும் மேலே காட்டியபடிதானென்று தோன்றுகிறது. அப்போஸ்தலர்கள் புறத்தேசத்தாருக்கு இந்த விசேஷித்த கற்பனைகளையனுப்பியதற்கு பலரும் பல முகாந்தரங்கள் சொல்வார்கள். ஆகிலும் மேற்குறித்தபடி காரியத்தை நிதானிப்போமாகில், விலக்கப்பட்ட காரியங்கள் தப்பானவைகளாயேயிருந்ததினாலல்ல, புறத்தேசத்தார் மேற்படி விஷயங்களில் யூதருக்கு இணங்காவிட்டால் அவர்களும் இவர்களும் அன்பாயும் சமாதானமாயும் கூடியிருக்கமாட்டார்களென்று தெளிய விளங்கும். புறத்தேசத்தாரான கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளாமலிருக்க யூதர்கள் சம்மதித்துக்கொண்டதும் லேசான காரியமல்ல. இது விஷயத்தில் அப்போஸ்தலர் பிடிவாதமாய் நிற்கவேண்டியிருந்தது. சுன்னத்துப்பண்ணவேண்டுமென்கிற கற்பனைக்கு இணங்குவார்களாகில், நீதிமானாக்கப்படுதலாகிய முக்கிய உபதேசத்துக்குப் பங்கம் நேரிடுமே.

புறத்தேசத்தார், போசனத்துக்குரிய விஷயங்களில் யூதர்களுக்குப் பிரியமுண்டாக நடந்துகொள்வதினாலேயோ சுவிசேஷ உபதேசம் ஒன்றுக்காவது விபரீதம் நேரிடவேமாட்டாது. அதன்றியும் இந்த அற்ப விஷயத்திலும் அவர்கள் தம் சகோதரருக்கு இடறலாயிராதபடிக்கு நடக்கவேண்டுமென்று சுவிசேஷமும் போதிக்கிறதே. யூதர்கள் கிறிஸ்துநாதரை விசுவாசித்துப் பற்றிக்கொண்டதோடு, அவர்கள் தாமும் நியாயப்பிரமாணத்தின் சடங்காசாரங்களுக்கு நீங்கலானார்கள். ஆயினும் மேற்படி சுயாதீனத்தைப் பிரயோசனப்படுத்திக்கொண்டவர்கள் அநேகரல்லவென்று சொல்ல நியாயமுண்டு. அப்போஸ்தலர்கள் நியாயப்பிரமாணத்தின் சடங்காசாரங்களைக்குறித்துப் பெரும்பாலும் யூதர்களைப்போலவே நடந்துவந்தார்கள். சுவிசேஷம் எதார்த்தமாகவே சுயாதீனப்பிரமாணமென்று உணர்த்தி, சுவிசேஷத்தை அனுகூலமாய்ப் பிரபலியப்படுத்த இடமிருந்தபொழுதுமாத்திரம் அவைகளைக் கைக்கொள்ளவில்லை. புறத்தேசத்தாருக்கு விசேஷமாய் அப்போஸ்தலனான பவுலும் தன் யூத ஆசாரங்களை விட்டுவிடவேயில்லை. ஆகிலும் யூதர்களுக்கு இடறலாகாத இடங்களிலும், கிறிஸ்தவர்கள் புறம்பான கருமங்களை முக்கியப்படுத்த இனமான வேளைகளிலும், தாமும் புறத்தேசத்தாரைப்போல செய்ய சுயாதீனமுள்ளவரென்று தம் போதனையினாலும் மாதிரியினாலும் காண்பித்தார். பிறருக்கு மெய்யான அன்புபாராட்டினதும் சுவிசேஷம் அனுகூலமாய்ப் பிரபலியமாகவேண்டுமென்று விரும்பினதுமே, பவுல் அப்போஸ்தலனுடைய நடக்கைக்கும் எருசலேம் சங்கத்தாருடைய தீர்ப்புக்கும் ஏதுவாயிருந்த காரியங்கள். ஆகையால் இவைகளை மனதில் வைத்துக்கொண்டு விசாரித்தாலேயல்லாது, மற்றப்படி மேற்படி விசேஷங்களிரண்டும் விபரீதமாகவே தோன்றும்.

புறத்தேசத்தாரான கிறிஸ்தவர்களுக்கு சங்கத்தார் தீர்ப்பு துவக்கத்தில் மிகுந்த ஆறுதலையும் சந்தோஷத்தையுங்கொடுத்தது. என்னத்தினாலென்றால் அவர்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ள அவசியமில்லையென்று காட்டப்பட்டதே. போசன பதார்த்தங்களைக்குறித்து அதிற் சொல்லியிருந்ததும் அவர்களுக்கு அத்தனை பாரமானதல்லவே. ஆனாலும் சகோதர சிநேகத்துக்கும் சமாதானத்துக்கும் அனுகூலமாக அப்போஸ்தலர் ஏற்படுத்திய இந்தக் காரியம், பிற்காலத்தில் மனச்சாட்சிக்குப் பாரமும் அபத்திக்கு ஏதுவுமாயிற்று. இரத்தத்தோடு மாமிசத்தைச் சாப்பிடக்கூடாதென்ற கட்டளை யூதரும் புறத்தேசத்தாரும் சகோதர ஐக்கியமாய் நடந்துவந்தகாலத்தில் யூதருக்கு இடறல் நேரிடாதபடிக்குமாத்திரம் குறிக்கப்பட்டது, என்றாலும் அதற்கிருந்த அவசியம் முற்றும் அற்றுப்போனபிறகும், அதைக் கைக்கொள்ளவேண்டுமென்று சாதித்தார்கள். பல நூற்றாண்டுகள் வரையும் கிறிஸ்தவர்கள் தங்கள் போசனத்தில் எந்தவகையாயாவது இரத்தம் சேராதபடிக்கு மிகவும் எச்சரிக்கையாய் நடந்துவந்ததற்கு அத்தாட்சியுண்டு.



அதன்பிறகு பவுல் அப்போஸ்தலன் பேதுருவையும், யோவானையும் வழியனுப்பிக்கொண்டு புறப்பட்டுப்போனான். அவர்கள் இந்தச்சமயத்தில் ஒருவரைவிட்டு ஒருவர்பிரியும்பொழுது இவ்வுலகத்தில் திரும்பவும் ஒருவரை ஒருவர் காண்பார்களென்று நினைக்க இடமிருந்ததில்லை. அவரவர் தம்தம் வேலையை முன்னிலும் அதிக ஊக்கமாய் நடப்பிக்கும்படியாய்ப் போனார்கள். பவுல் புறத்தேசத்தாரைக் குணப்படுத்துவதற்கு விசேஷமாய் அழைக்கப்பட்டவனென்று அவர்களெல்லாருக்கும் திட்டமாய்த் தெரிந்துமிருந்தது. பேதுரு தன் சுதேசத்தாருக்கு விசேஷமாய்த் தன்னை அப்போஸ்தலனென்று எண்ணிக்கொண்டபோதிலும், பவுலுவை தனக்குச் சகோதரனாகவும் உடன் வேலைக்காரனாகவும் பூரணமாய் ஒப்புக்கொண்டிருந்தான். யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களின் சரீர நன்மைகளைப்பற்றி இருவரும் ஒன்றுபோல கவலையுள்ளவர்களாகவேயிருந்தார்கள். இரண்டு வருஷத்துக்குமுன் தொடங்கின பஞ்சமானது இன்னமும் அகோரமாகத்தானிருந்தது. அதினால் பவுல் அப்போஸ்தலன் தான் பிரயாணம்பண்ணின புறத்தேசங்களிலெல்லாம், கிறிஸ்தவர்கள் யூதேயாவிலுள்ள தங்கள் சகோதரருக்கு தர்ம சகாயம் செய்யும்படிக்கு ஏவிவிடும்படியாய் ஒப்புக்கொண்டான். தர்மசம்பந்தமான இந்தத் தீர்மானத்தோடு அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோனார்கள். பவுலும், பருனபாவும் சங்கத்தாருடைய தீர்ப்பைக்கொண்டு அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்தபொழுது, அவர்கள் கொண்டுவந்த தீர்ப்பு புறத்தேசத்தாரானவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லையே.

விருத்தசேதனத்தைக்குறித்து அதன்பின் தொல்லை நேரிட்டதாகத் தோன்றவில்லை யூதரும் புறத்தேசத்தாரும் சகோதர ஐக்கியமாய் சகவாசஞ்செய்தபொழுது சங்கத்தாருடைய தீர்ப்பு மிக விவேகமும் புத்தி பூர்வமுமானதென்று விளங்கியது. இப்பேர்ப்பட்ட புத்திபோதனைகளையடைந்திருந்தும் புறத்தேசத்தார் போசனவிஷயத்தில் ஓரோர் வேளை யூதர்களுக்கு மனஸ்தாபத்தையுண்டுபண்ணினதுமுண்டு. யூதர்கள் மட்டுமிஞ்சி விபரீதம் காட்டினாலும் காட்டியிருக்கலாம். பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தது இக்காலமாயிருக்கலாம். அல்லது இதற்குச் சற்றுப் பிறகாயிருக்கலாம். எப்பொழுதாயிருந்தாலும் இந்தச் சமயத்தில் அவன் மறுபடியும் பவுலுவைக்கண்டு சந்திக்க நேரிட்டது. இவ்விரு அப்போஸ்தலர்களும் திரும்பவும் சிநேகமேனாயாக

வே பிரிந்துபோயிருப்பார்களென்று நம்ப இடமிருந்தபோதிலும், அவர்களுக்குள் சிறிதுகாலம் தர்க்கமும் வாக்குவாதமும் மேலிட்டிருந்தது. பேதுரு இதற்குமுன் புறத்தேசத்தாரோடு கலந்து சகவாசம்பண்ணி, யூத முறைமைகளையும் ஆசாரங்களையுங் கைக்கொள்வது அவசியமல்லவென்று உணர்ந்து காட்டியிருந்தபோதிலும், இப்பொழுது புறத்தேசத்தாரோடு கலந்து போசனபானம்பண்ண மனமில்லாதிருந்த யூதர் பட்சமாய் நின்றுகொண்டு, அவைகளை அதிக முக்கியமென்று காட்டுகிறதுபோல தோன்றினன். பருணபாவும் அவன் மாதிரியைப் பார்த்து விலகிக்கொண்டான். பவுலுவோ இன்னும் உறுதியாயே நின்றான். மேலும் இப்பேர்ப்பட்ட புறம்பான கருமங்களை முக்கியப்படுத்துகிறதினாலே, பலவீனச் சகோதரர் அவைகளை எதார்த்தமாய் அவசியமென்று எண்ணுவார்களென்று உணர்ந்து, பேதுருவுக்கு இதைப் பகிரங்கமாய் எடுத்துக்காட்டி அவனுடைய நடபடியைக்குறித்துக் கண்டித்தான். புறத்தேசத்தார் மிகுத்திருந்த அந்தியோகியாச் சபையார் இவ்விஷயததைக்குறித்துத் தவறுவார்களென்று நினைக்க ஏதுவில்லாவிட்டாலும், கிறிஸ்தவ சுயாதீனத்தைப் பற்றி பவுலுக்கிருந்த தெளிவு இல்லாதவர்கள் எருசலேமில் இன்ன மிகுதியாயிருந்தார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை.

---

## 4. அதிகாரம்.

பவுல் அப்போஸ்தலன் இரண்டாவது பிரயாணத்தைத் தொடங்கி மக்கேதோனியா வழியாய் அத்தேனே கொரிந்துப்பட்டணங்களுக்குப்போனதும்,—எருசலேமுக்குத் திரும்பி அப்பால் எபேசுவில் மூன்று வருஷம் சஞ்சரித்ததும்,—கொரிந்துச் சபையிலுண்டான குழப்பங்களும்,—பவுல் மறுபடியும் கொரிந்துப்பட்டணத்துக்குப் போனதும்,—மக்கேதோனியா வழியாய் எருசலேமுக்குத் திரும்பியதும்,—செசரியாவுக்குச் சிறையாயனுப்பப்பட்டதும்,—அப்போஸ்தலருடைய முயற்சிகளும்,—லூக்கா தன்சுவிசேஷத்தை எழுதினதும் அடங்கியது.

புறத்தேசத்தாருக்கு அப்போஸ்தலனான பவுல் சுவிசேஷத்தைப் பிரபலியப்படுத்த தமது இரண்டாம் பிரயாணத்தை ஆரம்பிக்கக் காலமாயிற்று. முன்போல பருணபாவோடு பிரயாணஞ்செய்ய யோசித்தார். என்றாலும் பருணபாவின் சகோதரி மகனைக் கூட்டிக்கொண்டு போவதைப்பற்றி அவர்களுக்குள் விபரீதம் நேரிட்டபடியால், அவர்கள் வெவ்வேறு திசையாய்ப் புறப்பட்டுப் போனார்கள். தேவன் தீமையிலிருந்து நன்மையைப் பிறப்பித்தாரென்று இந்தச் சங்கதியில் வெகு யதார்த்தமாய்ச் சொல்லலாம். இவ்விரு அப்போஸ்தலரும் ஒருவரோடொருவர் மனஸ்தாபமாயிருப்பது தீமைதான். ஆகிலும் அவர்கள் பிரிந்துபோய் உழைத்ததினால் சுவிசேஷம் வெகுதூரத்துக்கு அதி தீவிரமாய்ப் பிரபலியமாவதற்கு ஏதுவாயிற்று. பருணபா என்பவன் தன் பிரயாணததைத் துவக்கியபோது சீப்புரு தீவுக்குப்போனது இயல்புதான். அது அவனுடைய ஜனனதேசமல்லவா? பவுல் சிலிக்கியாவிலுள்ள சபைகளைப் போய்ப் பார்த்ததும் இயல்புதான். அங்குள்ள சபைகள் முதல்முதல் அவரால் ஸ்தாபிக்கப்பட்டவைகளல்லவா? அவர் தமது முதற் பிரயாணத்தில் அவைகளைப் பார்க்கவுமில்



லையே. இப்போது அவரோடுகூட பிரயாணம்பண்ணினவன் சீலா என்பவன். அவர் எருசலேமிலிருந்து வந்தபொழுது அவரோடுகூட அனுப்பப்பட்டு வந்தானே. அவர்கள் சிலிக்கியாவைக் கடந்துபோய், முந்தின வருஷத்தில் பவுல் பருணபா என்பவர்களால் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட பிசிதியா லிக்கவோனியா நாடுகளுக்கு வந்தார்கள்.

———— o ————

## விஷபேதி.—Cholera.

குறித்த சில பிரமாணங்களைக் கைக்கொள்வதினால் விஷபேதியும் மற்ற வியாதிகளைப்போல அநேகம் பரம்பாதபடிக்குத் தடைப்படுத்தப்படவுஞ் சொஸ்தமாக்கப்படவுங் கூடியதாயிருக்கின்றது. அது எவ்வகையான சனங்களுக்குள் அதிகம் பரம்புகிறதென்று கவனித்தால், அதைத் தவிர்க்கும்படி சில காரியஞ் செய்யலாமென்று நமக்கு விளங்கும். சரீரம், சீலை, வீடு, வளவு முதலானவை சுத்தமாயிருக்கவேண்டும். குளிர் பிடியாமற் சரீரத்தை அடிக்கடி கழுவுதல் உத்தமம். ஊத்தை வஸ்திரம் அணிதல் புத்தியல்ல. வளவை அடிக்கடி கூட்டித் துப்பரவுபண்ணிக் குப்பைகளை வீட்டுக்குத் தூரமான இடத்திற் கொண்டுபோய்க் குவித்து மண்ணினால் மூடவும். தூரத்தில் இறால் மீனைக் கழுவி உடனே அந்த விடத்தைச் சுத்தம்பண்ணவும். மலசலவாதிகளுக்குப் போகுமிடஞ் சுத்தமாயிருக்கவேணும். மலத்தைக் கிடங்குவெட்டி மண்ணால் மூடும்படி ஒழுங்குபண்ணல் உத்தமம். வளவில் நீர் நிலையாயிருக்கப்படாது. கிணறுகளை அடிக்கடி சுத்தம்பண்ணவேணும். வளவிலிருக்கும் மழைத்தண்ணீர் கிணற்றுக்குட் போகாதபடி அதற்குச் சுவர் கட்டு. சாப்பாடும் நித்திரையும் ஒழுங்காயிருக்கட்டும். இலேசிற் சமிக்கக்கூடாத எந்தப் பதார்த்தத்தையாவது புசிக்கப்படாது. வெறியை உண்டாக்கும் கள்ளுச் சாராயம் அரக்கு முதலானவைகளைப் பரிமாறப்படாது. இவைகளைப் பரிமாறுகிறவர்கள்தான் முதன்முதல் இதற்கு இரையாகிறார்கள். வியாதிவந்தவுடன் மருந்து சாப்பிட்டாற் சுகம் வரக்கூடும். விஷபேதி காலத்தில் வயிற்றுக்கழிச்சல் அதிகமாம். அது இதற்கு ஒரு முற்தூதுபோலிருப்பதால் அதை உடனே மாற்றவேண்டும். விஷபேதி இராக்காலத்தில் அதிகமாயுண்டாகிறபடியால் ஒவ்வொருவனும் சரியான மருந்து வைத்திருக்கவேண்டும். வைசூரியைப்போல ஆளுடன் ஆள் முட்டுவதினால் இவ்வியாதி தொற்றாது. மலமுஞ் சத்தியும் தொற்றுக்கு ஏதுவாயிருக்கின்றன. இவைகளினாற் துவக்கத்தில் அதிகம் மோசம் வராதென்பது வைத்தியருடைய கருத்தாயினும் வீட்டுக்கும் கிணற்றுக்கும் தூரமான விடத்தில் அவைகளைக் கொண்டுபோய்த் தாழ்த்துப்போடவேண்டும். புடவை பாய் முதலானவை அழுக்காய்ப்போனால் உடனே சுத்தம்பண்ணு. அல்லது சுட்டெரித்துப்போடு. உதவி அவசரமாயிருந்தாலொழிய துன்பக்காரருடைய வீட்டுக்குப் போகப்படாது. போகவேண்டிய அவசரம் நேரிடும்போது திருத்தியாய்ச் சாப்பிட்டுக்கொண்டு தேவ நம்பிக்கையுடன் போய்ச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்தவுடன் திரும்பிவிடவும். நிற்கவேணுமானால் சாப்பாடு நித்திரை முதலானதைப்பற்றிக் கவனமாயிரு. இக்காலத்தில் மனச்சந்தோஷமும் தைரியமுமே பெரும் பாக்கியமாம். விஷபேதியிற் செத்த சவங்களைக் கூடிய சுறுக்கிற் புதைப்பது உத்தமம். ஆனால் சிலது அடக்கத்திலிருக்

கக்கூடும். அதைப்பற்றி கவனமாயிருக்கவேணும். நாய் நரிமுதலான மிருகங்கள் கிளறுமதும் நாற்றமான மணம் வெளியே வீசாமலும் அங்க தாழ்விற் கிடங்கு கிண்டிப் புதைக்கவேண்டும். இக்கொள்ளைநோய் பரம்பும்போது வாசிக்கத் தகுந்த சங்கீதங்களாவன. 23. 103, 91. 121. 34. 115. இச்சங்கீதங்களை வாய்ப்பாடம்பண்ணி இராக்காலங்களிலும் மனத்திடுக்கட்டமிருக்கும் போதும் சொல்லி, மனதைத் தேற்றிக்கொள்ளவும்.

(யாழ்ப்பாணப் பஞ்சாங்கம்.)

## பஞ்சாங்க விளக்கம்.

உலகத்திலுள்ள எல்லாச் சாதியாரும், நாள் துவங்கி எண்ணுகிறதில் ஒத்துப்போகவில்லை. இங்கிலிசர் அத்தசாமந் துவங்கியும் தமிழர் சூரியோதயந் தொடங்கியும் எண்ணுகிறார்கள். இன்றைக்குத் தைமீ 1உ என்று சொல்லும்போது இராத்திரி 12 மணியில் இங்கிலிசருக்கு 1உ தொடங்க, தமிழருக்கு விடிய ஆறுமணிக்கு 1உ தொடங்கிற்று. ஆகவே ஆறுமணித்தியாலங்கள் அல்லது 15 நாழிகை இங்கிலிசருடைய நாள் முந்திவிடும்.

சூரியன் ஆறுமணிக்கு எப்போதும் உதயம்பண்ணுகிறதில்லை. ஒரு வருஷத்தில் இரண்டு முறை மாத்திரம் ஆறுமணிக்கு உதயம்பண்ணும். மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய இந்நாலு மாசங்களிலும் ஆறுமணிக்குப் பின்னும் எஞ்சிய எட்டு மாசங்களிலும் ஆறுமணிக்கு முன்னும் உதிக்கும். அவ்வண்ணம் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாசங்களில் ஆறுமணிக்கு முன்னும் எஞ்சிய எட்டுமாசங்களிற் பின்னும் சூரியன் அஸ்தமிக்கும்.

நிரட்ச ரேகையிலிருக்கிறவர்களுக்குப் பகலும் இரவும் எப்போதுஞ் சமன். ஆனால் இவ்விரேகைக்கு வடக்கே அல்லது தெற்கே போகப் போகப் பகல் இராமானங்கள் வித்தியாசப்படும். நாம் நிரட்சரேகைக்கு 9 பாகை வடக்கேயிருக்கிறோம். எங்களுக்கு ஆனி ஆடி மாசங்களில் இரவிலும் பகல் ஏறக்குறைய இரண்டு நாழிகை கூடவாம். இப்படிப் பகல் இராமானங்கள் வித்தியாசப்படுகின்றமையால் அவைகளைக் குறிப்பது அவசியம்.

பகல்மானமென்பது சூரியோதயம் துவங்கிச் சூரிய அஸ்தமனம் வரைக்குமுள்ள காலமாம். இராமானமென்பது சூரிய அஸ்தமனந் தொடங்கிச் சூரியோதயம் வரைக்குமுள்ள காலமாம். பகல் இராமானங்கள் ஒவ்வொரு மாதப் பஞ்சாங்கத்தின் மேற்பக்கத்திற் காணப்படும். இவைகள் அந்தந்த மாதத்தின் முதற் திகதிக்காம். சூரியோதயத்துக்குமுன் முக்கால் நாழிகைக்குஞ் சூரிய அஸ்தமனத்துக்குப் பின் முக்கால்நாழிகைக்கும் சந்திவெளிச்சந் தோன்றும். ஆகவே இதுவும் பகல்மானத்துடன் சேர்ந்தாற் பகல்மானம் ஒன்றரை நாழிகை அதிகப்படும்.

(யாழ்ப்பாணப் பஞ்சாங்கம்.

## நாளது சங்கதிகள்.

**இங்கிலாந்து.** "சீர்திருத்தபத்திரம்" இப்போது தேசச்சட்டமாயிற்று. சொந்தவீட்டிலாவது குடிக்கூலிக்கு வாங்கின வீட்டிலாவது



ஒரு வருஷக்காலமேனும் குடியிருந்த எந்த மனிதனும் மேற்படி சட்டத்தின்மூலமாய் இனி பார்லிமெந்து சங்கத்தின் அவயவத்தாரைத் தெரிந்தேற்படுத்துவதில் சம்மதசீட்டுகள் கொடுக்கலாம். முன்னே அது விஷயத்தில் சங்கற்பசீட்டு கொடுக்கும் அந்தஸ்தில்லாத அநேக ஆயிரம்பேருக்கு இப்போது அந்த மானியங் கிடைத்திருக்கிறது. ஆக இத்தனை பெயருக்கென்று ஆள்த்தொகை இன்னம் தெரியாது. மேலும் 2 பேரைத் தெரிந்துவந்த சில சிற்றூர்களுக்கு இனிமேல் ஒற்றை ஆள்மாத்திரம் தெரிந்துகொள்ள இடங்கொடுக்கும். இதற்கு பிரதியாக சாதாரணதொகை சரியிடும்படி சில பெரிய நகரங்களும் கௌண்டி நாடுகளும் இனி அதிகம்பேரைத் தெரிந்தெடுக்க அதிகாரம்பெறும். ராச்சிய சுகவாழ்வை இச்சட்டம் என்ன செய்யுமோ என்பது இதுவரையும் விளங்கவில்லை.

**பிரான்ஷியா.** இத்தேசத்து சக்கரவர்த்தியும் அவரது பத்தினியும் அவுஸ்திரிய சக்கரவர்த்தியைத் தரிசிக்கப்போயிருந்தார்கள். இதையிட்டு, பிரான்ஷியா புருஷியாவுக்கு விரோதமாய் அவுஸ்திரியாவோடே சேர்ந்துகொள்ளும் என்றும், சீக்கிரத்திலே ஒரு யுத்தம் ஆரம்பிக்கும் என்றும் அநேகர் எண்ணமிட்டார்கள். ஆகிலும் மேற்படி சக்கரவர்த்தியானவர் பிரான்ஷியாவுக்குத் திரும்பினதின்மேல், தாம் கூடிய அளவில் சமாதானத்தையே பரிபாலிக்க நிர்ணயங் கொண்டிருப்பதாக பலமுறையும் ஆஸ்தானப் பிரசங்கங்களில் வெளியிட்டார். ஆகிலும் இது எல்லாருக்கும் திருப்திகரமாய்க் காணவில்லை.

**இத்தாலியா.** இத்தாலியரான சிறிது ராணுவக்கும்புகள் பாப்புவின் மாகாணங்களில் யுத்த பிரவேசம் செய்ய பல தடவை பிரயத்தனித்தார்கள். கரிபால்டி என்பவரும் பாப்புவை எதிர்த்து அம்மாகாணங்களுக்குள்ளே நுழைய வகை பார்க்கையில், இத்தாலியா அரசாட்சியார் அவரைப் பிடித்து, ஒரு அலங்கத்துக்குள்ளே அடைத்தார்கள். ஆகிலும் சிலகாலத்துக்குப்பின் அவர் காப்பிரிறு தீவில் உள்ள தமது இல்லிடத்துக்குத் திரும்பிப்போகும்படி விடுதலைபெற்றதில், கரிபால்டி தன்னிஷ்ட சேனைகளோடு ரோமை நகரத்துக்கு நாலைந்து மைல் தூரமளவு கிட்டி மண்டிரோ டொன்டோ கோட்டையை மிக மலைவுடன் கைவசப்படுத்தினார். அங்கிருந்த இராணுவவீரர் கைதிகளானார்கள். நவம்பர் மீ 1உ இத்தாலிய இராணுவவீரர் பாப்புவின் எல்லைக்குள் பலஸ்தானங்களைப் பிடித்துக்கொண்டார்கள். நவம்பர்மீ 3உ பாப்புப் பட்சத்து ராணுவீரர் கரிபால்டியின் ராணுவவீரரை முழுதும் அபஜெயப்படுத்தினார்கள். கரிபால்டி தளகர்த்தர் பிற்பாடு வலிய இத்தாலிய உத்தியோகஸ்தரிடத்தில்போனார். அவர்கள் அவரைப் பிடித்து, ப்லோரென்ஸ் நகரத்துக்குக் கைதியாக அனுப்பினார்கள். அப்படிச் செய்யாதபட்சத்தில், பிரான்ஷியருடைய பிரியக்கேடு உண்டாகுமென்று இத்தாலிய துரைத்தனத்தார் அஞ்சினார்கள். ஆகிலும் பாப்பானவர் தம் லோகார்த்தமான ஆளுகையை இனி நெடுங்காலம் காத்துக்கொள்ளார்.

**கல்கத்தா.** போனமாசத் துவக்கத்தில் கல்கத்தாவையடுத்து பெரிய புசலடித்தது. அதனாலே சுமார் 1000 பேர் பிராணசேதம் அடைந்ததுமன்றி, அநேக கட்டிடங்களும் இடிந்தன. சிறிது கப்பல்களும் சேதமடைந்தன. கடலிலும் தரையிலும் சொத்து நஷ்டம் அதிமாயிற்று.

டிசம்பர்௴ நாள் 31. கார்த்திகை௴ ௧௭உ முதல், மார்கழி௴ ௧௮உ வரை.

| வாரம். | ஆங்கிலத் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | ௧௭ | கருத்தரைப் பின்பற்றிநடக்க உடம்படிக்கை பண்ணினான். 2இரா. |
| தி | 2 | ௧௮ | கருத்தரண்டைக்கு முழு இருதயத்தாலுமனந்திரும்பினான். 15. |
| செ | 3 | ௧௯ | என் பராபரன் என்னைக் காத்துக்கொள்ளக்கடவர். 1நாளா. 11. 19. |
| பு | 4 | ௨௰ | உம்முடைய பராபரன் உமக்கு அனுக்கிரகஞ் செய்கிறார். 12: 18. |
| வி | 5 | ௨௧ | தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டார்கள். 15: 14. [16 : 4. |
| வெ | 6 | ௨௨ | பராபரனாகியகருத்தருடைய நாமத்தைப்பிரஸ்தாபம்பண்ணுங்கள். |
| ச | 7 | ௨௩ | அவர் செய்கைகளை சனசதனங்களுக்குள்ளே அறிவியுங்கள். 8. |
| ஞா | 8 | ௨௪ | அவரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணுங்கள். 9. |
| தி | 9 | ௨௫ | அவருடைய அதிசயங்களையெல்லாந் தியானியுங்கள். 9. |
| செ | 10 | ௨௬ | கருத்தருக்கு நான் பயபத்தியானவன். யோனா. 1 : 9 |
| பு | 11 | ௨௭ | உமக்குச் சித்தமாயிருக்கிறபடியே தேவரீர் செய்கிறீர். 14. |
| வி | 12 | ௨௮ | கருத்தருக்கு மிகவும் பயப்பட்டார்கள். 16. |
| வெ | 13 | ௨௯ | கருத்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனைகளைப் பண்ணினார்கள். 16 |
| ச | 14 | ௧ | நான் நெருக்கப்படுகையில் கர்த்தரைநோக்கிக்கூப்பிட்டேன். 2 : 2 |
| ஞா | 15 | ௨ | என் ஆத்துமந் தொய்ந்துபோகையில் கருத்தரை நினைத்தேன். 8. |
| தி | 16 | ௩ | நான் பண்ணின பொருத்தனைகளைச் செலுத்துவேன். 10. |
| செ | 17 | ௪ | இரட்சிப்பு கருத்தருடையது. 10. |
| பு | 18 | ௫ | உன்தேவனாகிய பராபரனை பரிட்சைபாராதிருப்பாயாக. மத். 4: 7. |
| வி | 19 | ௬ | உன் தேவனாகிய பராபரனைத் தொழுதுகொள். 10. |
| வெ | 20 | ௭ | அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக. 10. |
| ச | 21 | ௮ | நாமே அவருடைய ஆலயம். எபி. 3: 6. |
| ஞா | 22 | ௯ | உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். 9. |
| தி | 23 | ௰ | ஒருவருக்கொருவர் புத்திசொல்லி வருவீர்களாக. 13. |
| செ | 24 | ௧௧ | அவர் தமது சொந்தத்திற் சேர்ந்தார். யோவான் 1 : 11. |
| பு | 25 | ௧௨ | இயேசுக்கிறிஸ்து மாமிசத்திலே வந்தார். 1 யோவான் 4 : 2. |
| வி | 26 | ௧௩ | பராபரன் அன்பாகவேயிருக்கிறார். 8. |
| வெ | 27 | ௧௪ | தமது குமாரனையனுப்பினதினாலே அன்புண்டாயிருக்கிறது. 10. |
| ச | 28 | ௧௫ | பிதா குமாரனை உலக இரட்சகராக அனுப்பினார். 14. |
| ஞா | 29 | ௧௬ | நித்திய சீவன் அவருடைய குமாரனிலிருக்கிறது. 5 : 11. [சங். 90:9. |
| தி | 30 | ௧௭ | எங்கள் வருஷங்களை ஒரு கதையைப்போல கழித்துவிட்டோம். |
| செ | 31 | ௧௮ | சென்ற வருஷங்களைத் தியானியுங்கள். 5 மோசே 32 : 7. |

## விசேஷித்த நாட்கள்.

1. அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள, முதலாம் ஞாயிறு.
8. அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள, இரண்டாம் ஞாயிறு.
11. பௌர்ணமி.
15. அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள, மூன்றாம் ஞாயிறு.
22. அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள, நான்காம் ஞாயிறு.
25. நமது இரட்சகரின் ஜனனநாள். (அமாவாசை.)
29. கிறிஸ்து பிறந்த பண்டிகைக்குப் பின்வரும், ஞாயிறு.

காலத்திற்பெய்த மழைபோல.
காலத்துக்கேற்ற கோலம்.

காக்கைபேர்க்கைத் தப்பனம்பழம் விழுந்ததம்.
காகங்கொக்கரிக்க இருகாசங்குறைந்தபோல.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

MARCH. 1868. மார்ச்சு௴.

## CONTENTS.


Recreations in Astronomy.... ... ... ... 42
Christian Church History. ... ... ... ... 46
On the Prophetical books of the Old Testament. ... ... ... ... ... ... 49
The Miracles of Christ. ... ... ... ... 52
The Preacher's Hand-Book. .. ... ... 56
News. ... ... ... ... ... ... ... ... 58


## அட்டவணை.


வானசாஸ்திரத்தைக்குறித்தது. ... ... ௪௨
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ௪௬
பழயவேற்பாட்டு தீர்க்கதரிசன ஆகமங்களின்பேரில். ... ... ... ... ௪௯
கிறிஸ்துவானவர் செய்த அற்புதங்கள். ௫௨
பிரசங்கிகள் கைவல்யம். ... ... ... ௫௬
வர்த்தமானங்கள். ... ... ... ... ௫௮



PALAMCOTTAH:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY
L. DEVANAYAGAM PILLAY.

1868.


காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
காற்றைப்பிடித்துக் கக்கத்தில் அடக்குதுபோல.

கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டதுபோல.
இளைத்தவனுக்கேன் நாட்டுவெளிப்பம்.

௩. மார்கழி. ௲அ௱கூஅ௵.

# RECREATIONS IN ASTRONOMY.

## வானசாஸ்திரம்.

### X. அதிகாரம்.

நட்சத்திரங்களைக் குறித்தது.

(தொடர்ச்சி.)

வானசாஸ்திர சம்பந்தமாய்ச் சொல்லக்கூடிய விவரமெல்லாம் மூன்று பிரிவாய் விளங்கும் என்று முந்தின லக்கத்திற் காட்டப்பட்டதே. அதில் மூன்றாம் பிரிவுக்கு சோதிமண்டல விவரம் என்று பெயர் சொல்வோம். சோதிமண்டலத்தை விவரிப்பதில், ஹிப்பார்க்கு என்பவர் கண்டுபிடித்த நூதனங்கள் தொடங்கி, இப்தோலமி, கலிலேயோ, பிராட்லி, ஹர்ஷல், பெசல், ராஸ்முதலியவர்களால் தெரியவந்த நூதனங்கள் முறையே எடுத்துக்காட்டப்படும். அவைகளைக்கொண்டு சோதிமண்டலம் எவ்வளவோ அளவறுக்கப்படாத விசாலமுள்ளதாயிருக்கவேண்டுமென்று நாம் உணர்ந்துகொள்ளலாகும்.

வானுலகங்களின் ஒழுங்கு அசாரம் இயக்கம் என்றிவைகளைக்குறித்து பூர்வீகத்தார் கொண்டிருந்த எண்ணங்கள் வெகுகாலம்வரையும் குழப்பமும் தாறுமாறுமாகவேயிருந்தது. கிறிஸ்துவுக்கு முந்தின இரண்டாம் நூற்றாண்டிலிருந்த ஹிப்பார்க்கு என்பவன்தான் முதல்முதல் வானசாஸ்திரத்தை அபிவிர்த்திசெய்யத் தொடங்கி, வானதோற்றங்களை ஒருவாறு திட்டமாய் விவரித்தவன். பூமியானது அசைவின்றி ஒரேநிலையாய் நிற்கின்றதென்று வைத்துக்கொண்ட கோட்பாட்டினால் அநேகமான சிக்குமுக்குகளும் தொல்லைகளும் நேரிட்டன. பூகோளத்தின் வருஷாந்தர ஓட்டம்புலப்படாதபடியால், சூரிய சந்திராதிகளே ஓடுகின்றன என்றெண்ணவும், அவ்வோட்டங்களை சிக்குமுக்காக்கவும் ஏதுவாயிற்று. பூமியின் நாள் ஓட்டத்தின்மூலமாய் யூகையாய் ஓர்மண்டலம் எட்டாவதாகத்தோன்றவும், சமஸ்த அண்டங்களும் பூமியைச் சுற்றிவருகின்றன என்று கொள்ளவும் நேரிட்டது. இதெல்லாம் குறைவு என்பதற்குச் சந்தேகமில்லை. குறைவுதானென்றாலும் நாம் வழக்கமாய் நினைக்கிற அவ்வளவு பெரிய குறைவு என்று சொல்லத்தகாது. வானசாஸ்திரத்துக்குரிய தத்துவப்பிரமாணங்கள் அக்காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லையே. ஆகையால் வானதோற்றங்களைத் திட்டமாய் விவரிப்பதற்கு அப்போது அது அவசியம் என்றே சொல்லவேண்டும். நாம் வழக்கமாய்ச் சொல்லுகிறபடி சூரியன் அசைவற்றிருக்கிறது என்ற கோட்பாடும் விபரீதந்தானே. மேலும் தற்காலத்தில் கிரகதோற்றங்களை விவரிப்பதில் கோப்பர்ணிக்கு என்



பவருடைய கோட்பாட்டை நாம் அங்கிகரித்துக்கொண்டபோதிலும் சந்திரனைப்பற்றி ஆராயும்பொழுதில் முந்தியகோட்பாடே அதிகமாய் உபயோகப்படுகிறது. எதார்த்தமாய்ச் சொல்லவேண்டுமாகில் சூரியனும் பூகோளமும் ஒன்றுபோலவே ஓயாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றன. பூகோளம் தன் அயனத்தில் இயங்குகிறதுபோலவே சமஸ்த உலகங்களும் ஏகவெளியில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகையால் ஒன்றுக்கொன்றுள்ள இயக்க வேற்றுமையைக்கொண்டே எந்த வானதோற்றத்துக்கும் நியாயங்காட்டவேண்டியிருக்கிறது. ஆகவே ஹிப்பார்க்கு இப்தோலமி என்பவர்களுடைய ஏற்பாடு அக்காலத்துக்கு அவ்வளவு குறைவுள்ளதென்று சொல்லப்படாது. அப்பால் கோப்பர்ணிக்கு என்பன் தோன்றி சூரியனை மையமாக்கினதினால், முந்தின ஏற்பாட்டிலுள்ள சிக்கு முக்குகள் அநேகம் அறுபட்டு, வானதோற்றங்களுக்கு எளிதில் நியாயஞ்சொல்ல அனுகூலமுண்டாயிற்று. அதற்குக் கொஞ்சக்காலத்துக்குள்ளே கெப்லர் எழும்பி, அவர் பெயர் வழங்கும் தத்துவப்பிரமாணங்கள் மூன்றையுங் கண்டுபிடித்தார். அவர் சூரியனை மையமாகக்கொள்ளும்போது கிரகதோற்றங்களை விவரிப்பது லேசு என்று காட்டி, அதனால் கோப்பர்ணிக்கு என்பவருடைய முறையை உறுதிப்படுத்தினதல்லாமலும், சோதி சாஸ்திரத்துக்குரிய தத்துவப்பிரமாணங்கள் தோன்றவும், கவர்ச்சி என்னும் மகத்துவம்பொருந்திய பிரமாணம் வெளிப்படவும் வழியை ஆயத்தம்பண்ணினார். இதனிடையில் கலிலேயோ என்பவர் தூரதிருஷ்டிக்கண்ணாடியை நூதனமாய் உண்டுபண்ணி, அதைக்கொண்டு சுக்கிரனின் பிறைகளையும் வியாழனின் உபக்கிரகங்களையுங் கண்டுபிடித்தார். ஆகிலும் வானசாஸ்திரத்தில் இந்தப்பகுதி மிகுதியும் விர்த்தியாகச்செய்தவர், பெரிய ஹர்ஷல் என்பவரே. அவர் முதல்முதல் தூரதிருஷ்டிக்கண்ணாடியின் சத்துவை அபரிமிதமாய்ப்பெருக்கி, மனதினாலும் கிரகித்தற்கரிய மாட்சிமையான நூதனங்களைக்கண்டு வானமண்டலத்தின் அளவின்மையை ஒருவாறு வெளிப்படுத்தினார்.

இப்பகுதிக்குரிய விவரங்களை அவைகள் கண்டுபிடிக்கபபட்ட காலக்கிரமமாய் எடுத்துச்சொல்லாமல், வானமண்டலங்களை நாம் இவ்வளவாயறிய ஏதுவான இந்தச் சாஸ்திரமாகிய ஏணியிலுள்ள முக்கிய படிகளை எடுத்துக்காட்டுவதே உத்தமம்.

வானசாஸ்திரத்தை, சலனங்களையும் தூரங்களையுங் குறிக்கும் ஓர் சாஸ்திரமாக மாத்திரம் கவனிக்குமிடத்து, அது முழுமையும் ஒரே கணித விதியில் நிலைபெற்று நிற்கிறது. ஒரு முக்கோணத்திலுள்ள கோணங்களுக்கும் பக்கங்களுக்குமுள்ள சம்பந்தமே அந்தவிதி. அதைக்கொண்டு, ஓர் முக்கோணத்தின் ஒரு பக்கமும் இரண்டுகோணங்களும் தீர்மானிக்கப்பட்டிருக்குமாகில், மற்றவைகளையெல்லாம் கண்டுகொள்ளலாமே. இந்த முக்கோண ஏணியின்பேரில் வானமண்டலத்துக்கு ஏறிப்போகவேண்டுமாகில், நாம் வசிக்கிற பூகோளத்தின் பருப்பத்தை முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய கரங்களின் அதிசய கிரியைகளைப்பற்றிக் கவனிக்குங்காலும், தன்னையறிந்துகொள்வதே தேவனை அறியும் அறிவுக்கு முதற்படியென்று சொல்லத்தகும். இதற்குவேண்டிய ஆதாரத்தை பூர்வீக வானசாஸ்திரிகள் திட்டத்தட்ட உள்ளபடி அறிந்திருந்தார்கள். எகிப்துதேசத்தில் அலெக்சந்திரியாமுதல் சையன் வரையுமுள்ள நீல் நதிப்பிரதேசமே ஜகத்துக்கு பாதவரியாக முதல்முதல் ஏற்படுத்தப்பட்டது. அப்போது பூமியின் சுற்றளவு 250,000 ஸ்தாதி என்று தீர்மானித்துக்கொண்டார்

கள். இந்தக் கணக்குக்கும் பூமியின் எதார்த்தமான அளவுக்கும் வித்தியாசம் மிகவும் சொற்பம். என்றாலும் அகன்ற சமுத்திரத்தின் கரைகள் காணப்படாமலும் சமரேகை இன்னதென்று அறிப்படாமலுமிருந்தவரையில், அவர்கள் பண்ணின கணக்குகளெல்லாம் சந்தேகமாகவேயிருந்தன. கொலம்பஸ் என்பவன் அந்நாளில் கிடைக்கக்கூடிய அனுகூலத்தையெல்லாம் கைக்கொண்டும், பூகோளத்தில் அப்போது தெரியாதிருந்த பாகத்தைக் கணித்ததில் பதினாயிரம் மைல்வரையும் தவறிப்போனான். அவன் செய்த மகா துணிகரமான யாத்திரையினால், முந்திய கணக்குகள் அவமாகியும், மேற்கிலுள்ள மகா சமுத்திரத்தை மூடிய மப்பு நீங்கியது. மேலும் சாஸ்திரமெல்லாம் அதினால் மிகுந்த அனுகூலமடைந்ததோடு, பிற்காலத்தவர்களுக்கு பூகோளத்தின் பரிமாணங்களைப்பற்றி தெளிந்த அறிவுமுண்டாயிற்று.

சூரியனுக்கும் கிரகங்களுக்குமுள்ள தூரங்கள் வெகுகாலத்துக்கு முன்னமேயே ஹிப்பார்க்கு இப்தோலமி என்பவர்களால் கொஞ்சம் ஏகதேசமாய் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கெப்லர் எழும்பிய பிறகு அவைகளை வெகு துல்லிபமாய்க் கணித்து ஏற்படுத்தியிருக்கிறார். ஆகிலும் இப்புதிய அயனங்களின் மொத்த அளவுகளைக் கண்டுகொள்வது அதனிலும் அதிக வருத்தமாயிருந்தது. ஒருபொருளை வெவ்வேறு இடங்களினின்று பார்க்கும்போது அதிருக்கிற நேரும் தோற்றமும் வித்தியாசமாய் விளங்குமே. இந்த தோற்றத்துக்கு வானசாஸ்திரிகள் லம்பனம் என்பது வழக்கம். சந்திர லம்பனத்தைக்கொண்டு, சாஸ்திரிகள் சந்திரனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் பூமியின் அர்த்தவிட்டம் அறுபதுக்குச் சமென்று கண்டுகொண்டார்கள். ஆயினும் இந்தவிதமாய் சூரியனுடைய தூரத்தைக் கண்டுபிடிக்கக்கூடவில்லை. சூரிய லம்பனம் மிகவும் சொற்பமாயிருப்பதினால், அதைக் கணிப்பதில் ஒரு அற்பத் தப்பிதம் நேரிடுமாகில், எத்தனையோ கோடிமைல் தவறிப்போகும். சுக்கிரன் சூரியமுகத்தைத் தாண்டும்போது உண்டாகும் தோற்றமே இதைத் திட்டமாய்க் கணிக்கிறதற்கு அனுகூலமானது. சங்கமநிலையில் அதாவது சுக்கிரன் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வருகையில், சந்திரன் ஒன்றுதவிர சுக்கிரனே தான் பூமிக்கு அதிக சமீபமானது. மேலும் பூமி சுற்றுகிற திசையாயும், கொஞ்சங்குறைய பூமி சுற்றுகிற வேகமாயும் அதுவுஞ் சுற்றுகிறபடியால் அது சூரிய முகத்திலே வெகுநேரம் காணப்படும். சுக்கிரன் சூரியமுகத்தைத் தாண்டும் தோற்றம் சூரிய லம்பனத்தினாலே பூமியின் ஒரு புறத்திலுள்ளவர்களுக்கு இரண்டுமடங்கு சுருங்கியும் மறுபுறத்திலுள்ளவர்களுக்கு இரண்டுமடங்கு நீண்டும் காணப்படும். தெற்கிலும் வடக்கிலுமுள்ளவர்களுக்கும் இவ்வகை வித்தியாசம் விளங்கும். அதினால் சில மணிநேரம இந்தத்தோற்றம் காணப்படக்கூடியபடியால், குறித்த கணக்கைத் திட்டமாய்ச் செய்துகொள்ள அனுகூலமாகும். அப்படியே பூகோளத்தின் மறுபுறத்தில் நின்று சுக்கிரன் சூரியனைத்தாண்டும் தோற்றத்தைக் கவனிக்கும்பொருட்டு, தாகித்தித் தீவைத் தெரிந்துகொண்டார்கள். பிற்காலத்தில் சுவிசேஷப்பிரசங்கிகள் போய்ச் சீர்திருத்தின இந்தச் சிறிய தீவிலேயே முதலாவது சாஸ்திரிகள் போய் கல்வி அபிவிர்த்திசெய்தார்கள். பாசிப்பிக் சமுத்திரத்தின் நடுவில் அழகிய அத்தீவின் கரையில் வானசாஸ்திர ஏணியை உறுதியாய் நாட்டினார்கள். அந்த ஏணிவழியாய் நாமேறி சூரிய மண்டலத்தின் விஸ்தீரணத்தையும் ஜகத்தின் ஏராளத்தையும் உள்ளபடி உணர்ந்துகொள்ளலாம்.



மேற்படி முயற்சியால் கிடைத்த பலனென்ன? நமக்கு நாடோறும் வெளிச்சந்தருகிற சூரியன் இவ்வளவு தூரமாயிருக்கிறதென்று தெரியவந்தது. வானமண்டலத்தில் சூரியனிருக்கும் இடம்வரையும் ஒரு இருப்புப்பாதை செய்துகொண்டு அதிவேகமான ஓர் புகைவண்டியில் பிரயாணஞ் செய்யக்கூடுமானாலும், நாம் நோக்கிய இடம்போய்ச் சேர இரண்டு நூற்றாண்டு பிடிக்கும். அதற்குள் ஆறுதலைமுறை கழிந்துபோம். மற்றும் கிரகாயனங்களின் விசாலம் எவ்வளவு ஏராளமாகும். பூர்வீகத்தாருக்குத் தெரிந்திருந்த கிரகங்களில் கடைசியானது சனி. இந்தக் கிரகத்துக்கும் சூரியனுக்கும் தொளாயிரம் மில்லியன் மைல் தூரமென்று கணித்திருக்கிறார்கள். சூரியனுக்கு அப்புறத்தில் வரும்போது, பூமிக்கு அது ஆயிரம் மில்லியன் மைல் தூரமாகும். மேற்காட்டிய பிரகாரம் இந்தப் பிரயாணம் முடியவேண்டுமாகில், ஒருவன் நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தோடு தொடங்கி கிறிஸ்துநாதர் மனித அவதாரஞ்செய்த்துவரையில் ஓயாமல் பிரயாணம்பண்ணிக்கொண்டேயிருந்திருக்கவேண்டும். அந்த இடம்போய்ச்சேர அத்தனை வருஷம் பிடிக்கும். அவன் பூமிக்கு மறுபடியும் திரும்பவேண்டுமாகில், பின்னையும் சில நூற்றாண்டுகள் வேண்டும். தற்காலத்தில் யூரானஸ் என்ற கிரகமும் அப்பால் நெப்தூண் என்னும் கிரகமும் கண்டுபிடிக்கப்பட்டதோடு, சூரியமண்டலத்தின் விசாலம் முன்னையிலும் மிகவும் அதிகமாகிவிட்டது. கடைசியிற் குறித்த நெப்தூண் என்ற கிரகம் சூரியனை ஒருமுறை வட்டமிட்டுச் சுற்றிவர நூற்று அறுபத்தாறு வருஷம் பிடிக்குமாம். சூரியனுக்கும் அதற்குமுள்ள தூரம் சுமார் மூவாயிரம் மில்லியன் மைலாம். நமது மண்டலத்தின் ஈறும் கடைசியில் ஓர் காவற்காரன்போல் மெதுவாய் அசைந்துகொண்டிருக்கும் இந்தக் கிரகத்துக்குப்போய்ச் சேரவேண்டுமாகில், இக்காலத்தில் சாஸ்திராபிவிர்த்தியினாலுண்டாயிருக்கிற அனுகூலங்களையெல்லாங் கைக்கொண்டு பிரயாணம்பண்ணினாலும், ஏழாயிரம் வருஷத்துக்குமுன் மேற்படி பிரயாணம் முடியவேமாட்டாது.

நாம் இவ்வளவு உயரத்தில் வந்துவிட்டபோதிலும், வானமண்டலப் பிரயாணத்தில் இன்னம் முதற் பிரதானபடியிலேயே நிற்கிறோம். வானதோற்றங்களைக் கவனிக்கிறதற்கு பூகோள அயனம் ஆதாரமாயிற்று. பூமியின் சுற்றளவு ஈராயிரத்து நானூறு மடங்குகொண்டது. அதின் அயனம் ஒன்றாகும். இதிலே இப்போது வானசாஸ்திர ஏணியை நிறுத்தி, வானத்துக்கு எறி நட்சத்திரராசிகளை ஆராய ஆரம்பித்தார்கள். என்றாலும் வெகுகாலவரையில் இவ்வளவு உயரத்தினின்றும், சோதிமண்டலத்தை அளவிடுவது, கூடியதாக தோன்றவில்லை. நட்சத்திரங்களின் தூரம் மிகவும் ஏராளமாயிருப்பதினால், பூகோள அயனத்தின் விட்டம் நூற்றுதொண்ணூறு மைலானபோதிலும், இவ்வளவு தூரத்தினாலும் நட்சத்திரங்களின் இடச்சம்பந்தங்களில் எவ்வளவேனும் வித்தியாசம் தோன்றுகிறதில்லை. ஒன்றுமாத்திரம் அறிந்துகொண்டார்கள். அதிகச் சமீபமான நட்சத்திரங்களும் இவ்வளவு தூரத்துக்கு அப்பாலேயேயிருக்கவேண்டுமென்பதுதான். குறித்ததூரம் குறைந்த பட்சத்தில் பத்துபில்லியன் மைல் என்று யூகித்துக்கொண்டார்கள். இந்த ஏராளமான தூரத்தைக் கடந்துபோகவேண்டுமானால் மணி ஒன்றுக்கு ஐம்பது மைல்வீதஞ்சென்றாலும், இருபது மில்லியன் வருஷம் பிடிக்கும். அதாவது ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட நாள்முதல் நாளதுவரையும் கழிந்த காலத்துக்கு மூவாயிரம் மடங்கான காலம் பிடிக்குமென்று உணர்க. நமது பூமிக்கும் அவ்விடத்துக்கும் எட்டத்

தக்க ஒரு பாலங்கட்டி, ஆதாமுதல் நாளதுவரையும் பூமியில் தோன்
றின மனிதர் யாவரையும் மேற்படி பாலத்தின் நெடுக காவலாட்கள்
போல நிறுத்தக்கூடுமாகில், ஒவ்வொருவனுக்கு இடையில் ஐம்பது
ஐம்பதுமைல் வெளியிருக்கும். சிலர் தவிர எல்லோரும் காரிருளில்
நிற்கவேண்டியதாகும். மத்தியானத்தில் முதலாய் மகத்துவம்பொரு
ந்திய இந்தச் சூரியன் சிறிய ஓர்நட்சத்திரம்போல் மாத்திரம் மினுங்
கிக்கொண்டிருக்கும்.

---

## CHRISTIAN CHURCH HISTROY.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

---

### 4. அதிகாரம்.

பவுல் அப்போஸ்தலன் இரண்டாவது பிரயாணத்தைத் தொடங்கி
மக்கேதோனியா வழியாய் அத்தேனே கொரிந்துப்பட்டணங்களுக்
குப்போனதும்,—எருசலேமுக்குத் திரும்பி அப்பால் எபேசுவில்
மூன்று வருஷம் சஞ்சரித்ததும்,—கொரிந்துச் சபையிலுண்டான
குழப்பங்களும்,—பவுல் மறுபடியும் கொரிந்துப்பட்டணத்துக்குப்
போனதும்,—மக்கேதோனியா வழியாய் எருசலேமுக்குத் திரும்பி
யதும்,—செசாரியாவுக்குச் சிறையாயனுப்பப்பட்டதும்,—அப்போ
ஸ்தலருடைய முயற்சிகளும்,—லூக்கா தன்சுவிசேஷத்தை எழுதின
தும் அடங்கியது.

---

(தொடர்ச்சி.)

கிரேக்கு தேசத்தில் அப்போஸ்தலன் இதற்குத் தெற்கே பிரயாணம்
போகவில்லை. அவர் பதினெட்டு மாதக்காலமாய் கொரிந்துவிலேயே
இருந்ததைக் கவனிக்கையில் அவர் அந்த இடத்தைத் தமக்கு முக்கிய
ஸ்தானமாக குறித்துக்கொண்டிருப்பாரென்று நிதானிக்கத்தக்கது.
யூதர்கள் அவ்விடத்து ரோம அதிகாரியை அவருக்கு விரோதமாய்
எழுப்பிவிடமுயன்றும், அவர்கள் காரியம் சித்திக்கவில்லை. அக்கா
லத்தில் துரைத்தனஞ்செய்த கல்லியோ என்பவன் மதாசாரங்களில்
எவ்வளவும் பிரியங்கொண்டவனல்ல. அவ்விடத்து செப ஆலயத்துக்கு
முதலாளியான கிரிஸ்புவைப் பவுல் குணப்படுத்தியெடுத்ததினால்
சுவிசேஷம் அங்கும் வெற்றியடைந்தது என்பதற்குச் சந்தேகமில்லை.
கொரிந்துவில் பவுல் சஞ்சரித்த காலத்தில்தான், அவர் தெசேலோ
னிக்கேயருக்கு இரண்டு நிருபங்களையும் எழுதினது. மக்கேதோனியா
வில் நிறுத்தியிருந்த சீலாவும் தீமோத்தேயும் அங்கிருக்கும்பொழுதே
அவரை வந்து சேர்ந்துகொண்டார்கள். அதன்பேரில் அவர்கள் மூவ
ரும் கூடி உழைக்கவே, கிரேக்கை தேசத்தில் கல்விப்பொருளிலும்
செல்வப்பொருளிலும் சிறந்த அப்பட்டணத்தில் மிகவும் செழிப்பான
ஓர் கிறிஸ்து சபை ஸ்தாபகமாயிற்று.

கிரேக்கருடைய கல்வியை பவுல் அப்போஸ்தலன் இப்பொழுது
மிகவும் பலமாய் எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது. மனித ஆத்
துமங்களுக்கு துன்பத்தினால் நேரிடுங் கெடுதியைப் பார்க்கக் கல்விப்
பெருமையினால் நேரிடத்தக்க கெடுதியே மிகுதி. துன்பத்தினால் பக்தி



பெரும்பாலும் பிரதிகூலமடையாது. ஆனாலும் சுவிசேஷத்தின் நிமித்
தமாக சிங்கத்துக்கொத்த தைரியத்தோடு அக்கினிக்கும் தங்களை
இரையாக ஒப்புக்கொடுக்கத் துணிகிறவர்களும் கல்விப் பெருமையால்
வஞ்சிக்கப்பட்டு, பல் தவறுகளுக்குள் அகப்பட்டுக்கொள்வார்கள்.
கொரிந்துக் கிறிஸ்தவர்களும் இதுவகையான மோசங்களால் சூழப்
பட்டிருந்தார்கள். பவுல் அப்போஸ்தலன் அஞ்ஞான சாஸ்திரிகளோடு
சாமர்த்தியமாய்த் தர்க்கிக்கத் திறமையுள்ளவராகவேயிருந்தார். அவர்
பலமாயும் சாமர்த்தியமாயும் நியாயம் பேசியிருப்பாரென்பதற்கு
அவர் கொரிந்துப்பட்டணத்தில் ஸ்தாபித்த சபையே போந்த அத்
தாட்சி. ஸ்தம்பனவித்தைக்காரனான சீமோன் சரித்திர சம்பந்தமாய்
மேலே விவரித்த நாஸ்தியருடைய கொள்கைகள் இக்காலத்தில்
கொரிந்துவரையும் பரவியிருந்ததாகத் தோன்றுகிறது. அஞ்ஞான
அவபத்தி மனிதர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதபடிக்கு தடுக்கத்
தக்கதாயிருந்ததுபோலவே, நாஸ்தியருடைய தப்பறைகளும் கிறிஸ்து
மார்க்கத்தை அனுசரித்துக்கொண்டவர்களைப் புரட்டிக் கெடுக்கத்தக்
கதாயிருந்தது. இக்காரணங்களினிமித்தமே பவுல் அப்போஸ்தலன்
கொரிந்துவில் அவ்வளவுகாலம் இருந்திருப்பாரென்று நிதானித்துக்
கொள்ளலாம்.

கி. பி. 48-ம் வருஷத் துவக்கத்தில் அவர் கிரேக்கை தேசத்தை
விட்டுப் புறப்பட்டு, எபேசுச் சபைமூப்பர்களைக் கண்டுபேசிக்கொண்டு
எருசலேம் போய்ச்சேர்ந்து பெந்தேக்கோஸ்துப் பண்டிகையை ஆச
ரித்தார். அவர் இரண்டுவருஷத்துக்குமுன் அவ்விடத்துக்கு வந்திருந்
தாரே. அதுமுதல் அத்தேசத்தாருக்கு நேரிட்ட துன்பம் கொஞ்ச
மல்ல. அகிரிப்பா ஏரோது மரித்தபின், அத்தேசம் மறுபடியும் ரோ
மைத்துரைகளின் அதிகாரத்துக்குள்ளாகியது. இவ்வதிகாரிகள் வழக்
கமாய்ப் பொருளாசைக்காரர்.. அவர்களில் ஒவ்வொருவன் நடப்பிக்
கத்தக்க கொடுமை போதாததுபோல, இக்காலத்தில் அங்கே இரண்டு
அதிகாரிகள் ஏற்படுத்தப்பட்டுத் தேசத்தைத் தங்களுக்குள்ளே பகிர்ந்
துகொண்டார்கள்.

கிலவுதியு இராயனுடைய அரசாட்சி வேறுவிதமாயும் யூதர்களுக்
குப் பிரதிகூலமாயிருந்தது. என்ன முகாந்தரமாயோ அவ்விராயன்
ரோமாபுரியிற் குடியிருந்த யூதரையெல்லாம் அவ்விடத்தைவிட்டுப்
போய்விடும்படி கற்பித்தான். இந்தச் சட்டத்தினால் எத்தனையோ
ஆயிரம்பேர் மறுதேசங்களிற்போய் வீடுதேட நேரிட்டிருக்கும். அதில்
அநேக கிறிஸ்தவர்களும் அகப்பட்டிருப்பார்களென்பதற்குச் சந்தேக
மில்லை. அவர்களுக்கும் யூதர்களுக்கும் உள்ள வித்தியாசம் அஞ்ஞா
னிகளுக்கு இன்னந் தெரிந்திருக்கமாட்டாதே. ஆயினும் இதை மார்க்
கத்தினிமித்தம் வந்த துன்பம் என்று சொல்லக்கூடாது. யூதர்கள்
ரோமாபுரியினின்று துரத்திவிடப்பட்டது அவர்கள் மதாசாரத்தோடு
சம்பந்தப்பட்டதாய்த் தோன்றுகிறதில்லை. மேலும் அவர்கள ரோமா
புரிக்குத் திரும்பக்கூடாது என்ற கட்டளை வெகுகாலத்துக்கு நிலைக்
கவில்லையென்று நினைக்கவும் இடமுண்டு. ஆகிலும் யூதர்களில் அநே
கர் சிறிதுகாலத்துக்கென்கிலும் தங்கள் பிதாக்களின் தேசத்துக்குப்
போகாதிரார்களே. ரோம துரைகளின் அநியாயத்தினிமித்தமாய்
ரோமர் பேரிலுண்டான வெறுப்பும் பகையும் இப்போது ரோமாபுரி
யினின்று துரத்தப்பட்டு வந்தவர்களினிமித்தம் அதிகப்பட்டிருக்க
வேண்டும். பவுல் இச்சமையத்தில் எருசலேமில் கொஞ்சநாள்மாத்
திரமிருந்து உடனே அந்தியோகியாவுக்குத் திரும்பிவிட்டான். அவ்வி

டத்துச் சபை மேன்மேலும் வளர்ந்தேறி வந்தது. அந்தியோகியாச்
சபைக்கு ஐயோதியு என்பவன் முதற் கண்காணியாயிருந்தானென்று
பாரம்பரையாய்ச் சொல்லிக்கொள்வார்கள். பவுல் 48-ம் வருஷத்தில்
அவ்விடத்தில் வந்திருந்தபொழுதே அவன் மேற்படி அலுவலில் ஏற்
பட்டிருப்பானென்று நிதானிக்கலாகும்.

அந்தியோகியாவைவிட்டுப் புறப்பட்டபிறகு பவுல் அப்போஸ்தலன்
இரண்டாம் விசையாக சின்ன ஆசியா எங்கும் சுற்றித்திரிந்து எபேசுப்
பட்டணம் வந்துசேர்ந்து அங்கே சிறிதுகாலம் சஞ்சரித்தார். கொரிந்
துப்பட்டணத்திலிருந்து எருசலேமுக்குப்போகும் மார்க்கத்திலும் அவ்
விடத்துக்கு வந்துவிட்டுப்போனுரென்று மேலே சொல்லியிருக்கிறதே.
எபேசு ஒருநாட்டுக்குத் தலைநகரியாயும் ரோம அதிகாரியின் வாசஸ்தா
னமாயுமிருந்தது. கல்வியிலும் சாஸ்திராபிவிர்த்தியிலும் அது அத்
தேனேக்காவது கொரிந்துவுக்காவது நிகரல்லாததென்றாலும், ஐசுவ
ரியத்திலும் ஆடம்பரத்திலும் இதற்கு மிஞ்சின பட்டணத்தைப் பவுல்
இன்னமுங் கண்டதில்லையென்று சொல்லலாம். எபேசுவின் குடிகள்
சிறப்பானவைகள் எவைகளோ, அருமையானவைகள் எவைகளோ
அவைகளின் மீது மிகவும் பிரியங்கொண்டவர்கள். வெகுகாலவரை
யில் மந்திர தந்திரங்களிலும் இந்திர சாலங்களிலும் அபிமானமுள்ள
வர்களாயுமிருந்தார்கள். பவுல் அப்போஸ்தலன் அவர்களுக்குள் சஞ்
சரிக்க வந்த இந்தக் காலத்தில் நாஸ்திரியருடைய கொள்கைகளும்
சின்ன ஆசியாவின் இத்திசையில் பிரபலியமாகத்தொடங்கியிருந்தது.
இந்த மூகாந்தரங்களினிமித்தமே அப்போஸ்தலன் நெடுங்காலம் எபே
சுவில் சஞ்சரிக்க ஏவப்பட்டிருப்பார். அங்கே அவருடைய முயற்சிக
ளுக்கு நல்ல வசதியிருந்தது. மேலும் மற்றச் சபைகளுக்கு அது மத்
திஸ்தானமாயுமிருந்தது. அங்கிருந்துகொண்டு கிரேக்கையிலுள்ள
சபைகளிடத்துக்குப்போய் வந்துமிருக்கலாம். மேற்படி சபைகளின்
வரலாறுகளைச் சுளுவில் அறிந்துகொள்வதற்கும் ஏதுவிருந்தது.

பவுல் அப்போஸ்தலன் எபேசுவுக்கு வருமுன் சுவிசேஷம் அவ்வி
டத்தில் அதிகம் பிரசித்தமாகியிருந்ததென்று நினைக்க இடமில்லை.
அலெக்சந்திரியாவிற் கல்வி அப்பியாசித்த யூத வித்வானுன அப்பா
லோ என்பவன் ஒருவிசை அவ்விடத்துக்குப் போனதுண்டு. அங்கி
ருக்கும்போது பவுலுவின் உடன்வேலையாள்களான சிலரால் அவன்
கிறிஸ்துமதத்தை அனுசரித்துக்கொண்டதின்பேரில், கொரிந்துவுக்குப்
புறப்பட்டுப்போய் அப்பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் உப
யோகமாயிருந்தார். பவுல் அப்போஸ்தலன் அவர்களைவிட்டுப்போயி
ருந்த இந்தக்காலத்தில் அப்பாலோ என்பவன் அங்குவந்துசேர்ந்தது
அவர்கள் பக்திவிருத்திக்கு தேவசித்தமாய்க் கிடைத்த அனுகூலம்
என்பதற்குச் சந்தேகமில்லை.

பவுல் அப்போஸ்தலன் எபேசுவில் மூன்றுவருஷம் சஞ்சரித்தார்
என்று சொல்லியிருந்தபோதிலும், அக்காலமெல்லாம் அப்பட்டணத்
துக்குள்ளேயேயிருந்தாரென்று நினைக்கத்தேவையில்லை. சின்ன ஆசி
யாவின் மறுபாகங்களிலிருந்த சபைகளையும் அப்போதப்போதுபோய்
ப்பார்த்துவந்தாரென்றும் தோன்றுகிறது. சுவிசேஷத்தைப் பிரசங்
கித்ததில் அவருக்கு நேரிட்ட துன்பங்களும் ஆபத்துகளும் இக்காலத்
திலேயே மிகுதியாய் நேரிட்டிருக்குமென்றும் நிதானிக்கத்தக்கது.
பலமுறை அவர் காவலிலடைபட்டிருந்ததாயும் வாரினுல் அடிபட்ட
தாயும் சொல்லுகிறுர். மூன்றுவிசை கப்பற்சேதமானதிலிருந்ததாயும்
குறிப்பித்திருக்கிறது. இந்த யாத்திரைகளில் ஒன்றிலேயே அவர் கிரே



த்தே தீவுக்குப்போய் வந்திருப்பாரென்று நினைக்கவும் நியாயமுண்டு.
அவர் தாமே அவ்விடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சபைகளை
ஸ்தாபித்தாரென்றும், மேற்படி சபைகளை விசாரிப்பதற்கு தம்முடன்
கூடப்போயிருந்த தீத்துவை அங்கே நிறுத்திவிட்டு வந்தாரென்றும்
எழுதியிருக்கிறுர். சபைவிசாரணையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற
முதல் குறிப்பு இதுதான். அந்த தீவில் ஏராளமான பட்டணங்களும்
நகரிகளும் இருந்ததினுலே, அங்கே அநேக சபைகளும் அமைந்திருக்
கும் என்பதற்குச் சந்தேகமில்லை. மேற்படி சபைகள் ஒவ்வொன்றை
யும் அது அதின் மூப்பரோ விசாரித்துவந்தார்கள். மூப்பர்கள் தீத்து
விலுலேயே ஏற்படுத்தப்பட்டவர்கள். இவ்வகைக் காரியங்களைத் திட்
டஞ்செய்வதற்கே பவுல் அவனைத் தீவில் வைத்துவிட்டுப்போனுர். தீத்
து அவ்விடத்திலிருந்த காலமெல்லாம், கிரேத்தேத் தீவிலுள்ள சபை
கள் யாவுக்கும் முதலாளியாக இருந்தான்.

---

# வேதாகமத்தின் உண்மையை ரூபிக்கும்

### நோக்கமில்லா இசைவுக் குறிப்புகள்.

## மூன்றும் பங்கு.

### தீர்க்கத்தரிசன ஆகமங்கள்.

---

VII. இப்பொழுது எரேமியாவின் தீர்க்கதரிசனப் புஸ்தகத்தைச்
சோதிப்போமாக. இதில் அதிகமான ஒற்றுமைகளுமில்லை, இருப்ப
வைகளும் அத்தனை நேர்த்தியானவைகளுமல்ல. 13 ம் அதிகாரத்தில்
தீர்க்கத்தரிசி எருசலேமின் அக்கிரமத்தையிட்டு அதற்கு வரும் தீங்
குகளைக்குறித்துப் பொதுவாய்ச் சொல்லிக்கொண்டு வரும்போது,
18 ம் வசனத்தில் "தாழவுளுக்காருங்கள், ஏனெனில் உங்கள் தலை
களின் சிங்காரமாகிய உங்கள் மகிமையின் கிரீடம் விழுந்ததென்று
இராசாவுக்கும் இராசாத்திக்கும் சொல்" என்று வசனித்திருக்கிறுன்.
இங்கே இராசாவின்பேரும் இராசாத்தியின் பேரும் சொல்லப்பட
வில்லை. ஆனுல் இஸ்ரவேலின் இராசாத்திகள் எதாகிலும் ஒரு விசே
ஷித்த காரியம் செய்திருந்தாலொழிய, மற்றப்படி பேர் சொல்லி
யிருக்கமாட்டாது. மேற்கண்டவிடத்திலும் அப்படியேயிருக்கலாம்.
2 இராசா. 24ம் அதிகாரத்தில் கல்தேயர் படையெடுத்து வந்து எரே
மியா சொல்லியிருக்கிறபடி அநேககாரியங்களை நடப்பித்தார்கள் என்
று வாசிக்கிறேம். அவர்கள் மூன்று விசை படையெடுத்து வந்தார்கள்.
2 இரா. 24. 1, 10. 25. 1. அவைகளில் இரண்டாவது. முந்தி நேபு
காத் நேச்சாருடைய வேலைக்காரரும், பிறகுநேபுகாத்நேச்சார் தானும்
யுத்தத்திற்கு வந்தார்கள். அப்பொழுது நடந்ததென்ன? "யூதாவின்
இராசாவாகிய யோயாக்கீனும் அவன் தாயும் அவனுடைய ஊழியக்
காரரும் அவனுடைய பிரபுக்களும் பிரதானிகளும் பாபேலினுடைய
இராசாவண்டைக்குப் புறப்பட்டார்கள். அவனைப் பாபேலின் இரா
சா பிடித்துக்கொண்டான." 2 இரா. 22. 12 ல், மறுபடியும் 15 ம் வச
னத்தில் "அவன் யோயாக்கீனையும் இராசாவின் தாயையும் இராசா
வின் ஸ்திரிகளையும் அவன் பிரதானிகளையும் தேசத்தில் பலத்தவர்க
ளையும் பாபேலுக்குச் சிறைபிடித்துக்கொண்டுபோனுன்." இங்கே

சொல்லியிருக்கும் யோயாக்கீனுடைய தாயைத்தான், எரேமியா
இராசாத்தியென்கிறன். நேபுகாத்நேச்சார் படையெடுத்துவந்தபோ
து யோயாக்கீன் 18 வயதுள்ளவனாய் மூன்றுமாதம் இராச்சியபாரம்
பண்ணிவந்தான். இராசாத்தியாகிய அவன் தாய் தன் புருஷன் மரித்
துக் கொஞ்ச நாள் மாத்திரமானபடியால் தன் மகனுக்கு யோசனை
சொல்லிக்கொடுத்துக்கொண்டு இராச்சியபாரம் தாங்கிவந்ததாகத்
தோன்றுகிறது. ஆதலால் அவளைப்பற்றி விசேஷித்துச்சொல்லக் கா
ரணமிருந்ததென்று நிச்சயிக்கலாம். ஆயினும் தீர்க்கதரிசி இராசாத்
தியென்றுசொல்லும்போது அவளின்னாளென்றாவது, அவளைக்குறித்
துச்சொல்ல முகாந்தரமின்னதென்றாவது ஒன்றுஞ் சொல்லாமல்
நடந்தகாரியத்தை உள்ளபடி எழுதியிருக்கிறான்,

VIII. எரேமியா 22. 10—12 வரையுமுள்ள வாக்கியங்கள் தீர்க்கத்
தரிசன உண்மையைரூபிக்கும். "மரணமடைந்தவனுக்காக நீங்கள்
அழாமலும், அவனுக்காகப் பரிதபிக்காமலும் போய் விடுகிறவனுக்காக
அழவே யழுங்கள். ஏனென்றால் அவன் இனித் திரும்பிவருவதும் தன்
ஜனன பூமியைக் காண்பதுமில்லை. ஏனெனில் தன் தகப்பனாகிய யோ
சியாவின் பட்டத்திற்குவந்து அரசாண்டு, இவ்விடத்திலிருந்து புறப்
பட்டுப் போன யூதாவின் இராசாவாயிருந்த யோசியாவின் குமாரனா
கிய சல்லூமைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறதேதெனில், அவனிங்
கே திரும்பிவராமல் தான் கொண்டுபோகப்பட்ட தலத்திலே மரிப்
பான். இந்தத் தேசத்தை அவனினிக் காண்பதில்லை யென்கிறார்" என்
று எழுதியிருக்கிறது. தீர்க்கதரிசியின்காலத்திலிருந்தவர்களுக்கு
நன்றாய்த் தெரிந்தவைகளையே இங்கே சொல்லியிருக்கிறது. இதற்
கேற்ற சரித்திரமில்லாவிட்டால், நமக்கோ இந்தச் சங்கதி தெளிவாய்
விளங்கமாட்டாது. எருசலேமில் ஒரு பெரிய துக்கம் இருந்ததாக
இதினால் தெரியவருகிறது. யாருக்காகத் துக்கங்கொண்டாடினார்கள்
என்று சொல்லவில்லை. ஆகிலும் யோசியாவின்பேர் இடையிட்டுவருகி
றதால ஒருவேளை யவனுக்காகவிருக்கலாம். அதைவிட ஒரு பெரிய
ஆபத்து அதற்கு அடுத்தாற்போலே உண்டானதாகவும், அதற்காகப்
பட்டணத்தாரெல்லாரும் துக்கிக்கவேண்டுமென்று தீர்க்கதரிசி ஏவு
கிறதாகவும் காணப்படுகிறது. யோசியாவின் குமாரரில் ஒருவன் அன்
னியதேசத்திற்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டான். எங்கே,
யாராலே கொண்டுபோகப்பட்டான் என்பதைக் காணோம். நடந்
தவையும் திட்டமாய் அறிந்தவர்களுக்கு எழுதினபடியால் சங்கதி
யைச் சாடையாய்ச் சொல்வது போதுமென்று எண்ணி, தீர்க்கதரிசி
எழுதியிருக்கிறான்.

2 நாளா. 35ம் 36ம் அதிகாரத்தைப்பாருங்கள். இக்காலத்துச் சரித்
திரத்தை இங்கே காணலாம். அதுகாரியங்களை விவரமாய்த் தெரி
விக்கும். முந்தின அதிகாரத்தில் யோசியாவின் மரணத்தைக்குறித்
து வாசிக்கிறோம். அவன் எகிப்தியருக்கு விரோதமாய்ச் சண்டைதொ
டுத்துக்கொண்டிருக்கும்பொழுது ஒரு அம்பினால் மடிந்தான். அவன்
மிகவும் நல்லவனானபடியால் யாவரும் வெகுவாய்த் துக்கித்தார்கள்.
அவனைக்குறித்து "அவன் மரணமடைந்தான் அவன் பிதாக்களுடை
ய கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான். யூதா எருசலேமின்
மனுஷரெல்லாம் அவனுக்காகத் துக்கங்கொண்டாடினார்கள். எரேமி
யா யோசியாவின்மேலே புலம்பல்கொண்டாடினான். சகல பாடகரும்



பாடகிகளும் இந்நாள்வரைக்கும் யோசியாவின்மேலே தங்கள் புலம்
புதல்களில் பாடிக்கொண்டிருந்து அவைகளை இஸ்ரவேலிலே ஒரு
பழக்கமாக்கினார்கள். அதோ இவைகள் புலம்புதலின் புஸ்தகத்திலெ
ழுதியிருக்கின்றன" என்று சொல்லியிருக்கிறது. எரேமியா சொல்
லும் காரியங்களில் இதுவே முதலாவது.

பிந்தின அதிகாரத்தில்வருகிற சரித்திரத்தைப்பார்க்கும்பொழுது,
சல்லூமென்றல்ல, யோவாகாசென்றழைக்கப்பட்ட யோசியாவின்
குமாரன் மூன்றுமாதம் எருசலேமில் அரசாண்டான். "அதேதெ
னில் எகிப்தின் இராசா அவனை எருசலேமில் ஆளாதபடி தள்ளிவிட்
டு, தேசத்தின்மேல் நூறு தாலந்து வெள்ளியும் ஒரு தாலந்து பொன்
னுமான தெண்டத்தைவைத்து, அவனுடைய அண்ணனாகிய எலியாக்
கீமை யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் இராசாவாக்கி, யோ
யாக்கீமென்று அவன் பேரை மாற்றினான். அவன் தம்பியாகிய யோ
வாகாசை எகிப்தின் இராசாவாகிய நேகோ எகிப்துக்கு அழைத்துக்
கொண்டுபோனான்" என்றிருக்கிறது. எரேமியா சொல்லும் இரண்டாஞ்
சங்கதி இதுவே. முந்தின சங்கதி நடந்து மூன்றுமாசத்துக்கப்பால்
இது நடந்தது. கொண்டுபோனவன் எகிப்தின் இராசா. கொண்டு
போகப்பட்ட இடம் எகிப்துதேசம். கொண்டுபோகப்பட்டவனோ
சரித்திரத்தில் யோவாகாசென்றும் தீர்க்கதரிசனத்தில் சல்லூமென்
று கண்டிருந்தாலும், அவ்விரண்டிடங்களிலுமுள்ள சங்கதி ஒன்றுபோ
லிருப்பதால் இரண்டுபேரும் ஒருவனையேகுறிக்குமென்பதற்குச் சந்
தேகமில்லை. பேரிலுள்ள விகற்பத்தை நீக்கவேணுமென்று தீர்க்கதத
ரிசியும் சரித்திரக்காரனும் எண்ணாமல் எழுதியதே ஒருவரை ஒருவர்
பார்த்து எழுதவில்லையென்று ரூபிக்கும். மூத்தவனுக்கு எலியாக்கீ
மென்னும் பேரை யோயாக்கீமென்று மாற்றினதுபோல நேகோ
வென்பவன் யோவகாசென்றழைக்கப்பட்ட இவனுடைய பெயரை
சல்லூமென்றி மாற்றியிருப்பானென்று எண்ண இடமுண்டு. 2 இராசா
23. 34.

இதில் பின்னும் நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு காரியமுண்டு.
"மரணமடைந்தவனுக்காக நீங்கள் அழாமல், போய்விடுகிறவனுக்
காக அழவேயழுங்கள். ஏனெனில் அவனினித் திரும்பிவருகிறதில்லை"
என்று தீர்க்கதரிசி சொல்லுகிறபடியால், அவன்பேரில் சனங்கள்
அதிகப் பிரியமாயிருந்தார்களென்றுதோன்றுகிறது. இவனுக்குப் பதி
லாய்வந்து அரசாண்ட இராசனைவிட இவன்பேரிலே அதிகப் பிரியம்
வைத்திருக்கவேண்டும். அவனினித் திரும்பி வருவதில்லை என்பதினா
லேயே அதிகமாய்த் துக்கிக்கவேண்டியிருந்தது. யோவகாஸ் அர
சாண்ட கொஞ்சக்காலத்திலே அவன் கர்த்தருடைய பார்வைக்குப்
பொல்லாப்பானதைச் செய்தானென்பது மெய். 2 இரா. 23. 32. ஆனா
லும் யோயாக்கீனும் அப்படித்தான் நடந்தான். மார்க்கவிஷயங்களில்
இரண்டுபேரும் கெட்டவர்கள்தான். 2 நாளா. 36. 5. அக்காலத்திலி
ருந்த யூதருடைய நடக்கையைப் பார்க்கும்பொழுது. அவர்கள் பத்தி
யினிமித்தமாக ஒருவனை அதிகமாய் நேசித்தார்களென்று சொல்ல
ஏதுவில்லை. எரேமியா சொல்வதைக் கவனித்தால் யோவகாசுக்குப்
பதிலாய்வந்த இராசனைவிட அவனே சனங்களுக்கு அதிகப் பிரிய
முள்ளவனாயிருந்தானென்று திட்டமாய்ச் சொல்லலாம். இப்பொ
ழுது 2 நாளா. 36. 1 யும். 2 இரா. 23. 30 யும் பாருங்கள். எரேமியா
சொல்வதிலிருந்து நாம் வருவித்த குறிப்போடு, நேகோ என்பவனால்
சிறைபிடித்துக்கொண்டுபோகப்பட்டவனைக் குறித்தும், அவனுக்குப்ப

திலாக இராசாங்கத்துக்குவைக்கப்பட்ட அவன் சகோதரனைக்குறித்
தும் சொல்லியிருக்கிறது இசைந்திருக்கிறதாகக்காணலாம். எப்படி
யென்றால், முந்தினவாக்கியத்திலே சொல்லியிருக்கிறபடி யொசியா
மரணமடைந்தபிறகு சனம் யொசியாவின்குமாரனாகிய யோவகாஸை
அல்லது, தீர்க்கதரிசி சொல்லுகிறபடியே சல்லூமைச் சேர்த்துக்
கொண்டு அவனை எருசலேமிலே அவன் தகப்பன் ஸ்தலத்திலே இரா
சாவாக்கினார்கள். யோவகாஸ் இராசாவாகும்போது 23 வயதாயிருந்
தானென்று சொல்லியிருக்கிறது. இதன்பின் அவன் தள்ளுண்டது,
யோயாக்கீம் என்று மறுநாமமுள்ள அவன் சகோதரனாகிய எலியாக்
கீம் அவன் பட்டத்திற்குவந்தது முதலாகிய சங்கதிகளைச் சொல்லி
வரும்போது யோயாக்கீம் இராசாவாகிறபோது 25 வயதுள்ளவனா
யிருந்தானென்று காண்கிறோம். யோவகாஸ் அரசாண்ட காலமெல்
லாம் 3 மாதமானபடியால் யோயாக்கீமுக்கு யோவகாஸ் ஏறக்குறை
ய இரண்டு வயதுக்கு இளையவனாயிருந்திருக்கவேண்டும். காரியமிப்
படியிருக்க, மூத்தவனைத் தள்ளி இளையவனைப் பட்டத்திற்குவைத்த
வகையென்ன? சனம் அவனைச் சேர்த்துக்கொண்டார்களென்று வா
சித்தோம். அதாவது இவன்பேரில் அவர்களுக்கதிகப் பிரியமிருந்த
படியால் மூத்தவனிருந்த போதிலும் இளையவனையே தங்களுக்கு இரா
சாவாக்கிக்கொண்டார்கள். மேலும் 2 இராசா. 23. 30 ல், "சனம்
அவனையழைத்து அவனை அபிஷேகம்பண்ணினார்கள்" என்று வாசிக்
கிறோம். சாதாரணமானவேளைகளில் அபிஷேகம்பண்ணுவது வழக்க
மாயிராவிட்டாலும், முறைதப்பி அல்லது நியாயவிரோதமாய் ஒரு
வனை இராசாவாக்கும்போது அவனை அபிஷேகம்பண்ணாமலிருக்கிற
தில்லை. 2 இராசா 9. 3.

தீர்க்கதரிசி விட்டிருக்கும் அநேக காரியங்களைச் சரித்திரத்திற்
காண்கிறோம். சரித்திரக்காரனாவது தீர்க்கதரிசியாவது சொல்ல
வேண்டுமென்கிற நோக்கத்தோடாவது, அல்லது சொல்லாமல் விட
வேணுமென்கிற நோக்கத்தோடாவது எழுதினார்களென்று சொல்வ
தற்கிடமேயில்லை. இவைகளைக் கவனிக்கும்போது எரேமியா தான்
எழுதின தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுகிறதற்கு அநேககாலங்களுக்
கு முன்னமேயிருந்திருக்கவேண்டும் என்று தெளிவாய் அறிந்துகொள்
ளுகிறோம்.

---

## XXIII. கானான் ஸ்திரீயின் குமாரத்தி சொஸ்தமானது.

மத்தேயு. 15 ; 21—28 வரை. மாற். 7. 24—30.

(தொடர்ச்சி.)

---

அநேகர் இம்மட்டில் தங்கள் விண்ணப்பத்தை நிறுத்திப்போடுவார்
கள். இரக்ஷகர் சொன்னவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் கோ
பத்துக்கும் அவநம்பிக்கைக்கும் இடங்கொடுத்து திரும்பிப்போய்விடு
வார்கள். இந்த ஸ்திரீயோ அப்படியல்ல. அவள் அந்த நூற்றுக்குச்
சேர்வைகாரனைப்போல, அவனுக்கு நேரிட்டதைவிட வருத்தமான
சோதனையில் விசுவாசத்தில் வல்லமையுள்ளவளாய் வெளிப்பட்டாள்.
அவனுக்கு எரிச்சல் உண்டாகத்தக்க வார்த்தையினின்றே விசுவாசத்



தின் சாமர்த்தியத்தினாலே தனக்கு அநுகூலமான ஒரு நியாயத்தை
எடுத்துக்கொண்டாள். இரக்ஷகரை அவர் வார்த்தையிலேயே பிடித்
துக்கொள்ளுகிறாள். இது இரட்சகருக்குப்பிரியம். அவருடைய கை
யிலிருந்த பட்டயத்தைக்கொண்டே அவரை மேற்கொள்ளுகிறாள்.
"மெய்தான் ஆண்டவரே! ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எச
மான்களின் மேசையிலிருந்துவிழுந் துணிக்கைகளைத் தின்னுமே" என்
றாள். இந்தச் சின்னச் சரித்திரத்தை வெகு செம்மையாய் விளக்கிக்
காட்டி, இந்த ஸ்திரீயின் பலத்த விசுவாசத்தை அதிகமாய் மெச்சிக்
கொள்ளுகிற லுத்தர் இந்த வார்த்தைகளைக்குறித்து, "அது நல்ல
அடி, கிறிஸ்துவின் வார்த்தைகளைக்கொண்டே அவருக்குக் கண்ணி
யைவைத்தாள்" என்கிறார். அதைரியப்பட்டுச் சோர்ந்துபோகிற இருத
யங்கள் கர்த்தர் "இல்லை" என்கிறதினின்று "ஆம்" என்கிறதை வருவி
க்கப் படித்துக்கொள்ளவும், "இல்லை" என்று சொல்லுகிறதில் மறைந்
திருக்கிற "ஆம்" என்கிற வார்த்தையைக் கேட்கவும் இந்த ஸ்திரீயைத்
திருஷ்டாந்தரமாக அடிக்கடி அவர்கள் முன் வைக்கிறார். "அவரு
னக்கு விரோதமாகச்சொல்லுகிறதெல்லாவற்றையும் சரி என்று ஒத்
துக்கொள். ஆகிலும் அவளைப்போல மேற்கொள்ளும்வகையில்,
உன்மேல் அவர் சாற்றுங் குற்றங்களை உன் அவசரத்துக்கேற்ற நியா
யங்களாகத் திருப்பும்வகையில், கிறிஸ்துவை அவருடைய வார்த்தை
களிலேயே அகப்படுத்தும்வகையில், செபம்பண்ணுகிறதைவிட்டு ஓயா
தே. கர்த்தர் சொன்ன வார்த்தைகளைத் தள்ளாமல், அதிலேதானே
தனக்கு ஏற்ற நியாயமிருக்கிறதென்று காட்டுகிறாள். நாய்க்குட்டிகள்
என்கிறீரா? மெய்தான். அந்தப்பேரையும் அந்த இடத்தையும் ஏற்
றுக்கொள்ளுகிறேன். நாய்களுக்கு முந்தினபங்கு, அல்லது பிள்ளைக
ளுடையபங்கு கிடையாவிட்டாலும் இன்னும் அவைகளுக்குரிய பங்கு
ஒன்றுண்டே. எசமான்கள் மேசையிலிருந்துவிழுந் துணிக்கைகள்
நாய்ந்த மேற்பங்குமாத்திரமல்ல, மேசையைத் துடைக்கிறதற்குத்
துணிக்குப்பதிலாக நீங்கள் பிரயோகிக்கிற உள்ளேயிருக்குமிருதுவா
னபங்கும் நாய்களுக்குரியவைகளாச்சுதே. இந்த உம்முடைய வார்த்
தைகளிலேயே அஞ்ஞானிகளுக்கும் எனக்குங்கூட அந்தப் பெரிய
வீட்டெசமானாகிய கர்த்தர் வழங்கும் ஆசீர்வாதங்களில் பங்குண்
டென்றுகாட்டுகிறீரே. நாங்கள் கடைசி இடத்திலிருக்கிறவர்களாயி
ருந்தாலும் அன்னியரல்ல. அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான்
என்று காட்டுகிறீரே. அந்தப்பேரே எனக்குப் போதும் அதற்குரியதை
யே நான் கேட்கிறேன் என்று நியாயஞ் சொன்னாள். எசமான்கள்
என்பதை யூதர்கள் என்று கிறிசொஸ்தம் அர்த்தம்பண்ணினது சரி
யல்ல. அப்படியானால் உவமானமுழுவதும் கெட்டுப்போம். அவர்
கள் பிள்ளைகள். எசமான்கள் என்பது தேவனைக் குறிக்கும். முன்னே
நாய்களென்று பன்மையில் பேசினபடியால் அதற்கிசைவாக எச
மான்களென்று பன்மைச்சொல்லை வழங்குகிறார். அப்படியே நமது
இரட்சகரும் பூமியின் இராசாக்களென்று முந்திச் சொன்னபோது
பிதாவின் ஒரே பேரான தம்மைக்குறித்துப் பேசும்போதும் அதற்கி
சைவாக "அப்படியானால் பிள்ளைகள் அப்படிச் செலுத்தவேண்டிய
தில்லையே" என்று பன்மையில் பேசுகிறார். பெரிய எசமானாகிய அவர்
சகல ஜீவாத்துமாக்களுக்கும் பந்தியை விரிக்கிறார். மேசையிலிருக்
கும் பிள்ளைகளும், மேசையின்கீழிருக்கிற நாய்களும் சகலரும் தங்
கள் தங்கள் ஒழுங்கின்படியே அதில் சாப்பிட்டு திருப்தியடைகி
றார்கள். அவள் சொன்னது உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக

வைத்துக்கொள்ளும் என்று கெட்டுப்போன குமாரன் சொன்னது போலிருக்கிறது. மனிதர் பராபரனுக்குமுன்பாகப் பலவித சம்பந்தத்தில் நிற்கிறார்கள். சிலர் சற்றே நெருங்கின கிட்டின சம்பந்தத்திலும், வேறு சிலர் சற்றே தூரமான சம்பந்தத்திலுமிருக்கிறார்கள். கிட்ட இருந்தாலும், தூர இருந்தாலும் சகலரும் அவரிடத்திலிருந்து போசனத்தைப் பெற்று அவரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது இவள் மேற்கொண்டாள். முன்னே இகழ்ச்சியான வார்த்தையைக் கேட்டவள் இப்பொழுது புகழ்ச்சிக்கு ஏதுவான வார்த்தைகளைப் பெற்றுக்கொள்ளுகிறாள். "ஸ்திரீயே உன் விசுவாசம் பெரியது" இப்படிப்பட்ட புகழ்ச்சி சுவிசேஷங்களில் இன்னொருவருக்கு மாத்திரமே கிடைத்தது. முந்தி அவளுக்கு ஒன்றுஞ் செய்ய மனமில்லாதவர்போல காண்பித்தவர் இப்பொழுது தமது கிருபையின் பொக்கிஷ சாலையைத்திறந்து, தனக்கு வேண்டியமட்டும் எடுத்துக்கொள்ளச் சொல்லுகிறார். நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். யோசேப்பு முந்தி தன் சகோதரருக்கு அன்னியனாய்க் காண்பித்ததுபோல இவரும் முந்தி வெறுப்பைக்காண்பித்தார். ஆனால் யோசேப்பைப்போல நெடுநேரம்வைத்திருக்கக்கூடாமல், வேண்டியதற்கு அதிகமாக அதை வைத்துவையாமல், அவளுடைய விசுவாசத்தைக் கண்டவுடனே நீ சொன்ன இந்த வார்த்தையினிமித்தம் "போகலாம் பிசாசு உன் மகளைவிட்டுப் போய்விட்டதென்றார்." கப்பர்நாகூமிலுள்ள நூற்றுக்குச் சேர்வைகாரனைப்போல, மத்தேயு 8. 13 கானாவிலிருந்த அதிகாரியைப்போல (யோ. 4. 53.) அவருடைய வார்த்தை தூரத்திலிருந்தாலும் சமீபத்திலிருந்தாலும் வல்லமையுள்ளதென்று கண்டாள். அவள் மகள் தூரத்திலிருந்தாலும் இவளுடைய விசுவாசத்தின்மூலமாய் கிறிஸ்துவின் ஆசீர்வாதம் அவளுக்கு எட்டிற்று. விசுவாசத்தின் ஒரு கையினால் இரக்ஷகரைப் பற்றிக்கொண்டு, மறுகையினால் தன் மகளைப் பிடித்தாள். இரட்சகரிடத்திலிருந்து சொஸ்தமாக்கும் வல்லமை மின்சாரக் கொடியைப்போல இவள் மூலமாய் இவள் மகளுக்குச் சென்றது. வீட்டுக்குவந்தபோது பிசாசு போய்விட்டதையும் தன்மகள் கட்டிலில் படுத்திருக்கிறதையுங் கண்டாள். பிசாசு போவதினாலுண்டாகும் மும்முரத்தினாலே பெலவீனமாய்க்கிடந்திருப்பாள். அல்லது இதுவரையில் கிடையாத இளைப்பாறுதலைப்பெற்று அமைதலாய்க்கிடந்திருப்பாள். லூக். 8. 35ல் பிசாசினால் பாதிக்கப்பட்ட ஒ[illegible]ன் வஸ்திரம்தரித்து புத்திதெளிந்திருந்ததற்கு இது சரியாயிருக்கிறது.

ஆனால் கர்த்தர் இவளை இவ்வளவுதூரம் சோதிப்பானேன்? மற்றவர்களுக்குக் காட்டாத வெறுப்பை இவளுக்குக் காட்டுவானேன்? சில சமயங்களில் அவரே வலியவந்து, நமக்கு நன்மைசெய்ய மனமுள்ளவராய்ச் "சொஸ்தமாகவேண்டும் என்று விரும்புகிறாயா"? என்று கேட்கிறார். யோவா. 5. 6. அல்லது இரக்கஞ்செய்யக் காத்திருக்கிறபடியால் இரண்டுதரம் கேட்குமட்டும் காத்திராமல், கேட்டவுடனே தமது ஆசீர்வாதத்தைப் பொழிகிறார். இந்தச் சமயத்தில் ஒரு பத்திமான் சொல்லுகிறபடி அவ்வளவு நேரம் தாமதித்து, அவள் விசுவாசத்தோடு போராடி, அது நன்றாய் வேர் போட்டிருக்கிறதோவென்று அசைத்தசைத்துப் பார்ப்பானேன்? அது சோதனைக்கு நிற்கும் என்றும், கடைசியில் ஜெயங்கொள்ளும் என்றும், கேட்டவுடனே கொடுத்துவிட்டால் இவ்வளவு அதிகப் பெலனையும், சுத்தாங்கமாயும், மேலானதாயும்வெளிப்படாதென்றும் அவர் அறிந்தார். மனுஷர்கள்



சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் செபம்பண்ணவேண்டுமென்றும், கர்த்தர் ஒன்றைக்கொடுக்கத் தாமதப்படும்போது அதை மறுக்கிறதில்லை என்றும் முன் படியாதவிதமாய் இப்போ படித்துக்கொண்டாள். கர்த்தர் தனக்கெதிர்ப்பட்டு தன்னைக் கொல்லவேண்டுமென்றிருந்தபோது மோசே படித்துக்கொண்ட பாடத்தைப் படித்துக்கொண்டாள். 2 மோசே 4. 24. இராமுழுதும் தேவதூதனோடே போராடின யாக்கோபைப்போல பெலனைச் சம்பாதித்துக்கொண்டாள். யாக்கோபினுடைய போராட்டமும் இவளுடைய சரித்திரமும் அநேக காரியங்களில் ஒன்றுபோலிருக்கிறது. 1 மோ. 32. 24—32. ஒரு பக்ஷத்தில் நீண்ட போராட்டமும் மறுபக்ஷத்தில் அல்லத்தட்டுதலும் காண்கிறோம். இரண்டிலும் பெலவீனன் பெலமுள்ளவனை மேற்கொள்ளுகிறான். விசுவாசத்தோடுசேர்ந்த செபத்தின் வல்லமைக்கு கர்த்தரும் இடம் கொடுக்கிறார். பிறகு ஒரு தீர்க்கதரிசி இந்தப் போராட்டத்தைக்குறித்துப் பேசும்போது, அந்தக் கோத்திரப் பிதா பிரயோகித்த ஆயுதம் இன்னதென்றுசொல்லுகிறார். அவன் அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான். தூதனான அவனோடே பிரபுவாய்ப் போராடி மேற்கொண்டான். ஓசேயா. 12. 3, 4. சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிற தூதனானவன் உடம்படிக்கையின் தூதன். மனுவுருவெடுத்த வார்த்தையானவர். யாக்கோபை பெனியேலில் ஆசீர்வதித்தவரே இங்கே இந்த ஸ்திரீயையும் ஆசீர்வதித்தார். இரண்டு சமயங்களிலும் நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய, உம்மைப் போகவிடேன் என்று சொன்ன விசுவாசத்திற்குப் பலன் அளித்தார். இரண்டு சரித்திரங்களையும் இவ்விதமாகக் கவனிக்கும்போதுதான் நமக்கு நிறைவான எழுப்புதலை உண்டாக்கும். இதிலேதான் இரண்டு சரித்திரங்களும் நிறைவான ஒற்றுமையைக் காண்பிக்கிறது.

மனிதன் பராபரனை மேற்கொள்ளுகிறானென்று சொல்லும்போது அந்த வல்லமையைத் தேவனே மனிதருக்குக் கொடுக்கிறாரென்பதை மறக்கக்கூடாது. மனிதன் தன் விசுவாசத்தின் வெறுமையைக் கவனிக்கும்போது தேவனுடைய வல்லமையையும் நிறைவையும் தனதாக்கிக்கொள்ளுகிறான். இவ்விதமாய் ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோக இராட்சியம் அவர்களுடையது. பவுல் அப்போஸ்தலன் யாக்கோபின் போராட்டத்தைப்போலொத்த போராட்டம் தன் சபையாருக்காகத் தன் மனதிலிருந்ததைக் குறித்துப் பேசும்போது "எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" என்கிறார். கொலோ. 1. 29; 4. 12.

கிறிஸ்துவண்டைக்கு வராதபடி நம்மைத் தடுக்கிறவைகளை நீக்குகிறதில் விசுவாசத்தின் மூன்றுபடிகளைப் பார்க்கிறோம். மாற்கு 2. 4ல் சொல்லப்பட்ட திமிர்வாதக்காரன் மாற். 10 48ல் சொல்லப்பட்ட எரிகோவின் குருடன். இந்த கானானிய ஸ்திரீ. திமிர்வாதக்காரன் வெளியரங்கமான தடைகளைமாத்திரம் நீக்கினான். பர்த்திமேயு என்னுங் குருடன் மனிதராலுண்டான தடைகளைநீக்கினான். இந்த ஸ்திரீயோ அவர்களைவிட அதிகமாய்க் கிறிஸ்துவானவர் தாமே வைத்த தடைகளையும் நீக்கினாள். இவர்கள் மூன்று பேரும் மூன்று பராக்கிரமசாலிகள். தாவீதுடைய பராக்கிரமசாலிகளல்ல. தாவீதுக்கு ஆண்டவரும் தாவீதின் குமாரனுமாயிருந்தவருடைய பராக்கிரமசாலிகள். இவர்கள் சத்துருக்களின் இராணுவங்களைக் கடந்து இரட்சிப்பின் கிணறுகளிலிருந்து ஜீவ தண்ணீரை மொண்டு வந்தவர்கள். 2 சாமு. 23, 16.

# பிரசங்கிகள் கைவல்யம்.

## முகவுரை.

கிறிஸ்துவின் ரக்ஷண்ய மகத்துவத்தை அந்தரங்கத்திலும், பகிரங்கத்திலும் விக்கிரகதொழும்பர்களாகிய எத்தன்மையோருக்கும் விஸ்தரித்து, மார்க்கவிளக்கஞ்செய்கின்ற கிறிஸ்தவ மிஷனரிகள், விஸ்திர உபதேசிகள், பிரசங்கிகள் முதலானவர்கள் இந்துசமயகண்டனை செய்து, கிறிஸ்துமார்க்கத்தை ஊர்ச்சிதப்படுத்தவேண்டியவிஷயத்தில், தோரணையோடு காரணகாரியங்களைச் சுருக்கமாய்த்திரட்டி, கல்லுந் தேங்காயுஞ் சந்தித்ததுபோல சொல்லவிழ்த்து, எல்லோருக்குந் தெட்டத்தெளிய ஞாயம்விள்ளும்படி சூசனையான ஒரு கையடக்கப்புஸ்தகம் இல்லாததுபற்றி, ஹிந்துமதகற்பனைகள் ஆபாசமானவைகளென்பதை, பூர்வோத்திரந்தெரிந்த மானபாவருடைய சாட்சிகளைக்கொண்டே ரூபிகரித்து, விக்கிரகவணக்கக்காரர் மெய்ப்பாய்க் கொள்வதெல்லாம் தப்பாமல் பாழ்வென்று ஒப்பிக்கக்கூடியதாய் இச்சிறு புஸ்தகம் அமைத்திருக்கிறது. மேலும் கிறிஸ்துமார்க்கமே சத்தியமென்று ருசுப்படுத்துகிற நேத்திரமான நியாயக்குறிப்புகளுங்கண்டிருக்கின்றன. ஆகையினால், இரண்டுவிஷயத்திலுங் கொண்டணைந்தாயிருக்கின்ற இதைச் சாக்ஷாத் கடவுளாயிருக்கின்ற ஜெகோவாவினுடைய திருப்பாத காணிக்கையாய்வைக்கின்ற,

கிறிஸ்துதாசன்.

### 1. விக்கிரக வணக்க நிக்ரக வசனங்கள்.

கல்லினைச்செம்பினைக்கட்டையைக்கும்பிடல்,
புல்லறிவாகுமடி குதம்பாய்—

விக்கிரகபூஜைசெய்வது ஓம நெய்யைச் சாம்பலில் பெய்யச்
செய்வதாம்—என்று சங்கராச்சாரியார்சொல்வது.

சிவவாக்கியர்—கல்லுகளைச் செம்புகளைத் தராக்கடம்மை கனமான மர
ங்களையுந் தெய்வமென்று—சொல்லுகின்ற குருக்களுக்குஞ் சீஷ
ருக்குஞ் சொக்கமில்லை எழுநரகம் தானாய் நிற்பர்.
வைச்சதெய்வமென்னதெய்வம் வாயில்லாத தெய்வமே.

பேரின்பமணிமாலை—செம்பினால் மரத்தால் மண்ணால் கலையினால் செங்
கல் தன்னால்—பைம்பொன்னால் மெழுகால் நீற்றால் படிக்கத்தா
லுருப்படுத்தி—நம்பியே தெய்வமென்று நாட்டோறுந் தொழுவோ
ரெல்லாம்—உம்பர்கோன் பதமிழந்து உழலுவார் நரகில்தானே.

பத்திரகிரியார்—உளியிட்ட கல்லுமுருப்பிடித்த செஞ்சாந்தும்—புளி
யிட்ட செம்பும் பொருளாவதெக்காலம்.

சங்கராச்சாரியார்—உடலறிவிளக்கத்தில் விக்கிரகாராதனையைச் சண்
டமாருதமாய்க் கடாவுகிறார்.

ஞானவாசிட்டம் இதைப் பலமாய்க் கண்டிக்கிறது.

தத்வதரிசனத்தியாயம், சுவேதாச்சுவத உபநிஷதம், யோகாதியத்தி
யாயம் இவைகளுஞ் சாட்சியிடுகின்றன.



### 2. கோயில் பூஜை கூமுட்டை என்பது.

சிற்பர்கட்டுந் திருக்கோயிற்குள்ளாக—தற்பரம் வாழ்வதுண்
டோ, குதம்பா!

சித்ததலம்போலத் தெய்வமிருக்கின்ற—சுத்ததலங்களுண்டோ,
குதம்பா!

பேரின்பமணிமாலை—ஊருக்கிப்படியே தலப்புராணம் உண்டாக்கி
யுலகிலுள்ளோரிதை மெய்யென்று—பூராயமறியாமற் கதியிழந்
து புத்திகெட்டு நரகினிலே போவர்தாமே.

### 3. சாமிகொண்டாடுவது சபலமற்றதென்பது.

பட்டணத்துப்பிள்ளை—பட்டிகள் பலருங்கூடி பழவினைவந்தபோது—
குட்டியுமாடும் வெட்டிக் கும்பிடுந் தெய்வமெல்லாம்—முட்டியே
அதன்வந்து முடுகிவந்தழைக்கும்போது—பட்டிகளுங்கள் தெய்
வம் பலன்தரக் காண்கிலேனே.

### 4. பலதேவர் வணக்கம் பாழென்பது.

கொங்கணவர்—திடமுடைய தேவர் பலருண்டென்போர்கள்—நரகு
க்காளாவார் திண்ணந்தானே.

விவேகசிந்தாமணி—துயர்க்குதவாதேவரையுஞ் சுருதிநூலில்—வல்லா
ள அந்தணர்தமையும் நம்பொணாதே.

### 5. திரிமூர்த்திகள் தெய்வமல்ல என்பது.

திருமூலர்விருத்தம்—மலையரசர் சிவன்பிரமா அரியுந்தானும்; மாசில்லா
நாதருட வழியைக்காணார்—நிலைபெறு மோக்ஷவழி காணாதாலே
நீதியற்ற மனிதரொன்றே நிகழ்த்தினோமே.

சிவவாக்கியர்—மாலுமயனுமல்ல ஜீவதேவதேவனே—என்றும், சிவனு
மல்ல என்று பின்கவியிலுஞ் சொல்லுகிறார்.

மூவராலுமறியொணாத முக்கணன் முதற் கொழுந்து என்பது.
தேவருஞ் சித்தருந் தேடு முதல்வர்—மூவருமாவாரோடி குதம்
பா!

### 6. வேதாந்த வாதமும் சூதான போதம் என்பது.

பாலனந்தசுவாமிகள்—தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி—வேத—
சாஸ்திரப் பொத்தலை மூடுங்கடி—முத்திதரு ஞானவஸ்துவைவா
என்று மூட்டிக் கும்மியடியுங்கடி.

சங்கராச்சாரியார்—வேதாந்தத்தோர்கள் மொழி விரும்பவேண்டாம்—
தொகையேகபராபரத்தை வணங்கினின்றால் சுகமாகப்பரமபதஞ்
சுகிக்கலாமே.

### 7. கிரியாதிகள் சரியல்லாதவைகளும் வியர்த்தமானவைகளும் என்பது.

யாகாதி கன்மங்கள் யாவுஞ் சடங்குகள்—ஆகாதசெய்கையடி,
குதம்பா?
சாற்றுஞ் சகுனங்கள் சந்தியாவந்தனம்—போற்றுமதினமே,
குதம்பா!

பட்டணத்துப்பிள்ளை—நேமங்கணிஷ்டைகள்வேதங்களாகமநீதிநெறி: ஓமங்கள் தர்ப்பணம் சந்திஜெபமந்திரயோக நிலை—நாமங்கள் சந்தனம் வெண்ணீறும் பூசி நலமுடனே—ஜாமங்கடோறுமிவர்செய்யும் பூசைகள் சற்பனையே.

## 8. இந்துமத வேதாதிய பிரபந்தங்கள் எக்கசக்கமானவைகளும், எதார்த்தமற்றவைகளும் என்பது.

பாம்பாட்டிச்சித்தர்—சதுர் வேதமாறுவகைச் சாஸ்திரம்பல, தந்திர புராணங்களுஞ் சாற்றுமாகமம்—விதவிதமானதான வேதநூல்களும், வீணான நூல்களென்றூது பாம்பே.

வேடிக்கைப் பொதைகளும் விநோதக்கதைகளுமென்று சாயனுச்சாரியார் சொல்லியிருக்கிறார்.

ஞானவெட்டியான் சகுரு, சகுரும் பாடல்களைப் பார்த்தால் பண்டவாளந் தெரிகிறது.

வேதியர் கட்டிய வீணான வேதத்தைச் சோதித்துத் தள்ளேயடி, குதம்பா!

திருமூலர்விருத்தம்—பலகலைகளோதுவதை நாலுந்தானும்—பண்ணியதோர் நால்வேதமாறு சாஸ்த்ரம்—அலையுடனே யஞ்செழுத்தும் வெளியுந்தானும்—அவைகளிலே பொய் களவு அதர்மம் சேரும்—என்பதே.

கட்டிவைத்த புத்தகக் கதைகுத பிதற்றெல்லாம்—பெட்டதாய் முடிந்ததே நிர்ணயான் அறிந்தபின், என்றார்.

பத்திரகிரியார்—சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப்பொய்யாக்கி—சூத்திரத்தைக் கண்டு சுகம்பெறுவதெக்காலம்.

(தொடர்ச்சி.)

## நாளது சங்கதிகள்.

**இங்கிலாந்து.** பார்லிமெந்து சங்கம் அபிஸீனிய யுத்தத்துக்காக, 2 கோடி ரூபாய் சங்கற்பஞ்செய்து, மற்றும் சில அலுவல்கள் இயற்றியபின் பெப்புருவரிய 13உ வரைக்கும் கலைந்துபோனது. பீனியர் இன்னம் அநேக இடங்களில் வில்லங்கஞ்செய்யத் துணிவுகூறுதலால், அவர்கள் கலகத்துக்கு எழும்பும்போது, உடனே அவர்களை செறுத்தடக்க துரைத்தனத்தார் அனபிராயத்தனம் எல்லாம் செய்து வருகிறார்கள். பீனியான கைதிகளில் சிறிதுபேர் லண்டன் நகரத்து சிறைச்சாலை ஒன்றில் அடைபட்டிருக்கவே, அவர்களை விடுதலைசெய்யும்பொருட்டு மேற்படியாரது கட்சிக்காரர் சிலர்கூடி அச்சிறைக்கூடத்தின் சுவர்புறமாய் ஒரு பீப்பாய்நிறைந்த வெடிமருந்தை மறைவுசெய்து அதில் நெருப்புக் கொளுத்தினார்கள். அது தீப்பற்றி வெடிக்கவே அடுத்தவீடுகளில் குடியிருந்த சனங்களுள் 40 க்கு அதிகம்பேர் காயப்பட்டும், 3 பேர் தன் சணத்தில் கொலையுண்டும் விழுந்தார்கள். ஆயினும் கைதிகள் தப்பவில்லை அவ்வாறு சற்பனைசெய்த துரோகிகளில் 3 பேரைத் தொடர்ந்துபிடித்தாயிற்று.

**அமெரிக்கா.** பிரஜாதிபதியாகிய ஜொன்ஸன் துரையானவர் தம் உத்தியோகத்துக்குரிய கடமைகளை செம்மையாய் நிறைவேற்ற



ததையிட்டு, அவரைக் குற்றவிசாரணை செய்யவேண்டும் என்பதாய், ஆலோசனைச் சங்கத்தில்பிறந்ததீர்மானம் ஒப்புக்கொள்ளப்படாமல் தவறிப்போயிற்று. ஆகிலும் அவர் பேருக்கு பலரிடத்தும் மிகுந்த மனக்குறைதோன்றித்தான் இருக்கிறது. ஒருவேளை அவர் ஆலோசனைச் சபையைவிட்டுத் தன்னீங்கலாய் இருந்துகொண்டு அதிகாரஞ்செலுத்தத் தெண்டிப்பாரென்றும், அதினாலே மீட்டும் அத்தேசத்தில் யுத்தம் உண்டுபடும் என்றும் சிறுபான்மையோர் எண்ணமிடுகிறார்கள்.

**இந்தியா.** மராட்டிய சிற்றரசுகளில் ஒன்றாகிய தொங்கு நாட்டின் நபாப் தனக்கு கீழ்ப்பட்ட அதிபதிகளில் ஒருவனுடைய மாமனை கொலைபுரிவித்தான். அதின்மேல் சங்கைபொருந்திய கவர்னர் ஜெனரலவர்கள் அவனை ஆசனத்தினின்று தள்ளி, ராச்சியத்துக்கு அப்புறப்படுத்தி, அவன் மகனுக்கு ராஜபட்டம் கட்டினதுமல்லாமல், கொலையுண்ட தலைவனின் பின்னடியாருக்கு தொங்கு ராச்சிய வரும்படியிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுக்கவும், தன் மாமனை வன்கொலையாய் இழந்த அப்பிரபு மேலைக்கும் தொங்குநாட்டு அரசருக்கல்ல. கவர்னர் ஜெனரலுக்கே கீழ்ப்பட்டிருக்கவும் வேண்டும் என்பதாய் சட்டம் விதித்தார். சுதேச இராஜாக்கள் கொடிய பாதகங்கள்செய்யப்புகில் அவர்களைமுதலாய் சிட்சிக்கும் அதிகாரம் தங்களுக்குண்டென்பதை இங்கிலீஷ் துரைத்தனத்தார் இவ்வாறு பிரத்தியட்சம் பண்ணினார்கள்.

## நோட்டீஸ்.

மகா கனம்பொருந்திய கண்காணியாரவர்களுடைய பந்தயப்பரீட்சை ௧௮௬௮ம் ௵ ஜூன்மாதத்தில் நடத்தப்படும். இன்னதேதியில் இன்ன இடத்தில் நடக்குமென்று இனிமேல் அறிவிக்கப்படும். இந்த வருஷம் கிரேக்குப்பாஷையில் பரிட்சையிராது. இது முழுவதுமாய் நிறுத்தப்படாமல், தற்காலத்துக்குமாத்திரம் நிறுத்தப்பட்டிருக்கிறதென்று அறிந்துகொள்ளவேண்டும்.

### இந்த வருஷத்துக்கு குறித்திருக்கிற பாடங்கள்.

பழைய ஏற்பாட்டில், சொயா தீர்க்கதரிசனம்.
புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலர் நடபடிகள்.

இந்தவருஷம் மேற்படி பரிட்சையை நடத்த நியமிக்கப்பட்டவர்கள்.

கனம்: ரை. ஹாலிஸ் ஐயரவர்கள்.
ரா. ரா. ஜூ. பிரஞ்சு துரையவர்கள்.

மார்ச்சுமீ நாள் 31.—மாசிமீ 18உ முதல், பங்குனிமீ 19உவரை.

| வாரம். | [illegible] தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | கஅ | உமதடியாளின் அக்கிரமத்தை நீக்கிப்போடும். 1 நாளா. 21:8. |
| தி | 2 | கக | அவருடைய இரக்கங்கள் மகா பெரியவைகள். 13. |
| செ | 3 | உ0 | கர்த்தர் உன்னண்டையிலிருக்கிறார். 22: 16. |
| பு | 4 | உக | உங்களிருதயத்தைக் கர்த்தரைத்தேட நேராக்குங்கள். 19. |
| வி | 5 | உஉ | நீ உன் பிதாவின் பராபரனை அறி. 29: 9. |
| வெ | 6 | உங | அவரை உத்தம இருதயத்தாலும், மனப்பூர்வத்தாலுஞ்சேவி. 9. |
| ச | 7 | உச | கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்கிறார். 9. |
| ஞா | 8 | உரு | சிந்தனைகளின் தோற்றுதலையெல்லாம் அறிகிறார். 19. |
| தி | 9 | உசா | நீ அவரைத்தேடினால் அவருனக்குத்தென்படுவார். 9. |
| செ | 10 | உஎ | நீ அவரை விட்டுவிட்டால், என்றைககுந்தள்ளிப்போடுவார். 9. |
| பு | 11 | உஅ | குடியானவர்கள் பொய்பேசுகிறார்கள். மீகா 6: 12. |
| வி | 12 | உக | தேசத்தில் சன்மார்க்கர் அற்றுப்போனார்கள். 7: 2. |
| வெ | 13 | க | மனுஷரில் செம்மையானவன் இல்லை. 2. |
| ச | 14 | உ | என் இரட்சிப்பின் பராபரனுக்குக் காத்திருப்பேன். 7. |
| ஞா | 15 | ங | என் பராபரன் என்னைக் கேட்பார். 7. |
| தி | 16 | ச | கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார். 8. |
| செ | 17 | ரு | அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன். 9. |
| பு | 18 | சா | பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள். மத். 5: 48. |
| வி | 19 | எ | அந்தரங்கத்திலிருக்கிறஉன்பிதாவைநோக்கிச்செபம்பண்ணு. 6:6. |
| வெ | 20 | அ | உம்முடைய நாமம் பரிசுத்தமாய்வணங்கப்படுவதாக. 9. |
| ச | 21 | கூ | உம்முடைய இராட்சியம் வருவதாக. 10. |
| ஞா | 22 | க0 | தேவரீர் எங்கள் கடன்களை மன்னித்தருளும் 12. |
| தி | 23 | கக | நாங்கள் சோதனையிற்பிரவேசியாதபடி செய்யும். 13. |
| செ | 24 | கஉ | தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். 13. |
| பு | 25 | கங | பூமியிலே பொக்கிஷங்களைக் கூட்டிவையாதிருங்கள். 19. |
| வி | 26 | கச | பரலோகத்திலே உங்களுக்காகப்பொக்கிஷங்களைக் கூட்டிவையுங்கள். 20. |
| வெ | 27 | கரு | நமக்காக நித்திய மீட்புண்டாக்கினார். எபி. 9: 12. |
| ச | 28 | கசா | இரத்தஞ் சிந்துதலில்லாமல், பாவமன்னிப்புமில்லை. 22. |
| ஞா | 29 | கஎ | எனது பிரமாணங்களை அவர்கள் இதயங்களில் கொடுப்பேன். 10: 16. |
| தி | 30 | கஅ | அவர்கள் பாவங்களை ஒருக்காலும் நினைத்துக்கொள்வதில்லை. 17. |
| செ | 31 | கக | உண்மையுள்ள இதயத்தோடு பாராபரனைச்சேரக்கடவோம். 22. |

## விசேஷித்த நாட்கள்.

1. லெந்தென்னும் நாட்களிலுள்ள, முதலாம் ஞாயிறு.
8. லெந்தென்னும் நாட்களிலுள்ள, இரண்டாம் ஞாயிறு.
10. பௌரணமி.
15. லெந்தென்னும் நாட்களிலுள்ள, மூன்றும் ஞாயிறு.
22. லெந்தென்னும் நாட்களிலுள்ள, நான்காம் ஞாயிறு.
25. அமாவாசை.
29. லெந்தென்னும் நாட்களிலுள்ள, ஐந்தாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

**Vol. 24.** **April.** **No. 4.**

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... ... 62
The Parables of Christ. ... ... ... ... ... ... ... 64
Christian Church History. ... ... ... ... ... ... 66
A Family Commentary on the Sermon on the Mount. ... 69
On the Liturgy. ... ... ... ... ... ... ... ... 72
Notes on Genesis. ... ... ... ... ... ... ... ... 74
Summary of News. ... ... ... ... ... ... ... ... 79


**அட்டவணை:**


பாலபோதனை. ... ... ... ... ... ... ... கூஉ
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... கூச
கிறிஸ்து சபை சரித்திரம். ... ... ... ... ... கூசா
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... கூக
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ... எஉ
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... எச
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ... எக


**Palamcottah:**
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.
**1872.**

# நற்போதகம்.

௪. ஏப்பிரல்மீ. ௲௮௭௨ ௵.

## Bible Sketches and their Teachings.

### பாலபோதனை.

#### மறந்துபோன பாடம்.

2 மோசே 32.

(தொடர்ச்சி.)

பைத்தியங்கொண்ட அந்தச் சனங்கள் உடனே ஆரோனிடத்திற் போய் "எங்களுக்கு தேவர்களை உண்டுபண்ணித்தாரும்" என்று கேட்டார்கள். ஆரோனும் ஒருவேளை தன் சகோதரன் மோசே இன்னும் வந்தானில்லையே, இப்பொழுதாவது வந்தால் தாவிலையே என்று எண்ணியிருப்பான். அத்தனை பேராளமான சனக்கூட்டத்தைக் கண்காணிப்பது லேசான காரியமோ? ஆகிலும் "எங்களுக்குத் தேவர்களை உண்டுபண்ணித்தாரும்" என்று அவர்கள் கேட்டபோது, "கற்பனையை நினைத்துக்கொள்ளுங்கள்" என்று அவன் சொல்லவேண்டியதாயிருந்தது. என்றாலும் அவனும் மறந்துபோனான். அவர்களெல்லாரும் மறந்தேபோனார்கள். ஆரோன் ஒருவேளை பயப்பட்டான்போலத்தோன்றுகிறது. "உங்கள் நகைநட்டுகளையும் விலையேறப்பெற்ற ஆபரணங்களையெல்லாம் கொண்டுவாருங்களென்றுசொன்னால், அவர்கள் ஒருவேளை மனவெறுப்பாகி அது எப்படிச் செய்கிறது, ஒருக்காலும் கூடாது என்பதாய்ச் சொல்லிவிடுவார்கள் என்று நினைத்திருப்பான். அப்படி அவன் நினைத்தது பிசகு. எப்படியென்றால் அவன் அவ்வளவு சொன்னமாத்திரமே சனங்கள் ஓரோட்டமாய் ஓடிப்போய், எகிப்தியரிடத்திற்கேட்டு ஏராளமாய் வாங்கிக்கொண்டுவந்திருந்த எல்லா ஆபரணங்களையும் கழற்றிக்கொண்டுவந்து அவனிடத்திற் கொடுத்துவிட்டார்கள். என்னசெய்வதற்கு? அவன் உண்டுபண்ணவேண்டியது என்ன? அவர்கள் விட்டுவந்த தேசத்தார் கன்றுக்குட்டியின் உருவத்தைச் செய்து அதைப் பார்த்து தங்கள் தேவனை வணங்கினார்களே. அதுபோலவே இஸ்ரவேலின் தேவனுக்கு ஒப்பாகவும் ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ண நினைத்திருப்பான். இந்தக் கன்றுக்குட்டியே தேவன் என்று ஆரோன் நினைத்தானென்றா எண்ணுகிறீர்கள். கனவிலும் அவன் அப்படி நினைத்தவனேயல்ல. மேலும் எகிப்தியருடைய ஏபிஸ் என்ற தேவனை வணங்கவேண்டுமென்பதும் அவனுடைய கருத்துமல்ல, சனங்களுடைய விருப்பமுமல்ல. யெகோவாவை அவர்களுக்கு ஞாபகப்படுத்துவதற்குத்தான் அந்தக் கன்றுக்குட்டி. அதைப்பார்த்து அவர்கள் பிரார்த்தித்தபொழுதும் விருந்தாடினபொழுதும் விளையாட எழுந்திருந்தபொழுதும் இஸ்ரவேலின் தேவனையே ஆராதிக்கிறோமென்று நினைத்தார்கள். ஆ, எவ்வளவு பயங்கரமான தப்



பிதம். இரண்டாம் கற்பனையை நினையுமென்று ஆரோனுக்குச் சொல்ல ஒருவருமில்லாமற்போயிற்றே.

மோசே எங்கே! மலையிலிருந்து இறங்கிவருகிறான். அவன் தேவனோடு சம்பாஷித்ததினால் அவனுடைய முகம் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இரண்டு கற்பலகைகளும் அவன் கையிலிருக்கிறது. யோசுவாவும் அவன் கூடவருகிறான். அதோ ஒரு சந்தடி கேட்கிறதே அதென்ன! "சண்டைபோடுகிறார்கள்." "அல்ல, பாடுகிறார்கள்," நன்றாய்க் காதுகொடுத்துக்கேள். அந்தப் பாட்டுகள் தேவனை ஸ்துதிக்கிற கீர்த்தனைகளா? ஆம், திவ்விய கீர்த்தனைகள்தான். ஆனால் அவைகள் ஒரு விக்கிரகத்துக்குமுன்பாகப் பாடப்படுகின்றன. அதோ பார் கன்றுக்குட்டி சொரூபத்தை. பைத்தியங்கொண்ட, மறதிபிடித்த துன்மார்க்கரான இஸ்ரவேலர் அதைச் சுற்றிச் சுற்றியாடிவருகிறார்கள். மோசே அப்புறம் அதைப் பார்க்கச் சகிக்கமாட்டாமல், தன் கையிலிருந்த கற்பலகைகளிரண்டையும் கீழே யெறிந்துவிட்டான். சனங்கள் அவனைக் கண்டு மிகுந்த பிரமிப்போடும் பயத்தோடும் மூச்சுப்பேச்சில்லாமல் நின்றார்கள். சகோதரர் இருவருஞ் சந்தித்தார்கள். ஆ, ஆரோனுடைய முகத்தில் எவ்வளவு வெட்கம், எவ்வளவு துக்கம்! "நீ செய்ததென்ன, அல்லது சனத்தை இந்தப் பெரிய பொல்லாப்புச்செய்ய விடும்படிக்கு அவர்கள் உனக்குச் செய்ததென்ன?" என்று ஆரோனைப்பார்த்துக் கேட்க, அவன் சொல்லுகிற உத்தரவைப் பாருங்கள். "சனங்கள் எங்களுக்கு ஒரு தேவன் வேண்டுமென்றார்கள், அதன்பேரில் உங்களிடத்திலுள்ள பொன்னைக்கொண்டுவாருங்களென்றேன், அதை நெருப்பில்போட, இந்தக் கன்றுக்குட்டி வந்தது" என்றான். தானாய் வருமா? என்ன பைத்தியம். பிள்ளைகள் கேடுசெய்யும்போது பெரும்பாலும் சொல்வது இப்படித்தானல்லவா! தாய் மகளைப் பார்த்து, அன்னாள் குடத்தை உடைத்துப் போட்டாயே என்கிறாள். அம்மா என்னவிதமோ தெரியுகிறதில்லை, குடத்தைத் தூக்கினேன், குடம் இரண்டாய்ப்போச்சுது என்று பிள்ளை சொல்லுகிறது. தகப்பன் மகனைநோக்கி, யோசேப்பு, உன் காப்பிப்புத்தகத்தில் இந்தப் பெரிய தப்பிதம்பண்ணியிருக்கிறாயே என்க; மகன் என்ன சொல்லுகிறான், நான் என்னசெய்யட்டும் அப்படி விழுந்துவிட்டது என்கிறான். பிள்ளைகளே வெட்கம் வெட்கம். ஆரோன் பராபரனுக்கு விரோதமாய் தான் செய்த கொடிய பாவத்தைக்குறித்து இந்தக் கேவலமான போக்குச் சொல்வது எவ்வளவு பெரிய வெட்கமென்று பாருங்கள். அப்புறம் மோசே சனத்துக்காகப் பிரார்த்தித்ததும் தேவன் அவர்களில் அதிகப் பொல்லாதவர்களைத் தண்டித்தபின் மற்றவர்களுக்கு மன்னித்து இரக்கங்காண்பித்ததுமான விவரங்கள் வேதத்திற் காட்டியிருக்கிறது. இந்தச் சரித்திரத்தினால் நாம் முக்கியமாய்க் கற்றுக்கொள்ளவேண்டியது நினைக்கும்படிக்குத்தான். இஸ்ரவேலர் நினைத்திருப்பார்களாகில், இரண்டாம் கற்பனை அவர்கள் ஞாபகத்தில் வந்திருக்குமே. ஆரோனும் நினைத்திருப்பானாகில், பொற்கன்றுக்குட்டியைக் காட்டி இதுதான் தேவனுடைய சொரூபம் என்றிருப்பானோ! அருமைப்பிள்ளைகளே, "தேவன் என்னைப் பார்க்கிறார், நானின்னின்னவிதமாய் நடக்கவேண்டுமென்று கற்பித்திருக்கிறார், கடைசியில் சகலத்துக்கும் என்னிடத்தில் கணக்குக் கேட்பார்" என்றுமாத்திரம் நீங்கள் எப்பொழுதும் கவலையாய் நினைக்கிறதுண்டானால் அநேக மதியீனங்களுக்கும் கேடுகளுக்கும் விலக்கமாய்க் காப்பாற்றப்படுவீர்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

மறந்துபோன எத்தனையோ காரியங்கள் நம்மெல்லாருக்கும் விரோதமாய்ப் பதித்திருக்குமே. ஆகையால் இயேசுக்கிறிஸ்துவின்மூலமாய் நமக்கு மன்னிக்கவும் தேவ சித்தத்தை நாம் எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கும்படி நமக்கு அருளளிக்கவும் வேண்டுமென்று தேவனைநோக்கி ஆவலோடு பிரார்த்திப்போமாக.

---

## The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### IX-வது. திராக்ஷத்தோட்டத்தில் வேலைசெய்தவர்களைக் குறித்து.

மத். 20: 1—16.

(தொடர்ச்சி.)

யூதர்களிடத்தில் அதிகமாய்விளங்கின கெட்ட குணத்தைமாத்திரமல்ல, ஆத்தும சலாக்கியங்களைப்பெற்ற யாவரிடத்திலும் காணப்படுகிற பொருமையைக்குறித்து எச்சரிப்படைய வேண்டுமென்பதே இந்த உவமையில் இரக்ஷகர்கொண்ட கருத்து. யூதர்களுடைய கெட்ட குணத்திலின்று இந்த உவமையுண்டானதென்று சொல்லப்படாது. இதிலடங்கிய எச்சரிப்பு யூதர்களுக்கல்ல அப்போஸ்தலர்களுக்குத்தான் முந்திச் சொல்லப்பட்டது. அவர்கள்தான் கிறிஸ்து சபைக்குத் தலைவர்கள். திராக்ஷத்தோட்டத்தில் வேலைசெய்ய முந்தி அழைக்கப்பட்டவர்கள். காலத்தைப்பார்த்தாலும் சகிக்கவேண்டிய துன்பங்களைப்பார்த்தாலும் அவர்கள்தான் யாவருக்கும் முதன்மையானவர்கள். ஐசுவரியமுள்ள அந்த வாலிபன் லோக பாசத்தால் எவ்வளவாய்க் கட்டுண்டு இருக்கிறானென்று காட்டினபோது அவன் துக்கத்தோடே போய்விட்டதை அவர்கள் பார்த்தார்கள். 19: 22. அவர்களுக்கு முதன்மையானவனாக பேதுரு என்பவன் மற்றச் சமயங்களில் செய்ததுபோல இந்தச் சமயத்திலும் முந்திப் பேசினான். "அந்த வாலிபன் செய்யாததை நாங்கள் செய்தோமே, சுவிசேஷத்தினிமித்தம் சகலத்தையும் விட்டோமே எங்களுக்கு என்னபலன் கிடைக்கும்" என்று கேட்டான். 27 வசனம். அவர்களுக்கும் அவர்களைப்போல தன்னிமித்தம் சகலத்தையும் புறக்கணித்தவர்களுக்கும் விசேஷித்த நிறைவான பலன் கிடைக்குமென்று முந்தித் தெளிவாய்ச் சொன்னார். 28, 29. ஆகிலும் "எங்களுக்கு என்ன பலன் கிடைக்கும்" என்ற கேள்வி சரியானதல்ல. இரக்ஷகருக்கும் அவர்களுக்குமிருந்த சம்பந்தத்தைச் சரியானபடி காட்டத்தக்கதல்ல. வேலைக்குத் தக்க பலனென்று அறிந்து இப்படிய ஏவிவிடத்தக்கது. தன்னையே புகழ்ந்துகொள்ளத்தக்க குணமும் அதில் காணப்படுகிறது. மற்றவர்களோடு தங்களை ஒப்பிட்டுப்பார்த்து அவர்களுடைய குறைவைக்கண்டு தங்களை மேன்மைப்படுத்திக்கொள்ளப் பார்க்கிற குணம். உவமையில் கண்டிருக்கும் எச்சரிப்பை இரக்ஷகர் கூட்டிச்



சொல்லாவிட்டால் அவர் கொடுத்த உத்தரவே அவர்களுடைய கெட்ட குணத்தை வளர்க்கத்தக்கதாயிருக்கும். தங்களைத்தானே மெச்சிக்கொள்ளுகிற இந்தக் குணம் பேதுருவுக்குத் தெரியாமல் அவன் மனதில் மறைந்திருக்கலாம். உள்ளத்திலிருக்கிறதை அறிகிற கர்த்தரோ இருதயத்தின் ஆழங்களைப்பார்த்து அவர்கள் கேட்டதற்கு நேராய் உத்தரவு சொன்ன பிறகு அவர்கள் தீய குணத்தை முளையிலேயே கிள்ளி அதை வளரவிடாமல் தடுக்கவேண்டுமென்பதாய் இந்த உவமையைக் கூட்டிச் சொல்லுகிறார். ஒருவரும் மேன்மைபாராட்டாதபடிக்கு கிரியைகளினாலல்ல என்கிற சத்தியத்தை அவர்கள் மறந்துவிடத்தகாதபடியால் இந்த உவமையைக்கொண்டு அதை உறுதிப்படுத்துகிறார். கிரியைகளினால் ஒன்றும் ஆகாவிட்டால், சகலமும் கிருபையினால் ஆகிறதானால் அப்பொழுது ஒருவன் மற்றொருவனைவிட மேன்மைபாராட்டக்கூடாது. ஒருவனுக்கு விரோதமாய் ஒருவன் மொறுமொறுக்கக்கூடாது. ஒருவனும் எனக்குப் பாத்தியமென்று சொல்லக்கூடாது. மாற். 10: 35 அவர்கள் கேட்ட கேள்வியில்லையோ கூலிக்காரனுக்குரிய குணம் காணப்படுகிறது. இதற்கு விரோதமாய்த்தான் இந்த உவமை சொல்லப்பட்டது. தேவனுடைய இராக்ஷியத்துக்குரிய பலன்களைக்குறித்து இதுகள் சொல்லியிருக்கிறதென்று சொல்லலாம். உரோமர் 4: 1—4. இதற்கேற்ற நல்ல வியாக்கியானம். வார்த்தைகள் வித்தியாசப்பட்டாலும் கருத்து மிகவும் இசைந்திருக்கிறது.

பேதுருவுக்கும் மற்றெல்லா மெய்விசுவாசிகளுக்கும் எச்சரிப்பாக இந்த உவமை சொல்லப்பட்டதேயல்லாமல் இனி நடக்கப்போகிற காரியங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்பட்டதல்ல. விழிப்பாயிருக்கவும் விழித்திராவிட்டால் இன்ன சோதனையில் விழவேண்டியதிருக்குமென்று காட்டவும் இந்த உவமை சொல்லப்பட்டது. அன்பிலேயே வாசம்பண்ணுகிறவன் மற்றவர்கள் கொஞ்சக்காலம் தேவனுக்கு ஊழியஞ்செய்து, லேசான வேலைபார்த்து, தன்னோடு சரியாய்ப் பரமபலனைப் பெறுகிறார்களே என்று பொருமைக்கும் மொறுமொறுப்புக்கும் இடங்கொடுக்கமாட்டான். அல்லது கிறிஸ்துவோடிருக்கும் ஐக்கியத்தினால் உண்டாகும் ஆசீர்வாதங்களிலும் சலாக்கியங்களிலும் அவனுக்கு பங்கில்லையென்று தள்ளமாட்டான். தானும் கிருபையினால் இரக்ஷிக்கப்பட்டதை மறந்து, உவமையில் கண்டிருக்கிறபடி பகைக்கு இடங்கொடுத்து மொறுமொறுத்தவர்களைப்போல மொறுமொறுக்கிறது நியாயமென்று ஒருபோதுஞ் சொல்லமாட்டான். இந்த உலகத்திலேயே இது தகாததென்று காணுதே, இனிவரும் மோக்ஷஇராக்ஷியத்தில் எவ்வளவு அதிகம். அன்பு சத்தியத்தில் சந்தோஷப்படுகிறது. மற்றவர்களைப்பார்த்து மொறுமொறுக்கிறவன் அன்பில் வாசஞ்செய்யாதவனானபடியால் அந்த இராக்ஷியத்திற்குப் புறம்பாகத் தள்ளப்படுவான். அப்போஸ்தலன்மாருக்கும் அவர்கள் மூலமாய் விசுவாசிகள் யாவருக்கும் எச்சரிப்பாகத்தான் இப்படிச் சொல்லப்பட்டது. கடைசிப் பலனைப் பெறுகிறவர்களுக்கு இன்னது நடக்குமென்று காட்டுகிற தீர்க்கதரிசனமாகவல்ல, எவ்வளவு காலம் உழைத்தாலும் எவ்வளவு அதிகமாய் உழைத்தாலும், சகோதரருக்கு அன்பாயும் தேவனுக்குத் தாழ்மையாயும் நடவாவிட்டால் அதுகளெல்லாம் ஒன்றுக்கும் உதவாது. நம்முடைய வேலையைக்குறித்து நாமே புகழ்ந்து மேன்மைபாராட்டுவது தைலத்தைக் கெடுத்த ஈயைப்போல் நம்முடைய வேலை எவ்வளவு பெரிதாயிருந்தாலும் கெடுத்துப்போடும். தாழ்மையினால்தான் நாம் நிலைநிற்கவேண்டும். இல்லாவிட்

டால் முந்தினவர்கள் சகலத்துக்கும் பிந்திப்போவார்கள். உவமையில் சொல்லப்பட்டிருக்கிறதற்கும் அதினால் வெளியாகும் சத்தியத்திற்கும் இருக்கிற வித்தியாசம் என்னவென்றால், முந்தி வேலைக்குவந்தவர்கள் பெருமைக்குணத்தையும் திருப்தியில்லாமையும் காட்டினபோதிலும் அவர்கள் கூலியை முற்றிலும் பிடித்துக்கொள்ளுவது அநியாயமாயிருக்கும். வீட்டெசமான் அவர்களைக் கடிந்துகொண்டபோதிலும் கூலியை அவர்களுக்குக் கொடுத்துவிட்டான். பேதுருவுக்கும் அவன் மூலமாய் எக்காலத்திலுமுள்ள சீஷர்கள் யாவருக்கும் கர்த்தர் படித்துக்கொடுக்கிற பாடம் என்னவென்றால், முந்தினவர்கள் முற்றிலும் பிந்தினவர்களாகலாம். பிரயாசத்தில் முதன்மையானவர்கள் தங்கள் பலன் கிரியையினால் அல்ல, கிருபையினால்தான் என்பதை மறந்து தங்களைப்போலொத்த ஊழியக்காரரைவிட தங்களை உயர்த்திப் பெருமைபாராட்டுவார்களானால் தங்கள் பலனை முற்றிலும் இழந்துபோவார்கள். பிந்தினவர்களோ தாழ்மையாயிருப்பதினால் நியாயத்தீர்ப்புநாளில் முந்தினவர்களும் முதன்மையானவர்களுமாக எண்ணப்படுவார்கள். உவமையிலுள்ள விகற்பங்களைத் தெளிவாக்கும்பொருட்டு இவ்வளவுதூரம் சொல்லவேண்டிய அவசியம் நேரிட்டது.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 12. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

இக்காலத்தில் ரோமாபுரியில் நடந்த விசேஷங்களைப்பற்றி அவ்வளவாய்த் தெரியாது. இராயன் மேற்சொல்லிய சட்டத்தைப் பிறப்பித்தபொழுது ஒழுங்கீனமான கூட்டங்களுக்குப் போகிறவர்களை பட்டணத்து அதிகாரிக்குமுன் விசாரணைக்கு நிறுத்தவேண்டுமென்று இராஜதானிக்கு கட்டளையனுப்பினான். கிறிஸ்தவர்கள் தேவாராதனைக்கென்று கூடிவருகிற கூட்டங்களுக்கு விரோதமாயும் இந்தச் சட்டத்தைச் செலுத்துவது வருத்தமல்லவே. மேற்படி சட்டம் நிறைவேற்றப்படுகிறதாவென்று பார்க்கிறதற்காக இராயன் 203ல் ரோமாபுரிக்குத் திரும்பினான். கி. பி. 201ல் விக்டருக்குப்பின் நியமனம்பெற்ற செபிருனு என்பவன்தான் இக்காலத்தில் அவ்விடத்துக் கண்காணியாயிருந்தவன். அவன் கொஞ்சக்காலமாத்திரம் தன் சபையை சமாதானமாய் விசாரித்துவந்திருப்பானென்று நிதானிக்கத்தக்கது. தன் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் தப்பறையில் அகப்படாதபடிக்கு அவன் முயற்சிசெய்தது இக்காலத்திலோ இதற்குச் சற்றுப் பிறகோ தெரியாது. கிறிஸ்தவர்களெல்லாரும் விசுவாசத்தின் ஐக்கியத்தில் நிலைத்திருப்பது மிகவும் முக்கியமென்று அவன் நன்றாய் உணர்ந்திருந்ததாகத் தோன்றுகிறது. மொர்தேனியஸைக்குறித்து



விக்டர் கண்காணியாரோடு நிருபப் போக்குவரவு செய்துகொண்டிருந்த பிராக்சியா என்பவனை தன் சபையின் ஐக்கியத்துக்கு நீக்கிவிட்டான். அதன்பேரில் பிராக்சியாவென்பவன் தன் தவறுகளைக்குறித்து மனஸ்தாபப்பட்டு தள்ளிப்போட்டதாக அறிக்கைபண்ணினதுமல்லாமல், இதுகாரியத்தில் தன் உண்மையை விளக்கும்படிக்கு ஒரு நூலும் எழுதிப் பிரசித்தம்பண்ணினான். ஆகிலும் அவன் பிற்காலத்தில் பழைய தப்பறைகளை மறுபடியும் அனுசரித்துக்கொண்டதல்லாமலும் மற்றநேகரும் அவனைப் பற்றிக்கொள்ளச் செய்தான். மேலும் தியோடோத்து என்பவனுடைய தப்பறையையும் செபிரினு பலமாயெதிர்த்து, அந்த வகுப்பாருக்கு கண்காணியாக ஏற்படுத்தப்பட்டிருந்த நத்தேலியு என்பவனைச் சபையிற் சேர்ந்துகொள்ளும்படி இழுத்துக்கொண்டான்.

செபிரினு என்பவன்தானே துன்பத்தில் எவ்விதமாய் நிர்வகித்தான் என்பது தெரியாது. ஆகிலும் இராயன் ரோமாபுரியில் சஞ்சரித்ததினால் கிறிஸ்தவர்கள் நிஷ்டூரமாய் நடத்தப்படுவதற்கேற்ற சமயங்கள் அநேகம் நேரிட்டன. அவன் 203ல் திரும்பிவந்தவுடனே கிழக்கில் தான் அடைந்த செயத்தைக் கொண்டாடினான். அப்போர்ப்பட்ட வேடிக்கைகளில் கிறிஸ்தவர்கள் சேராதது அவர்களுக்கு மிகுந்த பொல்லாப்பும் ஈங்கிஷைகளும் வருவித்திருக்குமே. மேலும் அக்காலத்தில் இராயன் தன் மூத்த குமாரனான கரக்கல்லா என்பவனுக்கு பிளாத்தியேனு என்று பெயர்கொண்ட ஒரு பிரபுவினுடைய குமாரத்தியை விவாகமுஞ்செய்வித்தான். இவன் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துவதில் மிகவும் முயற்சியாயிருந்ததாகச் சொல்வார்கள். அதல்லாமலும் பொதுவான விளையாட்டுகள் நூறுவருஷத்துக்கு ஒருமுறை நடத்தப்படுகிறதுண்டு. இராயனோ அவைகள் வழக்கமாய் நடக்கவேண்டிய காலத்துக்குமுன் நடப்பிக்கவிரும்பி, 204ம் வருஷத்திலே நடப்பித்தான். அச்சமயத்திலும் கிறிஸ்தவர்களுடைய இரத்தம் பிரளயமாயோடியிருக்குமென்பதற்குஞ் சந்தேகமில்லையே.

இக்காலத்தில் அஞ்ஞானிகளால் கிறிஸ்தவர்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகள் மகா பயங்கரமானவைகளாயிருந்ததினாலே கிறிஸ்தவ நூலாசிரியர்கள் உலகத்தின் முடிவு சமீபித்துவிட்டதென்று சொல்லவும் ஏவப்பட்டார்கள். அந்திக் கிறிஸ்து தோன்றும்போது இவ்விதமாய் நடக்கும் என்ற எண்ணம் இப்பொழுது சிறிதுகாலமாய் விர்த்தியாகிக்கொண்டேவந்தது. ஆகிலும் அந்தக் கிறிஸ்து என்னும் பெயர் பதிதருக்கும் சத்தியத்துக்குத் தடைசெய்யும் யாவருக்கும் பொதுப்படச் சொல்லப்பட்டதேயல்லாமல் எவனுக்காவது ஒருவனுக்கு விசேஷமாய்ச் சொல்லப்படவில்லையென்றே தோன்றுகிறது. அவ்வாறே ரோம துரைத்தனத்தை அந்திக் கிறிஸ்து என்று நினைக்க ஏவப்பட்டார்கள். துவக்கமுதலே தீர்க்கதரிசன வரம் தங்களுக்கு உண்டென்று பாராட்டின மொர்தேனியர் ரோமை ராச்சியம் சீக்கிரம் அழிந்துபோம் என்பதாய் தீர்க்கதரிசனம் உரைத்தாற்போல் உரைத்தார்களாம். மற்ற விஷயங்களில் மொர்தேனியருடைய நடபடிக்கைகளை ஒப்பாதவர்கள் முதலாய் இந்த எண்ணமுடையவர்களாயிருந்தார்களென்றும் துலங்குகிறது. ரோம துரைத்தனத்தார் கிறிஸ்தவர்களை இவ்வளவாய் ஒடுக்கினதற்கு மற்ற முகாந்தரங்களோடு இதுவும் ஒரு முகாந்தரமாயிருந்திருக்கலாம்.

இராச்சியத்துக்கு விரோதமாய்ப் படையெடுத்துவந்த காட்டுச்சனங்களை எதிர்த்துத் துரத்திவிட்ட அதற்கு இப்பொழுது பெலனில்

லையென்று மேலே குறித்தோமே. அப்படிப்பட்ட காலத்தில் அதிசீக்கிரமாய் அழிந்துபோகும் என்று பிதற்றிய தீர்க்கதரிசனங்களால் சனங்களுக்குள் கலக்கமுண்டாகாதிருக்குமோ? கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனமென்று சொல்லிக்கொண்டபடிக்கு இராச்சியம் அழிந்துபோகவேண்டுமென்று விரும்புகிறவர்களாக அவர்களைக் காண்பிப்பதும் வருத்தமாயிராது. மேலும இராச்சியத்தின் சட்டங்களும் பலமுமெல்லாம் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ப் பிரயோகிக்கப்பட்டபொழுது, கிறிஸ்தவர்களிற் சிலர் தங்கள் சத்துருக்களுடைய பலம் சீக்கிரம் முடிவடையுமென்று வெளியிடத்துணிகிறது ஆச்சரியமா? ஆகிலும் பயமில்லாமல் இப்பேர்ப்பட்ட எண்ணங்களை எங்கும் பரப்புவதற்கு இடம்பெற்றிருக்கமாட்டார்கள். கிறிஸதவர்கள் இவ்விதமான தீர்க்கதரிசனங்களால் அஞ்ஞானிகளுடைய கோபத்தைத் தங்கள்பேரில் வருவித்திருக்க, மொங்தேனிய வகுப்பார் அதினால் மிகுதியும் பட்டு அனுபவித்திருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

தானியேல் எழுபது வாரத்தைக்குறித்துச் சொல்லிய தீர்க்கதரிசனத்துக்கு வியாக்கியானம் ஒன்று எழுதிப் பிரசித்தப்படுத்தின யூதான் என்று பெயர்கொண்ட ஒருவன் அந்திக்கிறிஸ்து வந்துவிட்டானென்று தெளிவாயும் வெளிப்படையாயும் சாதித்தான். கிறிஸ்துமார்க்கத்தை அழிக்கையிடுவதே மோசத்துக்கேதுவானதாயிருந்த இந்தக் காலத்திலும் அநேகர் முன்னுக்கு நின்று கிறிஸ்துமார்க்கத்துக்காகப் போராடினார்கள். அகட்டேவியு என்ற பெயருள்ள ஒரு சம்பாஷணை இன்னமிருக்கிறது. ரோமாபுரியில் தர்மசாஸ்திரத்தில் பாண்டித்தியமடைந்து பிரஸ்தாபமுடையவனாயிருந்த மியுனிசியு பெலீக்ஸ் என்றவன் எழுதின நூல் அது. அதினால் கிறிஸ்தவர்கள் ஒடுக்கப்பட்டவிதம் தெரியவருகிறதுமல்லாமல் அஞ்ஞானத்தின் அவலட்சணங்கள் எவ்வளவு பலமாயெடுத்துக்காண்பிக்கப்பட்டதென்றும் அறிகிறோம்.

கிறிஸ்தவர்களை ஒடுக்கவும் வதைக்கவும் இராயன் தன் குடிகளை யேவிவிட்டிருப்பானாகில், கி. பி. 208 ம் வருஷத்துக்குமேல் அந்த முயற்சி நின்றுபோயிற்றென்று நினைக்கத்தக்கது. என்னத்தினாலென்றால் குறித்த வருஷத்தில் தன் குமாரர் இருவரோடும் பிரித்தானியாவை முற்றும் கீழ்ப்படுத்திக்கொள்ளும் நோக்கமாக அவ்விடத்துக்குப் புறப்பட்டுப்போய்விட்டான். மேற்படி தீவிலே 211 ம் வருஷத்துவக்கம்வரையில் யுத்தமுயற்சியாயிருந்து மேற்படி வருஷத்தில் யோர்க் பட்டணத்தில் மரித்துப்போனான்.

பிரித்தானியாவில் கிறிஸ்துமார்க்கம் வெகுவாய்ப் பிரபலியமாயிருந்ததென்று மேலே காண்பித்தோமே. அவ்விடத்தில் அன்பத்தினாலுண்டான அநுகூலப்பிரதிகூலங்களை யறியவும் விரும்புவோம். ஆகிலும் அதின் சம்பந்தமாய் இராயன் அங்கிருந்தான் என்கிற விசேஷம் ஒன்றுதான் தெரிந்தது. அங்கிருந்தவன் தன் சட்டம் நிறைவேற்றப்படுகிறதா இல்லையா என்று பாராதிருப்பானோ? இதற்குமுன் ஆறு வருஷக்காலமாய் கிறிஸ்தவர்களை நிஷ்டூரமாய் ஒடுக்கவும் வதைக்கவும் ஏவினதோடு திர்பதியானான் என்றே நம்பிக்கொள்வோம். நாகரீகமில்லாத அத்தேசத்திலே யுத்தம் நடத்தினதில் அவனுக்கிருந்த தொல்லையோடு அவன் மக்களுக்குள் நடந்துகொண்டிருந்த சண்டைகள் சச்சரவுகளாலே அவனுடைய அந்தியகாலத்தில் மிகுந்த மனக்கிலேசமும் இடைவிடாத சஞ்சலமும் அவனைப் பிடித்திருந்தது. வேறு இராயன் நாட்களில் பிரித்தானியாக் கிறிஸ்தவர்களுக்கு யாதொரு விசேஷித்த துன்பம் நேரிட்டதாகத் தெலங்குகிறதில்லை. மூன்றும் நூற்றாண்டின் கடைசியிலேயே முதலாம் இரத்தச்சாட்சி மரித்ததற்கோ போதுமான அத்தாட்சியிருக்கிறது. பிரித்தானியாச் சபை இக்காலத்தில் துன்பத்துக்கு தப்பிக்கொண்டதுண்டானால், மற்றிடங்களிலும் துன்பத்தின் மும்முரம் தணியத்தொடங்கியிருக்குமென்று நம்பலாம்.



இந்த இராயனுடைய சரித்திரத்தில் மனதுக்கு வேதனையையும் கலக்கத்தையுங் கொடுக்கிற பகுதி யாதென்றால், ஒருகாலத்தில் கிறிஸ்தவர்களை ஆதரித்துப் பாதுகாத்த அவன் நிஷ்டூரமாய் அவர்களை வதைக்கும்படி ஒப்புக்கொடுத்த செய்கைதான். மேலும் அவன் பிறப்பித்த சட்டம் மாற்றப்படாமலிருக்கும்வரையிம் எந்த அதிகாரியும் அவர்களை வாதிக்கவும் அழிக்கவும் இடமிருக்குமே.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

---

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 6: 19—21.

(தொடர்ச்சி.)

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியுந் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடருங் கன்னமிட்டுத் திருடுவார்கள்;—பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை;—உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."

கிறிஸ்துமார்க்கம் மனிதருடைய பெருங் குற்றங்களுக்கும் துன்மார்க்கங்களுக்குமாத்திரம் பரிகாரமாயிருக்கிறது; ஆதலால் ஒருவன் லௌகிகப் போங்காய் காட்கழித்தாலும் அதை யோக்கியமாயும் கிரமமாயுமாத்திரம் நடத்தினால், அதினால் யாதொரு தோஷமும் விரோதமும் இல்லையென்று அநேகர் லேசாய் நினைத்து மோசம்போகிறார்கள். நமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து, மனிதரது உள்ளத்திலே நித்தியசீவனுக்குரிய நம்பிக்கையுண்டாகச்செய்யவும், அவர்களது எண்ணங்கள், ஆசைகள், விருப்பங்களைப் பூமிக்குரிய காரியங்களை விட்டெடுத்து பரமகாரியங்களின்பேரில் வைக்கச் செய்யவும், வானத்தைவிட்டிறங்கிவந்தார். "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோ. 3: 2) என்பது புதிய ஏற்பாட்டிலுள்ள பிரதான கற்பனைகளில் ஒன்று. மனிதரிற் பெரும்பான்மையோர் இச்சீவனுக்குரிய காரியங்களையே ஆவலோடு தேடுகிறார்கள். பணத்தைச் சேர்த்துவைக்கவேண்டுமென்ற சிந்தையே முக்கியமாய் அநேகருடைய இருதயத்திற் குடிகொண்டிருக்கிறது. இது ஆதிதுவக்கி மனிதருடைய இயல்பாயிருக்கிறது. தீர்க்கதரிசிகளின் நாட்களில் மற்றவர்களுக்கு இடமில்லாமற்போகுமட்டும் "வீட்டோடே வீட்டைச் சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டினார்கள்" (ஏசா. 5: 8) என்று சொல்லிச் சனங்களைக்குறித்து முறையிட்டிருக்கிறது.

இரட்சகருடைய நாட்களில் சனங்கள் தங்கள் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாகக் கட்டினதையும், பின்பு "ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று சொன்னதையும்" (லூக்கா 12: 18, 19) எடுத்துரைத்து, அவர்களை எச்சரித்திருக்கிறது. இந்நாட்களிலும் அந்தச் சிந்தையேயிருக்கிறது. அநேகர் ஆஸ்திகளை அதிகரிக்கும் நோக்கமாகவே தாங்கள் இவ்வுலகத்தில் வைக்கப்பட்டிருப்பதுபோல் எண்ணி, அப்படியே பேசி, அப்படியே நடந்துகொள்ளுகிறார்கள். கையிலிருக்கும் பொருளை எப்படி அதிகரிக்கலாம், அதிக லாபஞ் சம்பாதிக்கும்படி எந்தப் பொருளைக் கொள்ளலாம், எந்த வியாபாரஞ்செய்யலாம் என்பதே அவர்களுடைய கவலையும் பேச்சுமாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட காரியங்களைச் சனங்கள் மிகுந்த வாஞ்சையோடே பேசி, இவைகள்மேல் தங்கள் முழுமனதையுஞ் செலுத்துகிறார்கள். ஐசுவரிய வாஞ்சையினாலே அவர்கள் உழைக்கிறார்கள்; அதிகாலையில் எழுந்து நேரப்பட வேலையில் தரித்திருக்கிறார்கள்; சிற்றூண் உண்கிறார்கள்; இவைகளைக்குறித்துக் கவலைப்பட்டுத் தொய்ந்துபோகிறார்கள். திரவியந் திரட்டிவைக்கும் அந்த ஒரே காரியத்தைமாத்திரம் வாஞ்சிக்கிறார்கள். இப்படித் திரட்டிவைத்தால் தாங்கள் சாகும்போது பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தகுந்த ஆஸ்தியைவைத்துவிட்டுச் சாகலாமென்பது அவர்கள் கோரிக்கை. கிறிஸ்து சொல்வது, பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்: இங்கே பூச்சியுந் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்;—பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள் என்கிறார். மனிதர் இவ்வுலகத்தைக்குறித்து ஆவலாயிருப்பதுபோல, வரப்போகிற லோகத்தைக்குறித்தும் ஆவலாயிருப்பார்களானால் எவ்வளவு பெரிய பாக்கியவந்தராவார்கள். ஆனால் அவர்கள் அழிந்துபோகிற பொக்கிஷத்துக்காகமாத்திரம் உழைத்து, பூச்சியும் துருவும் கெடுக்கத்தக்கதும், திருடர் கன்னமிட்டுத் திருடத்தக்கதுமான பொக்கிஷத்தைக் கூட்டிவைக்கிறார்கள். தங்கள் பணத்துக்கு நல்ல ஈடு கிடைத்திருக்கிறதையிட்டு மகிழுகிறார்கள். தங்கள் பொருட்களை நம்பிக்கையுள்ள வியாபாரத்தின்பேரில் விவேகமாய் ஏற்றுமதிசெய்கிறோமென்று நினைக்கிறார்கள். தங்கள் பணத்தை நல்ல நிலத்திலாவது பரபத்தியத்திலாவது போடுகிறார்கள். ஆனால் உலகப்பொருள்களுக்கு அநேக அபாயங்கள உண்டென்பதை அவர்கள் உணர்ந்தறிகிறதில்லை.

ஐசுவரியம் நிச்சயமற்றதென்று காட்டுங் குறிப்புகள் எக்காலத்திலுமுண்டு. கிரீடாதிபதிகள் திடீரென்று தங்கள் கிரீடத்தை இழந்துபோகிறார்கள். ஐசுவரியவான்கள் வறியராகிறார்கள். நிலச்சுவான்கள் குடித்தனக்காரராகிறார்கள். "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர், நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்,—சிறப்புஞ் செல்வமும் பெருமையுமுடையோர், அறக்கூழ்ச்சாலை யடையினு மடைவர். குன்றத்தனையிரு நிதியைப்படைத்தோர், அன்றைப்பகலே யழியினு மழிவர்." ஆகையால் உலகவாழ்வு நிலையுள்ளதல்ல.

தரித்திரம் எத்தேசத்தாருக்கும் நினையாதநேரத்தில் சடுதியாய் நேரிடலாகும். கொடுத்த கடன் பிரியாதபோதும், கொண்டுகட்டின சரக்கின்விலையிறங்கும்போதும், வியாபாரமுயற்சி குறையும்போதும்,



மழைத்தாழ்ச்சிமுதலாகிய காரணங்களால் விளைவு குன்றும்போதும், திரட்டிவைத்த பொருள் களவுபோம்போதும், யாருடைய எத்துக்காவது உட்படும்போதும், சேர்த்துவைத்த பொருள்போய் வறுமை நேரிடுவது நிசமே. அப்படியாகும்போது பணத்தின்மேல் நம்பிக்கைவைத்திருந்தவர்களுடைய மனதுக்கு எவ்வளவோ நோவும் சஞ்சலமும் நேரிடும்.

ஆகையால் அப்படிச் சேர்த்துவைப்பதற்குப்பதிலாக நமக்கும் நமது வீட்டாருக்கும் வேண்டியவைகளுக்காகமாத்திரம் தேவசித்தப்படி உழைத்திருப்போமானால், அதையும் திரவிய வாஞ்சையின்பேரிலல்ல, நம்மில் அவரவரும் நமது நிலைமைக்குரிய கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற விருப்பத்தோடுமாத்திரஞ் செய்து, ஐசுவரியத்தையோ தரித்திரத்தையோ எதைத் தேவன் நமக்கு அனுப்பச் சித்தமாயிருப்பாரோ அதை அனுப்பக்கடவர் என்ற மனநிர்ணயத்தோடு அவருடைய நடத்துதலுக்கு நம்மைக் கையளித்து, உலக அலுவல்களை நிறைவேற்றுகையிலும் நமது இருதயம் பரவசமாகி, அடிக்கடி பரலோகத்தைக்குறித்து நினைக்கவும் பேசவும் பழகி, பரலோகத்துக்குரிய பொக்கிஷத்துக்காக மன்றாடிவருவோமானால், "பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே நமக்குச் சம்பாதிப்பதே" (லூக்கா 12: 33.) நமது செய்கைகளெல்லாவற்றின் நோக்கமாயிருக்குமானால், கிருபையில் வளர்தல், விசுவாசத்தில் ஐசுவரியவான்களாதல், நற்கிரியையில் தழைத்தோங்குதலாகிய இந்த நோக்கமாக நாம் இங்கே பிழைத்திருக்கிறோமென்று எண்ணினோமானால், இந்த மேலான நோக்கங்களால் ஏவப்பட்டு உலக ஐசுவரியங்களையெல்லாம் அசட்டைசெய்வோமானால், அப்போதுதான் இந்த வசனத்தில் அடங்கிய கட்டளையை நிறைவேற்றினோமென்றும், உலகத்துக்குரிய அபாயங்கள் நேரிடாததும், பூச்சியாவது துருவாவது கெடாததும், திருடர் கன்னமிட்டுத் திருடக்கூடாததுமான இடத்தில் பாக்கியந்தேடிவைத்திருக்கிறவர்களென்றும் நாம் நம்மைக்குறித்துச் சொல்லலாம், மற்றப்படி சொல்லக்கூடாது. "நமது பொக்கிஷமெங்கேயோ அங்கே நமது இருதயமும் இருக்கும்."

எதிலே ஒருவனுடைய மனது அதிகமாய்ச் செல்லுமோ அதுவே அவனுடைய பொக்கிஷமாயிருப்பதால், அந்தப் பொக்கிஷத்தையே அவனுடைய இருதயந் தொடர்ந்துபோம். நாம் அவரவரும் நமது முக்கியமான பொக்கிஷம் எங்கேயிருக்கிறதென்று அறிந்துகொள்ள வேண்டுமானால் நமது முக்கிய விருப்பங்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கிறது, பரத்திலா, பூமியிலா, மேலானகாரியங்கள்பேரிலா, பூமிக்குரியகாரியங்கள்பேரிலா, எதின்பேரில் அந்த விருப்பங்கள செல்லுகின்றது என்று கவனித்துப்பார்த்தால் அறிந்துகொள்ளலாம். எவர்களுடைய ஆசைகள் விருப்பங்கள் பரலோகத்தை நோக்கியிருக்கவில்லையோ அவர்களுக்கு அங்கே பொக்கிஷமில்லை என்கிற சத்தியத்தைச் சிந்திக்குஞ் சிந்திப்பு அச்சந்தரத்தக்கதாயிருக்கிறது. பரலோகத்தைக்குறித்து யாதொரு நினைப்பும் இல்லாதிருக்கிறவர்களுக்கு அந்த நல்ல உலகத்திலே சுதந்தரமில்லை. அவர்களுடைய மனது பூமியிலேயே செல்லுவதால் அங்கேயே அவர்களுடைய பொக்கிஷமும் இருக்கிறதென்று தெளிவாயிருக்கிறது. இதைக்கொண்டு நம்மைப் பரிசோதிப்போமாக. இந்த வசனத்தைக்கொண்டு உங்கள் இருதயமிருக்கிற இடத்திலேதான் உங்கள் பொக்கிஷம் இருக்கக் காண்பீர்கள். உங்கள் பொக்கிஷமிருக்கிற இடத்திலேதான் உங்கள் இருதயமிருக்கு

மென்று கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தி அறிவிப்பதால், இதைக் கருத்தாய்ச் சிந்தித்து நம்முடைய பொக்கிஷத்தைப் பரலோகத்திலே சேர்த்துவைக்கவும் அங்கே நமது இருதயத்தைச் செலுத்தவும் கவலையாயிருப்போமாக.

---

On the Liturgy.

# செபபுஸ்தக வியாக்கியானம்.

## ௫. அதிகாரம்.

ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

### VIII. வெளிப்படுத்தலுக்குப் பின்வரும் ஞாயிறுகள்.

கிறிஸ்மஸ் பண்டிகை முதல் வெளிப்படுத்தலென்னும் பண்டிகைவரையில் இரக்ஷகருடைய மனுஷிகத்தைக்குறித்து நாம் அறிந்துகொள்ளத்தக்கதாக சபை தன் ஆராதனையை ஒழுங்குப்படுத்தியிருக்கிறது. வெளிப்படுத்தல் முதல், செப்துவகிசிமா ஞாயிறு வரையில் முக்கியமாய் முதல் நாலு ஞாயிறுகளில் சுவிசேஷ வாக்கியங்களில் அவருடைய தெய்வீகத்தைக் காட்டும்படிக்கு அற்புதங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறது. நாம் கிறிஸ்துவின் மாதிரியைக் கூடிய அளவு பின்பற்றிக், கிறிஸ்துமார்க்கத்துக்குரிய சற்குணங்களை நம்முடைய நடக்கையில் காட்டவேண்டும் என்பதே நிருப வாக்கியங்களில் காணப்படும் நோக்கம்.

இரண்டாவது. முதல் ஐந்து ஞாயிறுக்குரிய சுருக்கச் செபங்களும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் கிரகோரி என்பவர் செபபுஸ்தகத்தில் இருந்தபடியே இருக்கிறது. 4-ம் ஞாயிறுக்குரிய சுருக்கச்செபம் மாத்திரம் இராசாங்கம் ஒழுக்குப்பட்டபோது கொஞ்சம் திருத்தப்பட்டது. மார்க்க சீர்திருத்தம் உண்டாகுமுன் அந்த நாளுக்குரிய நிருபவாக்கியம் அடுவெந்தில் வரும் முதலாம் ஞாயிறுக்குரிய நிருபவாக்கியந்தான்.

6-ம் ஞாயிறுக்குரிய சுருக்கச்செபமும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் செபபுஸ்தகம் கடைசியாகத் திருத்தப்பட்டபோது சேர்க்கப்பட்டது. அதுவரையில் வெளிப்படுத்தலுக்குப் பின் 6 ஞாயிறுகள் வந்தால் 5-ம் ஞாயிறுக்குரியதையே வாசித்துவந்தார்கள்.

### IX. செப்துவகிசிமா, செக்சகிசிமா, கின்குவகிசிமா என்னும் ஞாயிறுகள்.

இந்த ஓய்வுநாளுக்கு இந்தப் பெயர்கள் உண்டான காரணம் என்னவென்றால், லெந்தின் முதல் ஞாயிறு உயிர்த்தெழுந்த பண்டிகைக்கு முன்னே வருகிறது. இதற்கு குவார்ட்ஜெசிமா ஞாயிறு என்று பெயர்.



இது லத்தீன் பாஷையில் 40 நாள் என்று அருத்தங்கொள்ளும் 40 க்குமேல் 50 தும், 50 க்குமேல் 60 தும், 60 க்குமேல் 70 தும் மொத்தத்தொகையானபடியால், குவாட்டஜெசிமா ஞாயிறுக்கு முந்தின ஞாயிறு ஈஸ்தருக்கு முந்தின 50 ம் நாள் அல்லது கின்குவகிசிமா ஞாயிறு என்றும், அதற்கு முந்தின இரண்டு ஞாயிறுகளும் கிரமமாக ஈஸ்தருக்கு முந்தி 60 ம் 70 ம் நாள் ஞாயிறு அல்லது செக்சகிசிமா செப்துவகிசிமா ஞாயிறு என்றும் முறையே அழைக்கப்பட்டுவருகிறது.

இரண்டாவது. இந்த நாட்களும் இதற்குப்பிந்தின வாரங்களும் பெரிய கிரகோரி நாள்முதல் அனுசரிக்கப்பட்டுவருகிறது. பிறப்பின்பண்டிகைக்குரிய சந்தோஷங்களை மறந்து லெந்தென்னும் நாட்களில் உபவாசித்து நம்மைத் தாழ்த்தும்படிக்கு நம்மை ஆயத்தப்படுத்தவேண்டுமென்றே இந்த நாட்கள் ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்துவானவர் பூலோகத்துக்கு வந்தவிதத்தைக்குறித்து நினைத்து அதற்குக் காரணமாகிய நம்முடைய பாவத்தைக்குறித்து சிந்தித்து நம்முடைய பாவங்களுக்காக நம்மைத் தெண்டித்துக்கொள்வது நியாயமென்று கண்டு அதற்கேற்ற கடமைகளை நிறைவேற்றும்பொருட்டு இந்தக் காலத்தில் நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளுகிறோம். பத்தியுள்ள கிறிஸ்தவர்கள் சிலர் இதுகளில் முதலாம் ஞாயிறுமுதல் உயிர்த்தெழுந்த பண்டிகைவரையில் உபவாசிப்பார்களாம். லெந்தென்னும் முதல் நாளாகிய புதன்கிழமைமுதல் உபவாசிப்பதே சாதாரண வழக்கம்.

மூன்றாவது. இந்த நாட்களுக்குரிய சுருக்கசெபங்களும் நிருப சுவிசேஷவாக்கியங்களும் முந்தின செபபுஸ்தகத்திலுள்ளபடியே இருக்கிறது. கின்குவகிசிமா ஞாயிறுக்குரிய சுருக்கசெபம் மாத்திரம் 1849 ம் வருஷத்தில் சேர்க்கப்பட்டது. அதுகளெல்லாம் அந்தக் காலத்துக்கு மிகவும் ஏற்றதுதான். நிருபவாக்கியங்கள் மூன்றும் கொரிந்தியருக்கெழுதின நிருபத்திலிருந்து எடுக்கப்பட்டது முதல் இரண்டும் பவுல் அப்போஸ்தலனைப்போல நமது தேகத்தை உபவாசத்தால் கீழ்ப்படுத்தக் கற்றுக்கொடுக்கிறது. தேக உபவாசமெல்லாம் அன்பிராவிட்டால் பயன்படாதாகையால் கின்குவகிசிமா ஞாயிறுக்குரிய நிருபவாக்கியத்தில் சகல நற்செய்கைகளுக்கும் அன்புதான் ஆதாரம் என்று காட்டுகிறது.

சுவிசேஷவாக்கியங்களும் நிருபவாக்கியங்களைப்போலவே இருக்கிறது. செப்துவகிசிமா ஞாயிறுக்குரிய சுவிசேஷவாக்கியத்திலுள்ள உவமை பிற்பாடு பலன்பெறவேண்டுமென்றவர்கள் பத்திக்குரிய இக்கடமைகளை நிறைவேற்றுவது அவசியமென்றும், இதுவரையில் அந்தக் கடமைகளை அசட்டைசெய்தவர்கள் அதுகளை நிறைவேற்ற உத்தமத்தோடும் சாக்கிரதையோடும் முயற்சிசெய்வார்களானால் பலன் கிடைக்குமென்று நிச்சயித்து ஆறுதல் அளிக்கிறது. செக்சகிசிமா ஞாயிறுக்குரிய சுவிசேஷ வாக்கியத்தினால் நம்முடைய கடமைகளை நிறைவேற்றுவதில் சாக்கிரதையும் சுறுசுறுப்பும் இருக்கவேண்டுமென்று ஒரு உவமையினால் கற்றுக்கொள்ளுகிறோம். மார்க்கத்தை அனுசரிக்கிறவர்கள் நாலில் ஒன்றுதான் நிறைவான பலனைக் கொடுப்பார்களென்று நம்மை எச்சரிக்கிறது. கடைசியில் கின்குவகிசிமா ஞாயிறுக்குரிய சுவிசேஷவாக்கியம் இந்தக் கடமைகளை நாம் எப்படி நிறைவேற்றவேண்டுமென்று காட்டுகிறது. பிச்சை கேட்ட குருடனைப்போல விசுவாசத்தோடு அன்பைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், செபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கவேண்டுமென்றும், நம்மு

டைய செபத்துக்கு உடனே உத்தரவு கிடையாதபடியால் அதுகளைத்
தேவன் அங்கிகரிக்கவேண்டுமென்று மலைக்காமல் அதிகமதிகமாய்
யேசுவே தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கவேண்டுமென்றும்
செபம்பண்ணக் கற்பிக்கிறது.

நான்காவது. ஙின்குவகிசிமா ஞாயிறுக்குப் பிறகு வரும் செவ்வாய்
க்கு அதிக்கைச் செவ்வாயென்று பெயர். உரோமான் மார்க்கத்தார்
இந்த நாளில் பாவ சங்கீர்த்தனஞ்செய்து, அல்லது பாவத்தை அறிக்
கையிட்டு இராப்போசனம் பெற்று லெந்தென்னும் பரிசுத்த நாட்க
ளுக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளுவார்கள்.

X. லெந்தென்னும் நாற்பதுநாளைக் குறித்து.

நாம் எப்பொழுதும் நம்முடைய கடமைகளை நிறைவேற்றவேண்டிய
போதிலும், உலகத்திலுள்ள கெடுதியையும் நம்முடைய பெலவீனத்தை
யும் உணருவோமானால் நம்முடைய கடமைகளுக்கு விரோதமான
தைச் செய்து நம்முடைய மாம்ச இச்சைகளுக்கு எவ்வளவாய் இடங்
கொடுக்கிறோம் என்று நாம் கவனித்தோமானால் நம்மைத்தாமே சோ
திக்கிறதற்கும் மெய்மனஸ்தாபப்படுகிறதற்கும் சகுந்தகாலங்களிருப்
பது அவசியமென்றறிந்துகொள்ளுவோம்.

இரண்டாவது. பூர்வீககாலமுதல் ஆதிக்கிறிஸ்தவர்கள் தங்களை வெ
றுக்கிறதற்கும் ஆத்துமாவை ஒடுக்குகிறதற்கும் இவ்விதமாய் ஈஸ்தர்
பண்டிகைக்குத் தங்களை ஆயத்தம்பண்ணிக்கொள்ளுகிறதற்காக சில
விசேஷித்த காலங்களைக் குறிப்பது வழக்கமாயிருந்தது. யோவான்
அப்போஸ்தலனோடு சம்பாஷித்த பொலிக்கார்ப்பென்பவரோடு பழ
கியிருந்த ஐரேனியு என்பவர் யோவான் மரித்தபின் தொண்ணூறும்
வருஷத்தில் இதைப்பற்றி எழுதினபோது தனக்கு முன்னிருந்தபோ
தி ஆசரித்துவந்தபடியே தன் காலத்திலும் இதை ஆசரித்துவந்ததா
கச் சொல்லுகிறார்.

---

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

## ச. அதிகாரம்.

### காயீன் ஆபேல் சரித்திரத்தைக் காட்டியது.

1. "காயீன்" என்பதற்கு பெற்றுக்கொண்டேன் அல்லது சம்
பத்து என்றர்த்தம். இந்த வார்த்தை அதி விலையுயர்ந்த பொருளைக்கு
றித்துப் பேசும்போது வழங்கியது. உபா. 32: 6. நீதி. 8: 22. "கர்த்த
ரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" என்ற வார்த்தையை கர்த்த
ரான மனுஷனைப் பெற்றேன் என்று சிலர் தாற்பரியப்படுத்துகிறார்
கள். இதினாலே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஸ்திரீயின் வித்து
இவன்தான் என்று ஏவாள் நினைத்ததாகத் தோன்றுகிறது. அதினா
லேதான் அவன் பின் நடபடிகளால் மிகவும் ஏமாற்றப்பட்டு இரண்
டாம் மகனுக்கு வீண், அபத்தம், அல்லது நிர்ப்பந்தமான மனுஷன் என்
று அர்த்தமுள்ள ஆபேல் என்ற பேரை இட்டாள்.



3—5. "சில நாள்சென்ற பின்பு" எபிரேயு பாஷையில் நாட்க
ளின் கடைசியிலே என்றிருக்கிறது. இது, வாரத்தின் கடைசிநா
ளாயும் அக்காலத்தில் ஓய்வுநாளாயுமிருந்த சனிக்கிழமையைக்குறிக்
கிறதென்று நினைக்கப்படும். இதினாலே ஆதிமுதலே ஆராதனைக்
கென்று குறிக்கப்பட்ட விசேஷித்த காலமிருந்ததென்று விளங்கும்.
"அங்கிகரிக்கவில்லை" காயீன் தன்னைப் படைத்து ஆதரித்த
தேவன்மேல் ஒருவகையான பற்றுதல் உள்ளவனாயிருந்தான் என்ப
தற்குச் சந்தேகமில்லை. அதினாலேதான தன் நன்றியறிதலைக்காட்ட
அவருக்குக் காணிக்கை கொண்டுவந்தான். ஆனால் வாக்குத்தத்தம்
பண்ணப்பட்ட இரட்சகரை விசுவாசிக்கவில்லை. தன்னைப் பாவி என்
று உணர்ந்து இரக்கத்திற்காகக் கெஞ்சவுமில்லை. பிராயச்சித்தமில்
லாமல் தேவனைச் சேரலாம் என்று எண்ணி இரட்சகரை முன்குறித்த
பலியைக் கொண்டுவரவில்லை. தான் யாதொரு பாவமுஞ்செய்யாத
நீதிமான்போல தன் சுய புண்ணியத்தையே நம்பி பரிசேயனைப்போல்
ஸ்தோத்திரஞ்செலுத்துகிற பாவனையாய் வந்தான். இப்படியாக அந்
தப் பழயகணக்குப்படி கிரியை உடன்படிக்கையைச் சார்ந்தவனாய்
வந்தபடியினாலே கர்த்தர் அவனையும் அவன் காணிக்கையையும் அங்
கிகரிக்கவில்லை. ரோமர் 3: 20 வாசி.
ஆபேலோவென்றால் விசுவாசத்தினாலே "காயீனுடைய பலியி
னும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்." வாக்குத்
தத்தம்பண்ணப்பட்ட இரட்சகர்பேரில் விசுவாசமுள்ளவனாய் வந்
தான். ஆயக்காரனைப்போல தன்னை நிர்ப்பந்த பாவி என்று உணர்ந்
தான். தேவ நியமிப்பின்படியே அவருடைய பிராயச்சித்தத்திற்கு
முன்குறிப்பான பலியைக் கொண்டுவந்து தன் தாழ்மையையும் விசு
வாசமுள்ள கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்தினான். இப்படியாக வாக்
குத்தத்தம்பண்ணப்பட்ட ஸ்திரீயின் வித்துமூலமாய் புதிய உடன்ப
டிக்கையின் இரக்கத்துக்காகக் கெஞ்சினபடியினாலே அவனையும்
"அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்." ரோமர் 3: 28.
வெளியரங்கமான காட்சியினாலே காயீன் காணிக்கையிலிருந்து இதை
வித்தியாசப்படுத்தி விசேஷித்துக் காட்டினார். வழக்கப்படி வானத்
திலிருந்து அக்கினிவந்து பட்சித்திருக்குமென்று நினைக்கலாம். பா
விகளைப் பட்சிக்கும் தேவகோபம் பலியைப் பட்சித்ததினாலே குற்ற
வாளிக்கு இரக்கம் கிடைக்கும் என்பதை இது காட்டுகிறதாயிருந்தது.
6. "கர்த்தர் காயீனைநோக்கி" பிற்காலத்து வழக்கப்படி மனி
தவடிவாய்க் காணப்பட்டிருப்பார். அவன் பாவத்தைத் தூண்டிக்
காட்டி அவன் மனந்திரும்பும்படி அன்பாய்ப் புத்திசொல்லுகிறார்.
7. "நீ நன்மைசெய்தால் மேன்மையில்லையோ" ஆபேலைப்
போல் குறிக்கப்பட்ட மார்க்கமாய் வந்தால் நீயும் ஏற்றுக்கொள்ளப்
படுவாயே.
"பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" இதற்கு பல தாற்
பரியம் சொல்லப்படும்.
(1) உன் பாவம் நீங்காமல் வளர்ந்துகொண்டேயிருக்கும் என்
று சிலர் அர்த்தப்படுத்துவார்கள். அப்போது, உன் குரூரமான எரிச்
சல் பெரும்பாதகஞ்செய்ய உன்னை ஏவி, அதிசக் கொடிய ஆக்கினைக்
கு உன்னை ஆளாக்கும்படி உன் இருதயத்தின் வாசற்படியில் சிங்கம்
போல் பதிவிருக்கிறது என்று அர்த்தமாகும்.
(2) ஆதி. 19: 5. லேவி. 5: 1. 20: 20. எண்ணா. 18: 1. 2 இரா. 7: 9.
சகரி. 14: 9. இந்த வாக்கியங்களில் பாவமானது பாவ தண்டனைக்

குப் பதிலாக வழங்குவதினாலே இவ்வகைக் கருத்தப்படி பாவதண்
டனை உன் வாசற்படியில் படுத்திருக்கும் என்று சிலர் வியாக்கியா
னம்பண்ணுவார்கள் அப்போது, நீ கொடிய அக்கிரமஞ் செய்ய
நினைத்திருக்கிறாய். எவ்விதத்திலும் உன் பாவம் உன்னைத் தொடர்ந்
துபிடிக்கும், ஆக்கினைக்குத் தப்பமாட்டாய் என்றர்த்தமாகும்.

(3) வேறு அநேகம்பேர் 2 கொரி. 5: 21ஐக் கொண்டு "பாவம்"
என்பதை பாவபலி என்று கருத்துப்படுத்த "நீ நன்மைசெய்யா
திருந்தால்" பாவநிவாரணப்பலியாகிய ஆட்டுக்குட்டி உன் வாசற்ப
டியிற் படுத்திருக்கிறதே அதைச் செலுத்தலாமே என்று அர்த்தம்பண்
ணுகிறார்கள்.

"அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை
ஆண்டுகொள்." இதற்கும் பல தாற்பரியஞ் சொல்லப்படும்.

(1) இந்த வார்த்தைகள் மேற்சொல்லிய முதலாவது அர்த்தப்
படி பாவத்தைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்குமானால், "பாவம் உன்
வாசற்படியிற் படுத்திருக்கும், அவன் ஆசை (அதாவது, அதின் ஆசை
பாவத்தின் ஆசை) உன்னைப் பற்றியிருக்கும்" என்றாகும். அப்போது,
பாவமானது உன்னைத் தாக்கி அபாயப்படுத்தி ஜெயித்து அழித்துப்
போடும் என்றாவது, உன் பாவ ஆசை, கோக்கம் தீர்மானம், உன்
சகோதரனை பழிசெய்ய நினைப்பதுமுதலிய உன் தீயகுணங்கள் தற்
காலத்தில் உனக்கு இன்பமாய்த் தோன்றினாலும் அவனுக்கு அல்ல,
உனக்கே கேடாய்முடியும். நீ அதற்கு இடங்கொடாமல் எதிர்த்து
நின்று "அவனை (பாவத்தை) ஆண்டுகொள்;" அதாவது, உன் தீயகு
ணங்களை அடக்கிக் கீழ்ப்படுத்து என்று அர்த்தமாகும். வேதத்தில் பா
வத்தை மனிதனைப்போல் பேசியிருப்பது காண்க. ரோமர் 7: 8, 9, 11.

(2) இந்த வார்த்தைகள் ஆபேலைக்குறித்துப் பேசப்பட்டதா
னால் "அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டு
கொள்" என்பது, அவன் உனக்குக் கீழாயிருப்பான், நான் அவன் பத்
தி விசுவாசத்தினிமித்தம் அவனை முக்கியப்படுத்தினாலும் உலகப்பிர
காரமாய் உனக்கு மேலாக்கவில்லை. நீதானே மூத்தவனுக்குரிய பாத்
தியதை உடையவனாய் அவனை ஆண்டுகொள் என்றர்த்தமாகும். 8:
16 வாசி.

8. "ஆபேலோடே பேசினான்." என்பது கிரேக்குப்பாஷை,
சமாரியாப்பாஷைமுதலிய பூர்வீக திருப்புதல்களில் "நாம் வயலுக்
குப்போவோம் வா" என்றிருக்கிறது. அவனைக் கொலைசெய்யும்படி
தான் நிர்ணயித்திருக்கிற இடத்துக்கு அவனை நடத்துமட்டும் தன்
உள் நோக்கத்தை மறைத்து அவனோடு சிநேகபாந்தமாய்ப் பேசினான்.
ஐயோ! இது செய்தி கேட்ட ஆதாம் ஏவாளுக்கு என்ன வியாகுலமா
யிருக்கும்! இதெல்லாம் அந்த ஆதி தீர்க்கதரிசனத்தின்படியே சம்
பவித்தது. 3: 15. வாசி. உலகத்திலே முதலாவது மரித்தவன் இரத்
தச்சாக்ஷியாய் பரலோகம் சேர்ந்தான். இது சாத்தான் தலை நசுக்கப்
படுவதைக் காட்டுகிறதல்லவா?

"அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" என்று அப்போஸ்
தலன் சொல்லுகிறார். எபி. 11: 4. என்ன பேசுகிறான்? இரட்சகரைக்
குறித்துப் பேசுகிறான். நான் பெரும்பாவியாய் இருந்தேன். இரட்
சகருடைய புண்ணியத்தினாலே நான் நீதிமானாகி இதோ
பிழைத்திருக்கிறேன் என்கிறான். இன்னும் என்ன பேசுகிறான்? கொ
லையானது மகா பாதகச்செயல். பொறுமைக்கும், முன் கோபத்துக்
கும் இடம் கொடாதேயுங்கள் என்றும்;—என் பின்னடியாராகிய விசு



வாசிகளே! உங்களுக்குப் பாக்கியம் இவ்வுலகத்தில் இல்லை என்றும்;
நீதிமான்களே, சர்ப்பத்தின் வித்தினால் வருகிற துன்பத்துக்கு எதிர்
பார்த்திருங்கள்! "நாம் அநேக உபத்திரவங்களின்வழியாய் பரலோக
இராச்சியத்திற் பிரவேசிக்கவேண்டும்" என்றும்; இதோ மறுமை
உண்டு, சாவு நமக்குச் சாவல்ல, சரீரம் சொற்பகாலத்துக்கு மண்
ணுக்குட்பட்டாலும் இரட்சகர் சம்பாதித்த நித்தியசீவனை நாம் அடை
வோம், அதை விசுவாசியுங்கள் என்றும் பேசுகிறான்.

9. பழிசெய்தவனை கர்த்தர் நியாயந்தீர்க்கவந்தார். தேவனு
டைய சர்வவியாபகம், சர்வஞ்ஞத்துவம், சர்வவல்லமை ஆகிய இவைத்
தைக்குறித்து பாவமானது காயீன் கணகளைக் குருடாக்கிப்போட்ட
து. ஆ! அவன் இருதயம் எவ்வளவாய் கடினப்பட்டது. ஆபேல் சின்
னப்பிள்ளையா? நீர் என்னிடத்தில் அவனைப் பார்க்கவா சொல்லியிரு
ந்தீர் என்கிற பாவனையாய் அவிசுவாசத்தோடும் அகந்தையோடும்
பேசுகிறான்.

10. "இரத்தம்" எபிரேயு பாஷையில் "இரத்தங்கள்" என்றி
ருக்கிறது. இந்த அநியாயக் கொலையின் பெரும்பாதகத்தை அருவ
ருப்போடு வற்புறுத்திக்காட்டவோ; அல்லது சிந்தப்பட்ட இரத்தத்
தின் மிகுதியைக் காட்டவோ; அல்லது ஆபேலின் வரிசையில் வந்த
இரத்தச்சாட்சிகளுடைய எல்லாப் பழியையும் இவன்மேல் சுமத்த
வோ இப்படிப் பன்மையாய்ப் பேசுகிறார்.

"கூப்பிட்டுக்கொண்டிருக்கிறது." கொலைசெய்யப்பட்டவனு
டைய இரத்தம் தன் இரண்டு கைகளையும் வானத்திற்குநேரே உயர்த்தி
பழிசெய்தவன் இரத்தத்திற்காக பூமிக்கெல்லாம் நியாயாதிபதியை
நோக்கி, பழிவாங்கும்! பழிவாங்கும்! என்று அலறிக்கொண்டிருக்கி
றதாம். காயீன் செய்த பெரும்பழியின் கொடுமையைக் காட்ட இப்
படிச்சொல்லப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் இரத்தம் "ஆபேலினுடைய இரத்தம் பேசின
தைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிறது." ஏசு சிலு
வையிலிருக்கும்போது இரத்தம் வடிகிற தமது பரிசுத்த கைகளை விரி
த்து "பிதாவே இவர்களுக்கு மன்னியும்!" என்றார். இப்பொழு
தும் அப்படியே, மன்னியும்! மன்னியும்! மன்னியும்! என்கிற மன்றா
டுகிறார். 1 யோவான் 2: 1, 2.

11-12. "பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்" என்பது "பூமி
யைப்பார்க்கிலும் சபிக்கப்பட்டிருப்பாய்" என்றும் திருப்பப்படும்.
பூமி முன்னமே சபிக்கப்பட்டது. அப்படியிருந்தும் அது உன்னைப்
பார்க்கிலும் புத்தியுள்ளதுபோல நீ சிந்தின இரத்தத்தை வாங்கிக்
கொண்டபடியால நீ அதனிலும் சபிக்கப்பட்டிருப்பாய், "அது தன்
பலனை இனி உனக்குக்கொடாது." ஏனெனில்; உன் தம்பி இரத்தத்
தை அது குடிக்கும்படி பலவந்தஞ்செய்துபோட்டாய் என்ற பாவனை
யாய்ச் சொல்லுகிறார்.

"நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்." உன் மனச்சாட்சியில்
குத்துண்டு அமைவில்லாமல் நடுங்கிக்கொண்டிருப்பாய். உன் இனசனத்
தையும் இழந்து யாதொரு நிலையான குடியிருப்பில்லாமல் தன்னி
லேதானே நடுக்கங்கொண்டு அலைகிறவனாயிருப்பாய்.

13. "தண்டனை" எபிரேயுப் பாஷையில் "பாவம்" என்றிருக்
கிறது. 7. வா. காண்க.

14. "உமது சமுகத்துக்கு விலகி" உமது தயவுக்கும் ஆதரவுக்
கும் விலகி.

"கொன்றுபோடுவானே," காயீன் யாருக்குப் பயப்பட்டான்? "ஒருவனும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப்போகிறார்கள்." நீதி. 28: 1. என்ற நீதிமொழிப்படி பாதகம் எவ்விதத்திலும் கிலேசங்கொடுக்குமே. இப்பொழுது ஆதாம் ஏவாளுக்கு அநேக புத்திர பௌத்திரர் இருந்திருக்கவேண்டும். வைதிக சரித்திரக்காரன் திருச்சபை சம்பந்தத்தில் வருகிற பேரைமாத்திரம் எழுதுகிறபடியினாலே அவர்களை இந்தச் சுருக்க சரித்திரத்தில் காட்டவில்லை. ஆனால் ஆதி. 4: 25 ஐயும் 5: 3 ஐயும் ஒத்துப்பார்ப்பதினால் சேத் பிறக்கிறதற்கு கொஞ்சக்காலத்துக்குமுன்தான் ஆபேல் கொலைசெய்யப்பட்டதாக பொதுவாய் நினைக்கப்படுகிறது. சேத் பிறக்கும்போது ஆதாமுக்கு வயது 130. அப்படியானால் இவ்வளவுகாலத்துக்குள்ளாக பெருக்கமான சனங்கள் உண்டாயிருப்பார்களே. ஆதி. 1: 26.

15. "ஏழுபழி சுமரும்." மிகவும் பயங்கரமானவிதமாய் அகோர கடினமான தண்டனைகளினாலே வாதிக்கப்படுவான். லேவி. 26: 28. சங்கி. 12: 7. 79: 12.

பழிகாரனை கர்த்தர் தப்பவிட்டதென்ன? அவர் கொலையை எவ்வளவாய்ப் பகைத்து அருவருக்கிறார் என்பதை உலகத்துக்கு வெளிப்படுத்தும்படி அவனை அத்தாட்சியாகவும் ஞாபகக்குறிப்பாகவும் வைக்கச் சித்தமானார்.

"அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார்." இந்த அடையாளம் எப்படி இருக்கும், எதிலே இருக்கும் என்று விசாரிக்கிறதில் பிரயோசனமில்லை. ஒரு காரியம் நிச்சயம். அந்த அடையாளம் அவனுடைய அவகீர்த்தியை மற்றவர்களுக்குப் பகிரங்கமாய்க் காட்டுகிறதாயிருந்தது.

அவன் நடுக்கங்கொண்டு திரிந்தான் என்று சிலரும், மற்றவர்கள் அவனைக் காணும்போது விலகிப்போகத்தக்கதாக அவன் தேகத்தில் ஒரு மாறுதலைக் கட்டளையிட்டார் என்று சிலரும் சொன்னாலும்; மோசே, கிதேயோன் இவர்களுக்குப்போல அவன் மனதுக்கு தைரியமும் நிச்சயமும் உண்டாகும்படி அவனுக்குமுன் ஒரு அற்புதத்தைச் செய்துகாட்டினார் என்று பெரும்பாலும் சொல்லப்படும்.

16. "கர்த்தருடைய சந்நிதியைவிட்டு" அதாவது அவருடைய ஏற்பாடுகளையும், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் கூட்டமாகிய திருச்சபையையும், அவர் சமுக மகிமைகள் அதிகமாய் விளங்கியதும் அவரை விசேஷித்தவிதமாய்த் தொழுது ஆராதிக்கிறதுமான முக்கிய ஸ்தானத்தையும் விட்டுப் புறப்பட்டான் என்றர்த்தம். இதனாலே ஆதியிலேயே திருச்சபைக்குரிய நியமங்கள் கட்டளையிடப்பட்டிருந்ததென்று அனுமானிக்கலாம். அவன் தனக்கிடப்பட்ட சாபத்தினிமித்தம் இந்த ஆசீர்வாதங்களை முதலாவது இழந்தானென்று நாம் வாசிக்கிறதில்லை. அவன் வரவர மிகுதியும் கடினப்பட்டு அவிசுவாசியாகி ஒருவேளை விக்கிரகபத்திக்கும் தலைப்பட்டு வெளியரங்கமாய் அவபத்தனானான்.

"நோத்" போக்கிரி அல்லது திரிகிறவன் என்றர்த்தம். இதினாலே அவன் நடமாடித்திரிந்த இந்த இடத்துக்கு பிற்காலத்தில் "நோத் என்னும் தேசம்" அதாவது, போக்கிரியின் தேசம் என்ற பேருண்டாயிற்று.



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்னும் இளவரசர் பூரண சொஸ்தமுள்ளவராய் பிரான்ஸ்முதலான தேசங்களுக்கு சிந்தாயாத்திரையாய்ப் போனார். அவர் ரோமையில் போனபோது பாப்பானவரைக் கண்டுபேசினார். அவர் அதிக உபசாரத்துடன் அவரை அங்கிகரித்துக்கொண்டு, அங்கிலேய திருச்சபையார் தம்மைப்பற்றி அநுகூலமான சிந்தனைகளைக் கொண்டிருக்கிறார்களென்று அவர்களைப் புகழ்ந்து பேசினார். பாப்பானவர் ரோமாபுரியைவிட்டு வேறொரு தேசத்தில்போய் வசிப்பாரென்று பேச்சுண்டு. மகா ராஜாத்தியவர்கள் ஜர்மானிய தேசத்தைச் சேர்ந்த பாடன்பாடன் என்னும் நகரத்திலிருக்கிறார்களாம்.

அலபாமா என்னும் கப்பலைப்பற்றிய விவாத விஷயம் இன்னும் தீரவில்லை. அமேரிக்க பத்திராதிபரொருவர் இந்த காரியத்தைப்பற்றி தம் பத்திரிகையில் பேசி, அமேரிக்க துரைத்தனத்தார் கேட்கிறது அநியாயமென்றும், அங்கிலேயர் அதற்கு சம்மதிப்பது தகாதென்றும், எந்த விதமும் அமேரிக்க துரைத்தனத்தார் அங்கிலேயரோடே இணங்கிச் சமாதானமாயிருப்பது மிகவும் அவசியமென்றும் சொல்லுகிறார். கிரான்வில் பிரபு அமேரிக்க துரைத்தனத்தாருக்கு அனுப்பின உத்தரம் அமேரிக்க மந்திராலோசனைச் சபையில் சீர்தூக்கிப்பார்க்கப்பட்டது.

**இந்தியா.** இந்திய கவர்னர் ஜெனரல் மேயோ பிரபுவைக் குத்திக் கொன்ற பாதகனாகிய ஷீயர் அலி தூக்கிற்போடப்பட்டான். அவன் தானொரு பெருங் கருமத்தை நிறைவேற்றியதுபோலவும், தன் பாதகச் செய்கையால் தன் பெயருக்கு என்றும் மங்காத கீர்த்தியுண்டாயிருக்கிறதுபோலவும் பேசினான். அவனோடு சேர்ந்த கூட்டாளிகளுண்டு இல்லையென்பது வெளிப்படவில்லை. ஆகிலும் இவனும் கல்கத்தா சிரேஷ்ட நியாயாதிபதியைக் கொன்ற அப்துல்லா என்பவனும் வஹாபியர் என்னப்பட்ட மகமதிய கூட்டத்தாரால் ஏவப்பட்டவர்களென்று உத்தேசிக்கிறவர்களுமுண்டு. காலஞ்சென்ற மேயோ பிரபுவின் பத்தினியாருக்கு ஆயுசுபரியந்தம் வருஷவாரி பதினாயிரம் ரூபாய் நன்கொடை கொடுக்கவேண்டுமென்று இந்திய துரைத்தனத்தார் விதித்தார்கள். அந்தத் தொகை போதாதென்று, பார்லிமெந்தார் இன்னும் ஏதாவது கூட்டிக்கொடுக்க வேண்டிக்கொள்வார்களென்றும் ஜனப்பிரதிநிதி சபையில் பிரஸ்தாபமுண்டாயிற்று. புதுக் கவர்னர் ஜெனரலாகிய நார்த்புருக் என்னும் பிரபு வருகிற மாசம் 10ம் தேதிக்குள்ளே இமயகிரியைச்சேர்ந்த ஸிம்லாவில்போய்ச் சேர்வாராம். அவ்வாறே சென்னை, பம்பாய் இவ்விராஜதானிகளின் நூதன கவர்னர்களும் சீக்கிரம் தத்தம் இடத்துக்கு வருவார்கள்.

**திருநெல்வேலி.** பாளயங்கோட்டைச் சேகரத்தையும், கல்விச்சாலை முதலானவைகளையும் நெடுநாள் விசாரித்து வந்த கனம்பொருந்திய எட்வார்ட் சார்சந்தையரவர்கள் சுகவீனத்தினிமித்தம் இங்கிலந்து தேசத்துக்குப்போய் அங்கு சிலகாலமிருந்து திரும்பிவரும்படி அம்மாளவர்களுடன் சென்ற மீ 19உ பாளயங்கோட்டையை விட்டு தூத்துக்குடிக்குப்போய் கப்பலேறி, பம்பாயிற்சேர்ந்து அங்கிருந்து புகைக்கப்பல்வழியாய் ஐரோப்பாவுக்குப் போயிருக்கிறார்கள்.

**ஏப்பிரில் மீ நாள் 30—பங்குனி மீ 21உ முதல், சித்திரை மீ 20உ வரை.**

| வாரம். | தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | உக | தேவன் இஸ்ரவேல் புத்திரரை நோக்கிப்பார்த்தார். யாத். 3: 25. |
| செ | 2 | உஉ | நீ நிற்கிற ஸ்தலம் பரிசுத்த பூமியாயிருக்கிறது. 3: 5. |
| பு | 3 | உங | பராபரனை நோக்கிப்பார்க்கப் பயந்தான். 6. |
| வி | 4 | உச | அவர்கள் கூப்பிடுகிற கூப்பிடுதலைக் கேட்டோம். 7. |
| வெ | 5 | உரு | உமது தேசத்துக்கு மழையைக் கட்டளையிடுவீராக. 1 இரா. 8: 36. |
| ச | 6 | உசு | தேவரீர் மனுப்புத்திரரின் இருதயத்தை அறிந்தவர். 40. |
| ஞா | 7 | உஎ | பாவஞ்செய்யாத மனுஷனில்லை. 46. |
| தி | 8 | உஅ | உமது சனமும் உமது சுதந்தரமும் அவர்கள்தானே. 51. |
| செ | 9 | உகூ | என் ஆத்துமா உம்மை ஒட்டிக்கொள்ளுகிறது. சங்கீதம் 63: 8. |
| பு | 10 | ௩0 | என்னை உமது வலதுகரம் தாங்குகிறது. 8. |
| வி | 11 | க | பொய்பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும். 63: 11. |
| வெ | 12 | உ | என் கெஞ்சுதலிலே என் சத்தத்தைக் கேளும். 64: 1. |
| ச | 13 | ங | நீதிமான் கர்த்தருக்குள் மகிழுவான். 10. |
| ஞா | 14 | ச | செம்மை இருதயத்தார் மேன்மை பாராட்டுவார்கள். 10. |
| தி | 15 | ரு | உம்மண்டைக்கு சகல மாமிசமும் வருவதாக. 65: 2. |
| செ | 16 | சு | ஆ எத்தனையான மாயை, எல்லாம் மாயையே. பிரசங்கி. 1: 2. |
| பு | 17 | எ | சூரியன் கீழே நூதனமானதொன்றுமில்லை. 9. |
| வி | 18 | அ | அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன். 18. |
| வெ | 19 | கூ | ஞானியின் கண்கள் அவன் சிரசிலிருக்கின்றன. 2: 14. |
| ச | 20 | க0 | மூடன் இருளிலே நடக்கிறான். 14. |
| ஞா | 21 | கக | நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலே கேள். ஏசா. 44: 1. |
| தி | 22 | கஉ | நமது தாசனாகிய யாக்கோபே பயப்படாதிரு. 2. |
| செ | 23 | கங | நமது ஆவியை உன் வித்தின்மேல் ஊற்றுவோம். 3. |
| பு | 24 | கச | இஸ்ரவேல் தீட்டுப்பட்டுப்போயிற்று. ஓசியா 6: 10. |
| வி | 25 | கரு | நமக்கு விரோதமாக துரோகம்பண்ணினார்கள். 7: 13. |
| வெ | 26 | கசு | வேதவாக்கியங்களினால் நித்திய சீவனுண்டு. யோவான் 5: 39. |
| ச | 27 | கஎ | வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் 39. |
| ஞா | 28 | கஅ | இனிமேல் சாபமில்லை. வெளிப்படுத்தல் 22: 3. |
| தி | 29 | ககூ | அவருடைய ஊழியக்காரர் அவருக்காராதனை செய்வார்கள். 4. |
| செ | 30 | உ0 | அவர்கள் என்றைக்கும் இராசரீகம் பண்ணுவார்கள். 5. |

## விசேஷித்த நாட்கள்.

7. உயிர்த்தெழுந்தபண்டிகைக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு.
8. அமாவாசை.
14. உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப்பின்வரும் இரண்டாம் ஞாயிறு.
21. உயிர்த்தெழுந்தபண்டிகைக்குப்பின்வரும் மூன்றாம் ஞாயிறு.
24. பௌர்ணமி.
28. உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப்பின்வரும் நான்காம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

**Vol. 24.** **May.** **No. 5.**

### Contents:

Bible Sketches and their Teachings. ... ... ... ... 82
Christian Church History. ... ... ... ... ... ... 84
The Parables of Christ. ... ... ... ... ... ... 85
On the Liturgy. ... ... ... ... ... ... ... 88
Notes on Genesis. ... ... ... ... ... ... ... 92
Farewell Address to the Rev. E. Sargent. ... ... ... 95
Summary of News. ... ... ... ... ... ... ... 99

### அட்டவணை:

பாலபோதனை. ... ... ... ... ... ... ... அஉ
கிறீஸ்து சபை சரித்திரம். ... ... ... ... ... ... அச
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... ... அரு
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ... ... அஅ
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... ... கூஉ
கனம். சார்ஜென்று ஐயரவர்களுக்கு வந்தன பத்திரம். கூரு
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ... கூகூ

**Palamcottah:**
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.
**1872.**

# நற்போதகம்.

ரு. மேமீ. கூஅளஉ௵.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### வேவுகாரர் பிரயாணம்.

4 மோசே 13. 14. அதிகாரங்கள்.

ஒரு சிறுவனைப்பற்றிய ஓர் கதை வாசித்திருக்கிறேன். அவன் ஒருவிசை தன்னிஷ்டப்படி நடக்க மனங்கொண்டு தன் தாய் தந்தைகளிடத்தில் உத்தரவுகேட்டானாம். தாய் தந்தைகளிருவரும் மகா பட்சமுள்ளவர்கள். சிறுவன் தன் மனம்போனபோக்கிலே நடக்கிறது அவனுக்கு நன்மையாயிராதென்று அவர்கள் அறிந்தும், அவன் மிகுதியும் விரும்பிக் கெஞ்சிக்கேட்டபடியால், ஒரு நாளைக்குத் தன்னிஷ்டப்படி நடக்கலாமென்று சம்மதித்தார்கள். அந்த நாள் அவன் ஜன்மதினம். பையன் தனக்குக்கிடைத்த சுபதினம் கூடிய அளவு நீண்டதாயிருக்கவேண்டுமென்று விரும்பி, வழக்கமாய் அவன் படுக்கையைவிட்டு எழுந்திருப்பதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக எழும்பிவிட்டான். பகல் நேரம்போகப்போக, தான் நினைத்தது முற்றும் தப்பென்று உணர்ந்துகொள்ளத்தொடங்கினான். எப்படியென்றால், போனபோன இடமெல்லாம் அவனுக்குத் தொல்லையும் சங்கடமுமே நேரிட்டது. ஒன்றும் சீராய் நடக்கவுமில்லை, அவனுக்குத் திருப்தியைக்கொடுக்கவுமில்லை. அவனுக்கு உதவிசெய்வாருமில்லை, அவன் செய்யவேண்டியது இன்னதென்று சொல்வாருமில்லை. மறுநாட்காலையில் அவன் தாயைக் கண்டமாத்திரமே சொன்னதென்னவென்றால், நீங்களும் சம்மதித்து இன்னபடி செய்யென்று சொன்னாலேயல்லாமல், இனியொருக்காலும் என்னிஷ்டப்படிசெய்ய விரும்பவேமாட்டேன என்றான். அதன்பேரில் பையன் ஜன்மதினத்தில் அவனுக்குக் கிடைக்கும் எல்லா வெகுமதிகளையும்பார்க்க அதிகப்பிரயோசனமும் அருமையுமான படிப்பினையைப் படித்துக்கொண்டான் என்று தாய் சொன்னாளாம்.

இன்று வாசித்த அதிகாரங்களால், தேவனுடைய சனமாகிய இஸ்ரவேலர் ஒருவிசை தங்கள் மனசுப்படி நடக்க விடப்பட்டபொழுது எவ்வளவு சங்கடத்தைத் தங்களுக்கு உண்டுபண்ணிக்கொண்டார்களென்று தெரியவருகிறது. அவர்கள் நீண்ட பிரயாணம் கிட்டத்தட்ட முடியப்போகிறது. எகிப்தைவிட்டுப் புறப்பட்டார்கள். சிவப்புக் கடலைக் கடந்தார்கள். சீனாய் வனாந்தரத்திற்போய், தேவன் தமது பரிசுத்த பிரமாணங்களையருளப்பெற்றார்கள். அப்புறம் பதினெட்டு வருஷமாய்ப் பிரயாணஞ்செய்தபின், “வனாந்தரத்தைக் கடந்துவிட்டோம்” என்று சந்தோஷமாய்ச் சொல்லுகிறவர்களாயுமிருக்கிறார்கள். ஆம், கல்லும் கரடுமான காடுகளுக்குள் அவர்கள் வெகுகாலம் வருத்தத்தோடு அலைந்துதிரிந்தபின் விசாலமான மணலுள்ளமைதானத்தில் வந்துசேர்ந்தார்கள். சிறிதுதூரம் மணலாயிருந்தது நடக்கிறதற்கு வசதியான களிமண்தரையிற் கொண்டுவந்துவிட்டது. ஆடுமாடுகள் மேயவும், பிள்ளைகள் விளையாடவுந்தக்க பசும்புற்றரைகளும் காணப்பட்டன. மரங்களும் செடிகளும் அங்கங்கே எதிர்ப்பட்டன. கூடாரங்களையடித்துக்கொள்ளவும் உட்கார்ந்து இளைப்பாறவும் நல்ல நிழல் கிடைத்தது. அதற்கு அப்புறத்திலே தூரமாய செழிப்பான திராட்சத்தோட்டங்களும் அலங்காரமான மலைச்சிகரங்களுமுள்ள பசுமையான ஓர் பெரிய பள்ளத்தாக்கு மகா சிறப்பாய்த் தோன்றினது. அதுதான் கானான்தேசம். அதைக் கண்டவுடனே என்ன சந்தோஷம். தாய்மார் தங்கள் பிள்ளைகளை உயர்த்தி அந்த அழகிய சீமையைப் பார்க்கச்சொல்லுகிறதைப்பார். “வீட்டுக்கிட்ட வந்துவிட்டோம்” என்ற பேச்சே பாளையமெங்கும் பேசப்படுகின்றது. “ஏறிப்போய் இளைப்பாறுவோம, மேகஸ்தம்பம் சீக்கிரம் அசையத்தொடங்கும். அப்பொழுது வாக்குத்தத்த தேசம்போய்ச் சேருவோம்” என்ற நினைவாகவே எல்லோருமிருந்திருப்பார்கள். என்னத்தினாலே! அந்த தேசம் உங்களுக்கு ஆதீனமென்று தேவன் வாக்குஅருளவில்லையா? அவருடைய வாக்கு உண்மையும் சத்தியமுமாயிருக்குமே. அதற்குச் சந்தேகமுண்டா? ஆனாலும் இஸ்ரவேலரிற் சிலர் சொல்லுகிறதைக் கேளுங்கள். “மெய்தான் நாம் கானான்தேசத்துக்கிட்டவந்துவிட்டோம். ஆனாலும் அது எப்பேர்ப்பட்ட தேசமென்றும், அங்குள்ளவர்கள் எத்தன்மையான சனங்களென்றும் அறியோமே. ஆகையால் முதலாவது நமக்குள்ளே சிலரை அனுப்புவது நன்று. அவர்கள் ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாய்ப் போய் சகலத்தையும் பார்த்து அறிந்து நமக்குச் செய்தகொண்டுவரட்டும். அப்புறம் நாம் ஏறிப்போகலாம்” என்றார்கள்.

அவர்கள் தேவனை நம்பியிருக்கக் கூடாதா? இப்பொழுது பதினெட்டு மாதக்காலமாய் எத்தனையோ பாழ் வனாந்தரங்களையும் மலைக்கணவாய்களையும் கடக்க அவர்களை நடத்திக்கொண்டுவந்தாரே. இதுவரையும் அவர்களை அவர் பராமரித்து வரவில்லையா! தீப மேகஸ்தம்பம் அவர்களை எப்பொழுதாவது மோசத்தில் அகப்படுத்தினதுண்டா? இஸ்ரவேலரைக்குறித்து நாம் இப்படியெல்லாம் நினைக்கிறோமே. அவர்களோ இப்படி நினையாமற்போனது ஆச்சரியமல்லவா? அவர்கள் தங்களுக்குப் பிரியமானபடி நடக்க விரும்பினார்கள். தேவனும் அப்படியே நடக்க அவர்களை விட்டுவிட்டார். இது மெய்யென்று 5 மோசே 1: 19—23 வாக்கியங்களை 4 மோசே 13: 1—3. வசனங்களோடு ஒத்துப்பார்த்தால் தெரியவரும். மோசே சனத்தோடு, “நாம் ஏறிப்போய் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வோமாக” என்றான். சனங்களோ வேவுபார்க்கிறதற்கு தாங்கள் அனுப்ப விரும்பின ஆட்கள் போய்த் திரும்புவதற்குமுன் போக மனமில்லாதிருந்தார்கள். அதன்பேரில் தேவன், கோத்திரத்துக்கு ஒருவனாக பன்னிரண்டு பெயரைத் தெரிந்து அனுப்பச்சொன்னார். அவர்கள் பெயர்களை இப்பொழுது வாசித்தீர்களே. இயோசுவாவும், காலேப்பும், வேறு பத்துப்பேரும் அனுப்பப்பட்டார்கள்.

## Christian Church History.

# கிறிஸ்துசபைச சரித்திரம்.

## 12. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

செவேரு இராயன் குமாரராகிய கரக்கல்லா, கேதா என்ற இருவரும் ஒருவருக்கொருவர் பகைசாதித்ததும், கரக்கல்லா என்பவன் தன் சகோதரனைக் கொலைசெய்வித்தது இராச்சியமுழுமையையுங் கட்டிக்கொண்டு தன பிரஜைகளையெல்லாம் ஒடுக்க ஆரம்பித்ததும் கிறிஸ்தவர்களுக்கு ஒருவேளை அனுகூலமாயிருந்திருக்கலாம். எப்படியென்றால் கொமோது இராயன் காலத்திற்போல இப்பேர்ப்பட்ட நடபடிக்கையினால் அஞ்ஞானிகள் தங்கள் சுகத்தைக்குறித்துக் கவலையுள்ளவர்களாகி கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துவதைவிட்டு ஓய்வார்களே. கரக்கல்லா என்பவன் மதாபிமானம் கொஞ்சமேனும் இல்லாதவனானபடியால் மார்க்கவிஷயமாய் அவனும் துன்பப்படுத்தமாட்டான். அவன் குழந்தையாயிருக்கையில் அவனை வளர்த்தது ஒரு கிறிஸ்தவளென்று சொன்னோமே. அதினாலே கிறிஸ்தவர்களுடைய கொள்கைகள் ஆசாரங்களிற் சிறிது அவன் அறிந்தாலும் அறிந்திருக்கலாம். என்றாலும் அவன் சிம்மாசனம் ஏறுவதற்கு முன்னமேயே அதெல்லாம் அவன் மனதைவிட்டு முற்றும் போய்விட்டது. இராசாங்கம் கைக்கொண்ட சமயத்தில், எவ்வகைக் குற்றத்தினிமித்தமாவது அன்னிய தேசங்களுக்குத் துரத்தப்பட்டிருந்த யாவரும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவரலாமென்று அவன உத்தரவுபண்ணினது நீதிசெய்யும் ஆசையுமல்ல தயாளசிந்தையுமல்ல, யாதோ ராஜதந்திரமென்றுதான் சொல்லவேண்டும். தகப்பனுடைய அந்தியகாலத்தில் அவனுக்குச் செய்த காரியங்களைக் கவனிக்குமிடத்து, தகப்பனுடைய சட்டங்களை மாற்றிவிடவேண்டுமென்ற விருப்பத்தினாலேயே அவன் கிறிஸ்தவர்களுக்கும் அவ்வாறே தகப்பனால் பிறதேசங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தவர்களுக்கும் தயைபாராட்ட ஏவப்பட்டானென்று எண்ணுவதும் அதர்மமல்ல.

இப்பேர்ப்பட்ட சட்டத்தைக் கிறிஸ்தவர்களுக்கு அனுகூலம்பண்ணவேண்டுமென்ற நோக்கமாய்ப் பிறப்பிக்காவிட்டாலும், அதினால் கிறிஸ்தவர்களில் சிலருக்காவது நன்மையுண்டாகாதிராது. பிறதேசங்களுக்கு அனுப்பப்படுவதுமாத்திரமல்ல, மற்றும் பல கேடுகளும் லகுவானாற்போல் குறிப்பிக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 204-ம௵ முதல் சிறைச்சாலையிலடைபட்டிருந்த கப்பதோக்கியாவின் கண்காணியான அலெக்சாந்தர் விடுதலையடைந்தான். அலெக்சந்திரியாக் கிளெமெந்து என்பவன் மேற்காட்டிய தேசத்துக்கு ஓடிப்போயிருந்தானே, அவன் அவ்விடத்தைவிட்டு அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்களைப்போய்க் கண்டுபேசிக்கொள்ள இடம்பெற்றான். கி. பி. 214-ம௵த்தில் அலெக்சாந்தர் என்பவன் இரட்சகர் பாடுபட்ட இடங்களைப் பார்க்கவேண்டுமென்ற பக்தியான நோக்கமாக எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணினதைப் பார்க்கும்போது சபையிலே இப்போது சமாதானம்



மேலிட்டிருக்கவேண்டுமென்று நிதானிக்கலாமே. அலெக்சாந்தர் எருசலேமுக்குப் போனது அவன் எதிர்பாராதவிதமாய் அவனுக்கு அனுகூலமாயிற்று. எப்படியென்றால் எருசலேமின் கண்காணி நார்சிசு என்று பெயர்கொண்டவன் இக்காலத்தில் நூற்றுப்பதினாறு வயசாயிருந்தான். அவன் அவ்வுத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்டது 196-ம௵த்தில். அவன் தன் தேகத்தை மிகவும் வருத்தி ஒடுக்கிக்கொண்டு நடந்தபோதிலும், அவன்பேரில் அநேக அவதூறுகள் வம்பாய்ச் சொல்லப்பட்டபடியால், தன் உத்தியோகத்தை விட்டுவிடுவது உத்தமமென்று நிதானித்து சிறிதுகாலம் தானிருந்த இடம் இன்னதென்று ஒருவருக்கும் தெரியாதவிதமாய் மறைந்திருந்தான். அவன்பேரில் பாரிக்கப்பட்ட குற்றங்கள் அபத்தமானவைகளென்று அப்பால் பரிஷ்காரமாய்க் காண்பிக்கப்பட்டது. மூன்றுபேர் முறைமுறையாய் அந்த ஆதிக்கத்தையடைந்து செலுத்தினபிறகு நார்சிசு என்பவன் திடீரென்று காணப்பட்டான். அதன்பேரில் அவனைத் திரும்பவும் பழைய உத்தியோகத்தில் ஏற்படுத்தினார்கள். அவ்வாறே அவன் மேற்படி ஆதிக்கத்தைக் கைக்கொண்டபோதிலும், விர்த்தாப்பியத்தினால் அதற்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதவனாயிருந்தபடியால் அவனுக்கு உதவியாக ஒருவனை நியமிக்கத் தீர்மானித்தார்கள்.

இத்தருவாயிலேயே அலெக்சாந்தர் என்பவன் கப்பதோக்கியாவிலிருந்து அவ்விடம் வந்துசேர்ந்தான். ஒரு இடத்துக் கண்காணியை இன்னொரு இடத்துக்கு நியமிக்கிறதும், ஒரு கண்காணி தனக்கு உதவியாக ஒருவனை வைத்துக்கொள்ளுகிறதும் இதற்குமுன் ஒருக்காலும் வழக்கமல்லாதபோதிலும், அலெக்சாந்தர் விஷயத்தில் அவ்விரண்டு தடைகளையுங் கவனிக்கவில்லை. அவனும் எருசலேமிலேயேயிருக்கச் சம்மதித்துக்கொண்டான். அதற்குக் கொஞ்சக்காலத்துக்குள் நார்சிசு என்பவன் காலஞ்சென்றுபோக அவனே அவ்விடத்துக்குச் சரியான கண்காணியாய் இந்த நூற்றாண்டின் மத்திவரையும் அதற்குரிய கடமைகளை நிறைவேற்றிக்கொண்டு வந்தான். அநேக விஷயங்களில் அக்காலத்து பிரபலமானவர்களுக்குள் இவனும் ஒருவன் என்பதற்குச் சந்தேகமில்லை. அவன் எருசலேமிலே ஸ்தாபித்திருந்த புத்தகசாலையானது இயூசெபியஸ் என்பவன் சபைச் சரித்திரத்தை எழுதினபொழுது அவனுக்கு மிகவும் உபயோகமாயிருந்தது.

## The Parables of Christ.

# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

## IX-வது. திராக்ஷத்தோட்டத்தில் வேலைசெய்தவர்களைக் குறித்து.

மத். 20: 1—16.

(தொடர்ச்சி.)

இப்பொழுது உவமையை வியாக்கியானஞ் செய்யப்பார்ப்போம். பரலோக இராஜ்யமானது வீட்டெஜமானாகிய ஒருவனுக்கொப்பா

யிருக்கிறது. அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை
அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான். அதாவது, நம்முடைய சபை
யில் ஊழியஞ்செய்யும் சலாக்கியத்துக்கு அழைக்கப்பட்டவர்களை
நடத்தும் விதம், இந்தக் குறைவுள்ள காலத்தில் தேவனுடைய இரா
ஜ்யம் வீட்டெசமானுடைய காரியத்துக்கு ஒப்பாயிருக்கிறது.
அவன் காலையிலே வேலையாட்களை அமர்த்தப் புறப்படுகிறான். ஆத்
துமகாரியங்களிலும் இது உண்மையாயிருக்கிறது. தேவனே தமது
பணிவிடை ஆட்களைத் தேடுகிறார். அவர்கள் அவரைத் தேடுகிறதில்
லை. நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் உலகத்தைத்
தெரிந்துகொண்டேன். யோவா. 15: 16. பரம திராக்ஷத்தோட்டத்
தில் வேலைசெய்ய உண்டாகும் அழைப்பு கர்த்தரிடத்தில் இருந்து
தான் வரும். மனிதருடைய இருதயத்திலிருந்து தோன்றுகிறதில்லை.
திவ்விய அழைப்பை அவன் எதிர்க்காமல் இருக்கிறதுதான் அவன்
செய்யவேண்டியது. அதை ஒரு அழைப்பென்று தேவவசனம் சொல்
லுகிறது, அது கட்டாயமில்லை. கேட்டாலும் கேட்கலாம், தள்ளி
விட்டாலும் தள்ளிவிடலாம். பரம அழைப்பும் அப்படியே.

வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலி பேசி அவர்
களைத் தன் திராக்ஷத்தோட்டத்துக்கு அனுப்பினான். ஒரு பணம் ஒரு
நாளைக்கு நல்ல கூலி. இங்கே வழங்குகிற கணக்கின்படி இது ஒன்
றரைப் பணம், அல்லது 5 அணுவுக்குச் சரி. பிந்தி வந்தவர்களோடு
இப்படிப் பேசித் திட்டஞ்செய்யவில்லை. இந்த வித்தியாசம் கவனிக்
கத்தக்கது. இல்லாவிட்டால் இப்படிக் கண்டிராது. வேலை செய்யு
முன்னே பேதுரு எங்களுக்கு என்ன கிடைக்குமென்று கேட்ட கேள்
விக்கு இசைவாக கூலியைப்பற்றி முந்தி வந்தவர்கள் சஞராய்ப்
பேசினார்கள். பிந்தி வந்தவர்களோ நியாயமானபடி வீட்டெ
சமான் கொடுப்பாரென்று நம்பிப்போனார்கள். சிலர் 11, 12-ம் வாக்கிய
த்தில் காணப்படும் கெட்ட குணங்களை துவக்கத்திலேயே காட்டுவார்
கள். மற்றவர்களோ கர்த்தர்பேரில் தாழ்மையாய்க் காத்திருந்து
தாங்கள் விரும்புகிறதைவிட, தங்களுக்குச் செல்லவேண்டியதைவிட
அதிகமாய் கர்த்தர் கொடுப்பாரென்று நிச்சயத்தோடு காத்திருப்
பார்கள். தங்கள் அன்பின் பிரயாசத்தை மறக்க தேவன் அநீதியுள்
ளவரல்ல. அவரை நம்புகிறவர்களுக்குக் குறைவில்லை. அவரைத்
தேடி அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்கள் யாவருக்கும் தகுந்த பலன்
அளிக்கிறவரென்றும் அவர்கள் அறிவார்கள். மூன்றும், ஆறும், ஒன்
பதாம் மணி நேரத்தில், அல்லது நம்முடைய கணக்கின்படி காலை
9 மணி, மதியம், சாயந்தரம் 3 மணி நேரத்தில் அவன் மறுபடியும்
கடைதெருவுக்குப் போய் அங்கே காத்திருக்கிறவர்களைக் கண்டு,
அவர்களை திராக்ஷத்தோட்டத்துக்கு அனுப்பினான். 11-ம் மணி வே
ளையிலும் அவன் போய் சும்மாவிருக்கிற வேறு சிலரைக் கண்டு, பகல்
முழுதும் நீங்கள் சும்மாவிருப்பதென்னவென்று அவர்களிடத்தில்
கேட்டான். கிறிஸ்துவுக்காக ஊழியஞ்செய்கிற யாவரும் அவருடைய
சபையில் பிரயாசப்படாத யாவரும் சும்மா நிற்கிறவர்கள்தான்.
(மாற்கு 13: 35.) ராச்சாமங்கள் நாலு குறிக்கப்பட்டிருக்கிறதுபோல,
இதில் பகல் சாமம் நாலும் குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அவர்
கள் ஒருவனும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். வீட்டெச
மான் கேட்ட கேள்வி அவர்களைக் கடிந்துகொள்ளத்தக்கது. அவர்
களோ அதற்குத் தகுந்த மாறுத்தாரஞ் சொன்னார்கள். அது திருத்தி
கரமான உத்தரவாக உவமையில் பாவிக்கப்படுகிறது. கிறிஸ்தமான



தேசத்தில் சாக்கிரமெந்துகள் பரிமாறப்பட்டு தேவனுடைய சுத்த
சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிற இடங்களிலுள்ளவர்கள் இப்படி
உத்தரவு சொல்லக்கூடாது. சபையைச்சேர்ந்த ஏராளமான சனங்
கள் சுவிசேஷத்தினால் உண்டாகும் நன்மைகளுக்கும் அதனால் சங்
களுக்குண்டாகும் கடமைகளுக்கும் முற்றிலும் அன்னியராய் வளர்ந்
துவருகிறார்கள். அவர்களும் கூட ஒருவரும் எங்களுக்கு வேலையிட
வில்லை என்று சொல்லப் போந்த நியாயமிராது. கிறிஸ்தமான
அழைப்பை அவர்கள் முற்றிலும் அறியாதவர்களல்ல. ஒரு தேசத்
தில் சுவிசேஷ இராஜ்யம் நூதனமாய்ப் பிரவேசிக்கும்போது அங்
குள்ளவர்கள்மாத்திரந்தான் ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை.
தேவனுக்கு நாங்கள் கீழ்ப்படியாமலிருந்ததற்கு அவரைப் பற்றின
அறிவீனந்தான் காரணம். வேறே ஆருக்கு ஊழியஞ்செய்யவேண்டும்,
தகுந்த ஊழியம் எது என்றறியாததினால்தான் சாத்தானுக்கு இதுவ
ரையில் ஊழியஞ்செய்துவந்தோம் என்று சொல்லுவார்கள்.

இந்த வேலைக்காரர் சொன்ன போக்கு சபையில் சேர்ந்து கடைசி
வரையில் தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்யமாட்
டோமென்று சொல்லுகிறவர்களுக்கேற்றதல்ல. ஆதிமுதல் செய்த
பொருத்தனைகளை எவ்வளவுகாலம் அசட்டை செய்தாலும் சீவகாலத்
தில் எந்த வேளையில் தேவனுடைய ஊழியத்தில் பிரவேசித்தாலும்
பெரியகாரியமல்லவென்று சொல்லுகிறது வேதவசனத்துக்கு முற்
றும் விரோதம். கிறிஸ்து சபையில் உள்ளவர்களும் கூட அழைக்கப்
படுகிறதுண்டென்பதை நான் மறுக்கிறதில்லை. அல்லது திட்டமாய்ச்
சொல்லவேண்டுமானால் முந்தியே அழைக்கப்பட்டவர்களானபடி
யால், அந்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்து கர்த்தருடைய திராக்ஷத்
தோட்டத்தில் 3-ம் 6-ம் 9-ம் 11-ம் மணியிலுங்கூடப் பிரவேசிக்கிறார்
கள். அவர்களை இந்த வேலைக்காரருக்கு சரிப்படுத்தலாகாது. அவர்கள்
சொன்ன போக்கு இவர்கள் சொல்லத்தக்கதல்ல. தகப்பன் போகச்
சொல்ல, முந்திப் போகமாட்டேனென்று சொல்லி பிறகு துக்கப்பட்டு
திராக்ஷத்தோட்டத்தில் வேலைசெய்யப்போன குமாரனுக்கு இவர்கள்
ஒப்பாயிருக்கிறார்கள். மத். 21: 28. அப்படிக்கொத்தவன் முந்தின
நடக்கையைக்குறித்து இந்த வேலைக்காரரைப்போல குற்றமற்றவ
னாகத் தன்னை எண்ணாமல், தான் அசட்டைசெய்த சமயங்களை நினைத்
து கிருபையின் ஆவியை நெடுங்காலம் எதிர்த்ததற்காக அதிகமாய்த்
துக்கப்படுவான். கிறிஸ்துமார்க்கம் ஸ்தாபிக்கப்பட்ட தேசத்தில்
கிறிஸ்துவைப்பற்றின அறிவு யாவருக்குள்ளும் பரம்பியிருக்கும் இடங்
களில் ஒருவரும் எங்களுக்கு வேலை இடவில்லையென்று சொல்லக்கூ
டியவர்களிராவிட்டாலும், இந்த உவமை அப்படிப்பட்ட இடங்க
ளில் பிரயோசனமற்றதென்று சொல்லப்படாது. ஏனெனில் சீவகா
லத்தின் பற்பல வேளைகளில் கடைசிவேளையிலும் கூட கர்த்தருடைய
திராக்ஷத்தோட்டத்தில் அநேகர் அப்படிப்பட்ட இடங்களிலும் பிர
வேசிக்கிறதுண்டு. அவர்கள் முந்தின தங்கள் அப்பிரயோசனத்தைக்
குறித்து உண்மையாய் மனஸ்தாபப்பட்டு அதைக்குறித்துப் போக்
குச்சொல்லாமல் கொஞ்சக்காலமாவது அதிகக் காலமாவது தாங்கள்
செய்யும் ஊழியத்தை தேவன் கிருபையாய் அங்கிகரிக்கிறதைக் கண்
டு இராஜ்யத்தின் பலன்களை நிறைவாய்ப் பெற்றுக்கொள்ளுவார்
கள். தேவனுடைய இராஜ்யத்தில் காலம் பெரிதல்ல. நீ எவ்வளவு
செய்தாய் என்றல்ல, இப்பொழுது எப்படிப்பட்டவனாயிருக்கிறாய்
என்பதுதான் கடைசிநாளில் கேட்கும் கேள்வி. மனுஷர்கள் செய்த

தற்குத்தக்கதாக அவர்கள் நிலைமையும் இருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது. இந்த உவமை உரோமாபுரித்தாருடைய கொள்கையாகிய எவ்வளவு என்கிற அளவைத் தள்ளி எவ்வகையென்கிற குணத்தையே விசேஷித்துக் காண்பிக்கிறது. மனிதனைக் கருவியாகவும் அவன் வேலையை முக்கியப்பொருளாகவும் பண்ணாமல், மனிதனையே முக்கியப் பொருளாகவும் அவனுடைய கிரியையைக் கருவியாகவும் பாவிக்கிறது. இக்காலத்திலுள்ள பலவித வீண் கொள்கைகளை வேரோடே பிடுங்குகிறது.

---

## On the Liturgy.

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ரு. அதிகாரம்.

ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

### X. லெந்தென்னும் நாற்பதுநாளைக் குறித்து.

மூன்றாவது. அதில் தேதிய ஒரு கண்காணியார் யூதர்கள் வருஷாந்தர பாவநிவர்த்திக்காகச் செய்த ஆயத்தத்தினின்று கிறிஸ்தவர்கள் ஆசரிக்கிற லெந்தென்னும் நாட்கள் உற்பத்தியாகிற்றென்று ரூபிக்கிறதுமல்லாமல், யூதர்களும் தங்கள் பாவநிவர்த்திப் பண்டிகைக்காக 40 நாளுக்கு முந்தித்தானே ஆயத்தப்பட்டதாகக் காண்பித்திருக்கிறார். கிறிஸ்தவர்களும் இந்த வழக்கத்தைப் பின்பற்றி உலகத்தின் பாவங்கள் நிவர்த்தியாகிற விசேஷத்துக்கு தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படிக்கு கிறிஸ்துமார்க்கத் துவக்கத்திலேதானே இந்த உபவாசநாட்களை ஏற்படுத்தினார்கள்.

நான்காவது. துவக்கத்தில் இத்தனை நாளென்று திட்டமாய் ஏற்படுத்தப்படவில்லை. சிலர் ஒரு நாளும், சிலர் இரண்டு நாளும், சிலர் கூடச் சிலநாளும், சிலர் 40 நாளும் உபவாச நாளாக ஆசரித்தார்கள். சிலர் 40 நாளுக்குப் பதிலாக 40 மணி நேரங்கள் உபவாசித்தார்கள். வெள்ளிக்கிழமை மத்தியம் 12 மணி நேரத்தில் இரக்ஷகர் மரித்தபடியால், அந்நேரம் முதற்கொண்டு ஓய்வுநாள் காலை ஏசுநாதர் உயிர்த்தெழுந்தமட்டாக ஒன்றும் புசியாமலிருப்பார்களாம். பிறகு இந்தக் காலத்தை நீடித்ததாக்கி மூன்று நாட்களாகவும், பின்பு வாரங்களாகவும் அதிகப்படுத்தி, கடைசியாக 40 நாளென்று தீர்மானப்படுத்தினார்கள். 40 என்னும் இலக்கம் பல சமையங்களில் மெய்மனஸ்தாபத்துக்கேற்றதாக உபயோகப்பட்டது. 40 நாள் மழைபெய்யப்பண்ணி பழைய உலகத்தை அழித்தார். (1 மோசே 7: 4.) 40 வருஷம் இஸ்ரவேலர் வனாந்தரத்தில் தங்கள் பாவத்துக்காகத் தெண்டிக்கப்பட்டார்கள். 4 மோ. 14: 34. குற்றவாளிகளை 40 அடி அடித்தார்கள். 5 மோ. 25:



3. இதுகள் போக மோசே ஒருவிசையல்ல, இரண்டுவிசை 40 நாள் உபவாசித்தான். 5 மோ. 9: 9. 18. 25. எலியாவும் 40 நாள் வனாந்தரத்தில் உபவாசித்தான். 1 இராசா. 19: 8. நினிவே சனங்கள் மனந்திரும்ப 40 நாள் தவணை கொடுக்கப்பட்டது. யோனா 3: 4. நம்முடைய இரக்ஷகரும் 40 நாள் தான் உபவாசம்பண்ணினார். மத்தேயு 4: 2. இதுகளைக் கவனிக்கிற எவனும் விசேஷித்த உபவாசஞ் செய்கிறதற்கு 40 நாள் சரியான காலமென்று லேசாய் ஒப்புக்கொள்ளுவான்.

ஐந்தாவது. இதற்கு லெந்தென்னும் பெயர் வர முகாந்தரம் என்னவென்றால், சாக்ஸன் பாஷையில் லெந்தென்பதற்கு வசந்தகாலமென்றர்த்தம். ஈஸ்தர் பண்டிகையில் முடியத்தக்கதாக இது வசந்தகாலத்தில்தான் தொடங்கும். உயிர்த்தெழுதலோடு இரக்ஷகர் பாடுகள் முடிந்ததை இது நமக்கு ஞாபகப்படுத்தும்.

ஆறாவது. இந்தக் காலத்தில் சனங்கள் தங்கள் துக்கங்களை வெளிப்படுத்துவார்கள். இந்த நாட்களில் விவாகம் முடிக்கமாட்டார்கள். சந்தோஷத்துக்குரிய எந்தக் காரியத்தையும் முடிக்கமாட்டார்கள். இதுகளில் அப்போஸ்தலன்மார் இரத்தசாக்ஷிகள் முதலானவர்கள் நாட்கள் வந்தால் அதுகளை அடுத்த சனி ஞாயிறுகளில் ஆசரிப்பார்கள். ஏனென்றால் கீழ்த்திசையிலுள்ள கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைபோலே சனிக்கிழமையையும் பண்டிகையாகப் பாவித்துவந்தார்கள். அந்த நாட்களில்தான் இராப்போசனத்தையும் பரிமாறுவார்களாம். இராப்போசனமும் உபவாசத்துக்கல்ல, பண்டிகைக்கு உரியதென்பது அந்த சபை பிதாக்களுடைய அபிப்பிராயம். மறு சனி, ஞாயிறு வரும்வரையில் ஒவ்வொரு நாளுக்கும் வேண்டியதை பிரதிஷ்டைபண்ணிவைப்பார்கள். மற்ற நாட்களில் இராப்போசனம் பிரதிஷ்டைப்படாவிட்டாலும் ஒவ்வொரு நாளும் அதை வாங்கி அநுபவிப்பது வழக்கம். மற்ற நாட்களில் அதை உட்கொள்ள விரும்புகிறவர்களுக்கு முந்தி பிரதிஷ்டையாக்கப்பட்டிருந்த அப்பத்தையும் இரசத்தையும் கொடுப்பார்களாம்.

கோவிலில் மாத்திரமல்ல வீட்டிலும் இந்த நாட்களை வெகு கண்டிப்பாய் ஆசரிப்பார்கள். இரட்டுடுத்தி சாம்பலில் உக்காருவார்கள். நன்றாய் உடுத்தவேண்டுமென்று கவலைப்படார்கள். சீவனைக் காத்துக்கொள்ளுவதற்கு அவசியமான சாப்பாட்டைமாத்திரம் சாப்பிடுவார்கள். சிலர் மாம்சத்தையும் இரசத்தையும் முற்றிலும் தள்ளுவார்கள். வேறு சிலர், முக்கியமாய் கிரேக்கர் மாம்சத்தோடு மீனையும் தள்ளுவார்கள். சிலர் முட்டையும் பழமும் போதுமென்றிருப்பார்கள். வேறு சிலர் இதுகளைத் தள்ளி ரொட்டி கிழங்குமுதலிய மரக்கறிகளைச் சாப்பிடுவார்கள். ஒரு காரியத்தை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். மற்ற உபவாச நாட்களில் சாயந்தரம் 3 மணி வரையில் மாத்திரந்தான் உபவாசிப்பார்களாம். லெந்தென்னும் நாட்களிலோ பொழுதடையும்வரையும் சாப்பிடாமலிருந்து, பிறகு வாய்க்கு ருசிகரமல்லாத போசனத்தைச் சாப்பிடுவார்கள்.

### XI. லெந்தின் முதல் நாளாகிய புதன்கிழமை.

இதற்கு உபவாசத்தின் முதல் நாளென்றும், சாம்பல் புதன்கிழமையென்றும் இரண்டு பெயர் உண்டு. லெந்தென்னும் நாட்கள் இதோடுதான் தொடங்குகிறது. இரக்ஷகர் உயிர்த்தெழுந்த சந்தோஷ தினத்தை ஓய்வுநாளில் ஆசரிக்கிறபடியால் அன்று உபவாசம்பண்ணலாகாது. ஆதலால் புதன்கிழமையில் துவக்குகிறோம். 6 வாரங்களில் 42 நாட்கள் உண்டு. இதுகளில்வரும் 6 ஓய்வுநாட்களை நீக்கினால் 36

உபவாச நாட்கள்தான் மீந்திருக்கும். அதுகளோடு புதன்கிழமை முதலான நாலு நாட்களைக் கூட்டினால் சரியாய் 40 நாளாகும்.

இரண்டாவது. இந்த நாளில் வழக்கமாய் நடக்கிற ஒரு காரியத்தினின்று இதற்கு சாம்பல் புதனென்று பெயர்வந்தது. அதென்னவென்றால் சபைக்கு புறம்பாக்கப்படத்தக்கவர்கள் இந்த நாளில் இரட்டுடுத்து வெறுங்காலோடு பூமியைப் பார்க்கிறவர்களாய் கண்காணியாருக்குமுன்பாக கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் உண்மையாய்த் துக்கப்படுகிறார்களோவென்றறிய அத்தேசத்து விசேஷித்த குருமாரும் அங்கே வந்திருப்பார்களாம். இவர்கள் அவர்களைக் கோவிலுக்குள் அழைத்துப்போன பிறகு, கண்காணியாரும் மற்ற ஐயன்மாரும் கண்ணீரோடு பாவ அறிக்கை அடங்கிய 7 சங்கீதங்களைச் சொல்லுவார்கள். செபத்திலிருந்தெழுந்த பிறகு அவர்கள்மேல் சாம்பலை எறிந்து இரட்டினால் அவர்கள் சிரசை மூடி, அழுகையோடும் பெருமூச்சோடும் ஆதாம் பரதீசிலிருந்து தள்ளப்பட்டதுபோல இவர்களும் சபையினின்று தள்ளப்படவேண்டும் என்பார்கள். கண்காணியார் அவர்களை கதவுக்கப்பால் தள்ளும்படிக்கு கோவில் வேலைக்காரருக்குச் சொல்லுவார். குருமார் எல்லாரும் உன் நெற்றியின் வேர்வையால் உன் அப்பத்தைப் புசிக்கக்கடவாயென்று ஆதாமுக்குக் கூறப்பட்ட சாபத்தைச் சொல்லிக்கொண்டே அவர்கள் பிறகாலே போவார்கள். மறு ஓய்வுநாளில் இராப்போசனம் நடக்கும்பொழுதும் இப்படியே செய்வார்களாம். தங்கள் குற்றத்தினால் சபையில் உண்டாகும் ஒழுங்கீனங்களைப் பார்க்கும் இந்தக் குற்றவாளிகள் தாங்கள் மனந்திரும்புவதைக்குறித்து லேசாய் நினையாதபடி இப்படிச் செய்வார்கள்.

---

## Communicant's Companion.

## நற்கருணை விளக்கம்.

### ௬. அதிகாரம்.

### தியானமும் ஜெபமும் இந்தப் பந்தியைச் சேர்பவர்களுக்கு அவசியம்.

(1) மனுஷனுடைய பாவ நிலைமை. அதினால் விளைந்த கேடு;
(2) மனுஷனுடைய ஈடேற்றத்தில் விளங்கிய தேவ இலக்ஷணங்கள்;
(3) நம்முடைய மீட்பர், அவர் கையிட்டுக்கொண்ட காரியம்;
(4) அவர் பட்ட பாடுகள்;
(5) அவரது தற்கால மகிமை;
(6) புதிய உடன்படிக்கைக்குரிய ஐசுவரியம்;
(7) பரிசுத்தவான்களின் ஐக்கியம்;
(8) மோக்ஷ பாக்கியம், இந்த விஷயங்களைப்பற்றித் தியானிக்கவேண்டும்.

### II. ஜெபத்தைப் பற்றி.

சாக்கிரமெந்துக்குமுன் நாம் ஜெபம்பண்ணவேண்டுவதேன்? என்



னத்துக்காக ஜெபம்பண்ணவேண்டும்? நாம் ஜெபம்பண்ணவேண்டிய காரியங்கள் நாலுண்டு. ஜெபமும் தியானமும் தேவபக்தருக்கு நித்தமுமிருக்கவேண்டிய முயற்சியாம்.

தியானமானது நமக்குள்ளே சம்பாஷித்துக்கொள்ளுகிறதும், ஜெபமானது தேவனோடே சம்பாஷிக்கிறதுமான காரியமாம். இதைவிட நமக்கேற்றதும் பலனைத் தரத்தக்கதுமான சம்பாஷணை வேறெது? இந்த முயற்சியில் எப்போதும் பழக்கப்பட்டவர்களுக்குக் கர்த்தருடைய பந்தியைச் சேருஞ் சமயத்திலும் இயல்பும் இனிமையுமான முயற்சியாய் காணப்படும்.

நம்முடைய விசுவாசம் ஸ்திரப்படவேண்டியதற்கும், அன்பு கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருப்பதற்கும் தியான முயற்சி செய்வது அவசியம்.

தியானமானது எப்போதும் முயற்சித்துக்கொண்டிருப்பது என்று சொன்னோம், அது யதார்த்தந்தான். உலகத்தார் அற்ப நன்மையை வருவிக்கத்தக்க விஷயங்களில் இரவும் பகலும் முயற்சிப்பார்கள். அளவற்ற ஐசுவரியத்தை வருவிக்கத்தக்க விஷயத்தில் கிறிஸ்தவன் எத்தனைக்கு அதிகமாய்த் தன் மனதைப் பரவசப்படுத்தவேண்டியதுண்டு. வேதத்தில் தனக்குப் பிரயோசனமுள்ள ஒரு பங்கைத் திரும்பத் திரும்ப வாசித்து அதைத் தன் நிலைமைக்கேற்றதாக்கிக்கொள்வதிலும் தான் கேட்ட பிரசங்கங்களையும் தான் வாசித்திருக்கும் மற்றப் புஸ்தகங்களிலுள்ள பொருட்களைத் தியானிப்பதிலும் தன் மனதைச் செலுத்தலாம்.

ஆவியின் அனலால் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருப்பதும் தியானமென்று சொன்னோம். ஒன்றைக் குறித்து யோசித்துக்கொண்டிருப்பது மாத்திரம் போதாது. அந்தப் பொருளினால் நமக்கு வரும் மெய்ப்பலனை நினைப்பதினால் நம்முடைய இருதயம் கொழுந்துவிட்டெரியவேண்டும். நம்முடைய இருதயம் இவ்வகையாய்ப் பரவசப்பட்டுக் கிறிஸ்துவின் அன்பாகிய அக்கினிக்கொழுந்தினால் இளகி அவருடைய பந்தியைச் சேரும்படிக்கான சில குறிப்புகளைப் பார்ப்போம்.

(1) மனுஷனுடைய பாவ நிலைமையையும், அதினால் விளையும் நிர்ப்பந்தத்தையும் பற்றித் தியானிக்கவேண்டும்.

இரண்டாம் ஆதாமாகிய இயேசுக்கிறிஸ்துவினாலுண்டான மீட்பின் மாட்சிமையுஞ் சிறப்பும் இன்னதென்றறியவேண்டுமானால், முதலாம் ஆதாமினால் வந்த பாவக்கேட்டின் ஆழ நீள அகல உயரமின்னதென்றறிவது அவசியம். உலகத்துக்கு அது எவ்வளவு துன்பத்தைக் கொண்டுவந்திருக்கிறதென்று பாருங்கள். செழிப்பான தோட்டம்போன்ற இந்த உலகம் எப்படி வனாந்தரமாய்ப்போச்சுது. "ஐயோ பொன் மங்கி பசும்பொன் மாறிப்போயிற்றே." மனுஷன் எத்தனைக்குக் கறைப்பட்டுச் சீர்கெட்டுப்போனான். தேவ சாயல் அழிந்து, பசாசின் சாயல் அதற்குப் பதிலாகப் பதிக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். அவன் புத்தியின் கண் குருடாக்கப்பட்டதினால் தேவப்பிரமாணத்தை அறிய சக்தியற்றவனாயிருக்கிறான். அவனுடைய விருப்பம் கெட்டுப்போனதினால் பரத்துக்குரிய காரியங்களை விரும்புவதை விட்டுவிட்டு இகத்துக்குரியவைகளை விரும்புகிறான். அவன் சித்தமும் கறைப்பட்டுப்போயிருப்பதினால், தேவ சித்தத்துக்கு இணங்காமல் தன் மனம்போன போக்கிலே நடக்கிறான். இதெல்லாம் பாவத்தால் வந்த பலன். இவன் சிருஷ்டிப்பில் தேவனுதனா

விடச் சற்றே சிறியவனாகப் படைக்கப்பட்ட இவன் பாவத்தினாலே மிருகங்களுக்குங் கீழானான்.

---

Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௪. அதிகாரம்.

### காயீன் ஆபேல் சரித்திரத்தைக் காட்டியது.

17. ஏவாளைத்தவிர காயீனுடைய மனைவியே வேதத்திற் சொல்லப்படுகிற முதல் பெண்பிள்ளை. ஆதாம் ஏவாளுடைய புத்திரரும் புத்திரிகளும் ஒருவரை ஒருவர் விவாகஞ்செய்திருக்கவேண்டும். மேற்காட்டிய சம்பவங்கள் நடந்து வெகுகாலத்துக்குமுன்னே, காயீன் விவாகம்பண்ணி பிள்ளைகளையும் பெற்றிருந்தானென்று தோன்றும். அதினாலே இந்தப் பட்டணத்தைக் கட்ட அவன் வம்சத்தாரே அதிகத் துணைசெய்து அவனுக்கு முக்கிய குடிகளானார்களென்று நிதானிக்கத்தக்கது. இவ்வகை முயற்சியினாலே தன் மனதை வேறேகாரியத்திற் செலுத்தி தன் மனச்சாட்சியின் வேதனையை நீக்கிக்கொள்ளலாமென்று நினைத்ததினாலோ, சத்துராதிகளுடைய அபாயத்துக்குத் தப்பிக்கொள்ளலாமென்ற எண்ணத்தினாலோ, தான் பத்திமான் என்று பேரெடாததினாலே வேறேவகையாய் உலகத்திற் பேரெடுக்கக் குடிகளைச் சேர்த்துக்கொள்ளலாமென்ற எண்ணத்தினாலோ, ஒரு பட்டணத்தைக்கட்டி, தன் பேர் அபகீர்த்தியாய்ப்போனபடியினாலே அதற்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரையிட்டான். மெய்ப்பத்தர்கள் கூடாரங்களில் வாசம்பண்ணின குறிப்பை வாசிக்கிறோம்.

18. இரண்டு பெண்சாதிகளை விவாகம்பண்ணின லாமேக்கை இனங்காட்டும்படி வைதிக சரித்திரக்காரன், காயீன் வம்சவரிசையைக் கொஞ்சஞ் சொல்லுகிறான். ஆனால் ஸ்திரீயின் வித்தைக்குறித்து, சேத்தின் வம்சவரிசையை நோவாமட்டும் விசேஷித்தவகையாய்க் காட்டுவதுபோல் அதைக் காட்டவில்லை.

19. "இரண்டு ஸ்திரீகள்" ஆதி விவாக ஏற்பாட்டை மீறினதாகச் சொல்லப்படுகிறவர்களில் லாமேக் முதல்வன். பூமி அதிகமாய்க் குடியேற்றப்பட்டு சனங்கள் பெருகினபின்தான் இது நடந்தது.

20—22. லாமேக்கின் பிள்ளைகள் உலக வித்தைகளில் பேரெடுத்ததாக வாசிக்கிறோம். ஆனால் ஒருவனாவது பத்திமானாயிருந்ததாகக் காணோம். பித்தளை, இரும்பு முதலிய லோகங்கள் ஆதியிலேயே பிரயோகிக்கப்பட்டதைப் பார்த்தால், இவைகளைப்பற்றி தேவன் ஆதாமுக்குக் கொஞ்சம் அறிவித்திருக்கவேண்டுமென்று தோன்றும்.

தூபால் காயீனை கம்மாளர் தெய்வமாகிய வல்க்கன் என்றும், நாமாளை வீனஸ் என்றும் அழைத்து அஞ்ஞானிகள் இவர்களை வணங்கினதாக சாஸ்திரிகள் நினைக்கிறார்கள். நாமாள் என்பதற்கு அழகி என்றர்த்தம்.

23—24. லாமேக் ஒருவனைக் கொன்றுபோட்டதினாலே இவனைப்



பழிவாங்கிப்போடுவார்களென்று அவன் பெண்சாதிகள் பயந்து கலங்கியிருந்ததாகத் தோன்றும். அவர்களை ஆறுதல்படுத்த இந்த வார்த்தைகளைப்பேசுகிறான்.

"எனக்குக் காயமுண்டாக" என்னை முதலாவது காயப்படுத்தினதினாலே, அல்லது என்னைத் துப்புவிசாரிப்பிக்க "ஒரு மனுஷனை......ஒரு வாலிபனைக் கொலைசெய்தேன்." இரண்டு பேரையல்ல, ஒருவனைத்தான் கொலைசெய்தான். இது எபிரேயுப் பாஷையில் பாட்டாயிருக்கிறபடியினாலே இப்படிச் சொல்லியிருக்கிறது. ஆதாளே சில்லாளே கேளுங்கள், லாமேக்கின் மனைவிகளே செவிகொடுங்கள் என்பது இரண்டுக்கு அதிகமான பேரைக் குறிக்கமாட்டாதே.

"காயீனுக்காக ஏழு பழி சுமருமானால்," முகாந்தரமில்லாமல் அநியாயமாய்த் தம்பியைப் பொறாமையினாலே கொன்ற காயீனைப் பழிவாங்காமல், அவனைக் கொல்லுகிறவனுக்கு தேவன் பயங்கரமான சாபமிட்டிருக்கிறாரே. "லாமேக்குக்காக எழுபத்தேழு பழி சுமரும்." என்னை முதலாவது தாக்கவந்தவனை நான் கொன்றதற்காக என்னைப் பழிவாங்குகிறவனுக்கு, காயீனைக் கொல்லுகிறவனைப்பார்க்கிலும் அதிக தண்டனை வரும், நீங்கள் பயப்படவேண்டாம் என்பதுபோல் சொல்லுகிறான்.

25. "ஆபேலுக்குப் பதிலாக" பத்தியுள்ள ஆபேலைக்குறித்துக் கவலையாய்ப் பேசுவது ஏவாளுடைய பத்திக்குக் குறிப்பென்று சொல்லப்படும்.

"சேத்து என்று பேரிட்டாள்." ஆதாமும் ஏவாளுங் கூட இருந்துதான் இந்தப் பேரிட்டார்கள். 5: 3. பார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்து இவன் வழியில் தோன்றுவார் என்று தேவன் ஏவாளுக்கு அறிவித்திருப்பார். அதினாலேதான் பதில் அல்லது நியமித்தல் என்று அர்த்தமுள்ள இந்தப் பேரை இட்டாள்.

26. "ஏனோஸ்" நிர்ப்பந்த மனுஷன் என்று அர்த்தம்.

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்." கூட்டங்கூட்டமாக, வெளியரங்கமாய்த் தொழுதுகொள்ளத் தலைப்பட்டார்கள் என்று அர்த்தம். இதற்குமுன் அவரவர் வீடு முதலிய இடங்களில் ஆராதித்திருப்பார்கள்.

கர்த்தருடைய நாமத்தைத தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள் என்ற வார்த்தைகளை கர்த்தருடைய நாமத்தினாலே தங்களை அழைத்துக்கொள்ளத் துவக்கமாயிற்று என்றும் திருப்பலாம். அப்பொழுதும் பொருள் ஒன்றுதான். சிலபேர் கூடி மெய்மார்க்கத்தைக்குறித்து வெளியரங்க அறிக்கைசெய்து தங்களைச் சூழ்ந்திருக்கிற துன்மார்க்கர், அவபத்திக்காரர் இவர்களோடு சேராமல், தங்களை தேவ புத்திரர், தேவ ஊழியக்காரர், தேவனைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் என்று சொல்லி, தேவ நாமத்தால் தங்களை அழைத்துக்கொண்டுவந்தார்களென்று அர்த்தமாம்.

### படிப்பினை.

தேவ வாக்குத்தத்தங்கள் குறிக்கப்பட்டகாலத்தில் எவ்விதத்திலும் நிறைவேறும். ஆனால் நாம் ஆத்திரப்பட்டக்கூடாது. ஆத்திரப்படுகிறவர்கள் அடிக்கடி ஏமாற்றப்படுவார்கள். 1. வா.—தேவ நியமிப்பினாலேமாத்திரம் தேவனாலே அங்கிகரிக்கப்படலாம். 4, 5. யோவா. 6: 29.—கொலைபாதகன் தேவனோடு எதிர்த்து நின்று உம்முடைய ரூபத்தை அழித்துப்போடுகிறேன் பாரும் என்று அவரை நிந்தாட்

சனைசெய்கிறவனுயிருக்கிறான், பழி ஒருவனையும் விடாது. நம்முடைய செய்காரியங்களில் நாம் ஒருவிசை தவறிப்போனால், சஞ்சலத்துக்கும் குரோதத்துக்கும் இடங்கொடுக்கக்கூடாது. இருக்கப்பட்ட பிழையைக் கண்டுபிடித்து உணரவேண்டும். அல்லாவிட்டால் அவை நமக்குள்ளே முற்றிப்போய் நம்மையும் பிறரையும் கொல்லும்படி ஏவிவிடும்.—மனிதர் தங்கள் கேட்டை உணர்ந்து சீர்ப்படாதபடி உலகத் தொழில்கள் தடைசெய்கிறது. 16—22.—முதற் பட்டணம் பொல்லாத காயீன் வகையராக்களாலே கட்டப்பட்டது. "இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிகப் புத்திமான்களாயிருக்கிறார்கள்."—உலகத்தில் எங்கே பார்த்தாலும் பலிசெலுத்தப்படுவதைக் காணலாம். இது நம்முடைய வேதத்தில் காட்டிய ஏற்பாட்டிலிருந்துதான் இறங்கி வந்திருக்கிறது. ஆனால் முதலில் செலுத்தப்பட்ட நோக்கத்தையும் அர்த்தத்தையும் உலகத்தார் மறந்துவிட்டார்கள். லாமேக் 2 பெண்சாதிகளை வைத்துக்கொண்டது தேவவசனத்துக்கு முழு விரோதமாயிருக்கிறதல்லாமலும் உலக இயல்புக்கும் விரோதமாயிருக்கிறது. உலகத்தில் ஆண்பிள்ளைகளுக்கு அதிகமான பெண்பிள்ளைகளில்லை.

---

## ரு. அதிகாரம்.

### ஆதிமுதல் நோவா வரையுமுள்ள வம்ச வரலாற்றைச் சொல்லியது.

1. "ஆதாமின் வம்ச வரலாறு." ஆதாமின் பிள்ளைகள் எல்லாருடைய வம்ச வரலாற்றையுங் காட்டவில்லை. மேசியா பிறக்கப்போகிற வம்சத்தின் கொடிவழிச் சாபிதாவைமாத்திரங் காட்டுகிறார். இதில் ஆதாமுதல் சலப்பிரளயம் வரையுமுள்ள மெய்ப் பக்தர்களுடைய சரித்திர சுருக்கக் குறிப்புகள் அடங்கியிருக்கின்றன.

"அவனைத் தேவ சாயலாக உண்டாக்கினார்" என்பது முதலிய முதல் 2 வாக்கியங்களில் அடங்கிய விபரங்கள், முதலாம் அதிகாரத்திலே தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்க, இவ்விடத்தில் மறுபடியுஞ் சொல்லவேண்டியதென்னவென்றால் ஆதாமும் அவன் சந்ததியாரும் ஒரேவகையாயுண்டானவர்களல்ல என்பதைக் காட்டவே.

2. "அவர்களுக்கு மனுஷன் என்றுபேரிட்டார்." மனுஷன் என்பதற்கு செம்மண் என்றர்த்தம். இது ஆதி மனுஷனான ஆதாமுக்குப் பேராயிருக்கிறதுமாத்திரமல்ல, 2: 23. மனுஷ ஜாதியாரெல்லாருக்கும் பேராயுமிருக்கிறது. ஆதாமுடைய சரீரம் சிவப்பு மண்ணினால் உண்டாக்கப்பட்டபடியினாலே அதிலிருந்து இந்தப் பேர் வந்தது.

3. "ஆதாம் நூற்றுமுப்பது வயதானபோது," அதாவது, அவன் சிருட்டிக்கப்பட்டதுமுதல் 130 வருஷமானபோது பிள்ளைப் பெறத் துவக்கினான். 1. வி. வாசி.

"தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று." தன் பாவச் சாயலின்படி என்று அர்த்தம். கிறிஸ்துவைத்தவிர சேத்தின் சந்ததியாருடைய குணமும் நடபடிகளும் அவன் எந்தச் சாயலின்படி பிறந்தான் என்பதைத் தெளிவாய் ருசுப்படுத்துகிறதே.

ஆதாமும் ஏவாளும் பாவமன்னிப்படைந்து, மறுபடியும் பரிசுத்தரானார்களென்று பொதுவாக ஒத்துக்கொள்ளப்படுகிறது. அப்படி



யானால் அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்ட சாயலின்படியல்லவோ சேத்தைப் பெற்றிருக்கவேண்டும் என்றால், அப்படியல்ல. ஏனென்றால் தேவன் அவனோடு பண்ணின உடன்படிக்கையை அவன் மீறுகையில் அவன் பின்னடியாருக்குப் பொதுவான தகப்பனும் உடன்படிக்கையின் தலைவனுமாயிருந்ததுபோல, அவன் தேவகிருபையினாலே சீர்ப்பட்டுப் பரிசுத்தவானானவகையில் அப்படியிருந்ததில்லை. இது விளங்கும்படி மறுபடியுஞ் சொல்லுகிறேன். 2: 17. வி. சொல்லியபடி ஆதாம் கிரியை உடன்படிக்கையின் தலைவனாயிருந்தானே, அந்த உடன்படிக்கை அவனோடு பண்ணப்பட்டபோதும், அதை அவன் மீறும்போதும், உலகத்தாரெல்லாரும் அவன் அரையிலிருந்தபடியால் அந்த மீறுதலுக்கு எல்லாரும் பங்காளிகளானார்கள். ஆனால் அவன் கிருபை உடன்படிக்கைமூலமாய்ப் பரிசுத்தமாக்கப்பட்டாலும் அதற்கு அவன் தலைவனாயிருக்கவில்லை. இந்த உடன்படிக்கைக்கு இயேசுக்கிறிஸ்துவே தலைவரும் மத்தியஸ்தருமாயிருக்கிறார். ஆகையால் தான் அவராலே விசுவாசியாகப் பெற்ற தன்மையை தன் பின்னடியாருக்கு அளியாமல், தான் பாவியாயிருந்த தன்மையினாலேயே தன் மகனைப் பெற்றான்.

இந்த வாக்கியத்தில் இன்னொரு காரியமும் கவனிக்கத்தக்கது. தன் சாயலின்படி பெற்றானென்று முந்திப் பிறந்த காயீனைக்குறித்துச் சொல்லாமல், பக்தியிற் சிறந்த சேத்தைக்குறித்துச் சொல்லியிருக்கிறதேனென்றால், காயீனுடைய துர்நடக்கைக்கும், ஆபேல் சேத் முதலான நல்லோருடைய நன்னடக்கைக்கும் அவர்கள் பிறப்பு காரணமல்ல என்பதைக் காட்டவே பிறப்பின்படி அவர்களெல்லாரும் ஒன்றுபோல பாவிகள்தான். தேவ கிருபைதான் அவர்களை வித்தியாசப்படுத்தினது.

4. ஆதாமுடைய பிற்காலத்தின் 800 வருஷ சரித்திரமும் அவனுக்குப் பிறந்த மற்றக் குமாரர் குமாரத்திகளுடைய சரித்திரமும் மேசியாவோடேயாவது, பின் சரித்திரத்தோடேயாவது சம்பந்தப்படாததினாலே வைதிக சரித்திரக்காரன் அதைக் காட்டவில்லை.

---

## Farewell Address to the Rev. E. Sargent, by the Mission Agents and Congregation of the Palamcottah District.

கனம்பொருந்திய எட்வார்ட் சார்சந்தய்யரவர்கள் தேகசுகத்துக்காக சீமைக்குப் போய்வரும்படி சென்றமீ 13௳ புறப்பட்ட சமயத்தில் பாளயங்கோட்டைச் சேகரம் சுதேசபோதகன்மார், உபதேசிமார், சபையார் முதலியவர்கள் எழுதி வாசித்த வந்தன பத்திரமும்; அதற்கு கனம்: ஐயரவர்கள் கொடுத்த மாறுத்தரமும்.

மிகவும்சங்கிக்கப்படத்தக்ககனம்பொருந்திய

எட்வார்ட் சார்ஜென்றய்யரவர்கள்

சமுகத்துக்கு:

அன்புள்ள போதகபிதாவாகிய ஐயாவே!

தாங்கள் எங்களைவிட்டுச் சிலகாலம் பிரிய நேரிட்டிருக்கிற இந்த

ருணத்தில் இதுவரை தங்களால் நாங்கள் பெற்றுவந்திருக்கிற நன்மைகளில் சிலவற்றை யெடுத்துக்கூறி, நன்றியறிதலோடும் தாழ்மையோடும் எங்கள் வந்தனத்தை தெரிவிப்பது எங்கள் கடமையேயன்றி வேறல்லவென்றுணர்ந்திருக்கிறோம்.

ஏறக்குறைய 34 வருஷங்களாக தாங்களிப்பிரதேசத்தில் தேவஊழியத்தை எவ்வளவோ சிரத்தையோடும் விடாமுயற்சியோடும் நடப்பித்து வந்திருக்கிறீர்கள்.

இந்தச் சேகரமானது, 1850-ம் வருஷம் முதல் தங்கள் விசாரணைக்குள்ளிருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறது. இந்தச் சபையின் பத்தி விர்த்திக்காக தாங்கள் செய்துவந்திருக்கிற அருமையான பிரசங்கங்களையும், ஏற்படுத்தியிருக்கிற ஜெபக் கூட்ட முறைகளையும்; அறிவு விர்த்திக்கேதுவாக தாங்கள் செய்திருக்கிற முயற்சிகளையும், பள்ளிக்கூட விஷயங்களில் தாங்களெடுத்துக்கொண்ட பிரயாசத்தையும், ஆண்பிள்ளைப்பிள்ளைகளுக்கென்று ஒரு போர்டிங்ஸ்கூல் ஸ்தாபகமாகும்படி தாங்கள் செய்த தயவையும் நாங்கள் மறக்க ஏதுவில்லை. இந்த ஸ்தானத்திலுள்ள இங்கிலீஷ் சபையின் விசாரணை, கல்விச்சாலை யலுவல், மிஷியோனைச் சார்ந்த பலவித சங்கத்துக்கடுத்த காரியங்களிவையெல்லாமிருந்தும், சபையின் வளர்ச்சிக்கேதுவாக தங்களால் செய்யக்கூடிய சகாயங்களையெல்லாம் அலுப்பற்று, தாங்கள் செய்துவந்தீர்களென்பதற்குப் போதத்த அத்தாட்சிகளுண்டு. எங்களுக்குள் குறைவுகள் காணப்படுங்காலத்தில் தாங்கள் ஆயாசப்பட்டும், இளக்கரித்துப்போகாமல், நாங்கள் நற்சீர்பொருந்துவதற்குரிய வழி வகைகளைப் பொறுமையுடன் ஏற்படுத்தியதற்காக மிகவும் நன்றியறிந்தவர்களாயிருக்கிறோம்.

ஏறக்குறைய இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன் தாங்கள் இந்தச் சேகரத்தை ஒப்புக்கொண்டபோது இச்சபையிருந்த நிலையையும், நாளதில் அது அடைந்திருக்கிற விர்த்தியையுந் தேர்ச்சியையும் நாங்கள் கவனிக்கும்போது எங்கள் இருதயம் நன்றியறிதலாலுந் தேவஸ்துதியாலும் பொங்குகிறது. அப்போது இந்தச் சேகரத்தில் கிறிஸ்தவர்களுள்ள கிராமங்கள் 17 மாத்திரமிருந்தன. இப்போதோ கிறிஸ்தவர்கள் வாசஞ்செய்கிற 59 கிராமங்களிந்தச் சேகரத்திலுண்டு. அப்போது ஞானஸ்நானம்பெற்ற கிறிஸ்தவர்களின் தொகை 662. இப்போதோ அவர்கள் தொகை 3,111. முன் கர்த்தருடைய பந்திக்கு வருகிறவர்கள் தொகை 109. இப்போது அவர்கள் தொகை 714. முன்னிந்தச் சேகரத்திலுள்ள தேவஊழியக்காரர் 17 பேர். இப்போதோ சுதேச குருக்கள் உள்பட 72 பேர் தேவஊழியத்தை நடப்பித்துவருகிறார்கள். முன் இந்தச் சேகரத்தில் 11 பள்ளிக்கூடமாத்திரமிருந்தன. இப்போதோ 39 பள்ளிக்கூடங்களுண்டு. முன் 272 ஆண்பிள்ளைகளும் 73 பெண்பிள்ளைகளும் பள்ளிக்கூடத்தில் படித்துவந்தார்கள். நாளதில் 1,125 ஆண்களும் 318 பெண்களும் கல்விகற்றுவருகிறார்கள். அப்போது இந்தச் சேகரத்து சங்கவருமானம் மிகவும் சொற்பமாயிருந்தது. நாளதில் வருஷம் ஒன்றுக்கு பல சங்கங்களுக்காகவும் சபையாரால் ரூ. 3,200 வரையும் கொடுக்கப்படுகிறது.

இந்த ஜில்லாவில் சற்றே அதிக சபையுள்ள இடங்களில் சுதேச பாஸ்றர்கள் நியமிக்கப்படும்படி தாங்கள் பலத்த கருவியாயிருந்ததும், அப்படியே இந்தச் சேகரத்தில் ஆள்வாநேரி, மணற்காடு, திருநெல்வேலி, ஆழைக்குளம் இந்த இடங்களில் பாஸ்றர்கள் ஏற்படுத்தப்பட்டு, சபைகளுக்கு மெத்த அநுகூலமாக ஞானஸ்நானம்,



திராப்போசனம் முதலிய பத்திக்குரிய கிரியைகள் அந்தந்த இடத்திலேயே நடந்துவரும்படியாக கர்த்தர் தங்களைக்கொண்டு செய்தமான நன்மைகளை நாங்கள் ஒருக்காலும் மறக்கத்தக்கதல்ல. இவ்வேற்பாடு நிலைபெறும்பொருட்டு, சீமைக் கமிட்டிமார் விருப்பப்படி, சுதேச சபைச் சங்கம் ஒன்று தங்களால் நியமிக்கப்பட்டு சித்திபெற்று வருகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள புறமதஸ்தர்கள், விசேஷமாய் இந்துக்கள் சுவிசேஷத்தை அறியவும் அதை அநுசரிக்கவுந் தாங்கள் செய்துவருகிற முயற்சிகளையும் விசேஷமாய் அஞ்ஞானம் நிறைந்த திருநெல்வேலிப் பட்டினத்தின் மத்தியில், சுவிசேஷ பிரபல விர்த்திக்கு அநுகூலமாய் இங்கிலீஷ் பள்ளிக்கூடம் ஒன்று நூதனமாய் ஸ்தாபித்த முக்கிய செய்கையையும் நாங்கள் உணராதவர்களல்ல.

இடையிடையே திரோனிங் கல்விச்சாலை, சேராற்றக்கர் கல்விச்சாலை, அச்சுக்கூடம், சுவிசேஷபுரஞ் சேகரம், டோனாவூர்ச் சேகரம் இவைகளைப்பற்றிய பொறுப்பான வேலைகளும், வேதாகம மொழிபெயர்ப்புக்கடுத்த முக்கியமான அலுவலும் நேரிட்டிருந்தும், எங்கள் சேகரத்துக்கடுத்த காரியங்கள் யாதொரு தவக்கமுமின்றி, சகலமுங் கிரமமாய் நடந்தேறும்படி தாங்கள் சலியாமுயற்சியுடையவர்களாயிருந்தீர்கள்.

தங்கள் பிரயாசத்தால் கல்விச்சாலையிலிருந்து எங்கள் நாட்டுக்கும், சென்னைபட்டினம், இலங்கை, மொரீஸ் ஆகிய அந்நிய திசைகளுக்கும் மிஷியனரிகள், பாஸ்றர்கள், உபதேசிமார், உபாத்திமார் உண்டாயிருக்கிறார்கள். தாங்கள் விசாரித்துவருகிற தமிழ்த் தரும சங்க ஏற்பாட்டினால் சபைக்கடுத்த அநேக நன்மைகள் விளைந்திருக்கின்றன. கைம்பெண் சங்கமானது தங்களின் முக்கிய சிரத்தையால் அச்சங்கத்தைச் சேர்ந்த அநேக விதவைகளுக்கும் திக்கற்ற பிள்ளைகளுக்கும் மிகுந்த ஆறுதலையும் நன்மையையுங் கொடுத்துவருகிறது. தாங்கள் எழுதிப் பிரசுரஞ் செய்த அருமையான புஸ்தகங்களால் கிறிஸ்தவர்களுக்கும் புறமதஸ்தர்களுக்கும் சத்திய வழியும் பத்தியின் வயனமும் துலங்கியிருக்கிறது. இவ்விதமாய் நாங்கள் மாத்திரமல்ல, தங்கள் பிரயாசத்தின் பலனை யனுபவித்துவருகிற எங்கள் நாடுங்கூட இந்தச் சமயத்தில் தங்களுக்கு நன்றியறிதலோடு வந்தனஞ் சொல்லத்தக்கதே.

கனம் அம்மாளவர்கள் தங்கள் நன்மாதிரியினாலுந், ஜெபக்கூட்டங்களாலும், சிறு பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்குந், ஜெபமும் வேதகியானமுமே முக்கிய அலங்காரமென்றுணர்த்தி, ஏழை ஸ்திரீகளுக்கு உபகாரஞ்செய்து, அவர்களுக்கு அன்புடன் நல்லுபதேசம் புரிந்து, இவ்விதமாய் எங்கள் பெண்பிள்ளைகளுக்கு சட்டமாகத் தங்களைக் காண்பித்துவந்த அன்பை நினைத்து, அவர்களுக்கும் இச்சமயத்தில் தாழ்மையாய் நன்றியறிதலோடு வந்தனஞ் சொல்லுகிறோம்.

தாங்கள் எங்கள்பேரில் வைத்திருக்கிற அன்பையும் பட்சத்தையும் உணர்ந்தவர்களாய், எங்களுக்கு தங்கள்பேரிலுள்ள அருமைக்கும் பெருமைக்கும் ஓர் அடையாளமாய் நாங்கள் இச்சமயத்தில் தாழ்மையாய்ச் சமர்ப்பிக்கிற ஞாபகார்த்தத்தை தயவாய் ஏற்றுக்கொள்ள வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அருமையுள்ள எங்கள் ஐயாவே! தாங்கள் சுகவீனத்தால் எங்களை விட்டு சிலகாலம் பிரிய நேரிட்டிருப்பது எங்களுக்கு மிகுந்த வியாகுலத்தைக் கொடுக்கிறது. ஆகிலும் சிலகாலம் தான் என்பது எங்க

லைத் தேற்றரவுசெய்கிறது. சர்வஜீவ காருண்யரான நமது பரமபிதா தங்களோடும் கனம் அம்மாளவர்களோடும் தங்கள் போக்கிலும் வரத்திலும் இருந்து, யாத்திரைகளில் யாதொரு விக்கினமுமின்றிப் பாதுகாக்கவும், தாங்களும் கனம் அம்மாளவர்களும் மீளவும் எங்கள் நடுவில் வந்து முன்போலவே திவ்விய ஊழியத்தை ஊக்கமாய் நடத்துவதற்கு வேண்டிய சகல சகாயங்களையும் நற்சுகத்தையும் தீர்க்க ஆயுசையுங் கிருபையாய் அனுக்கிரகிக்கவும் வேண்டுமென்று நாங்களனைவரும் உட்கருத்தாய், அத்தியந்த பணிவாய் அவர் திருப்பாதங்களில் விழுந்து மன்றாடுகிறோம்.

1872-௵
மார்ச்சு௴ 13௳
பாளையங்கோட்டை.

இங்ஙனம் தங்களின்
நன்றியறிதலும் கீழ்ப்படிதலுமுள்ள,

| | |
|---|---|
| ஏசுதாசன் யோவான் ஐயர். | ஞானப்பிரகாசமுவா. |
| ம. பெரியநாயகம் ஐயர். | சிலுவைமுத்துவா. |
| லூக்கா சீமேயோன் ஐயர் | தேவசகாயமுவா. |
| ஜே. சாமுவேல் ஐயர். | கா. பவுலுவா. |
| ஆ. ஆசீர்வாதம்பிள்ளை. | இயோசேப்புவா. |
| வே. சுவாமிக்கண் உப. | பாக்கியமுத்துவா. |
| வேதமாணிக்கம் உப. | ஆபிரகாமுவா. |
| தெய்வநாயகம் உப. | ஸ்தேவானுவா. |
| குருபாதமுப. | சவரிராயவா. |
| தாவீதுப. | பரமசிவன்பிள்ளை. |
| இயாக்கோபுப. | தா. தாவீது உவா. |
| சாமுவேலுப. | ஐயாறு நாயனார்பிள்ளை. போலீஸ் இன்ஸ்பெக்டர். |
| அருளானந்தமுப. | வி. இராயப்பபிள்ளை, |
| முத்துசுவாமி உப. | லா. தெய்வநாயகம்பிள்ளை. |
| பவுலுவா. | பி. ஜெகனையா நாயுடு. |
| மாசில்லாமணி உவா. | ஜெ. மாசில்லாமணி பிள்ளை. |
| இயோவானுவா. | எஸ். ஞானப்பிரகாசம். |
| வேதமுத்துவா. | பா. சத்தியநாதன் வாத்தியார். |
| மணியம் முத்தையபிள்ளை. | ந. முத்து வாத்தியார். |
| கணக்கு சங்கரநமசிவாயம்பிள்ளை. | தாவீது பேதுரு பிள்ளை. |
| சுவாமியடியானுடையான். | மாசில்லாமணி ஹெட் கன்ஸ்டேபில். |
| பாக்கியம் பைண்டர். | மா. தெய்வநாயகம் பிள்ளை. |
| ஞானக்கண் கம்பாஸ்ற்றர். | ந. இராஜநாயகம் பிள்ளை. |
| ஏசுவடியான் கம்பாஸ்ற்றர். | ந. முத்தையபிள்ளை. |
| கா. தானியேல். | தச்சநல்லூர் மிக்கேல் உபதேசி. |
| சந்தோஷம் கம்பாஸ்ற்றர். | காபிரியேல் முனிஷி. |
| எ. ஞானசிரோமணி பிள்ளை. | |

(இன்னும் வரும்.)



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.** மகாராஜாத்தியவர்களை கைத்துப்பாக்கியால் சுடவெத்தனித்த ஒகானர் என்பவன் குற்றம் விசாரிக்கப்பட்டு இருபது அடிபடவும் சிறைச்சாலையில் ஒரு வருஷம் வேலைசெய்யவும் தீர்ப்புப்பெற்றான். அவன் பைத்தியகாரனென்று காட்டும்படி சிலர் நியாயங்களைச் சொல்லியும் ஒவ்வவில்லை. மேயோ பிரபுவின் பிரேதம் இங்ஸ்டௌன் என்னும் இடத்தில் கரைப்படுத்தப்பட்டு, அடக்கம் செய்ய எத்தனம் நடந்தது. பவனியாய்ப்போன ஜனவரிசை ஒரு மைல் தூரம் எட்டிற்று. மார்க்விஸ் லோவர்ன் என்னும் பிரபு மகாராஜாத்தியவர்களுக்குப் பதிலாகப் பவனியிற்போனார். கௌன்டஸ் மேயோ என்னும் பெருமாட்டி மகாராஜாத்தியவர்களுடைய குடும்பத்தில் தோழியாக நியமிக்கப்பட்டார். மேற்படி பெருமாட்டிக்கு அங்கிலோ இந்திய துரைத்தனத்தார் வருஷத்திற்கு பதினாயிரம் ரூபாய் கொடுப்பது போல, மகாராஜாத்தியவர்களுடைய துரைத்தனத்தாரும் பதினாயிரம் ரூபாய் கொடுப்பார்கள். அலபாமா என்னும் கப்பல் விஷயத்தையிட்டு அங்கிலேயருக்கும் அமெரிக்கருக்கும் உண்டான பிணக்கு சீக்கிரம் நீங்குமென்று பிரஸ்தாபிக்கப்பட்டது.

**இந்தியா.** சென்னைக் கவர்னராகிய ஹோபார்ட் பிரபு இன்னும் வந்துசேரவில்லை. பம்பாய்ப் புதுக் கவர்னராகிய ஸ்ரீபிலிப்உட்ஹௌஸ் பிரபு மேமாசாரம்பத்தில் பம்பாய்க்கு வருவார். கவர்னர்ஜெனரலவர்கள் நாளது மாசம் 5௳ கல்கத்தாவில் வந்துசேர்வார்களாம். நப்பியர் பிரபு 13௳ கல்கத்தாவில் கப்பலேறி சென்னைக் கரைபிடித்து சீமைக்குப் போவார். கல்கத்தா சட்ட நிரூபண சபையார் கூடிய கூட்டமொன்றில் வருமானவரி இன்னும் ஏற்படுத்துவதைப்பற்றி அவரவர் கருத்து வெளியிடப்பட்டன. வருமானவரிக்கு சுபக்ஷர் பதினொரு பெயர்; விபக்ஷர் இரண்டு பெயர். ஆதலால் பிரஜைகள் இன்னும் ஒரு வருஷம் இவ்வரி நுகத்தை தாங்கவேண்டியதுதான். ஆகிலும் இனி வருஷவாரி ஆயிரம் ரூபாய் வரும்படியுள்ளவர்களுக்கு மாத்திரம் அவ்வரி யேற்படுத்தப்படும்.

**பாரசீக** தேசத்தில் கலைப்பட்டு ஒழிந்துபோன பஞ்சம் மீண்டும் உண்டானதினால், எஸ் என்னும் பிரதேசத்தில் மாத்திரம் முப்பதினாயிரம் பேரிறந்துபோனார்கள். நாலாயிரம் பெயர் வசித்த ஓரிடத்தில் மூன்று பெயர்மாத்திரம் உயிரோடிருக்கிறார்களாம்.

## நோட்டிஸ்.

மகாகனம்பொருந்திய கண்காணியாரவர்களுடைய வேதப்பரீட்சை 1872-௵ சூலாய்௴ 3௳ புதன்கிழமை 10 மணி முதல் நடக்கும்.

| வாரம் | காலக் குறிப்பு | தமிழ்க் குறிப்பு | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௨௧ | அவர்கள் படுகிற வேதனைகளையறிந்திருக்கிறேன். யாத். 3: 7. |
| வி | 2 | ௨௨ | இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என்சந்நிதியில் வந்தது. 9. |
| வெ | 3 | ௨௩ | நான் உன்னோடே இருப்பேன் என்றார். 12. |
| ச | 4 | ௨௪ | இருக்கிறவராக இருக்கிறேன் என்றுசொன்னார். 14. |
| ஞா | 5 | ௨௫ | கர்த்தரே தேவன் வேறொருவர் இல்லை. 1 இராசா 8: 59. |
| தி | 6 | ௨௬ | உன் விண்ணப்பத்தையும் உன்வேண்டுதலையும் கேட்டேன். 9: 3. |
| செ | 7 | ௨௭ | கர்த்தர் இந்தத்தேசத்துக்கு இப்படிக்குச் செய்ததென்ன? 8. |
| பு | 8 | ௨௮ | உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக. 10: 9. |
| வி | 9 | ௨௯ | மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். சங். 8. 5. |
| வெ | 10 | ௩௦ | தேவரீரோ எங்கள் அக்கிரமங்களை நிவிர்த்தியாக்குகிறீர். 65: 3. |
| ச | 11 | ௩௧ | நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான். 4. |
| ஞா | 12 | ௧ | உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம். 4. |
| தி | 13 | ௨ | எங்களுக்கு நீதியுள்ள உத்தரவு அருளுகிறீர் 5. |
| செ | 14 | ௩ | வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர். 11. |
| பு | 15 | ௪ | தேவனுடைய செய்கைகளை வந்துபாருங்கள். 66: 5. |
| வி | 16 | ௫ | சுரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக. 7. |
| வெ | 17 | ௬ | ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு. பிரசங்கி 3: 1. |
| ச | 18 | ௭ | தேவன் செய்வது என்றைக்கும் நிலைக்கும். 14. |
| ஞா | 19 | ௮ | எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. 20. |
| தி | 20 | ௯ | அவன் கண் ஐசுவரியத்தால் திருப்தியாகிறதில்லை. 4: 8. |
| செ | 21 | ௧௦ | இராசாங்கத்தில் பிறந்து ஏழையானவனுமுண்டு. 14. |
| பு | 22 | ௧௧ | நான் கர்த்தருடையவன் என்பான். ஏசாயா 44: 5. |
| வி | 23 | ௧௨ | நான் முந்தினவரும் நான் பிந்தினவருந்தானே. 6. |
| வெ | 24 | ௧௩ | என்னைத்தவிர தேவனில்லையென்று கர்த்தர்சொல்லுகிறார். 6. |
| ச | 25 | ௧௪ | என்னைவெறுத்துவிலகிப்போகிறார்கள். ஓசியா 7: 14. |
| ஞா | 26 | ௧௫ | திரும்புகிறார்கள் ஆனாலும் உன்னதமானவரிடத்திற்கல்ல. 16. |
| தி | 27 | ௧௬ | உங்களில் தேவ அன்பு இல்லை. யோவான் 5: 42. |
| செ | 28 | ௧௭ | நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. 43. |
| பு | 29 | ௧௮ | இதோ சீக்கிரமாய் வருகிறேன். வெளிப்படுத்தல் 22: 7. |
| வி | 30 | ௧௯ | காலம் சமீபமாயிருக்கிறது. 10. |
| வெ | 31 | ௨௦ | நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். 11 |

## விசேஷித்த நாட்கள்.

5. உயிர்த்தெழுந்தபண்டிகைக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு.
7. அமாவாசை.
9. கிறிஸ்து பரமண்டலத்துக்கேறின நாள்.
12. கிறிஸ்து பரமண்டலத்துக்கேறின நாளுக்குப்பின் வரும் ஞாயிறு.
19. பரிசுத்தாவியின் பண்டிகையாகிய ஞாயிறு.
23. பௌரணமி. பாரிசசந்திரகிரகணம் காலை 4மணிக்குமேல்.
26. திரித்துவத்தின் பண்டிகையாகிய ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

162004

Vol. 24. June. No. 6.

## Contents:

Bible Sketches and their Teachings. ... ... ... ... 102
Christian Church History. ... ... ... ... ... ... 103
The Parables of Christ. ... ... ... ... ... ... 105
A Family Commentary on the Sermon on the Mount. ... 108
On the Liturgy. ... ... ... ... ... ... ... ... 110
Notes on Genesis. ... ... ... ... ... ... ... 112
Farewell Address to the Rev. E. Sargent (Continued.) ... 115
Summary of News. ... ... ... ... ... ... ... 119

## அட்டவணை:

பாலபோதனை. ... ... ... ... ... ... ... ௧௦௨
கிறிஸ்து சபை சரித்திரம்.... ... ... ... ... ௧௦௩
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... ௧௦௫
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... ௧௦௮
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ... ௧௧௦
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... ௧௧௨
கனம். சார்ஜென்று ஐயரவர்களுக்கு வந்தன பத்திரம்
(தொடர்ச்சி.) ... ... ... ... ... ... ௧௧௫
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௧௯

Palamcottah:
Printed and Published at the Church Mission Press,
by L. Devanayagam Pillay.
1872.

# நற்போதகம்.

௫. ஜூன்மீ. ௲அஎஉ௵.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### வேவுகாரர் பிரயாணம்.

4 மோசே 13. 14. அதிகாரங்கள்.

(தொடர்ச்சி.)

அவர்கள் புறப்படுகிறதைச் சற்று யோசிப்போம். அவர்கள் தடிகள் கைகளிலிருக்கின்றன. தோள்களில் தோல்துருத்திகள் கிடக்கின்றன. உடுப்புகளைத் தூக்கிவைத்து இறுக்கிக் கட்டியிருக்கிறார்கள். சிறிதுகாலமாய்ச் சாப்பிட்டுக்கொண்டுவந்த மன்னாவையே கடைசி விசையாய்ச் சாப்பிடுகிறார்கள். நாளைக் கானான்தேசத்தில் வேறு வகையான சாப்பாடு சாப்பிடுவோம் என்ற நம்பிக்கையாயுமிருக்கிறார்கள். அவர்கள் போகிற பயணம் மகா மோசமுள்ளது. தாங்கள் இன்னாரென்றும் இன்ன நோக்கமாய் வந்தவர்களென்றும் தேசத்துச் சனங்கள் அறிந்துகொள்ளாதபடிக்கு அவர்கள் எவ்வளவோ எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அவர்கள் புறப்படுகிறதற்குமுன்னே, மோசேயோடு வெகுநேரம் பேசிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் எவ்விதமாய் நடந்துகொள்ளவேண்டுமென்று மோசே அவர்களுக்கு விவரமாய்ச் சொல்லுகிறான். பேச்சு முடிந்தவுடனே, எங்கேபார்த்தாலும் சலாம் சலாம் என்று சொல்லுகிற சத்தமும் சுகமேபோய்வாருங்கள் என்கிற சத்தமுமாகவேயிருக்கிறது. பயணக்காரர் நடந்து தூரப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாய் மறைந்துபோகிறவரையில், சனங்கள் கூடாரவாசல்களிலும், வழிநெடுகவும், மரங்களுக்குக் கீழும், அகன்ற அம்மைதானத்திலுள்ள திரடுதிட்டைகளில் ஏறியும் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து அவர்களைப் பார்த்தகண்ணாய் நிற்கிறார்கள். அப்பொழுது ஒருவேளை ஒருவன் வேறொருவனைப் பார்த்து இப்படிச் சொன்னாலும் சொல்லியிருப்பான். “ஆ நாம் யோசித்துக் கண்டுபிடித்தவகை எவ்வளவு நேர்த்தியானது. இந்த விசையாவது மோசேயைப்பார்க்க நாம் விவேகிகளல்லவா? உடனே ஏதிப்போகும்படிக்குச் சொன்னானே. இப்பொழுதோ நாம் கானான்தேசத்துக்குள்ளே போகப் புறப்படுகிறதற்கு முன்னதாகவே அதைப்பற்றி சகலத்தையும் அறிந்துகொள்ள ஏதுவிருக்குமே” என்பதுபோல அவர்கள் ஒருவரோடொருவர் பிதற்றிக்கொண்டிருந்தாலுமிருக்கலாம்.

ஆ, அருமைப் பிள்ளைகளே! அகங்காரமும் முரட்டாட்டமுமுள்ள அந்தச் சனங்கள் இவ்வாறு தங்கள் கெட்டிக்காரத்தனத்தை மெச்சிப் புகழ்ந்துகொண்டு நிற்கையில், “உங்களில் ஒருவராவது கானான் தேசத்தில் கால்மிதிக்கப்போவதேயில்லை. நீங்கள் இனநாம் எத்தனை வருஷம் உயிரோடிருந்தபோதிலும் நீங்கள் சாகிறவரையில் வனாந்த



ரமே உங்கள் வீடாயிருக்கும்” என்று ஒருவன் அவர்கள் காதுகளில் மெள்ளச் சொல்லியிருப்பானாகில், அவர்கள் ஆச்சரியப்படாதிருப்பார்களோ? என்றாலும் தேவனை நம்பிக்கொண்டிருக்க அவர்கள் மனமில்லாதவர்களாய் தங்கள் இஷ்டப்படி நடக்கத் தீர்மானித்துக்கொண்டபடியால், இவ்வளவுமாத்திரமல்ல இதற்கு அதிகமான கேடுகளும் அவர்களுக்கு வருகிறதற்கிருந்தது.

கொஞ்சங்குறைய ஆறு வாரம் அல்லது நாற்பது நாள் கழிந்தது. வேவுபார்க்கப்போன பன்னிரண்டு பெயரும் திரும்பவேண்டிய காலமாயிற்று. என்றாலும் அவர்களைக்குறித்து ஒரு செய்தியும் வரவில்லை. அவர்கள் விரும்பினபடிக்கு தேசத்தைச் சுற்றிப்பார்க்க ஏது கிடைத்ததோ, அல்லது தேசத்துக் குடிகள் அவர்களைப் பிடித்துச் சிறைப்படுத்திக் கொன்றுபோட்டார்களோ என்னதோ, இஸ்ரவேலருக்குள்ளே அவர்களைக்குறித்து மிகுந்த எண்ணமும் கலக்கமுமுண்டாகத் தொடங்கிற்று. நாடோறும் ஆயிராயிரமானவர்கள் அழகிய அந்தப் பள்ளத்தாக்கையும் அங்குள்ள மலைகளையும் பார்த்தகண்ணாய் நின்றார்கள். கடைசியிலே “அதோ வருகிறார்கள்” என்றொரு சத்தங் கேட்கிறது. எத்தனையோ பெயர் அவர்களைப் பார்க்கிறதற்கு ஓடுகிறார்கள். “நல்லது நீங்கள் வந்து சேர்ந்தது சந்தோஷம். பார்த்துவந்த செய்தியென்ன?” “சற்று பொறுங்கள், ஆயாசமாயிருக்கிறோம்.” “நல்லது, பாளையத்தில் மோசேயினிடத்துக்கு முதலாவது போவோம்” என்று சொல்லி ஏராளமான சனங்கள் தேவாலயக் கூடாரத்துக்கு நேரே போகிறார்கள். மோசேயும் ஆரோனும் அங்கேயே காத்துக்கொண்டிருக்கிறார்கள். வேவுகாரரில் இரண்டு பெயர் தண்டாயம்போட்டு தோளிற் சுமந்துகொண்டு வந்த திராட்சக் கொலையை எல்லோரும் பார்த்து அதிசயப்படுகிறார்கள். என்ன, திராட்சப் பழம் இவ்வளவு பெரிதாயிருக்குமா! அப்பேர்ப்பட்ட பழத்தை அவர்கள் ஜீவகாலத்தில் என்றுங் கண்டதில்லை. அந்தத் திராட்சக்கொலையைக் கொண்டுபோய் எல்லோரும் பார்க்கத்தக்க ஓரிடத்தில் தூக்கிவைத்துப்போட்டு வேவுகாரர் தாங்கள் கொண்டுவந்த சமாசாரத்தைச் சொல்லத்தொடங்குகிறார்கள். உடனே பேசாதே பேசாதே என்ற சத்தம் எங்கும் கேட்கிறாப்போலிருக்கிறது.

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 12. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

ஓரிஜன் என்பவனுடைய சரித்திரத்தின் பின்பங்கினால் அலெக்சந்திரியாவில் எழும்பியிருந்த துன்பம் தணிந்துபோயிற்று என்றும் தெரியவருகிறது. செபிரனு என்பவன் ரோமாபுரிக் கண்காணியாயிருந்த காலத்தில் அதாவது, கி. பி. 218-ம் ௵த்துக்குமுன்னதாக ஓரிஜன் அந்நகரிக்குப் போயிருந்தான். அவ்வளவு புராதனமான சபை

யைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையினாலே அவன் போனதேயல்லாமல் வேறல்ல. கி. பி. 213-ம் வருஷம்போல அவ்விடத்துக்குப் போயிருப்பான். அவன் அலெக்சந்திரியாவுக்குத் திரும்பினவுடனே அவனிடத்திற் போதனையடைந்தவர்களுடைய தொகை மிகுதியும் அதிகரித்துவிட்டதனால், அவர்களில் புதிசானவர்களைத் தன்னிடத்திற் பத்து வருஷமாய்க் கல்விகற்றவனான ஏரக்கிளா என்பவனிடத்தில் ஒப்புவித்துவிட்டு, தேறினவர்களுக்குமாத்திரம் தான் கல்விப்போதனைசெய்துகொண்டு மீதியான காலத்தை வேத ஆராய்ச்சியிலே பின்னிட்டுவந்தான். அஞ்ஞானிகளிலும் அநேகர் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டுவந்ததல்லாமலும், லௌகிக ஞானத்தை மாத்திரமடைகிறோம் என்று எண்ணிக்கொண்டிருக்க, அவர்கள் நினையாதவிதமாய்ச் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவும் ஏவப்பட்டார்கள். ஓரிஜனுடைய கீர்த்தி அலெக்சந்திரியாவுக்குள்ளேயே அடங்கியிருக்கவில்லை. அரபிதேசத்து இராசன் ஒருவன் அவ்விடத்துக் கண்காணியாருக்கும், எகிப்துதேசத்தை விசாரித்துவந்த ரோமதேசாதிபதிக்கும் நிருபங்கள் எழுதி, தனக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப் போதிக்கும்பொருட்டு ஓரிஜனை அனுப்பிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஓரிஜன் அவ்வாறே அனுப்பப்பட்டுப் போயிருந்தான். இதினால் துரைத்தனத்தாராலே இப்பொழுது கிறிஸ்தவர்களுக்குத் துன்பமில்லையென்று திட்டமாய் அறிந்துகொள்ளலாமே. மேலும் ஓரிஜன் போயிருந்த இடத்தில் கிறிஸ்துமார்க்கப் பிரபலியத்துக்கு அவனால் மிகுந்த அனுகூலமுண்டாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் கிறிஸ்துமார்க்கம் அப்பொழுதுதான் முதல் விசையாய் அரபியாவுக்கு வந்ததென்று நினைக்கவொண்ணாது. பந்தேனு என்பவன் இருபது வருஷத்துக்குமுன் போயிருந்தானே அந்தச் சீமை இதாகவேயிருந்தாலுமிருக்கலாம். இந்த நூற்றாண்டிலே அரபிதேசத்தில் பல சபைகள் அமைந்திருந்ததாயும் அவைகளை விசாரிக்கப் பல கண்காணிமார் நியமிக்கப்பட்டிருந்ததாயும் வாசிக்கிறோம். மேற்படி கண்காணிமார்களில் ஒருவன் ஹிப்போலுத்து என்று பெயர்கொண்டவன். அவனிருந்தது இந்தக் காலத்தில்தான். அவன் மகா கல்விமான். அநேக நூல்களும் எழுதினவன். மேற்படி நூல்களில் இரண்டொன்றுமாத்திரம் தற்காலத்திலிருக்கின்றன.

இந்தப் பெயர் உடைய நூலாசிரியர் பலர் இருந்ததாகத் தோன்றுகிறது. ஒருவன் எழுதின நூலை வேறொருவன் எழுதினதாகச் சொன்னாலும் சொல்லுகிறதாயிருக்கும். அவர்களில் ஒருவன் திபர் நதியின் கழிமுகத்திலிருந்த போர்த்து என்ற பட்டணத்துக்குக் கண்காணியாயிருந்தானும். அதினால் அரபிதேசத்து இப்போலுத்து என்பவன் அவ்விடத்தைவிட்டு இத்தாலிதேசத்திற்போய் வசித்தானென்று சொல்வாருமுண்டு. ஆகிலும் அவ்விரண்டு இடங்களிலும் கண்காணிகளாயிருந்தவர்கள் வெவ்வேறு பேர்களென்றும் அவ்விருவரும் இப்போலுத்து என்ற ஒரே நாமத்தைப்பெயருடையவர்களாயிருந்தார்களென்றும் நினைப்பதே தகுதி. இப்பொழுதிருக்கிற நூல்கள் அரபியில் கண்காணியாயிருந்தவனும் இந்நூற்றாண்டில் அவ்விடத்துக்குப் போயிருந்த ஓரிஜனோடு சம்பாஷித்தவனுமாகிய இப்போலுத்து எழுதினவைகளென்றுதான் பெரும்பாலும் சொல்லப்படுகிறது.

ஓரிஜன் என்பவன் கி. பி. 215 க்குமுன் அலெக்சந்திரியாவுக்குத் திரும்பியிருப்பானாகில், கரக்கல்லா இராயனுடைய நிஷ்டூர நடபடிக்கையினால் குறித்த வருஷத்திலேயே அவன் அவ்விடத்தைவிட்டு துர



த்திவிடப்பட்டான். ஆனாலும் கிறிஸ்தவர்கள் இக்காலத்தில் அவ்வளவு விசேஷமாய்த் துன்பத்துக்குள்ளாகவில்லை. சனங்கள் பொதுவாய் இராயனுடைய துர்நடத்தையையும் முக்கியமாய் அவன் தன் தம்பியைக் கொலைசெய்வித்ததையும் குறித்து பழிப்பாய்ப்பேசி அவனுக்குக் கோபமூட்டியிருந்தார்கள். அலெக்சந்திரியாப் பட்டணத்துக் குடிகளில் ஏராளமானவர்களைக் கொலைசெய்விக்கும்படியாய் இராயன்தானே அவ்விடத்துக்குப் போயிருந்தான். அவனுடைய கெட்ட நடபடிகளைப் பகிரங்கமாய்க் கண்டித்துப்பேசின எல்லாரையும் பிடித்து ஆக்கினைசெய்திருப்பானாகில் கிறிஸ்தவர்கள் தப்பியிருப்பார்களென்று நினைக்க இடமிருக்குமோ! மதாசாரத்தினிமித்தம் அவன் நிஷ்டூரம் நடப்பித்தவனல்ல. மார்க்கபேதங்களைப்பற்றிக் கொஞ்சமென்கிலும் கவலைப்படாதபடியால், தேவாலயங்களையெல்லாம் பகிரங்கமாய்க் கொள்ளையிட்டதாகச் சொல்லியிருக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு இக்காலத்தில் செபாலயங்களில்லாமல் அவரவர் வீடுகளிலே கூடிவந்து தேவாராதனைமுதலியது நடப்பித்துவந்ததினால், அஞ்ஞானிகளைப்போல கிறிஸ்தவர்களுக்கு அதிகமான நஷ்டம் நேரிடாதிருந்தாலுமிருந்திருக்கலாம். இராயன் தேவாலயங்களைக் கொள்ளையிட்டது அவற்றிலுள்ள பொக்கிஷங்களைக் கவர்ந்துகொள்ளும் நோக்கமாகவே செய்திருக்கும். அது உள்ளதென்றால் கொஞ்சக்காலத்துக்கு முன்னே தங்கள் பொருளையெல்லாம் இழந்துபோன கிறிஸ்தவர்களை இராயன் அவ்வளவாய்க் கவனிக்கிறதற்கு இடமிருந்திராது. என்றாலும் கிறிஸ்தவர்களும் முற்றும் தப்பிக்கொள்ளவில்லை. அவர்களில் அநேகர் ஒருவேளை துன்பம்வருமுன் வேறு இடங்களுக்குப் போய்விடுகிறது உத்தமமென்று யோசித்து அப்படி ஓடிப்போயிருந்தாலுமிருக்கலாம்.

## The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### IX-வது. திராக்ஷத்தோட்டத்தில் வேலைசெய்தவர்களைக் குறித்து.

மத். 20: 1—16.

(தொடர்ச்சி.)

சாயங்காலத்தில் திராக்ஷத்தோட்டத்தின் எசமான் தன் காரியக்காரனை நோக்கி, நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள்முதல் முந்திவந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்கு கூலி கொடு என்றான். அந்தச் சாயங்காலத்திலேயே கூலிகொடுக்கச் சொன்னான். இது அவர்கள் நியாயப்பிரமாணத்தின் சட்டம். அவன் வேலைசெய்த நாளிலே அவன் கூலியை அவனுக்குக் கொடுப்பாயாக. சூரியன் அதின்மேல் அஸ்தமிக்கவேண்டாம். ஏனெனில் அவன் ஏழையும் அதின்மேல் மனவாஞ்சையுமாயிருக்கிறான். 5 மோ. 24: 15. 3 மோ. 19: 13. யோபு 8: 2. மல்கி 3: 5. யாக். 5: 4. தோபியா 4: 14. கிறிஸ்துவானவர் தான் காரியக்காரன் அல்லது மேல்விசாரணைக்காரன். தேவனு

டைய வீட்டின்மேல் எல்லாம் விசாரிப்புக்காரன். எபி. 3: 6. யோ. 5: 27. மத். 11: 27. இராஜ்யத்தின் பொக்கிஷம் அவர் கையிலிருக்கிறது. பலனைப் பகிர்ந்துகொடுக்கிறவர் அவர்தான். கடைசியில் வந்த வேலைக்காரர் முந்தி கூலி பெற்றார்கள். கூலி இவ்வளவென்று அவர்களோடு பேசாவிட்டாலும் சரியாய், ஒரு பணம் வாங்கினார்கள். தேவனுடைய ஊழியத்தில் இளமையில் பிரவேசிக்கிறவர்களுக்கு பெரிய அனுகூலம் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கு பெரிய ஆசீர்வாதம் கிடைக்குமென்று வேதவசனம் சொல்லுகிறது. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய முழு இருதயத்தோடும் முழுப் பெலத்தோடும் ஊழியஞ்செய்ய ஏவப்படுகிறார்கள். தங்களுடைய ஊழியம் ஏற்றுக்கொள்ளப்படுமோ என்பதைப்பற்றிச் சந்தேகம் வேலையில் உற்சாகத்தையல்ல தளர்ச்சியையே உண்டாக்கும். அப்படிப்பட்ட சந்தேகத்தை நீக்குகிறதற்கு உவமையின் இந்தப் பங்கு மிகவும் ஏற்றது. அவர்கள் நம்பிக்கையோடு உழைக்கட்டும், கிறிஸ்துவிலேயும் அவர் இராஜ்யத்திலேயும் அவர்கள் பங்குபெறுவார்கள்.

இடையில் வந்தவர்களும் ஒரு பணம் வாங்கினார்களென்று நிச்சயிக்கலாம். முந்திவந்தவர்கள்தான் தங்களுக்கு அநியாயம் செய்ததாக எண்ணி முறுமுறுத்தார்கள். முந்திவந்தவர்கள் சோம்பலாயிருந்தார்களென்றும், பிந்திவந்தவர்கள் பவுல் அப்போஸ்தலனைப்போல 1 கொரி. 15: 10. அதிக சாக்கிரதையாய் அவர்கள் ஒரு நாளில் செய்ததை ஒரு மணி நேரத்தில் முடித்தார்களென்றும் சொல்லுவதற்கு உவமையில் போந்த ஆதாரமில்லை. மேலும் இந்த வியாக்கியானம் உவமையின் முக்கிய கருத்தைக் கெடுத்துப்போடும். மற்றவர்களைவிட அதிகமாய் உழைத்தும் பிரயாசப்பட்டும் இன்னும் தள்ளப்பட்டுப்போகலாம். முந்தினவர்கள் பிந்தினவர்களும், பிந்தினவர்கள் முந்தினவர்களுமாகலாம் என்பதுதான் உவமையில் இரக்ஷகர் கொண்ட விசேஷித்த கருத்து. முந்தினது நமது புத்திக்கு இசைவானது. ஒருவன் ஒரு நாளில் செய்கிற வேலையை இன்னொருவன் ஒரு மணி நேரத்தில் செய்தால் இருவருக்கும் கூலி சமமாய்க் கொடுக்கிறது நியாயந்தானே? சாதாரணமான இந்த நியாயத்தை உறுதிப்படுத்த இரக்ஷகர் ஒரு உவமை சொல்லவேண்டிய அவசரமில்லையே. இது அவருடைய கருத்தானால் அது சரிதானென்று காட்ட இந்த நியாயத்தை எடுத்துச்சொல்லாமல்போகமாட்டாரே. உவமையின் கருத்தோ பலன் கடனாகவல்ல, கிருபையினால்தான் வரவேண்டும் என்று காட்டச் சொல்லப்பட்டது. மற்றவர்கள் சொல்லுகிற கருத்தை கண்டிக்கத்தான் உரைக்கப்பட்டது. தல்மூதில் ஒரு உவமையுண்டு. ஒரு இராசன் அநேகம் வேலைக்காரரைவைத்து வேலைவாங்கினதாகவும், அவர்களில் ஒருவன் தன் வேலையைச் செம்மையாய்ச் செய்ததாகவும், அவனை எசமான் கூப்பிட்டு அவனோடு இங்குமங்கும் உலாவிக்கொண்டுதிரிந்ததாகவும், சாயந்தரத்தில் மற்றவர்களுக்குக் கூலிகொடுத்தபொழுது இவனுக்கும் சரியானபடி கூலிகொடுத்ததைக் கண்டு, இரண்டு மணி நேரமாத்திரம் வேலைசெய்தவனுக்குச் சரியாய்க் கூலி கொடுத்தீரென்று முறுமுறுத்ததாகவும், எசமான் அவர்களைப்பார்த்து நீங்கள் ஒருநாள் முழுவதும் செய்த வேலையைவிட அவன் இரண்டு மணி நேரத்தில் அதிகஞ் செய்தானென்று சொன்னதாகவும், மற்றவர்கள் 100 வருஷமாய் நியாயப்பிரமாணத்தைக் கற்றதைவிட 28 வருஷத்தில் அதிகம் கற்ற பான் என்னும் ரபியைக் குறித்துச்சொல்லியிருக்கிறது. மத்தமதவும் இப்படிக்கொத்த ஒரு உவ



மையைச் சொல்லியிருக்கிறான். காலை, மதியம், சாயந்தரத்தில் வந்தவர்கள் யூதர்கள், கிறிஸ்தவர்கள், மகமதியர் என்றும், கடைசியில் வந்தவர்கள் முந்தினவர்களைவிட இரட்டத்தனை பலன் அடைந்தார்களென்றும் சொன்னபிறகு, இதற்கு வியாக்கியானமாகக் கூட்டிச் சொல்லுகிறதென்னவென்றால், அவர்களுக்கு இரண்டு பணம் கொடுத்து எங்களுக்கு ஒரு பணமாத்திரம் கொடுத்தீர்களே என்று யூதரும் கிறிஸ்தவர்களும் முறுமுறுப்பார்களாம். அப்பொழுது கர்த்தர் அவர்களைப் பார்த்து, உங்களுக்குக் கொடுக்கவேண்டியதைக் குறைத்தேனோவென்று அவர் கேட்பாராம். அவர்கள் இல்லை என்பார்களாம். அவர்களுக்குக் கொடுத்தது எனது கிருபையின் பெருக்கு என்பாராம். நம்முடைய உவமையை மகமதியர் இப்பொழுதும் எடுத்துக்காட்டி, தங்களுடைய மார்க்கத்தைப்பற்றி இரக்ஷகர் அதில் பேசுகிறதாகச் சொல்லுகிறார்கள். கடைசியில் வந்தவர்கள் மற்றவர்களைப்போல கூலி வாங்கினபோது, வீட்டெசமானை நோக்கி பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலைசெய்தார்கள், பகல் முழுவதும் வெயிலில் வருத்தப்பட்ட எங்களுக்கு இவர்களைச் சமானமாக்கினீரோ என்று முறையிட்டார்கள். வருத்தம் என்கிற வார்த்தை சில இடங்களில் பயிர் வகைகளுக்கும் மனுஷனுடைய சீவனுக்கும் கூட அபாயத்தை உண்டாக்குகிற விஷக் காற்றைக் குறிக்கும். ஓசே. 13: 15. பிந்திவந்தவர்கள் கொஞ்ச நேரமாத்திரம் வேலைசெய்ததுமல்லாமல், அவர்கள் வேலையில் பிரவேசித்தபோது சாயந்தரநேரம். குளிர்ந்தவேளை அதிக வருத்தமிராது. நாங்களோ நல்ல மதியத்தில் வருத்தத்தோடு வேலைசெய்தோம் என்கிறார்கள். இதில் ஒரு விகற்பமிருக்கிறது. ஒன்று இவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கவேண்டும். அப்படியானால் அவருக்கு விரோதமாய் முறுமுறுத்து மற்றவர்களைக்குறித்து பொறாமையடையமாட்டார்களே. அல்லது இவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல. அப்படியானால் அவருடைய திராட்சத்தோட்டத்தில் நாள்முழுதும் வேலைசெய்து நித்தியசீவனாகிய பலனைக்குறிக்கும் அந்தப் பணத்தையும் அவர்கள் வாங்கிக்கொண்டுபோனது எவ்விதம்? உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டுபோ என்பதை உனக்குரிய தண்டனையை, உன் பெருமைக்கும் திருப்தியில்லாமைக்கும் உரிய நியாயமான தண்டனையை நீ வாங்கிக்கொண்டுபோ என்று அருத்தம்பண்ணுகிறது போதாது. வேறு சிலர் இந்தக் குற்றத்தை நீக்க இவ்வுலகத்தில் கேவலஸ்தராய் எண்ணப்படுகிற சிலர் நாம் எதிர்பாராதவிதமாய் மகிமையின் இராஜ்யத்தில் பங்கடைவதைப்பார்த்து ஆச்சரியத்தோடு பேசுவதை இது குறிக்கும் என்கிறார்கள். ஆனால் இது திருப்தி இல்லாமையாய்ச் சொல்லப்படுகிறது. கர்த்தரும் இதை அதிகமாய்க் கண்டித்திருக்கிறார். ஆகையால் இது உதவாது. மகிமையின் இராஜ்யமாகிய மறுமையில் இதற்குச் சரியானது நடக்கமாட்டாது. பழைய மனிதன் நடமாடுகிற கிருபையின் இராஜ்யமாகிய இந்த உலகத்திலேதான் இவ்வித முறுமுறுப்புகள் காணப்படும் என்று சொல்லுகிறதுதான் சரியான கருத்து. ஒன்றுக்கொன்று விகற்பமாயிருக்கிறவைகளைக் கொண்டு கர்த்தர் போதிக்கிறார். இங்கே காட்டியிருக்கிற கெட்ட ஆவி பாவமாக அருவருக்கப்படத்தக்கதென்று நீங்கள் அறிவீர்களே. மகிமையில் நிறைவான அந்த இராஜ்யத்தில் இந்தக் குணம் காணப்படாதே. இப்பொழுது அது உங்களிடத்தில் தலைகாட்டும்பொழுது அதை அடக்கப்பாருங்கள். தேவனைவிட்டு அதிகமாய்ப் பின்வாங்கிக்

கெட்டுப்போனவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் உங்களோடு சமமாய் எண்ணப்பட்டு, நீங்கள் அநுபவிக்கிற சலாக்கியங்களில் பங்குபெறும்பொழுது அவர்களைக்குறித்து மொறுமொறுக்க சுத்தமாய் இடங்கொடாதேயுங்கள். அல்லது உங்களைப்போல அதிகமாய்த் துன்பங்களைச் சகிக்கவும் பிரயாசப்படவும் கிருபைபெறாதவர்களைப் பார்த்து அசட்டைசெய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் செய்ததைக்குறித்து பெருமைபாராட்டக்கூடாது. தேவனிடத்தில் எதையாவது பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற பாத்தியமில்லை. அவர் இரக்கமாய்க் கொடுக்கிற சகலத்தையும் தாழ்மையாய்ப் பெற்றுக்கொண்டு, மற்றவர்களைப்போல நாங்களும் கிருபையினால்தான் இரக்ஷிக்கப்படுகிறோம் என்று அறிக்கையிடுங்கள் என்று எச்சரிப்பதுபோலிருக்கிறது. இந்த உவமை கெட்ட குமாரனுடைய உவமையோடு முக்கியமாய் மூத்த மகனைப்பற்றிய பங்கோடு ஒத்திருக்கிறது. அவர்கள் பகலில் வருத்தத்தோடு வேலைசெய்தார்கள். இவன் தகப்பனுக்கு அநேக வருஷமாய் வேலைசெய்தான். 11 மணிக்கு வந்தவர்கள் தங்களுக்குச் சமமாக்கப்பட்டதைக் கண்டு மொறுமொறுத்தார்கள். கெட்ட குமாரனை வீட்டில் சேர்த்துக்கொண்டதைக்கொண்டு இவன் மொறுமொறுத்தான். திராட்சத்தோட்டத்தின் எசமான் அவர்கள் காட்டின கெட்ட குணத்துக்காக அவர்களைக் கடிந்துகொண்டார். தகப்பனும் இவனுக்குப் புத்திசொன்னான்.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 6: 22, 23.

(தொடர்ச்சி.)

"கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் சீருள்ளதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் சீர்கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளுள்ளதாயிருக்கும். இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால் அவ்விருள் எவ்வளவாயிருக்கும்."

நம்முடைய இரட்சகர் இவ்விடத்தில் நமது சரீரத்துக்குரிய புலன்களில் ஒன்றைக்கொண்டு மகத்தானதும் மூலாதாரமானதுமாகிய ஒரு வேத சத்தியத்தைக்குறித்து நமக்கு உபதேசிக்கிறார். அவர், கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது, உன் கண் சீருள்ளதாயிருந்தால் உன் சரீரமுழுவதும் வெளிச்சமுள்ளதாயிருக்கும் என்கிறார். அதாவது, கண்ணிலிருக்கிற வெளிச்சத்தைக்கொண்டு முழுச் சரீரமும் நடத்தப்படுவதால், கண் சீருள்ளதாகவும் சரியான பார்வையுள்ளதாகவுமிருந்தால், அதின் வெளிச்சத்தினால் வரும் பிரயோசனம் சரீரமுழுமைக்குமுண்டாகும். சரீரமுழுவதையும் நடத்துகிற அவயவமாகிய உன் கண் சீர்கெட்டதாயிருந்தால், உன் சரீரமுழுவதும் இருளுள்ளதாயிருக்கும். இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால் அவ்விருள் எவ்வளவாயிருக்கும்.

நம்முடைய இரட்சகர் இங்கே மனிதனுடைய ஆத்தும நிலைமையைக்குறித்துப் பேசுவதால் இதைக்கொண்டு அவர் நமக்குச் சொல்வதென்னவென்று கவனிப்போமாக. சரீரமுழுவதையும் நடத்துவது கட்புலனாயிருப்பதுபோல, இருவினைக்குரிய முழு மனிதனையும் நடத்தும் ஒரு ஞானப் புலனுண்டு. அதாவது, இது சரி, சரியல்லவென்றும்; இது நிசம், பொய்யென்றும் அறிந்து வித்தியாசப்படுத்துகிற ஒரு புலனுண்டு. அதில்லாமல் நம்முடைய செய்கையானது நல்வினை தீவினையென்று தீர்க்கப்படமாட்டாது. ஒரு மனிதன் தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவிக்கிறவனாகவும், (ஏசாயா 5: 20.) சன்மார்க்கத்தின் சிறப்பை அறியக்கூடாத அந்தகனாகவும் இருந்தால், சத்தியம், நேர்மை, சுத்தம், பரிசுத்தம், வேதம், தெய்வபத்தி ஆகிய இவைகள் அவன் பார்வைக்கு சிறப்பற்றவைகளாயிருக்குமானால் அவனுடைய நடத்தைகள் சன்மார்க்கமுள்ளதாக இருக்கவேண்டுமென்று அவனுக்குச் சொல்வதில் யாதொரு பிரயோசனமில்லை. வெளிக்குச் சன்மார்க்க ஒழுக்கமாகத் தோன்றுகிறவைகளுண்டு. தன்னிலேயே நல்லொழுக்கமும் பிழையற்றதுமான சில காரியங்களை ஒருவன் செய்யலாம். அவைகளை உலகம் புண்ணியமென்று சொல்லும். தேவனோ ஒரு செய்கை நல்லதோ தீயதோ என்பதை அதைச் செய்தவனுடைய மனது சன்மார்க்கமுள்ளதாகவோ துன்மார்க்கமுள்ளதாகவோ, எந்த நிலைமையிலிருக்கிறதோ அந்த நிலைமையைக்கொண்டு நிதானிப்பதால் அவருடைய பார்வையில் அது புண்ணியமல்ல.

எந்தச் செய்கையாவது சரியாய்ச் சொல்லப்பட்டதாக ஒப்புக்கொள்ளப்படவேண்டுமானால் முந்த இருதயமானது மெய்ப் பரிசுத்தத்தை நேசிக்கிறதாக மாறவேண்டும். அறிவின் கண்கள் திறக்கவேண்டும். மனிதனுடைய யுக்தி புத்தி தீட்சணியமடையவேண்டும். வேத சத்தியத்துக்கு விரோதமாயிருக்கிற சுபாவக் குருட்டாட்டமும் தப்பெண்ணமும் நீங்கவேண்டும். ஆவிக்குரிய காரியங்களைக் கிரகிக்கும் திராணியுண்டாகவேண்டும். இல்லாவிட்டால் மனிதன் தனக்கு யுக்தி புத்தியுண்டென்று எவ்வளவாய்ச் சொல்லிக்கொண்டு திரிந்தபோதிலும் ஆவிக்குரிய காரியங்களில் இருட்டிலே தடவிக்கொண்டு திரிகிறவனாயிருப்பான். ஒரு குருடனும் தற்செயலாய் சற்றுநேரத்திற்குச் சரியான பாதையில் நடந்துபோகக்கூடும். அதுபோல மனதிருந்தாத மனிதனும் நன்மையும் செம்மையுமாயிருக்கிற சில காரியங்களைத் தற்செயலாய்ச் செய்வான். என்றாலும் அவன் தனக்குத் தெரியாதவிதமாய்த் தப்பிதஞ்செய்வானாகையாலும் அவன் சரீரமுழுவதும் இருளுள்ளதாயிருப்பதாலும் எந்தக்காரியத்தையாவது அவன் சரியாய்ச்செய்வது கூடாதகாரியம்.

பின்வருகிற சில கவனிப்புகளினாலே இதின் பொருள் அதிகத் தெளிவாய் விளங்கும்.

முதலாவது. இதினாலே அநேகர், ஆம் இப்பிரபஞ்ச ஞானிகளும் கல்விமான்களுங்கூட கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அசட்டைசெய்து, அல்லது வேண்டாமென்று தள்ளுகிற காரணத்தை அறிந்துகொள்ளலாம். இரட்சகர் இங்கே சொல்லுகிற ஞான வெளிச்சம் அவர்கள் மனதில் இல்லாததே அதற்குக் காரணம். அவர்கள் தங்களிருதயத்தின் அசுத்தத்துக்கு இணங்கின சில சன்மார்க்க போதனைகளை அல்லது அவர்கள் வேதமென்று சொன்னாலும் சுவிசேஷக் கோட்பாட்டுக்கும் முறைமைக்கும் மிகக் குறைந்த சில முறைமைகளை ஏற்படுத்

திக்கொண்டு அதைத் தங்களுக்கு வேதமாக்கிக்கொள்ளுகிறார்கள். அப்படியே நமது இரட்சகர், "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனிதருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினாலே அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள் (யோவான் 3: 19) என்று சொல்லியிருக்கிறார். சுவிசேஷத்தை மொத்தமாகவாவது அதிலுள்ள முக்கிய உபதேசங்களையாவது மனிதர் விரும்பாத காரணம், அவர்களுடைய இருதயக் குருட்டாட்டமும் கடின இருதயமும் ஆவிக்குரிய காரியங்களை வகையறுக்கத் திராணியின்மையுமேயல்லாது வேறில்லையென்று வேதந் தீர்ப்பாய்ச் சொல்லுகிறது. அப்படியே ஜென்மசுபாவமான மனுஷனோ, தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பயித்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான் (1 கொரிந்தர் 2: 14) என்றும், தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் (2 கொரிந். 4: 4) என்றும் பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார். அப்படியே அன்பில்லாதவனைக்குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலேயிருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகுமிடமின்னதென்று அறியாதிருக்கிறான் (1 யோவான் 2: 11) என்று சொல்லுகிறார்.

---

## On the Liturgy.

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ரு. அதிகாரம்.

### ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

மூன்றாவது. இந்த சிட்சை அதிகக் கடூரமானதாய்த் தோன்றினாலும் அதிக நன்மை விளைய ஏதுவாயிருந்தபடியால் மற்றச் சபைகளிலும் இந்த வழக்கம் நடந்துவந்தது. நம்முடைய சபையில் அது இல்லாத குறைவைக்குறித்துச் சபையானது துக்கப்படுகிறதுமல்லாமல், அதை மறுபடியும் ஏற்படுத்தும்வரையில் அதற்குப் பதிலாகத் தேவ கோபாக்கினை கூறல் என்னும் ஆராதனையை நடத்திவருகிறது. இதைப்பற்றி பின்பு சொல்லுவோம்.

நாலாவது. சாதாரண காலை மாலை ஆராதனையில் வழக்கமான சங்கீதங்களுக்குப் பதிலாக தாவீதின் பாவ அறிக்கை சங்கீதங்களாகிய 6 சங்கீதங்களை வாசிக்கிறோம். 7-வதை தேவ கோபாக்கினைகூறல் என்னும் ஆராதனையில் சொல்லுகிறோம். இதுகளில் தாவீது செய்த



பாவ அறிக்கை அடங்கியிருக்கிறது. இதுகள் துன்பகாலத்தில் எழுதப்பட்டபடியால், ஆத்தும சரீர சத்துருக்களில் நின்று விடுதலையாகும்படியான விண்ணப்பங்கள் இதிலுண்டு. இந்தக் காரணத்தினிமித்தம் சபையில் இதை அதிகமாய் மதித்துவந்ததுமல்லாமல், பாவத்துக்காக மனஸ்தாபப்படுங் காலங்களுக்கு இவைகள் மிகவும் ஏற்றதாகவும் எண்ணப்பட்டது.

ஐந்தாவது. சுருக்கச் செபம் நம்முடைய செபபுஸ்தகம் சேர்க்கப்பட்டபோது புதிதாய் உண்டானது. நிருப சுவிசேஷ வாக்கியங்கள் பழைய புஸ்தகங்களிலிருந்தெடுக்கப்பட்டது. முந்தினது யோவேல் தீர்க்கதரிசனத்தின் ஒரு பங்கு. இரண்டும் துக்கத்துக்குரிய வெளியரங்கமான குறிப்புகள்மாத்திரம் போதாது, உள்ளான துக்கமும் வேண்டுமென்று காட்டுகிறது.

ஆறாவது. செபபுஸ்தகத்தைச் சேர்த்தவர்கள் இந்த நாளுக்கேற்ற முதலாம், இரண்டாம் பாடங்களை ஏற்படுத்தாமல் விட்டுவிட்டார்கள்.

### XII. லெந்தென்னும் நாட்களில் வரும் ஓய்வுநாட்களைக் குறித்து.

லெந்தென்னும் நாட்களில் வரும் ஓய்வுநாட்களினால் நம்முடைய உபவாசத்துக்கு ஒரு தடை நேரிடாதபடிக்கு அந்தக் கடமைகளுக்குத் திரும்புகிறது எவ்வளவு அவசியமென்று நிருப வாக்கியங்களால் சபையானது நமக்கு ஞாபகப்படுத்துகிறதுமல்லாமல், அன்பில்லாமல் நாம் செய்யும் கடமைகள் வியர்த்தமானபடியால் சுவிசேஷ வாக்கியங்கள் நம்மை இவைகளை முயற்சிக்கும்படிக்கு எழுப்பிவிடத்தக்கதாயிருக்கின்றது. இதற்காக நம்முடைய இரக்ஷகருடைய திருஷ்டாந்தத்தை சபையானது நமக்குமுன் வைக்கிறது. அவர் முதலாம் ஞாயிறு சுருக்க செபத்தில் கண்டிருக்கிறபடி உபவாசித்து பொல்லாங்கனுடைய சோதனைகளை வென்றதுமல்லாமல, மற்றவர்களுக்கு நன்மைசெய்கிறவராயும் சுற்றித்திரிந்தார். இரண்டாம் ஞாயிறு சுவிசேஷவாக்கியத்தில் கண்டிருக்கிறபடி வியாதிஸ்தரை சுகப்படுத்தினார். மூன்றாம் ஞாயிறுக்குரிய சுவிசேஷ வாக்கியத்தில் கண்டிருக்கிறபடி பசியுள்ளவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். நாலாம் ஞாயிறுக்குரிய சுவிசேஷ வாக்கியத்தில் கண்டிருக்கிறபடி தம்மை சபித்தவர்களை ஆசீர்வதித்தார். ஐந்தாம் ஞாயிறுக்குரிய சுவிசேஷவாக்கியத்தில் கண்டிருக்கிறபடி தமக்குத் தீமைசெய்தவர்களுக்கு நன்மைசெய்தார். இதுகளெல்லாவற்றிலும் அவரைப்போலிருக்கவேண்டும். நிருப சுவிசேஷ வாக்கியங்களைப்போல சுருக்க செபங்களும் எல்லா ஞாயிறுகளுக்கும் பழைய செபபுஸ்தகத்திலிருந்தே எடுக்கப்பட்டது. மூன்றினதுமாத்திரம் மார்க்கசீர்திருத்தம் உண்டானபோது புதிதாய் சேர்க்கப்பட்டது. கடைசியானது அம்புரூஸ் என்பவர் செபபுஸ்தகத்தில் பெரிய வெள்ளிக்கிழமைக்குரியதாகவாசிக்கப்பட்டது.

இரண்டாவது. இந்த ஞாயிறுகள் லெந்தில் முதலாம், இரண்டாம் ஞாயிறுகளென்று அழைக்கப்பட்டுவருகிறது. ஈஸ்தருக்கு முந்தின ஞாயிறு, நம்முடைய இரக்ஷகர் எருசலேமில் பவனி பிரவேசித்த போது சனங்கள் குருத்தோலைகளை வெட்டி வழியில் சிதறினபடியால் இதற்கு குருத்தோலை ஞாயிறு என்று பெயர். 6-ம் எட்வார்ட் அரசாண்ட இரண்டாம் வருஷம்வரையில் இதை நினைவுகூரும்படிக்கு இங்கிலாந்திலுள்ளவர்கள் குருத்தோலைகளைக் கொண்டுபோவது வழக்கமாம்.

## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௫. அதிகாரம்.

### ஆதிமுதல் நோவா வரையுமுள்ள வம்ச வரலாற்றைச் சொல்லியது.

(தொடர்ச்சி.)

3. மூர்தின இலக்கத்தில் பிள்ளைப்பெறத் துவக்கினான் என்பதை நீக்கி வாசிக்கவும்.

5. இவ்விடத்தில் சொல்லிய பூர்வத்தார் நெடுங்காலம் ஜீவித்த சங்கதியை அஞ்ஞான சரித்திரக்காரரும் பாரம்பரையாய் எழுதியிருக்கிறார்கள். அந்த ஆதிகாலத்தில் மனிதர் அதிகமாய்ப் பெருகுவதற்கும், எழுதப்பட்ட தேவவசனம் அப்போது இல்லாததினாலே மெய்மார்க்கம் நன்றாய்ப் போதிக்கப்படுவதற்கும் இது அநுகூலமாயிருந்தது.

4—20. எபிரேயு பாஷையிலிருக்கிற இந்த வம்ச அட்டவணையும் இதற்குப் பின்வரும் அட்டவணையும் (11: 10—26.) செப்துவஜின்ட் என்று அழைக்கப்படுகிற கிரேக்குப் பாஷைத் திருப்புதலில் வித்தியாசமாய் எழுதப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் ஆதாமும் இன்னும் (6) மூற்பிதாக்களும் இங்கே காட்டிய குமாரனைப் பெறுமுன் அவர்கள் வயதோடு தனித்தனியே 100 வயதைக் கூட்டி எழுதி அதை அவர்களுடைய பிற்கால வயதிலிருந்து கழித்து மொத்த வயதைச் சரிக்கட்டியிருக்கிறது. இப்படியாக சிருட்டிப்புக்கும் ஜலப்பிரளயத்துக்கும் இடையில் (1656 வருஷம்) சென்றதாக நாம் கணிக்கிற காலத்தோடு (700) வருஷத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இது போலொத்த இன்னும் சில வித்தியாசங்களுமுண்டு. ஜலப்பிரளயத்துக்கும் ஆபிரகாம் பிறந்ததற்கும் இடையில் கொஞ்சங்குறைய (900) வருஷம் அதிகப்பட்டிருக்கிறது. இது வந்த வகையென்ன? எபிரேயு பாஷை இலக்கங்கள் அந்தப் பாஷையின் அட்சரங்களால் அமைந்தது. இது நகல் செய்கிறவர்கள் லேசாய்த் தப்பிதத்துக்குட்படுவதானது. அல்லது அநேகர் நினைக்கிறபடி செப்துவஜின்றைத் திருப்பின யூதர்கள் தங்கள் பூர்வோத்திரத்தை முக்கியப்படுத்தும்படி இப்படி எழுதியிருக்கலாம். எப்படியும் எபிரேயு பாஷையிலிருக்கிற கணக்கே சரியானது. நம்முடைய வேதாகமங்கள் அதிலிருந்து திருப்பப்பட்டதால் அதைப்போல் சரியான கணக்குள்ளதாயிருக்கிறது.

இங்கே சொல்லப்படுகிற மூற்பிதாக்கள் சேத்தைப்போல் தலைப்பிள்ளைகளாயிராமலிருக்கலாம். சரித்திரக்காரன் நோவாவைக் குறித்துக் காட்டும்படி இந்த அட்டவணையை ஆதாமிலிருந்து இவர்கள் வழியாய்க் கொண்டுபோகிறார். விசேஷமாய மேசியாவைக் காட்டும்படி இப்படி எழுதப்பட்டிருக்கிறதென்றும் அறியவும்.

21. "மெத்தூசலா" என்ற பேருக்கு அவன் சாகிறான். (தேவகோபாக்கினையாகிய) அம்பு (வருகிறது) என்றர்த்தமாம். இதினால்



அவன் பிறந்து 969 வருஷத்துக்குப் பின் உண்டான ஜலப்பிரளயத்தைக் குறித்த தீர்க்கதரிசனம் இவனுடைய பேரில் அடங்கியிருந்ததென்று சில கல்விமான்கள் நினைக்கிறார்கள். இவன் ஜலப்பிரளயம் வந்த வருஷத்திலேதான் மரித்தான். "தீங்குநாள் வராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பாரில்லை."

நோவா தவிர ஜலப்பிரளயத்துக்குமுன் ஜீவித்த மற்ற மூற்பிதாக்களெல்லாரும் ஆதாமைக் கண்டு அவனிடத்தில் வேத உபதேசங் கேட்டார்கள். சிருட்டிப்பு, பரதீசு, மனிதர் பாவஞ்செய்தது, ஸ்திரீயின் வித்து வாக்குத்தத்தம்பண்ணப்பட்டது, தேவபத்திக்கும் தேவாராதனைக்குமுரிய பிரமாணங்கள் இவைகளைப்பற்றி அவன் வாயினாலே சொல்ல, லாமேக்வரையும் நேராகவே கேட்டார்கள்.

22. "தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்து" இந்த நீதிப்பிரசங்கியின் சிறந்த பக்தியை எல்லாம் ஒரே வார்த்தையில் அடக்கியிருக்கிறது. இது தேவனுக்கும் மெய்விசுவாசிகளுக்குமிருக்கிற ஞான ஐக்கியத்தைக் காட்டுகிற உபமான வார்த்தை. ஏனோக்கு மற்றவர்களைப்போல பாவியாய்ப் பிறந்தவன்தான். ஆனால் தேவ கிருபையினாலே பாவமன்னிப்படைந்து இயேசுக்கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசத்தினாலே அவரோடு ஒப்புரவாக்கப்பட்டான். தேவாவியால் நடத்தப்பட்டு, உலக பாசங்களினாலே கட்டப்படாதிருந்தான். தேவனை எப்போதும் தனக்குமுன் வைத்துக்கொண்டு அவரைப் பிரியப்படுத்துவதே தன் முழு நோக்கமாக எண்ணி செபத்தோடு பரமசிந்தையாய் நடந்துவந்தான் என்பதே அதின் கருத்தாம்.

"குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்." மிகவும் சிறந்த பரிசுத்த நடக்கைக்கும், தீர்க்கதரிசி அல்லது போதக உத்தியோகத்துக்கும் விவாக நிலைமை ஒத்துவரக்கூடியதுதான் என்பது இதினாலே பிரத்தியட்சமாய் விளங்குகிறது.

"காணப்படாமற் போனான்." மரணமடையாமல் உயிரோடு நடுப்பிராயத்தில் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். எபி. 11: 5, 6. யூதா 14, 15. மனிதர் பாவஞ்செய்யாவிட்டால் எல்லாரும் பாக்கியராய் பரலோக பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்களென்று இதினால் நிதானிக்கலாம். இப்படியாக தேவன் நியாயப்பிரமாணம் கொடுக்குமுன் ஒருவனையும், கொடுத்தபின் ஒருவனையும் சரீரத்தோடு பரலோகத்துக்கு எடுத்துக்கொண்டதை கவனிக்கும்போது, உலகம் நடத்தப்படுகிற முறையில் இரண்டு பெரிய விஷயங்களுக்கு சமமான அத்தாட்சியைக் காண்கிறோம். அதாவது, தேவன் உண்டென்பதற்கும் மறுமை உண்டென்பதற்குமாம்.

29. "நோவா" என்றால் இளைப்பாறுதல் அல்லது தேற்றரவாளன் என்று அர்த்தம். இவனை ஸ்திரீயின் வித்து என்று லாமேக் நினைத்து இந்தப் பேரிட்டதாகச் சொல்லப்படுவதுண்டு. நோவா விசேஷித்த மனுஷனும், மனித ஜாதிக்கு ஆசீர்வாதமுமாயிருந்து கிறிஸ்துநாதருடைய இரட்சிப்பை முன் குறித்த பேழையின் மூலமாய் வித்தை உலகத்திலே காப்பானென்று தீர்க்கதரிசன ஆவியினாலே லாமேக் சொல்லுகிறதாக எண்ணுவது முன்னதிலும் சற்று தெளிவாயிருக்கிறது.

நோவா பயிர்செய்யும் வித்தையில் தேறி, சுளுவான வழிவகைகளைக் கண்டுபிடித்து, முன்னிருந்த வருத்தத்தை லகுவாக்கினானென்று பொதுவாக நினைக்கப்படுகிறது.

32. நோவா 500 வயதானபோது பிள்ளைப்பெறத் துவக்கினான்.

“சேம்” என்பதற்கு நாமம் என்றர்த்தம். எல்லா நாமத்துக்கும் மேலான நாமமுடையவர் இவன் சந்ததியில் தோன்றினதினாலே இது ஏற்ற பேர்தான். இவன் நோவாவுக்கு இரண்டாம் குமாரன். எப்படித்தெரியுமென்றால், “சலப்பிரளயமுண்டாகி இரண்டு வருஷத்துக்குப் பின்பு” இவனுக்கு வயது நூறுதான். 11:10. பின்னை ஏன் இவனை முந்திச் சொல்லியிருக்கிறதென்றால், மேற்காட்டியபடி கிறிஸ்துநாதருடைய வம்சவரிசை இவன் வழியாய்ச் செல்வதனாலும், பூர்வ திருச்சபை இவன் சந்ததியிலிருந்துண்டானதினாலும், சரித்திரக்காரன் இவன் வித்தாருடைய சரித்திரத்தையே முக்கியமாய் எழுதப்போகிறதினாலும் மேன்மைக்காக இவன் பேரை முதலில் சொல்லுகிறான்.

“காம்” மூன்றாம் குமாரன். 9. 24.

“யாப்பேத்” முதலாம் குமாரன். 10: 21.

## படிப்பினை.

சிருட்டிப்புமுதல் சலப்பிரளயம்வரையுமுள்ள சரித்திரங்களில் தேவன் நமக்கு அறிவிக்கச் சித்தமானது இந்த அதிகாரத்திலடங்கியதுமட்டுந்தான். இதையல்லாத வேறே சரித்திரம் உலகத்தில் எங்கும் கிடையாது. பழைய உலகத்தில் அநேக பேர்போன இராச்சியங்களிருந்திருக்கும். அவற்றில் பேர்போன இராசாக்கள், தலைவர்கள் அரசாண்டிருப்பார்கள். அநேகங்கே பெரிய மாறுதல்கள் சம்பவித்திருக்கும்; விசித்திரமான கிரியைகள் நடந்திருக்கும். ஆனால் அவைகளை எல்லாம் விட்டுவிட்டு மனுஷரால் அவமதிக்கப்பட்ட மெய்ப்பத்தருடைய சரித்திரத்தைமாத்திரம் எழுதியிருக்கிறது. ஏனென்றால் தேவனுடைய பார்வையில் பரிசுத்தவான்கள்தான் பேர்போன இராசாக்கள். மெய்மார்க்கந்தான் எல்லாவற்றிலும் பெரிய காரியம். மற்றவைகளெல்லாம் எழுதப்படத் தகுந்தவைகளல்ல.

மனிதருடைய ஆயுசை தேவன் நாளுக்கு ஒப்பிடுகிறார். நம்முடைய குறுகின ஆயுசை முற்பிதாக்களுடைய ஆயுசோடு ஒத்துப்பார்த்தால் சொற்பமாய்க் காணப்படும். ஆனால் நித்தியத்தோடு ஒத்துப்பார்த்தாலோ! அவர்களுடைய நீண்ட ஆயுசாவது நம்முடைய குறுகின ஆயுசாவது ஒன்றுமில்லையென்றே சொல்லவேண்டும். அப்படியானால் ஒருநாள் போலவும், ஒன்றுமில்லாதது போலவுமிருக்கிற நம்முடைய அற்ப ஆயுசை நாம் எவ்வளவு கவலையாய்ப் பின்ணிடவேண்டும்!

தேவன் ஒருவனுக்கு உலக வாழ்வைக் கொடாததும், அவனை அவன் நடுப்பிராயத்தில் எடுத்துக்கொள்வதும் அவன்மேல் தயவில்லாததினால் அல்ல. அநேகவிசை அவனுக்கு நன்மையாகவே அப்படிச் செய்கிறார். ஆபேல், ஏனோக்.—தேவன் தமது சுயாதீன இஷ்டத்தின்படியே அவனவனுக்கு வயது குறித்திருக்கிறார். ஆகையால் நம்முடைய சொற்ப ஆயுசைக்குறித்தாவது, நாம் நடுப்பிராயத்தில் மரணமடைய நேரிட்டால் அதைக்குறித்தாவது முறுமுறுக்க வேண்டாம். மெத்தூசலா 969 வருஷம் உயிரோடிருந்தானே என்று கேட்டால் “நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன?”

ஆதாம் “மரித்தான்” என்று சொல்லியிருக்கிறது! அவன் பாவஞ்செய்தபோதே சிலுவையில் அறையப்பட்டவன்போலாகி, 980ஷு



உயிரோடிருந்து வேதனைப்பட்டு, இருதயத்தைப் பிளக்கத்தக்க பற்பல மாறுதல்களைக் கண்டு, தன் கிரியையின் பலனைத்தின்று, சாகாமல் செத்து, நோகாமல் நொந்து சஞ்சலப்பட்டு மரித்தான். மெத்தூசலா 969ஷு உயிரோடிருந்தும் “அவனும் மரித்தான்.” நம்மைக்குறித்தும் அவன் மரித்தானென்று எவ்வளவமும் சொல்லப்படுமே! ஆகையால் நீ தாமதமின்றி மரணத்துக்கு ஆயத்தப்படு. எப்படியென்றால்,

(1) பாவமன்னிப்பு அடைந்தவனாயிரு.

(2) உலக பாசங்களினாலே கட்டப்பட்டவனாயிராதே.

(3) மரணம் நாடோறும் உன்னை அணுகிக்கொண்டேவருவதைக் கவனித்துக்கொள். உனக்குள்ளிருக்கிற நோய் நொடிகளெல்லாம் அதன் சேஷ்டைதான். அது மனிதருடைய அழகிய கண்களையும், காதுகளையும், தலையையும் மேனியையுங்கூட அவர்கள் ஜீவனோடு வாழுங் காலத்திலும் தன் வசப்படுத்திக்கொள்ளுகிறது. அது ஒரு மணி நேரத்துக்கு சு[illegible] மைல் விசையாய் நம்மை நித்தியத்துக்குப்போக நெருக்குகிறது.

(4) “உன் வீட்டுக்காரியங்களை ஒழுங்குப்படுத்து.” இன்று தான் உனக்குக் குறிக்கப்பட்ட கடைசிநாள் என்றால் இதில் எப்படி நடப்பாயோ அப்படியே ஒவ்வொரு நாளும் நடந்துகொள்.

(5) நீ உலக இன்பங்களிலும், மாம்ச இச்சைகளிலும் முற்றியாயிருக்கும்போது மரணம் உன்னைப் பிடியாதபடி எப்பொழுதும் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிரு. ஏனோக் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் காணப்படாமற்போனான். லூக். 21: 34.

(6) உன் மனச்சாட்சியோடு சமாதானமாயிரு.

(7) அடிக்கடி மரணத்தை எட்டிப்பார்.

அதோடு இப்போதே உறவாடிக்கொள். யோபைப்போல் அதற்குக் காத்திரு.

(8) மரணம்வருமுன்னே அதற்கு மரித்தவனாயிரு.

(9) விழித்திருந்து செபம்பண்ணு, தேவ வசனத்தைத் தியானி.

(10) “கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி.” நான் மடிந்தாலும் கிறிஸ்துவின் சிலுவை அடியிலேயே மடிவேன் என்று நீ பிடிவாதமாய்ச் சாதித்து, உலகப் பற்றுகளை எல்லாம் அறுத்துவிட்டு அவருடைய புண்ணியத்தையும், இரக்கத்தையுமேசதமென்று நம்பி உன்னை முழுவதும் அவருக்கு ஒப்புக்கொடுத்துவிடு. அப்போது எல்லாவகை மோசமும் நீங்கிப்போகும். அவருடைய இரத்தம் உன் பாவங்கள் எல்லாவற்றையும் நீக்கி உன்னைச் சுத்திகரிப்பதால் மரணத்தின் கூர் ஒடிந்துபோம். அப்பொழுது நீ பயமின்றி திகில்களின் மரண இராஜனைப் போருக்கழைத்து வீரங்கூறுவாய். “மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?”

---

(98-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

## A Reply to the above, by the Rev. E. Sargent.

## அதற்கு கனம்: ஐயரவர்கள் கொடுத்த மாறுத்தரம்.

பிரியமான சிநேகிதர்களே! நான் இச்சமையத்தில் உங்களோடு பேசுவதில் யோசேப்பைப்போல முதலாவது சற்று கடினம்போல் பே

சவேண்டியிருக்கிறது. மற்றப்படி அநேகவகையில் எனக்கு வியாகுலம் அதிகமாகுவதினால் என் மனத்துயரத்தை அடக்கக்கூடாமல் ஒருவேளை அவனைப்போல் நான் அழவேண்டியதாய் வரும். கடந்த இருபது வருஷக்காலத்தில் இவ்விடம் மிசியோனில் உண்டாயிருக்கிற விர்த்திகளைக்குறித்து உபசாரப்பத்திரத்தில் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் சுதேச போதகன்மாரும், மற்ற சிநேகிதரும் எப்பொழுதும் எனக்குப் போதுமான உதவிசெய்திராவிட்டால் நான் அவைகளை எல்லாம் சரியானபடி செய்துகொள்ளமாட்டேனே. அந்தச் சிநேகிதரில் அனேகர் இப்போது இங்கே இருக்கிறார்கள். நாமெல்லாரும் உடன் வேலைக்காரராகவே இருந்திருக்கிறோம். உண்டாயிருக்கிற விர்த்தியெல்லாம் தேவனாலே உண்டானது. இந்த வேலை கர்த்தருடையதென்றும், அவர் மாத்திரமே சபையை விர்த்திபண்ணுகிறவரென்றும் எப்போதும் நினைந்துக்கொள்ளக்கடவோம். இப்பிரதேசங்களிலுள்ள அநேக பாலங்களும், மற்றும் அநேக பெரிய வேலைகளும் அவைகளைக் கட்டின பரோபகாரிகளின் பேருக்கு ஞாபகக்குறிப்பாயிருக்கிறது. கோவில்களைக் கட்டி, பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து சனங்களுக்கு பொது நன்மைசெய்தார்களென்று மாத்திரம் சுவிசேஷ பிரசங்கிகளைக்குறித்துச் சொல்லப்படுவது பெரிய காரியமல்ல. இதெல்லாம் நன்மையான காரியங்களென்றாலும், இவ்விடங்களிலிருக்கிற போதகன்மாராகிற நாங்களெல்லாரும் ஆவிக்குரிய மாளிகையைக் கட்டவும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவ பக்தியுள்ளவனாகவும் விரும்பிப் பிரயாசப்படுவதே எங்கள் ஜீவியத்தின் முக்கிய நோக்கமாம். இதில் அடைகிற சித்திக்குத்தக்கதாக நாங்கள் சந்தோஷப்பட இடம் உண்டு.

நான் செய்துவந்த பல கடமைகளைக்குறித்து உங்களுடைய அன்பான பத்திரிகையில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறீர்கள். நான் அவைகளைச் செய்ய எனக்கு கிருபையளித்த தேவனைத் துதிக்கிறேன். ஆனால் அந்தக் கடமைகள் அநேக குற்றங்குறைகளோடு நிறைவேற்றப்பட்டனவென்று நினைத்து நான் என்னைத் தாழ்த்துகிறேன்.

உங்களுக்குள் நான் நடப்பிக்கிற வேலையைவிட்டுப் பிரிவது கொஞ்சக்காலமானாலும் துக்கமானகாரியந்தான். ஆனாலும் தேவ ஆசீர்வாதத்தினால் அது உங்களுக்கும் எனக்கும் நன்மைக்கேதுவாய் முடியுமென்று நம்புகிறேன். அவருடைய அனுக்கிரகத்தினாலே என் சுகத்துக்கு அனுகூலமுண்டாவதல்லாமலும், நம்முடைய வேலையில் அதிகமாய்ப் பிரியப்படுகிற இங்கிலாந்திலுள்ள மகானுபாவரோடு நான் பழகுவதினாலே ஆவிக்குரிய நன்மையும் எனக்கு அதிகமாயுண்டாகுமென்று எதிர்பார்த்திருக்கிறேன். கொஞ்சக்காலத்துக்குப் பிற்பாடு கர்த்தருடைய கிருபையினாலே நான் உங்களுக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டால், கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதங்களோடு வருவதால் நீங்கள் அதிகமாய் சந்தோஷப்படுவதற்குக் காரணமுண்டாகும். நான் உங்களைவிட்டுக் கொஞ்சக்காலம் பிரிவதினாலே இன்னொரு பாடமும் படிப்பிக்கப்படுகிறதாக நினைக்கிறேன். உங்களில் அநேகர் வெகுகாலம் என்னோடு பழகியிருப்பதினாலே இவ்விடத்திலுள்ள கர்த்தருடைய வேலைக்கு நான் தீராத அவசியமென்று ஒருவேளை நினைத்திருப்பார்கள். பிரிய சிநேகிதர்களே! சரியானபடி சொன்னால் இந்த வேலை கர்த்தருடைய சொந்த வேலை. நாமெல்லாரும் அவருடைய கைகளில் நன்மைசெய்யக் கருவிகளாய் மாத்திரம் இருக்கிறோமென்று நிச்சயித்து அமர்ந்திருக்கக்கடவோம். எனக்குப் பின்வருகிற என் உடன் போதகரை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.



அவர்கள் மிசியோன் வேலையில் பொதுவாக என்னைப்போல ஒரே அபிப்பிராயமுடையவர்களாயும், என்னைப்போல உங்களுடைய நன்மையை விரும்புகிறவர்களாயுமிருக்கிறார்கள். உங்கள் செபத்தினாலும், உத்தம நடக்கையினாலும், விசேஷமாய் நீங்கள் ஒருவரோடொருவர் கிறிஸ்தமான அன்புடையவர்களாயிருப்பதினாலும் இந்த வேலை முன்னுக்குவரும்படி பிரயாசப்படவேண்டியது உங்கள் கடமையாம். இந்த அன்பும் ஐக்கியமுமே வெளிப்படுவதற்குத்தக்கதாக எந்த சத்துருவும் உங்களை மேற்கொள்ளமாட்டாத வல்லமை உங்களுக்குண்டாகுவதுமன்றி, உங்களைச் சுற்றியிருக்கிறவர்களுக்குமுன் நீங்கள் பாராட்டுகிற நம்முடைய மார்க்கத்தை மகிமைப்படுத்துகிறவர்களாயுமிருப்பீர்கள். உங்களைப் போஷிக்கிறவர்களுக்குள் என்னென்ன மாறுதல்கள் நடந்தாலும் பெரிய மேய்ப்பராகிய இயேசுக்கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறாரென்று எப்போதும் நினைத்துக்கொள்ளுங்கள். மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமை எல்லாம் புல்லின் பூவைப்போலவும் இருக்கிறது. புல் உலர்ந்து அதின் பூவும் உதிர்ந்துபோம், கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

பவுல் அப்போஸ்தலன் ஜீவகாலத்தில் நடந்த இரண்டு சம்பவங்கள் இப்பொழுது என் ஞாபகத்தில் வருகிறது. ஒருவிசை அவர் தீரு பட்டணத்தாரை விட்டுப்பிரியும்போது சொல்லியிருக்கிறதாவது; "அவர்களெல்லாரும் மனைவிகளோடும், பிள்ளைகளோடுங்கூட பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழிவிட்டனுப்பும்படியாக வந்தார்கள். அப்பொழுது கடற்கரையில் நாங்கள் முழங்காற்படியிட்டு செபம்பண்ணினோம். ஒருவரிடத்திலொருவர் உத்தரவுபெற்றுக்கொண்ட பின்பு நாங்கள் கப்பலேறினோம். அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போனார்கள்" என்று வாசிக்கிறோம். இன்னொருவிசை, மெலித்தா தீவார் பவுல் அப்போஸ்தலனுக்கு அநேக மரியாதைகள் செய்து, அவன் கப்பலேறப்போகிறபோது அவனுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள். முதலாவது சொல்லப்பட்ட மாதிரியை நீங்கள் ஒருவாறு பின்பற்றுகிறீர்கள். நானும் அதற்கு முற்றிலும் சம்மதிக்கிறேன். ஏனென்றால் எதுகாரியத்துக்கும் செபமானது நமது பலமும் ஆறுதலுமாயிருக்கிறது. ஆனால் நீங்கள் இரண்டாவது மாதிரியைப் பின்பற்றுவது எனக்கு யோசனையாயிருக்கிறது. ஏனென்றால் நீங்கள் ஐசுவரியவான்களல்லவே. உங்கள் அன்புக்கு அடையாளமாய் நீங்கள் வைத்திருக்கிறதைக் கொடுக்கும்படி உங்களில் அநேகர் சற்று வருத்தப்பட்டிருக்கவேண்டும். நீங்கள் சுதேசசபை பரிபாலன சங்கத்துக்கு உற்சாகமாய்க் கொடுத்திருக்கிறதை நான் நினைக்கும்போதும், இதை அங்கீகரிக்கலாமோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. இதையிட்டு அந்த சங்கவகைக்கு ஏதாவது குறைவு நேரிடுமானால் எனக்கு வெகு துக்கமாயிருக்கும். (அந்த வகைக்கு யாதொரு குறைவும் வராதென்று எல்லாரும் ஏகோபித்துச் சொன்னதின்பேரில்) அப்படியானால் உங்கள் அன்புக்கும், பட்சத்துக்கும் அடையாளமாக இதை வாங்கிக்கொள்ளுகிறேன். நான் தூரமாயிருக்கும் இடத்தில் உங்களை எனக்கு ஞாபகப்படுத்தும்படிக்கான ஒரு பொருளை அதினால் வாங்கிக்கொள்ளுவேன்.

இங்கே கூடிவந்திருக்கிற பெண்பிள்ளைகளுக்கு நான் சொல்லுகிறதென்னவென்றால், கனம்: அம்மாளவர்கள் உங்களுக்குச் செய்துவந்த முயற்சிகளைக்குறித்து பத்திரத்தில் சொல்லியிருக்கிறது. நீங்

கள் அவர்களோடு நன்றாய்ப் பழகியிருக்கிறீர்கள். உங்களை இரட்சகரிடத்துக்கு நடத்தவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடேயே அவர்கள் பிரயாசப்பட்டதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அவர்கள் உங்களுக்குப் போதித்ததை நினைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களைவிட்டுப் பிரிந்து தூரமாயிருக்கையில் எங்களுக்காக செபம்பண்ணுங்கள்.

## அறிவிப்பு.

### மகா கனம்பொருந்திய கண்காணியாரவர்கள் வெகுமதிப் பரீட்சை.

### 1872ஞு ஜூலைமீ 3௳.

### பாளையங்கோட்டை.

நாளதுவரையும் சோதனைக்கு ஆசராயிருக்கிறதாய்த் தெரிவிக்கப்பட்டிருக்கிற ஆட்களின் தொகை.

| | | |
|---|---|---|
| கிரேக்கைப் பரீட்சைக்காக மெஞ்ஞானபுரத்திலிருந்து ... ... ... | 1 | |
| பண்ணைவிளையிலிருந்து ... ... ... | 2 | பேர். |
| நல்லூரிலிருந்து ... ... ... ... ... | 8 | ,, |
| மெஞ்ஞானபுரத்திலிருந்து ... ... ... | 20 | ,, |
| டோனாவூரிலிருந்து ... ... ... ... | 1 | ,, |
| கனம்: உவையற்று ஐயரவர்கள் ஐக்கிய சேகரத்திலிருந்து ... ... | 20 | ,, |
| சுவிசேஷபுரத்திலிருந்து ... ... ... | 20 | ,, |

மேற்சொல்லப்பட்டவர்கள் தவிர, பரீட்சைக்கு வரவேண்டுமென்று கருதியிருக்கிற மற்றயாவரும் தங்கள் பெயரைக் கூடிய சீக்கிரத்தில் கனம்: வி. ஆர்க்கோட்டு ஐயரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவும்.

(மேல்விலாசம்)
Rev. V. W. Harcourt.
சுவிசேஷபுரம்.
இடையன்குடி.



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** அலபாமா என்னும் கப்பலைப்பற்றி இங்கிலீஷருக்கும் அமெரிக்கருக்கும் உண்டான விவாத விஷயம் இன்னும் தீரவில்லை. குறித்த கப்பலினால், அமெரிக்கர் தங்களுக்குண்டான நஷ்டத்தை அங்கிலேயர் உத்தரிக்கவேண்டுமென்கிற கோட்பாட்டில் விலகாமல், பிடிவாதமாய் நிற்கிறார்கள். இக்காரியம் எப்படி முடியுமென்று சொல்வது அரிது. அமெரிக்கர் கேட்பது அநியாயமென்று அங்கிலேய துரைத்தனத்தார் மாத்திரமல்ல, ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த புருஷியாமுதலிய தேசத்தாருஞ் சொல்லுகிறார்கள். அமெரிக்கருடைய அந்தரங்க அபிப்பிராயம் இன்னதென்று வெளிப்படவில்லை. காலம் தெரிவிக்கும்.

இத்தாலி தேசத்தைச் சேர்ந்த விசூவியஸ் என்னும் அக்கினி மலை சில நாளுக்குமுன் அக்கினி கக்கத் தொடங்கிற்று. அதின் அடிவாரத்தில் இருந்த கிராமங்கள் சேதமாயின. அவைகளில் வசித்த ஜனங்கள் தப்பினார்கள்.

**ஆப்பிரிக்கா** கண்டத்தில் சீர்த்திருத்தம் அபிவிர்த்திசெய்யப்போய், வெகு நாள் காணப்படாமற்போன லிவிங்ஸ்டன் துரை இன்னும் உயிரோடிருக்கிறாரென்று செய்தி. ஜின்ஜிபார் துறைமுகத்தில் நங்கூரம்போட்டுத் தங்கியிருந்த நூற்றைம்பது மரக்கலங்கள் பெருங்காற்றினால் கரைதட்டிச் சேதமாயின. கட்டிடங்களெல்லாம் மிகச் சேதமடைந்தன. பொருள் நஷ்டம் இரண்டு கோடி ரூபாய் வரையுமுண்டு.

**யாப்பான்** தீவைச் சேர்ந்த ஏதோ என்னும் ராஜதானியில் ஏப்பிரல்மீ 3௳ இரண்டு சதுர மைலிலுள்ள வீடுமுதலான கட்டிடங்கள் அக்கினிக்கு இரையாயின. சேதமான வீடுகள் பதினாயிரம். பிராணலயமடைந்தவர்கள் தொகை மூன்று. இருபதினாயிரம் பேர் வீடில்லாமலிருக்கிறார்கள். பொருட் சேதம் மூன்று கோடி ரூபாய்.

**இந்தியா.** நூதன கவர்னர் ஜெனரல் சென்ற மாசாரம்பத்தில் பம்பாயில் வந்திறங்கி, அவ்விடத்தில் தமது அந்தஸ்திற்குத்தக்க உபசாரணைபெற்று, அங்கிருந்து இருப்புப்பாதை வழியாய் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப்போனார். அவர் பம்பாயிலிருக்கையில், பரோதாவின் கைக்கோவார் மகாராஜா ஒன்றரை லட்சம் ரூபாய் வரை செலவழித்து, இங்கிலந்தில் செய்வித்து வரவழைத்திருந்த நமது மகா ராணியவர்களின் பிரதிமையைப் பிரதிஷ்டைபண்ணினார். பம்பாய், சென்னை இவ்விராஜதானிகளின் நூதன கவர்னர்களும் சென்ற மாச மத்தியில் தத்தம் இடம் வந்துசேர்ந்தார்கள். பழய கவர்னர்கள் சீமைக்குப் பிரயாணமானார்கள். சென்னை, வேலூர், காரைக்கால்முதலிய விடங்களில பெருங்காற்றும் மழையுமுண்டானதினால் கப்பற்சேதம், உயிர்ச்சேதம், பொருட்சேதம் இவை நேரிட்டன.

ஜுன் மீ நாள் 30—வைகாசி மீ 21உ முதல், ஆனி மீ 18உ வரை.

| வாரம் | ஆங். தேதி | தமிழ் தேதி | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | ௨௧ | கர்த்தர் எங்களைச் சந்தித்தார். யாத். 8. 18. |
| ஞா | 2 | ௨௨ | நீங்கள் போகும்போது வெறுமையாய்ப்போவதில்லை. 21. |
| தி | 3 | ௨௩ | நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன். 4: 12. |
| செ | 4 | ௨௪ | இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். 22. |
| பு | 5 | ௨௫ | கர்த்தரால் இப்படி நடந்தது. 1இராசா 12: 15. |
| வி | 6 | ௨௬ | கர்த்தருடைய சமுகத்தை நோக்கிவேண்டிக்கொண். 13: 6. |
| வெ | 7 | ௨௭ | கர்த்தருடைய வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும். 32. |
| ச | 8 | ௨௮ | இந்தக் காரியம் அவர்களுக்குப் பாவமாயிற்று. 34. |
| ஞா | 9 | ௨௯ | நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார். சங். 66: 9. |
| தி | 10 | ௩0 | என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன். 14. |
| செ | 11 | ௩௧ | என் நாவினால் அவர் புகழப்பட்டார். 17. |
| பு | 12 | ௩௨ | தேவன் என் செபத்தின் சத்தத்தைக் கேட்டார். 20. |
| வி | 13 | ௧ | உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும். 67: 1. |
| வெ | 14 | ௨ | எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார். 6. |
| ச | 15 | ௩ | பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும். 7. |
| ஞா | 16 | ௪ | தாங்கள் செய்கிறது தீமையென்றறியாதிருக்கிறார்கள். பிர. 5: 1. |
| தி | 17 | ௫ | தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய். 2. |
| செ | 18 | ௬ | தேவன் மூடரில் பிரியப்படுகிறதில்லை. 4. |
| பு | 19 | ௭ | நீ நேர்ந்துகொண்டதைச் செய். 4. |
| வி | 20 | ௮ | என்னைத்தவிர தேவனில்லை. ஏசாயா 44: 6. |
| வெ | 21 | ௯ | நீங்கள் கலங்காமலும் பயப்படாமலுமிருங்கள். 8. |
| ச | 22 | ௧0 | விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர். 9. |
| ஞா | 23 | ௧௧ | அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள். 18. |
| தி | 24 | ௧௨ | எங்கள் தேவனே உம்மை அறிந்திருக்கிறோம். ஓசி. 8: 2. |
| செ | 25 | ௧௩ | இஸ்ரவேலர் நன்மையை வெறுத்தார்கள். 3. |
| பு | 26 | ௧௪ | இயேசு அப்பங்களை யெடுத்து ஸ்தோத்திரம் பண்ணினார். யோவா. [6: 11 |
| வி | 27 | ௧௫ | மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள். 12. |
| வெ | 28 | ௧௬ | பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். வெளிப். 22: 11. |
| ச | 29 | ௧௭ | இதோ சீக்கிரமாய் வருகிறேன். 12. |
| ஞா | 30 | ௧௮ | நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. 12. |

## விசேஷித்த நாட்கள்.

2. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு.
6. அமாவாசை. சூரியகங்கண கிரகணம், காலை 7 மணிக்குச் சற்று முன்.
9. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின் வரும் இரண்டாம் ஞாயிறு.
16. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின் வரும் மூன்றாம் ஞாயிறு.
21. பௌர்ணமி.
23. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின் வரும் நான்காம் ஞாயிறு.
30. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின் வரும் ஐந்தாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 24. July. No. 7.

### Contents:


Farewell Address to the Rev. E. Sargent (Continued.) ... 122
The Parables of Christ. ... ... ... ... ... ... 125
Notes on Genesis. ... ... ... ... ... ... ... 126
The first translation of the Bible in Tamil. ... ... ... 127
Memoir of the late Rev. Abraham Samuel. ... ... ... 131
Summary of News. ... ... ... ... ... ... ... 139


### அட்டவணை:


கனம். சார்ஜென்று ஐய்யரவர்களுக்கு வந்தன பத்திரம் ௧௨௨
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... ௧௨௫
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... ௧௨௬
வேதாகமங்கள் தமிழ் பாஷையில் திருப்பப்பட்ட வரலாறு. ௧௨௭
கனம். ஆபிரகாம் சாமுவேல் ஐயருடைய ஜீவிய சரித்திரம். ௧௩௧
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௩௯



**Palamcottah:**
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.
1872.

எ. சூலை௴. ௲அஎஉ௵.

## Farewell Address to the Rev. E. Sargent, by the Masters and Students of the Preparandi Institution, Palamcottah.

### கனம்பொருந்திய எட்வார்ட் சார்சென்ற் ஐயரவர்கள் சீமைக்குப் புறப்படும் சமையத்தில் Preparandi வித்தியாசாலையிலுள்ளவர்கள் வழிவிட்டுபசரித்த விதம்.

ஷெ வித்தியாசாலையிலுள்ள உவாத்திமார்களும், மாணாக்கர்களும், 1872௵ மார்ச்சு௴ 13உ 7½ மணியில் இதற்காக ஆயத்தமாயிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் வழிவிட்டனுப்பப்போகிற ஐயரவர்களும், அம்மாளவர்களும், வித்தியாசாலைக்கு வந்துசேர, அக்கூட்டத்துக்கு அக்கிராசனாபதியாயிருந்த கனம்: டிப் ஐயரவர்கள் பாதை காட்டுமாயெகோவா என்ற பாட்டை வாசிக்க, வித்தியார்த்திகள் பாடினார்கள். பின்பு அக்கிராசனாபதி கூடிவந்த நோக்கத்தை மிக்க சாதுரியத்தோடு சுருக்கமாய்ச் சொல்லிமுடிக்க, வித்தியார்த்திகள் எழுந்து, அன்புடன் ஆத்மபோதகஞ்செய்து பட்சத்தோடு நடத்தின போதகரை கடவுள் இதுவரையும் தங்களுக்குத் தந்திருந்ததற்காக அவரைத் துதிக்கும்படி நூதனமாக உண்டுபண்ணின ஒரு கீர்த்தனையை மிகுந்த கனிவுடன் பாடினார்கள். அதன்பேரில், உவாத்திமாரும், மாணாக்கரும் நின்றுகொண்டு, அங்கேவந்து ஆசனங்களிலுட்காந்திருந்த சிநேகிதர் முன்பாகவும், அக்கிராசனாபதி முன்பாகவும் தங்கள் பயணோபசார பத்திரத்தை தங்கள் நேசகுருவாகிய கனம்: சார்ஜென்ற் ஐயரவர்களுக்குக் கையளித்தார்கள். அப்பொழுது வாசிக்கப்பட்ட பயணோபசார பத்திரமாவது;

"எங்கள் அன்புள்ள ஐயாவே!"

தாங்கள் இச்சீமைச் சனங்களுக்கு நன்மைசெய்யவந்து 38 வருஷம் ஆகிறது. அதில் 30 வருஷம் கிறிஸ்து யேசுவின் ஸ்தானாபதியாக போதக ஊழியம் செய்திருக்கிறீர்கள். 1850ம்௵ பாளையங்கோட்டைக்கு குருவாக வந்த பின்பு, 22 வருஷம் இந்த வித்தியாசாலைக்குத் தலைவராகவுமிருந்து, எங்கள் நடுவில் திருப்பணிவிடை செய்திருக்கிறீர்கள்; அநேகரை குருப்பட்டத்துக்காகப் படிப்பித்ததோடு, இந்த வித்தியாசாலையை நடத்தி கால்நூற்றாண்டாகிறது. இவ்வளவு காலம் எங்களோடிருந்த தாங்களும், சனம்: அம்மாளவர்களும் சுகவீனத்தினிமித்தம் இங்கிலாந்து தேசத்துக்குப் போய்வரும்படியிருக்கிற இத்தருணத்தில், நாங்கள் எங்கள் நன்றியறிதலைக் காண்பிக்க மிகுந்த ஆசையாயிருக்கிறோம்.

இந்த வித்தியாசாலையைத் தாங்களே ஆரம்பித்தவர்கள்; இந்தப் பெரிய கட்டடங்களுக்குத் தாங்களே அஸ்திபாரமிட்டீர்கள். தங்கள் விசாரணையில் வித்தியாசாலைச் சம்பந்தமாய் 15 உவாத்திமார் வேலை பார்த்திருக்கிறார்கள். அதில் 3 பேர் குருப்பட்டம்பெற்று சபைகளை விசாரிக்கிறார்கள். இந்த வித்தியாசாலை ஏற்பாட்டுக்கு ஆரம்பமாக, முன்னாடி தங்களால் படிப்பிக்கப்பட்டவர்களில் 5 பேர் குருப்பட்டம் பெற்றார்கள். இதில் படித்த மாணாக்கர் 480 பேர். அதில் உபதேசிமாராகப்போனவர்கள் 161 பேர். உபாத்திமைத் தொழிலிற் பிரவேசித்தவர்கள் 103 பேர். அவர்களில் 13 பேர் குருப்பட்டம் பெற்றிருக்கிறார்கள். தேவ கிருபையினால் இந்த வித்தியாசாலை இவ்வளவு காரிய சித்திபெற்றதற்குத் தாங்கள் உவாத்திமார் மாணாக்கர் முதலானவர்களை அவரவர் குணங்குறிகளுக்கேற்றபடி நடத்திவந்த மேரையில், சிறந்துவிளங்கிய உசிதமான இலட்சணங்கள் ஏதுவாயிருந்தன. வைதீக லௌகிக கல்விகளையும், நல்லொழுக்கம், தேகசுகம், சீர்திருத்தம், தர்மசிந்தை விர்த்தியடையத்தக்க சாதனங்களையும் தளரா முயற்சியோடும், அருங்கவலையோடும் பிரயோகித்தீர்கள். கனம்: இரேனியூஸ் ஐயரவர்களுக்குப் பிறகு சிறந்த வைதீகநூல்களை தமிழ்ச் சபைக்கு சாஸ்வத ஆஸ்தியாக அளித்தவர்கள தாங்களே. இந்த வித்தியாசாலையிற் படித்தவர்கள் சென்னைபட்டணம், மற்றும் தென் இந்தியாவின் பல இடங்களிலும், இலங்கை, மோரீஸ் முதலிய தீவுகளிலும் போய்த் தேவ ஊழியஞ் செய்துவருவதில், தங்களைப்பற்றிய நினைப்பு, அவர்கள் யாவருக்கும் மிக அருமையாக இருக்கிறதென்று நாங்கள் அறிவோம்.

போதகராக தாங்கள் எங்கள் நடுவிலிருந்து பட்ட பிரயாசம் எங்கள் மனதில் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது. கிறிஸ்துவின் ஆச்சரியமான அன்பு, கிறிஸ்துமார்க்கத்துக்குரிய உபதேசங்கள், கிறிஸ்தவர்களுக்குரிய கடமைகள் ஆகிய இவைமுதலியவைகளைப்பற்றி விடாமுயற்சியோடும், நிறைந்த பொருளோடும், உள்ளக்கனிவோடும், சிறந்த பாஷையோடும் சமயோசிதமாய் தாங்கள் செய்த பிரசங்கங்களும், அவைகளுக்கொப்ப தாங்கள் எங்களுக்குவைத்த முன்மாதிரியும், எங்கள் நடக்கைக்குச் சட்டமாய் எங்களை ஏவிவிட்டன. மேலும் எங்களோடும், எங்களுக்காகவுஞ் செய்த அனலும், கனிவுமான எத்தனை செபங்கள் தங்கள் உள்ளத்திலிருந்து தேவ சமுகஞ் சென்றிருக்கின்றன. சலிப்பும், சஞ்சலமுமுற்ற இளைத்த ஆத்துமாக்களோடு அனுதாபித்து, அவர்களுக்கு நல்லாலோசனை சொல்லி, அவர்களைத் திடப்படுத்தினீர்கள். தங்களுக்கு அடிக்கடி நேரிட்ட சரீர பலவீனங்களையும் ஒரு பொருட்டாய் எண்ணாமல், தங்களை வெறுத்து, எங்கள் ஆத்தும வாழ்வையே நோக்கினீர்கள். சுக துக்கத்திலும், வாழ்வுதாழ்விலும் எங்களோடு அன்னியொன்னியமாயிருந்தீர்கள். கனம்: அம்மாளவர்களும் எங்கள் இகபர நன்மையை விரும்பி, எங்கள் சமுசாரங்களுக்கும் மற்றும் சபையிலுள்ள பெண்பிள்ளைகளுக்கும் வாரந்தோறும் தாய்மார் செபக்கூட்டமும், ஓய்வுநாள் வாசிப்பும் வைத்து, அநேக எளிய கைம்பெண்களை ஆத்தும போதகத்துடன் தங்கள் சுயசெலவினாலே அன்னவஸ்திரங்கொடுத்து ஆதரவு செய்ததை நாங்கள் ஒருபொழுதும் மறக்கத்தக்கதல்ல. தாங்கள நடப்பித்த தேவ ஊழியத்தின் சத்தும், சாரமும், இந்த ஜில்லா முழுவதிலும் பரம்பியிருக்கிறது. மொத்தமாய்ச் சொல்லுகில், தாங்கள் இத்தனை வருஷமாய் எங்கள் நடுவில் நடப்பித்த திவ்விய பணிவிடையை தேவன் ஆசீர்வதித்திருக்கிறாரென்பதும், கர்த்தரைப்பற்றிய உங்கள் வேலை வீணாயிருக்கவில்லையென்பதும், பிரதான மேய்ப்பர் வெளிப்படும் அந்தப் பெரியநாளில் அநேகர் உங்களுக்குப் புகழ்ச்சியும், கிரீடமுமாயிருப்பார்களென்பதும் பரிஷ்காரமாயிருக்கிறது.

இப்பொழுது நெடுநாள் உழைத்துப் பலவீனப்பட்டிருக்கிற தாங்களும், கனம்: அம்மாளவர்களும் கொஞ்சக்காலம் ஆறியிருந்து புதுப் பெலனடைந்து திரும்பும்படி இங்கிலாந்துக்குப் போகிறதினால், தாங்

வனை தரிசித்தல் மறுமையில் கிடைக்கும் பாக்கியமானால், எவர்களுடைய ஆத்துமக் கண் பிரகாசிக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் அந்த மகிமையை அதிகமாய் அநுபவிப்பார்கள். குணத்துக்கேற்றவிதமாய் அநுபவமிருக்கும். ஆகையால் இவ்வுலகத்தில் தாழ்மையிலும், பரிசுத்தத்திலும், அன்பிலும் வளருகிறது தேவ சாயலை அதிகமாய் பிரதிவிம்பிக்கும்படி கண்ணாடியைத் தெளிவாக்குகிறதுபோல, திவ்விய மகிமையை அதிகத் தெளிவாய்க் காணும்படிக்கு கண்ணை சுத்தமாக்குகிறதுபோல், திவ்விய பரிபூரணத்திலுள்ளதை அதிகமாய்க் கொள்ளும்படி பாத்திரத்தை விரிவாக்குகிறதுபோல இருக்கும். அதுபோல வெருமையும், சுயநீதியும், வேறெந்தப் பாவமும் தேவ தன்மையை உட்கொள்ளுகிற குணங்களைக் குறைத்தாலும் கெடுத்தாலும் அந்தக் கண்ணாடியை மங்கச்செய்து, அந்தக் கண்ணைக் குருடாக்கி, அந்தப் பாத்திரத்தை சுருக்கிப்போடுகிறது. மொறுமொறுத்தவர்களுடைய பெருமையும், பொறுமையும், தற்பொழிவும் இருதயத்தில் கண்ணைக் கெடுத்துவிட்டபடியால் பலன் பலனாகத் தோன்றவில்லை. போதுமானதாகக் காணவில்லை.

---

## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௬. அதிகாரம்.

### சலப்பிரளயம் முன்னறிவிக்கப்பட்டது.

1. "மனுஷர்" விசேஷமாய் காயீன் சந்ததியாரைக் குறிக்கும்.

"பெருகத் துவக்கி" மட்டுக்குமிஞ்சிப் பெருகினார்கள், அல்லது "தேவகுமாரரைப்" பார்க்கிலும் பெருகினார்கள்.

"குமாரத்திகள் பிறந்தபோது". குமாரர் பிறக்கவில்லையா? பின் சொல்லப்போகிற பாவத்துக்கும் அழிவுக்கும் இவர்கள் காரணமாயிருந்தபடியினாலே குமாரத்திகள் என்று சொல்லியிருக்கிறது.

2. "தேவகுமாரர்" 4: 26 ல் சொல்லப்படுகிற சேத்தின் சந்ததியாரைக் குறித்து இவ்விடத்திற் சொல்லியிருக்கிறது. வேதத்தை ஒப்புக்கொண்டவர்களும் இந்த மகிமையான பேரால் அழைக்கப்படுவதுண்டு.

"மனுஷகுமாரத்திகளை" காயீன் வம்சத்திலுள்ளவர்கள். ஆதாமின் கெட்ட சுபாவத்தை உடையவர்களாய் அவனுடைய பாவத்தைப் பின்பற்றினவர்களானபடியினாலே மனுஷகுமாரத்திகள் என்று சொல்லியிருக்கிறது.

3. "என் ஆவி என்றைக்கும் மனுஷரோடே போராடுவதில்லை." தேவாவியானவர் நீடிய சாந்தமுள்ளவராய் ஏனோக், நோவா முதலானவர்களைக்கொண்டு பிரசங்கித்து, அவர்கள் மனச்சாட்சியைக் குணப்படுதலுக்குத் தூண்டி வந்தார். அவர்கள் சீர்ப்படவில்லை. இப்படி அவர்கள் பாவத்திலே முற்றிப்போய் தங்கள் சொந்த மனச்சாட்சிக்குங்கூட விரோதமாய் எதிர்த்து நின்று தேவனை மிகுதியும்



கோபமூட்டினதால் கடைசியாக அவர்கள் பாவத்திலே கடினப்பட்டு அழிவுக்காகக் கொழுக்கும்படி அவர்களைக் கைவிட்டுவிட்டார் என்றர்த்தமாம்.

"அவர்கள் மாம்சந்தானே" நாளுக்குநாள் தளர்ச்சியடைந்து பலவீனப்படுகிறவர்கள்தானே என்று மாத்திரமல்ல. விசேஷமாய் சீர்கெட்ட லௌகிக தன்மையுள்ளவர்களென்றும் அர்த்தமாகும். உரோ. 8: 7—9. தேவசாயலாய்ப் படைக்கப்பட்ட ஆத்துமாவின் மேலான சத்துவங்களை எல்லாம் தங்கள் கெட்ட சுபாவம் ஏவினபடியே துன்மார்க்கத்திற்கும் விசேஷமாய் சோரமார்க்கத்திற்கும் இரையாக்கிக்கொண்டார்கள். இது சலப்பிரளயம் வருவதற்குச் சொல்லப்பட்டிருக்கிற ஒரு விசேஷித்த முகாந்திரமாம்.

"நூற்றிருபது வருஷம்" இது பழய உலகத்தார் சீர்ப்படும்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்தா. இது மனிதருடைய ஆயுசைக் குறிக்கமாட்டாது. ஏனென்றால், மனுஷர் இதற்குப் பின்னும் 120 வருஷத்துக்குமேல் ஜீவித்திருக்கிறார்களே. 7. 4. யும் பார்.

5: 32 யும், 7: 11 யும் ஒத்துப்பார்த்தால் இந்த வாய்தா சரியாய் நிறைவேறுமுன் (அதாவது 100 வருஷத்துக்குப் பின்) சலப்பிரளயம் வந்துவிட்டதாகத் தோன்றும். ஆனால் 120 வருஷ தவணை நோவா 500 வயதாகு முன்னமே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். 5: 32, வரவேண்டிய சரியான இடம் VI ம் அதிகாரம் 10 ம் வாக்கியம். வம்சவரிசையைச் சரிக்கட்டும்படி மாத்திரம் அந்த வாக்கியத்தை 5 ம் அதிகாரத்தோடு சேர்த்தெழுதியிருக்கிறது.

4. "இராட்சதர்" தேக பருமனிலும் உயரத்திலும் பலத்திலும் பெருத்தவர்களாயும், மகா கொடிய அக்கிரமக்காரராயும் மூர்க்கராயுமிருந்தவர்கள். விழுதல் என்று அர்த்தமுள்ள எபிரேயு மூலத்திலிருந்து இராட்சதர் என்ற வார்த்தை பிறந்ததாகக் காணப்படுகிறது. அப்படியானால் அவர்கள் தேவனைவிட்டு மருளவிழுந்தவர்கள் என்றாவது தங்கள் வல்லமையினாலும் மூர்க்கத்தினாலும் மற்றவர்களை விழத்தட்டுகிறவர்கள் என்றாவது அர்த்தப்படும்.

"பலவான்களானார்கள்" இராட்சதர் போலாகிதேவனைவிட்டு மருளவிழுந்து துன்மார்க்கத்தில் முற்றிப்போய் மனுஷரை ஒடுக்கி நாசப்படுத்துகிறவர்களானார்கள். இதுவும் சலப்பிரளயத்துக்கு ஒரு முகாந்தரம்போல் சொல்லப்படுகிறது.

---

## The first translation of the Bible in Tamil.

# வேதாகமங்கள் தமிழ் பாஷையில் திருப்பப்பட்ட வரலாறு.

வேதாகமங்களைத் தமிழ்த் திருப்பினவர்கள் விக்கினங்கள் இடையூறுகளும் பாராமலும், வருத்தத்துக்கு அஞ்சாமலும் தங்கள் பணிவிடையை மகா சுறுசுறுப்போடும், உண்மையோடும், பக்திமுயற்சியோடும் செய்ததினாலே தமிழ் பாஷை எங்கெங்கே வழங்குகிறதோ அங்கங்கே அவர்கள் செய்ததும் அவர்களுக்கு நினைவுகூருதலாகச் சொல்லப்படவேண்டியது.

1706-ம்-௵த்தில் மோகலியரின் மகா இராசா அவரங்சீபு இறந்துபோனதற்கு ஒரு வருஷத்துக்கு முன்னும், வீரமாமுனிவர் மதுரைக்கு வந்த காலத்துக்கு ஆறு வருஷத்துக்குப் பின்னுமாக நாலாவது பிரெடரிக் இராசா தின்மார்க் தேசத்தை அரசாளுகிறவராய் சிங்காசனத்தில் வீற்றிருந்தார். இவரே தமிழ் சனங்களுக்கு பெரிய உபகாரியாய் அஞ்ஞான இருள் மூடிய நம்முடைய தேசத்தில் சுவிசேஷ ஒளியைக் காண்பிக்கும்படி சுவிசேஷ போதகன்மாரை அனுப்பினார். அவர்களுக்குள்ளே சீகன்பால்கு ஐயரும், பிளிச்சோ ஐயருமே முதல்வராயிருந்தார்கள். அவர்கள் 1706௵ சுலாய்மீ 9உயில் தரங்கன்பாடியிலே வந்து சேர்ந்து தாமதமின்றி தங்கள் உத்தம பணிவிடையில் பிரவேசித்தார்கள். பிளிச்சோ ஐயர் ஐரோப்பியருக்குள்ளே முக்கியமாய் தமது அலுவலைப் பார்த்ததினாலே நாம் இவ்விடத்தில் சீகன்பால்கைக்குறித்து மாத்திரம் பேசவேண்டியது. அவரே சேஷ்டப் போதகர் என்று சொல்லப்படுகிறார். அக்காலத்தில் அச்சடித்த புஸ்தகங்கள் தமிழ் நாட்டில் வழங்கவில்லை. ஆதலால் தமிழகராதியாவது, இலக்கணமாவது கிடையாமல் சீகன்பால்கையர் சிறுபிள்ளைகளோடே உட்கார்ந்து நாட்டுவழக்கம்போல் அரிவரி எழுத்துக்களை சத்தமாய் உச்சரித்து மணலில் எழுதிப் பழகினார். பின்பு கொஞ்சக்காலத்தில் நன்றாய்த் தேறி, தமிழ் நூல்களை ஏடுகளில் வாசித்து, தமிழருடைய சகலமான சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து, வாக்கிலும் செய்கையிலும் வல்லவரானார். ஆகிலும் இவ்விதமாய் பெரிதும் அனுகூலமுமான கதவு எவ்வளவாய்த் திறக்கப்பட்டதோ அவ்வளவாய் "விரோதிகள் அனேகர்" என்று கண்டார்கள். தஞ்சாவூரில் அரசாண்ட இந்துமத இராசனும், மதுரையில் வந்திருந்த பாப்புமதக் குருக்களும், தரங்கம்பாடியில் குடியிருந்த தின்மார்க் தேசத்து சனங்களும் ஆகிய இவர்கள் எல்லாரும் விரோதஞ் செய்தார்கள். ஒரு ஏழை கைம்பெண்ணுக்காக சீகன்பால்கு ஒரு நாள் தரங்கம்பாடி நீதிதுரையிடத்தில் பரிந்துபேசின நிமித்தம், அந்த துரை இங்கே வந்த ஐயன்மார் இப்படி நம்முடைய காரியத்தில் தலையிட்டுப் பிரவேசிக்கிறதாவென்றுசொல்லி, சீகன்பால்கைப் பிடித்து நாலு மாசம் வரைக்கும் காவலில் வைத்தான். இப்படியெல்லாம் நடந்தபோதிலும், சீகன்பால்கையர் கர்த்தரையே முன்னிட்டு சலியா சுறுசுறுப்போடே தமது திவ்விய பணிவிடையைப் பார்த்து வந்தார். 1714-ம்-வருஷத்துக்குள்ளாக அவர் புதிய ஏற்பாட்டை முழுமையும் தமிழ்த் திருப்பி முடித்தார். பின்பு அவர் மலையப்பன் என்ற ஒரு வாலிபனைக் கூட்டிக்கொண்டு தின்மார்க் தேசத்திற்குத் திரும்பப் போய் மிசியோன் காரியங்களைப்பற்றி அனேகரை நன்றாய் எவி எழுப்பி இங்கிலாந்துக்கும் போய் 1-ம் ஜியோர்ஜ் இராசனையும், கந்தர்புரி பிரதான கண்காணியாரையும் கண்டுகொண்டு 1716௵ ஆகஸ்துமீ 9உயிலே திரும்ப சென்னபட்டணத்தில் சேர்ந்து தரங்கம்பாடிக்கு வந்தார். இதற்குள்ளாக 1715௵த்திலே சீகன்பால்க் ஐயர் தமிழ்ப்படுத்தியிருந்த புதிய ஏற்பாட்டை மற்ற ஐயன்மார் அச்சடித்துப் பிரசித்தப்படுத்தியிருந்தார்கள். சீகன்பால்கு திரும்ப வந்த பின்பு, பழைய ஏற்பாட்டின் ஆகமங்களையும் தமிழ்ப்படுத்த ஆரம்பஞ்செய்து ரூத்தின் சரித்திரம் வரைக்கும் திருப்பினபின், 1719௵ பெப்ருவரிமீ 23உயில் 35 வயதுள்ளவராய் மரணமடைந்தார். 1723௵த்திலே சூல்ச்சு ஐயர் பழைய ஏற்பாட்டில் சீகன்பால்கு விட்டதுமுதல் தமிழ் திருப்பத் துவக்கி, அதை 1728௵த்தில் ஒரு பங்கும், 1726௵த்தில் ஒரு பங்கும் 1727ல் ஒரு பங்கும் ஆக மூன்று பங்காய் அச்சடித்து பிரசித்தப்படுத்தி முடித்தார்.



சீகன்பால்கு, சூல்ச்சு என்றவர்கள் இப்படி வேதாகமங்களை தமிழ் திருப்பினது மெச்சப்படத்தக்க காரியமானாலும், அவர்கள் செய்த மொழிபேர்ப்பு இப்பொழுது வழங்குகிற மொழிபேர்ப்பைப்போல திருத்தமாய் இருந்ததென்று நினைக்கலாகாது. அவ்வளவு பெரிய வேலை ஒரு மனிதனாலாவது ஒரு தலைமுறைகாலத்திலாவது சீராய் முடியாது. படிப்படியாக பல பேராலே முடியும். அஸ்திபாரம்போட்டு நல்லாரம்பம்பண்ணினதே சீகன்பால்க் ஐயருக்குப் போதுமான மகிமை. அவர் செய்த மொழிபேர்ப்பு இன்ன மாதிரி என்று நீங்கள் அறியும்படி, அதின் முதலாம் பதித்தலிலிருந்து சிலவற்றை எடுத்துக் காட்டுவோம்.

முதல் பங்கு புஸ்தகத்தின் முகப்புத்தாளாவது.

BIBLIA DAMULICA

SEU QUOD

DEUS OMNIPOTENTISSIMUS

SEMETIPSUM EX SUA ÆTERNITATE CLARIUS
MANIFESTURUS DE CÆLO EST
LOCUTUS

VETERIS TESTAMENTI

PARS PRIMA

IN QUA

MOSIS LIBRI QUINQUE, JOSUÆ LIBER UNUM,
ATQUE LIBER UNUS JUDICUM, STUDIO ET OPERA;

BARTHOLOMÆI ZIEGENBALGII

MISSIONARII AD INDOS ORIENTALES.

IN LINGUAM DAMULICAM VERSI CONTINENTUR
TRANQUEBARIÆ,
IN LITTORE COROMANDELINO.

TYPIS ET SUMPTIBUS MISSIONIS DANICÆ.

MDCCXXIII.

---

பின்பு 1728-ம்-௵த்தில் தள்ளுபடியாகமங்களையும் அச்சடித்தார். ஆனாலும் அதை அச்சடிக்கிறதினாலே என்ன பிரயோசனம் ஆகும் என்று எண்ணினாரோ தெரியாது. அது கர்த்தருடைய வசனமல்லவென்பது நிச்சயம்.

இரண்டாம் பங்காகமத்து முகப்புத்தாளாவது.

## BIBLIA DAMULICA

SEU QUOD

## DEUS SAPIENTISSIMUS

IN SUA DIVINA ŒCONOMIA CUM POPULO ISRAELITICO

ET EGIT ET LOCUTUS EST

# VETERIS TESTAMENTI

## PARS SECUNDA

IN QUA

LIBELLUS RUTH, SAMUELIS LIBER PRIOR ET POSTERIOR
REGUM LIBER PRIOR ET POSTERIOR, LIBER ESDRÆ
LIBER NEHEMIÆ LIBER ESTHER LIBER JOBI,
LIBER PSALMORUM DAVIDIS, LIBER PROVERBIORUM,
LIBER ECCLESIASTÆ, ET LIBER CANTICI CANTICORUM,

STUDIO ET OPERA

## BARTHOLOMÆI ZIEGENBALGII

ET

## BENJAMINI SCHULTZII

MISSIONARIORUM AD INDOS ORIENTALES,

IN LINGUAM DAMULICUM VERSI CONTINENTUR

TRANQUEBARIÆ,

IN LITTORE COROMANDELINO.

TYPIS ET SUMPTIBUS MISSIONIS DANICÆ.

MDCCXXVI.

(1) பழைய ஏற்பாடு 3 பங்காக அச்சடிவித்த முதலாம் பதித்தலில் ஒரு பிரதி, சென்னபட்டணத்து வேதாகம சங்கத்தாருடைய சாலையில் வைத்திருக்கிறது. அதைப் பார்த்து எழுதுகிறேன்.

---

ஒவ்வொரு பங்குக்கும் முகப்புத்தாள் இலத்தீனும் தமிழுமாக இரண்டுபாஷைகளிலும் போட்டிருந்தது. மூன்றாம் பங்காகமத்துக்கு தமிழ்ப் பாஷையில் கண்டிருந்த முகப்புத்தாள் இதோ இங்கே காட்டுகிறோம்.

ஒருகண்ட சீராயிருக்கிறவருமாய் எல்லாத்
தையும அறிந்திருக்கிறவருமாய் அளவில்லாத பரி
சுத்தமுள்ளவருமாயிருக்கிற
**பராபரவஸ்த்துவானவர்**



பழைய ஏற்பாடு நிற்கிறபோது, புதியேற்
பாட்டினுடைய மகிமையை வெளிப்படுத்தப்போற
யேசுக்கிறீஸ்த்துவின்பேரிலே திரு
விளம்பத்தின

## வேத
## பொஷ்த்தகத்தின்

மூன்றாம் வகுப்பு
இதிலே

அற்சிய சிஷ்ட்ட தீர்க்கதரிசிகளாகிற யெசயீயாசென்கிறவர் கண்ட தெரிசனத்தினுடைய பொஷ்த்தகமும் யெரோமியாசென்கிறவர் பண்ணின பிரசங்கத்தனுடைய பொஷ்த்தகமும் அவர் பாடின புலம்பலினுடைய பொஷ்த்தகமும் யெசேக்கியேலென்கிறவனுக்குக் காணப்பட்ட தெரிசனத்தினுடைய பொஷ்த்தகமும் தானியேலென்கிறவர் தெரிசனமாக கண்ட வர்த்தமானங்களுடைய பொஷ்த்தகமும் ஒசேயாசும் யோவேலும் ஆமோசும் ஒபாதியாவும் யோனாசும் மிகாவும் நாகுமும் அபகுக்கும் செபானியாவும் ஆகாயும் சகரியாசும் மல்கியாசும் என்கிறவர்கள் தீற்க்கதெரிசனமாக சொல்லி
யெழுதிவைத்த பொஷ்த்தகங்களும்
அடங்கியிருக்குது

கிறிஷ்த்து பிறந்த ௲௭௱௨௰௬ வருஷமாகிறபோது இது தரங்கன்
பாடியிலேயிருக்கிற பாதிரிமார்களுடைய அச்சிலே
பதிக்கப்பட்டது.

---

மேலேகண்ட தாளில் எழுத்துப் பிழையும் புள்ளிக் குறைவும் மிகுதியாயிருப்பதால், அதை வாசிப்பதும் சிலருக்கு வருத்தமாயிருந்தாலும் இருக்கலாம். ஆகிலும் அட்சரங்கள் மகா கேவலமாய் இருந்ததைக் கூட்டி நிதானிக்கும்போது, அதை முதலாவது வாசித்தவர்களுக்கு அதிக வருத்தம் கொடுத்திருக்கவேண்டுமே.

(இன்னும் வரும்.)

---

## Memoir of the late Rev. Abraham Samuel.

## கனம்பொருந்திய ஆபிரகாம் சாமுவேல் ஐயரவர்களுடைய

### ஜீவிய சரித்திரம்.

திருநெல்வேலி ஜில்லாவில் சர்ச்சுமிஷன் ஆரம்பமானபொழுதே கிறிஸ்துமார்க்கத்தைச் சேர்ந்து, நாற்பது வருஷத்துக்கு அதிகமாய் சபையிலேற்பட்டிருக்கும் ஒவ்வொரு படியிலும் திவ்விய ஊழியத்தை நடப்பித்துவந்த இவர்களுடைய சரித்திர நுட்பங்களையெல்லாம் சொ

ல்லுகிறதானுல் அதிகமாய் விரியுமென்று எண்ணி சில பொதுக் குறிப்
புகளை மாத்திரம் இங்ஙனம் எடுத்துச்சொல்லுகிறேம்.

ஆபிரகாம் சாமுவேல் ஐயரவர்கள் 1815 ம் ௵ சாத்தன்குளத்தில்
இந்துமதஸ்தரான தாய்தந்தைகளிடத்தில் பிறந்தவர்கள். இவர்கள்
குடும்பத்தார் விக்கிரகாராதனையில் வைராக்கியமுடையவர்களாய்
இராமசுவாமியைக் குலபத்தியாய்த் தொழுது பூசை, திருவிழா முத
லிய உற்சவங்கள் நடப்பித்துவந்தார்கள். 1823 அல்லது 1824 ம ௵த்
தில் கனம்: இரேனியூஸ் ஐயரவர்கள் அனுப்பிய மாசில்லாமணி பிள்ளை
யும் முத்தயபிள்ளையும் சாத்தன்குளத்தில் வந்து சுவிசேஷத்தைப் பிர
சங்கித்து வந்தபொழுது, இவர்கள் தகப்பனர் நாளடைவில் அவர்கள்
பிரசங்கங்களின்மூலமாய் கிறிஸ்துமார்க்கமே மெய்மார்க்கமென்று
உணர்ந்து, அதிற் சேர்ந்துகொள்ள விருப்பங்கொண்டிருக்கிறதாக
தமது பெற்றேர்களிடத்தில் அறிவிக்க, அவர் தகப்பனரும் ஷை விக்
கிரகாலயத்தில் விசேஷித்த பணிவிடைகள் நடப்பித்துவந்த அவரு
டைய தாயாரும் மற்றும் சகோதரர் பெந்துக்களும் அழுது கூச்சலிட்
டும் பயமுறுத்தியும் தங்கள் சுவாமியின் நாமத்தினுலே சபித்தும் தங்
களாற் கூடிய அளவு தடைசெய்தபோதிலும் அவர் பின்வாங்காமல்
கிறிஸ்துமார்க்கத்திற் சேர்ந்துகொண்டார். சாத்தன்குளத்தில் முதல்
முதல் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டவர் இவரே. அப்
பால் அவருடைய போதனையினுலும் ஏவுதலினுலும் அவருடைய பெந்
துக்களிற் சிலரும் மார்க்கத்திற் சேர்ந்தார்கள். இவர்கள் விக்கிரகா
ராதனையைத் தள்ளி கிறிஸ்துமார்க்கத்தை யேற்றுக்கொண்டதினிமித்
தம் அஞ்ஞான பெந்துக்களாலும் அவர்களுடைய ஏவுதலினுல் சர்க்கார்
உத்தியோகஸ்தர்களாலும் இவர்களுக்கு நேரிட்ட துன்பம் கொஞ்ச
மல்ல. கூட்டங் குமிசல் செய்து பயமுறுத்தியும் கள்ளப் பிரியாதுகள்
நடப்பித்தும் மற்றும் பலவகையில் இடுக்கண்செய்தும், ஐயரவர்கள்
தகப்பனருக்கு அக்காலத்தில் தேவச்செயலாலுண்டான ஒரு பெரிய
வியாதி அவர்கள் விட்டுவந்த தேவர்களுடைய கோபத்தினுல் வந்த
தென்று பழித்தும் வந்தபோதிலும், இவர் மார்க்கத்தில் உறுதியுடைய
வராகவிருந்தார். 1826 ம் ௵ செப்றெம்பர் ௴ 21௳ கனம்: இரேனி
யூஸ் ஐயரவர்களால் அவரும் அவருடைய சமுசாரமும் ஞானஸ்நானம்
பெற்றுர்கள். அப்பொழுது உத்தேசம் பதினெரு வயசாயிருந்த அவர்
குமாரராகிய இவர்களும் அந்தச் சமயத்திலேயே அரிராமு என்ற
பழய பேரை மாற்றி ஆபிரகாம் என்னும் பெயரால் ஞானஸ்நானம்
பெற்றுக்கொண்டார்கள். அப்புறம் அவ்விடத்தில் ஏற்பட்டிருந்த கிறி
ஸ்துமார்க்கப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டு வரும்போது,
கனம்: இஸ்மித் ஐயரவர்கள் இவர்களுடைய திறமையைக் கண்டு முத
லாவது அந்தப் பள்ளிக்கூடத்தில் சட்டம்பிள்ளையாகவும் பின்பு உதவி
வாத்தியாராகவும் நியமித்தார்கள். 1830 ம் ௵ செக்கடிவிளையிலும்
அடுத்த வருஷம் அனுக்கிரகபுரத்திலும் வாத்திமைத் தொழிற்செய்து
வந்தார்கள். 1832 ல் கனம்: இரேனியூஸ் ஐயரவர்கள் பாளையங்கோட்
டையில் ஸ்தாபித்திருந்த உதவி வகுப்பில் அவர்களைச் சேர்த்துக்கொ
ண்டு படிப்பித்ததுமன்றி, அவர்களோடு படித்துவந்த பத்தொன்பது
பேர்களுக்கு அவர்களும் நாடோறும் இரண்டு மணிநேரம் படித்துக்
கொடுக்கும்படி திட்டஞ்செய்தார்கள். அந்தக்காலத்தில் இவர்களிடத்
தில் விளங்கின வேதஅறிவு, உண்மை, சுறுசுறுப்பு முதலிய குணங்களி
னுலே கனம்: இரேனியூஸ் ஐயரவர்கள் இவர்கள்மேல் பிரியங்கொண்டு,
மதுரை ஜில்லாவைச் சேர்ந்த கம்பத்துக்கு உபதேசியாராக அனுப்பி



னுர்கள். அவ்விடத்தில் ஒன்றரைமாதம் தேவஊழியத்தை நடப்பித்து
வந்ததில் புதிதாய்ச் சில வீட்டுக்காரரும் மார்க்கத்திற் சேர்ந்து
கொண்டார்கள். அப்புறம் அந்த ஊரில் அவர்களுக்குச் சுகவீனமுண்
டானதினுலே அவ்விடத்தை விட்டு மாற்றி, புதிதாய்க் கிறிஸ்துமார்க்
கத்துக்கு வந்த சுறண்டைக்கு அனுப்பப்பட்டார்கள். சுறண்டைச்
சனங்கள் மார்க்க அபிமானமில்லாமல் பெயருக்கு மாத்திரம் கிறிஸ்த
வர்களாயிருந்துகொண்டு அநேக ஒழுங்கீனங்களை நடப்பித்து வந்தது
அவர்கள் மனதுக்கு வருத்தமாயிருந்ததினுலே கனம்: இரேனியூஸ்
ஐயரவர்களிடத்தில் ஷையார்களுடைய நடபடிகளை யறிவித்துக்கொண்
டதின்பேரில், அவர்கள் முதுமொத்தமொளியைச் சேர்ந்த கிருஷ்ண
புரத்துக்கு உபதேசியாராக அனுப்பினுர்கள். அவ்விடத்திலிருக்கை
யில் அந்தச் சபையையும் அடுத்த சொக்கலிங்கபுரத்துச் சபையையும்
விசாரித்துவந்ததுமல்லாமல் ஷை சபைகளில் காலைமாலைச் செபஞ்செ
ய்து, வேதஅறிவுக்குரிய பாடங்களை கிரமமாய்ப் படிப்பித்து வந்த
தோடு, மார்க்கத்தினிமித்தம் துன்பப்பட்ட சபையார் வீடுகளுக்கும்
போய்புத்திசொல்லி செபம்பண்ணி ஆறுதற்படுத்தி வருவார்கள். அது
ல்லாமலும் சூழவிருந்த அஞ்ஞானிகளுக்கும் அடிக்கடி சுவிசேஷத்
தைப் பிரசங்கித்து வந்ததில் புதிதாய் அநேகர் மார்க்கத்திற் சேர்ந்து
கொண்டதாக அவர்கள் எழுதிவைத்திருக்கிற யாதாஸ்துக் குறிப்பி
னுல் தெரியவருகிறது. 1834 ம் ௵ மத்தியில் ஆனைகுடியிருப்புக்கு
மாற்றப்பட்டு அவ்விடத்தில் மூன்று வருஷம் திவ்விய ஊழியத்தை
நடப்பித்து வந்தார்கள். அக்காலத்தில் சுற்றுப்புறங்களிலிருந்த அஞ்
ஞான நாடாக்கள் கிறிஸ்தவர்களை மார்க்கத்தைவிட்டு மறுதலிக்கப்
பண்ணி, தங்களிடமாயிழுத்துக்கொள்ள விரும்பி, கூட்டஞ் குமிசல்
செய்து சண்டைசல்லியங்கள் பண்ணி அவர்களைத் துன்பப்படுத்தி வந்
ததில், கர்த்தருடைய கிருபையை முன்னிட்டு இவர்கள் புத்திபூர்வ
மாய்ச் செய்த முயற்சிகளினுல் அஞ்ஞானிகளுடைய தார்ரோக்கம் அவ
மாய்ப்போகவும் கிறிஸ்தவர்கள் மார்க்கத்தில் உறுதிகொள்ளவும் ஏது
வாயிற்று. 1835 ம் ௵ சபையிற் பிரிவினையுண்டானபொழுது, இவர்
கள் சர்ச்சுமிஷன் பக்கத்தில் உறுதியாய் நின்றதுமன்றி, எதிர் கட்சிக்
கிறிஸ்தவர்களும் அவர்களை முன்னிட்டு அஞ்ஞான நாடாக்களும் நடப்
பித்த விரோதங்களைப் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, கிறிஸ்த
வர்கள் கலங்கிப் பின்வாங்கிப்போகாதபடிக்கு விவேகமாய் நடந்து
கொண்டதாயும் தெரியவருகிறது. 1836 ம் ௵ செப்றெம்பர் ௴
ஆனைகுடியிருப்பில் அவர்களுக்கு விவாகம் நடந்தபின்பு, புதுசாய்க்
கிறிஸ்துமார்க்கத்தில் வந்த கந்தன்குடியிருப்புக்கு கனம்: பிளாக்மன்
ஐயரவர்களால் அனுப்பப்பட்டார்கள். அவ்விடத்தில் தேவஊழியத்
தை நடப்பித்து சனங்களை மார்க்கத்தில் உறுதிப்படுத்தி வரும்போது,
நடாகபுரம் சேகரம் வத்தக்குவிளைக் கிறிஸ்தவர்கள் மவுலாக்களால்
துன்பப்பட்டதினுல்ஷை துன்பத்தை நிவர்த்திபண்ணி சனங்கள் மார்க்
கத்தில் ஸ்திரப்படுவதற்கேதுவாகப் பிரயாசப்படும்படி அவ்விடத்துக்
கு அனுப்பினுர்கள். அந்தப்படி அவர்கள் கர்த்தரை முன்னிட்டு ஊக்
கத்தோடு முயற்சிசெய்ததில், ஷை துன்பம் வரவர நிவர்த்தியாய்ப்
போக, அஞ்ஞானக் கிராமங்களிலிருந்து புதுசாய்க் கிறிஸ்துமார்க்கத்
துக்கு வந்தவர்களை தர்மசங்க சம்பந்தமாய் மெய்யூர், நியாயபுரம்
என்ற இரண்டு கிராமங்களில் வெகு பிரயாசத்தின்பேரில் குடியேற்றி
அவர்கள் வேதஅறிவில் விர்த்தியடையும்படி சாக்கிரதையாய்ப் படிப்
பித்துவந்ததினுலே அநேகர் மார்க்கத்தில் தேறி கர்த்தருடைய பத்தி

லையச் சேர்ந்தார்கள். இந்தக்காலத்தில் கர்த்தருடைய கிரியை அத்தி
சைகளிலே வெகு அனுகூலமாய் நடந்தேறி வந்ததாகக் குறிப்பித்தி
ருக்கிறார்கள்.

1841 ம் வருஷத்தில் கனம்: பிளாக்மன் ஐயரவர்கள் சீமைக்குப்போய்
விட, ஷை சேகரம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு கனம்: யோவான்
தேவசகாயம் ஐயரவர்கள் இவர்களிருந்த கடாக்ஷபுரம் பிரிவை விசா
ரித்துவந்ததில், இவர்களுடைய பிரயாசங்களைக் கவனித்து சந்தோ
ஷப்பட்டு பலவகையில் உற்சாகப்படுத்தி வந்தார்கள். மேலும் ஷை
ஐயரவர்களுடைய அந்தரங்கச் சம்பாஷணைகளினாலும், மாதிரியினா
லும், சர்ச்சுமிஷன் சங்கத்துக்குச் செக்கிரட்டேரியாயிருந்த கனம்:
ஜான் டக்கர் ஐயரவர்கள் ஒரு விசை உபதேசிமாரிடத்தில் கருத்தாய்ப்
பண்ணின பக்திக்குரிய விசாரணையினாலும் இக்காலத்தில் இவர்களுக்
குள் விசேஷித்த எழுப்புதலும் மனத்தெளிவும் உண்டானதாகத் துலங்
குகிறது. 1844 ம் வருஷத்தில் அவர்கள் ஷை சேகரத்துக்கு விசாரணை உப
தேசியாராக நியமிக்கப்பட்டு கடாக்ஷபுரத்திலும் மெய்யூரிலுமிருந்து
வேலையை உண்மையோடும் சாக்கிரதையோடும் செய்துவந்தார்கள்.
இரண்டு வருஷத்துக்குப் பிறகு, சர்ச்சுமிஷன் கமிற்றிமார் உத்தரவுப்
பிரகாரம் சுதேசிகளிற சிலரைக் குருப்பட்டத்துக்குப் படிப்பிக்கத்
தெரிந்துகொண்டபொழுது, கனம்: யோவான் ஐயரவர்கள் இவர்களு
டைய பக்தியையும் அறிவையும் திவ்விய ஊழியத்தில் விளங்கிய உண்
மையையுங் கவனித்து, இவர்கள் பெயரையும் எழுதிவைத்தார்கள்.
இது காரியத்தை அவ்விடங்களிலுள்ள கிறிஸ்தவர்கள் கேள்விப்பட்ட
வுடனே அதினால் தங்கள் காரியத்துக்குப் பிரதிகூலம் நேரிடுமென்று
எண்ணி முறையிட்டுக்கொண்டபோதிலும், கனம்: யோவான் ஐயரவர்
கள், எனக்கும் என் சேகரத்துக்கும் இதினால் தற்காலத்துக்கு நஷ்டம்
நேரிடுகிறதாயிருந்தாலும் கர்த்தருடைய கிரியைக்கு மிகவும் அனு
கூலமாயிருக்குமென்று சொல்லி சபையாரைச் சமாதானப்படுத்தின
தோடு இவர்களையும் தைரியப்படுத்தினதினாலே இவர்கள் தேவசித்தத்
துக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, அந்தப்படியே பாளையங்கோட்
டையில் கனம்: பெற்றிற்று ஐயரவர்களிடத்தில் படிக்கப்போனார்கள்.
அதுமுதல் பாளையங்கோட்டையிலும் சுவிசேஷபுரத்திலுமாக நாலு
வருஷம் கனம்: சார்ஜென்று ஐயரவர்களால் வேதசாஸ்திரத்திற் போ
தனையடைந்து, 1851 ம் வருஷத் துவக்கத்தில் நடந்த பட்டப்பரீட்சை
யில் வேறொருவரும் இவர்களும் முதலிடத்தில் தேறி மகாகனம்பொ
ருந்திய டால்த்திரி கண்காணியாரவர்களால் பெபுருவரிமீ 2உ பாளை
யங்கோட்டையில் உதவிக்குருப்பட்டமும், அப்புறம் 1865 ம் வருஷ
மார்ச்சுமீ 1உ மெஞ்ஞானபுரத்தில் குருப்பட்டமும் பெற்றுக்கொண்
டார்கள். பின்பு சென்னைபட்டணம் கமிற்றிமார்களால் சுவிசேஷ
புரத்தில் கனம்: ஜேம்ஸ் இஸ்பிராற்று ஐயரவர்களுக்கு உதவிசெய்யும்
படியாக நியமிக்கப்பட்டு, ஒரு வருஷம் அத்திசையில் கர்த்தருடைய
ஊழியத்தை மிகுந்த ஊக்கத்தோடு அனுகூலமாய் நடப்பித்துவந்தார்
கள். ஊரிலிருக்குங் காலத்தில் தங்கள் வழக்கமான வேலைகளோடு
உதவிக்காரருக்குப் படிப்பித்தும் உபதேசிமார் கூடுதல்களிலும் வாரந்
தோறும் நடந்த பள்ளிக்கூடப் பரீட்சைகளிலும் கனம்: இஸ்பிராற்று
ஐயரவர்களுக்கு உதவிசெய்தும் வந்ததுமன்றி, மாசத்தில் இரண்டு
வாரம் கிராமாந்தரங்களுக்குப்போய் சபைகளையும் பள்ளிக்கூடங்களை
யும் விசாரித்து அஞ்ஞானிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவித்துவரு
வார்கள். இப்படி அவர்கள் உண்மையோடும் பக்தியோடும் தேவஊழி



யத்தை நடப்பித்துவந்ததை கனம்: இஸ்பிராற்று ஐயரவர்கள் கவனித்
து அவர்களை மிகுதியும் நன்குமதித்து நேசித்துவந்தார்கள். அதினா
லேயே சுறண்டைச்சேகரம், ஊற்றுமலைக்குப்போகும்படி கமிற்றிமார்
அவர்களுக்கு உத்தரவு அனுப்பியிருந்தும், ஷை ஐயரவர்கள் அவர்களை
விட மனமில்லாமல் அந்தச் சேகரத்துக்கு அவர்களிருப்பது அவசிய
மென்று எழுதி நிறுத்திக்கொண்டார்கள். ஆகிலும் சீக்கிரத்துக்குள்
ளாக ஆசீர்வாதபுரம் சேகரத்துக்கு அவர்களை யனுப்பும்படி அவசியம்
நேரிட்டபடியினாலே கமிற்றிமாருடைய உத்தரவுக்கு மறுபடியும் தடை
சொல்வது சரியல்லவென்று நிதானித்து செபத்தோடு அவ்விடத்துக்
கு அனுப்புவித்தார்கள். 1852 ம் வருஷத் துவக்கத்தில் அவர்கள் ஆசீர்
வாதபுரத்துக்குப்போய் கர்த்தருடைய ஊழியத்தை அதிக சிரத்தை
யோடு செய்துவந்தார்கள். அங்கிருந்த காலத்தில் சபை தொகையி
லே பெருகவும், சபையாரும் பள்ளிப்பிள்ளைகளும் வேதஅறிவில் தேற
வும் பிரயாசப்பட்டதுமல்லாமல், விசேஷமாய்க் கிறிஸ்தவர்கள் சன்
மார்க்கத்திலும் தேவபக்தியிலும் தர்மசிந்தையிலும் விர்த்தியாகும்
படிக்கு பலவகையான முயற்சிகளைச் செய்துவந்தார்கள். இந்தச் சே
கரத்தில் கனம்: பெற்றிற்று ஐயரவர்கள் நாள்முதல் வழங்கிவந்தபடி
சபையார் வருஷத்தில் ஒருநாள் வருமான மாத்திரம் சங்கத்துக்குக்
கொடுத்துவருவது போதாதென்று நிதானித்து, கனம்: தோமாஸ்
ஐயரவர்களிடத்தில் அதைக்குறித்துப் பேசி அவர்கள் சம்மதியோடு
ஒவ்வொரு சபையிலும் சங்கங் கூட்டி அவரவர் தம்தம் திராணிக்குத்
தக்கதாக உற்சாகமாய்த் தொகையெழுதும்படி யேவி, சங்கத்துக்கு
அதிக வருமானத்தை உண்டுபண்ணினார்கள். சபையார் சங்கத்துக்கு
இப்படி உதாரமாய்க்கொடுப்பது தங்கள் கடமையென்று உணர்ந்து
அதில் நன்றாய்ப் பழகிப்போகும்படியாக இவர்கள் பட்ட பிரயாசம்
கொஞ்சமல்ல. இவ்விதமாய் இந்தச் சேகரத்தில் உத்தேசம் பத்துவரு
ஷம் இவர்கள் செய்த வேலையைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். அவர்கள்
அவ்விடத்துக்குப் போகும்போது, 1300 கிறிஸ்தவர்கள் மாத்திரமிருந்
தார்கள்; அதை விட்டுப்போகும்போது 2500 பேர் வரையும் பெருகியி
ருந்தார்கள். சனங்கள் வேதஅறிவிலும் நல்லொழுக்கத்திலும் உள்
ளான பக்தியிலும் நாளடவில் தேறி வந்ததைக் கண்டு சந்தோஷப்
பட்டதாகவும் குறிப்பித்திருக்கிறார்கள். அப்படியிருக்குங்காலத்தில்
திடீரென்று நல்லூர்ச்சேகரத்துக்குப்போகும்படி கமிற்றிமார்களுடை
ய உத்தரவு வந்தது. அது இவர்கள் மனதுக்குச் சற்று ஆயாசமாயிருந்
தபோதிலும், எந்த இடத்திலும் கர்த்தருடைய ஊழியத்தைச்செய்வ
து தங்கள் கடமையென்று உணர்ந்து, உத்தரவுப்படிக்குப் புறப்பட்டு
1860 ம் வருஷ நல்லூருக்குப் போனார்கள். கனம்: கிளார்க் ஐயரவர்கள்
ஷை சேகரத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து கீழ் சேகரத்தை இவர்
கள் வசத்தில் ஒப்புவித்ததின்பேரில், சீவலசமுத்திரத்திலிருந்துகொ
ண்டு வழக்கப்படிக்கு தங்கள் கடமைகளை நிறைவேற்றிவந்தார்கள்.
இந்தச் சேகரத்திலுள்ள சபைகள் கீழ் திசைச் சபைகளைப்போல
சங்கத்துக்கு ஒன்றுங்கொடாமலிருந்ததை இவர்கள் கண்டு கனம்:
கிளார்க் ஐயரவர்களிடத்தில் யோசித்ததில், சனங்களுடைய அறிவீ
னத்தையும் உற்சாகத்தாழ்ச்சியையும் அவர்கள் பார்த்து முதலில் மன
மில்லாதிருந்தும் பின்பு சம்மதித்துக்கொள்ள ஊரூராய்ச் சங்கங்
கூட்டி சபையாதரவுக்கு பொருள் சேர்க்க ஆரம்பித்தார்கள். இந்த
வழக்கம் துவக்கத்தில் சனங்களுக்கு மிகுந்த வெறுப்பைக் கொடுத்த
போதிலும், அநேகர் வரவர அது தங்கள் கடமையென்று அறிந்து

கொண்டார்கள். மேலும் அவ்விடத்துச் சபையாருக்குள் அறிவீனமும் அஞ்ஞான வழக்கங்களும் மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் சீர்ப்படும்படிக்கு கோவிற் பிரசங்கங்களில் அவைகளைச் சுட்டிக்காட்டிப் புத்திசொல்லிவந்ததுமன்றி, அவர்கள் வீடுகளிற் செபக்கூட்டங்கள் வைத்தும், அவரவரைத் தனித்துக் கண்டுபேசியும், பலவகையாய்ப் பிரயாசப்பட்டும் வந்தார்கள். என்றாலும் முக்கியமாய் அவர்கள் ஸ்தாபகமாயிருந்த ஊர்ச் சபையில் அவ்வளவு சீர்ப்படுதல் காணாததினாலே அவர்கள் மனதுக்கு மிகுந்த வேதனையுண்டாயிருந்ததாகவும், அதுவே அவர்கள் தேகபலவீனத்துக்கும் அடிக்கடி உண்டான சுகவீனத்துக்கும் ஒரு முக்கிய முகாந்தரமென்றும் குறிப்பித்திருக்கிறார்கள். சென்ற அக்டோபர் மாதத்தில் அவர்கள் முகத்தில் ஒரு பரு உண்டாகி மிகவும் வருத்தப்பட்டபொழுது, அந்த வியாதிமூலமாய்க் கர்த்தர் தங்களை அழைத்துக்கொள்ளச் சித்தமாயிருந்தாற்போல நினைத்து, ஆயத்தமாய்க் கர்த்தருடைய சித்தத்துக்குக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நினைத்தபடி அக்காலத்தில் நடவாவிட்டாலும், அதற்குப்பின் எழுதிய பல காகிதங்களில், [illegible] மாறுதல் சீக்கிரம் நடக்கப்போகிறது போலவே உணர்ந்து, தாங்கள் எப்பொழுதும் அதற்கு ஆயத்தமாயிருக்கிறதாகக் காட்டியிருக்கிறார்கள். ஆகிலும் அதற்குமுன் சென்னைப் பட்டணமுதலிய இடங்களில் மார்க்கசம்பந்தமாய் நடந்தேறிவரும் முயற்சிகளைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையினாலும், இடம்பேர்வதினால் ஒருவேளை தற்காலத்தில் சுகத்துக்குச் சற்று அனுகூலமுண்டானாலும் உண்டாகலாம் என்ற எண்ணத்தினாலும், சர்ச்சுமிஷன் கமிற்றிச் செக்கிரட்டேரியார் இவ்விடத்தில் வந்திருந்தபோது அதற்கென்று உத்தரவுகேட்டுப் பெற்றிருந்தார்கள். அதற்கு முந்தியே அவர்களை அழைத்துக்கொள்ளக் கர்த்தர் குறித்த காலம் வந்துவிட்டது. மார்ச்சு மாசத் துவக்கத்தில் அவர்கள் கழுத்தின் பின்புறத்தில் தினையரிசி போல ஒரு பரு புறப்பட்டது. அது அற்பமாயிருந்ததினாலே ஒன்றுஞ் செய்யமாட்டாதென்று எண்ணி, இரண்டு முறை அதை நகத்தினால் கிள்ளிவிட்டார்கள். அப்புறம் அதினால் கொஞ்சம் நோவுண்டாயிருந்தபோதிலும், மேற்படி மாதம் 8உ நல்லூரில் உபதேசிமார் வாத்திமார் கூடுதலுக்கு வழக்கப்படி போய், கிறிஸ்துநாதருடைய சிநேகத்தின் அருமையைப்பற்றி மிகுந்த அனலோடு பிரசங்கஞ்செய்து, கர்த்தருடைய இராப்போசனமும் பரிமாறினார்கள். சனிக்கிழமை வீட்டுக்குத் திரும்பினதுமுதல் பருவில் நோவு அதிகப்படத் தொடங்கிற்று. என்றாலும் அது மரணத்துக்கேதுவாயிருக்குமென்று அவர்களாவது, அவர்களைப் பார்க்கவந்த சனங்களில் ஒருவராவது நினைத்ததேயில்லை. அது முதல் பல பக்குவங்கள்செய்தும், வியாதி அதிகரித்து உள்ளுக்குப் புரைவைத்துக் கடைசியில் மரணத்துக்கேதுவாயிற்று. மரிக்கிறதற்கு முந்தின நாளாகிய புதன்கிழமையிலும் படுக்கையில் படுத்துக்கொள்ளாமல், வழக்கப்படி உட்கார்ந்திருந்து, தங்களைப் பார்க்கவந்த சனங்களோடு அன்பாயும் தெளிந்த புத்தியோடும் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். மரணத்தைப்பற்றி எவ்வளவேனும் பயமில்லாமல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயும், ஆறுதலும் சமாதானமுமுடையவர்களாயுங் காணப்பட்டார்கள். அன்று சாயந்தரமுதல் தோஷிப்பு உண்டாயிருந்தபோதிலும், விடிகிற நேரம்வரையில் புத்திமயக்கமில்லாமல் தெளிவோடிருந்து, தங்கள் சமுசாரம் பிள்ளைகள் அழுதுகொண்டிருந்ததைக் கண்டு, "என்ன பைத்தியம், ஏன் அழவேண்டும், கர்த்தர் இருக்கிறார், உங்களை விசாரித்துக்கொள்ளுவார்" என்றிப்படி பல



முறையும் புத்திசொல்லி ஆறுதற்படுத்தி, தங்கள் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்கள். கடைசியில் தங்கள் பிள்ளைகளெல்லாரையும் கிட்டவரச்சொல்லி, அவர்களைச் சிறிதுநேரம் நன்றாய்ப் பார்த்துக்கொண்டிருந்து பின்பு "நீங்கள் எனக்காக துக்கப்படவேண்டாம், கர்த்தர் இருக்கிறார், அவர் உங்களெல்லாரையும் விசாரித்துக்கொள்ளுவார்" என்று சொல்லி ஆறுதற்படுத்தி அனுப்பிவிட்டார்கள். அப்புறம் உத்தேசம் நாலு மணிநேரம் எவ்வளவேனும் நோவும் கவலையுமில்லாமல் படுத்திருந்து, வியாழக்கிழமைக் காலை 11 மணியளவில் 57 வயசுள்ளவர்களாய், மிகுந்த அமரிக்கையோடும் சமாதானத்தோடும் இம்மையில் தங்கள் சீவ ஓட்டத்தை முடித்து, கர்த்தருடைய இராச்சியத்துக்குட்பட்டார்கள். அவர்களுடைய சமாதானமான மரணப்படுக்கையைக் கவனித்த யாவரும் [illegible] ஆச்சரியமுமடைந்து, அப்பேர்ப்பட்ட பாக்கியமான முடிவு விரும்பப்படத்தக்கது என்று காண்பித்தார்கள். சபையாரும் அவ்வாறே அத்தேசத்திலுள்ள அநேக அஞ்ஞானிகளும், தங்களுக்கிருந்த உத்தம சிநேகிதனும் பெரிய உபகாரியும் நல்லாலோசனைக்காரருமானவர்கள் போய்விட்டார்களே, தங்களுக்குப் பெரிய நஷ்டம் நேரிட்டதே என்று சொல்லி மிகவும் பிரலாபித்தார்கள். மேலும் உள்ளூர்ச் சபையார் அத்தருணத்திற் காண்பித்த குறிப்புகளைப் பார்த்தால், அவர்கள் சொல்லிவந்த புத்திபோதனைகளை அதிகமாய்க் கவனித்தோமில்லையே என்றும், இனி அவர்களுடைய அன்பான புத்திகளைக் கேட்கிறதற்கு இடமில்லாமற் போயிற்றே என்றும், இனிமேலாவது அவர்கள் சொன்ன புத்திமதிகளின்படி சீர்ப்படவேண்டுமென்றும் உணர்ந்துகொண்டதுபோல தோன்றிற்று.

கனம் ஆபிரகாம் சாமுவேல் ஐயரவர்களுடைய குணம் நடத்தைகளில் யாவரும் அனுகூலமாய்ப் பின்பற்றத்தக்கதும், மிகுந்த பிரயோசனத்துக்கேதுவுமான பல விசேஷங்களுண்டு. அவைகளில் இரண்டொன்றை இங்ஙனஞ் சொல்லி முடிக்கிறோம். அவர்களுடைய புத்திக் கூர்மைக்கும் படிப்புத் திறமைக்கும், பட்டத்துக்குப் பரீட்சைகொடுத்த எழுபேரில் முதல் வகுப்பில் தேறி, பரீட்சகர்களால் நற்சாட்சியும் பெற்றுக்கொண்டதைப் பார்க்க வேறு அத்தாட்சி தேவையில்லையே. அவர்கள் உயர்தரமான பாடசாலைகளில் கல்வி அப்பியாசஞ்செய்யாமல் சாதாரண கிராமப்பள்ளிக்கூடங்களில் கொஞ்சம் வாசிப்பு முதலியது மாத்திரங் கற்று, மிஷன் அலுவல்களிற் பிரவேசித்தவர்களாயிருந்தும், பிற்காலத்தில் தங்கள் புத்திபலத்தினாலும் விடாமுயற்சியினாலும் வேதசாஸ்திரத்தில் மிகவும் கடினமான விஷயங்களையும் கிரகித்துத் தெளிந்துகொள்ளக் கூடியவர்களாயிருந்தார்கள். அவர்கள் பிரசங்கங்களில் சாஸ்திர சம்பந்தமான விளக்கங்கள் திருஷ்டாந்தங்கள் அவ்வளவாயில்லாதிருந்தும், வேதவசனத்தின் தெளிந்த நியாயங்களும் அனுபவத்துக்குரிய ஆழ்ந்த யோசனைகளும் வெகுவாய் அடங்கியிருக்கும். அவர்களோடு சம்பாஷிக்கிறவர்கள் பலவகையிற் பிரயோசனம் அடையாமற்போவது அபூர்வம்.

அவர்களிடத்தில் விளங்கிய விவேகமும் கவனிக்கப்படத்தக்கது. இது அவர்களுக்கு தேவானுக்கிரகமாய்க் கிடைத்திருந்த விசேஷித்த வரமென்று சொல்லவேண்டும். இந்தச் சாமர்த்தியத்தினால் அவர்கள் தேவஊழியம் நடப்பித்த இடங்களிலெல்லாம் சபையின் காரியங்களை அனுகூலமாய் நிர்வகித்துக்கொண்டது மாத்திரமல்ல, எந்த மதஸ்தரும் எந்த வருணத்தாரும் தங்களை நன்குமதிக்கவும் மரியாதைசெய்யவும் பண்ணிக்கொண்டார்கள். பிறர் விஷயத்தில் மாத்திரந்தான் இத்

திறமையைச் செலுத்தினார்களென்றல்ல, தங்கள் வீட்டுக்காரியங்களை நடத்தின வகையிலும் நன்றாய்க் கையாளப்பட்டது. அவர்கள் குடும்பச் சவரக்ஷணையிலும் பிள்ளைகள் படிப்பு கலியாண விஷயங்களிலும் அதிகச் செலவுகள் நேரிட்டிருந்தும், பெந்துக்களிற் சிலர் துவக்க முதல் நெடுகிலும் அவர்களால் உபகாரம்பெற்றுக்கொண்டு வந்திருந்தும், கடனுக்குட்படாதபடிக்கு விழிப்பாயிருந்து, மிதமிஞ்சிப் பிசினித்தனம்பண்ணாமலும் ஆடம்பரச் சிந்தையினால் வீண் செலவுசெய்யாமலும் எந்தக்காரியத்திலும் முன் யோசனையோடு நடந்துவந்தார்கள். அவர்கள் மரணப்படுக்கையில் உலக எண்ணமும் குடும்பக்கவலையுமில்லாமல் ஆறுதலாயுஞ் சமாதானமாயுமிருந்ததற்கு இதுவும் ஒரு முக்கிய முகாந்தரம் என்பதற்குச் சந்தேகமில்லை.

அவர்களிடத்திற் கண்டுகொள்ளத்தக்க வேறொரு நற்குணம் நேர்மை. பெரியோர்களிடத்தில் முகஸ்துதி பேசுவது அவர்கள் வழக்கமல்ல. தங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டியபொழுதில், மனித பயத்தினாலாவது தன்னயத்தை நாடியென்கிலும் காரியத்தை மறைக்காமல் உள்ளபடியே வெளியிடுவார்கள். இந்த நடத்தையினால் சில சமயங்களில் பெரியோர்களுடைய மனஸ்தாபத்துக்கும் அவர்கள் ஏதுவானதுண்டு. இந்த நேர்மைதான் அவர்களுடைய புத்தியையும் விவேகத்தையும் பிரகாசிப்பித்தது என்று சொல்லலாம். அஞ்ஞானிகளும் அவர்களை அதிகமாய் மதித்துக் கனப்படுத்தினதற்கு ஒரு முகாந்தரம் யாதெனில், ஒரு அஞ்ஞானியும் ஒரு கிறிஸ்தவனுமாவது, பழக்கமுள்ள ஒருவனும் பழக்கமில்லாத ஒருவனுமாவது அவர்களிடத்தில் தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ளவந்தால், எவர்களுக்கும் பட்சபாதம் காண்பிக்காமல் வழக்கைச் சரியாய்ப் பகிர்ந்துபேசி நீதியாய்ப் பைசல்சொல்லிவந்ததுதான். ஆகையால் அவர்களுடைய விவேகசாமர்த்தியம் உலக தந்திரங்களோடும் சூதுகளோடுங் கூடினதல்லவென்று அறிந்துகொள்ளலாமே.

காரிய நிதார்த்தமும் அவர்களிடத்தில் பிரகாசமாய் விளங்கின ஒரு நற்குணந்தான். சுதேசிகள் பெரும்பாலும் ஒழுங்கீனத்தைக் குற்றமென்று எண்ணார்களே. அப்பேர்ப்பட்டவர்களுக்கு இந்த அருமையான வழக்கம் சில காரியங்களிற் கடினம்போல் தோன்றினாலும் தோன்றும். அதுவதுக்கடுத்த காரியங்களில் அவர்கள் எப்படி ஒழுங்காய் நடந்துவந்தார்களோ, அப்படியே அவர்கள் கையிட்டுக்கொள்ளுஞ் சகல விஷயங்களிலும் கண்டிப்பாயேயிருப்பார்கள். இந்த வழக்கத்தினால் அவர்களுக்கும் பிறருக்குமுண்டான அனுகூலங் கொஞ்சமல்ல. அவர்கள் மரணப்படுக்கையிலிருக்கும்பொழுது, தங்கள் வீட்டுக்காரியங்களைப்பற்றியாவது, சபைக்கடுத்த காரியங்களைப்பற்றியாவது, யாதொன்றும் ஒருவரிடத்திலும் சொல்லாதிருந்தபோதிலும், காரியங்களெல்லாம் கிரமமாயும் கணக்குகளெல்லாம் மகா திட்டமாயுமிருந்தபடியால் பின்பு அவைகளை ஒப்புக்கொண்டவர்களுக்கு எவ்வளவேனும் கலக்கமும் வருத்தமுமிருக்கவில்லை.

செபத்தில் அவர்கள் காண்பித்துவந்த ஊக்கம் யாவரும் பின்பற்றத்தக்க நன்மாதிரி. வீட்டிலிருக்குங் காலங்களில் காலை மாலைக் குடும்பச் செபம் தவறாமல் நடப்பித்துவருவார்கள். பெந்துக்கள் வீடுகளுக்குப்போயிருக்கும்போது பிரயாணத்தினால் எவ்வளவு ஆயாசமிருந்தாலும் வீட்டார் எவ்வளவு சோலியாயிருந்தபோதிலும், எல்லாரையுங் கூட்டிவைத்து தேவ வசனத்தில் ஓர் பகுதி வாசித்து செபம் பண்ணாமல் நித்திரைசெய்யமாட்டார்கள். மேலும் பிள்ளைகள் அல்



லது பெந்துக்களில் யாராகிலும் எங்கேயாவது பயணம்போகையில், அவர்கள் எந்நேரத்திற் புறப்பட்டாலும் முழங்காலூன்றிக் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை வேண்டிக்கொள்ளாதபடிக்கு வழியனுப்புவது அவர்கள் வழக்கமல்ல. இவைமுதலிய தாலந்துகளைச் சபையின் விர்த்திக்கு அனுகூலமாய் அவர்களுக்கு அருளிய தேவ கிருபையைநாம் புகழும்போது, நமக்குத் தேவவசனத்தைப் போதித்து நம்மை நடத்திப்போனவர்களை நாம் ஞாபகப்படுத்தி அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றும்படிக்கு தேவன் நமக்கு அனுக்கிரகஞ்செய்வாராக.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** அலபாமா என்னும் கப்பல் விஷயத்தைப்பற்றி ஆலோசனை பண்ணித் தீர்ப்புச்செய்யும்படி ஜெனீவா நகரத்தில் கூடிய மத்தியஸ்தர் அமெரிக்கர் கேள்விப்படி அங்கிலேயர் நஷ்டங்கட்டிக்கொடுப்பது நியாயவிரோதமென்று தீர்மானம்பண்ணினார்கள். இவ்விதமாய் அந்தக் காரியம் க்ஷேமமாய் முடிந்தது. இது விஷயத்தில் அங்கிலேய மந்திரிமார் நடப்பித்த வகை மிகவும் மெச்சிக்கொள்ளப்படத்தக்கது.

இத்தாலி தேசத்திலுள்ள விசூவியஸ் மலை சில நாளுக்குமுன் அக்கினி கக்கினபொழுது அதற்குச் சமீபமான கிராமங்கள் அநேகம் அக்கினி வெள்ளத்தில் தாழ்ந்தன. அதனாலுண்டான சேதம் அதிகம். விசூவியஸ் மலையில் பயங்கரமான தோற்றமுண்டானபொழுது ஜாவா தீவிலுள்ள மீராபி என்னும் அக்கினி மலையினின்றும் மிக பயங்கரமாய் அக்கினி வெள்ளம் பாய்ந்தது. உயிர்ச்சேதம் பொருட்சேதம் எண்ணிக்கைக்குள் அடங்கா. மலையிலிருந்து அக்கினி அருவிபோல குதித்துப் பாய்ந்து பெருக, மலைகளுக்குள் இருந்த கணவாய்களும் பள்ளங்களும் அக்கினி பிரளயத்தால் நிறைந்தன. அங்கங்குள்ள பேராறுகளும் சிற்றாறுகளும் தடுக்கப்பட்டன. எண்திசையிலும் எறியப்பட்ட சாம்பல் மூன்று நாள் வரைக்கும் [illegible] வானம் இருண்டது. அதினிமித்தம் பகற்காலத்திலும் விளக்கேற்றுவது அவசியமாயிற்று.

**ஔஸ்திராலியா.** வின்சென்றொருவனெழுதிய கடிதத்தினால் அவ்விடத்தில் தற்காலத்தில் விளைபொருட்கள் அளவுக்குமிஞ்ச உண்டாகின்றனவென்றும், கெடுநாளாய் அதிகப் பொன் வெட்டி எடுக்கப்படுகிறனவென்றும் தெரியவருகிறது.

அங்கிலேயருக்கு அதீனமான அத்தேசத்திலும் இவ்விந்துதேசத்திலும் சீரான ஆளுகை நிலைப்பட்டால் இவ்விரு தேசங்களும் அதிசீக்கிரத்தில் பூர்வத்திலிருந்த ராச்சியங்களைப்பார்க்கிலும் அதிக மேம்பாடான இராச்சியங்களாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

**இந்தியா.** அந்தமான்தீவு கைதியொருவனால் கொலையுண்டிறந்த மேயோ பிரபுவுக்கு ஞாபகசின்னம் இன்னபடி அமைக்கத்தகும் என்று நிரூபிக்கும் சுதந்தரம் மேயோ பிரபு பத்தினியார் பெற்றிருப்பதினால், அப்பெருமாட்டி இதுவிஷயத்துக்காக கல்குத்தாவில் ஏற்பட்டிருக்கும் சங்கத்தாருக்குக் கடிதம்போக்கி, குதிரைப்பிரதிமைமீது விளங்கும் உரு நாட்டுவதே தமக்கு முக்கிய இஷ்டம் என்று தெரிவித்தாராம்.

---

ஜூலை மீ நாள் 31—ஆனி மீ 19உ முதல், ஆடி மீ 18உ வரை.

| வாரம் | ஆங்கில தேதி | தமிழ் தேதி | அனுதினத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | ௧௯ | கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார். யாத். 4: 31. |
| செ | 2 | ௨௰ | சனங்கள் விசுவாசித்தார்கள். 31. |
| பு | 3 | ௨௧ | என் உடன்படிக்கையை நினைத்தேன். 6: 5. |
| வி | 4 | ௨௨ | உங்களை எனக்குச் சனங்களாகச்சேர்த்துக்கொள்ளுவேன். 7. |
| வெ | 5 | ௨௩ | உனக்குப்புறம்பே என்னைத் தள்ளிவிட்டாய். 1இராசா 14: 9. [18 |
| ச | 6 | ௨௪ | கர்த்தருக்கு முன்பாக அவனிடத்தில் நற்காரியம் காணப்பட்டது. |
| ஞா | 7 | ௨௫ | கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதை செய்தார்கள். 22. |
| தி | 8 | ௨௬ | நீதிமான்கள் ஆனந்தசந்தோஷமடைவார்கள். சங்கீதம். 68: 3. |
| செ | 9 | ௨௭ | தேவனுடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுங்கள். 4. |
| பு | 10 | ௨௮ | துரோகிகள் வறண்டபூமியில் தங்குவார்கள். 6. |
| வி | 11 | ௨௯ | உம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறீர். 10. |
| வெ | 12 | ௩௰ | ஆண்டவர் வசனம்தந்தார். 11. |
| ச | 13 | ௩௧ | எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. 19. |
| ஞா | 14 | ௧ | நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே. 19. |
| தி | 15 | ௨ | கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் போக்குகளுண்டு. 20. |
| செ | 16 | ௩ | நீ நேர்ந்து கொண்டதைச்செய். பிரசங்கி 5: 4. |
| பு | 17 | ௪ | உன் வாய்க்கு இடங்கொடாதே. 6. |
| வி | 18 | ௫ | தேவனுக்குப்பயந்திரு. 7. |
| வெ | 19 | ௬ | பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை. 10. |
| ச | 20 | ௭ | தன்னிலும் பலத்தவரோடே போராடமனிதனால் கூடாது. 6: 11. |
| ஞா | 21 | ௮ | இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை. ஏசாயா 44: 21. |
| தி | 22 | ௯ | உன் மீறுதல்களை மேகத்தைப்போல் அகற்றிவிட்டேன். 22. |
| செ | 23 | ௧௰ | உன்னை நான் மீட்டுக்கொண்டேன். 22. |
| பு | 24 | ௧௧ | கர்த்தர் இஸ்ரவேலிலே மகிமைப்படுகிறார். 23. |
| வி | 25 | ௧௨ | என் கோபம் அவர்கள்மேல் மூண்டது. ஓசியா 8: 5. |
| வெ | 26 | ௧௩ | எதுவரைக்கும் சுத்தாங்கமடைய மாட்டாதிருப்பீர்கள் 5. |
| ச | 27 | ௧௪ | ஜீவ அப்பம் நானே. யோவான் 6: 35. |
| ஞா | 28 | ௧௫ | என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். 35. |
| தி | 29 | ௧௬ | என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. 37. |
| செ | 30 | ௧௭ | ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள். வெளிப்படுத்தல் 22: 17 |
| பு | 31 | ௧௮ | தாகமாயிருக்கிறவன் வரக்கடவன். 17. |

## விசேஷித்த நாட்கள்.

5. அமாவாசை.
7. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின் வரும் ஆறாம் ஞாயிறு.
14. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின் வரும் ஏழாம் ஞாயிறு.
20. பௌரணமி.
21. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் எட்டாம் ஞாயிறு.
28. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின் வரும் ஒன்பதாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 24. August. No. 8.

**Contents:**

Bible Sketches and their Teachings. ... ... ... ... 142
Christian Church History. ... ... ... ... ... ... 145
The Parables of Christ. ... ... ... ... ... ... 147
On the Liturgy. ... ... ... ... ... ... ... ... 149
The first translation of the Bible in Tamil. ... ... ... 151
A Family Commentary on the Sermon on the Mount. ... 153
Notes on Genesis. ... ... ... ... ... ... ... 157
Summary of News. ... ... ... ... ... ... ... 159

**அட்டவணை:**

பாலபோதனை. ... ... ... ... ... ... ... ௧௪௨
கிறிஸ்து சபை சரித்திரம்.... ... ... ... ... ௧௪௫
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... ௧௪௭
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ... ௧௪௯
வேதாகமங்கள் தமிழ் பாஷையில் திருப்பப்பட்ட வரலாறு. ௧௫௧
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... ௧௫௩
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... ௧௫௭
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௫௯

**Palamcottah**
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.
1872.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### வேவுகாரர் பிரயாணம்.

4 மோசே 13. 14. அதிகாரங்கள்.

(தொடர்ச்சி.)

அவர்கள் சொன்னது அடியில் வருமாறு இருந்திருக்குமென்று நினைக்கத்தக்கது. "இந்தத் திராட்சப்பழத்தைப் பார்க்கிறீர்களே. இதனால் தேசம் எப்படிப்பட்டதாயிருக்குமென்று நீங்கள் அறிந்துகொள்ளலாம். ஆடுமாடுகளுக்கு நல்ல மேய்ச்சல்களிருக்கின்றன. தேனீக்களுக்குத் திருப்தியான புஷ்பங்கள் திரள்திரளாயிருப்பதினால் தேசம் பாலும் தேனும் ஓடுகிறதாகவேயிருக்கிறது." இதற்குள்ளே மன்னாவையே போசித்து சுத்த சலத்தையே குடித்து சலித்துப்போயிருந்த அந்தச் சனங்கள் ஆர்ப்பரிக்கத் தொடங்கிவிட்டார்கள். "ஆனால்" ஆ, இந்த வார்த்தை சிலவேளைகளில் எவ்வளவோ கேட்டுக்கு ஏதுவாகிறது. மறுபடியும் சனங்கள் சற்று அமரிக்கையாக, வேவுகாரர் சொல்லுகிறது "ஆனால் அவ்விடத்துச் சனங்கள் மகா பலசாலிகள். அவர்கள் பட்டணங்களுக்கு உன்னதமான மதில்களிருக்கின்றன. அதல்லாமலும் அங்கே இராட்சதருமிருக்கிறார்கள். அம்தா தெரிகிறதே அந்த அழகிய பள்ளத்தாக்கின் வழியாய்ப் பிரயாணஞ்செய்தோம். அங்கே எங்களுக்குத் தென்பட்ட ஏராளமான மேய்ப்பர் கூட்டத்தார் மகா மூர்க்கமுள்ளவர்கள். (இவர்கள் ஆமலேக்கியர்) அவர்கள் க்ஷணத்தில் நம்மைக் கொள்ளையாடி அழித்துப்போடவும் வல்லவர்கள். அப்புறம் அதோ தூரத்தில் தெரிகின்றனவே அந்த மலைகளுக்குள்ளே பயணம் பண்ணினோம். அங்குள்ள மலைவாசிகள் மகா பொல்லாத துஷ்டர். (இவர்கள் ஏத்தியர், எபூசியர், எமோரியர் என்னப்பட்டவர்கள்.) அவர்கள் மலைக்கெபிகளிலும் செங்குத்தான பாறைகளிற் கட்டின கோட்டைகளிலும் ஆனான பட்டணங்களிலும் குடியிருக்கிறார்கள். அவர்களைத் துரத்திவிட நம்மாலாகுமோ! பிற்பாடு எங்களிற் சிலர் கடற்கரை வழியாயும் மற்றவர்கள் யோர்தான் நதியோரமாயும் பிரயாணம் பண்ணினோம். இவ்விரு புறங்களிலுமுள்ள பள்ளத்தாக்குகள் பெரிய பெரிய பட்டணங்கள் நிறைந்தவைகள். அவற்றில் குடியிருக்கிறவர்கள் மகா பலசாலிகளும் பேர்போன யுத்தவீரருமானவர்கள். (இவர்கள் கானானியர் பெலிஸ்தர் என்னப்பட்டவர்கள்.) அவர்கள் லேசாய் நம்மைச் செயித்துக் கீழ்ப்படுத்திக்கொள்வார்கள். எகிப்தில் நாம் அடிமைகளாயிருந்த வண்ணம் இவர்களுக்கும் அடிமைகளாயிருக்கவேண்டியதாகும்" என்றார்கள். "ஆனால்" என்ற சொல் அன்று எவ்வளவு துக்கத்தையுண்டாக்கிற்று என்று பாருங்கள்.



உடனே வேவுகாரரில் ஒருவன் எழுந்து உரத்த சத்தமாய்ச் சனத்தையெல்லாம் கூப்பிட்டு, "பயப்படாதிருங்கள், தேவன் நமக்குச் சகாயஞ்செய்வார், ஏறிப்போவோம் வாருங்கள் நாம் செயிக்கவே செயிப்போம்" என்றான். இப்படிச் சொன்னவன் பெயர் காலேப் என்பது அவனுக்குச் சிநேகிதனான யோசுவாவும் அந்தப்படியே சொன்னான்.

ஆகிலும் இவர்கள் இரண்டே பெயர். மற்றப் பத்துப்பெயரும் ஏகோபித்துச் சொன்னது, "நாம் போகவே படாது, இராட்சதர் நம்மைக் கொன்றுபோடுவார்கள், அது மகா பொல்லாத தேசம், அங்கே போகிறது என்ற நினைவைவிட்டு விடவேண்டும்" என்றார்கள்.

அதன்பேரில் சனங்கள் என்னசெய்வார்கள் என்று எண்ணுகிறீர்களா? தேவன் அந்தச் சனங்களைத் தங்களிஷ்டப்படி நடக்கவிட்டு விட்டாரென்று பார்த்தோமே. துவக்கத்தில் நான் சொன்ன சிறுவனுடைய பெற்றாரைப்போலவே, அவர்கள் தங்களுக்குப் பிரியமானபடி நடந்து அதன் பலனைக் காணட்டும் என்று தேவனும் அவர்கள் விருப்பத்துக்கு இடங்கொடுத்துவிட்டார். என்றாலும் காரியம் எல்லாம் இதோடே கெட்டுப்போயிற்றோ? பத்துப்பேருக்கு விரோதமாய் நின்று அவர்களைத் தைரியப்படுத்துகிறவர்கள் இரண்டு பேர் தான். ஆனாலும் என்ன? அவர்கள் சொன்னது எதார்த்தமல்லவா! ஆம், பிரியமான பிள்ளைகளே, இதை நன்றாய் நினைத்துக்கொள்ளுங்கள். ஒன்று மெய் அல்லது பொய் என்று அதைச் சொல்லுகிறவர்களுடைய தொகையைக்கொண்டு நிதானிக்கவேண்டாம். இருபது பேர் ஒருவிதமாய்ச் சொல்ல, ஒரே ஒருவன் மாத்திரம் வேறுவிதமாய்ச் சொன்னபோதிலும், இந்த ஒருவன் சொல்வது தேவவசனத்துக்கும் தேவசித்தத்துக்கும் ஏற்றதாயிருக்குமாகில், அதையே பிடித்துக்கொள்ளவேண்டும். ஒருவனோ இரண்டு பெயரோ நூறு ஆயிரம் பெயர்களுக்கு விரோதமாய்ச் சத்தியத்தைப் பிடித்துக்கொண்டு அதற்காக ஒரோர்வேளை போராடுகிறதையும் பார்க்கிறது மகத்துவமான காட்சிதான். சத்தியமே மேற்கொள்ளும் காலம் வருகிறது. இப்பொழுதோ சத்தியமே எப்பொழுதும் மேற்கொள்ளுகிறதில்லை. இஸ்ரவேலருடைய பாளையத்தில் அந்நாளிலும் அப்படித்தான். பத்துப்பேரும் இரண்டுபேரை மேற்கொண்டார்கள். காலேபும் யோசுவாவும் சொன்னதைக் கேட்பாரைக் காணோம். கூடாரங்களில் நித்திரைசெய்வாரில்லை. அக்கினிஸ்தம்பத்திலிருந்து வெளிச்சம் வீசின இடமெல்லாம் துக்கமுகங்களும் அழுகிற கண்களுமே காணப்பட்டது. முறைப்பாடுகளும் துயரமான புலம்பல்களும் அங்கங்கே கேட்கப்பட்டது. கடைசியிலே ஒருவரோடொருவர் குசுகுசுவென்கிற ஒரு சத்தம் கேட்கிறது. அந்தச் சத்தம் வரவர அதிகரித்து, "நமக்கு ஒரு தலைவனை யேற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்புவோம்" என்று கூப்பிடுகிற பெரும் அமளியாகிவிட்டது.

அப்புறம் மோசே, ஆரோன் என்றவர்கள் சகிக்கமாட்டாமல், "இஸ்ரவேல் புத்திரரெல்லாம் கூடியிருந்த சபைக்கு முன்பாக முகங்குப்புற விழுந்தார்களாம்." தேவன் தங்களுக்கு இதற்குமுன் செய்ததும் இனிமேல் செய்யப்போகிறதுமான சகலத்தையும் காலேபும் யோசுவாவும் சனத்துக்கு விவரித்தார்கள். எவ்வளவும் பிரயோசனமில்லை. "யோசுவா, காலேப், ஆரோன், மோசே இவர்களெல்லாரையும் கல்லெறிந்து கொல்வோம், அப்பொழுது நமது இஷ்டப்படி செய்வதற்குத்

தடையிராது" என்று கூப்பிட்டார்கள். என்றாலும் அம்மட்டில் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். ஆசரிப்புக்கூடாரத்தில் மகிமையான புதிய ஓர் ஒளி காணப்பட்டது. மோசே கர்த்தர் அங்கிருக்கிறார் என்று அறிந்து எழுந்து ஓடிப்போய் அவரை நோக்கிப் பிரார்த்தித்தான். அவன் ஆவலாய்ப் பண்ணின நேர்த்தியான பிரார்த்தனையையும் அதற்கு தேவன் மகா அன்பாய் அருளிய உத்தரவையும் வாசித்தோமே. இப்போதான் தன்னைக் கொலைசெய்ய வகைபண்ணின சனத்துக்காகவே மோசே இவ்வாறு கெஞ்சிப்பிரார்த்தித்தான். தேவனும் அவன் பிரார்த்தனையைக் கேட்டு சிறிதுகாலம் அவர்களைத் தப்பவிடுவேனென்று வாக்கு அருளினார். என்றாலும் அந்தப் பத்து வேவுகாரரும் சாகவேண்டும், மொறுமொறுத்தவர்கள் கானான்தேசத்தில் பிரவேசிக்கவே படாது. ஏன்? அவர்கள் முரண்டு பிடித்து, கீழ்ப்படிய மனமில்லாமற்போனார்களே. பாவஞ்செய்தபடியால் தண்டிக்கப்படவும் வேண்டுமே. நாற்பதுநாள் அந்த வேவுகாரர் பயமும் அவிசுவாசமும் நிறைந்தவர்களாய் கானானதேசத்திலுள்ள மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் அலைந்து திரிந்தார்களே. இப்போது தேவன் சொல்லுகிறார், அவர்கள் பாவஞ்செய்த ஒவ்வொரு நாளுக்கும் ஈடாக அவர்கள் ஒவ்வொரு வருஷம் அலையவேண்டும். அந்த நாற்பது நாளைக்கும் நாற்பது வருஷம் ஆயாசத்தோடும் வருத்தத்தோடும் வனாந்தரத்திலே திரியவேண்டும். அத்தனை வருஷமும் அவர்களுக்கு துக்கமும் சஞ்சலமும் மரணமுமாகவேயிருந்தது. இப்பொழுது கூடாரங்களைச் சுற்றிலும் ஓடிக் குதித்து விளையாடிக்கொண்டிருக்கிற பிள்ளைகள் வளர்ந்து பெரிய மனுஷர்களாகி பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைகளையுங் கண்டு பலசாலிகளுமானபிறகு தான் சனத்துக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். பிள்ளைகள் தங்கள் தாய்தந்தைகளைப் பார்த்து, "நாம் ஏன் இவ்வளவு காலமாய் இங்கே தாமதித்திருக்கவேண்டும், வாக்குத்தத்த தேசத்தில் நமது வீடுபோய்ச் சேராமல் இன்னம் இங்கேயே அலைந்து திரிவானேன்" என்று கேட்டிருப்பார்களாகில் தாய்தந்தைகள் என்ன உத்தரவுசொல்லியிருப்பார்கள்? வேவுகாரர் விர்த்தாந்தத்தை எடுத்துரைத்து, சனம் ஒரு விசை தேவனுடைய கட்டளையைத் தள்ளி தேவனுடைய வாக்குத்தத்தத்தை அசட்டைசெய்து தங்கள் சுயபுத்தியிற் சார்ந்து தங்கள் மனசுப்பிரகாரம் நடக்க விரும்பினதினிமித்தமே இப்படி நேரிட்டது என்று தான் சொல்லியிருப்பார்கள்.

வளர்ந்த பெரிய ஆட்களுக்குள்ளே இரண்டே இரண்டு பேர் மாத்திரம் அந்த நாற்பது வருஷமும் உயிரோடிருந்து கடைசியில் கானான் தேசம்போய்ச் சேர்வார்கள். இவர்கள் யோசுவாவும் காலேபுமாகிய உத்தமர் இருவருமே. ஆகிலும் மற்றவர்களுடைய பாவத்தினிமித்தமாய் மற்றவர்களைப்போலவே இவர்களும் வெகுகாலம் வனாந்தரத்தில் அலைந்து திரியவேண்டியிருந்தது. அருமைப் பிள்ளைகளே நீங்கள் தப்பிதம் செய்யும்பொழுது மற்றவர்களுக்கும் சங்கடம் நேரிடுகிறது என்பதை நினைத்துக்கொள்ளுங்கள். ஆகையால் மற்றவர்கள் நிமித்தமும் அப்படியே உங்கள் நிமித்தமும் தேவன் காட்டும் பாதையை விரும்பவும் தெரிந்துகொள்ளவும் கற்றுக்கொள்ளுங்கள். தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள். அவரை நம்பி நடவுங்கள். இந்த இஸ்ரவேலரைப்போல உங்கள் சுயபுத்தியில் சாய்ந்து உங்கள் மன இஷ்டப்படி நடக்க விரும்பாமல், "கர்த்தாவே, உம்முடைய யோசனையின்படி என்னை நடத்தி, கடைசியில் என்னை மகிமையில் ஏற்றுக்கொள்ளும்" என்று உங்கள் உள்ளங்களிலே அடிக்கடி சொல்லுங்கள்.

---



Christian Church History.

# கிறிஸ்துசபைச் சரித்திரம்.

## 12. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

ஒரிஜனும் அவனிடத்திற் போதனையடைந்த கிறிஸ்தவர்களில் அநேகரும் துன்பத்துக்குத் தப்பிக்கொள்ள ஓடிப்போய்விட்டார்கள். இந்தச் சமயத்தில் ஒரிஜன் பலஸ்தீனாவைப் பார்க்கப்போனான். அங்கிருக்கையில் செசாரியாக் கண்காணியாகிய தேவகிஸ்து என்பவன் அவனுடைய கல்வித்திறமையையும் வேதஅறிவையும் கண்டு அதிசயித்து, அவன் தற்காலத்தில் குருப்பட்டமடையாதவனாயிருந்தும் கோவிலில் பகிரங்கமாய் வேதத்தை வியாக்கியானம்பண்ண இடங்கொடுத்தான். இது காரியத்திலே அக்காலத்தில் சபை ஒழுங்குகள் எவ்வளவு கண்டிப்பாய் நடந்தேறிவந்ததென்று நாம் அறிவதற்கு ஒரு குறிப்புண்டு. ஒரிஜன் கோவிலில் வேதப்பிரசங்கம் செய்யும்படிக்கு செசாரியாக் கண்காணியார் இடங்கொடுத்ததினிமித்தம் அலெக்சந்திரியாக் கண்காணியார் அதை ஒழுங்கீனமென்று அவரைக் கடிந்துகொண்டார். அலெக்சந்திரியாச் சபையிலே குருப்பட்டம்பெறாதவர்கள் சபையாருக்கு வேதவியாக்கியானம்பண்ணப்படாது. என்றாலும் எல்லாச் சபைகளிலும் அப்படிப்பட்ட திட்டமிருக்கவில்லை. அப்படியே தேவகிஸ்து என்பவன் தான ஒரிஜனுக்கு இடங்கொடுத்தது ஒழுங்கீனமல்லவென்பதற்கு பல திருஷ்டாந்தங்கள் எடுத்துக்காட்டினான். எருசலேமின கண்காணியாகிய அலெக்சாந்தர் என்பவனும் இந்தப்படியே சாதித்தான். காரியத்தைப் பார்க்கும்போது, பலஸ்தீனாவிலுள்ள சபைகளிலே அப்படிப்பட்ட வழக்கமிருந்திருக்கவேண்டும். தேமேத்திரியு என்பவனுக்கோ அது திருப்திகரமல்ல. அதின்பேரில் பாடசாலையில் தன் வேலையை நடத்தும்படி அவனை வரச்சொல்லியனுப்ப, ஒரிஜன் கி. பி. 217 ம் ௵போல அலெக்சந்திரியாவுக்குத் திரும்பிவந்தான்.

அவன் அலெக்சந்திரியாவுக்குத் திரும்பின கொஞ்சநாளைக்குப் பிறகோ செசாரியாவிலிருக்கையில் தானோ ஒரு விசேஷித்த காரியமாக அந்தியோகியாவுக்கு அழைப்பிக்கப்பட்டுப்போனான். கரக்கல்லா என்பவனுடைய நிஷ்டூரமான அரசாட்சி கி. பி. 217 ம் ௵த்தோடு முடிந்தது. அவனைக் கொலைசெய்வித்து சிம்மாசனமேறின மக்ரினு என்பவனும் மறுவருஷத்தில் அவ்விதமே தொலைந்தான். அதன்பேரில் இராச்சியபாரத்தை எலகாபாலு என்று பேர்கொண்ட ஒருவன் கைக்கொண்டான். இவன் கிரீடாபிஷேகம் பெறுமுன் பெனிக்கேயா தேசத்திலுள்ள எமேசாப் பட்டணத்தில் பூசாசாரியாயிருந்தவன். இவன் வைதீக உத்தியோகஞ்செய்தவனாயிருந்தபோதிலும் மகா அவலட்சண நடத்தையுள்ளவனென்று சொல்லியிருக்கிறது. மம்மியாள் என்று பெயருள்ள அவன் சிறியதாயோ யோக்கியமானவளாம். அவளைப் பொருளாசைக்காரியென்று சொல்லியிருந்தபோதிலும், அஞ்ஞானிகளும் கிறிஸ்தவர்களுமான நூலாசிரியர்கள் அவளைச் சற்று மதாபிமான

முள்ளவளென்று குறிப்பித்திருக்கிறார்கள். அவள் கிறிஸ்தவளாயிருந்தாளென்று நினைப்பவர்களுமுண்டு. ஆகிலும் அப்படி நினைக்கப் போதுமான அத்தாட்சியில்லை. அஞ்ஞான அவபத்திகளில் அநேகத்தை ஒருவேளை அவள் பார்த்திருப்பாள். சூரியாவிலே அவள் வெகு காலம் சஞ்சரித்தவளானபடியால் கிறிஸ்துமார்க்க உபதேசங்களிற் சிலவற்றை அறிந்துமிருப்பாள். ஒரிஜன் என்பவனுடைய பிரஸ்தாபத்தைக்குறித்து முதலாய் அவள் கேள்வியாகி அந்தியோகியாவுக்குப் போயிருந்த ஓர் சமையத்தில் மதவிஷயங்களைப்பற்றித் தன்னோடு சம்பாஷிக்கும்படி அவனைக் கூட்டிக்கொண்டுவரும்படியாக சில போர்ச்சேவகரை அனுப்புவித்தாள். அவளுடைய சகோதரி மகன் சிம்மாசனமேறின முதல் வருஷத்திலே இது நடந்திருக்குமென்று நினைக்கத்தக்கது. அந்த வருஷத்தில் தான் அவன் தன் தாயையும் சிறிய தாயையும் கூட்டிக்கொண்டு அந்தியோகியாவின் வழியாய்ப் போனதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரிஜன் அந்தப்படியே போய் அந்தியோகியாவிலே மம்மியாளைக் கண்டுபேசிக்கொண்டானாம். அதினாலுண்டான அநுகூலமின்னதென்று தெரியாது. இராயனுக்கு அதினாற் பிரயோசனம் உண்டாகவில்லையென்பது நிச்சயம். என்னத்தினாலென்றால் 219 ம் வருஷத்திலே அவன் உரோமாபுரிவந்து சேர்ந்தவுடனே அங்குள்ள மற்ற தேவர்களையெல்லாம் விலக்கி சூரியஆராதனை ஒன்றையே ஸ்தாபிக்க முயன்றான். பட்டணத்திலிருந்த விக்கிரகபக்திக்குரிய விசேஷ அடையாளங்கள் ஏதேதுண்டோ அதுகளையெல்லாம் சூரியனுடைய ஆலயத்திற்கொண்டுபோய் வைக்கக் கற்பித்தான். இந்த விர்த்தாந்தத்தை யெழுதியிருக்கிற சரித்திரக்காரன், இவ்வாறு விலக்கப்பட்ட மதாசாரங்களுக்குள் யூதர், சமாரித்தர், கிறிஸ்தவர்கள் இவர்களுடைய மார்க்கங்களும் அடங்கியிருந்தனவென்றும் திட்டமாய்க் காண்பித்திருக்கிறான். என்றாலும் எண்ணிறந்த விக்கிரகபக்திகளைப் பார்க்க கிறிஸ்துமார்க்கத்துக்கு அதிகப் பிரதிகூலம் நேரிட்டதென்று சொல்ல ஏதுவில்லை. சில விஷயங்களில் எலகபாலு செய்த இந்தப் பைத்தியமான செய்கையினாலே அநுகூலமுண்டாயிற்று என்று சொல்லத்தக்கது. அந்தரங்கமாய்த் தேவாராதனைகள் நடப்பிக்கிறது கிறிஸ்தவர்களுக்குள் நூதன காரியமல்லவே. அவர்களுக்கு ஆலயங்களுமில்லை, பலிப்பீடங்களுமில்லையென்பது அவர்களுக்கு விரோதமாய்ப் பாரிக்கப்பட்ட குற்றங்களில் ஒன்று. ஆகையினாலே இராயனுடைய கற்பனையைக் கைக்கொள்ளாவிடினும் கிறிஸ்தவர்கள் தப்பிக்கொள்ளுகிறது வருத்தமன்று. அஞ்ஞானிகள் சூரியனைத் தவிர வேறொரு தெய்வத்தை வணங்க விரும்புவார்களாகில் அவர்களைக் காட்டிக்கொடுக்கும் ஒரு அறிகுறியின்றி அப்படிச்செய்வது கூடியதோ? எலகபாலு என்பவன் அதிககாலம் சிங்காசனத்திலிருந்திருப்பானாகில், நோக்கமில்லாமலே கிறிஸ்துமார்க்கப் பிரபலியத்துக்கு மிகுதியும் அநுகூலஞ்செய்திருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. விக்கிரகபக்திக்குரிய அநேக பொருட்கள் கைவிடப்பட்டிருக்கும். கிறிஸ்துமார்க்கம் அந்தரங்கத்தில் விர்த்தியாகிக்கொண்டு வந்திருக்கும். ஆகிலும் சீர்கெட்டுப்போயிருந்த உரோமர் முதலாய் இப்பேர்ப்பட்ட இராயனுடைய அக்கிரமங்களையும் அவலட்சண நடபடிகளையும் வெகுகாலம் சகிக்கமாட்டாமற்போனார்கள். அதினால் அவன் நாலு வருஷங்கூட ஆளுகிறதற்குள்ளாக, கி. பி. 222 ல் கொலையுண்டு மரித்தான். அப்பொழுது அவனுக்குப் பதினெட்டு வயசுக்கு அதிகமாகவில்லை.





# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

## IX-வது. திராக்ஷத்தோட்டத்தில் வேலைசெய்தவர்களைக் குறித்து.

மத். 20: 1—16.

(தொடர்ச்சி.)

அவர்களில் ஒருவனுக்கு அவர் சொன்னது, ஒருவேளை இவன் முறை இட்டவர்களில் முந்தினவனாய் அதிகச் சத்தம்போட்டிருக்கலாம். அவனைப் பார்த்து "சிநேகிதனே! நான் உனக்கு அநியாயம் செய்யவில்லை, நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா" என்றார். சிநேகிதன் என்ற வார்த்தை சாதாரணமானது. பெரியவர்கள் சிறியவர்களை அழைக்கத்தக்க வார்த்தை. வேதவசனத்தில் கெட்டவர்களையும் அப்படி அழைத்திருக்கிறது. இதுதான் ஒரு திருஷ்டாந்தரம். கலியாண வஸ்திரமில்லாதவனாய் வந்த விருந்தாடியையும், தன் எசமானைக் காட்டிக்கொடுக்க வந்த யூதாஸ்காரியோத்தையும் இப்படியே அழைத்திருக்கிறது. மத். 22: 11. 26: 50. நான் உனக்கு அநியாயம் செய்யவில்லை என்கிறார். தான் செய்ததை நியாயமென்று காட்டுகிறார். சகலத்தையும் தன்னிஷ்டப்படி செய்யக்கூடியவரொன்றும் போதிக்கிறார். அவர்கள் நியாயத்தைப் பாராட்டினார்கள். நியாயத்தின்படி இவர் உத்தரவு சொல்லுகிறார். உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டுபோ. நான் தயாளனாய் இருக்கிறபடியால் நீ வன்கண்ணனாய் இருக்கலாமாவென்றார். உனக்கு நான் நியாயஞ்செய்தபடியால் மற்றவர்களுக்கு நான் தயாளனாய் இருக்கக்கூடாதா? பொறாமை கண்ணிலிருந்து தோன்றுகிறதாக வேத வசனத்தில் காட்டியிருக்கிறது. 5 மோ. 15: 9. 1 சாமு. 18: 9. வாக். 23: 6. 28: 22. மாற். 7: 22. கண் ஏதோ ஒரு தீங்குசெய்யக்கூடியதுபோல, பொல்லாத கண்ணென்று சாதாரணமாய் எங்கும் சொல்லுகிறார்கள். நல்ல கண்ணைக்குறித்து வாசிக்கிறோம். இவர்கள் தங்கள் பலனைப் பெற்றுப்போனதில் காணப்படும் விகற்பத்தை முன்னேயே நீக்கியிருக்கிறோம். மனுஷருக்குள் வழங்குகிறபடி அவர் காட்டின கெட்ட குணத்துக்காக அவர்கள் கூலியைப் பிடித்துக்கொள்ளுவது நியாயமாயிராது. ஆகிலும் அவர்கள் கையில் வந்த பணம் அபலமாய்ப் போயிற்றென்று சொல்லலாம். இவ்வளவு மொறுமொறுப்பும் விரோதமும் பெருமையுமான குணத்தை காண்பிக்கிறவர்கள் தேவனிடத்தில் ஒன்றையும் பெறாமல் சகலத்தையும் இழந்துவிடுவார்களென்று பின்வரும் வார்த்தைகள் தெளிவாய்க் காட்டுகிறது. பிந்தினோர் முந்தினோராவார்கள், முந்தினோர் பிந்தினோராவார்கள் என்று உடனே கூட்டிச் சொல்லியிருக்கிறது.

இந்தக் கடைசி வார்த்தைகளை உவமையோடு எப்படி இசைக்கிறதென்று வியாக்கியானிகள் திகைத்து நிற்கிறார்கள். ஏனெனில் உவமையில் முதல் வந்தவர்களும் கடைசியில் வந்தவர்களும் ஒன்றுபோல்

எண்ணப்படுகிறார்கள். இந்த வார்த்தைகளில் இடமாறுதல் உண்டாகுமென்று தோன்றுகிறது. உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்களும், தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்களுமாகிறார்கள். வேறொரு இடத்தில் வருகிற இந்த வார்த்தைகளை இதோடு ஒத்துப்பார்க்கும்போது, லூக் 13: 30. முந்திவந்த அவிசுவாசம் உள்ள யூதர்கள் தள்ளப்படுவதையும், பிந்திவந்த புறச்சாதியார் உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் இது குறிக்கிறதென்று சொல்லவேண்டும். சிலர் கடைசியில் வந்தவர்கள் முந்திக் கூலிவாங்கினதை இது குறிக்கும் என்கிறார்கள். இது அற்ப வித்தியாசம். கடைசியில் வந்தவர்கள் முந்திக் கூலி பெற்றார்களென்று சரித்திரப்போக்காய்ச் சொல்லியிருக்கிறது. முந்திவந்தவர்கள் முந்திக் கூலிபெற்றார்களானால் முந்திப்போய்விடுவார்கள். மற்றவர்கள் தங்களைப்போல கூலிவாங்குகிறதைக் காணமாட்டார்கள். திருத்தியில்லாதவிதமாய்ப் பேசவும் மாட்டார்கள். வேறு சிலர் இந்த விகற்பத்தை நீக்க உவமை ஒரு சமையத்தில் சொல்லப்பட்டதென்றும், வேறு சமையத்தில் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் இந்தச் சமையத்தில் தற்செயலாய் இங்கே சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும், அப்படிச் சொல்லாவிட்டால் இந்த வார்த்தைகளோடு உவமையை இசைக்கிறதினால் அதின் கருத்து முற்றிலும் புரண்டுபோகுமென்றும் சொல்லுகிறார்கள். முந்திச்சொன்னது இதற்கு நல்ல உத்தரவாயிருக்கும். அது சரியான கருத்தாயிருக்குமானால் இந்த வார்த்தைகளை இவ்விடத்திற் சொல்லியிருக்கிறது சரியென்றுமாத்திரமல்ல, அவசியமென்றும் சொல்லவேண்டும். மொறுமொறுக்கிறதினால், பொறாமையினால் உண்டாகிற நஷ்டமின்னதென்று இந்த வார்த்தைகள் தெளிவாய்க் காட்டுகிறது.

அழைக்கப்பட்டவர்களநேகர். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்கிற வார்த்தைகள் அதிக விகற்பமுள்ளதாகத் தோன்றும். தன்னிலேதானே அதுகள் வருத்தமுள்ளதல்ல. அதுகள் வருகிற இடத்தினால் வருத்தமாய்த் தோன்றுகிறது. இராசகுமாரனுடைய கலியாணவிருந்தில் அது இசைவாய்ச் சொல்லியிருக்கிறது. மத். 22: 14. மொறுமொறுக்கிறவர்கள் பரலோக இராஜ்யத்தில் சேரத்தக்கவர்கள்தான் என்று இந்த உவமையை வியாக்கியானம் செய்கிறவர்களும் இந்த உவமைக்கு இசைவாய் இதை வியாக்கியானம்பண்ணுகிறது வருத்தமான காரியம். அழைக்கப்பட்டவர்கள் அநேகர். பிரயாசம் கொஞ்சமாயிருந்தாலும் சரியான பலனை அடையத்தக்கதாக விசேஷித்த தயவைப் பெறுகிறவர்கள் வெகு சிலர் என்று வேறு சிலர் அர்த்தம் பண்ணுகிறார்கள். அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் கடைசியில் இரக்ஷிப்பைப் பெறுவார்கள். இது மோக்ஷத்திலிருக்கும் பலவித அந்தஸ்துகளைக் குறிக்கும் என்கிறார்கள். பிந்திவந்தவர்கள் அதிகமாய் வேலைசெய்தார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்களானதால் அதிகமாய் உழைத்தார்கள். ஆதலால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்கிற பெயர் அப்படிப்பட்ட கிருபைபெற்றவர்களுக்கு ஏற்றதுதான் என்கிறார்கள். அதிக வேலை செய்கிறார்கள் என்கிற கருத்து உவமை முழுவதையும் கெடுத்துப்போடுமென்று முன்னே காட்டினோம். வேறு சிலர், அழைக்கப்பட்டும் திராக்ஷத்தோட்டத்துக்கு வேலைசெய்ய வராதவர்கள் உவமையிற் சொல்லப்பட்டிராதவர்களைக் குறிக்குமென்றும், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பது வேலைசெய்யவந்தவர்களைக் குறிக்குமென்றும், இவர்கள் வெகு சிலரானதால் எல்லாரும் நிறைவான பலனைப் பெற்றார்களென்றும் சொல்லுகிறார்கள். சரியான கருத்து என்னவென்றால், அநேகர் தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்ய அழைக்கப்படுகிறார்கள். கடைசியில் பலன்பெறத்தக்கதாக தாழ்மையும், கீழ்ப்படிதலும், தன்னை வெறுத்தலுமான குணத்தைக் காட்டுகிறவர்கள் வெகுசிலர். பலன் என்கிற வார்த்தை வேதவசனத்தில் உள்ளதுதான். மத். 5: 12. 6. 11. லூக். 6: 35. 2யோவா. 8. வெளி. 22: 12. உங்கள் கிரியையும் உங்கள் அன்புள்ள பிரயாசத்தையும் மறக்கத்தக்கதாக தேவன் அநீதியுள்ளவரல்ல. அவர் உண்மையுள்ளவர், வாக்குமாறாதவர். 1 யோ. 1: 9. 1 கொரி. 10: 13. 1 பேது. 4: 19. அவருடைய வாக்குத்தத்தத்தைப் பார்க்கும்போது, அது பலன். உன்னுடைய அபாத்திர தன்மையைப் பார்க்கும்போது அது ஒரு ஈவு. அதைக் கவனியாமல் இருக்கிறதுக்குத்தக்கதாக அது உனக்கு நிச்சயமாகும். அவருக்காகவே நீ உழைக்கவேண்டும். அவனைத்தள்ளி, மோக்ஷமுதலாய் சரியான நோக்கமாயிராது. வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர். நம்முடைய நம்பிக்கைக்கு இதுவே ஆதாரம். நாம் எதிர்பார்க்கத்தக்கதென்ன? எதிர் பார்க்கத்தகாததென்ன என்று காட்டுவதே இந்த உவமையின் நோக்கம்.



---

**On the Liturgy.**

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ரு. அதிகாரம்.

ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

### XIII. பாடுபட்ட வாரம்.

முந்தின வாரங்களில் இரக்ஷகர் உபவாசித்ததுபோல உபவாசிப்பது நல்லதென்று உபவாசிக்கிறோம். இந்த வாரத்தில் அவர் பாடுகளை நினைத்து உபவாசிக்கிறோம். சிலர் இந்த வித்தியாசத்தை அவசியமில்லாததாக எண்ணி, எல்லா வாரங்களிலும் சாதாரணமாக நமது ஆத்தும நன்மைக்காக உபவாசிக்கிறோம் என்கிறார்கள். இது விசேஷித்த வாரம். மனிதனுடைய இரக்ஷிப்புக்கு அவசியமான விசேஷித்த காரியங்கள் இந்த வாரத்தில் நடந்தது. மரணம் ஜெயிக்கப்பட்டது. பிசாசின் கொடுமை ஒழிந்தது. யூதருக்கும் புறச்சாதியாருக்கும் நடுவேயிருந்த நடுப்புச்சுவர் இடிந்தது. தேவனும் மனிதனும் ஒப்புரவானார்கள். இதற்குப் பரிசுத்த வாரமென்றும் பெயர். கிறிஸ்தவர்கள் இந்த வாரம் முழுவதும் பரிசுத்த முயற்சிகளில் இருப்பார்கள். தனித்தும் வெளியரங்கமாயும் செபம்பண்ணுவார்கள். வேதவசனத்தை வாசிப்பார்கள். அதைக் கேட்கக் கூடிவருவார்கள். தங்கள் இரட்சகரை சிலுவையில் அறையப்பண்ணின பாவங்களுக்காக உத்தமமாய் மனஸ்தாபப்படுவார்

கள். சிலர் மூன்றுநாள் உபவாசிப்பார்கள். சிலர் நாலுநாள், சிலர் ஆறுநாளும் உபவாசிப்பார்கள். திங்கட்கிழமை காலை முதல் மறு ஞாயிற்றுக்கிழமை கோழி கூப்பிடும்வரையில் ஒன்றுஞ் சாப்பிடாமல் இருப்பார்களாம். இராசாக்களும் அந்த நாட்களை பரிசுத்தமாய்க் கனப்படுத்திவருகிறார்களென்று காட்ட பிராதுகளை விசாரியாமல் நியாயஸ்தலங்களை அடைத்துப்போட்டு, கைதிகளை விடுதலைசெய்வார்களாம். நம்முடைய இரக்ஷகர் பாவசங்கிலியிலின்றும் சிறைச்சாலையிலின்றும் நம்மை தம்முடைய மரணத்தினால் விடுதலையாக்கினதற்கொப்பாக.

இரண்டாவது. வெளியரங்கமான ஆராதனைகளில் நம்முடைய சபையானது கூடியமட்டும் நாம் இந்தப் பத்தியுள்ள வழக்கத்தைப் பின்பற்றும்படியாக தகுந்த ஒழுங்குகளை ஏற்படுத்தியிருக்கிறது. ஒவ்வொரு நாளும் நம்முடைய இரக்ஷகருடைய பாடுகளை தியானிக்கவேண்டுமென்கிற நோக்கமாய் அதைப்பற்றி சொல்லுகிற வேதவசனப் பங்குகளெல்லாவற்றையும் பாடங்களிலும், நிருப சுவிசேஷ வாக்கியங்களிலும் ஒன்றாய்ச் சேர்த்திருக்கிறது. இரக்ஷகருடைய பாடுகளை நினைத்து நாம் நம்மைத் தாழ்த்தவும், அவருடைய பலவிதபாடுகளை தியானித்து தாழ்ந்த மனதோடு பாவத்துக்குச் சாக நாம் தீர்மானிக்கவேண்டுமென்று தான் இப்படிச் செய்திருக்கிறது.

மூன்றாவது. பழைய செபபுஸ்தகங்களிலுள்ள சுவிசேஷ வாக்கியங்கள் மாத்திரம் போதுமென்றிராமல், இங்கிலாந்து சபையை சீர்திருத்தினவர்கள் போதுமான சமயமிருக்கிறபடியால் சுவிசேஷகர்கள் அவருடைய பாடுகளைக் குறித்தெழுதின யாவற்றையும் இருக்கிற ஒழுங்கின்படியே வாசிக்கும்படி திட்டஞ்செய்திருக்கிறார்கள். அப்படியே ஓய்வுநாளில் 26 ம் அதிகாரத்தை இரண்டாம் பாடமாகவும், 27 ம் அதிகாரம் சிலுவையில் அறையப்பட்டவரையில் சுவிசேஷ வாக்கியமாகவும் வாசிக்கிறோம். திங்கள், செவ்வாய்களில் மாற்கு சுவிசேஷத்திலுள்ள அதிகாரங்களையும், புதன், வியாழங்களில் லூக்காவிலுள்ள அதிகாரங்களையும் வாசிக்கிறோம். பெரிய வெள்ளிக்கிழமையில் யோவான் 18 ம் அதிகாரத்தை இரண்டாம் பாடமாகவும், 19 ம் அதிகாரத்தை சுவிசேஷ வாக்கியமாகவும் வாசிக்கிறோம். இப்பொழுதிருக்கிற நிருபவாக்கியங்களும் முன்னிருந்தவைகளைவிட மிகவும் ஏற்றது. சுருக்கசெபமானது ஓய்வுநாளுக்குரியதையே பின்தின நாலு நாளுக்கும் உரியதாக வாசிக்கிறோம்.

## XIV. ஈஸ்தருக்கு முந்தின வியாழன்.

இந்த வியாழனுக்கு கற்பனையின் வியாழன் என்று பெயர். இந்த நாளிலே தான் இரக்ஷகர் இராப்போசனத்தை ஏற்படுத்தினார். அந்த சமயத்தில் என்னை நினைத்துக்கொள்ளும்படிக்கு இப்படிச் செய்யுங்களென்று கற்பித்ததினாலேயோ, அவர்களைச் சிநேகித்ததுக்கு அடையாளமாக அவர்கள் கால்களைக் கழுவினபிறகு (காலை இரண்டாம் ஆராதனையில் இதைக்குறித்து வாசிக்கிறோம்.) ஒருவரிடத்திலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்று புதிதான கற்பனை கொடுத்ததினாலேயோ இதற்கு இந்தப் பெயர் உண்டாயிருக்கிறது.

இரண்டாவது. இரக்ஷகருடைய பாடுகளைக்குறித்து சுவிசேஷ வாக்கியத்தில் வாசிக்கிறபடியால் அது இந்த நாளுக்கேற்றதுதான். நிருப வாக்கியமோ அப்படியல்ல, அதில் இராப்போசனமேற்படுத்தப்பட்டதைக்குறித்து சொல்லியிருக்கிறது. காலையிலும் மாலையிலும் இந்நாளில் இதை நினைத்து நாம் இராப்போசனத்தில் சேருகிறபடியால் அதுவும் இந்த நாளுக்கேற்றது தான்.



மூன்றாவது. லெந்தின் முதல்நாளில் சபையினின்று புறம்பாக்கப்பட்ட குற்றவாளிகள் இந்நாளில் திரும்ப ஏற்படுத்தப்படுகிறதுண்டு. இராப்போசனத்தில் சேரும்படிக்கு மாத்திரமல்ல, நமக்கு மீட்பைச் சம்பாதிக்கும்பொருட்டு பிடிபட்டு கட்டுண்ட இரக்ஷகரை ஞாபகப்படுத்திக்கொள்ளும்படிக்கும் அப்படிச் செய்வார்கள். அவர்களை ஏற்றுக்கொள்ளுகிற வகையென்னவென்றால், கோவிலுக்கு வெளியே அந்தக் குற்றவாளிகள் முகங்குப்புற விழுந்து கிடப்பார்களாம். கண்காணியார் கோவிலின் கதவண்டைபோய் கிறிஸ்துவின் நாமத்தினாலே அவர்களை அழைத்து, "வாருங்கள், வாருங்கள், வாருங்கள், பிள்ளைகளே! எனக்கு செவிகொடுங்கள். கர்த்தருக்கு பயப்படுகிறது இன்னதென்று உங்களுக்கு போதிப்பேன்" என்று சொல்லி, அவர்களுக்காகச் செபம்பண்ணி எச்சரித்து, அவர்களை ஒப்புரவாக்கி, கோவிலுக்குள் கொண்டு வருவாராம். அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் தலை மயிரைச் சீவி, துக்ககோலத்தையெடுத்துப்போட்டு, நல்லஉடுப்பு உடுத்திக் கொள்ளுவார்களாம்.

நான்காவது. இந்நாளில் கோவில் கதவுகளையெல்லாம் திறந்து வைப்பதுண்டு. குணப்படும் பாவிகள் உலகத்தின் நாலு திசையிலும் இருந்து வருகிறவர்களை சபையானது ஏற்றுக்கொண்டு இரக்கம் காட்ட ஆயத்தமாயிருக்கிறது என்பதை வெளிப்படுத்தும்படியாக இப்படிச்செய்வார்கள்.

---

## The first translation of the Bible in Tamil.

## வேதாகமங்கள் தமிழ் பாஷையில் திருப்பப்பட்ட வரலாறு.

(தொடர்ச்சி.)

தமிழ் வேதாகமங்களுக்காக முதலாவது போட்டிருந்த முகப்புத்தாளைக் கண்டோமே. இப்பொழுது வேறு சில தாள்களைத் திருப்பிப் பார்ப்போமாக.

### மோசேசென்கிறவர் எழுதிவைத்த முதலாம் பொஷ்த்தகம் முதலாமதிகாரம்

ஆதியிலே சறுவேசுரன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார் (௧)
பூமியானது ஒழுங்கில்லாததுவுமாய் வெறுமையுமாய்க் கிடந்தது
இருளானது ஆழத்தின்பேரிலே இருந்தது சறுவேசுரனுடைய இசிப்
பிரித்துவானவர் தண்ணீரின்பேரிலே மிதந்துகொண்டிருந்தார் (௨)
அப்பொழுது சறுவேசுரனவர் வெளிச்சமாகக்கடவது என்று
திருவுளம்பத்தினார் உடனேதானே வெளிச்சமுண்டாச்சுது (௩)
வெளிச்சம் நல்லதென்று சறுவேசுரன் கண்டார் அப்போ சறுவே
சுரனவர் வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசமுண்டாயிருக்
கப்பண்ணி வெளிச்சத்தை பகல் என்றும் இருளை ராவென்றும் பே
ரிட்டார் (௪)
இந்தப்பிரகாரமாக சாயுங்காலமுண்டானதினாலேயும் விடியற்கார
மானதினாலேயும் முதலாம் நாள் உண்டாச்சுது (௫)

தமிழ்நாட்டுக்கு முன் வந்திருந்த பாப்புமதஸ்தருக்குள்ளே, சர்வேசுபரன், இஸ்பிரீத்துஎன்ற பதங்கள் வழங்கியிருந்ததினாலேயே சேன்

பால்கு அவைகளை எடுத்து வழங்கினார் என்று தோன்றுகிறது. மோசேயின் மூன்றாம் ஆகமத்தின் பேர் முதல் ஆகமத்திற்கு முன் காட்டிய பேரிலும் சற்று சிறப்பாய் இருக்கிறது. அதற்கு மேலாக “மோசேசென்கிறவர்” இதிலே “அர்ப்பிக்கப்பட்ட மோசேசென்கிறவர்” என்று விளங்குகிறார். “மூன்றாம் பொஸ்த்தகம்” அல்லாமல் நாலாம் ஐந்தாம் “பொஸ்த்தகங்களும்” இப்படி சிறப்பிக்கப்பட காண்கிறோம். யோசுவாவும் அப்படியே “அர்ப்பிக்கப்பட்ட யோசுவா என்கிறவராக” விளங்குகிறார். பின்பு செமோயீரா, யோபு, சாலொமோன் ஆகிய இவர்களுக்கு அந்த மகிமை என்னத்தினாலே விலக்கப்பட்டதென்று அறியோம். அவர்கள் “செயேமியா, யோபு, சாலமோன்” என்று மாத்திரம் சொல்லப்படுகிறார்கள். சங்கீத புஸ்தகத்துக்கு பேராகக் காட்டியிருக்கிறதென்னவென்றால்

பிசாஷுமோசென்று சொல்லப்பட்ட
ஞான சங்கீதத்துடைய பொஸ்த்தகம்.

பிரசங்கி புஸ்தகத்துக்கும் எக்கலேசியாஸ்தேசென்று சொல்லப்பட்ட பிரசங்கியாகிற சாலமோனென்கிறவருடைய பொஸ்த்தகம்.

இப்படி பற்பல ஆகமங்களுக்கும் தமிழ்ப்பேரல்லாமல் லத்தீன் பேரும் காட்டுகிறதில் தள்ளுபடி ஆகமங்களை “அப்பொக்ரிவா” என்று பேர் காட்டினார்கள். அன்னிய பாஷை மொழிகளை அதிகமாய் சேர்த்துக் காட்டுவது இந்த முதல் மொழிபெயர்ப்பில் பிழையாகக் காண்கிறது என்று பின்வரும் வாக்கியங்களில் திருஷ்டாந்தப்படும்.

## மோசேசென்கிறவர் எழுதிவைத்த இரண்டாம் ஆகமம்
## உ௰ம் அதிகாரம் 3—17

நமக்கு முன்பாக உனக்கு வேறு சறுவேசுரலில்லாமல் போவாயாக (௩)

உசர வானத்திலேயிருக்கிற வஸ்த்துக்களுக்காகிலும் கீழே பூமியிலேயிருக்கிற வஸ்த்துக்களுக்காகிலும் பூமியின் கீழே தண்ணீரிலேயிருக்கிற வஸ்த்துக்களுக்காகிலும் ஒத்திருக்கிற சுரூபத்தையாகிலும் விக்கிறகத்தையென்கிலும் உனக்குண்டாக்கவேண்டாம் (௪)

நீ அதுகளை நமஸ்கரித்து வணங்கவேண்டாம் அதேதென்றால் உனக்கு கர்த்தாவான சறுவேசுரனாயிருக்கிற நாம் தெண்டிக்கிற வல்லமையுடைத்தான சறுவேசுரனாயிருந்து, பிதாக்கள் செய்த பாவங்களுக்காக நம்மை பகைக்கிற பிள்ளைகளை மூணும் நாலாம் தலைமுறையாகமட்டும் ஆக்கினை குருகிறோம் (௫)

ஆனால் நம்மை சினேகித்துக்கொண்டுவருகிற பேர்களுக்கும் நம்முடைய கற்பினைகளின்படியே நடந்துகொள்ளுகிற பேர்களுக்கும் ஆயிரம் தலைமுறையாகமட்டும் நன்மை செய்துகொண்டுவருகிறோம். (௬)

உனக்கு கர்த்தாவான சறுவேசுரனுடைய நாமத்தை வியர்த்தமாய் சுவிகரியாமலிருப்பாயாக அதேதென்றால் கர்த்தரானவர் தம்முடைய நாமத்தைவியர்த்தமாக சுவிகரிக்கிறவனுக்கு ஆக்கினையிடாமல்இரார் (௭)

சாவது என்கிற இளைப்பாறுகிற நாளை ஆசரிக்கத்தக்கதாக நினைப்பாயாக (௮)

ஆறுநாள் வேலைசெய்து உன்னுடைய கிறிகை எல்லாம் நடப்பிப்பாயாக (௯)

ஆனால் ஏழாவது நாள் உனக்கு கர்த்தாவான சறுவேசுரனுடைய சாவது என்கிற இளைப்பாறுகிற நாளாயிருக்குது நீயாகிலும் உன்னு



டைய குமாரனாகிலும் உன்னுடைய குமாரத்தியாகிலும் உன்னுடைய வேலைக்காரனாகிலும் உன்னுடைய வேலைக்காறியாகிலும் உன்னுடைய மிருகசெந்துக்களாகிலும் உன்னுடைய வாசல்களிலேயிருக்கிற பரதேசிகளாகிலும் ஒருவேலை செய்யவேண்டாம். (௰)

அதேதென்றால் கர்த்தரானவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அதுகளிலேயிருக்கிற சகல வஸ்த்துக்களையும் ஆறுநாளைக்குள்ளே உண்டாக்கி ஏழாம் நாளிலே இளைப்பாறிக்கொண்டிருந்தார் ஆனபடியினாலே கர்த்தரானவர் சாவது என்கிற நாளை ஆசிர்வதிச்சு அற்செயம் கொடுத்தார். (௰௧)

உன் கர்த்தாவான சறுவேசுரன் உனக்கு கட்டளையிடுகிற சீர்மையிலே நீடிச்சிருக்கிறதுக்கு உன்னுடைய பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக (௰௨)

குலை செய்யாமலிருப்பாயாக (௰௩)

விபசாரம்பண்ணாமல் இருப்பாயாக (௰௪)

களவாணாமல் இருப்பாயாக (௰௫)

பிறத்தியாருக்கு விரோதமாக பொய் சாஷ்சி சொல்லாமல் இருப்பாயாக (௰௬)

பிறத்தியாருடைய வீட்டை அவேஷ்சையாமலிருப்பாயாக பிறத்தியாருடைய பெண்சாதியையாகிலும் ஊழியக்காரனை என்கிலும் வேலைக்காறியை ஆகிலும், ஆடுமாடு நீசவாகனத்தையாகிலும் அவனவனுக்கு மத்தும் உண்டானதையாகிலும் ஆவேஷ்சையாமல் இருப்பாயாக என்று திருவிளம்பத்தினார் (௰௭)

மேற்கண்டதில், “சர்வேசுரன்” என்ற பதம், இன்னம் சில பதங்களைப்போல உரோமானித்தருக்குள்ளே முன் வழங்கின முகாந்திரத்தினாலேயே சீகன்பால்கு எழுதினார் என்று தோன்றுகிறது. பிந்திய காலத்தில் பெயிரோசியூஸ் அதை மாற்றி “பராபரன்” என்று எழுதினார். கடைசியான திருத்தலில் தகுந்த முகாந்திரங்களை எண்ணி, பிரதிநிதிகள் அதை தேவன் என்று மாற்றினார்கள்.

“சாவது” என்ற பதம் எபிரேயு பாஷைக்குரியது. ஐரோப்பிய பாஷைகளில் வழங்கியிருப்பதையிட்டு தமிழிலும் வழங்கிவரும் என்று எண்ணி சீகன்பால்கு அதைச் சேர்த்துவைத்தாராக்கும். கழுதை என்கிற சொல் அமங்கலச் சொல் என்று முனிஷிகள் தெரியப்படுத்தினதினாலேயோ வேறே எந்த முகாந்திரத்தினாலேயோ சீகன்பால்கு அதை எப்போதும் விலக்கிவிட்டு அதற்குப் பதிலாக “நீசவாகனம்” என்று எழுதினதை புன்சிரிப்போடே காண்கிறோம். இதுவரைக்கும் சரித்திர ஆகமங்களில் சீகன்பால்கு திருப்பின வகைக்கு திருஷ்டாந்தம் காட்டியிருக்கிறோம். செய்யுள் ஆகமங்களைப் பார்க்கும்போது இன்னம் அதிகக் குறைவாய்க் காண்கிறது. முதலாம் சங்கீதத்தையும், 19ம் சங்கீதத்தையும் அதற்குத் திருஷ்டாந்தமாகக் காட்டுவோம்.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 6: 22, 23.
(தொடர்ச்சி.)

இரண்டாவது. மனிதருக்குள்ளே, முக்கியமாய் மிகவும் கெட்டுப்

போயிருக்கிற மனிதருக்குள்ளே காணப்படுகிற தன்னம்பிக்கை, தற்புகழ்ச்சி, சுயநீதியைக்குறித்து நாம் ஆச்சரியப்பட அவசியமில்லையென்று இதைக்கொண்டு அறிந்துகொள்ளலாம். அவர்களிலுள்ள ஒளி இருளடைந்திருக்கிறது. ஆவிக்குரியதும் நன்மைதீமைக்கடுத்ததுமான சத்தியத்தை வகையறுத்து உணரும் தத்துவம் அவர்களில் கெட்டுமாண்டுபோயிருக்கிறது. ஆகையாற் பொல்லாங்கு செய்துகொண்டிருக்கிற திரள் சனங்கள் தாங்கள் எப்போதும் நன்மைசெய்கிறதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புண்ணியமென்று வீணாய் நினைத்துக்கொண்டிருக்கிற ஏதோ சில ஆசாரங்களை அனுசரித்துவருகிறார்கள். அது தேவனுடைய சமுகத்தில் பாவமாயிருக்கிறது. “தங்கள் அக்கினித்தீபத்திலும், தாங்கள்மூட்டின அக்கினிச் சுவாலையிலும் நடக்கிறவர்கள் வேதனையிற் கிடப்பார்களென்று (ஏசாயா 50: 11) தீர்க்கதரிசி சொல்லுகிறார். ஆகையால் புண்ணியமென்று தேவன் ஏற்படுத்தாத சில ஆசாரங்களைத் தங்களுக்குப் புண்ணியமாக்கிக்கொண்டு, அவைகளைத் தாங்கள் நிறைவேற்றிவருவதற்காக தேவன் தங்களை அங்கீகரித்துக்கொள்வாரென்று நம்புகிறவர்களுக்கு வேதனை வரும். நற்கிரியை யாதொன்றையும் நடப்பியாதவர்கள்தான், பொதுவாக தங்கள் நற்கிரியைகளால் தங்களுக்கு இரட்சிப்புக் கிடைக்குமென்று மிகவும் நம்பி மோசம்போகிறார்கள் என்று சில யூகிகள் சரியாய்ச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நூதன கோட்பாட்டை நாம் எச்சரிக்கையாய் வியார்த்தி செய்யவேண்டும். நாம் சிந்தித்துவருகிற இரட்சகருடைய வாக்கைக் கவனித்துக்கொண்டால் அதற்கு வியார்த்தி இலகுவாய்ச் சொல்லலாம். இவர்களிருக்கிற ஒளி இருளடைந்திருப்பதால் இவர்கள் புண்ணியமென்று நினைக்கிற ஆசாரங்கள் புண்ணியமல்ல. மனிதர் தங்களைத் தாங்களே வஞ்சிக்கிறார்கள். அவர்களில் இருக்கும் வெளிச்சம் இருண்டுபோயிருந்தால் அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும். மிகவும் பெரிய துன்மார்க்கனுங்கூட ஏதோ ஒரு சன்மார்க்க ஒழுக்கம், புண்ணியம், வேத ஒழுக்கம், கணிசம், தனக்கும் உண்டென்று நினைத்து மேன்மைபாராட்டுகிறான். நன்மையென்று பொய்யாக எண்ணப்பட்டிருக்கிற விஷயங்களைக் குறித்துத் துன்மார்க்கர் அதிகமாய்ச் சம்பாஷிக்கிறார்கள். இப்படி தாங்கள் நன்மையென்று நினைத்து நடப்பித்துவருகிற விஷயங்களை மற்றவர்களும் நடப்பிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்தப் பொய்நன்மை, மெய்நன்மைக்கு எதிரிடையாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட அபத்தமான நன்மைகளை அவர்கள் வேண்டுமென்று முந்தியே தெரிந்துகொண்டு அப்பியாசித்து அது தங்களுக்கு இரட்சிப்புத் தரத்தக்கதென்று நினைத்து, அதில் நம்பிக்கைவைக்கிறார்கள். ஆனாலோ தேவகிருபையால் கண்கள் திறக்கப்பட்ட மனுஷன் மெய்ப் பரிசுத்தத்தின் நன்மையைத் தெளிவாய் அறியக்கூடுமாகையால் அந்த மெய்ப் பரிசுத்தத்தில் தான் மிகவும் குறைவுள்ளவனென்று அறியும் சக்தியுள்ளவனாயிருக்கிறான். மேலும் கணக்கில்லாத தனது குறைவுகளினிமித்தம் தேவனுக்கு முன்பாகத் தன்னை ஒரு தூசியென்று தாழ்த்திவருவதால் இரட்சகர் செலுத்தின பலியினால் கிடைக்கும் நன்மைகளை ஏற்றுக்கொள்ளுகிறதற்கு மிகவுஞ் சந்தோஷமாயிருக்கிறான்.

மூன்றாவது. ஒருவன் தன்னுடைய நடத்தை சரியானதோ அல்லவோவென்று நிதானித்து நிச்சயித்துக்கொள்வதற்கு அவன் தங்கள் மனச்சாட்சியின்படி மாத்திரம் நடக்கிறது அவசியமென்று நினைத்து மோசம்போகிறவர்களுடைய தப்பிதத்தில் தானும் விழாதபடி எச்ச-



ரிக்கையாயிருக்கவேண்டும். முந்தி அவன் குருட்டாட்டம் பிடித்த மனச்சாட்சியின்படியா? பிரகாசிக்கப்பட்ட மனச்சாட்சியின்படியா? எதின்படி நடக்கிறான் என்பதை யறியவேண்டும். ஏனென்றால் மனிதருக்குள்ளே குருட்டாட்டம்பிடித்த, கேடுகெட்ட, கடினப்பட்ட, சூடுண்ட மனச்சாட்சியுண்டென்றும் தேவனுடைய ஊழியக்காரரைக் கொல்லுகிறதும் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறதுதானென்று நினைக்கிறவர்களுமுண்டென்றும் வேதத்தினாலறிகிறோம். மனிதர் தாங்கள் செய்யும் அநேக பாவங்களை மனச்சாட்சிக்கு எவ்வளவும் வருத்தமில்லாமலே செய்கிறார்கள். ஏன் அவர்களுடைய மனச்சாட்சிக்கு வருத்தமில்லையென்றால், அவர்களிலுள்ள வெளிச்சம் இருளாயிருக்கிறதினாலேயே அவர்களுக்கு வருத்தமில்லை. வேதசத்தியத்தையும் அசத்தியத்தையும், நன்மையையும் தீமையையும் பகுத்தறியவும், வேதத்துக்கும் சன்மார்க்கத்துக்குமுரிய கடமையின் தன்மையையும், எல்லையையும் அறியவுந்தக்கவிதமாய் மனதும் பகுத்தறிவும் மெய்யாகவே பிரகாசிக்கப்பட்டிருக்குமானால் மனச்சாட்சியின்படி செய்கிறது சீருள்ள கண் நடத்துகிறதின்படி செய்கிறதுக்கொப்பாகச் சரியாயிருக்கும். கண் சீருள்ளதாயிருப்பதால் சகல நடத்தைகளுஞ் சரியாயிருக்கும். சரீரமும் வெளிச்சமாகவேயிருக்கும். உன் கண் சீர்கெட்டதாயிருந்தால் உன் சரீரமுழுவதும் இருளுள்ளதாயிருக்கும். இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவாயிருக்கும். ஆகையால் நாம் அறிவீனமும் குருட்டாட்டமுமான மனச்சாட்சியைக்குறித்துப் பயப்படவேண்டும். அது அநேக ஆயிரம் பாவங்களுக்கு மூலமாயிருந்தும் அதை நாம் எவ்வளவும் அறியாமற்போகிறோம். சீர்கெட்ட கண்ணுக்குப் பார்வையிராதே. இருந்தாலும் பார்வையானது தாறுமாறுள்ளதாயிருக்குமே. அதுபோலவே குருட்டாட்டம் பிடித்த மனச்சாட்சி நடத்துவதெல்லாம் தப்பிதமாகவேயிருக்கும். ஆகையால் அந்தக் குருட்டாட்டம்பிடித்த மனச்சாட்சி ஏவுகிறதின்படி செய்யக்கூடாது.

ஆவிக்குரிய இந்தச் சாமர்த்தியத்தை அடைந்துகொள்வதெப்படியென்று விசாரிப்போருக்குச் சொல்வது: அதைச் செபத்தினாலும் தேவன் நியமித்திருக்கிற எத்தனங்களைக் கைபோடுவதினாலும் பெற்றுக்கொள்ளலாம். பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய வெளிச்சத்தைக் கொடுக்கிறவராயிருக்கிறார். தேவனிடத்திற் கேட்டுக்கொள்கிறவர்களுக்கு அவர் பரிசுத்த ஆவியைக் கொடுப்பாரென்று நம்முடைய இரட்சகர் உறுதியாய்ச் சொல்லியிருக்கிறார். (லூக்கா 11. 13.) நம்முடைய வேதத்தின் மூலாதாரங்களை அறியவும் பிதாவாகிய தேவனையும் அவருடைய குமாரன் ஏசுக்கிறிஸ்துவையுங் குறித்துத் திட்டமாயறிந்துகொள்ளவும் விரும்பினால் ஆதியில் வெளிச்சமுண்டாகக்கடவதென்று சொல்லி வெளிச்சத்தை உண்டாக்கினவரும் இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்னவரும் இயேசுக்கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணினவருமாகிய தேவனே நம்முடைய இருதயத்திற் பிரகாசிக்கவேண்டும். (2 கொரி. 4. 6.) உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும் (சங். 119. 18.) என்று தாவீது பரிசுத்த ஆவியின் வெளிச்சத்துக்காகச் செபம்பண்ணியிருக்கிறார். “பிதாவாகிய தேவன் தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பி அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்ல

மையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று நீங்களறியும்படிக்கு அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்" (எபேசி. 1. 19.) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவர்களுக்காகச் செபம்பண்ணினார்.

இந்த ஈவுக்காக நாமும் தேவனைநோக்கிச் செபம்பண்ணுவோமாக. அதோடு பவுலப்போஸ்தலன் சொல்லுகிறபடி நாம் எல்லாரும் ஞானத்தோடும் ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும் (கொலோசர் 1. 9.) ஜெபம்பண்ணவேண்டும்.

சரியாய்ச் செபம்பண்ணுவதற்கு ஜெபத்தையல்லாமல் வேறு எத்தனங்களையும் கையாடவேண்டும். நம்மில் காணப்படுகிற வேதத்துக்குவிரோதமான தப்பிதங்களைக் கண்டுபிடிக்கக் கூடியமட்டும் பிரயாசப்படவேண்டும். சகல தப்பெண்ணங்களுக்கும் விலகவேண்டும். கேட்காராயவும், பரிசோதிக்கவும், சிந்திக்கவும், கலக்கவும் வேண்டும். வேதத்தை மெத்தக் கவனமாய் வாசிக்கவேண்டும். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் (லூக்கா 8. 18.) என்று சொல்லியிருப்பதால் நமக்கிருக்கிற கொஞ்ச வெளிச்சத்தைக்கொண்டு நல்ல முயற்சிபண்ண சாக்கிரதையாயிருக்கவேண்டும்.

இந்த ஞானவரம் நமக்குண்டோ இல்லையோ என்று அறிகிறதெப்படியென்று கேட்கிறதுண்டானால், ஏசாயா 8. 20ல், சொல்லுகிறபடி வேதத்தையும் கடைசி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லையென்று சொல்லலாம். வேதம் சாட்சியென்பது, வேதத்தின் ஒரு பங்கை அல்லது அவரவர்கள் தங்கள் மனப்படி தப்பர்த்தம்பண்ணிக்கொள்ளும் சில வாக்கியங்களை மாத்திரம் குறியாமல் வேதமுழுமையையுங் குறிக்கிறது. பின்வருகிற எச்சரிப்புகளைக் கவனித்து மனதில்வைத்துக்கொள்ளவேண்டும். சிலர் ஞான ஒளியானது வேதரகசியங்களையும் சுவிசேஷ உபதேசங்களையும் மாத்திரம் குறிக்கிறதென்று நினைக்கிறார்கள். அது பெரிய தப்பிதம். அப்படியல்ல. மனிதன் நடந்துகொள்ளவேண்டிய ஒவ்வொரு நடக்கையையும் ஞான ஒளியென்று வேதத்தில் அநேக இடத்திற் சொல்லியிருக்கிறது. திருஷ்டாந்தரமாக பேதுரு அப்போஸ்தலன் (2 பேதுரு 1. 5, 7ல்) நீங்கள் அதிக சாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் என்று சொன்னபின்பு 9ம் வசனத்தில் இவைகளில்லாதவனெவனோ அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான் என்று சொல்லுகிறார். யோவான் அப்போஸ்தலனும் (1 யோவா 2. 9.) தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலேயிருக்கிறான் என்கிறார். சரீரமானது ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்குப் போகவும் அதின் அவயவங்கள் ஒவ்வொன்றுந் தன்தன் கிரியைகளை நடப்பிக்கவும் கண் அவைகளை நடத்துகிறதுபோல மனதினது ஞானப் பெலனும் பழுதின்றி நிறைவாயிருக்கும்போது உயிர்வாழ்க்



கைக்குரிய ஒவ்வொரு செய்கையையும் நடத்துகிறது. நம்முடைய கடமைகளையெல்லாம் நாம் திட்டமாயறிந்துகொள்கிறதற்கு நமக்கு உதவியாயிருக்கும். எதை நாம் நாடித்தேடவேண்டும், எதை விட்டு விலகவேண்டும் என்று நமக்குப் போதிக்கும். எந்தக் குணங்கள், எந்த நினைவுகள், எந்த வார்த்தைகள், எந்தச் செய்கைகள் நல்லதென்றும், எவைகள் கெட்டதென்றும் நாம் அறிந்துகொள்ள அதினால் நமக்குத் திராணியுண்டாகும். உபதேசங்களைக்குறித்தும் நமது விசுவாசத்தின் இரகசியங்களைக் குறித்தும் மாத்திரமல்ல, தேவனுக்காவது மனிதருக்காவது அடுத்த நம்முடைய கடமைகளின் ஒவ்வொரு பாகத்தைக்குறித்தும் வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. "உன கண் தெளிவுள்ளதாயிருந்தால் உன் சரீரமுழுவதும் வெளிச்சமுள்ளதாயிருக்கும்."

---

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

### ௬. அதிகாரம்.

*சலப்பிரளயம் முன்னறிவிக்கப்பட்டது.*

5. "பெருகினது" அதாவது அவர்கள் அக்கிரமம் பிரபலமும் துணிகரமும் கொடிதுமான தென்றர்த்தம். நிதானத்தில் பிசகாத தேவன் இப்படிச் சொல்லுகிறார். அவர்கள் கிரியை இவ்வளவு கேடாயிருக்குமானால் அவர்கள் இருதயம் தேவனுக்கு முன்பாக எவ்வளவு நாற்றமாயிருக்கும்.

"தோற்றமெல்லாம்" அவர்கள் கிரியைக்கு முந்தின யோசனையும், அவர்கள் அறிவின் பிரயோகமும், அவர்கள் ஆத்துமாவின் நோக்கங்கள் விருப்பங்கள் முழுவாஞ்சையுமெல்லாம் பொல்லாததாயிருந்தது. "நித்தம் பொல்லாததே" யன்றி யாதொரு நன்மையும் கலந்திருந்ததல்லை.

6. 7. "மனஸ்தாபப்பட்டார்" தேவன் தாபமில்லாதவரானதால் அவர் மெய்யாகவே மனஸ்தாபப்படக்கூடாது. நாம் சிறுபிள்ளைகளிடத்தில் சிலவேளை சிறுபிள்ளைகளுக்கேற்ற வகையாய்ப் பேசுவதுபோல தேவசித்தம் நமது சிற்றறிவுக்கு விளங்கும்படி பரிசுத்தாவியானவர் இப்படி எழுதவிக்கச் சித்தமானார். தேவன் இப்பொழுது உலகத்தை அழிக்கச் சித்தமானார் என்பதுதான் அதின் அர்த்தம். எபி. 12: 17ல் "மனம் மாறுதல்" என்பது இந்த வார்த்தைதான்.

8. 9. ஸ்திரீயின் வித்தின்பேரிலுள்ள விசுவாசத்தினாலே நீதிமானானான். எபி. 11: 7. உரோ. 3: 24, 25. ஆதி. 5: 22.

10. 5: 32. வியா. பார்.

15, 16. ஒரு முழம் என்பது அரைசெஜத்துக்கு கூற்று அதிகநீளமுள்ளது. அப்படியானால் பேழை 160 செஜநீளமும் 27 செஜ அகலமும் 16 செஜ உயரமுமாயிருக்கும். இதைச் செய்யவேண்டிய வகைவிபரங்களை எல்லாம் தேவனே அவனுக்குச் சொல்லிக்கொடுத்தார். ஆகையால் உலகத்திலுள்ள எந்த சிற்பசாஸ்திரியும் அவ்வளவு திட்டவட்டமாய்ச் செய்யமாட்டான்.

பேழையின் நீளம் லண்டன்பட்டணத்திலுள்ள பரிசுத்த பவுலின் அத்தியட்ச தேவாலயத்தின் நீளத்துக்குச் சரியாயும், பேழையின் பருப்பம் அந்தப் பிரமாண்டமான கட்டடத்தின் பாதிக்குச் சரியாயுமிருந்தது. அந்தப்பேழை 42,413 டன் (அல்லது சுமார் 67 லட்சம் துலாம்) பாரங்கொள்ளத்தக்கது. இப்பொழுது இங்கிலிஷ்க்காரருக்குள்ளிருக்கிற கப்பல்களில் முதல் தரமான பஷ்டக் கப்பல் 2300 டன் (3½ லக்ஷம் துலாம்) பாரம்கொள்ளத்தக்கதாயிருப்பதால்;—20,000 போர்வீரரையும் அவர்களுக்கு 6 மாதச் சாப்பாட்டையும், 1800 பீரங்கிகளையும் இராணுவத்துக்கடுத்த மற்றும் அவசியமான சாமான்களையும் அடக்கிய 18 பெரிய யுத்தக் கப்பல்களுக்கு அந்தப் பேழை சமமாயிருந்தது. ஆகையால் அது 8 மனிதரையும், சுமார் 200 அல்லது 250 சோடு நாலுகால் ஜீவன்களையும், தண்ணீரில் வசிக்கமாட்டாத பட்சி பறவை ஊர்வனவற்றையும் இவை எல்லாவற்றுக்கும் ஒரு வருஷத்துக்குவேண்டிய ஆகாரத்தையும் கொள்ளும்படி போதுமானதாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படியிருப்பதால் அதற்குள்ளிருந்ததாகச் சொல்லப்படுகிற எல்லாவற்றையும் கொள்ளத்தக்கதல்லவென்று சிலர் ஆட்சேபிப்பது அபத்தமாம்.

17. சலப்பிரளயத்தினால் உலகத்தை அழிப்பதை தேவன் நோவாவுக்கு நேராய் வெளிப்படுத்தியிருந்தார். சங்கீ 25:14. இப்படிப்பட்டது இதற்குமுன் ஒருக்காலும் நடந்திருப்பதில்லை. இயல்பான மனுஷன் இதை எப்படி நம்புவான். அப்படியிருக்க இது நடக்கக்கூடிய காரியமோ அல்லவோ என்பதை நோவா யோசிக்கவில்லை. சர்வ வல்லமையுள்ள மெய்த்தேவன் உரைப்பது எவ்விதமும் வந்து சம்பவிக்கும் என்று அவருடைய வார்த்தையை நம்பினான். நம்பி வரும் கோபாக்கினைக்கு நீங்கலாக்கப்பட்டான்.

18. "உடன்படிக்கை" என்ற வார்த்தை முதலாவது வருகிற இடம் இதுதான். நோவா பேழைக்குள் பத்திரமாய்க் காக்கப்படுவதையும், திருச்சபை இவனிலிருந்துண்டாகி மேசியா இவன் வழியில் தோன்றுவதையும் குறிக்க உடன்படிக்கை என்று தோன்றும்.

சலப்பிரளயத்துக்கு 100 வருஷத்துக்குமுன் நோவாவுக்கு ஒரு பிள்ளையாவது இருந்ததில்லை. ஆகையால் அவன் குமாரரைக்குறித்த கட்டளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்பட்டிருக்கவேண்டும்.

### படிப்பினை.

தங்களைத் தேவபுத்திரர் என்று சொல்லுகிறவர்கள் தேவ உத்தரவில்லாமல் விவாகஞ்செய்யக்கூடாது. அப்படிச் செய்தவர்கள் எக்காலத்திலும் பயங்கரமாய்த் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.—நமக்குக் கிருபையின்காலம் எப்போதுமிராது. பழைய உலகத்தாருக்கு 120 வருடத் தவணை கொடுக்கப்பட்டது. நமக்கு அவ்வளவுகூட இல்லையே! ஆகையால் நாம் இப்போதே குணப்படவேண்டும்.

விசுவாசம் செலவுசெய்ய அஞ்சமாட்டாது. நோவா பேழை செய்ய எவ்வளவு வருத்தப்பட்டான்! எவ்வளவு செலவிட்டான்! இரத்தசாட்சிகள் விசுவாசத்தினாலே என்னென்னதெல்லாம் செலவிட்டிருக்கிறார்கள்!. உயிருள்ள விசுவாசம் எவ்விதமும் கிரியை செய்யும்.—நோவா வெகுநாளாய் சலப்பிரளயத்துக்கு ஆயத்தப்பட்டான். நாமும் நமது ஜீவகாலமெல்லாம் மரணத்துக்கு ஆயத்தப்படவேண்டும். மெய்யான பேழையாகிய ஏசுக்கிறிஸ்து ரட்சகருக்குள் அடைக்கலம் தேடக்கடவோம்.



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.** சென்னைக் கவர்னராயிருந்து சில மாசங்களுக்குமுன் சீமைக்குப்போன நப்பியர் பிரபு எட்ரிக் என்ற பட்டப்பெயர் பெற்றார். எட்ரிக் என்பது ஸ்காண்டிலன் தேசத்தைச் சேர்ந்த ஒரு ஆற்றின் பெயர். அந்த ஆறு ஓடும் பிரதேசம் மலை நாடு. அது நப்பியர் பிரபுவின் ஆதி வமிசத்தாருக்கு உரித்தானபடியால் அந்தப் பெயர் அவருக்குத் தரிப்பிக்கப்பட்டது. இனி அவர் மஹா பிரபுக்களின் சபையில் சுதந்தரவாளியாய் அங்குள்ள பெரியோர்களுள் ஒருவராயிருப்பார். அங்கிலேய உயர்மக்கள் ராணுவத் தொழில் கற்றுக்கொள்ளும் வித்தியாசாலையில் பிரான்சிய சக்கரவர்த்தியின் குமாரன் பிரவேசித்து, அஸ்திர வித்தை கற்றுக்கொள்வதற்கு மகா ராஜாத்தியவர்கள் உத்தரவுசெய்தார்கள். அலபாமா விஷயத்தில் மத்தியஸ்தர் அபிப்பிராயம் அங்கிலேயர் பக்ஷம் அநுகூலமென்று முன் சொன்னோமே. ஆலோசனைச் சபையில் ஏதோ ஒரு தர்க்கமுண்டானதினிமித்தம் காரியம் சற்றுக் காலம் தடைப்பட்டும், நொவம்பர் மாசத்துக்குமுன் எல்லாம் ஒழுங்குப்படுமென்று உத்தேசிக்க இடம் உண்டு. ஜூன் மாசத்தில் சீமையினின்று புறத்தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட வர்த்தக சரக்கின் விலை முன் எந்த மாசத்திலும் ஏற்றுமதியானதற்குச் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் அதிகம். ஆகவே தற்காலத்தில் வர்த்தக அபிவிர்த்தி அதிகமென்று விளங்குகிறது.

**ஸ்பானியா.** ஜூலைமீ 19உ இராத்திரி நடுச்சாமத்தில் ராஜாவும் ராஜாத்தியும் தம்முடைய மாளிகைக்குத் திரும்பிப் போகையில், ராஜ துரோகிகள் ஐந்து பெயர் துபாக்கியினால் அவர்களுக்கு நேரே சுட்டார்கள். குண்டு படவில்லை. அவர்களில் ஒருவன் மெய்காவலரால் கொல்லப்பட்டான். இரண்டு பெயர் சிறைப்பட்டார்கள்.

**இந்தியா.** மேயோ பிரபுவின் ஞாபகக்குறிப்பு ஸ்தாபிக்கும்படி திரவியம் சேகரிக்கப்பட்டது. அந்தக் கனவான் குதிரை ஏறியிருக்கும் பாவனையாய்த் தெரியும்படி செய்வார்கள். கல்கத்தாவிலே ஹார்டிங் பிரபுவின் பிரதிமூர்த்திக்கு எதிரே அது ஸ்தாபிக்கப்படுமாம். அதற்குச் செல்லும் செலவு அறுபதினாயிரம் ரூபாய்.

**இருப்புப்பாதை.** சுமார் பத்து வருஷத்துக்குமுன் சென்னபட்டினத்தைச் சேர்ந்த வீதிகளில் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு எளிதில் போக்குவரவு செய்வதற்கேற்ற இருப்புப்பாதைகளை உண்டாக்கும்படி சீமையிலே இருக்கிற கூட்டத்தார் உத்தரவு கேட்டதை கவர்ணமெண்டாரும் நகர விசாரணைச் சபையாரும் உபேட்சித்துவிட்டார்கள். பிறகிட்ட பத்து வருஷத்துக்குள் வீதி இருப்புப்பாதைகள் ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள பட்டினங்களில் அநேகமாய் அபிவிர்த்தியாயின. தற்காலத்தில் லண்டனிலிருக்கிற சில வர்த்தக சபையார் சென்னை நகர விசாரணைச் சபையாருக்கு கடிதம் எழுதி, சென்னையில் மூன்று வீதி இருப்புப்பாதைகளை உண்டாக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறார்கள். அப்படி முடிந்தால் சென்னைப் பிரஜைகளுக்கு அநேக அநுகூலமுண்டாமென்பதற்கு சந்தேகமில்லை. திருச்சினாப்பள்ளியிலிருந்து தூற்றுகுடிவரையும்போட உத்தேசித்த இருப்புப்பாதை வேலை தொடங்கி நடக்கிறது. முதலில் ரோட் வேலை நடக்கும். அவ்வாறே அதையடுத்த மற்ற வேலைகளும் தொடங்கி முடிவாகி அநுகூலப்படுமென்று நம்புகிறோம்.

ஆகஸ்துமீ நாள் 31—ஆடிமீ 19உ முதல், ஆவணிமீ 17உ வரை.

| வாரம். | ஆங்கில தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௧௯ | என் சனங்களைப் போகவிடவேண்டும். யாத். 5: 1. |
| வெ | 2 | ௨௦ | எபிரேயருடைய தேவன் எங்களைச் சந்தித்தார். 3. |
| ச | 3 | ௨௧ | இந்தச் சனங்களுக்குத் தீங்கு வரப்பண்ணினதென்ன? 22. |
| ஞா | 4 | ௨௨ | நீர் உம்முடைய சனங்களை விடுதலையாக்கவில்லையே. 23. [15: 3. |
| தி | 5 | ௨௩ | அவன் இருதயம் கர்த்தருக்குமுன் உத்தமமாயிருக்கவில்லை. 1 இரா. |
| செ | 6 | ௨௪ | கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். 11. |
| பு | 7 | ௨௫ | அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது. 14. |
| வி | 8 | ௨௬ | தேவனே! உம்முடைய நடைகளைக் கண்டார்கள். சங்கீதம் 68: 24. |
| வெ | 9 | ௨௭ | பூமியின் குடிகளே! ஆண்டவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள். 32. |
| ச | 10 | ௨௮ | தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துங்கள். 34. |
| ஞா | 11 | ௨௯ | தேவனுக்கு ஸ்தோத்திர முண்டாவதாக. 35. |
| தி | 12 | ௩௦ | தேவனே! என்னை இரட்சியும். 69: 1. |
| செ | 13 | ௩௧ | நான் கூப்பிடுகிறதினால் இளைத்தேன். 3. |
| பு | 14 | ௩௨ | என் குற்றங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை. 5. |
| வி | 15 | ௧ | உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன். 7. |
| வெ | 16 | ௨ | நகைப்பைப்பார்க்கிலும் துக்கிப்பு நலம். பிரசங்கி. 7: 3. |
| ச | 17 | ௩ | முகத்துக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும். 3. |
| ஞா | 18 | ௪ | மூடரின் இருதயம் களிப்பு வீட்டிலே இருக்கும். 4. |
| தி | 19 | ௫ | பரிதானம் இருதயத்தைக் கெடுக்கும். 7. |
| செ | 20 | ௬ | மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும். 9. |
| பு | 21 | ௭ | நானே எல்லாவற்றையுஞ் செய்கிற கர்த்தர். ஏசாயா 44: 24. |
| வி | 22 | ௮ | எனக்குப் பிரியமானதை யெல்லாம் நிறைவேற்றுவான். 28. |
| வெ | 23 | ௯ | கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். 45: 2. |
| ச | 24 | ௧௦ | என் கரங்கள் வானத்தை விரித்தன. 12. |
| ஞா | 25 | ௧௧ | உன் தேவனை விட்டு நீ சோரம் போனாய். ஓசியா 9: 1. |
| தி | 26 | ௧௨ | அவர்கள் தங்களை மிகவும் கெடுத்துக்கொண்டார்கள். 9. |
| செ | 27 | ௧௩ | நான் வானத்திலிருந்து வந்த அப்பம். யோவான் 6: 41. |
| பு | 28 | ௧௪ | எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள். 45. |
| வி | 29 | ௧௫ | மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். வெளிப். 22: 20. |
| வெ | 30 | ௧௬ | கர்த்தராகிய இயேசுவே வாரும். 20. |
| ச | 31 | ௧௭ | கிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக. 21. |

## விசேஷித்த நாட்கள்.

4. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின் வரும் பத்தாம் ஞாயிறு.
4. அமாவாசை.
11. திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின் வரும் பதினோராம் ஞாயிறு.
18. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் பன்னிரண்டாம்ஞாயிறு.
19. பௌரணமி.
25. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின் வரும் பதின்மூன்றாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 24. September. No. 9.

**Contents:**

Bible Sketches and their Teachings. ... ... ... ... 162
Christian Church History. ... ... ... ... ... ... 164
The Parables of Christ. ... ... ... ... ... ... 166
On the Liturgy. ... ... ... ... ... ... ... ... 169
Notes on Genesis. ... ... ... ... ... ... ... 171
Baxter's Saints' Everlasting Rest. ... ... ... ... ... 173
Communicant's Companion. ... ... ... ... ... 177
Summary of News. ... ... ... ... ... ... ... 179

**அட்டவணை:**

பாலபோதனை. ... ... ... ... ... ... ... ௧௬௨
கிறிஸ்து சபை சரித்திரம்.... ... ... ... ... ௧௬௪
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... ௧௬௬
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ... ௧௬௯
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... ௧௭௧
விசுவாசிகளின் பரம இளைப்பாறுதல். ... ... ... ௧௭௩
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... ... ௧௭௭
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ... ௧௭௯

Palamcottah
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.
1872.

௯. செப்தெம்பர்மீ. ௧௮௭௨௵.

**Bible Sketches and their Teachings.**

## பாலபோதனை.

### பிலேயாம்.

4 மோசே 22. அதிகாரம்.

நாம் இப்பொழுது வாசித்த சரித்திரம், நான் நினைக்கிறபடி வேதாகமத்தில் சொல்லியிருக்கிற பேர்களில் மகா அதிசயமான ஒருவனுடைய விர்த்தாந்தம். அவனுடைய காரியம் மிகவும் துக்ககரமானது. இந்த ஆகமம் இருபத்துநாலாம் அதிகாரத்தின் கடைசிவரையும் வாசித்துக்கொள்வீர்களாகில் இங்ஙனம் சொல்லப்போகிற விசேஷங்களைத் திட்டமாய் அறிந்துகொள்வீர்கள்.

இஸ்ரவேல் சனங்கள் தங்கள் நீண்ட பிரயாணத்தில் இப்பொழுது வந்திருக்கிற இடத்தைச் சற்றுக் கவனித்துக்கொள்வோம். நாற்பது வருஷமும் கிட்டதட்டக் கழிந்துவிட்டது. எழுந்து கானான்தேசத்துக்குட் பிரவேசியுங்கள் என்கின்ற சந்தோஷமான உத்தரவு சீக்கிரம் கேட்கப்படப்போகிறது. தங்கள் காணியாட்சியில் ஒரு பங்கையும் சண்டைசெய்து கட்டிக்கொண்டார்கள். படத்தைப் பார்ப்பீர்களானால் யோர்தான் நதிக்குக் கிழக்கே வடக்கே கெனசரேத்துக் கடல்வரையும் பரவியிருக்கிற ஒரு தேசத்தைக் காண்பீர்கள். அதற்கு பாசான் தேசம் என்று பெயர். இந்த தேசந்தான் அவர்கள் செயித்துக் கட்டிக்கொண்டிருந்தது. மேலும் அதற்குத் தெற்கே எஸ்போன் என்ற பட்டணமும் அதைச்சூழ்ந்த சீமையும் அவர்கள் வசமாயிற்று. இனிமேல் ஆற்றுக்கு அப்புறத்திலுள்ள கானான் தேசத்தையும் கட்டிக்கொள்வோம் என்ற நம்பிக்கையும் தைரியமும் மிகுதியுமுண்டாயிற்று. சூழவிருந்த தேசத்து அரசர்களோ பயமடைந்தார்கள். அவ்வரசர்களில் ஒருவன் பாலாக் என்பவன். சவக்கடலையடுத்த மோவாப் என்ற சமபூமியை ஆண்டுவந்தவன். மேற்படி சமபூமியின் வடபாரிசத்தில் இஸ்ரவேலர் இப்பொழுது வந்து பாளையமிறங்கியிருந்தார்கள். அவர்களை எதிர்த்து சண்டை செய்வதற்கு பாலாக்குக்குத் தைரியமில்லை. அவன் மனங்கலங்கி இன்னது செய்யவேண்டுமென்று தெரியாமலிருக்கையில் ஒரு காரியம் ஞாபகம் வந்தது. கிழக்கே தூரத்திலே ஐப்பிராத்து நதியோரமாய் பெரிய குறிகாரன் ஒருவனிருந்தான். அவன் பெயர் பிலேயாம். அவன் மற்றவர்களைக் குறித்து நன்மையாயாவது தீமையாயாவது உரைக்கிறதெல்லாம் அந்தப்படியே நிறைவேறுமென்று எண்ணியிருந்தார்கள். ஆகையால் பிலேயாமை மாத்திரம் இவ்விடத்துக்கு வருவித்து இஸ்ரவேலரைச்



சபிக்கும்படி பண்ணிக்கொண்டால், அவர்களைச் சீக்கிரம் நிர்மூலமாக்கிவிடலாம் என்று இராசா நினைத்தான்.

இந்தப் பாலாக் என்பவன் விக்கிரகாராதனைக்காரன். மீதியான் தேசத்துச் சனங்களும் அவ்வாறே விக்கிரகாராதனைக்காரர்தான். பிலேயாமோ தான் குடியிருந்த தூரமான தேசத்தில் சர்வலோகங்களையும் படைத்த தேவனை அறிந்து அவருக்குப் பயப்படுகிறவனாயிருந்தான்.

மேசொப்பொத்தாமியாத தேசத்திலிருந்த அவன் வீட்டுக்குப் பாலாக்கினிடத்திலிருந்தும் மீதியான் தேசத்திலிருந்தும் அனுப்பப்பட்ட ஸ்தானாபதிகள் வந்துசேர்ந்து, பிலேயாமினிடத்தில் தாங்கள் வந்த காரியத்தையறிவித்து, நீ வந்து இஸ்ரவேலைச் சபிப்பாயாகில் பெரிய பெரிய வெகுமதிகள் உனக்குக் கொடுக்கப்படும் என்றார்கள். அதைக் கேட்டு பிலேயாம், "நான் கர்த்தருக்குப் பயப்படுகிறவன், நான் உங்களோடு வரலாமாவென்று அவரிடத்தில் உத்தரவுகேட்கவேண்டும்" என்றான். அப்பால் இரவிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனையாகி, "நீ அவர்களோடே போகவும் வேண்டாம். அந்தச் சனத்தை சபிக்கவும் வேண்டாம், என்னத்தினாலென்றால், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" என்றுசொல்லி அவனைத் தடுத்தார். இவ்வளவு போதாதா? காலையில் நடந்ததைப் பார்க்கும்போது அது போதும் என்பதுபோல காணப்பட்டது. பிலேயாம் ஸ்தானாபதிகளையழைத்து, "உங்களுடனே வர கர்த்தர் எனக்கு உத்தரவுகொடுக்க மாட்டோம் என்கிறார்" என்று சொல்லி அனுப்பிவிட்டான். "நான் வரவேமாட்டேன்" என்று தீர்க்கமாய் ஏன் சொல்லவில்லை? அவர்களோடு கூடப்போவதற்கு அவன் மனமாயிருந்ததினாலேதான். ஒரு பிள்ளையைக் கெட்டதோழர் தங்களோடு வரக் கூப்பிடும்பொழுது, அந்தபிள்ளை அவர்களைப்பார்த்து "தகப்பனுக்குப் பிரியமில்லை. ஆகையால் நான் வரப்படாது" என்று துக்கத்தோடும் சலிப்போடும் சொல்லுமாகில் அதின் பொருளின்னதென்று நம்மெல்லாருக்குந் தெரியுமே. அதுபோல பாலாக் அனுப்பின ஸ்தானாபதிகளுக்கும் அது தெரிந்தேயிருந்தது. அவர்கள் இராசாவினிடத்துக்குத் திரும்பிப்போய், "அந்தக் குறிகாரனுக்கு இன்னம் இனிப்பைக் காண்பியும், அவன் எப்படியும் வருவான்" என்று சொல்லியிருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

இரண்டாம் விசையும் ஸ்தானாபதிகள் வரவேண்டுமென்பதும், முன் வந்தவர்களைப்பார்க்க அதிகக் கனவான்கள் அநேகர் வரவேண்டுமென்பதும், அதிக விலையுள்ள வெகுமானங்கள் கொண்டுவரவேண்டுமென்பதும், முன்னையிலும் அதிகமான திரவியங் கொடுப்போமென்று வாக்குச்சொல்லவேண்டுமென்பதும் பிலேயாமின் உள்ளத்து ஆசை. அவன் உத்தமமும் சேர்படத்தையுமுள்ளவனானால், "நீங்கள் கேட்கிற காரியம் தப்பிதம். நான் உங்களோடு வரமாட்டேன்" என்று தீர்மானமாய்ச் சொல்லி மறுத்துவிடுவானே. அவனோ இரண்டாம் விசையும் என்னசொல்லுகிறான். தேவனிடத்தில் நான் இன்னமும் கேட்கட்டும் என்கிறான். இன்னமும் கேட்கவா? தேவன் ஒருவிசைசொன்னது போதாதோ? பிலேயாமின் இருதயம் தற்பொழிவினாலும் பொருளாசையினாலும் மயங்கி, தேவனுடைய சித்தத்துக்கு திருகுபண்ணியிராவிட்டால், அவன் இரண்டாம்விசை தேவனிடத்திற் கேட்க நினைத்திருக்கவேமாட்டான்.

இந்தத் திருக்குங் குணத்தையும் துரோகசிந்தையையும் தேவன் கண்டார். கண்டுதான் தம்முடைய நோக்கம் நிறைவேறுதற்கென்று சிறிதுநேரம் அவன் தன்னிஷ்டப்படி நடக்க விட்டுவிட்டார். ஆகை

மினாலேதான் போகவேண்டாம் என்று முன் அவர் சொல்லியிருந்தும், இப்பொழுது போ என்றார். "போ, ஆனாலும் நான் உனக்கு என்ன சொல்வேனோ அதையே நீ செய்யவேண்டும்."

பிலேயாம் மனந்திரும்புகிறதற்கு இது நல்ல சமையம். "கர்த்தாவே நான் பாவஞ்செய்தேன். தேவரீர் முதலாவது கற்பித்தபடிக்கு நான் போகாமல் நின்றுகொள்வேன்" என்று இப்பொழுதாகிலும் சொல்லியிருப்பானாகில், எவ்வளவு நன்மையாயிருந்திருக்கும்! ஆனாலும் அவன் புறப்பட்டுப்போகிறதற்கே ஆசையாயிருந்தான். மேலும் இந்த அதிகாரத்திலேயே நாம் வாசிக்கிறபடி தேவதூதன் அவனுக்கு வழிமறித்து நின்றபொழுது, அவன் குணப்படுவதற்கு வேறொரு அனுகூலமான சமையமுங் கிடைத்தது. என்றாலும் பிலேயாம் மனஸ்தாபப்படவுமில்லை. மனந்திரும்பவுமில்லை. அவன் தேவதூதனைக் கண்டு எச்சரிக்கப்பட்டும், அவன் ஏறிப்போன கழுதையே அற்புதமான விதமாய் அவனோடு பேசிக் கண்டித்ததைக் கேட்டும் அவன் சொன்னதெல்லாமென்ன! "உமது பார்வைக்குப் பிரியமில்லாவிட்டால், நான் திரும்பிக்கொள்வேன்" என்றுமாத்திரம் சொன்னான். அது தேவனுக்குப் பிரியமில்லாத காரியந்தானென்று நன்றாயறிந்திருந்தானே. இவ்விதமாய்த் தன் மனதை இணக்கப்படுத்தி ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளவே வகைபார்த்தான்.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச சரித்திரம்.

### 13. அதிகாரம்.

அலெக்சாந்தர் செவீரு இராச்சியபாரந் தாங்கினது.—கோவில்கள் கட்டப்பட்டது.—அலெக்சந்திரியாவிலுள்ள பிளேத்தோவின் கொள்கைக்காரர்.—ஓரிஜன் குருப்பட்டமடைந்து செசாரியாவில் ஸ்தாபகமானது.—அவன் எழுதிய நூல்கள்.—மொந்தேனிய வகுப்பார்—இக்கோனியாவிற் கூடிய சங்கம்.—மாகஸிமினு இராயனால் எழும்பின துன்பம்.—பொதுவான சங்கங்கள்—ஆத்துமத்தைக்குறித்த அபிப்பிராயங்கள்—பிலிப்புவின் அரசாட்சி இவைமுதலிய விர்த்தாந்தங்களடங்கியது.

---

எலகபாலுக்குப்பின் அவனுடைய சிறிய தாயின் மகனான அலெக்சாந்தர் செவீரு என்பவன் கிரீடாபிஷேகம் பெற்றான். அவன் சிங்காசனமேறினபொழுது, இராயனும் குடிகளும் சுகமாய் வாழ்ந்திருப்பார்களென்று வேறெந்த இராயனைக்குறித்தும் சொல்லக்கூடாத வண்ணம் இவனைக்குறித்துச் சொல்லத்தக்கதாயிருந்தது. அவன் தாய் மம்மியாள் மதாபிமானமுள்ளவளென்று மேலே குறிப்பித்திருக்கிறதே. அவள் தன் மகன் நன்றாய்ப் படிப்பிக்கப்படவேண்டுமென்று மிகுதியுங் கரிசனைகொண்டிருந்தாள். தாய் மகன் இருவரையும் கிறிஸ்தவர்களென்று சொல்லியிருப்பதுமுண்டு. ஆகிலும் அது காரியத்தில் தாயைப்பற்றி மேலே கவனித்ததெப்படியோ அப்படியே மகனைக்குறித்



தும் தீர்மானிக்கத்தக்கது. அவன் சிறுபிராயத்தில் அடைந்திருந்த நல்லெண்ணங்களினால் கிறிஸ்தவர்கள்பேரில் சற்று தயவாயிருக்க ஏவப்பட்டதேதவிர, அவன் கிறிஸ்தவனேயல்ல. அவன் இராசாங்கம் கைக்கொண்டபோது பதினாறு வயசாய் மாத்திரமிருந்தான். ஆகையால் அவன் கிறிஸ்துவின் சொரூபம் ஒன்றை தன் அறையில் வைத்துக்கொண்டு காலைதோறும் அதை நோக்கிப் பிரார்த்தித்து வந்தான் என்று சொல்லியிருப்பதைக்கொண்டு அவன் இம்மார்க்கத்தில் பக்தியுள்ளவனாயிருந்தானென்று நினைக்கலாகாது. இப்படியெழுதியிருப்பது அஞ்ஞான நூலாசிரியன் ஒருவன். அவ்விதமே ஆபிரகாமையும் ஆர்பியூஸ் என்பவனையும் வணங்கிவந்ததாகவும் மேற்படியானே எழுதியிருக்கிறான். மார்க்கவிஷயங்களில் எழுப்புதலடையத்தக்க மனமுடைய அவன் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தும் யோசனைகளுக்கு இணங்கியிருக்கவேமாட்டானென்று நிதானிக்கவேண்டியது.

சில விஷயங்களில் கிறிஸ்தவர்களுடைய வழக்கங்களையும் தனக்கு மாதிரியாகப் பற்றி நடந்தான். கிறிஸ்தவர்கள் குருக்கள்மாரையாவது கண்காணிமாரையாவது நியமிக்குமுன்னதாக அவர்கள் பெயர்களையெழுதி எங்கும் தெரியப்படுத்தி அவர்கள் மேற்படி உத்தியோகங்களுக்குத் தகுதியுள்ளவர்களோவென்று விசாரிப்பார்கள். இராயனும் தேசாதிபதிகளையாவது மற்றும் உத்தியோகஸ்தர்களையாவது ஏற்படுத்துவதற்குமுன் அந்தப்படியே செய்யும்படிக்குக் கற்பித்தான். மற்றவன் உனக்கு எதைச்செய்யப்படாதென்று விரும்புவாயோ அதை நீயும் செய்யாதே என்று கிறிஸ்தவர்கள் மிகுதியும் சொல்லிக்கொள்வார்கள். அந்த விசேஷம் இராயனுக்கு மகா பிரியமாயிருந்தபடியால் அநேக பொதுவான கட்டிடங்களிலும் அதை வரைந்து வைக்கக் கற்பித்தான். கிறிஸ்தவர்கள் பேரிலிருந்த பிரியத்தை இம்மட்டும் தான் காட்டினானென்றல்ல. அவர்கள் பகிரங்கமாய் ஆராதனை நடப்பித்துக்கொள்ளவும் சம்மதித்திருந்தானென்று நினைக்கவும் இடமுண்டு. கிறிஸ்தவர்களுடையதாயிருந்த ஒரு நிலத்தைக்குறித்து சில சத்திரக்காரர் தங்களுடையதென்று வழக்காடினபொழுது, இராயன் மேற்படி நிலத்தில் சத்திரமிருப்பதைப் பார்க்க எவ்வகையாயானாலும் தேவனுக்கு ஆராதனைசெய்வதே உத்தமமென்று சொல்லி கிறிஸ்தவர்கள் பட்சம் தீர்ப்புச்செய்தான்.

கடைசியில் எடுத்துரைத்த சங்கதியினாலே ஒரு காரியத்தை விசாரித்து அறிய ஆசையாயிருப்போம். தேவாராதனைக்கென்று கிறிஸ்தவர்கள் கோவில்கள் கட்டிக்கொள்ள அல்லது ஒரு இடத்தைப் பிரதிஷ்டைசெய்துகொள்ளத் தொடங்கினது எக்காலத்தில் என்பதைத்தான். சில தேசங்களில் முந்தியும் சில தேசங்களில் பிந்தியும் இந்தச் சலாக்கியம் அவர்களுக்குக் கிடைத்திருக்கலாம். இந்த இராயனுடைய நாட்களில் உரோமாபுரியில் அவர்களுக்கு அப்படிப்பட்ட கட்டிடங்கள் இருந்தன என்பதற்குச் சந்தேகமில்லை. அநேக வருஷக்காலமாய் அவரவர் வீடுகளில் கூடி தேவாராதனை நடப்பித்துவந்தார்களென்று அறிவோமே. அப்படிப்பட்ட சமையங்களில் மற்றவர்களுக்குத் தெரியாமலிருப்பது இன்றியமையாத அவசியமல்லவா? உரோமாபுரிக்குச் சமீபமாய் நில அறைகள் தோண்டி கிறிஸ்தவர்கள் மேற்படி நில அறைகளில் கூடி தேவாராதனை முதலியது நடப்பித்துவந்தார்களென்று நாம் அறியும்போது அக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்டதாயிருந்த மோசங்கள் எவ்வளவு பெரியவைகளென்றும் அவர்கள் விசுவாசம் எவ்வளவு உறுதியானதென்றும் நன்றாய் உணர்ந்துகொள்

ளாமே. இந்த நிலவறைகளை இக்காலத்திலும் பார்க்கலாம். கிறிஸ்தவர்களுக்குரிய பல குறிப்படையாளங்களும் காணப்படுகின்றன. இந்த இருட்டறைகளிலேயே கிறிஸ்துமார்க்கத்தை ஆதியிலே அறிக்கையிட்டவர்களும் இரத்தசாட்சிகளாய் மரித்தவர்களும் தேவனுக்குத் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்தினதுமல்லாமல், அவரது நாமத்தினிமித்தம் வெட்கத்தைச் சகிக்கத் தாங்கள் பாத்திரவான்களாய் எண்ணப்பட்டதற்காக ஸ்தோத்திரமுஞ் செலுத்தினார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் பிரேதங்களையும் அதுகளிலேயே அடக்கம்பண்ணுவார்கள். வெகு காலத்துக்குப் பின்பு தான் அவர்கள் தேவாராதனை நடப்பிக்கும்பொழுது, சுத்த ஆகாயத்தைச் சுவாசிக்கவும் சூரிய வெளிச்சத்தை அநுபவிக்கவும் சத்துருக்கள் இடங்கொடுத்தார்கள். செப்திமியூ செவீரு மகாராஜனின்பேரில் சற்று அநுகூலமாயிருந்த காலத்திலே ரோமாபுரியில் இந்தச் சலாக்கியம் கிடைத்ததாகத் தோன்றுகிறது. ஆயினும் ஏலகபாலு என்பவன் சூரிய வணக்கம் ஒன்றுதவிர மற்றெல்லா ஆராதனைகளையும் விலக்கிவிட்டானே. ஆகையினாலே அலெக்சாந்தர் இராயன் செங்கோட்டிய தீர்ப்புச்செய்த காலம்வரையில் கிறிஸ்தவர்களுக்கு கோவில்களிருந்தனவென்றும், இருந்தாலும் அநேகமிருந்திருக்க மாட்டாதென்றும் நினைக்கலாம்.

---

## The Parables of Christ.

# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### X-வது. இரண்டு குமாரரைக்குறித்து.

மத். 21: 23—31.

நம்முடைய இரக்ஷகருடைய சத்துருக்கள் 23ம் வசனத்தில் அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்கள். அவர் உத்தரவுகொடாவிட்டால், அவர் வாயை அடைத்துப்போடலாம், தாங்கள் எண்ணின உத்தரவுகொடுத்தால் அன்றைக்கு விரோதமாய்க் குற்றஞ்சாட்டலாமென்றும் எண்ணி கேட்டார்கள். அதற்குப் பதிலாக இரக்ஷகர் வேறொரு கேள்வி கேட்டார். 24ம் 25ம் வசனம். மேலும் அவரே அவர்களை எதிர்க்கிறவர்போல ஒழுங்காய்ச் சில உவமைகளைச் சொல்லி, அதுகள் மூலமாய் அவர்கள் இருதயத்தின் கேட்டையும் அவர்கள் குற்றத்தைக்குறித்த அசட்டையையும் அவர்களுடைய சலாக்கியங்களை கேவலமாய் எண்ணினதையும் தமக்கு விரோதமாய் அவர்கள் செய்ய நினைத்திருந்த குற்றத்தின் அகோரத்தையும் அவர்களுக்குத் தெளிவாய் எடுத்துக்காண்பிக்கிறார். இதுகள்மூலமாய் அவர்களைக் கண்டிக்கிறவராகத் தோன்றினபோதிலும், இதுகளை அன்போடு சொல்லுகிறதுமல்லாமல், இன்னும் கூடுமானால் அவர்கள் செய்ய நினைத்திருந்த பெரிய பாதகத்தைச் செய்யாதபடி தடுக்கவும் பராபரனுடைய இராஜ்யத்துக்கென்று அவர்களை ஆதாயமாக்கவும் வேணுமென்கிற நோக்கத்தோடே அவர் இந்த உவமைகளைச் சொன்னார் இந்த இரண்டு குமாரர்களைக்குறித்த முதல் உவமை அவ்வளவு ஆழ்ந்த கருத்துள்ளதல்ல;



முந்தி நடந்ததைக் குறிக்கிறது பின்னின இரண்டு உவமைகளோ இனி நடக்கப்போகிறதை தீர்க்கதரிசனமாய்க் காட்டுகிறது.

உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரரிருந்தார்கள். லூக். 15: 11 ல் சொல்லியிருக்கிற உவமையிலும் இப்படித்தான் ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர் இருந்ததாகச் சொல்லியிருக்கிறது. மனிதரை இது இரண்டு வகுப்பாய்ப் பிரிக்கிறது. நம்முடைய இரக்ஷகருடைய உபதேசத்தைக் கேட்ட யாவரும் அவ்விரண்டு வகுப்பில் ஒன்றைச் சேரவேண்டும். இந்த வகுப்புகளில் ஒன்றுக்கு பரிசேயர் தலைமை. இவ்விரண்டு வகுப்பும் எப்போதும் இருக்கிறது தான். பரிசேயரைச் சேர்ந்த வகுப்பு நியாயப்பிரமாணத்தினால் உண்டாகும் நீதியைத்தேடி வெளியரங்கமான பாவஞ்செய்யாதபடி நடைப்பட்டிருக்கிறவர்களைக் குறிக்கும். இரண்டாவது வகுப்பில் ஆயக்காரரும் வேசிகளும் நீதியின் நடத்தையைத் தங்களை விட்டகற்றி வெளியரங்கமாய் விட்டுப்போய் கர்த்தருடைய கற்பனைகளை மீறவேணுமென்று துணிந்து பாவஞ்செய்கிறவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். முந்தினவர்கள் நிலைமையே நல்லது. வெளியரங்கமான அக்கிரமத்தைவிட நியாயப்பிரமாணத்தால் உண்டாகும் நீதி உத்தமமானதுதான். விசுவாசத்தால் உண்டாகும் நீதி வெளிப்படும்போது மாத்திரம் இது அதற்கு கீழடங்கவேண்டும். தன்னுடைய குறைவை இது அறிந்து உணரவேண்டும். நியாயப்பிரமாணத்தை உண்மையாயும் செம்மையாயும் கைக்கொள்ள பிரயத்தனஞ்செய்கிற யாவரும் இப்படிச்செய்யவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு நியாயப்பிரமாணம் தன் நோக்கத்தை நிறைவேற்றி அவர்களை கிறிஸ்துவண்டைக்கு நடத்துகிற உபாத்தியாயிருக்கும். நியாயப்பிரமாணத்தின் நீதி தன்னில் தானே திருத்தியடைந்து கண்டிப்பையும் நிறைவான கீழ்ப்படிதலையும் தன்னை விட்டகற்றி, அனலில்லாமல் அன்பில்லாமல் பெருமைகொண்டு தனக்கு யாதொரு குறைவில்லை என்றெண்ணி, விசுவாசத்தால் உண்டாகும் நீதிக்கு கீழடங்கமாட்டேனென்றால் பாவியானவன் எப்படிப்பட்ட பெரிய பாதகங்கள் செய்தும் அதுகளின்மூலமாய் தன் குற்றத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் அறிந்துகொள்வதே உத்தமம். மற்றப்படி அவன் தன் நிலைமையைப் பற்றி அறிவீனம் உள்ளவனாய் தன் குறைவை முற்றிலும் உணராதவனாயிருப்பான். தேகத்திலுள்ள வியாதி வெளிப்பட்டால் அது வியாதியென்று கண்டு தகுந்த ஔஷதத்தால் நீக்கலாம். உள்ளுக்கு மறைந்திருந்தாலோ தேகமுழுவதுக்கும் சேதத்தை வருவிக்கும். மறைவாயிருப்பதினால் அந்த மனிதனுக்கு முதலாய்த் தெரியாமற்போம். இதைப்பற்றி தான் பவுல் அப்போஸ்தலன் உரோமர் 7: 7—9வரை பேசுகிறார். இந்தப் படிப்பினையைக் கற்றுக்கொடுக்கிறார். அதாவது, குற்றமில்லை என்று எண்ணுகிறதுபோல தப்பானது ஒன்றுமில்லை. வேதவசனம் முழுவதும் இப்படியே கற்பிக்கிறது. மூத்த மகன் தன் தகப்பனுக்கும், சகோதரனுக்கும் கெட்டகுமாரனுடைய உவமையில் சொல்லுகிறதைப் பார்த்தாலும் இரக்ஷகரைத் தன் வீட்டுக்கழைத்த பரிசேயன் அவருக்கும் பாவியான அந்த ஸ்திரீக்கும் சொன்னதைப் பார்த்தாலும் இந்தக் குணத்தை ஒன்றுக்கும் உதவாததாக எண்ணத் தக்கதாய் செபித்த வேறொரு பரிசேயனுடைய நடக்கையைக் கவனித்தாலும் இது விளங்கும். லூக். 18: 10. 5: 29. 32.

மூத்தவனிடத்தில் அவன் வந்து மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில்வேலைசெய்யென்றான். மனிதர்கள்தேவனுக்குக் கனிகளைக் கொடுக்கவேண்டுமென்று அவர்களுடைய மனச்சாட்சியே

சொல்லுகிறதுமல்லாமல் மோசேயின் நியாயப்பிரமாணமும் அப்படியே கற்பிக்கிறது. முந்தினது இயல்வேதப்பிரமாணம் பிந்தினது அருள்வேதப்பிரமாணம் இதை ஆயக்காரரும் வேசிகளும் வெளியரங்கமான எல்லாப் பாவிகளும் வெளியரங்கமாய் அசட்டைசெய்து தள்ளினார்கள். மூத்தகுமாரனை வேலைக்குப்போகச் சொன்னபோது அவன் போக எனக்கு மனதில்லையென்றான். முரட்டுத்தனமாய்ப் பேசினதுமல்லாமல் தன்னுடைய கீழ்ப்படியாமைக்கு யாதொரு போக்குஞ் சொல்லவில்லை. இது கவனிக்கத்தக்கது. வெளியரங்கமாய் பாவஞ் செய்கிற பெரிய பாதகரை இவன் குறிக்கிறவனானபடியால் இவன் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களைப்போலேயாவது எனக்கு மன்னிக்கவேணுமென்று முதலாய்க் கேட்கவில்லை. முரட்டுத்தனமாய் போக மனதில்லை என்கிறான். இளையவனிடத்திலும் இவன் வந்து அப்படியே சொன்னான். அதற்கு அவன் போகிறேன் ஐயாவென்றான். வேதபாரகரும் பரிசேயரும் நியாயப்பிரமாணத்தின்மேல் வைராக்கியமுள்ளவர்களாய்க் கற்பனைகளைக் கைக்கொள்ள பிரயத்தனப்படுகிறார்கள். இது இளையவனுடைய கீழ்ப்படிதலைப்போலிருக்கிறது. அவர்கள் சொல்லியும் செய்யவில்லை. மத். 23: 2. ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தர் சொல்லுகிறபடி அவர்களை இப்படிப்பட்டவர்களென்று திட்டமாய்க் காட்டியிருக்கிறார். இந்தச் சனங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. இவர்கள் நிலைமையும் இப்படித்தான். மத். 15: 8. குறித்த நேரம் வந்தபோது ஒரு பட்சத்தைச் சேரவேண்டியதாய் நேரிட்டபோது ஸ்நானகன் நீதியைப் பிரசங்கிக்கிறவனாய் வந்து அவர்களை மனந்திருப்புதலுக்கழைத்து அவர்களுக்குள் தேவனுடைய கிரியை உண்டாகப் பார்த்தபோது வெளியரங்கமாய்ப் பாவஞ் செய்த அநேகர் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியமாட்டேனென்று முந்திச் சொன்ன மூத்தகுமாரனைப்போல பின்பு மனந்திரும்பினார்கள். பரிசேயரோ நியாயப்பிரமாணத்தில் வைராக்கியமுள்ளவர்களாய்க் காணப்பட்டும் உள்ளபடியே அநீதியுள்ளவர்களானதால் கீழ்ப்படிகிறவர்களாய்த் தோன்றியும், போகவில்லை.

இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று இரக்ஷகர் கேட்கிறார். இதற்கு முந்தின கேள்விக்குச் சொன்னதுபோல எங்களுக்குத் தெரியாதென்று சொல்லக்கூடாது. 21ம் வசனம். அவர்கள் சொல்லுகிற உத்தரவே அவர்களைக் குற்றவாளியாக்குகிறது. மூத்தவன் தான் என்றார்கள். தன்னிலே அவன் நல்லவனாயிராவிட்டாலும், இளையவனோடு ஒத்துப்பார்க்கும்போது அவன் நல்லவன்தான். அவர்கள் சொன்ன வார்த்தைகளைக்கொண்டே அவர்களைக் கடிந்துகொள்ளுகிறார். ஆயக்காரரும் பாவிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுக்கு முன்னே என்று சொல்லும்போது அவர்களுக்கு இன்னம் நம்பிக்கையிருக்கிறதென்றும் அவர்கள் இன்னும் புறக்கணிக்கப்படவில்லையென்றும் காட்டுகிறார். அவர்கள் இவர்களுக்கு முந்திப்போனாலும் இவர்களுக்கு மனமானால் இவர்களும் போகலாம் என்கிறார். நீதியின் மார்க்கமாய் என்று சொன்னதினால் பரிசேயருடைய பாவத்தை அதிகப்படுத்துகிறார். நீங்கள் கொண்டாடுகிற நியாயப்பிரமாணத்தின் நீதிக்கு மாதிரியாக யோவான்ஸ்நானன் வந்தான். சுவிசேஷத்தின் புதுச் சேவனுக்கு அவன் மனித



ரை அழைக்கவில்லை. அதற்கு நான் தான் மாதிரியென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லை. புது இரசத்தை பழைய துருத்திகளில் வார்க்க அவன் வரவில்லை. நீங்கள் உங்களுக்குமுன் வைத்துக்கொண்ட நீதியை நிறைவேற்றவந்தபடியால் மற்றப் பாவிகளிடத்திலிருந்து தன்னைப் பிரித்துக்கொண்டு உலகத்தை அதிகமாய் வெறுத்தான். ஆகிலும் நீங்கள் அதை விரும்பாதபடியால், என்னைப்போலவே அவனையும் அசட்டைசெய்தீர்கள். என் தாழ்ந்த நிலைமையைக் கண்டு என்னைக் குற்றப்படுத்தினதுபோல அவனுடைய கண்டிப்பான நடக்கையைக் கண்டு அவனைக் குற்றப்படுத்தினீர்கள். மத். 2. 16, 19. முந்தி மாத்திரமல்ல, அவனுடைய பிரசங்கத்தினால் பாவிகள் குணப்பட்டபோது ஆயக்காரரும் பாவிகளும் அவனை விசுவாசித்ததினால் தேவன் தம்முடைய முத்திரையை அவன் ஊழியத்தின்மேல் வைத்தபோதும் அப்பொழுதாவது நீங்கள் வைராக்கியங் கொள்ளவில்லை. அதை நீங்கள் கண்டும் அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனந்திரும்பவில்லை.

அநேகம் பிரதிகளில், போகிறேன் என்று சொல்லி போகாமலிருந்த குமாரனை முந்தி வைத்து, போகமாட்டேனென்று பின்பு போன குமாரனைப் பிந்தி வைத்திருக்கிறது. பிரதிகளைச்செய்தவர்கள் யூதரையும் புறச்சாதியாரையும் தேவன் அழைக்கிற கிரமத்தை இந்த உவமை காட்டுகிறதென்றெண்ணி, இந்த ஒழுங்கை மாற்றியிருக்கவேண்டும். 2 மோசே 24: 7. யூதரையும் புறச்சாதியாரையும் குறித்து இந்த உவமை சொல்லப்படாமல் யூத சனங்களுக்குள்ளிருந்த இருவகையாரைக் குறித்துத் தான் சொல்லியிருக்கிறது. புறச்சாதியாரல்ல, ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்குமுன் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்றார். புறச்சாதியாரைக்குறித்து உவமையில் பேசியிருக்குமானால் யூதருக்குள் அது அதிக வைராக்கியத்தை எழுப்பிவிடத்தக்கதாயிருக்கும். உரோமர் 10: 21, 22. புறச்சாதியாரையும் யூதரையும் குறித்து இந்த உவமையில் சொல்லியிருக்கிறதென்றும் சொல்லலாம். ஏனென்றால், சுயநீதிக்காரர் பாவிகளுக்கு இருந்த வண்ணமாக யூதர் புறச்சாதியாருக்கு இருந்தார்கள். ஆகிலும் பின்வரும் உவமையில் தான் யூதரும் புறச்சாதியாரும் ஒருவரோடொருவர் எப்படி சம்பந்தப்பட்டிருக்கிறார்களென்றும் இருவரும் பரலோக இராஜ்யத்தோடு எப்படி ஐக்கியப்படுகிறார்களென்றும் தெளிவாய்க் காட்டியிருக்கிறது.

## On the Liturgy.

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ரு. அதிகாரம்.

ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

### XV. பெரிய வெள்ளிக்கிழமையைக் குறித்து.

இது விசேஷித்த நாள் நம்முடைய சந்தோஷத்துக்கெல்லாம் இர

ரக்ஷகருடைய மரணமே காரணம். அவருடைய மரணத்தினால் சொல்லி முடியாத நன்மைகளைச் சம்பாதித்தார். தம்முடைய இரத்தத்தை சிந்தி உலகத்தின் பாவங்களுக்காகப் பிராயசித்தம் உண்டுபண்ணி, நம்மெல்லாருக்கும் பெரிய இரக்ஷிப்பைச் சம்பாதித்தார்.

இரண்டாவது. கிறிஸ்தவர்கள் இரக்ஷகருடைய பாடுகளையும் மரணத்தையும் இந்நாளில் நினைவுகூர்ந்து உபவாசிப்பார்கள். அவர் மரித்ததினாலே துக்கப்பட்டல்ல, உலகத்தின் பாவங்கள் அவர்மேல் அதிக வெட்கமும் நோவுமான மரணத்தைக்கொண்டு வந்ததே என்று தான்.

மூன்றாவது. ஒழுங்கின்படி வருகிற இந்த நாளுக்குரிய சுவிசேஷ வாக்கியம் யோவான் சுவிசேஷத்தில உள்ளது மற்ற அப்போஸ்தலன்மார் ஓடிப்போனபோது இவன் தான் அவரோடுகூட சிலுவையில் தொங்கும்போது அவர் அருகே நின்றான். கண்ணாரக் கண்டவன் சொல்லுகிற சாட்சி நாமும் கண்ணாரக்காண்கிறதுபோலிருக்கும். மேலும் கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்து பயப்படாமலும் வெட்கப்படாமலும் இருப்பதற்கு இவருடைய திருஷ்டாந்தரம் நமக்கு மிகவும் ஏற்றது. நிருபவாக்கியம் யூத பலிகள் பாவநிவிர்த்திக்குப் போதாதவைகளல்லவென்றும், அதுகள் தேவகுமாரன் இந்நாளில் செலுத்தின பெரிய பலியை முன் குறித்ததென்றும் காட்டுகிறது. சிலுவையில் செலுத்தப்பட்ட இந்தப் பலியானது நிழலாட்டமான மற்றப் பலிகளையெல்லாம் பூரணமாக்கி, உலகத்தின் எல்லாப் பாவங்களுக்கும் போந்த பிராயச்சித்தத்தை உண்டாக்கிற்று. இந்த அளவற்ற திவ்விய அன்பை முன்மாதிரியாக வைத்து சபையானது மட்டற்ற அன்பினால் ஏவப்பட்டு, ஒரு சுருக்க செபத்தில் கிறிஸ்துவின் மரணத்தின் நோக்கம் சர்வலோகத்துக்காகவும் இருந்ததுபோல அது யாவருக்கும் யூதர் மகம்மதுமார்க்கத்தார் அவிசுவாசிகள் பதிதர் யாவருக்கும் பலிதமாகவேண்டுமென்று செபிக்கிறது.

நான்காவது. இந்த நாளுக்குரிய சங்கீதங்களைக் கவனமாய் வாசிக்கிறவனும் இந்நாளுக்கு அவைகள் மிகவும் ஏற்றது என்றறிந்து கொள்வான். தாவீது துன்பத்திலிருந்தபொழுது இதுகள் எழுதப்பட்டதுமல்லாமல் இரக்ஷகருடைய சிலுவை பாடுகளைக்குறித்தும் தீர்க்கதரிசனமாய் எழுதப்பட்டது. முக்கியமாய் 22 ம் சங்கீதம் இது காலை சங்கீதங்களில் முதலாவது இதிலுள்ள அநேக வாக்கியங்கள் இரக்ஷகருடைய பாடுகளால் நிறைவேறினதுமல்லாமல் அவர் சிலுவையில் சொன்ன வார்த்தைகளும் இதில் உண்டு. மத். 27: 35. 43: 47.

ஐந்தாவது. காலை முதலாம் பாடம் 1 மோ. 22. ஆபிரகாம் தன் மகனை பலியிட்டதைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. தேவகுமாரன் இட்ட பலிக்கு இது முன்னடையாளம். இது ஏற்ற பாடம். ஆனபடியால் அகுஸ்தீன் நாள்முதற்கொண்டு இந்நாளில் இந்த அதிகாரத்தையே வாசித்து வருகிறார்கள். இரண்டாம் பாடம் யோவான் 18. இது எவ்வளவாய் ஏற்றிருக்கிறதென்று காட்டவேண்டியதில்லை. மாலை முதலாம் பாடமாகிய ஏசாயா 53 ல் கிறிஸ்துவின் பாடுகளைக்குறித்தும் அதினால் சபைகளுக்குண்டாகும் நன்மைகளைக்குறித்தும் தீர்க்கதரிசனங்கள் அடங்கியிருக்கிறது. இரண்டாம் பாடமாகிய 1 பேது. 2 ல் நமக்காக பாடனுபவித்த இரக்ஷகருடைய மாதிரியைப் பின்பற்றி துன்பத்தில் பொறுமையாயிருக்கக் கற்றுக்கொள்ளுகிறோம்.

### XVI. ஈஸ்தருக்கு முந்தின இரவு.

பூர்வ சபையில் இதை வெகு முக்கியமாய்க் கொண்டாடுவார்களாம். பல அந்தஸ்துள்ளவர்களும் ஒன்றாய்க் கூடிவந்து வீட்டிலும் கோவிலிலும் எண்ணிறந்த தீவெட்டிகளை வைத்துக்கொண்டு விழித்திருப்பார்களாம். கொனஸ்தந்திநோபுரியில் கோவிலில் மாத்திரமல்ல, வெளியேயும் அதிக பிரயாசத்தோடு இந்த இரவை பின்னிடுவார்கள். பட்டணமுழுவதும் தீவெட்டிகள் மாத்திரமல்ல, மெழுகினால் தூண்கள் செய்து கொளுத்திவிடும்போது இரவு பகல்போலிருக்கும். மறுநாள் காலையில் உதயமாகப்போகிற நீதியின் சூரியனாகிய அந்தப் பெரிய வெளிச்சத்துக்கு முன்னடையாளமாக இப்படிச் செய்வார்களாம். நடு இராத்திரியில் இப்படிச்செய்வார்களாம். நடுச்சாமத்திற்குச் சற்றே பிந்தி இரக்ஷகர் உயிர்த்தெழுந்தாரென்பது அநேகருடைய அபிப்பிராயம். கீழ்த்திசையில் கோழி கூப்பிடும்வரையில் விழித்திருந்து நியாயப்பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் வாசித்து வியாக்கியானஞ்செய்து பெரியவர்களுக்கு ஞானஸ்நானம்கொடுத்துக்கொண்டிருப்பார்களாம்.



இரண்டாவது. இப்படிச்செய்வது இக்காலங்களில் வழக்கமாயிராவிட்டாலும், தனித்து உபவாசிக்கவும் இரக்ஷகர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு பாதாளத்துக்கு இறங்கின சத்தியங்களைக் கூடிவந்து தியானிக்கும்படி சபையானது நம்மை ஏவிவிடுகிறது. இந்த நாளுக்குரிய சுவிசேஷ வாக்கியத்தில் கிறிஸ்துவின் சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டதைக் குறித்தும் நிருபவாக்கியத்தில் அவருடைய ஆத்துமா பாதாளத்துக்கு இறங்கினதைக்குறித்தும் வாசிக்கிறோம். நிருபவாக்கியத்தை வேறு வகையாய் சிலரால் வியாக்கியானம்செய்தபோதிலும் அதின் மற்ற பங்குகள் இந்த இரவுக்கு மிகவும் ஏற்றதுதான். முந்தின பங்கு இரக்ஷகரைப்போல் நன்மைசெய்தாலும் துன்பத்தை சந்தோஷமாய்ச் சகிக்க நம்மை ஏவிவிடுகிறது. அவர் இந்நாளில் பாவங்களுக்காக அக்கிரமக்காரருக்குப் பதிலாய் நீதியுள்ளவராயிருந்தும் பாடனுபவித்தார். பிந்தின பங்கு ஞானஸ்நானத்தின் நோக்கத்தையும் அதினால் உண்டாகும் பலனையும் காட்டுகிறது. பூர்வீக திருச்சபையில் இந்நாளில் ஞானஸ்நானம்கொடுப்பது வழக்கம்.

மூன்றாவது. முற்காலங்களில் இந்த நாளுக்கு சுருக்கசெபம் இருந்ததில்லை. பெரியவெள்ளிக்கிழமைக்குள்ளதையே வாசித்து வந்தார்கள். இப்பொழுது சுருக்கச்செபம் ஒன்று கூட்டியிருக்கிறது.

---

**Notes on Genesis.**

## ஆதியாகம வியாக்கியானம்.

### எ. அதிகாரம்.

#### சலப்பிரளயத்தின் சரித்திரம்.

2. "சுத்தமான" தேவகட்டளைப்படி பலிக்கு உபயோகப்படத்தக்க சாதுவான மிருகங்களாம்.

3. "எவ்வேழு சோடும்" அதாவது 7 ஆணும் 7 பெண்ணுமாக 14 ஒற்றை காக்கப்பட்டதென்று தோன்றுகிறது. அநேகம்பேர் 3 சோடும் ஒரு ஒற்றையுமென்று அர்த்தப்படுத்தி அந்த ஏழாவது ஒற்றை பலியிடப்படும்படி காக்கப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள்.

4. "இன்னும் ஏழு நாள்" 120 வருடத் தவணையல்லாமல், தேவன் தயவாய்ப் பின்னும் 7 நாள் தவணை கொடுத்தாரென்று அநேகம் பேர் நினைக்கிறார்கள்.

9. "பேழைக்குட்பட்டன." தேவாட்டத்தினால் அற்புதமாய் நோவாவண்டைக்கு வந்து சேர்ந்தது. அந்த அதிசயக் காட்சியுங்கூட அந்தக் கடின பாவிகள் இருதயத்தில் சற்றேனும் உறைக்கவில்லை.

11, 12. "இரண்டாம் மாதம்." நவம்பர் மாசத் துவக்கமாயிருக்கும். ஏனென்றால், முற்பிதாக்கள் செப்தெம்பர்மீ முதல் தங்கள் வருஷத்தைத் துவக்குவார்கள்.

இவ்வளவு வெள்ளப்பிரவாகம் எப்படி உண்டாகக்கூடும் என்று சிலர் ஆட்சேபிக்கிறார்கள். இப்படி ஆட்சேபிப்பது, "மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள்" என்று ஆட்சேபிக்கிறதுபோலிருக்கிறது. தேவன் மரித்தோரை உயிர்ப்பிக்கிறதிலிருக்கிற அவ்வளவு நம்பப்படாமை இதிலில்லை. ஏனென்றால், அவர் மூன்றாம்நாளில் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற சலத்துக்கும் கீழே இருக்கிற சலத்துக்கும் பிரிவுண்டாக்கியிருந்தாரே. இப்பொழுது அந்த சலங்களை ஒன்றாகச் சேர்ந்துகொள்ளும்படி செய்தார். எப்படியென்றால், "மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்ததினால்" பூமியின் வயிற்றிலும் சமுத்திரத்தின் ஆழங்களிலுமிருந்த சலங்களெல்லாம் பொங்கி கொப்பளித்து பிராயமாகி பலாத்காரமாய் மேல் நோக்கி எழும்பினது. ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற மேகங்களாகிய "வானத்தின் மதகுகள் திறவுண்டதினால்" இரவு பகல் ஓயாமல் 40 நாள் பெருமழை தாரைதாரையாய்ப் பொழிந்தது. இப்படியாகப் பெருவெள்ளப் பிரவாகமாகி உலகமெங்கும் சலப்பிரளயமுண்டானது. "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற" தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லையே.

13. நோவாவின் குமாரரெல்லாரும் இந்தச் சமயத்தில் முன்பின் 100 வயதுள்ளவர்களாயிருந்தும் அவர்களுக்கு இப்பொழுது பிள்ளைகளில்லை. அல்லாமலும் அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்ற ஆதி விவாக ஏற்பாட்டுக்கு விரோதமாக இந்த விசேஷமான சமயத்திலும் கூட யாதொரு வித்தியாசம்பண்ணப்படாததைப் பார்க்கும்போது, எந்த முகாந்தரத்தையிட்டாவது ஒருவன் ஒருத்திக்கு அதிகமான பெண்சாதிகளை வைத்துக்கொள்ளக்கூடாதென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது.

16. "கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்." பேழைக்குட்பட்டவர்களை தாம் இரட்சித்துக் காப்பாற்றுகிறவர் என்று நோவாவுக்கு நிச்சயம் பிறக்க அவர்கள் பேரிலுள்ள அன்புக்கும் கவலைக்கும் அடையாளமாக கதவை அடைத்தார். பேழைக்குட்படாதவர்கள் எல்லாரையும் அழிவுக்கு முத்தரையிட்டுப் போட்டார் என்றும் அதினாலே காட்டினார்.

17. "பேழையைக் கிளம்பப்பண்ணிற்று." 40 நாள் பெய்த மழை பேழையைக் கிளம்பப்பண்ணத்தக்க அளவாயிருந்தது. பின்னும், மேற்சொன்ன காரணங்களாலே சலம் முன்னைவிட அதிகமதிகமாய்ப் பெருகிக்கொண்டேயிருந்தது.

எத்தனையோ இராச்சியங்களும் அவற்றிலுள்ள பென்னம்பெரிய கூடகோபுரம் மாடமாளிகையெல்லாம் அழிந்தபொழுது தேவனுடைய மாளிகை உயர எழும்பிற்று. துன்மார்க்கரை அழித்த ஜலமே



பேழையைக் கிளம்பப்பண்ணி உத்தமரை உயர்த்தினது. அப்படியே இப்பொழுதும் அநேகம் விசை சன்மார்க்கருடைய வாழ்வுக்கும் துன்மார்க்கருடைய அழிவுக்கும் காரணம் ஒன்றாய் இருக்கிறதைக் காணலாம்.

19. 20. இந்த வாக்கியங்களினாலும், பூமியின் ஒரு பாகத்துக்கேயுரிய பதார்த்தங்கள் மற்றப் பாகத்திலேயும் காணப்படுவதாலும், எல்லாத் தேசத்தாருக்குள்ளும் இதைக்குறித்து வழங்கிவந்திருக்கிற பாரம்பரையினாலும் ஜலப்பிரளயம் உலகத்தில் எங்கும் உண்டாயிருந்ததென்று விளங்கும். அதினால் பூமியின்மேல் சஞ்சரிக்கிற யாவும் மாண்டன. ஆ! செய்பாவம் அறியாத எத்தனையோ பாலகர் மடிந்தார்கள்!! "கர்த்தாவே உம்முடைய சமுகத்தைவிட்டு நான் எங்கே ஓடுவேன்?"

படிப்பினை.

நோவா சலப்பிரளயத்துக்குத் தப்பிப் பிழைக்கும்படி தன் வீடு வாசல், சொத்து, சொம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு பேழைக்குள் அடைபட்டிருக்கவேண்டியதாயிருந்தது. அப்படியே வரும் கோபாக்கினைக்குத் தப்ப விரும்புகிறவன் தன்னைத்தான் வெறுத்து தன் ஆசை இச்சைகளை அடக்கி, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு மெய்ப் பேழையாகிய ஏசு ரட்சகருக்குள் இருக்கவேண்டும்.

தேவனுடைய தயவு, பொறுமை, நீடியசாந்தம் இவற்றின் ஐசுவரியத்தை அசட்டைசெய்கிறவர்கள் எக்காலத்திலுமிருக்கிறார்கள். நாம் குணப்படும்படி அவர் பொறுமையாயிருக்கிறார் என்று நினைக்கக்கடவோம்.—ஒரு கனியைப் புசிக்கும் பாவத்துக்காக இவ்வளவு பொல்லாப்பு வரும் என்று ஆதாம் ஏவாள் நினைத்தார்களா? அற்பமாய்த் தோன்றுகிற பாவத்தினாலேயும் உன் நித்திய இரட்சிப்புக் கெட்டுப்போம் என்றறி.—பழய உலகத்தாரை அழித்த சத்துரு அவர்களிருந்த உலகத்திலேயே இருந்தது. நம்மைக் கொல்லும்படி இருக்கிற சத்துருக்களும் நாம் குடியிருக்கிற தேகத்திற்குள்ளேயே இருந்து தேவஉத்தரவுக்கு எப்போ எப்போ என்று காத்திருக்கிறது.

பேழைக்குள்ளிருந்த துஷ்ட மிருகங்கள் நோவாவுக்குக் கீழடங்கியிருந்தது மாயக்காரர் பற்பல புறம்பான முகாந்தரங்களையிட்டு திருச்சபையிலே சேர்ந்திருக்கிறதற்கு ஒப்பாயிருக்கிறது.—உலக பிரயோசனத்துக்காக மாத்திரம் கிறிஸ்து சபையிலே சேர்ந்து உழைக்கிறவர்கள் நோவாவின் பேழையைச் செய்த கம்மாளருக்கு ஒப்பாயிருக்கிறார்கள். ஓய் கம்மாளரே! நீங்கள் செய்த பேழை உங்களுக்கு உதவாமற்போனதென்ன? "வீட்டெஜமான் எழுந்து கதவைப் பூட்டினபின்பு" தட்டுவதிற் பிரயோசனமில்லை.

---

## Baxter's Saints' Everlasting Rest.

## "விசுவாசிகளின் பரம இளைப்பாறுதல்."

சன்மார்க்க புத்தக சங்கத்தார் இப்பிரபந்தத்தை தமிழில் மொழிபெயர்த்து பிரசித்தஞ்செய்திருப்பதில் தமிழ்ச் சபைக்கு விலையேறப்பெற்ற பொக்கிஷத்தைக் கையளித்திருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இங்கிலீஷ் மூலத்தை இயற்றின ரிச்சார்ட் பாகஸ்தர் போதகர் பதினேழாம் நூற்றாண்டில் கல்வித்திறமையும் விடாமுயற்சி

யும் ஆழ்ந்த பக்தியுமுள்ள வேதசாஸ்திரியாக விளங்கினவர். மனிதர்களுடைய மனச்சாட்சிகளை எழுப்பிவிடுவதிலும் இருதயத்தை உருகப்பண்ணுவதிலும் தேர்ந்த நிபுணர் என கீர்த்திபெற்றிருந்தார். தேவாவியின் வரப்பிரசாதங்களை மிகுதியும் பெற்று ஆத்துமங்கள் கரையேற வேண்டுமென்கிற ஆவலும் கரிசனையும் வெகுவாயுடையவராய், நாளதுவரையும் திருச்சபைக்கு ஞானக்களஞ்சியம்போல உதவும் அநேகம் அரும் பிரயோசனமுள்ள நூல்களை யெழுதினார். மேற்படி நூல்களில் விசுவாசிகளின் பரம இளைப்பாறுதல் என்று பேர் விளங்கிய இப்பிரபந்தம் முதலாவது இயற்றப்பட்டது. அவர் தமது சீவகாலத்திலெல்லாம் இந்த ஒரே புஸ்தகமாத்திரம் எழுதியிருப்பாராயினும் அவரது சீவியம் அப்பிரயோசனமானது என்று சொல்ல நிமித்தமிராது. உலகமெங்கும் பிரஸ்தாபமடைந்திருக்கும் இவ்வருமையான நூலின் உற்பத்தி இது. அவர் ஊக்கத்தோடும் வைராக்கியத்தோடும் தேவ ஊழியத்தை நடப்பித்துக்கொண்டு வரும்போது ஒரு முறை அவருக்கு அகோரமான வியாதியுண்டானதில், மரித்துப்போவேன் என்ற எண்ணமாய் மறுமையின் நித்திய இளைப்பாறுதலைக்குறித்து அதிக பயபத்தியோடு சிந்திக்கத்தொடங்கி தமது நினைவுகள் சிதறிப்போகாதபடிக்கு அவைகளைக்குறித்து வைத்தார். தேவானுக்கிரகத்தினால் அவருக்குச் சுகமுண்டானதின்பேரில், அவைகளைச் சேர்த்து இப்பொழுதிருக்கிறபடி ஒரு பிரபந்தமாக எழுதி முடித்துப் பிரசுரஞ்செய்தார். இவ்வாறு தோன்றின இச்சிறிய நூலை தேவன் பலத்த கருவியாகக் கொண்டு, அந்நாள்முதல் இந்நாள்வரையும் தேவபக்தியுள்ளவர்களைப் போஷித்துத் தேற்றிவருவதுமன்றி, நிர்விசாரிகளும் லௌகீக சிந்தையுள்ளவர்களுமான எண்ணிறந்த பேரை விழிக்கப்பண்ணி, அவர்கள் தம் முடிவைச் சிந்தித்து ஆத்தும இரட்சிப்பைத் தேடியடைந்துகொள்ளும்படி அனுக்கிரகித்து வருகிறார்.

சென்ற இருநூறு வருஷக்காலமாய் இந்தச் சிறு புஸ்தகத்தின்மூலமாய் கிறிஸ்து சபையிலே இவ்வளவு மாட்சிமையான காரியங்கள் நடந்திருப்பதற்கு, இதில் விபரித்திருக்கும் மதுரமான சிறந்த விஷயமும் நூலாசிரியன் அதை விபரித்திருக்கிற சாதுரிய வகையும் முக்கிய ஏதுக்களாயிருந்தன என்று சொல்லத்தக்கது. நாம் பிரயோகிக்கும் கருவிகள் உசிதமானவைகளும் அனுகூலமானவைகளுமாயிருந்தால் தேவாவியானவர் அவைகளை அதிக நன்மைக்கேதுவாக ஆசீர்வதிப்பது ஆச்சரியமா? இந்நூலில் மோட்சபாக்கியத்தின் தன்மையும் மேன்மையும் வெகு தெளிவாயும் திறமையாயும் விபரிக்கப்பட்டிருக்கிறது. பரம இளைப்பாறுதலையடைய விரும்புகிறவர்கள் எப்பேர்ப்பட்ட குணம் நடத்தையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும், யாது மூகாந்தரமாயாவது அதை அசட்டைசெய்கிறவர்களுடைய நிர்ப்பந்தம் எவ்வளவு பயங்கரமானதென்றும் மனதில் தைக்கத்தக்க பலமாய்க் காண்பித்திருக்கிறது. வாசிக்கிறவர்கள் புத்தியையுணர்த்தத்தக்க பலத்த நியாயங்களும் இருதயத்தைக் கவர்ந்துகொள்ளத்தக்க உருக்கமான ஏவுதல்களும் ஆச்சரியமானவிதமாய்க் கூடியிருப்பதே இந்நூலின் விசேஷித்த சிறப்பு. மோட்சபாக்கியத்தைக்குறித்து மனிதர்களுக்குள்ளே மோசமான தப்பெண்ணம் ஒன்றுண்டு. அநேகர் அதன் தன்மையை எவ்வளவேனும் விசாரியாமல், தாங்கள் எவ்வகையான குணம் நடத்தையுள்ளவர்களாயிருந்தபோதிலும், அவ்விடத்திற் சேரும்போது அங்குள்ள பாக்கியத்தை எப்படியும் அனுபவிப்போமென்று பிதற்றித் தேற்றிக்கொள்ளுகிறார்கள். இவ்வுலகத்தில் பாவ



உலையில் அமிழ்ந்தி சிற்றின்பங்களில் பிரியங்கொண்டு தேவாராதனையை வெறுக்கிறவர்களுக்கு நித்தியமான தேவஸ்துதிகளும் பாவமில்லாத ஆவிக்குரிய சந்தோஷங்களுமுள்ள இடமும் பதவியும் பாக்கியமானதாயிருக்குமோ என்று அவர்கள் சிந்திக்கிறதேயில்லை. மேலும் தமிழ்ச் சபைகளில் லௌகீக சிந்தை நாளாசநுதியில் மேலிடுகிறதைக் காண்கிறோமே. இப்பேர்ப்பட்ட காலத்தில் சன்மார்க்கப் புத்தக சங்கத்தாருடைய தர்ம முயற்சியினால் விசுவாசிகளின் பரம இளைப்பாறுதல் தமிழில் தோன்றியிருப்பது மகா அனுகூலந்தான். தமிழ் மொழிபெயர்ப்பில் இங்கிலீஷ் மூலத்தின் அழகுகளெல்லாம் ஒருவேளை விளங்காவிடினும், தேவானுக்கிரகத்தினால் தமிழ்ச் சனங்களுக்குள்ளேயும் அது மிகுந்த நன்மைக்கேதுவாக பலிதமாகுமென்று சந்தேகமின்றி நம்பலாமே. அடியில் எடுத்து எழுதியிருக்கும் வாசகங்களைக்கொண்டு இந்நூலின் சிறப்புகளை ஒருவாறு தெளிந்துகொள்ளலாம்.

பரிசுத்தவான்களுடைய இளைப்பாறுதலின் தன்மையை விவரிப்பதில் அவர் சொல்வது.—

“அந்த பரம இளைப்பாறுதலில், சகல தீங்குகளினின்றும் விலகியிருக்கிற சம்பூரண விடுதலையுண்டு. நமது பிரயாணத்தில் நம்மைத் தொடர்ந்துவந்த எல்லா பொல்லாங்குகளும், பிரதான நன்மையைவிட்டு நாம் வழி விலகும்போது நமக்கு அவசியமாய் நேரிட்ட சகல கேடுகளும் அங்கே நம்மை அணுகுவதில்லை. கிறிஸ்துவையும் இரட்சிப்பின் கிருபையையும் அசட்டைபண்ணும் பாவிகள் நிவிர்த்தியில்லாமல் உத்தரிக்கும் நித்திய அக்கினிச்சுவாலைகளுக்கும் ஓயாத நிர்ப்பந்தங்களுக்கும் நாம் நீங்கியிருப்போம். அசுத்தமாகிய “தீட்டுள்ள ஒன்றும்” மோட்சத்தில் இல்லை. அப்படிப்பட்டவைகள் எல்லாம் “புறம்பே” இருக்கும். (வெளிப். 21: 27. 22: 15.) சங்கடம் துக்கம் என்பவைகள் அங்கே அறியப்படடிராது. வெளிறின முகமோ, மெலிந்த தேகமோ, தளர்ந்த கணுக்களோ, பலட்சய பாலியமோ, தள்ளாடும் விருத்தாப்பியமோ, வருத்தமான வியாதியோ, இறுகப்பிடிக்கும் பயங்களோ, பட்சிக்கிற விசாரங்களோ, தீங்கென்னும் பெயருக்குப் பாத்திரமான வேறெந்தக் காரியமோ அங்கே இல்லை. உலகம் சந்தோஷப்படுகையில் நாம் அழுது புலம்பினோம். ஆனாலும் நமது துக்கம் சந்தோஷமாக மாறிற்று. நம்முடைய சந்தோஷத்தை அங்கே ஒருவனும் நம்மிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான். (யோவா. 16: 20, 22.)

“இந்த இளைப்பாறுதலைச்சேர்ந்த வேறொரு சுகிர்தம், பரிசுத்தவான்கள் தம்மிலே தேகத்திலும் ஆத்துமாவிலும் மேலாம்பரமான பூரணம் அடைவதே. மோட்ச மகிமை எவ்வளவு பெரிதாய் இருந்தாலும், அதை அடையும் பரிசுத்தவான்கள் அதற்கு ஏற்ற தகுதிமான்களாக பூரணமாக்கப்படாவிட்டால், அவர்களுடைய சந்தோஷம் அற்பமாயிருக்கும்.” “தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனிதருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.” (1 கொரி. 2: 9.) ஏனென்றால், மாம்சக் கண் அவைகளை நோக்கவும், இந்த காது அவைகளை கேட்கவும், இந்த இருதயம் அவைகளை அறிந்துகொள்ளவும் திராணியுள்ளதல்ல. அங்கேபோனால், இந்தக் கண், காது, இருதயங்கள் எல்லாம் சதுவமுள்ளதாக்கப்படும். இல்லாவிட்டால் அந்த பவுசுகளை இவைகள் எப்படி அனுபவிக்கும்? நமது காட்சி எவ்வளவுக்குத் துலக்கமோ அவ்வளவாக அழகிய பொருளின்மேல் நமக்கு இஷ்டம் பெருகும். பசி தீபனம் எவ்வளவுக்கு பலப்படுகிறதோ அவ்வளவாய்

போசனமும் நமக்கு அதிக ருசியுள்ளதாகும். கேள்வி எவ்வளவுக்குக் கூர்மையோ அவ்வளவாக சங்கீதம் நமக்கு இனிதாயிருக்கும். ஆத்துமா எவ்வளவு பூரணப்பட்டதோ அவ்வளவாய் மேலோக சந்தோஷங்கள் நமக்கு அதிக ஆனந்தமாயும், மேலோக மகிமை நமக்கு அதிக மகத்துவமாயும் இருக்கும்." 10 ம பக்கம்.

பூமியிலே பரத்துக்கேற்ற ஜீவனம்பண்ணுவதற்கு விசுவாசிகளை ஏவவேண்டிய நியாயங்களைக் காண்பிப்பதில் சொல்வது.—

"தேவனுடைய இருதயம் மிகுதியாய் நமதுபேரில் வைக்கப்பட்டிருக்க, நம்முடைய இருதயங்களும் அவர்பேரில் வைக்கப்படுவது நியாயம். மகிமையின் கர்த்தரானவர் பாவமுள்ள மண்பாண்டங்கள் பேரில் காதல்கொள்ளத்தக்கதாக இவ்வளவு தாழ்வாய் பணிவாரானால், கிறிஸ்துவின் மேலும் மரம மகிமையின்மேலும் வாஞ்சை வைக்கவும் நமக்காக இவ்வளவு தாட்சணியம் காண்பிக்கிற அவரண்டைக்கு நம்முடைய அநுதினப் பாசங்களின்மூலமாய் எதிர்ப்போகவும் நாம் எளிதில் சம்மதிக்கவேண்டாமோ? கிறிஸ்தவனே, நீ உன்னையும் தேவனையும் மறந்துவிடுகிறபோது தானும், அவருடைய இருதயம் உன்பேரில் வைக்கப்படுகிறதையும், அவர் இன்னம உருக்கமான அன்போடே உன்னைச் சிந்தைசெய்கிறதையும் நீ உணருகிறதில்லையா? உனக்கு அன்றாடக கிருபைகளை அவர் அநுக்கிரகித்து, உன் ஆத்துமாவின்மேல் அசைவாடிக்கொண்டிருந்து, உன் தேகத்தைப் பராமரித்து, இரண்டையும் காப்பாற்றுகிறதில்லையா? இடைவிடாமல் உன்னை தமது அன்பின் கரங்களில் அவர் ஏந்திக்கொண்டு, "சகலமும் உன் நன்மைக்கேதுவாக நடக்கும்" என்று வாக்குப்பண்ணி, தம்முடைய செயல்கள் யாவையும் உன் அதி முக்கிய பிரயோசனத்துக்கு அநுசரணையாக ஒழுங்குப்படுத்தி, தம்முடைய தூதர்களுக்கு உன்னைக்குறித்துக் கட்டளையிடுகிறதில்லையா? நீ கீழேயுள்ள சந்தோஷங்களையே தழுவிக்கொண்டு, உன்னை ஒருபோதும் மறவாத ஆண்டவரை நீ மறக்கலாமா? ஆ, இது நீசத்தனமான நன்றிகேடு! அவர் நமதுபேரில் கொண்ட பட்சத்தைக்குறித்து என்ன சொல்லுகிறார் என்று கேள். "சீயோனோ கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன். உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது." (ஏசா. 49: 14—16.) நாம் தமதுபேரில் வைக்கும் சிந்தையைக்குறித்து அவர் பேசும்போதோ காரியம் இதற்கு மாறுபாடாயிருக்கிறது. "ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி தன் ஆடைகளையும் மறப்பாளோ? என் சனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள்." (எரே. 2: 32.) இப்படி அவர் சொல்வது, "ஒரு காலையிலாவது நீங்கள் உறக்கம் விழிக்கையில் உங்கள் பெருமையான ஆடையாபரணங்களை மறக்கமாட்டீர்களே. நீங்கள் அநுதினமும் மறந்துவிடுகிற உங்கள் தேவனைப் பார்க்கிலும் இவைகள் விலைபெற்றவைகளும், உங்கள் நித்தியஜீவனைப் பார்க்கிலும் இவைகள் அதிக முக்கியமுள்ளவைகளுமோ?" என்று முறை இட்டதுபோல இருக்கிறது. தேவன் இப்படி நமதுபேரில் குறைசொல்ல நாம் இடம்பண்ணாதிருப்போமாக. நம்முடைய ஆத்துமாக்கள் காலைதோறும் விழித்தெழும்பி தேவனைத் துதிக்கவும், நம்முடைய இருதயங்கள் நிமிஷந்தோறும் அவர்பேரில் ஊன்றி இருக்கவும் கடவது." 326 ம் பக்கம்.



பரம சந்தோஷங்களை விரும்பாத இருதயத்தைக்குறித்து அவர் பிரலாபிக்கிற வகை.—

"ஆகையால், துக்கம் பிடித்த என் ஆத்துமாவே! விழிப்படை. கிருபையின் வெளிச்சத்தில் நித்திரைசெய்வதே நியாயக்கேடாயிருக்க, பரம மகிமையின் சோதி கதிர் வீசும்போது தூங்கிக்கொண்டிருப்பது எத்தனை அதிகம்! மந்தமுள்ள என் ஆவியே! புறப்பட்டு வா. நீ சந்தோஷப்படவும் மறுபடியும் சந்தோஷப்படவும் உன் கர்த்தா உனக்கு கற்பிக்கிறார். நீ உன் மாம்சமாகிய சிறைச்சாலையில் நெடுங்காலம் அடைபட்டுக் கிடந்தாயே. அங்கே சாத்தான் உன் காவற்காரரும், கவலைகள் உன் விலங்குகளும், பயங்கள் உன் சவுக்குகளும், போசனம் உனக்கு ஒடுக்கத்தின் அப்பமும் தண்ணீருமாயிருந்தது. அங்கே சந்தேகங்கள் உன் விடுதியும், பாவங்களும் பகைஞர்களும் உன் படுக்கையும், அவிசுவாசமுள்ள இருதயம் உன்னை அடைத்துப்போட்ட கதவுகளும் தாப்பாள்களுமாயிருந்தது. உடன்படிக்கையின் தூதனானவர் இப்போது உன்னைக் கூப்பிட்டு தட்டி எழுப்பி, நீ எழுந்து தம்மைப் பின்செல்லும்படி கற்பிக்கிறார். என் ஆத்துமாவே! நீ எழுந்து, மனச்சந்தோஷமாய் அவருக்குக் கீழ்ப்படி. அப்போது உன் பூட்டுகளும் தாப்பாள்களும் திறந்துவிடும். ஆட்டுக்குட்டியானவர் போகிற இடம் எல்லாம் அவரைப் பின்செல். அப்படிப்பட்ட வழிகாட்டியின் பிறகாலே போக உனக்கு என்ன பயம்? சூரியன் உன்னை இருட்டான நிலைமைக்குள் கொண்டுபோய் விடுமோ? மரணத்தினின்று உன்னை இரட்சிக்க மரித்தவர் அதற்குள் உன்னை வழி நடத்துவாரோ? அவர் பின்னாலே போ. தேவனுடைய பரதீசை உனக்கு அவர் காண்பிப்பார். புதிய எருசலேமை நீ காணவும், ஜீவவிருட்சத்தின் கனியை நீ ருசிக்கவும் அவர் உனக்கு அருள்செய்வார்." 414 ம் பக்கம்.

---

## Communicant's Companion.

# நற்கருணை விளக்கம்.

## ௯. அதிகாரம்.

### தியானமும் ஜெபமும் இந்தப் பந்தியைச் சேர்பவர்களுக்கு அவசியம்.

(தொடர்ச்சி.)

ஆகையினாலே என் ஆத்துமாவே மனுஷன் எவ்வளவு நிர்ப்பந்தனாய்ப் போனானென்று பார். தேவதயவுக்குப் புறம்பாகி, ஜீவவிருக்ஷத்தின் கனியைப் புசியாமல் தோட்டத்துக்கப்புறப்பட்டுப் பரிசுத்தத்தை வெறுத்து தேவகோபத்துக்குட்பட்டவனானானென்று பார். அவன் எத்தனையோ வியாதிகளுக்கும் துன்பங்களுக்கும் மரணத்துக்குமுள்ளானானென்பதையும் பார்.

மேலும் எப்பக்கத்திலும் அவனுக்கு விரோதமாய் எழும்புகிற சத்

துருக்களையுங் கவனி. அவனுடைய பாவத்தினிமித்தம் நித்திய அந்தகாரத்துக்கும் பக்ஷிக்கிற அக்கினிக்கும் இரையாகத் தீர்ப்புப் பெற்றிருக்கிறதையும் பார். அவனுடைய பாவம் அவனை நிர்ப்பந்த சாகரத்தில் அமிழ்த்தியிருக்கிறதையுங் கவனி. எத்தனையாய்ப் பரிதபிக்கப்படத்தக்க நிலைமை இது. என் நிலைமையுமிதுதான். இதைக் கவனிப்பதினால் என ஆத்துமமே நெருப்பு முன் மெழுகு உருகுமாப்போல நீ யுருகிப் பாய வேண்டியதல்லவோ? பாவத்தை யருவருக்கப்படத்தக்க நாற்றமென்று அருவருக்கவேண்டியதல்லவோ? பாவநாசராகிய இயேசுக்கிறிஸ்துவண்டை ஓடி அடைக்கலம் புகுந்துகொள்ள மனதில்லையோ? இந்தச் சோம்பலை விட்டெழும்பி, "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ. பின்னிட்டுப் பாராதே. இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே. நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ.

(2) நம்முடைய இரக்ஷிப்பில் விளங்கிய மாட்சிமைபொருந்திய தேவ இலக்ஷணங்களையுந் தியானிக்கவேண்டும். இந்தச் சங்கதி மகா சிறந்ததும் மாட்சிமைபொருந்தியதுமானதால் தேவதூதர்கள் முதலாய் அதை யுற்றுப்பார்க்க விரும்புகிறார்கள். இதனுடைய ஆழம், நீளம், அகலம், உயரமுதலியவைகளைத் தியானிக்கவேணுமானால் நித்திய காலமும் போதாதே. நிர்ப்பந்த பாவியை ஈடேற்றவேண்டிய விஷயத்தில் தேவகுமாரனாகிய ஆண்டவர் காட்டியிருக்கிற அன்பையும் உருக்க இரக்கத்தையும் பார். பாவி! நீ அனந்தானந்த காலம் நரகத்தீயிலே கிடந்து அமிழ்ந்தபோதும், அவருடைய நித்திய ஆனந்தத்திற்கு யாதொரு குறைச்சல் வரப்போகிறதில்லையே. அவருடைய மகா சிறந்த இலக்ஷணங்களும் குன்றிப்போகாதே. உன்னைவிடச் சிறந்த சிருஷ்டிப்புக்களும் வல்லமையிற் பேர்போனவர்களுமாகிய தேவதூதர்கள் பாவத்தில் விழுந்தபோது அவர்களைத் தூக்கியெடுக்கத் தேவகுமாரன் ஏற்பட்டதுண்டோ. நீ அவர்களைவிட அவருக்கு அதிகப் பிரயோசனமும் உத்தமமானவனல்லவே. அப்படியிருக்க, அவர் உன்னை மீட்க ஏற்பட்டது அவருடைய கைமாறில்லாத சுத்த கிருபையென்பதைத் தியானி. தேவன் உன்பேரிலே பாராட்டியிருக்கிற நீடிய பொறுமையையும், இரக்கத்தையுங் கவனி. நீ அவருடைய அன்பைக் கவனித்து, உன்னை முற்றிலும் அவருக்காதீனமாய் ஒப்புக்கொடுக்க வேண்டியதிருக்க எத்தனையோ விசை நீ யவருக்குக் கோபத்தை மூட்டியிருக்கிறாய். அதினிமித்தம் அவர் உன்னை வெட்டி அக்கினித் தணலிலே எறிந்துவிடுவது நியாயம். அப்படியிருந்தும் உன் இரக்ஷிப்பை விரும்பி உன்மேல் நீடிய பொறுமையாயிருக்கிறார்.

அப்புறம் உன் இரக்ஷிப்பில் விளங்கிய அவருடைய ஞானத்தையுங் கவனி. தேவநீதி உன் பாவத்தினிமித்தம் உன்னை வெட்டுவேனென்று தன் கட்கத்தை ஓங்குகிறது. தேவஇரக்கமோ பொறு, நீர் இப்படிச் செய்தால் பாவி யந்தோகதியாய்ப் போவானேயென்று பரிந்துபேசுகிறது. தேவகுமாரன் உன்னிமித்தம் நீதியின் கட்கத்துக்குத் தன்னை இரையாக ஒப்புக்கொடுத்து உன்னைப் பக்ஷிக்கிற அக்கினியாயிருந்த தேவனோடே உன்னை ஒப்புரவாக்கித் தேவநீதியையும் இரக்கத்தையும் ஒன்றையொன்று சந்திக்கச் செய்திருக்கிறார். சங்கீதம் 85: 10, 11. ஆ! தேவனுடைய ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவு பெரிது!



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.** எந்தப் பாதகத்திற்கும் பிராண தண்டனை இடுவது தகாதென்று நினைத்திருக்கிற சில பெயர் வருஷந்தோறும் பார்லிமெந்தில் அதைப்பற்றி ஒரு சட்டம் ஏற்படுத்தும்படி முயலுகிறார்கள். நாலாது வருஷத்திலும் அப்படியே செய்தபொழுது, பெரும்பான்மையோர் அதைத் தள்ளிப்போட்டார்கள். ஜினேவா மத்தியஸ்தர் அலபாமாவினால் அமெரிக்கருக்கு நேரிட்ட நஷ்டம் ஒரு கோடியே நாற்பது லக்ஷம் ரூபாய் மட்டும் உள்ளதென்று தீர்த்துப் போட்டார்கள். ப்லோரிடா என்னும் வேறொரு கப்பலால் அமெரிக்கருக்கு ஆறு லக்ஷம் ரூபாய் நஷ்டம் உண்டாயிற்றென்று தீர்ப்புப் பண்ணினார்கள்.

**அயர்லாந்து.** அயர்லாந்தைச் சேர்ந்த பெல்பாஸ்ட நகரத்தில் வீதிகளில் கலகம் உண்டாயிற்று. கலகக்காரர் வீடுகளில் புகுந்து கொள்ளையாடினார்கள். திரண்ட ஜனங்கள் ஓரிடத்திலின்று துரத்திவிடப்பட, மறு இடங்களில் திரண்டு கூடினார்கள். துப்பாக்கிகள் உபயோகிக்கப்பட்டன. போலீஸ் சேவகர் யுத்தாயுதங்களைத் தேடும்படி போயிருந்த இடங்களில் விரோதிக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் பிராண சேதமடைந்தான்.

**ஆப்பிரிக்கா.** பெயர்பெற்ற தேசாந்திரியாகிய டாக்டர் லிவிங்ஸ்டன் என்பவரைத் தேடிப்போன ஸ்டன்லி துரை போன நவம்பர் 3ஆ அங்கே சேர்ந்து அவரைக் கண்டார். லிவிங்ஸ்டன் துரை தாம் பண்ணின பயணங்களையும், கண்ட தேசங்களையும், பட்ட பாடுகளையும், காலில் புண்கண்டு ஆறு மாசமட்டும் நடக்கக்கூடாமலிருந்த உபத்திரவமுதலியவற்றையும் சவிஸ்தாரமாய் அவருக்குத் தெரிவித்தார்.

**சர்ச்சுமிஷியன்.** தற்காலத்தில் சீமையிலே புதிதாய்ச் சில குருக்கள்மார் இத்தேசத்தில் சுவிசேஷமார்க்கத்தை பிரசித்தப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டார்கள். கோல்ட் ஸ்மித் ஐயர் இந்துஸ்தானி பாஷையைச் சேர்ந்த சபைக்கு வருவார். தெலுங்கு தேசத்திற்கு இரண்டு பெயர் போகும்படி நியமனம்பெற்றார்கள். என்ஜினீர் துரையாகிய கர்னல் ஹார்ஸலி துரை மகன் திருவிதாங்கோட்டில் தேவ ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டார். கோட்டையத்திலே ஸ்தாபிக்கப்பட்ட வைதீக வித்தியாசாலைக்குத் தலைவராகிய ஸ்பீச்சிலி ஐயரும், திருநெல்வேலியில் வாசஞ்செய்த ஆனிஸ் ஐயரும், மசூலிப்பட்டினத்தில் குருத்தொழில் நடப்பித்த ஷார்ப் ஐயரும் நாளது வருஷக் கடைசியில் திரும்பிவருவார்களாம்.

செப்தெம்பர் மீ நாள் 30. ஆவணி மீ 18உ முதல் புரட்டாசி மீ 16உ வரை.

| வாரம். | ஆங். தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | கஅ | என் உடன்படிக்கையை நினைத்தேன். யாத். 6: 5. |
| தி | 2 | ககூ | உங்களுக்குத் தேவனாயிருப்பேன். 7. |
| செ | 3 | உ0 | உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள். 7. |
| பு | 4 | உக | நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன். 12. |
| வி | 5 | உஉ | தன் தகப்பனுடைய பாவத்தில் நடந்தான். 1 இராசா 15: 26. |
| வெ | 6 | உ௩ | நான் உன்னைத் தூளிலிருந்து உயர்த்தினேன். 16: 2. |
| ச | 7 | உச | என் சனமாகிய இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணுகிறாய். 2. |
| ஞா | 8 | உரு | உன் செய்கையால் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினான். 7. |
| தி | 9 | உசு | என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன். சங்கீ. 69: 10. |
| செ | 10 | உஎ | உம்மை நோக்கி விண்ணப்பம் செய்கிறேன். 13. |
| பு | 11 | உஅ | உமது மிகுந்த கிருபையினால் எனக்குச் செவிகொடுத்தருளும். 13. |
| வி | 12 | உகூ | கர்த்தாவே என் விண்ணப்பத்தைக் கேட்டருளும். 16. |
| வெ | 13 | ௩0 | உம்முடைய தயை நலமாயிருக்கிறது. 16. |
| ச | 14 | ௩க | உமது முகத்தை அடியேனுக்கு மறையாதேயும். 17. |
| ஞா | 15 | க | எனக்குத் தீவிரமாய்ச் செவிகொடுத்தருளும். 17. |
| தி | 16 | உ | தேவனுடைய செயலைக் கவனித்துப் பார். பிரசங்கி 7: 13. |
| செ | 17 | ௩ | வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவித்திரு. 14. |
| பு | 18 | ச | தாழ்வு காலத்தில் சிந்தனைசெய். 14. |
| வி | 19 | ரு | தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமானுமுண்டு. 15. |
| வெ | 20 | சு | தன் பாவத்திலே நீடித்திருக்கிற பாவியுமுண்டு. 15. |
| ச | 21 | எ | நீதியின்படி அவனை எழுப்பினேன். ஏசாயா 45: 13 |
| ஞா | 22 | அ | அவன் வழிகளையெல்லாம் செவ்வைப்படுத்துவேன். 13. |
| தி | 23 | கூ | இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமானவர் நீர். 15. |
| செ | 24 | க0 | நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கப்படுவான். 17. |
| பு | 25 | கக | ஜீவ அப்பம் நானே. யோவான் 6: 48. |
| வி | 26 | கஉ | வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே. 50. |
| வெ | 27 | க௩ | இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றைக்கும் பிழைப்பான். 51. |
| ச | 28 | கச | கிருபையும் சமாதானமுமுண்டாவதாக. உரோமர் 1: 8. |
| ஞா | 29 | கரு | என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். 8. |
| தி | 30 | கசு | கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன். 16. |

## விசேஷித்த நாட்கள்.

1. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் பதினாலாம் ஞாயிறு.
3. அமாவாசை.
8. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் பதினைந்தாம் ஞாயிறு.
15. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் பதினாறாம் ஞாயிறு.
17. பௌரணமி.
22. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் பதினேழாம் ஞாயிறு.
29. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் பதினெட்டாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 24. October. No. 10.

Contents:


Bible Sketches and their Teachings. ... ... ... ... 182
The Parables of Christ. ... ... ... ... ... ... 184
Christian Church History. ... ... ... ... ... ... 186
On the Liturgy. ... ... ... ... ... ... ... ... 188
Notes on Genesis. ... ... ... ... ... ... ... 190
A Family Commentary on the Sermon on the Mount. ... 191
Communicant's Companion. ... ... ... ... ... 194
The first translation of the Bible in Tamil. ... ... ... 196
Summary of News. ... ... ... ... ... ... ... 199


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ... கஅஉ
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... கஅச
கிறிஸ்து சபை சரித்திரம்.... ... ... ... ... கஅசு
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... கஅஅ
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... ககூ0
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... ககூக
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... ... ககூச
வேதாகமங்கள் தமிழ் பாஷையில் திருப்பப்பட்ட வரலாறு. ககூசு
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ககூகூ



Palamcottah

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1872.

௰. அக்றோபர்மீ. ௲௮௭௨ ௵.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### பிலேயாம்.

4 மோசே 22. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

இப்படியாக அவன் கடைசியில் தன்னை யழைப்பித்த இராசாவோடு மலையின் மீது நிற்கிறதைப் பார்க்கிறோம். பாலாக் மிகுந்த கவலையும் ஆவலுமுள்ளவனாக விளங்குகிறான். பிலேயாம் நடுங்குகிறவனாக நிற்கிறான். ஏன் அப்படி? தேவன் கற்பிக்கும் வார்த்தைகளையே யல்லாமல் வேறொன்றையும் தான் உரைக்கும்படி துணியப்படாதென்று அறிந்து தான் அப்படி நிற்கிறான். இஸ்ரவேலின் சேனையனைத்தும் கீழே பள்ளத்தாக்கில் பாளயமிறங்கியிருக்கிறது. அங்கே ஆயிராயிரமான கூடாரங்களும் அவற்றின் நடுவில் ஆசரிப்புக்கூடாரமும் மேற்கே நிழலிடுகிற மேகஸ்தம்பமுமிருக்கின்றன. அவர்களைக்குறித்து தேவனால் தான் பெற்ற செய்தி தனக்கு உண்டென்று பிலேயாம் அறிந்திருந்தான். அதை அறிவிக்காமலும் தீராது. ஆகையால் அவன் சத்தத்தை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தான். பாலாக்கோ மூர்க்க வெறியானான். ஆகிலும் இனனும் பார்ப்போம் என்றெண்ணி, "இந்தப் பெரிய சனக்கூட்டத்தின் ஓர் பாகத்தை மாத்திரம் பார்க்கத்தக்க வேறொரு இடத்துக்குப்போவோம் வா" என்றான். அப்படியே போனார்கள். பிலேயாம் மறுபடியும் தேவனிடத்திற் கேட்டு தேவ உத்தரவுப்படி இஸ்ரவேலருக்குச் சந்தோஷமும் ஆசீர்வாதமுமான வாக்கியங்களையே மறுபடியும் உரைத்தான்.

அதன்பேரில் பாலாக் நம்பிக்கை குலைந்தவனாய், "அவர்களைச் சபிக்கவே சபிக்கவும் வேண்டாம், ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கவும் வேண்டாம்" என்று கூப்பிடுகிறது ஆச்சரியமா? ஆகிலும் தேவன் கற்பித்ததை பிலேயாம் உரைக்கவேவேண்டும். அப்பால் அவர்கள் வேறொரு மலைசிகரத்துக்குப் போனார்கள். குறிகாரன் திரும்பவும் பேசினான், அவன் பேசின வார்த்தைகள் முன்னையிலும் மேலானவிதமாய் ஆசீர்வாதமான வார்த்தைகளாகவேயிருந்தன. அதினால் பாலாக் மிகுந்த கோபப்பிராந்தனாய், "என் சத்துருக்களைச் சபிக்கும்படி உன்னை அழைப்பித்தேன், நீயோ இந்த மூன்று விசையும் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தாய், ஆகையால் நீ உன் ஸ்தானத்துக்கு ஓடிப்போய் விடு. உன்னை மிகுதியும் கனம்பண்ண நினைத்தேன். கர்த்தரோவென்றால் உனக்குக் கனம்வராதபடிக்குத் தடுத்துப்போட்டார்" என்றான். பிலேயாம் பிரதியுத்தரமாக, நான் கற்பிக்கப்பட்டபடியே பேசினேன், ஒரு வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் கிடைத்தாலும் நான்



வேறுவிதமாய்ப் பேசவே கூடாது என்று சொல்லி, மறுபடியும் இஸ்ரவேலின் மேன்மை மகத்துவங்களைக்குறித்தும் அவர்கள் சத்துருக்களின் அழிவைக்குறித்தும் வெகுகாலத்துக்குப்பின் இயாக்கோபின் நட்சத்திரமாகவும் இஸ்ரவேலின் செங்கோலாகவும் எழும்பப்போகிற கிறிஸ்துநாதருடைய வருகையைக்குறித்தும் தீர்க்கதரிசனமாய் பகிர்ந்தான். இந்தத் தீர்க்கதரிசனம் தாவீது இராசனிடத்தில் திட்டமாய் நிறைவேறினதென்று வேதசாஸ்திரிகள் பலரும் நினைக்கிறதுண்டு. 2 சாமு. 8: 2, 11. 12, 14. தாவீதின் இராச்சியபாரமும் அவன் அடைந்த செயங்களும் கிறிஸ்துநாதருடைய கர்த்தத்துவத்தைக் காட்டிய முற்குறிப்புகள் தானே. ஆகையால் அதைப் பார்க்க மேலானவிதமாய் கிறிஸ்துநாதரிடத்திலே நிறைவேறிற்றென்று எதார்த்தமாய்ச் சொல்லலாகும். அப்பால் இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தார்கள். குறிகாரன் தன்னிடத்துக்கும் இராசா தன்னிடத்துக்கும் போனார்கள். இராசா மகா எரிச்சலோடு போனான். அது ஆச்சரியமன்று. ஆனால் தான் செய்யவேண்டிய கடமை இன்னதென்று திட்டமாயறிந்திருந்தும் அதற்குத் திருகுபண்ணினவனும், பாலாக்குக்கு தன் மனச்சாட்சியை விற்றிருந்தும் லாபம் ஒன்றும் அடையாமற்போனவனுமான பிலேயாம் என்பவன் எப்படிப்பட்டவனாய்த் திரும்பியிருப்பானோ? துக்கத்தோடும் மகா சலிப்போடுமே தன்னிடத்துக்குத் திரும்பிப்போனான். பலவந்தத்தினாலே தான் பேசின சத்திய வசனங்களை வெறுக்கிறவனாயும், இதுவரையில் அவனிடத்தில் விளங்கின கீழ்ப்படியாமையையும் பொருளாசையையும் பார்க்க அகோரமான கேடுபாடுகளைச்சிந்திக்கிறவனுமாகவே வெட்கத்தோடு தலைகவிழ்ந்து நடந்துபோயிருப்பான்.

இவன் சரித்திரத்தில் அதிக துக்ககரமான பங்கு இனிமேல் தான் வருகிறது. பிலேயாம் சனத்தைச் சபிக்கக்கூடாமற்போனதினால் அவர்களைப் பாவஞ்செய்யத் தூண்டிவிடுவதினால் அவர்களுக்கு அதிகமான கெடுதிசெய்ய வகைபண்ணுகிறான். எப்படியோ அவன் மறுபடியும் பாலாக்கோடு உறவுபண்ணிக்கொண்டு, இருவரும் ஒன்று சேர்ந்து இஸ்ரவேலரைப் பாவஞ்செய்யத் தூண்டிவிடுகிறார்கள். குறிகாரன் அவர்களைச் சபிக்கக் கூடாமற்போச்சுதே. ஆகையால் அவர்களே தங்களைச் சபித்துக்கொள்ளும்படி பிரயத்தனம்பண்ணுகிறான். அவன் வைத்த கண்ணிகளில் இஸ்ரவேலரில் அநேகர் சிக்கிக்கொண்டார்கள். எப்படியென்றால், அவனுடைய துர்யோசனையினால் அநேகர் அசுத்தமான பாவத்தை நடப்பிக்க ஏவப்பட்டார்கள். அதினிமித்தம் தேவன் அவர்களுக்குள் ஒரு வாதையை அனுப்பினார். மேற்படி வாதையினால் இருபத்துநாலாயிரம் பேர் மடிந்தார்கள். அப்புறம் பயங்கரமான ஓர் யுத்தம் நடந்தது. மீதியான் தேசத்திலுள்ள ஐந்து இராசாக்கள் இஸ்ரவேலரோடு போர் கலந்து சண்டையில் கொலையுண்டார்கள். பிலேயாமும் அவர்களோடு பட்டயத்துக்கு இரையானான். அதி. 31: 8. பிரியமானவர்களே, அவனுடைய விபரீத நடபடிகளுக்குப்பின் இவ்வளவு பயங்கரமானவிதமாய் அவன் மரித்ததில் நம்மெல்லாருக்கும் பெரிய எச்சரிப்பு இல்லையா?

இந்தச் சரித்திரத்தினால் இரண்டு நல்ல படிப்பினைகள் உண்டாகின்றன. முதலாவது, பிலேயாமின் மனோற்சாகமில்லாத கீழ்ப்படிதலையும், இரண்டாவது, அவனுடைய வீண் ஆசையையுங் கவனிப்போம்.

அவனுடைய கீழ்ப்படிதல் மனப்பூர்வமானதல்ல. வெளிப்புறத்திலிருந்து அதைப் பார்க்கையில் அது நேர்த்தியானதாய்த் தான் காணப்படுகிறது. பாலாக் அனுப்பியிருந்த ஆட்களை முதல்விசை அனுப்பி

விட்டான். தேவனே அவனைப் போ என்று சொல்லுகிறவரையில் அவர்களோடு போகமனமில்லாமையைக் காண்பித்தான். தேவன் ஆசீர்வதித்தவர்களை நான் சபிக்கமாட்டேனென்றுஞ் சொன்னான். என்றாலும் அவனுடைய உள்ளமோ மோறுமோறுத்துத் திருகுபண்ணிக்கொண்டிருந்தது. அவன் கீழ்ப்படிகிறானா? கட்டாயம்பண்ணப்பட்டதினால் கீழ்ப்படிகிறானேயல்லாமல் வேறல்ல. அவனுடைய ஆசையும் விருப்பமுமெல்லாம் தேவசித்தத்துக்கு விரோதமாய் நடக்கவேண்டுமென்பதாகவேயிருந்தது. பிரியமான பிள்ளைகளே, உங்கள் கீழ்ப்படிதல் மனப்பூர்வமானதாயிராவிடில் ஒன்றுக்கும் உதவாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். பீலேயாம் தேவனுக்குப் பயப்பட்டதினால் கீழ்ப்படிந்தானே. அதுபோல இப்பொழுதும் அநேகர் பயத்தினாலும் பலவந்தத்தினாலுமே மார்க்கத்துக்குரிய புறம்பான கடமைகளைக் கைக்கொண்டும் பகிரங்கமான பாவங்களுக்கு விலகியும் நடக்கிறார்கள். அவர்கள் இருதயமோ திருகுபண்ணிக்கொண்டிருக்கின்றது. சற்றுத் துணிவுமாத்திரம் கொள்வார்களாகில் தேவனை மறந்துபோகவும் அவருக்குக் கீழ்ப்படியாமை காண்பிக்கவும் தலைப்படுவார்கள். அவர்கள் பக்தியெல்லாம் பயமேயல்லாது வேறல்ல. இந்த வகையான பக்தி தேவனுக்கு உவந்ததல்ல. "தேவனே உமது சித்தத்தின்படி செய்யப் பிரியப்படுகிறேன்" என்று சொல்லும் அன்பான சிந்தையே அவருக்கு ஏற்றது. மன உற்சாகமில்லாத ஊழியத்தைத் தேவனுக்குச் செலுத்துகிறது எவ்வளவு பயங்கரம். அன்பில்லாத பயத்தோடு கூடிய பக்தி மாய்மாலந்தான். பீலேயாம் அந்த மலைச்சிகரத்தில் நின்று பேசாமலிருக்கக் கூடாததினாலே பேசுகிறதையும் தான் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பாலாக்கின் வெள்ளியும் பொன்னும் அப்புறப்பட்டுப்போகிறதென்று உணர்ந்து துக்கசாகரத்தில் மூழ்கினவன்போல் விளங்குகிறதையும் பார்த்து பரிதாபப்படுகிறீர்களே. பயத்தினாலே மாத்திரம் பக்திமான்கள்போல நடக்கிறவர்களிடத்தில் நாடோறும் இந்தச் சாடையைக் காணலாம். நரகம் ஒன்றில்லையா? பாவஞ்செய்வதே அவர்களுக்குப் பிரியம். தேவாராதனை அவர்களுக்கு முழுப் பகை, என்றாலும் அதற்குப் போகாமல் நின்றுகொள்ள அவர்களுக்குத் தைரியமில்லை. மற்றவர்கள் அவர்களை யோக்கியரென்று எண்ணுகிறார்களே. ஆம் புறம்பான நடபடிக்கைகளிலே அவர்கள் யோக்கியர் தான். அவர்கள் இருதயமோ மிகவும்பொல்லாதது. ஆகையால் மோவாபின் மலைமீது நின்ற அந்தக் கள்ளத் தீர்க்கதரிசியைப்போலவே இவர்களும் தேவனுக்குத் தூரமானவர்களே.

---

## The Parables of Christ.

# கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XI-வது. கெட்ட தோட்டக்காரரைக்குறித்து.

மத்தேயு 21: 33, 44. மாற்கு 12: 1—12. லூக்கா 20. 9—18.

இதற்குமுன் சொன்ன உவமையை மாத்திரம் இரட்சகர் சொல்லிநிறுத்திவிடுவாரானால் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் போதுமென்றி



ருப்பார்கள். இரட்சகரோ அம்மட்டில் நிறுத்தாமல் தொடங்கினதை முடிக்கவேணுமென்கிற கருத்தோடு இன்னொரு உவமையைக் கேளுங்கள் என்கிறார். நான் இதுவரையில் சொன்னது போதாது, இன்னொரு எச்சரிப்பான வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது என்கிறது போல பேசுகிறார். அதைக் கேட்கும்படி ஏவிவிடுகிறார். சுவிசேஷகர் இதைச் சொல்லுகிற விதத்தில் வித்தியாசப்படுகிறார்கள். மத்தேயும் மாற்கும் இந்த உவமையைப் பரிசேயருக்குச் சொன்னதாகச் சொல்லுகிறார்கள். லூக்காவோ சனங்களுக்கு இதைச் சொன்னதாகச் சொல்லுகிறார். லூக்கா சுவிசேஷத்தைக்கொண்டே இந்த விகற்பத்தை நீக்கலாம். 19 ம் வசனத்தில் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் இரட்சகர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. இருபேரும் கேட்டுக்கொண்டிருந்த காரியத்தை சுவிசேஷகர்கள் தங்கள் மனதில் பட்டபடி ஒருவர் சனங்களுக்குச் சொல்லப்பட்டதெனறும், வேறொருவர் பரிசேயருக்குச் சொல்லப்பட்டதென்றும் காட்டுகிறார்கள்.

"வீட்டெசமான் ஒருவன் இருந்தான். அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி" தேவனுடைய இராட்சியம் பழையஏற்பாட்டில் அநேக இடங்களில் திராட்சசெடிக்கு அல்லது திராட்சத்தோட்டத்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. 5 மோசே 32: 32. சங்கீதம் 80: 8, 16. ஏசாயா 5: 1—7. 27: 1—7. எரேமியா 2: 21. எசேக்கியேல் 15: 1—6. 19: 10. ஓசேயா 10: 1. இது தகுந்த உவமானம். மிகுந்த தாழ்வான இந்தச் செடி பூமியின் எல்லாச் செடிகளிலும் மேலானது. மக்கபேயருடைய நாணயங்களில் பலஸ்தீனாவுக்குக் குறிப்பாக திராட்சச்செடி அதினிலை அல்லது அதினுடைய குலை வரைந்திருந்தது. இரட்சகர் தம்மை இந்தச் செடிக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். யோவான் 15: 1. அநேக காலத்துக்குமுன்னே, தீர்க்கதரிசனத்திலும் அவரை இப்படியே ஒப்பிட்டிருக்கிறது. 1 மோசே 49: 11. இந்தச் செடி மட்டில்லாமல் எங்கும் பரவத்தக்கது. சங்கீதக்காரன் தேசமெங்கும் படர்ந்தது என்கிறான். 80: 9. இவ்விரண்டுக்குமிருக்கும் ஒற்றுமைகளைப் பார்க்கும்போது இதினால் அதிக வரத்துண்டாகிறதினால் இதை அதிகமாய் விலைமதித்து வந்தார்களென்பதை நாம் மறக்கக் கூடாது. உன்னத. 8: 11, 12. இதற்குத் தீராக்கவலையும் ஓயாப்பிரயாசமும் வேண்டியிருந்தது.

இந்த உவமையின் துவக்கத்திலிருக்கும் வார்த்தைகள். ஏசாயா 5: 1—7வரையிலுள்ள வார்த்தைகளோடு இசைந்திருக்கவேணுமென்கிற நோக்கம் இரட்சகரிடத்தில் இருந்திருக்கலாம். அவர் நியாயப்பிரமாணத்தை அழிக்கவந்தவரென்று சத்துருக்கள் அவர்பேரில் வீணாய்க் குற்றஞ்சாற்றினபடியால், தீர்க்கதரிசிகளின்பேரிலேயே தம்முடைய உபதேசத்தைக் கட்டுகிறார். வார்த்தையில் மாத்திரமல்ல, உவமை முழுவதிலும் யூதச் சரித்திரத்தோடு தம்மைச் சம்பந்தப்படுத்தி தாம் வந்தது தேவன் தொன்றுதொட்டு நடத்திவந்த இரக்கம் நீதியென்னும் செய்கைகளில் ஒரு விசேஷித்த பங்குதானென்று காட்டுகிறார். திராட்சத்தோட்டத்தை இங்கே யூதச் சபையென்று அர்த்தம்பண்ணக்கூடாது. ஏனென்றால், திராட்சத்தோட்டம் இங்கே யூதரிடத்திலிருந்து எடுக்கப்பட்டு வேறு சாதியாருக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறது. யூதச் சபையைக்குறித்து இப்படிச் சொல்லலாகாது. ஏசாயாவில் திராட்சத்தோட்டம் யூதச் சபைதான். அதை வேறு பெயருக்குக்கொடுத்ததாகவல்ல, அதை முற்றிலும் நிர்மூலமாக்கி வேலியை எடுத்துப்போட்டு சுவரைத் தகர்த்து கொத்துகிற பிர

யாசத்தை நிறுத்தி வானங்களும் அதின்மேல் மழைபெய்யாதபடிக்
குத் திட்டஞ்செய்ததாகக் கண்டிருக்கிறது. நம்முடைய உவமையில்
உண்மையுள்ள தோட்டக்காரருக்கு அதைப்பிடுங்கிக்கொடுத்ததாகச்
சொல்லியிருப்பதினால், யூதரும் அவர்களுக்குப் பிறகு புறச்சாதியாரும்
ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவனுடைய இராட்சியத்தைக்குறித்துத்
தான் நாமிங்கே அர்த்தம்பண்ணவேண்டும். மாம்சத்தின்படி இஸ்ர
வேலரானவர்கள் திராட்சத்தோட்டத்தை முந்திக் கையாடினவர்க
ளானபடியால், அந்தக்காலத்தில் அது யூதச் சபையைத் தான் குறிக்
குமென்று சொல்லலாம். அந்தக்காலத்துக்கு மாத்திரமே இந்தக் கருத்
து உதவுமேயொழிய, எப்பொழுதும் கொள்ளத்தக்க பொருளல்ல.
யூதர்கள் சரியானபடி தேவனுடைய இராட்சியமல்ல. அந்த இராட்சி
யத்தைச் சேருகிற சிலாக்கியம் முந்தி அவர்களுக்குக் கிடைத்தது.
திராட்சத்தோட்டம் இந்தத் தோட்டக்காரருக்கு விடப்பட்டதுபோ
ல தங்கள் கடமையைச் செம்மையாய் நிறைவேற்றாதபோது இந்தத்
தோட்டக்காரரைப்போல இவர்களும் சகல சிலாக்கியங்களையும் இழ
ந்தார்கள். தேவனுடைய இராட்சியமும் அவர்களை விட்டெடுபட்டு
மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 13. அதிகாரம்.

அலெக்சாந்தர் செவீரு இராச்சியபாரந் தாங்கினது.—கோவில்
கள் கட்டப்பட்டது.—அலெக்சந்திரியாவிலுள்ள பிளேத்தோ
வின் கொள்கைக்காரர்.—ஒரிஜன் குருப்பட்டமடைந்து செசாரி
யாவில் ஸ்தாபகமானது.—அவன் எழுதிய நூல்கள்.—மொந்தே
ணிய வகுப்பார்—இக்கோனியாவிற் கூடிய சங்கம்.—மாகஸிமினு
இராயனால் எழும்பின துன்பம்.—பொதுவான சங்கங்கள்—ஆத்
துமத்தைக்குறித்த அபிப்பிராயங்கள்—பிலிப்புவின் அரசாட்சி
இவைமுதலிய விர்த்தாந்தங்களடங்கியது.

(தொடர்ச்சி.)

அக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமான ஒரு மனை இருந்
தது. அது கிறிஸ்தவனான யாரோ ஒருவனுடைய சொத்தாயிராமல்
கிறிஸ்தவர்களெல்லாருக்கும் பொதுவான சொத்து என்று தோன்று
கிறது. கிறிஸ்தவர்களுக்குப் பொதுவான ஒரு பொக்கிஷமிருந்ததென்
று மேலே ஓரிடத்தில் விவரித்திருக்கிறதே. அந்தப் பொக்கிஷத்தி
லுள்ள பணத்தினால் இந்த நிலத்தை வாங்கியிருக்கலாம். இராயனு
டைய தீர்ப்பைப் பார்க்கும்போது அது தேவாராதனைக்கு உபயோ
கிக்கப்பட்டு வந்ததென்று தெளிவாகிறதே. கிறிஸ்தவர்கள் தேவாரா
தனைக்கு ஏகவெளியில் கூடிவந்திருப்பார்களென்று நினைக்கலாமா?
ஆகையால் அதிலே ஒரு கட்டிடம் இருந்திருக்கவேண்டும். அதில் முன்
னிருந்த ஒரு வீட்டைக் கிறிஸ்தவர்கள் வாங்கிச் செபவீடாக்கியிருக்க



லாம். அல்லது கிறிஸ்தவர்களே அதை தற்காலத்துக்கென்று கட்டியி
ருந்தாலுமிருக்கலாம். கடைசியிற் சொன்னபடிக்கானால், கோவில்
கட்டினதற்கு ஆதியான அத்தாட்சியாகும். ஆகிலும் மேற்படி கட்டி
டம் அற்பசொற்பமானதாகவேயிருந்திருக்குமென்று நினைக்கத்தக்கது.
எதிரிகள் அதை சத்திரமாக்கும்படி விரும்பினார்களே. அது மாத்திர
மல்ல, அஞ்ஞானிகளுக்கு எரிச்சலுண்டாகாதபடிக்கு கிறிஸ்தவர்கள்
ஆதியிலே கட்டின கோவில்கள் அற்பசொற்பமானவைகளாகவேயி
ருந்தனவென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இக்காலத்தில் இராச்சி
யபாரந் தாங்கின இராயனால் கிடைத்த அனுகூலத்தினாலே கிறிஸ்த
வர்கள் ஒரு கட்டிடத்தை தேவாராதனை நடப்பிக்கத்தக்க இடமாக
ஏற்படுத்தியிருப்பார்கள். கிறிஸ்தவர்களுக்குரியதென்று ரூபிக்கக் கூடி
ய சொத்துக்களைப் பிடுங்கிக்கொள்ளும்படிக்கு பிறப்பிக்கப்பட்ட சட்
டம் இப்பொழுதில்லையோ?

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் துரைத்தனத்தார் கிறிஸ்தவர்
களுடைய ஆஸ்திபாஸ்திகளைப் பிடுங்கிக்கொண்டது பார்த்தோமே.
இதற்குச் சில வருஷங்களுக்குப்பின் துன்பம் மறுபடியும் ஆரம்பமா
னபொழுதும் அவ்வாறு நடந்தது காண்போம். இந்தக் காரியத்தில்
ஒருவேளை என்னவிதமாய் நியாயம் பேசியிருக்குமென்றால், குறித்த
நிலம் கிறிஸ்தவர்களால் கிரயத்துக்கு வாங்கப்பட்டதானபடியால்
இராயனைச் சேரவேண்டியதென்றும் இராயன் அதைப் பிடுங்கிச் சத்
திரக்காரருக்கு விடவேண்டுமென்பதுபோல தான். இப்படி அவர்கள்
நியாயம் பேசியிருப்பார்களாகில், முதலாவது கிறிஸ்தவ கோவில்
அஞ்ஞான இராயனுடைய ஈவு என்று சொல்லத்தக்கதாகும். இக்கால
முதல் கிறிஸ்தவர்கள் கோவில்களைக் கட்டிக்கொள்ளும் உரிமையுடை
யவர்களாயிருந்தார்களென்று நினைக்க இடமுண்டு.

சபையிலே சமாதானம் உண்டாயிருந்ததென்பதற்கு இது நிச்சய
மான அத்தாட்சி. அப்பேர்ப்பட்ட காலங்களில் சரித்திரக்காரர் எழு
தத்தக்க விசேஷங்கள் அத்தனையாயிருக்கமாட்டாதே. துன்பம் மும்
முரமாய் நடந்துகொண்டிருக்கும்பொழுதோ, அது அதற்கடுத்த சங்
தோஷச் செய்திகளாவது துக்கச்செய்திகளாவது பலதிருக்கும்.
தடைகளாவது நிஷ்டூரங்களாவது இல்லாத காலத்தில் அஞ்ஞானி
களுக்குள் கிறிஸ்துமார்க்கம் பரவின விர்த்தாந்தத்தை அதினாற் பிறந்த
பலாபலன்களைக்கொண்டு தான் அறியவேண்டியிருக்கிறது. அப்படி
யே அலெக்சந்திரியாச் சபையின் வரலாறுகளையாவது ஒரிஜனுடைய
ஜீவிய விர்த்தாந்தம் ஒன்றையுமாவது நுட்பமாய் விவரித்தால், கிறிஸ்
துமார்க்கத்தினாலே அஞ்ஞான மார்க்கம் எவ்வளவாய் நிலைகுலைந்த
தென்று காட்டுவதற்குப் போதுமானதாயிருக்கும். மேற்படி பட்ட
ணத்திலுள்ள சாஸ்திரிகள் தங்கள் கொள்கைகளைத் தள்ளிவிட்டு புதி
தாய் ஒரு கோட்பாட்டை உண்டுபண்ணிக்கொண்டார்கள். கிறிஸ்து
மார்க்கம் அதிதீவிரமாய் அனுகூலமடைகிறதையும் கிறிஸ்துமார்க்க
உபதேசங்கள் தங்கள் சித்தாந்தங்களைப் பார்க்க பரிசுத்தமும் சிறந்த
வைகளுமாயிருந்தன என்பதையும் உணர்ந்துகொள்ளாதிருப்பது கூடா
யதன்று. ஆதலால் தேவதன்மையையும் தேவகுமாரன் அல்லது வார்த்
தையானவரையும் தேவனிலிருந்து புறப்படுகிறவராகிய ஆவியானவ
ரையுங் குறித்த கிறிஸ்தவர்களுடைய உபதேசங்களெல்லாம் பிளேத்
தோவின் சித்தாந்தங்களில் அடங்கியிருக்கின்றனவென்று காண்பிக்கப்
பார்த்தார்கள். இந்த ஒற்றுமையை நிலைநிறுத்தும்பொருட்டு பிளேத்
தோவின் சொற்களுக்கு புதிய கருத்துக்களைக் கொடுக்கவும் அவன்

ஒருக்காலும் சொல்லியிராத அபிப்பிராயங்களைச் சொன்னதாகச் சாதிக்கவும் ஏவப்பட்டார்கள். இப்படிப்பட்ட கள்ளத்தனத்தினால் கிறிஸ்துமார்க்க விர்த்தியைத் தடுத்துப்போடவும் கிறிஸ்துமார்க்கம் பிளேத்தோவின் சித்தாந்த பேதமே அல்லாது வேறல்ல என்று காண்பிக்கவும் நினைத்தார்கள்.

இந்த ஒற்றுமையை நிலைநிறுத்துவதற்கு கிறிஸ்தவர்களும் அவிவேகமாய் அனுகூலம்பண்ணினார்களென்பது மிகுதியும் துக்ககரமான சங்கதி. கிறிஸ்துமார்க்க உபதேசங்கள் பிளேத்தோவின் சித்தாந்தத்துக்கு ஒப்பானவைகள்தானென்று காட்டினால், அஞ்ஞானிகளால் சுவிசேஷத்துக்கு இருக்கும் தடை நீங்கிப்போகுமென்று அவர்கள் நினைத்ததே அதற்குக் காரணம். இந்த நோக்கமாய் பிளேத்தோ என்பவன் தன் கருத்துகளில் அநேகத்தை மோசேயின் ஆகமங்களிலிருந்து எடுத்துக்கொண்டானென்றும் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய ஆழமான இரகசியங்களும் திரித்துவ உபதேசமுதலாய் மேற்படி ஞானியின் நூல்களிலடங்கியிருந்தனவென்றும் சாதித்தார்கள். இருகட்சியாருக்குள்ளும் இந்த இணக்கம் அலெக்சந்திரியாவில் மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் உண்டானதாகத் தோன்றுகிறது. இக்காலத்துப் பிளேத்தோ வகுப்பாருக்குச் சிரேஷ்டனாக எண்ணப்பட்டவன் அம்மோனியு சக்கா என்பவன். அவன் சிறிதுகாலம் கிறிஸ்தவனாயுமிருந்தவன். ஒரிஜனும் இளம்பிராயத்தில் அவனுடைய பிரசங்கங்களைக் கேட்டிருந்தான்.

---

## On the Liturgy.

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ௫. அதிகாரம்.

ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

### XVII. உயிர்த்தெழுந்த நாளாகிய ஈஸ்தர் பண்டிகையைக் குறித்து.

பெரிய வெள்ளிக்கிழமையில் சிலுவையின் அடியில் துக்கத்தோடு நின்றிருந்தோம். மறுநாள் மணவாளன் நம்மைவிட்டு எடுபட்டுப்போனபடியால் துக்கங்கொண்டாடினோம். இந்நாளில் அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவுடனே இரட்டுப்பைத் தள்ளிப்போட்டு நம்முடைய துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி மகிழ்ச்சியால் இடைகட்டிக்கொள்ள சபையானது நமக்கு கற்பிக்கிறது.

இரண்டாவது. அப்போஸ்தலர் காலமுதல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த பண்டிகையை வருஷாந்தரம் கிறிஸ்தவர்கள் கைக்கொண்டுவருகிறார்கள். ஈஸ்தர் என்பது சாக்ஸன் வார்த்தை. சிலர் அதற்கு எழுந்திருக்குதல் என்பது அர்த்தமென்றும், ஈஸ்தர் பண்டிகையென்று சொல்லும்போது உயிர்த்தெழுந்த பண்டிகையென்றும் அருத்தஞ்



சொல்லுகிறார்கள். வேறு சிலர் அவர்கள் ஈஸ்தர் என்னும் ஒரு தேவதையை அந்த வருஷத்தில் அந்தக்காலத்தில் வணங்கினபடியால் இந்தப் பெயர் வந்ததென்றுஞ் சொல்லுகிறார்கள். பூர்வீக திருச்சபையில் இந்தப் பண்டிகை கொண்டாடுவதைப் பற்றியல்ல, அதைக் கொண்டாடும் காலத்தைப்பற்றி தான் தர்க்கம் இருந்தது. அதைப்பற்றி முன்னே சொல்லியிருக்கிறோம்.

மூன்றாவது. இது மிகவும் விசேஷித்த பண்டிகையானபடியால் இதை வெகு சிறப்பாய் ஆசரித்துவந்தார்கள். முற்காலத்தில் இந்நாளில் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் காணும்போது வாழ்த்துதலாய் "கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்தார் என்பார்களாம். வாழ்த்தப்பட்டவர்கள் ஆம், மெய்யாகவே கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்தார். அல்லது சீமோனுக்குக் காணப்பட்டார்" என்பார்களாம். லூக். 24: 34. இந்த வழக்கம் கிரேக்கச் சபையில் இன்னும் இருக்கிறது. நம்முடைய சபையும் இப்படி சந்தோஷமாய் வாழ்த்துகிறதை தாமதிக்கலாகாதென்றெண்ணி, பாவவிமோசன அறிக்கை வாசித்தவுடனே சந்தோஷத்துக்கு ஏற்ற சமயமென்றெண்ணி, மங்கள வார்த்தைகளாலும் துதிகளாலும் இந்தப் பண்டிகையை ஆசரிக்க நம்மை எழுப்பிவிடுகிறது. கிறிஸ்துவாகிய நம்முடைய பஸ்கா நமக்காக பலியிடப்பட்டிருக்கிறார். கிறிஸ்து மரித்தோரை விட்டெழுந்திருந்து நித்திரை அடைந்தவர்களில் முதல் பலனானார்.

நாலாவது. காலைக்குரிய சங்கீதங்கள். 2, 57, 111. இரண்டாம் சங்கீதம் சத்துருக்களால் விரோதிக்கப்பட்ட பிறகு இராசாவாக தன் இராச்சியத்தில் ஸ்தாபிக்கப்பட்டபோது தாவீது பாடினது. கிறிஸ்துவானவர் இராசாவாகவும் ஆசாரியனாகவும் தம்முடைய உத்தியோகத்தைக் கைக்கொள்ளுவதற்கு இது தீர்க்கதரிசனமென்று யூதர்களே சொல்லுகிறார்கள். யூதர்கள் அவரை விரோதித்து சிலுவையில் அறைந்தபிறகு மரித்தோரை விட்டெழுந்திருந்து தம்முடைய பிதாவின் வல்லமையால் அந்த மேலான உத்தியோகங்களுக்கு உயர்த்தப்பட்டு நம்முடைய இரக்ஷிப்புக்காக அவைகளை திறமையாக நடத்திக்கொண்டுவருகிறார். தாவீது சவுலை கெபியிலே கண்டு அவனைக் கொல்லாதபடி இரக்கமாய் விட்டும் சவுல் மறுபடியும் அவனைப் பின்தொடர்ந்து அவனைப் பிடிக்கவந்த சமயத்தில் தான் தப்பிக்கொண்டபடியால் தாவீது 57 ம் சங்கீதத்தைப் பாடினான். கிறிஸ்துவானவர் மரணத்தையும் நரகத்தையும் செயித்ததையும் இது குறிப்பாய்க் காட்டுகிறது. கடைசி சங்கீதம் மீட்பின் எல்லா அதிசயசெய்கைகளுக்காகவும் தேவனைத் துதிக்கிற பாட்டு. கிறிஸ்து உயிர்த்தெழுந்தது தான் இதுகளில் பிரதானமானது. இது இந்த நாளுக்குரியதாயிராவிட்டாலும் இந்த நாளின் சங்கதிக்கு மிகவும் ஏற்றது.

மாலை சங்கீதங்கள். 113, 114, 118. 113 ம் சங்கீதம் தேவனுடைய திவ்விய செயலை பல விஷயங்களில் திருஷ்டாந்தப்படுத்துகிறது. அந்த திவ்விய செயல் மீட்பின் செய்கையில் நன்றாய் விளங்குகிறபடியால், இந்தச் சமயத்துக்கும் மிகவும் ஏற்றதுதான். 114 ம் சங்கீதம் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையானதற்காக அவரைத் தோத்தரித்ததைக் குறித்துச் சொல்லுகிறது. நாம் மரணத்தினின்றும் நரகத்தினின்றும் அடைகிற மீட்புக்கு இது முன்னடையாளமாயிருக்கிறபடியால், இது இந்த நாளுக்கு மிகவும் ஏற்றதுதான். 118 ம் சங்கீதம் தாவீது எருசலேமுக்கு உடன்படிக்கைப் பெட்டியைக்கொண்டு வந்தபிறகு உண்டான சமாதானத்தினிமித்தம் எழுதப்பட்டது. இராஜாவுடைய

உயிர்த்தெழுதலைக்குறித்து இதிலேயும் சொல்லியிருக்கிறதென்று புதியேற்பாட்டினால் அறிந்துகொள்ளுகிறோம். மத். 21: 42. அப். 4: 11.

---

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

### அ. அதிகாரம்.

### நோவா பேழையைவிட்டு இறங்கினது.

1. "நினைத்தருளினார்." பூமியின்மேல் சஞ்சரிக்கிற யாவும் மாண்டபின்னும் சலம் பெருகிக்கொண்டேயிருந்தது. இது நோவாவுக்குப் பலத்த சோதனை. ஆனால் கர்த்தர் மகா இரக்கமாய் அவன் செபத்தைக் கேட்டு அவனை வெளியேறப்பண்ணும்படி நினைத்தருளினார்.

2, 3. சலம் பழய இடங்களுக்கு மாறித் திரும்பினது. ஆதி. 1: 8. 7: 11. வியா.

4. சலப்பிரளயம் ஆரம்பித்ததுமுதல் சரியாய் 5 மாசம் அல்லது "நூற்றைம்பது நாள்" சென்றபின் ஆராத் மலையின் ஓர் உச்சியில் பேழை தங்கத்தக்க அளவாய் தண்ணீர் வடிந்தது.

"ஆராத்" அர்மீனியா தேசத்திலுள்ளது. இதற்கு (2) சிகரங்களுண்டு. சிலர் பேழை தங்கின மலை இதல்ல, கிழக்கே தூரத்திலுள்ள ஓர் உச்சி என்று நினைக்கிறார்கள். ஆதி. 11: 2. எப்படியும் பேழை தங்கினது ஒரு உயர்ந்த உச்சி என்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் இதற்கு 3 மாசத்துக்குப் பின்தான் "மலைச்சிகரங்கள் காணப்பட்டன."

6. "நாற்பது நாள்" மலைச் சிகரங்கள் காணப்பட்டு 40 நாள் சென்றபின்பு பூமியின் ஸ்திதியை அறியும்படி "ஒரு காகத்தை வெளியேவிட்டான்." அது சவந்தின்னிப் பட்சியானதினால் மறுபடி பேழைக்குள் வரவில்லை.

"பின்னும் ஏழுநாள் பொறுத்து" ஓய்வுநாள் பேழைக்குள் ஆசரிக்கப்பட்டதற்குக் குறிப்பு.

"இலை" விருட்சங்கள் முழுவதும் அழிந்துபோகவில்லை. ஒலிவ இலை சமாதானத்துக்கு அடையாளம்.

14. நோவா ஒரு வருஷமும் பத்துநாளும் பேழைக்குள்ளிருந்தான்.

16. "புறப்படுங்கள்." தரையில் வரும்படி வெகுவாய் ஆசித்தார்கள். அதற்காக பல பிரயத்தனங்களைச் செய்தார்கள். பேழையின் மேல்தட்டின்வழியாய் எட்டி எட்டிப் பார்த்திருப்பார்கள். ஆனாலும் தேவ உத்திரவில்லாமல் பேழையைவிட்டு வெளியேறவில்லை. தரையின் அருமை நம்மைவிட அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆ! நாம் இடைவிடாமல் அநுபவிக்கிற சலாக்கியங்கள் பெரியகாரியமாக நமக்குத் தோன்றுகிறதில்லை!

17. பேழைக்குள் ஒரு சீவப்பிராணியாவது சாகவில்லை. இதென்ன ஆச்சரியம்!

20. "பலிபீடம்," "தகனபலி" இந்த வார்த்தைகள் முதலாவது வருகிற இடம் இதுதான். புதிய உலகத்தில் செய்யப்பட்ட முதற் கிரியை தேவாராதனை. முதலாவது கொல்லப்பட்டது பலி. நோவா பேழையிலிருந்து இறங்கினவுடனே அவனுக்கு என்னமாயிருக்கும்! என்றாலும் தன் பழைய வீடு, வாசல், சொத்துசொம் இவற்றின்மேல் ஆசைவையாமல் தன்னை மீட்டு ரட்சித்த கர்த்தனை முதலாவது நினைத்துத் துதித்தான். பேழைக்குட் காக்கப்பட்டதற்கு நன்றியறிதலாகவும், பாழான புதிய உலகத்தில் தனக்குக் கிடைக்க வேண்டிய நன்மை ஆதரவுக்காகவும் தேவனை நோக்கி வேண்டிக் கொண்டு, இரட்சகருக்கு முன்குறிப்பான தகன பலிகளை இட்டான். இந்தச் செய்கை அவனுடைய தாழ்மையான விசுவாசத்தையும், நன்றியறிதலையும் வெளிப்படுத்தினதாலும், கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தை முன்குறித்ததாலும் தேவனுக்குப் பிரியமாயிருந்தது. "கர்த்தாவே! உம்முடைய கண்கள் விசுவாசத்தையல்லவோ நோக்குகின்றன."

21. "சபிப்பதில்லை." அதாவது, இப்பொழுதுபோல பூமியை சலப்பிரளயத்தால் அழிப்பதில்லை.

### படிப்பினை.

சலப்பிரளயம் பூமியிலுள்ள மனிதரை அழித்தாலும் அவர்களுடைய கெட்ட சென்மச் சுவாபத்தை அழிக்கவில்லை!—தேவனுடைய சபை உலகத்திலே எவ்வளவு சிறிதாயிருந்தாலும், மற்றவர்களாலே அற்பமாய் எண்ணப்பட்டாலும், தேவ பார்வையிலே மகா எண்ணிக்கையுள்ளதாயிருக்கிறது. இவ்வுலகத்தின் திரள் குடிகளோடு உத்தம கிறிஸ்தவர்களுடைய தொகையை ஒத்துப் பார்த்தால் மிகவுஞ் சொற்பமாயிருக்குமே. அது முகாந்திரத்தினாலே அவர்களையும் அவர்கள் வேதத்தையும் அற்பமாய் எண்ணுகிறவர்கள், நோவாமுதலிய எட்டுப் பேர் அடங்கிய சபையைக் கவனிக்கக்கடவர்கள்.—தேவனுடைய இலட்சணங்கள் உத்தமனுக்கு அடைக்கலம்.—நீ சோதனை, துன்பங்களில் அகப்பட்டிருக்கையில் உன்னிஷ்டப்படி அதிலிருந்து வெளியேறப்பாராதே, தேவ உத்தரவுக்குக் காத்திரு.—வெளியரங்கமான திருச்சபையிலே அநேகம் காகங்கள் உண்டு. ஆனால் உத்தமன், புறாவைப்போல் தன் நோவாவண்டைக்குத் திரும்புமட்டும் இளைப்பாறுதலடையான்.—சங் 116: 7.—தேவனுடைய உண்மையும், அதிகாரமும் உலக முறையிலும் நன்றாய் விளங்குகிறது. 22. வா.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 6: 24.

(தொடர்ச்சி.)

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலுங் கூடாது. ஏனெனில், ஒருவனைப் பகைத்து, மற்றவனை சிநேகிப்பான், அல்லது

ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது.

இரண்டு எஜமான்களுக்கு அதாவது, எதிரிடையான இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலுங் கூடாதென்பது சத்தியவேதத்தின மிகவும் முக்கியமான மூலாதார மூதுரைகளில் ஒன்று. உலகப்பொருளென்று தமிழில் மொழிபெயர்த்திருக்கிற மூல பாஷையின் வார்த்தை மம்மோன் என்பதாம். இதற்கு ஐசுவரியமென்றும் ஐசுவரியமாகிய தேவனென்றும் அர்த்தமாம். இது மனிதர்கள் வணங்கும் மற்றெந்த விக்கிரகத்துக்கும் வரலாம். இது சப்தார்த்தப்படிக்கு நீங்கள் தேவனுக்கு ஊழியக்காரராயிருந்துகொண்டு, பொருளாசைக்கும் ஊழியக்காரராயாவது அடிமைகளாயாவது இருப்பது கூடாதென்பதாம். விரிவான கருத்துப்படி நீங்கள் தேவனுக்கு ஊழியக்காரராயிருந்து ஐசுவரியம், கனம், இன்பம், உலகம், மாம்சம், பசாசு இந்த எஜமான்களிலாருக்காவது அடிமைகளாயாவது ஊழியக்காரராயாவது இருப்பது கூடாதென்பது பொருள். மம்மோன் அதாவது, உலகப்பொருள் என்ற பதத்தை எந்தெந்தக் கருத்தாய் பிரயோகம் பண்ணினபோதிலும், தேவனும் உலகப்பொருள்களும் ஒன்றுக்கொன்று விரோதமான எஜமான்களாயிருந்து ஒன்றுக்கொன்று விரோதமான கடமைகளை விதிக்கிறது. ஒன்று நம்மை வெறுக்க கற்பிக்கிறதை ஒன்று நேசிக்ககற்பிக்கிறது. ஒன்று நம்மைச் செய்யச்சொல்லுகிறதை ஒன்று செய்யாமல் விட்டுவிடச் சொல்லுகிறது. ஒரு எஜமானுக்கு அமைந்து நடப்பது மற்ற எஜமானுக்குத் துரோகம்பண்ணுவதாகும். இருவகைக் கடமைகளையும் ஒன்றாயிணைப்பது அப்படிச்செய்யப் பார்ப்பதும் அசாத்தியமும் மாய்மாலமும் புத்தியீனமுமாய் இருக்கும். ஆகையினாலே எந்த எஜமானை தெரிந்துகொள்ள உங்களுக்கு விருப்பமோ, அந்த எஜமானைத் தெரிந்துகொள்ளுங்கள். ஆனால் நீங்கள் தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்வது கூடாத காரியம்.

இந்த வாக்கியத்தை விரித்து உரைப்போமாகில், தேவனைப் பற்றிக்கொள்ளுதல் சத்தியவேதத்துக்குரிய முக்கிய பிரமாணம் என்றறியலாம். இங்கே தேவனை நமக்கு எஜமானாகவும் மனிதனை ஊழியக்காரனாகவும் பாவித்துக் காட்டியிருக்கிறது. அன்றியும் தேவனை இராஜாவாகவும் மனிதனை பிரஜையாகவும் பாவிக்கலாம். ஆகையால் பரம எஜமானுக்கு விசுவாசமுள்ள ஊழியக்காரனும், இராஜாதி இராஜனுக்குப் பணிவுள்ள பிரஜையாயுமிருப்பதும் அவரை மாத்திரம் நமதாண்டவராக வைத்துக்கொள்ளுவதும், அவரது எதிராளிகளுக்கும் விரோதிகளுக்கும் கீழ்ப்படியாமல் அவருடைய சட்டத்துக்கு மாத்திரம் அமைந்து நடப்பதும், அவரது விரோதிகளுடைய அதிகாரத்துக்கு அடங்காமல் அவருடைய அதிகாரத்துக்கே அடங்குவதும், அவரையே நேசித்து அவருக்கேபயந்து அவருக்குள் சந்தோஷப்படுவதும், மொத்தமாய்ச் சொல்லில், தேவனைத்தவிர மற்றெந்தப் பொருளிலாவது அன்புகூராமலும் பயப்படாமலும் சந்தோஷப்படாமலுமிருந்து அவருக்கு விரோதமான எல்லா வஸ்துக்களையும் வெறுத்துத் தள்ளுவது மெய்கிறிஸ்தவனாயிருப்பதாம். பெரும்பாலும் தேவஊழியக்காரரென்று சொல்லிக்கொள்ளுகிற அநேகர் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறதில்லை. அவர்கள் விரோதமான இரண்டு எஜமான்களையுடைய ஊழியக்காரரைப்போலவும் இரண்டு இராஜாவைப் பற்றிகொண்ட பிரஜைகளைப்போலவுமிருக்கிறார்கள். அவர்கள் எண்ணப்படி அவர்



கள் தேவனுக்குக் கீழ்ப்படிகிறார்கள். ஆனால் அவர்கள் உலகப்பொருளுக்குங் கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் இந்த இரண்டு ஊழியத்தையும் ஒன்றாய் இணைக்கப் பார்க்கிறார்கள். அதாவது, தேவதயவையும் மனிததயவையும் லௌகீக ஆஸ்தியையும் வைதீகப் பொக்கிஷத்தையும் இப்பிரபஞ்ச கனத்தையும் பரம மகிமையையும் சம்பாதித்துக்கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். சப்தார்த்தப்படி மம்மோன என்னும் உலகப்பொருளை வணங்குகிறவர்களைப்பற்றி இப்போது விசேஷமாய்க் கவனிப்போம்.

இதை வணங்குகிறவர்கள் உலகத்தில் அநேகம்பேர் என்று சொல்லலாம். அநேகர் தங்களுடைய தொழில், விசேஷமாய் வர்த்தகத் தொழில்செய்யப் பிரவேசிக்கையில் ஆஸ்தி சம்பாத்தியம் பண்ணவகைபார்க்கிறார்கள். வர்த்தகத்தினால் பணம் சம்பாதிக்காவிட்டால் அதினால் என்ன பிரயோசனம். மிகவும் ஐசுவரியவான்களாகும்படி நாங்கள் கடினமாய் வேலைசெய்கிறோம். ஆனால் யோக்கியமான ஏதுக்களை நாங்கள் பிரயோகித்து அதோடுகூட எங்களுடைய மார்க்கத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் அடுத்த கவலைகளை நிறைவேற்ற கவலைகொண்டிருக்கிறோமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் சத்தியமார்க்கத்தின் தன்மையைச் சரியானபடி கிரகித்துக்கொண்டவர்களல்ல, இருதயத்தை இயல்பாய் ஆண்டுகொண்டிருக்கிற இப்பிரபஞ்ச ஆசைகளையடக்கி அதில் தேவன் விரோதியில்லாமல் ஆளும்படி இடங்கொடுப்பதே சத்தியமார்க்கத்தின் தன்மையென்று அவர்கள் உணருகிறதில்லை. ஆஸ்தி விஷயத்தில் ஏனோதானோவென்றிருப்பதும், பணஆசையினால் தூண்டப்படாமல் கடமையென்று வேலைசெய்ய அபேட்சிக்கிற குணமும் சத்தியமார்க்கத்தின் சில விசேஷித்த குறிப்புகளென்று அவர்கள் அறிந்துகொள்ளுகிறதில்லை. அன்றியும் பணஆசையினால் ஏவப்பட்ட ஒருவன் தன்னுடைய வேலையை மிகவும் நேர்த்தியாய் நிறைவேற்றக்கூடுமென்று தப்பாய் எண்ணுகிறான். பணஆசையானது கண்களைக் குருடாக்கி பூனைபோல் அரவங்காட்டாமல் வருகிற கபட்டுக்கும் காட்டிக்கொடுக்கிறது. நீ திட்டமாய் யோக்கியனாயிருக்க விரும்பினால் உன்னுடைய அலுவலில் கோணலான நடக்கையைத் தள்ளவிரும்பினால் பணஞ்சம்பாதிக்கவல்ல, தேவனைப் பிரியப்படுத்துவதே உன்னுடைய முக்கிய தீர்மானமாயிருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு யாதொரு காரியத்தையும் தொடங்கு. ஏனெனில், எந்த மனிதனாவது தன்னுடைய ஆதாயத்துக்கும் உண்மையாயிருந்து தன்னுடைய தேவனுக்கும் உண்மையாயிருப்பது கூடாத காரியமென்று நிச்சயித்துக்கொள். இந்த இரண்டு எஜமான்களுக்கும் ஊழியஞ்செய்வது கூடாத காரியம். ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பாய். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவாய். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. அன்றியும் ஆஸ்தி மாத்திரம் இருதயத்தை ஆளும் தேவவிரோதியாயிருக்கிறதில்லை. உலகத்தில் உள்ள சிலர் ஆஸ்தியை அருவருத்துத் தள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுடைய முக்கிய விருப்பமென்னவெனில், தங்களுடைய உத்தியோகத்தில் மற்றவர்களைவிட மேன்மையடையவேண்டுமென்பதும், தீராத பட்சத்தில் கண்ணியப்படத்தக்க நிலைமையிலிருக்கவேண்டுமென்பதுமே இதினாலே தேவதயவை கிஞ்சித்தும் நினைக்கிறதில்லை, மதிக்கிறதுமில்லை. பற்பல வகுப்பான ஜனங்களுக்குள் தாங்கள் உயரவேண்டுமென்பதே மற்றுஞ் சிலருடைய முக்கிய நோக்கம். முதியோர் தங்களுடைய பிள்ளைகளை உல

கப்பிரகாரமாய் உயர்த்தவேண்டுமென்பதை எல்லாவற்றிலும் முக்கியமானதாக அபேட்சித்து, வாலிபர்களைப்போலவே தங்கள் இச்சையை நிறைவேற்றக் கருதுகிறார்கள். இந்த எல்லா விஷயத்திலும் இருதயமாகிய சிம்மாசனத்திலிருந்து தேவன் தள்ளப்படுகிறார். தேகஇச்சைகளுக்கு அடங்கி நடக்கிற பாவம் இதில் விளங்குகிறது. ஆகையால் மட்டுக்குமிஞ்சின ஆசைகளெல்லாம் யாதொரு விசேஷித்த பொல்லாத கிரியையை விளைவியாவிட்டாலும் பாவமே. தேவனைப் பிரியப்படுத்த அவருக்கு ஊழியஞ்செய்ய நாடுகிற ஆசைக்கு மிஞ்சிய ஆசையெல்லாம் மட்டுக்கு மிஞ்சிய ஆசையே. என்னைவிட தகப்பனையாவது தாயையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்கு அபாத்திரன்; என்னிலும் அதிகமாய் மகனையாவது மகளையாவது சிநேகிக்கிறவன் எனக்கு அபாத்திரன் என்று நமது இரட்சகர் சொல்லுகிறார். மத்தேயு 10: 37. அப்படியே உங்களில் எவனாவது தனக்குண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால், அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்றுஞ் சொல்லுகிறார்.

---

**Communicant's Companion.**

# நற்கருணை விளக்கம்.

## ௬. அதிகாரம்.

### தியானமும் ஜெபமும் இந்தப் பந்தியைச் சேர்பவர்களுக்கு அவசியம்.

(தொடர்ச்சி.)

(3) உன் மீட்பர் இன்னாரென்பதையுந் தியானி. அவர் தேவனுடைய தற்சொரூபமாகிய அவருடைய ஒன்றான குமாரன். வானங்களும், வானங்களின் வானங்களும் அவருக்கு நிகராகாது. பரிசுத்த தேவதூதர்களால் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரென்று தொழுது தோத்திரிக்கப்படத்தக்க தேவன். காற்றுங் கடலும் அவர் சொற்படி கேட்கும். பசாசுக்களும் அவருக்குமுன் நடுநடுங்கி யவருக்குப் பயப்படும். அவர் தம்முடைய பிதாவுக்கொப்பாயிருக்குதலைக் கொள்ளையிடப்பட்ட உடைமையென்றெண்ணார். சிம்மாசனங்களும் அதிகாரங்களும் கர்த்தத்துவங்களும் வல்லமைகளும் அவராலும் அவருக்கென்றுஞ் சிஷ்டிக்கப்பட்டன. கொலோ. 1: 14.

ஆத்துமாவே! இது உனக்குள்ளே அவரைப் பற்றின கனமும் பாரமுமான எண்ணத்தையுண்டாக்கி உன் பெலவீனத்திற் பெலத்தையும், அதைரியத்தில் தைரியத்தையும், அவிசுவாசத்தில் விசுவாசத்தையும், அவநம்பிக்கையில் நம்பிக்கையையும் பிறப்பிக்கவேண்டியதில்லையோ?

அப்புறம் அவர் உனக்காக மனிதனான விதத்தையுங் கவனி. இவ்வளவு மாட்சிமைபொருந்திய தேவன் அவருடைய தரித்திரத்தினால் நீ



ஐசுவரியவானாகும்படிக்கு உன்னிமித்தியம் அவர் தரித்திரரானார். அவர் தரித்த மனிததன்மை அவருடைய மகிமைகளெல்லாவற்றையுங் கிரகணித்தது. அதினாலே தான் அப்போஸ்தலனும் "அடிமையினுருவமெடுத்து மனிதசாயலானார்" என்கிறார். அவர் கையிட்டுக்கொண்ட இரக்ஷிப்பின் கிரியை மகா பெரிதும் விலையுயர்ந்ததுமாயிருந்தது. மனுஷனுடைய இரக்ஷிப்பைப் பற்றின தேவாலோசனை யடங்கிய முத்திரையிடப்பட்ட புஸ்தகம் இவராலேயன்றி வானத்திலும் பூமியிலுமுள்ள வேறொருவராலுந் திறக்கப்படக்கூடாததாயிருந்தது. உன் பாவத்தைப்போக்கப் பலியையுங் காணிக்கையையுந் தேவன் விரும்பாதிருந்தபோது, காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் உதவாதிருந்தபோது தேவகுமாரன் இதோ உம்முடைய சித்தத்தை நிறைவேற்றப்போகிறேனென்று ஏற்பட்டார். இதற்கென்று இழிவான மனுஷதன்மையைத் தரிக்கவேண்டியது அவசியமென்று கண்டபோதிலும், அவர் அதை யசட்டைபண்ணாமல் உன் தன்மையைத் தரிக்க ஏற்பட்டார். ஆத்துமாவே! இதைத் தியானி.

(4) நமமுடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து அன்றயுண்ட சிலுவையையுங் கவனி. நீ கர்த்தருடைய பந்தியைச் சேரப்போகிறபோது இதுவே உன்னுடைய முக்கிய தியானமாயிருக்கவேணும். உன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதே. உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி சிலுவையிலறையப்பட்டவராக அந்தச் சமையத்திலே பார். அவருடைய சிலுவைப் பாடுகளைச் சற்றே விபரமாய்க் கவனித்தால் அவருடைய அன்பின் மாட்சிமையை யறிந்துகொள்வாய். எல்லா மரணத்திலுஞ் சிலுவையின் மரணம் அகோர வேதனையைக் கொடுக்கத்தக்கது. லேசாய் சீவனையெடுக்காமல், வதைத்துக் கொல்லும். அவருடைய நரம்புகளிலெல்லாம் ஆணி போய் இறங்கி யவருக்குக் கொடிய வேதனையைக் கொடுத்தது. உன் மீட்பர் உனக்காக இந்த அகோர வேதனையைச் சகிக்கச் சம்மதித்தார்.

மேலும் சிலுவையின் மரணம் மகா நிந்தையுள்ளது. உரோமருக்குள்ளே அடிமைகளையும் நீசரையுமேயொழிய மற்றவர்களைச் சிலுவையிலறையார்கள். பொல்லாத யூதரோ தங்கள் மேசியாவை அடிமையிலும் அடிமையைப்போலும், நீசனிலும் நீசனைப்போலும் எண்ணி அந்த மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார்கள். ஆத்துமாவே! உன் மீட்பர் இந்த நிந்தையை யெண்ணாமல் சிலுவையின் பாடுகளை யநுபவித்திறதைப் பார்!

மேலும் இந்தச் சிலுவையின் மரணத்தால் சம்பாதிக்கப்பட்ட அளவற்ற ஐசுவரியத்தைக் கவனி. அதிலே சிந்தப்பட்ட இரத்தம் உன்னை நரகத்தினின்றிழுத்து இரக்ஷிக்கத்தக்கது. உனக்கென்று மோக்ஷத்தை வாங்கும்படியாய்க் கொடுக்கப்பட்ட விலையுயர்ந்த கிரயம் அதுவே. எத்தியோப்பியாவின் இரத்தினங்களும் ஓப்பிரின் தங்கமும் அதற்கு நிகரில்லை. ஆ, என்னாத்துமாவே! நீ அழிந்துபோகிற வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படவில்லை. பாவமன்னிப்பு, தேவதயவு, ஆவியின் கிர்பைகள், கிர்பையின் உடன்படிக்கையினாலுண்டான நன்மைகள், நித்தியசீவன் இதுகளெல்லாம் வெள்ளியினாலும் பொன்னினாலுங் கொள்ளப்படாமல், தேவகுமாரனின் விலையுயர்ந்த இரத்தத்தினாலேயே கொள்ளப்பட்டது. அவருடைய நாமத்துக்கே துதியுந் தோத்திரமுமுண்டாவதாக. மேலும் அவர் சிலுவையிலடைந்த வெற்றியையுந் தியானி. அவர் ஒரு அடிமையைப்போல சிலுவையிற்றொங்கினவ

ராயிருந்தபோதிலும் கர்த்தத்துவங்களையும் வல்லமைகளையும் கொள்ளையிட்டார். அவர் சிலுவையிலிருக்கும்போதே சர்ப்பத்தின் தலையை நசுக்கிச் சாத்தானின் யுத்தாயுதங்களைப் பறித்து மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்து சிறையாக்கினவைகளைச் சிறையாக்கினார்.

ஆகையினாலே என்னாத்துமாவே! சிலுவையிலறையுண்ட உன் ஆண்டவனுக்கு நீ செலுத்தவேண்டிய கடமைகளையும் உன் மோக்ஷ பிரயாணத்தில் உனக்கிருக்குஞ் சிலாக்கியங்களையும் மோக்ஷத்தில் உனக்கிருக்கும் மகிமைகளையுந் தியானி. இப்போது உனக்கிருக்கிறவைகளும் இந்த ஜீவவிருக்ஷத்திலிருந்துண்டாகுங் கனிகளே. கிறிஸ்துவின் காயங்கள் உன் புண்களை யாற்றுகிறவைகள். அவருடைய அகோரப்பாடுகள் உன்னுடைய ஆறுதல் அவருடைய போராட்டம் உன்னுடைய ஜெயம். அவருடைய புலம்பல் உன்னுடைய பாட்டு. அவருடைய வேதனை உன்னுடைய இன்பம். அவருடைய நிந்தை உன்னுடைய மகிமை. அவருடைய மரணம் உன் ஜீவன். அவர் பட்ட பாடு உன் இரக்ஷிப்பு.

---

## The first translation of the Bible in Tamil.

## வேதாகமங்கள் தமிழ் பாஷையில் திருப்பப்பட்ட வரலாறு.

(தொடர்ச்சி.)

### ௧ம் சங்கீதம்.

ஆகாதவர்களுடைய ஆலோசனைக்குள்பட்டு நடக்காதவருமாய் பாவிகளுடைய வழியிலே நிலைநிற்காதவருமாய் சரசக்காறருடைய ஆசனத்தின்பேரிலே உருக்காந்திராதவருமாய் சருவேசுரனுடைய வேதத்தின்பேரிலே பிறியத்தை கொண்டிருந்து அத்தை இறவும் பகலும் தியானிக்கிறவருமாயிருக்கிற மனுஷன் பாக்கியமுள்ளவன் தானே (௧. ௨)

இப்படிக்கொத்தவன் ஆத்தண்டையிலே நாட்டப்பட்டதுவுமாய் தனதுகாலத்திலே காய்காய்க்கிறதுமாய் உலர்ந்துபோகாத இலைகளை கொண்டிருக்கிறதுவுமாய் இருக்கிற மரத்தைப்போலேயிருக்கிறானென்கிறதுமதவிர அவர் செய்கிறதெல்லாம் பாக்கியமுள்ளதாயிருக்கும் (௩)

ஆனால் ஆகாதவர்களுக்கு இப்படியிருக்கப்போறதில்லை ஆனாலோ அவர்கள் காத்தினாலே அடித்து பறந்துபோகப்பட்ட பதருக்குச் சாயலாயிருப்பார்கள். (௪)

ஆகையினாலே ஆகாதவர்கள் நடுச்சொல்லுகிற நாளிலே நிலைநிற்கமாட்டாமலும் பாவிகள் நீதியுள்ளவர்களுடைய சபையிலே உள்பிரவேசிக்கமாட்டாமலும் போவார்கள் (௫)



அதேதென்றால் சருவேசுரன் நீதியுள்ளவர்களுடைய வழியை அறிந்திருக்கிறார் ஆனால் ஆகாதவர்களுடைய வழியழிஞ்சுபோம். (௬)

### ௰௯ சங்கீதம்

தாவீதென்கிறவராலே உண்டாக்கப்பட்டதுவுமாய் மேளபாயக்கியங்களை சேவிக்கிற பேர்களுடைய தலைவனானவனுக்கு ஒப்புக்குடுக்கப்பட்டதுவுமாயிருக்கிற சங்கீதமாவது (௧)

வானங்கள் அளவில்லாத வல்லமையுள்ள சருவேசுரனுடைய மகிமையை எண்ணிக்கொள்ளும் விரிச்சிருக்கிற பரமண்டலம் அவர் தம்முடைய கையினாலே உண்டாக்கின கிறிகையை வெளிப்படுத்தும (௨)

ஒவ்வொரு நாள் மத்த நாளுடனே வார்த்தைகளைப்பேசும் ஒவ்வொரு ராத்திரி மத்த ராத்திரிக்கு அறிவைத் தோணப்பண்ணும (௩)

அதுகளுடைய சத்தம் கேள்க்கப்படாத ஸ்தலத்திலே பேச்சானும வார்த்தைகள என்கிலும அதுகளுக்கு உண்டாயிருக்கவில்லை (௪)

அதுகளுடைய நூல் சகல தேசங்களிலே பிறப்பட்டது அதுகளுடைய வார்த்தைகள் பூமியினுடைய எல்லைகள் எங்கும பரப்பிச்சுது அவர் அதுகளிலே சூரியனுக்கு கூடாரத்தை ஸ்தாபிச்சார (௫)

தன்னுடைய பள்ளியறையிலே நின்று பிறப்படுகிற மணவாளனைப்போல அது பிறப்படும. பெலனுள்ள பயணக்காரனைப்போல தன்னுடைய வழியிலே ஓடத்தக்கதாக அது சந்தோஷப்படும. (௬)

அது வானத்துடைய ஒரு திக்கிலே பிறப்பட்டு அதுக்கெதிராகயிருக்கிற திக்குமட்டும் சுத்திவரும். அதினுடைய உக்கிரத்துக்கு மூன்பாக ஒன்றுமொழிக்கூடாது (௭)

சருவேசுரனுடைய வேதம குறையற்றதுவுமாய் ஆத்துமத்துக்கு பெலன் குடுக்கிறதுவுமாய இருக்குது கர்த்தருடைய சாக்ஷி உண்மையுமாய புத்தியில்லாதவனுக்கு ஞானத்தைக் குடுக்கிறதுவுமாய இருக்குது (௮)

ஆண்டவருடைய கட்டளைகள் செம்மையானதுவுமாய் இருதயத்துக்கு சந்தோஷத்தை வருத்திவிக்கிறதுவுமாயிருக்கிறது. சருவேசுரனுடைய கற்பனையானது சுத்தமானதுவுமாய் கண்களை பிறகாசிக்கிறதுவுமாய் இருக்குது (௯)

சருவேசுரனுக்கு பயந்து நடக்குதல் சுத்தாங்கமுள்ளதுவுமாய் என்னென்னைக்கும் நிலைநிற்கிறதுவுமாயிருக்குது கர்த்தருடைய நீதிஞாயங்கள் மெய்யானதுவுமாய அதுகளெல்லாம நீதியுள்ளதுவுமாயிருக்குது (௰)

அதுகள் பொன்னையும அனேகம அபரஞ்சியையும பார்க்க ஆசைப்படப்படுகுது தேனையும தேன் சாரையும பார்க்க மதுரமுள்ளதாயிருக்குது (௰௧)

தேவரீருடைய ஊழியக்காறனாயிருக்கிற நான்தானும அதுகளினாலே புத்திசொல்லப்படுகிறேன் அதுகளை கைக்கொள்ளுகிறதினாலே பெரிய பலன் வரும (௰௨)

தன்னுடைய பிழைகளை அறிந்திருக்கிறவனார மறைக்கப்பட்ட பிழைகளிலேநின்று என்னை மீண்டருளும (௰௩)

அகங்காரத்தினுடைய பாவங்கள் என்பேரிலே ஆண்டுகொள்ளாதபடிக்கு உமது ஊழியக்காறனாயிருக்கிற என்னை விலக்கியருளும் அப்போ குறை அற்றவனுமாய பெரிய தோஷத்துக்கு உள்ப்படாதவனுமாய் இருப்பேன் (௪)

என்னுடைய கல்மலையுமாயென்னை ரெச்சிக்கிறவருமாயிருக்கிற க்ரு
வேசுரா என்னுடைய வாய பேசுகிற வாற்தைகளும என்னுடைய
இருதயம யோசிக்கிற யோசிபபும தேவரீருடைய திருமுகததுககு
முனபாக பிரியமுளளதாயிருககட்டும (யஞ)

இப்படி நாம் எடுத்துக்காட்டிய திருஷ்டாந்தங்களிலே சீகன்
பால்க், சூல்சு என்றவர்கள் செய்த முதல் மொழிபேர்ப்பு இத்
தன்மையுள்ளதென்று அறியலாம். பொருளைக் கவனிக்கும்போது
அது கர்த்தருடைய வசனத்தை செம்மையாய் விளங்கப்பண்ணுகி
றது. எழுத்துப் பிழைகளோ மிகுதி. இப்படியிருந்தும் இரட்சண்ய
வசனத்தைக் காட்டுகிற மொழிபேர்ப்பில் கண்ட எழுத்துப் பிழை
கள் என்ன! சூரியனிலே கண்ட கறை புள்ளிகள்போல் மாத்திரமல்
லவா! எழுத்துப் பிழைகள் பண்ணுகிற குற்றத்துக்கு பயப்படுகிற
தைப்பார்க்கிலும், எழுத்துப் பிழைகளைக்கண்டு சத்துருக்கள் பண்
ணும் கேலி பரியாசத்துக்கும் பயப்படுகிறதைப்பார்க்கிலும் கர்த்தரு
டைய நல்வசனத்தை தமிழ்ப்பாஷையில் திருப்பாமல் போகிற குற்
றத்துக்கே சீகன்பால்க் அதிகமாய்ப் பயந்து நடப்பித்தது நமக்கு
பாக்கியமல்லவா? வேதாகமங்களை மறைக்கிற பாவத்துக்கு பயந்து
சீகன்பால்க், சூல்சு என்ற மகாத்துமாக்கள் வேறொன்றுக்கும் பய
ப்படவில்லை.

அனேகம் பதங்களை எபிரேயு, கிரேக்கு பாஷைகளிலிருந்து திருப்
பாமல் வைத்துவிட்டது குற்றமாகக் காண்கிறது. அப்படியிருந்த்
தமிழ்த் திருப்ப மகா அரிதாயிருக்கிற ஒரு வார்த்தை அவர்கள் திரு
ப்பினது சற்று ஆச்சரியமாயிருக்கிறது. சங்கீதப் புஸ்தகத்தில் எழு
பத்தொரு தரம் கண்டிருக்கிற "சேலா" என்ற பதம் வேதாகமங்க
ளில் திருப்பாமல் விட்டிருக்கிறது. சூல்சு என்பவரோ அதை எப்
போதும் "நில்லு" என்று திருப்பிவைத்தார். வாசிப்பிலே அந்த
வார்த்தை ஒரு விதமாய் கேட்குமல்லவா! சீகன்பால்கு மூலப்பா
ஷைக்குச் சரியாய் திருப்பவேண்டுமென்று கவனமாய்ப் பார்த்த
போதிலும் அவர் எப்பொழுதும் எழுத்தின்படி திருப்பாமல் சில
வேளை கருத்தின்படி மாத்திரம் திருப்பினார் என்பதற்கு அநேக திரு
ஷ்டாந்தங்கள் உண்டு. எண்ணாகமம் ௩௨ அதி. வாக்கியத்தில் என்று
இப்போது கண்டிருக்கிற வாக்கியம் எழுத்திலும் கருத்திலும் மூல
த்திற்கு ஏறக்குறைய சரியாயிருக்கிறது. ஆகிலும் அதின் கருத்து
அதிக சுளிவாய் விளங்கும்படி அதின் எழுத்துக்கு சற்று வழுவாய்
சீகன்பால்க் "உங்களுடைய பாவம் உங்களுக்குத் தக்க ஆக்கினை
வருவித்துக்கொள்ளும்" என்று திருப்பினார். அப்படியே அந்த இலை
களைப் பார்க்கிலும் வாழை இலைகள் சனங்களுக்குள்ளே பிரயோக
மாயிருக்கிறதென்று எண்ணி சீகன்பால்கு ஆதியாகமம் ௩ அதி. வா
க்கியத்தில் நம்முடைய ஆதித் தாய் தகப்பன்மார் "வாழையிலைகளை
தைத்து தங்களுக்கு கச்சைகளை உண்டுபண்ணினார்கள்" என்று
சற்று பிசகாய்த் திருப்பினார். அப்படியே நீதிமொழி புஸ்தகம் 6.
26 ல் அப்பம் என்கிற வார்த்தை "கஞ்சிமுதலாய்" என்பதாகத் திருப்
பினார்.



# Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** ருஷிய, ஔஸ்திரிய, ஜர்மானிய சக்கரவர்த்திகள்
பெர்லின் நகரத்தில் போனமீ 8உ சங்கங்கூடவிருந்தார்கள். அவர்
களும் அவர்கள் மந்திரிமாருந்தவிர வேறொருவரும் அந்தக் கூட்டத்
தில் சேரார். அவர்கள் ஆலோசனை இரகசியமானது. ஆயினும் அதின்
மர்மம் இனி வெளிப்படலாம். ஜினேவாப் பட்டினத்தில் கூடிய
அங்கிலோ, அமேரிக்க மத்தியஸ்தர் சபை கலைந்தது. கூடிய சபை
யார் செய்த தீர்மானம் அமேரிக்காவிலும் இங்கிலாந்திலுமுள்ள தே
சாபிமானிகள் பலருக்கும் சந்தோஷகரமானதே. அமேரிக்கருக்கும்
அங்கிலேயருக்கும் பிணக்குண்டாகும்படி ஹேதுகரமாயிருந்த அவ்வி
ஷயம் இவ்வாறு திர்ப்திகரமாய் முடிந்தது அவ்விரு தேசத்தாருக்கு
மாத்திரமல்ல, கேட்கும் யாவருக்கும் மனச் சந்தோஷத்தையுண்டாக்
கத்தக்கதென்று சொல்லவேண்டுமோ. ஸ்வேதன் தேசத்தரசனாகிய
சூார்ல்ஸ் என்பவர் தேகவியோகமானார். ஸ்வேதன் அரசகுமாரன்
அவருக்குப் பதிலாக சிம்மாசனமேற உத்தரவு பெற்றார்.

**அபிசினியா.** எகிப்திய பாத்ஷா அபிஸினிய எல்லையைச் சேர்
ந்த தமது பிரதேசத்தில் பூரண சன்னத்தராய் இரண்டாயிரம் போர்
ச்சேவகரை அனுப்பினார். பாத்ஷாவின் அபிப்பிராயமின்னதென்று
தெரியவில்லை. அவர் தங்கள் தேசத்தின் மீது படையெடுக்கப்பார்க்
கிறாரென்றெண்ணி, அபிஸினியர் தங்களைக் காப்பாற்றும்படி ஐரோப்
பிய துரைத்தனத்தாரை வேண்டிக்கொள்ளுகிறார்கள். அவ்வாறே
அவ்விருவருக்குமுள்ள பிணக்கை நீக்கிச் சமாதானப்படுத்தும்படி
மத்தியஸ்தம் செய்ய ஐரோப்பிய துரைத்தனத்தார் கருதுகிறார்கள்.

**அமேரிக்க** தேசத்தைச் சேர்ந்த ஸ்டன்லி துரை மிக உற்சா
கம் காட்டி, காணமற்போன டாக்டர் லிவிங்ஸ்டன் துரையைப் போய்
த்தேடிக் கண்டுபிடித்ததற்கு சின்னமாய், மஹா ராஜாத்தியவர்கள்
அவருக்கு இரத்தினமிழைத்த சிமிள் ஒன்று கொடுத்தார்கள்.

**உரோமா**புரியைச் சேர்ந்த நகர், நாட்டுப் பிரஜைகள் மியுனிசி
பல் கமிஷனர்களைத் தெரிந்து ஏற்படுத்தினார்கள். பாப்பானவரின்
பக்ஷத்தார் தங்களாற் கூடியமட்டும் உரோமா சபைக்குரிய பக்ஷத்
தாரை நியமிக்கும்படி பிரயத்தனம்பண்ணினார்கள். அப்படிச் செய்
தும், தெரிந்து ஏற்படுத்தப்பட்டவர்கள் இத்தாலியாவின் சுயாதீன
பக்ஷத்தார். விகிதம் பார்க்கையில், உரோமா சபைக்குரிய பக்ஷத்
தார் இருபத்துநான்கு பெயருக்கு ஒருவர்.

**இந்தியா.** ஹிமாலயத்தைச் சேர்ந்த மலைநாடுகள் மிகவும் விஸ்
தாரமும் அவற்றின் பிரதேசங்கள் பயிரிடுவதற்கு ஏற்றதுமாயிருப்ப
துமன்றி, மேல் கீழ் இடையிலுள்ள நாடுகளிலும் சீதளோஷ்ணம்
சமமாயிருப்பதால் எத்தேசத்தவரும் அங்கே சுகமாய் வாசஞ்செய்
யலாமென்பதுபற்றி, இந்தியாவினின்று இங்கிலாந்துக்கு திரும்பப்
போகவிருக்கும் அங்கிலேய போர்ச்சேவகர் முதலியோரை இனி அங்
கே குடியேற்றலாமென்று யோசித்து, இது விஷயத்தைப்பற்றி வே
ண்டிய ஏற்பாடுகளைச் செய்யத்தக்கதாக வட இந்தியாவில் சங்கம்
ஒன்று நியமிக்கப்படுமாம்,

அக்றோபர்மீ நாள் 31. புரட்டாசிமீ 17௳முதல், ஐப்பசிமீ 17௳வரை.

| வாரம் | ஆங்கி. தேதி | தமிழ் தேதி | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | கஎ | நானே கர்த்தர் என்று எகிப்தியர் அறிவார்கள். யாத். 7: 5. |
| பு | 2 | கஅ | கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி செய்தார்கள். 10. |
| வி | 3 | கசு | எனக்கு ஆராதனைசெய்ய என் சனங்களை யனுப்பிவிடு. 8: 1. |
| வெ | 4 | உ0 | கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள். 8. (19. |
| ச | 5 | உக | கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பைச் செய்தான். 1 இரா. 16: |
| ஞா | 6 | உஉ | தனக்கு முன்னிருந்த எல்லாரிலும் கேடாய் நடந்தான். 25. |
| தி | 7 | உ௩ | உன்னைப்போஷிக்க காகங்களுக்குக் கட்டளையிடுவேன். 17: 4. (18. |
| செ | 8 | உச | என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவா என்னிடத்தில் வந்தீர். |
| பு | 9 | உரு | நானோ சிறுமையும் துயரமுமுள்ளவன். சங்கீதம் 69: 29. |
| வி | 10 | உசு | உம்முடைய இரட்சிப்பு எனக்கு உயர்ந்த அடைக்கலம். 29. |
| வெ | 11 | உஎ | தேவனைத் தேடுகிறவர்களின் இருதயம் வாழும். 32. |
| ச | 12 | உஅ | கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். 33. |
| ஞா | 13 | உகூ | தேவன் சீயோனை இரட்சிப்பார். 35. |
| தி | 14 | கூ0 | தேவனே என்னை விடுவியும். 70: 1. |
| செ | 15 | ௧ | எனக்குச் சகாயஞ் செய்யத் தீவிரியும். 1. |
| பு | 16 | உ | உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும்? பிரசங்கி. 7: 16. |
| வி | 17 | ௩ | மிஞ்சின துஷ்டனுமாயிராதே, அதிக பேதமையுமாயிராதே. 17. |
| வெ | 18 | ச | ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும். 19. |
| ச | 19 | ரு | நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை. 20. |
| ஞா | 20 | சு | தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். 29. |
| தி | 21 | எ | நானே கர்த்தர், வேறொருவர் இல்லை. ஏசாயா 45: 18. |
| செ | 22 | அ | நான் யதார்த்தமானவைகளை அறிவிக்கிற கர்த்தர். 19. |
| பு | 23 | கூ | முழங்கால் யாவும் எனக்குமுன்பாக முடங்கும். 23. |
| வி | 24 | க0 | நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும். 23. |
| வெ | 25 | கக | அவர்களுடைய அக்கிரமத்தை அவர் நினைப்பார். ஓசியா 9: 9. |
| ச | 26 | கஉ | அவர்களுடைய பாவங்களை விசாரிப்பார். 9. |
| ஞா | 27 | க௩ | நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். யோவான் 6: 54. |
| தி | 28 | கச | என் மாம்சம் மெய்யாகவே போசனமாயிருக்கிறது. 55. |
| செ | 29 | கரு | விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். உரோமர் 1: 17. |
| பு | 30 | கசு | தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. 18. |
| வி | 31 | கஎ | அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. 20. |

## விசேஷித்த நாட்கள்.

2. அமாவாசை.
6. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் பத்தொன்பதாம் ஞாயிறு.
13. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் இருபதாம் ஞாயிறு.
16. பௌரணமி.
20. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் இருபத்தோராம் ஞாயிறு.
27. திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் இருபத்திரண்டாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 24. November. No. 11.

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... ... 202
The Parables of Christ. ... ... ... ... ... ... 204
Christian Church History. ... ... ... ... ... ... 207
On the Liturgy. ... ... ... ... ... ... ... ... 209
Notes on Genesis. ... ... ... ... ... ... ... 210
A Family Commentary on the Sermon on the Mount. ... 213
Communicant's Companion. ... ... ... ... ... 215
The first translation of the Bible in Tamil. ... ... ... 217
Summary of News. ... ... ... ... ... ... ... 218


**அட்டவணை:**


பாலபோதனை. ... ... ... ... ... ... ... உ0உ
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... உ0ச
கிறிஸ்து சபை சரித்திரம்.... ... ... ... ... உ0எ
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ... உ0கூ
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... உக0
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... உக௩
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... ... உகரு
வேதாகமங்கள் தமிழ் பாஷையில் திருப்பப்பட்ட வரலாறு. உகஎ
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... உகஅ



**Palamcottah;**

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,

BY L. DEVANAYAGAM PILLAY.

1872.


600 008.

# நற்போதகம்.

௰௧. நவம்பர் மீ. ௲அ௱உ௰ரு.

## Bible Sketches and their Teachings.

### பாலபோதனை.

#### பிலேயாம்.

4 மோசே 22. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

மேலும் பிலேயாமின் வீண் ஆசையைக்கொண்டும் வேறொரு படிப்பினையைக் கற்றுக்கொள்ளலாம். அவன் முதலாவது கூறின ஆசீர்வாதம் முடிகிற விதத்தைப் பாருங்கள். "நான் நீதிமானின் மரணமாய் மரித்து, என் கடைசி முடிவு அவனுடைய முடிவுக்கு ஒப்பாயிருப்பதாக." எவ்வளவு சிறப்பான சொற்கள்! அந்தச் சொற்களை நாமும் சொல்லக் கற்றுக்கொண்டால் நன்றுதான். மெய்க்கிறிஸ்தவனுடைய மரணப்படுக்கையைப் பார்த்து, ஆத்தும கவலை எவ்வளவேனுமில்லாத அசட்டைக்காரர் அநேகர் சிந்தனையும் செபபுத்தியுமுள்ளவர்களாகப் பலமுறையும் ஏவப்பட்டதுண்டு. உலகத்திலுள்ள தொல்லையையுஞ் சங்கடங்களையும் விட்டு மோட்ச வீட்டுக்குப்போக யார்தான் விரும்பார்கள்? இதை வாசிக்கிறவர்களில் ஒருவரும் மரணநாள் வரும்பொழுது சுகமாய் இயேசுவுக்குள் நித்திரையடையவேண்டுமென்று ஆசைப்படாதிரார்கள். மறுமையைக்குறித்து பிலேயாமுக்கு இவ்வளவு அறிவிருந்தது என்று சொல்ல ஏதுவில்லை. கடைசியில தேவனுடைய பிள்ளைகளோடிருக்க விரும்பினானென்பது நிச்சயம். இப்பொழுதோ அவர்களோடிருக்க அவனுக்கு விருப்பமில்லை. அவர்களைப் போல நடக்க அவனுக்குப் பிரியமுமில்லை. இப்பொழுது "அவன் அநியாயத்தின் கூலியை விரும்புகிறான்." தன்னால் கூடியவரையில் தனக்கும் பாவத்துக்கும் ஊழியஞ்செய்கிறான். மரணநேரம் வரும்போது வேறு மனுஷனாய்க் காணப்படுவேனென்றும் நினைத்துக்கொள்ளுகிறான். எவ்வளவு பயங்கரமான தப்பிதம் இது! என்றாலும் இப்படிப்பட்ட தப்பிதஞ்செய்கிறவர்கள் எத்தனையோ பேர்கள்! "என் அருமைத் தாயார் சமாதானமாயும் அடைக்கலமாயும் மரித்தாளே. எவ்வளவும் சந்தேகமும் பயமுமில்லாமல் நாங்கள் அவளைப் பார்த்து அழுதுகொண்டு நிற்க சந்தோஷமாய் நித்திரையடைந்தாளே, நானும் அவளைப் போல மரிப்பேனாக" என்று ஒருவன் சொல்லுகிறான். "மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே என்று வெற்றிப்பாட்டைப் பாடுகிறவனாக என் சகோதரன் மரித்தானே அவனைப்போல நானும் மரிக்க விரும்புகிறேன்" என்று வேறொருவன் சொல்லுகிறான். நல்லது உன தாயாரைப்போல, உன் சகோதரனைப்போல நீ நடக்கிறாயா? இப்பொழுது பாவத்தைச் சேவித்துக் கடைசியில் கிறிஸ்துநாதரை யடையத் தேடுகிறார்கள். பிலேயாம் இந்த நல்ல காரியத்தை



எவ்வளவோ ஆவலாய் விரும்பியும் தேவனுடைய சத்துருக்களோடு நின்று யுத்தஞ்செய்கிறவனாக மரித்தானே. மனிதருக்குள் அவன் மகா விபரீதமுள்ளவன தான. என்றாலும் லட்சாதிலட்சம் பேர் அவன் அடிகளில் நடக்கிறதில்லையா? ஆகையால் பிரியமானவர்களே, கிறிஸ்தவனைப்போல மரிக்கவேண்டுமானால் கிறிஸ்தவனைப்போல நடக்கவேண்டுமென்பதையும், நம்மில் யாராவது இப்பொழுது பாவத்துக்கும் உலகத்துக்கும் ஊழியஞ்செய்யவும் கடைசியில் மோட்சத்திற் பிரவேசிக்கவும் நம்பலாகாது என்பதையும் ஒருக்காலும் மறந்துவிடாதிருங்கள்.

#### மோசேயின் மரணம்.

உபாகமம் 32 : 48—52 ; 34. அதி.

ஒருநாள் விருத்தாப்பியன் ஒருவன் குடியிருந்த குடிசைக்குப்போயிருந்தேன். மேற்படி விருத்தாப்பியன் மரணப் படுக்கையிலிருந்தான். அவனுடைய முகம் வாடி வதங்கி வெளிறியிருந்தது. அவன் பேசின சத்தம் மிகவும் தணிந்துபோனபடியால் கேட்கிறதற்கு அரிதாயிருந்தது. இரண்டொரு தினத்துக்குள், அவன் சிநேகிதர் அவனைக் காணக்கூடாதபடிக்கு அவர்களை விட்டு ஏகிப்போவானென்று நினைக்கத்தக்கதாகவுமிருந்தது. இப்படியெல்லாம் அவனைப்பார்க்கப் பரிதாபமாயிருந்தபோதிலும், அவ்விருத்தாப்பியனோ சந்தோஷமாயிருந்தான். இயேசுவை அவன் சிநேகித்து, அவரிடத்தில் நம்பிக்கை வைத்தவன். மேலான நல்ல தேசத்துக்குப் போகிறேன் என்ற நிச்சயமும் அவனுக்குக் கிடைத்திருந்தது. பலட்சயமாய் அவன் படுத்திருக்கையில் அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்த வேறொரு காரியமுமுண்டு. அதென்னவென்றால், தனக்குப் பிரியமானவர்களும் தன்னை உண்மையாய் நேசித்தவர்களுமான அநேகர் தன்னைச் சுற்றிநின்றதுதான். புருஷரும் ஸ்திரீகளுமான அவன் பிள்ளைகள் அவன் படுக்கையருகே விழித்திருந்து அவனுக்குவேண்டிய உதவி ஒத்தாசைகள் செய்து அவனை ஆறுதற்படுத்தி மோட்ச இன்பங்களைக்குறித்து அவனோடு பேசிக்கொண்டிருந்தார்கள். அவனுடைய பேரப்பிள்ளைகளும் அவனுக்கு உதவிசெய்யவிரும்பி, அவன் பக்கத்திலே உட்கார்ந்திருந்து, அவனுக்குத் தண்ணீரோ, ஆகாரமோ ஏதேது தேவையோ அதையெல்லாம் கொண்டுவந்து கொடுத்து, அவன் கேட்கப் பிரியப்படும்பொழுதெல்லாம் வேதாகமத்திலும் ஞானகீர்த்தனைகளிலும் அவனுக்கு வாசித்துக்கொண்டிருந்தார்கள். அவ்விருத்தாப்பியன் அவர்களைப் பார்த்து, என் பிள்ளைகளே உங்களெல்லாருக்காகவும் நான் தேவனைத் துதிக்கிறதுமல்லாமல், விசேஷமாய் இப்பொழுது நீங்கள் என்னண்டையிலிருக்க அருள்பெற்றதற்காகவும் அவரை மிகுந்தும் ஸ்தோத்திரிக்கிறேனென்று அடிக்கடி சொல்லுவான். அவன் மரணமடைந்தபோது அவர்களெல்லாரும் அந்த அறையிற் கூடியிருந்தார்கள். அவன் பேசக்கூடாவிட்டாலும், அவன் கண் அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வைக்கப்பட்டு அவர்களுடைய அன்பின் அத்தாட்சிகளைப்பார்த்து உணருகிறதுபோல காணப்பட்டது. அவன் சீவித்துப்போனபிறகு அவர்கள் ஒருவரையொருவர் ஆறுதற்படுத்திக்கொண்டு, திரும்பவும் அவன் கல்லறையருகில் வரிசையாய் நின்றார்கள். அவர்கள் அருகிலிருந்தது அவனுக்கு எவ்வளவு ஆறுதலாயிருந்ததோ அவர்களுக்கும் அவ்வளவு ஆறுதலாக

வேயிருந்தது. பிற்காலத்தில் "பாட்டனுரை" அவர்கள் நினைத்தபொ
ழுதெல்லாம் அவன் பட்சத்தோடும் துக்கத்தோடும் தங்களையனுப்பிக்
கொண்டு மறுமைக்குட்பட்ட சமயத்தை ஞாபகப்படுத்திச் சந்தோ
ஷப்படுவார்கள்.

மோசே என்பவன் யாரும் கூட இராதபடிக்கு ஒண்டியாய் மரிக்க
வேண்டுமென்று அறிந்தபோது மிகுந்தும் துக்கப்பட்டிருப்பானென்
று நினைப்போமே. அவன் விருத்தாப்பியனுயிருந்தான். அவனுடைய
உத்தம சிநேகிதர்களும் பெந்துக்களுமெல்லாம் மரித்துப்போனுர்கள்.
அநேக வருஷத்துக்குமுன் அவன் நாணற்பெட்டியிலே படுத்து ஆற்றி
லே போடப்பட்டசமயத்தில் அவனைக் காத்துக்கொண்டிருந்த மீரி
யாம் என்பவள் கல்லறைக்குப் போய்விட்டாள். அவன் சகோதரனுகி
ய ஆரோனும் சிறிதுகாலத்துக்குள் ஓர் என்ற மலையில் ஜீவித்துப்போ
னுன். நாற்பதுவருஷத்துக்குமுன் அவன் எகிப்து தேசத்திலிருந்து
மீட்டுக் கொண்டுவந்தவர்களில் இரண்டுபேர் தவிர மற்றயாவரும்
போய் விட்டார்கள். "ஆ! இந்தப் புதிய முகங்களைப் பார்க்க எவ்வளவு
விகாரமாயிருக்கிறது" என்று எத்தனையோ விசை சொல்லியிருப்
பான். ஆகிலும் அந்தச் சனங்கள் அவனை நேசித்துக் கனம்பண்ணித்
தியிருப்பார்கள். இப்பேர்ப்பட்ட தலைவனும் போதகனும் அவர்களுக்
குக் கிடைத்திருந்தது மகா பெரிய சலாக்கியமல்லவா! தேவனுடைய
திருவாக்குகளை அடிக்கடி அவர்களுக்குச் சொல்லிவந்தானே. கடை
சிவரையும் அவர்கள் அவனுேடிருக்க விரும்பாதிரார்கள். என்றாலும்
அவன் மரிக்கும்படி குறிக்கப்பட்ட தினம் வந்தபொழுது, அவன்
அவர்களெல்லாரையும் விட்டுப் பிரிந்து உயர்ந்த மலைமீதுப்போய்
ஒண்டியாய்த் தன கண்களைமூடி படுத்துக்கொள்ளவேண்டியிருந்தது.
மோசே இஸ்ரவேல் சனங்களைவிட்டுப் புறப்பட்டு நிமிர்ந்த முகத்தோ
டும் உறுதியான நடையாயும் திரும்பிப்பாராமல் மலையிலேறிப்போ
கிறதை எண்ணிறந்த சனங்கள் பள்ளத்தாக்கிலேகூடி. துயரத்தோ
டு பார்த்துக்கொண்டு நிற்கிறதுப்போல காணப்படுகிறது. சனத்தை
விட்டு அவன் போனபிறகு தேவதூதர்கள் அவனுக்கு எதிர்ப்பட்டு
அவனைக் கூட்டிக்கொண்டுபோயிருப்பார்களோ! இது நமக்குத் தெரி
யாவிட்டாலும் ஒன்று நிச்சயமாயறிவோம். தேவன் அவனோடிருந்து
அவனை ஆறுதற்படுத்தி, அவனுடைய ஆவியை தம்மண்டைக்கு எடுத்
துக்கொண்டாரென்பதற்குச் சந்தேகமில்லை.

---

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XI-வது. கெட்ட தோட்டக்காரரைக்குறித்து.

மத்தேயு 21: 33, 44. மாற்கு 12: 1—12. லூக்கா 20. 9—18.

இந்த வீட்டெசமான் திராட்சத்தோட்டத்துக்குச் சொந்தக்காரன்
மாத்திரமல்ல அதை உண்டாக்கினவன். 2 யோ. 15: 17. யூத சபை
யாகிய திராட்சத்தோட்டமோ, மோசே, யோசுவாவென்பவர்களால்
கானன்தேசத்தில் நாட்டப்பட்டது. 5மோ. 32 : 12—14. எசேக். 16 :
9—14. செக்கரி. 9 : 23—25. வரையில், அதைச் சுற்றிலும் வேலியடை
த்து, அங்கொரு திராட்சதொட்டியை உண்டுபண்ணி, கோபுரத்தை
யும் கட்டி என்றிருக்கிறதே. இதில் ஒவ்வொன்றையும் வெவ்வேறு அர்



த்தப்படுத்தவேண்டியதோ, அல்லது பத்திக்கேற்ற சகலகிருபையின்
எத்தனங்களையும் பொதுவாய்க்குறிக்கிறதோ என்று சற்றே யோசிக்க
லாம். இந்தக்கிருபையின் எத்தனங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சன
ங்களுக்கு பரிபூரணமாய்க் கிடைக்கிறது. தேவன் தம்முடைய சபை
யை எவ்வளவோ கரிசனையாய்ப் பாதுகாத்துவருகிறுர். நாம் நமது திரா
ட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச்
செய்யலாம் என்கிறுர். ஏசா. 5:4. மற்றதுகளைக்குறித்து நாம் வேறெ
ன்னவிதமாய் அர்த்தம்பண்ணினுலும், எபேசியர் 2 : 14 ல் யூதருக்கும்
புறச்சாதியாருக்கும் நடுவே பிரிவினையாகிய நடுச்சுவர் என்று நியாயப்
பிரமாணத்தைக்குறித்துச் சொல்லியிருப்பதால் வேலியடைத்து என்கி
றதற்கு பிரத்தியேகமான பொருளிருக்கவேண்டும். யூதர்கள் நியாயப்
பிரமாணத்தைப் பெற்றவர்களானபடியால் தனியே வாசம்பண்ணி மற்
றச்சாதிகளோடு கலவாமலிருந்தார்கள். 4மோசே 23 : 9. நியாயப்பிர
மாணமானது அவர்களைப் பிரிக்கிறதற்கு மாத்திரமல்ல, தற்காக்கவும்
ஏதுவான வேலிபோலிருந்தது. விக்கிரகாராதனைக்காரராகிய மற்றச்
சாதிகளோடு கலவாமல் தனிப்பட இருந்தபடியால் தான் தேவபாது
காப்பை அவர்கள் அனுபவித்து வந்தார்கள். இது அக்கினிமதில் என்
றழைக்கப்பட்டிருக்கிறது. சகரியா 2: 5. சங்கீதம் 125: 2. ஏசாயா 26 :
1. 27 : 3. யூதேயா தேசத்தைப் பார்த்தாலும் எப்பக்கத்திலும் அதை
காக்கிறதற்கான வேலிகள் அதைச் சுற்றியிருந்ததாகத் தெரியவரும்.
கிழக்கே யோர்தான் நதி, 2 கடல்கள். தெற்கே வனாந்தரம் மலைதே
சமாகிய இதுமேயா. மேற்கே கடல். வடக்கே லெபனோன்மலை. தனி
மையாய் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலுக்கு இவ்வளவு ஆதரவிருக்க
வேண்டுமென்று கர்த்தர் தீர்மானித்திருந்தாரென்று ஒருவர் நன்றாய்ச்
சொல்லுகிறுர்.

திராட்சதோட்டத்துக்கு ரசத்தொட்டியும் கோபுரமும் அவசியந்தா
ன். கோபுரம் ஒரு அலங்காரமான கட்டிடமாகமாத்திரமல்ல, பிரயோ
சனமான இடமாயுமிருந்தது. காவற்காரர் அவசியமானவேளைகளில்
அதில் தங்குவார்கள். திராட்சப்பழங்களையும் வைக்கிறதற்கு அது ஏற்
ற இடமாயிருந்தது. அதினுல்தான் இங்கே சொல்லியிருக்கிறது. இது
களின் ஞானக்கருத்தை விவரித்துச்சொல்வது லேசல்ல. தொகுத்துச்
சொல்லவேணுமானுல் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய சகலத்
தையும் தேவன் நமக்குத் தமது ஆசீர்வாதங்களாகிய வாய்க்கால்கள்
மூலமாய் அனுப்புகிறதை இது குறிக்கும். இதைவிட அதிகஞ் சொல்
லுகிறது அத்தனை பிரயோசனமாயிராது.

இங்கே சொல்லியிராத இரண்டு காரியங்கள் ஏசாயாவில் கண்டிருக்
கிறது. திராட்சத்தோட்டம் ஒருமலையின்மேல் இருந்ததென்றும் கல்
லுகள் பொறுக்கப்பட்டதென்றும் சொல்லியிருக்கிறது. பிந்தினது தம
து சொந்தச்சனங்களுக்கு இடையூறுண்டாகாதபடி காணியரைத் து
ரத்தினதைக்குறிக்கும். 2 இரா. 3 : 19. சங். 125 : 3. எசேக்கி. 16 அதி.

இப்படித்திராட்சத்தோட்டத்துக்கு அவசியமானதெல்லாஞ்செய்த
பிறகு தோட்டக்காரருக்குக் அதை குத்தகையாக விட்டாலும். அவர்
களோடு இன்னவித உடன்படிக்கை செய்தானென்று சொல்லவில்லை.
கனிகாலத்தில் அனுப்பவேண்டியது இவ்வளவென்று ஒரு ஏற்பாடு
செய்திருப்பான். தோட்டக்காரரும் திராட்சத்தோட்டமும் வெவ்வே
றானதால் தோட்டக்காரர் என்கிற வார்த்தை சுவிசேஷபோதகன்மா
ரைக்குறிக்கும். திராட்சத்தோட்டமானது சனங்களைக் குறிக்கும்.
இவர்கள் தான் போதனையடைய வேண்டியவர்கள். அவர்களுடைய

போதனையினுலும் பராமரிப்பினுலும் நீதியின் கனிகளைக்கொடுக்கத்தக்
கவர்கள் ஆவார்கள். திராட்சதோட்டம் நியாயப்பிரமாண காலத்தில்
ஆசாரியர்கள் லேவியர்கள் முதலானவர்களுக்கு விடப்பட்டது. மல்கி
2 : 7. எசே. 34 : 2. குத்தகையாகவிட்டு அாதேசத்துக்குப் போயிருந்
தான். நெடுநாளாய்ப் போயிருந்தானென்று லூக்கா சொல்லுகிறார்.
சீனுய் மலையில் தேவாளுகை ஏற்பட்டபோது எகிப்திலிருந்து புறப்
பட்டு வரும்போது நடந்த அற்புதங்களால் தேவன் தம்மை இஸ்ரவேலு
க்கு வெளிப்படுத்தினர். பிறகு முகமுகமாய் அவர்களோடு பேசாமல்,
நியாயப்பிரமாணஞ் செய்யக்கூடியதினுலும், அக்காலத்து ஆசாரிய
மேய்ப்பர்களுடைய போதனையினுலும் என்னவிசக் கனிகளை கொடுப்
பார்களென்று அதிகப் பொறுமையோடே காத்திருந்தார். கனிகாலம்
சமீபித்தபோது அந்த கனிகளை வாங்கிக்கொள்ளும்படி தன் ஊழி
யக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினன். இந்த ஊழியக்
காரர் அந்தத் தோட்டக்காரரிடத்திலிருந்து வித்தியாசப்படுத்துவ
தெப்படி? இந்த ஊழியக்காரர் தீர்க்கதரிசிகள், மற்ற மேலான தேவ
பணிவிடைக்காரரைக் குறிக்கும். இவர்கள் விசேஷித்த காலத்தில்
தோன்றினவர்கள். விசேஷித்த அதிகாரமும் இவர்களுக்குக் கொடுக்
கப்பட்டிருந்தது. அவர்களோ சாதாரண தேவ பணிவிடைக்காரர்.
ஒழுங்கின்படி ஏற்படுத்தப்பட்டு அலுவல் பார்த்துவந்தவர்கள். ஊழியக்
காரர் கனிகளை வாங்கும்படி அனுப்பப்பட்டவர்கள் அதாவது, முதலா
ளிக்குச் செல்லவேண்டிய பங்கை வாங்கவந்தவர்கள். இந்தப் பங்கு
ரொக்கமாயல்ல, பலனை இருந்தது. இந்தக் கனிகள் விசேஷித்த சுற்
கிரியைகளைக் குறியாமல் உள்ளான மெய்த்தேவபத்தியையும் மெய்மன
ஸ்தாபத்தையுங் குறிக்கும். நியாயப்பிரமாணத்தினுல் இதுகளுண்டாகா
து. சன்மார்க்கத்தை நியாயப்பிரமாணத்தினுலுண்டாகாதென்று
நான் சொல்லவில்லை. அகோரமான அக்கிரமங்களை அது நீக்கும்.
மறைந்துகிடக்கும் அருவருப்புகளை அது வெளியாக்கும். நியாயப்பிர
மாணத்தின் கீழிருக்கும்போதும் நியாயப்பிரமாணத்தினுலுண்டாகும்
நீதி ஒரு நீதிதான். இது நகுந்ததாயிருக்க இரட்சிப்பு அவசியம் என்கி
ற உணர்ச்சி அதின் அஸ்திபாரமாயிருக்கவேண்டும். இதுகளைத் தேடித்
தான் இந்த ஊழியக்காரர் வருகிறார்கள், இதோடுதான் வரப்போகிற
மீட்பரைக்குறித்த வாக்குத்தத்தங்களைச் சேர்க்கிறார்கள். தங்களுடை
ய நிலைமையைக்காத்துக்கொள்ளாத உண்மையற்ற தோட்டக்காரரோ
செல்லவேண்டியதை மறுத்துக் கிருபையின் தூதர்களைக் கொன்றார்
கள். இந்தப்பொல்லாத தோட்டக்காரர் ஊழியக்காரருக்குச் செய்த
அக்கிரமத்தை முதல் சுவிசேஷத்தில் கண்டிருக்கிறதைவிட இரண்டா
ம் மூன்றாம் சுவிசேஷங்களில் அதிக விபரமாய்க் காணலாம். லூக்கா
உடனே தெண்டனையில்லாததினுல் அவர்கள் அக்கிரமம் வரவர வளர்
ந்து வந்ததைக் கிரமமாய்ச் சொல்லியிருக்கிறார். முதலாவது வந்தவ
னை அடித்து வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள். பிறகு வந்தவனை
அவமானப்படுத்தினர்கள். எப்படிப்பட்ட அவமானமென்று மாற்கு
சொல்லுகிறார். அவன்மேல் கல்லெறிந்து தலையிலே காயப்படுத்தி அவ
மானம்பண்ணி அனுப்பிவிட்டார்கள். மூலபாஷையின் கருத்தின்படி
இங்கே சொல்லியிராத இன்னுஞ் சில அவமானங்களை நடப்பித்து எச
மானை அசட்டைசெய்ததாகத் தோன்றுகிறது. ஆனோன் என்பவன்
தாவீதின் ஊழியக்காரருக்குச் செய்ததாகச் சொல்லியிருக்கிறதைப்
போலொத்த அவமானம். அவர்களைப் பிடித்து ஒருபக்கத்துத் தாடி
யைச்சிரைத்து, அவர்களுடைய சட்டைகளில் அவர்கள் இருப்பிடமட்



டும் இருந்த பாதியைக் கத்தரித்துப்போட்டு அவர்களை அனுப்பிவிட்
டான். 2சாமு. 10: 4. மூன்றாவது வந்தவனை காயப்படுத்தி குற்றுயிராய்
திராட்சத்தோட்டத்துக்கு வெளியே எறிந்துவிட்டார்கள். முதல் இர
ண்டு சுவிசேஷங்களில் ஊழியக்காரரில் சிலரைக் கொன்றதாகவும்
கண்டிருக்கிறது. லூக்காவோ, குமாரனைத்தான் கொன்றார்கள் என்ப
துபோல சொல்லுகிறார். தீர்க்கதரிசிகளிலுஞ் சிலரை கொடுமையாய்
நடத்திக் கொன்றது நமக்குத் தெரியும். யூதர்கள் சொல்லுகிறபடி
எரேமியா எகிப்துக்கு ஓடிப்போனவர்களால் கல்லெறியப்பட்டான்.
ஏசாயா மனசேயால் வாளாலறுக்கப்பட்டான். சரித்திர சம்பந்தமாய்
இதை அறிந்து கொள்ளவேண்டுமானுல் பின்வரும் வாக்கியங்களைப்
பார். எரேமி. 37 : 38. 1இரா. 18 : 13. 22 : 24—27. 2 இரா. 6 : 31. 21 :
16. 2நாளா. 24 : 19—22. 36 : 16. அப். 7 : 52. 1தெச. 2 : 15. பவுலப்
போஸ்தலன் எபிரேயர் 11ல் சொல்லியிருக்கிறதும் இதைத்தெளிவாய்
ரூபிக்கும். வேறு சிலர் நிந்தைகளையும், அடிகளையும், கட்டுகளையும்,
காவலையும் அனுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள். வாளாலறுப்
புண்டார்கள். பரீக்ஷையாக்கப்பட்டார்கள். பட்டயத்தினுல் வெட்டப்
பட்டு மரித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 13. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

அலெக்சந்திரியாவிலிருந்த ஓரிஜன்முதலிய கிறிஸ்தவ நூலாசிரி
யர்கள் பிளேத்தோவின் நூல்களிலிருந்து மிகுதியும் எடுத்து எழுதி
யிருப்பதாக குற்றங்கூறியிருப்பதுமுண்டு. ஒருவகையில் அவர்கள்
எடுத்திருக்கிறார்களென்றுதான சொல்லவேண்டும். ஆயினும் அவர்கள்
எடுத்திருப்பது அவனுடைய பாஷை நடையேயல்லாது அவனுடை
ய சித்தாந்தமல்ல. அலெக்சந்திரியாவிலுள்ள சாஸ்திரிகள் பிளேத்
தோ கொண்டிருந்ததாகப் பிதற்றிக்கொண்ட எண்ணங்கள் அவன்
மனதில் ஒருகாலும் தோன்றினதேயில்லை. மேற்படி எண்ணங்கள்
அவன் எழுதின நூல்களில் அடங்கியிருந்தனவென்று பாராட்டிக்
கொண்டது கிறிஸ்துமார்க்க விர்த்தியைத் தடுக்கவேண்டுமென்ற கோ
க்கத்தினுலேதான். என்றாலும் ஓரிஜன் வெளியிட்ட சில அபிப்பிரா
யங்களில் மிகுந்த அவிவேகம் விளங்குகின்றது. மனித புத்திக்கு எட்
டாத விஷயங்களிலும் யூகிக்கிற துணிவுள்ளவனுய் வேதத்தையெல்
லாம் உபமானப் பொருளுள்ளதாக மட்டுமின்றி அர்த்தப்படுத்தத்
தலைப்பட்டான். இந்த வியாக்கியான முறை ஓரிஜன் என்பவனுலா
வது மற்றும் வேதசாஸ்திரிகளாலாவது உற்பத்தியானதல்ல. அலெ
க்சந்திரியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் மேற்படி முறையை அதற்குமுன்
னமேயே வெகுவாய்க் கையாண்டுவந்தார்கள். அவர்கள் இந்தவகை

யைக் கையாண்ட நோக்கம் மோசேயின் ஆகமங்களுக்கும் கிரேக்கு
ஞானிகளுடைய நூல்களுக்கும் ஒற்றுமையுண்டென்று காண்பிக்க
விரும்பினதுதான். வேதத்திலே எந்தப் பந்தம் சரித்திரங்கள்முத
லாய் யாதோ மறைவான ஓர் ஞான அர்த்தமுள்ளதல்லாததல்ல என்
றே நினைத்தார்களாம். பீலோ என்று பெயர்கொண்ட யூதனுடைய
நூல்களை வாசிப்போமாகில் வேதத்தை யெழுதின மோசேமுதலிய
வர்கள் சொல்லுகிற சொற்களை வழக்கமான பொருளாய் அவன்
கொள்ளவில்லையென்று தெரியவரும். அவர்கள் எழுதியிருக்கிற சங்
கதிகள் மெய்யாய் நடந்தவைகளேயல்லவென்றும், வாசிப்பவர்களுக்
கு யாதோ போதனையுண்டாகக் கற்பனைசெய்யப்பட்டவைகளென்று
மாத்திரம் கொண்டிருந்தானென்றும் நினைக்க ஏவப்படுவோம். பீலோ
முதலிய யூதர்கள் எழுதியிருக்கிற வார்த்தைகளும் வியாக்கியா
8. னம்பண்ணின முறையும் இவ்வாறு நினைக்க ஏவிவிடுகிறவைகளாயிருந்
தபோதிலும் இப்பேர்ப்பட்ட குற்றம் அவர்கள்மீது பாரிப்பது சரியன்
று. ஒவ்வொரு வேதவாக்கியத்திலும் குறைந்த பட்சத்தில் மூன்று
கருத்துகள் அடங்கியிருந்தன என்பது அக்காலத்து வியாக்கியானிக
ளுடைய பிரமாணம். ஒன்று சொற்படிக்குள்ள அல்லது சரித்திரப்
பொருளும், இரண்டாவது நல்லொழுக்கத்துக்குரிய கற்பனைப் பொரு
ளும், மூன்றாவது பூமிக்குரிய வெளிப்படையான பொருளினால் குறிக்
கப்படும் மேலோகத்துக்குரிய ஆழமான இரகசியப்பொருளுமாம்.

அலெக்சந்திரியாக் கிறிஸ்தவர்களும் தங்கள் வேத வியாக்கியானங்
களில் இந்த முறையைக் கையாள்வது இயல்புதானே. யூதர்களுக்கு
அது பிரியமாயுமிருந்திருக்கும். அஞ்ஞானிகள்முதலாய் தங்கள்
வகையறுக்கள் நூல்களில் வெளிப்படையான அர்த்தத்துக்கு முற்
றும் விரோதமான பொருள் எடுக்கக் கற்றுக்கொண்டார்களே. அலெ
க்சந்திரியாக் கிளெமெந்து என்பவனும் இந்த உபமான வியாக்கியானி
களைச் சேர்ந்தவன்தான். அவன் சிஷனான ஓரிஜன் மேற்படி முறை
யைமட்டு மிஞ்சிக்கொண்டு போய்விட்டான். வேத வியாக்கியானம்
பண்ணுகிறதில் மட்டுமிஞ்சி நடக்கிறானென்று மற்றவர்கள் தன்பே
ரில் குற்றஞ்சாட்டினதாய் அவன் தானே குறிப்பித்திருக்கிறான். மே
லே விவரித்த காரணங்களினாலும் விவரிக்காத மற்றும் காரணங்களி
னாலும் அவனுக்கும் அவ்விடத்துக் கண்காணியாகிய தேமேத்திரியு
என்பவனுக்கும் மனஸ்தாபம் நேரிட்டது. அவன் 229ம் ௵த்தில்
அலெக் சந்திரியாவை விட்டு பலஸ்தீனாவிலுள்ள செசாரியாவுக்கு
இரண்டாம் விசைபோனதற்கு அதுவும் ஒரு முகாந்தரமாயிருந்திரு
க்கலாம். இந்தச் சமயத்தில் அவ்விடத்துக் கண்காணியான தேவ
கிஸ்து என்பவனிடத்தில் குருப்பட்டம் பெற்றுக்கொண்டான். எரு
சலேம் கண்காணியாரும் மற்றுஞ் சில கண்காணிமாரும் மேற்படி
காரியத்தில் உதவிசெய்தார்கள். ஓரிஜனுக்கு இக்காலத்தில் நாற்ப
தைந்து வயசு. அவன் இவ்வளவுகாலமாய் ஏன் குருப்பட்டம் பெறவி
ல்லையென்றும், பெற்றுக்கொண்டபொழுதும் தன் பட்டணத்தில்
தன் கண்காணியாரால் ஏன் பெறவில்லையென்றும் ஆச்சரியப்படு
வோம். தேமேத்திரியு இந்த ஒழுங்கீனத்தைக்குறித்து முறையிட்
டான். என்றாலும் பலஸ்தீனாவிலுள்ளவர்கள் ஓரிஜன்பேரில் மிகுதி
யும் பிரீதியுள்ளவர்களாயிருந்தபடியால் அலெக்சந்திரியாக் கண்காணி
யாரைப்போல் இதை ஒழுங்கீனமென்று நினைத்தவர்கள் அநேகரல்ல.

---



## On the Liturgy.

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ரு. அதிகாரம்.

ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச்
செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

ஐந்தாவது. காலைமாலைக்குரிய முதல்பாடங்களில் இஸ்ரவேலர் ஆச
ரித்த பஸ்காவைக்குறித்தும் அவர்கள் எகிப்திலின்று விடுதலையானதை
யும் வாசிக்கிறோம். இவ்விரண்டு சங்கதிகளும் இந்நாளுக்கு மிகவும்
ஏற்றதுதான். அவர்களுடைய பஸ்கா கிறிஸ்துவாகிய நம்முடைய பஸ்
காவுக்கு முன்குறிப்பு. இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு விடுதலையடைந்த
தும், பார்வோனும் அவன் சேனையும் சிவந்தசமுத்திரத்தில் அமிழ்ந்திப்
போனதும் பாவம் மரணத்தினின்று நாம் விடுதலையாக்கப்பட்டதற்கு
அடையாளம். கிறிஸ்துவுக்குள் நாம் ஞானஸ்நானம் அடையும்போ
து இந்தச் சத்துருக்கள் அமிழ்ந்துபோகிறார்கள். சுவிசேஷவாக்கியமும்
மாலை இரண்டாம் பாடமும் கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்ததற்கு
நிறைவான ரூபகாரத்தையெடுத்துக் காட்டுகிறது. நிருபவாக்கியமும்
காலை இரண்டாம் பாடமும் அதை நாம் எப்படி உபயோகிக்கவேண்டு
மென்று படிப்பிக்கிறது. சுருக்கசெபமும் நிருப சுவிசேஷவாக்கியங்
களும் முன்னுள்ளபடியே இருக்கிறது.

XVIII. ஈஸ்தர் வாரத்தின் திங்கள், செவ்வாய்கள்.

பூர்வீககிறிஸ்தவர்கள் இந்த விசேஷித்த பண்டிகையை பரிசுத்தாவி
யின பண்டிகைவரையில் ஆசரித்துவந்தார்கள். இந்த 50 நாள்க
ளிலும் ஞானஸ்நானத்தை நிறுத்துவார்கள். உபவாசம்பண்ணமாட்டா
ர்கள். நின்றுகொண்டு செபம்பண்ணுவார்கள். சந்தோஷத்துக்கடை
யாளமாக ஓய்வுநாளில் இப்படிச்செய்வதுபோல மற்றநாட்களிலும்
செய்து, மற்றநாட்களும் ஓய்வுநாளைப்போல சந்தோஷநாட்களென்று
காண்பிப்பார்கள். பத்திகுறைந்து வந்தபோது காலமும் குறைந்தது.
50 நாட்களையும் கொண்டாடினவர்கள் பிறகு ஈஸ்தர்வாரத்தையும் பரி
சுத்தாவியின் பண்டிகைவாரத்தையும் முழுமையுங் கொண்டாடினார்
கள். நம்முடைய சபையும் திங்கள், செவ்வாய்க்குமாத்திரம் நிருபசுவி
சேஷ வாக்கியங்கள் வைத்திருந்தாலும் வாரம் முழுவதுக்கும் சொல்
லத்தக்க முகவுரையை இராப்போசன ஆராதனையில் சேர்த்திருக்கிற
து. மேற்சொன்ன நிருப சுவிசேஷ வாக்கியங்களில் இரக்ஷகர் உயிர்
த்தெழுந்ததற்குரிய உதாரணங்கள் கண்டிருக்கிறது.

இரண்டாவது. இந்தவாரத்தின் சந்தோஷத்துக்குக் காரணம் இர
க்ஷகர் உயிர்த்தெழுதலைக்குறித்து இருக்கும் சந்தோஷந்தான். பூர்
வீக கிறிஸ்தவர்கள் வேறொரு முகாந்தரத்தையிட்டும் இந்த வாரத்தை
க்கொண்டாடினார்கள். அவசியமான காரணம் இருந்தாலன்றி, ஈஸ்தர்
பண்டிகையிலும் பரிசுத்தாவியின் பண்டிகையிலுந்தான் ஞானஸ்நா

னம் கொடுப்பது வழக்கம். கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெ
ழுதலையும் நினைத்து ஈஸ்தரில் ஞானஸ்நானம் கொடுப்பார்கள். பாவத்
துக்குச்சாகிறதும் நீதிக்கு உயிர்த்தெழுதலுமாகிய கிறிஸ்தவனுடைய
நடக்கையை ஞானஸ்நானங்காட்டுகிறது. அப்போஸ்தலன்மார் பரிசுத்
த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் பெற்றதுமல்லாமல்,
அவர்களே 3,000ம்பேருக்கு ஞானஸ்நானங்கொடுத்ததை நினைத்து
பரிசுத்தாவியின் பண்டிகையில் ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கம்.
அப். 2: 41. மறுவாரத்தில் கிறிஸ்தவர்களின் தொகை அதிகப்பட்
டதற்காக யாவரும் சந்தோஷப்படும்படிக்கு புதிதாய் ஞானஸ்நானம்
பெற்றவர்கள் ஒவ்வொருநாளும் வெள்ளைவஸ்திரத்தோடு கோவிலுக்கு
வருவார்களாம். அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிப்போட்டு ஒளி
யின்பிள்ளைகளாகி, புதிதும் பழுதற்றதுமான நடக்கை உடையவர்க
ளாய் இருப்போமென்று காட்ட விளக்குகளையும் தங்களுககு முன்
னே பிடித்துக்கொண்டு வருவார்களாம். கோயிலில் அவர்களுக்காக
தோத்திரஞ்செலுத்தி செபம்பண்ணுகிறதுமல்லாமல், அஞ்ஞானத்திலி
ருந்து அநேகர் அக்காலத்தில் கிறிஸ்துமார்க்கத்தைச் சேருகிறவர்களா
னபடியால் அப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்துமார்க்கத்துக்குரிய சத்
தியங்களைப் படித்துக்கொடுப்பார்கள். பிறகு இப்படிப்பட்டவர்களு
டைய தொகையும் குறைந்து, இவ்விதசடங்குகளை நிறைவேற்றத் தகு
தியில்லாத குழந்தைகளுக்கு மாத்திரம் ஞானஸ்நானம்கொடுத்தபடி
யால், அந்த வழக்கத்தை நிறுத்தி கிறிஸ்துமார்க்கத்தின் துவக்கத்தில்
நடந்தபடியெல்லாக் காலங்களிலும் ஞானஸ்நானம்கொடுத்துவருகிறா
ர்கள்.

---

## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

## ௯. அதிகாரம்.

### தேவன் நோவாவோடு செய்த உடன்படிக்கை, நோவா தன் மக்களுக்குச் சொன்ன ஆசீர்வாதங்கள்.

1. இந்த ஆசீர்வாதம் ஆதியிலே ஆதாம் ஏவாளுக்குக் கொடுக்
கப்பட்டது. இப்பொழுது நோவாவின் குடும்பத்தின்வழியாய் உலகத்
தில் சனங்கள் உண்டாகவேண்டியதிருப்பதினாலே அந்த ஆசீர்வாதம்
மறுபடியும் அருளப்பட்டது.

2. மிருகங்களின்பேரில் மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட அதி
காரத்தை பாவத்தினாலே இழந்துவிட்டதால் இப்பொழுது மறுபடி
யும் கொடுக்கப்பட்டது. ஆனாலும் முன்போலல்ல. மனிதர் பாவிக
ளாகுமுன் மிருகங்கள் சுயேச்சையாய் மனுஷனுக்கு வலியகீழ்ப்படிந்
திருந்தது. அவை படைக்கப்பட்ட இயல்பு மனுஷனுக்குப் பட்சமு
ள்ளதாயிருந்தது. மனுஷர் பாவிகளான பின்பு அவனைச் சத்துராதி
யாக எண்ணிப் பயத்தினாலே அடங்கியிருக்கிறது. அல்லது ஓடிப்
போய்விடுகிறது. மிருகங்களுக்கு கர்த்தர் இந்த இயல்பான பயத்தைக்



கொடுத்திராவிட்டால் உலகத்திலுள்ள மனுஷரை எல்லாம் நாசமாக்
கிப்போடும். கொடும்பசியினாலாவது, எதிர்த்தலினாலாவது சில மிரு
கங்கள் வேளைவேளை மனுஷனைப் பீறிப்போடுவது இதற்கு விகற்ப
மல்ல.

3. சலப்பிரளயத்துக்குமுன் மாம்சம் புசிக்க மனுஷர் ஒருவேளை
சுயாதீனமுள்ளவர்களாயிருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுதுபோல
தெளிவான உத்திரவு கொடுக்கப்பட்டிருந்ததாகத் தோன்றவில்லை.
இப்பொழுது கொடுக்கப்பட்ட உத்தரவினாலே மிருகஜீவன்களைக்
கொன்று சாப்பிடலாமென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. ஆனால்
அவைகளை வதைத்துத் துர்வகையாய் அனுபவிக்கக்கூடாது. அப்படிச்
செய்தால் தேவன் தயவாய்க் கொடுத்த உத்தரவைத் தூஷிக்கிறதா
யிருக்கிறதல்லாமலும் ஆறும் கற்பனைக்கு விரோதமான பாவமாயுமி
ருக்கும். இவ்விடத்தில் இன்னவகை மிருகத்தைச்சாப்பிடலாம். இன்ன
வகையைச் சாப்பிடக்கூடாதென்று குறிப்பிடப்படவில்லை. ஆகையால்
சுத்தம் அசுத்தமான மிருகங்கள் என்று வித்தியாசம் பலியைப்பற்றிச்
சொல்லப்பட்டிருக்கவேண்டும்.

4. இரத்தம் கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தை முன்குறித்த
முகாந்தரத்தினாலே விசேஷமாய் விலக்கப்பட்டது. இதினாலே ரத்
தம் சிந்தும்போதெல்லாம் இதில் பெரிய விசேஷமிருக்கிறதென்று
மனுஷர் நடுக்கத்தோடு கவனித்து உணர ஏவப்பட்டார்கள். அநேக
மனுஷர் நடுக்கத்தோடு... 
மல்லாமல் மனுஷர் மிருகங்களின ரத்தத்தைச் சிந்தி குடிக்கப்பழகி
னால் வரவரக் கடினப்பட்டு குரூரத்திலே மிஞ்சிப்போய் மனுஷரு
டைய ரத்தத்தையும் சிந்த இலேசாய்த் துணிவுகொள்வார்கள். ஆகை
யால் கொடுமைக்குப் பயந்து நடக்கும்படியாகவும் அதை விலக்கி
னார்.

5. 6. மனதாரச் செய்யும் கொலைக்குற்றத்துக்குப் பழிக்குப்பழி
வாங்கவேண்டுமென்பது இதினாலே பிரத்தியட்சமாய்த் தெரியவருகி
றது. விக்கிரகாராதனையில் கொல்லப்பட்ட சகல மனுஷ உயிர்களுக்
கும் தேவன் பழிவாங்குவார். எண். 35: 33. 2 இரா. 21: 16. 24: 4.
கிறிஸ்தவர்களுக்குப் பல காலங்களிலும் நடந்திருக்கிற கொலைபாதகங்
களெல்லாம் இத்தன்மையுள்ளவைகளே. வெளி. 6: 9—11. தேவன்
பழிவாங்காமல் விடார்.

கொலைபாதகத்தின் கொடுமையையும் அருவருப்பையும் அதின்
பேரிலுள்ள வெறுப்பையும் காட்ட தேவன் "சகல ஜீவஜெந்துக்களி
டத்திலும் பழிவாங்குவேன்" என்கிறார்.

கொலைக்குற்றத்துக்கு இப்படிப்பட்ட பயங்கரமான மரணதண்
டனை விதிக்கப்பட்டதற்குச் சொல்லப்பட்டிருக்கிற முகாந்தரமும்
கவனிக்கப்படத்தக்கது. அதாவது, "மனுஷன் தேவசாயலில்
படைக்கப்பட்டான்." கொலை பாதகன் தேவனோடு எதிர்த்துநின்று
உம்முடைய ரூபத்தை அழித்துப்போட்டேன் பாரும் என்று அவரை
யே தாக்குகிறவன்போலிருக்கிறான். இவ்வுலகத்திலிருக்கிற தேவரூப
த்தை அழித்து அவராலே அதற்கு அருளப்பட்ட ஜீவனை வாங்கிப்போ
டுகிறது தேவனுக்கு விரோதமாய் அகோரிகரமும் துணிகரமுமான
பாவமாயிருக்கிறது. ஆகையால் கொலைபாதகன் மனுஷனுக்குச் செய்
கிற கெடுதிக்காகஅல்ல, தேவனுக்குச் செய்கிற நிந்தாதூஷணைக்காகவே
மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதென்றறியவும்.

13 மேகவில் சலப்பிரளயத்துக்கு முன்னும் இயற்கைவகையாய்
உண்டாயிருந்ததென்றும் இப்பொழுது நோவாவோடு தேவன் செய்

நடன்படிக்கைக்கு அடையாளமும் முத்திரையுமாக நியமிக்கப்பட்டதென்றும் நினைக்கப்படுகிறது. விசுவாசத்தினாலே இது நமக்கு மிகவும் ஆறுதலைத் தரத்தக்கதாயிருக்கிறது.

18. 19. சலப்பிரளயத்துக்குப்பின் நோவா 350 வருஷம் உயிரோடிருந்தாலும் இந்த மூன்று பிள்ளைகளைத் தவிர வேறே பிள்ளைகளிருந்ததில்லை யென்று காட்ட வேண்டியதாய் அவர்கள் பேர் இவ்விடத்திலும் வருகிறது. மேலும் இவைகள் பின்வருபவற்றுக்கு முகவுரைபோலுமிருக்கிறது.

21. நோவாவுடைய பாவம் இங்கே சொல்லப்படுகிறது. இது மனுஷசுபாவத்தின் சீர்கேட்டையும் ஆச்சரியப்படத்தக்க பலவீனத்தையும் காட்டுகிற திருஷ்டாந்தமாயும் ருசுவாயுமிருக்கிறது. ஆ! வேத சரித்திரக்காரர் மெத்தவே உண்மையுள்ளவர்கள்.

22. காமும் இதில் சம்பந்தப்பட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் எப்படிச் சம்பந்தப்பட்டானென்று தெரியவில்லை. எப்படியும் இவன் சந்ததியாருக்குப்பின் வரப்போகிற சாபத்தை தேவன் நோவாவைக்கொண்டு இச்சமயத்தில் முன்னறிவிக்கச் சித்தமானார். இது தீர்க்கதரிசனமாயுமிருக்கிறது. அதாவது,

25. "கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்" இந்தச் சாபம் மூவகையாய் நிறைவேறியதென்று சொல்லுகிறேன்.

1. கானானியர் நித்தியத்த அடிமைத்தனத்தையும் சகிக்கக்கூடாத கொடுங்கோன்மையையும் அடைந்து உத்தரித்தார்கள்.

• கானான்தேசத்தில் குடியிருந்த கானானியரை யோசுவா இஸ்ரவேலரைக்கொண்டு பயங்கரமாய் அழித்து நிர்மூலமாக்கிப்போட்டான். பெனிக்கேயரும் கார்த்தேஜியருமான கானானியரை கிரேக்கரும், உரோமரும் வெகு கொடூரமாய்க் கீழ்ப்படுத்தி நாசமாக்கினார்கள். காமின் சந்ததியாரால் முக்கியமாய்க் குடியேற்றப்பட்ட ஆப்பிரிக்காக்கண்டத்தாரை உரோமர் அநேககாலமாயும் பின்பு சரசேனரும் கொடூரமாய் ஒடுக்கி ஆண்டுவந்தார்கள். இப்பொழுது துருக்கரும் அப்படியே கொடுங்கோலால் ஆளுகிறார்கள். அந்த காம் சந்ததியாரின் அறிவீனத்துக்கும் அக்கிரமத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் பட்ட இம்சைக்கும் நிர்ப்பந்தத்துக்கும் கணக்கில்லை. அவர்களுக்குள் ஆயிரக்கணக்கான காப்பிரிகள் உலகத்தின் மற்றப் பாகங்களுக்கு சிறைகளாக்கப்பட்டு குரூர நடத்தலுக்குள்ளாகி மிருகங்களைப்போல் விற்பனைசெய்யப்படுகிறார்கள்.

2. சிலர் தவிர காம் சந்ததியாரெல்லாரும் மெய்மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு அபாத்திரரானார்கள்.

3. சேமியர் யாப்பேத்தியரையும், யாப்பேத்தியர் சேமியரையும் கீழ்ப்படுத்தி ஆண்டிருப்பதுபோல காம் சந்ததியார் யாப்பேத்தியரையாவது சேமியரையாவது ஒருபோதும் செங்கோல் செலுத்தி ஆண்டிருப்பதில்லை.

"அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்" என்பது அவர்கள் அடிமைத்தனத்தின் மிகுதியைக் காட்டுவதல்லாமலும் வார்த்தைப்படியும் நிறைவேறியிருக்கிறது.

24. உலகத்துக்கெல்லாம் ஆசீர்வாதமான மேசியா சேமின்சந்ததியிற் பிறந்ததினாலே "சேமுடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டார்." பழயஏற்பாட்டின் காலத்திலெல்லாம் மெய்த் தேவனை ஆராதித்துவந்த அநேகமான பேர்கள் சேமுடைய சந்ததி



யார்தான். புதியஏற்பாட்டின் காலத்தில் சேமியருக்குத்தான் முதலாவது சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அதை முதலாவது ஒப்புக்கொண்டதும் அதை மற்றவர்களுக்கு முதலாவது பிரசங்கித்து அநேகர் குணப்படும்படி முக்கிய கருவிகளாயிருந்தவர்களும் சேமியர்தான். நோவாவின் மற்றப் பிள்ளைகளுடைய சந்ததியாரும் சேமின் தேவனை ஆராதிக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எக்காலத்தோரும் சேமின் தேவனைத் துதிக்கும்படி வேதவாக்கியங்களை எழுதினவர்களும் சேமியர்தான். இப்படியாக சேமின் தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டார்.

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 6: 24.

(தொடர்ச்சி.)

மேற்கண்ட காரியத்தை பற்பலவிதமாய்க் கவனிக்கலாம். உலகத்தாரோடு மட்டுமின்றி ஒத்து நடந்து மார்க்கத்துக்குரிய சில குணங்களையுமுடைத்தாயிருக்கிற சிலரைக் கண்டிக்க இவ்வாக்கியம் உதவும். ஒருவேளை அவர்கள் பெரிய அக்கிரமத்துக்கு விலகியிருப்பார்கள். உபகாரமும் பிரயோசனமுமான அநேக காரியங்களைச் செய்து குணங்களைப் பழக்கிருப்பார்கள். பத்தியுள்ள குணங்களைப் புகழ்ந்துமிருப்பார்கள். இது வரை சகலமும் மகா உத்தமமாயிருக்கிறது.

இவர்களுடைய குணத்தின் மறுபக்கத்தைப் பார்ப்போம். உலகம் இவர்களைப் பலமாய் ஆண்டுவருகிறது. சாகும்போது பரமண்டலத்துக்குப் போக அவர்கள் விரும்புகிறது நிசமே. ஆனால் உலகத்துக்குரியவர்கள் கடைசியில் தங்களுக்கிருக்கிற மகிமையை இழந்துபோகவேண்டுமென்கிற எண்ணத்தைக்கூடச் சற்றேனும் சகிக்கிறதில்லை. சில விஷயங்களில் அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிகிறார்கள். மற்ற விஷயங்களில் அவர்கள் உலகத்துக்குக் கீழ்ப்படிகிறார்கள். வீட்டறைகளுக்குள் அவர்கள் பத்தியுள்ளவர்கள், வெளியே வரும்பொழுதோ உலகத்தோடு இசைந்து நடக்கிறவர்கள். ஓய்வுநாள்களில தேவாலயத்திலும் விசுவாசிகள் கூட்டத்திலும் அவர்களைக் காணலாம். அந்த வாரத்தில் உலகத்தார் சொல்லுகிறதுபோலவே, உலகத்தார் நடக்கிறபடி தாங்கள் நடந்து அவர்கள் செய்கிறபடி தாங்கள் செய்கிறோமென்றும் சொல்லுகிறார்கள். லவுகிக சிநேகிதரும் அயலகத்தாரும் தங்களுடைய வழக்க ஒழுக்கங்களினாலும், கோட்பாட்டினாலும் அவர்களை அடிமைத்தனத்துக்குட்படுத்தி யிருக்கிறார்கள். ஆசையினாலே உலகத்தாருடைய தயவின்பேரிலிருக்கிற ஆசை தேவன்பேரிலிருக்கிற ஆசையைவிட அவர்களுக்குப் பலத்திருப்பதால், தேவனல்ல, உலகமே அவர்களுடைய எஜமான். அவனது இரண்டு பேருக்கு ஊழியஞ்செய்யப் பார்த்து, எந்த மனிதனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது. தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாதென்பதை மறந்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

வாலிப ஸ்திரீகளுக்கு பக்தியானது அழகும், ஆபரணமும் பொருந்தியதாக இருப்பதால் அதை அவர்களுக்குள் பெறுவோர் அப்பியாசித்திவருவதைச் சாதாரணமாய்க் காண்கிறோம். ஆனால் விசேஷித்தவிதமாக எல்லாரும் கவனிக்கப்படத்தக்க பக்திமான்களாய் வளர அவர்களுக்கு மனதில்லை. இப்படிப்பட்ட பெற்றோர்கள் பிள்ளைகளின் தன்மையை எவ்வளவோ தப்பாய் அறிந்திருக்கிறார்கள். தேவன் தங்கள் வசத்தில் ஒப்புவிக்கிற ஆத்துமாவின் பிரயோசனத்தை அற்பமேனும் அவர்கள் ஆலோசிக்கிறதில்லை. இவ்விதமாய்ப் பயிற்றப்பட்ட வாலிபரின் பக்தி பெரும்பாலும் அழமற்றதாயிருந்து சீக்கிரம் காணாமற்போகிறது. ஆனால் அது ஆழமுள்ளதாயிருக்குமேயாகில் மிதமான வாழ்க்கைக்குரிய உபத்திரவத்தைக் கொடுக்கும். உலக சம்பந்தங்களில் தங்கள் பெற்றோர் மூலமாய் சிக்கிக்கொள்ளுகிறார்கள். ஒழுங்கில்லாமல் பத்திராள்கள்போல் காணப்படுகிறவர்களை கடிந்துகொள்ளுகிற விதமாய் இந்த வாக்கியத்தைப் பிரயோகிக்கலாம். மார்க்கத்தைப் பற்றி அதிக சிரமப்பட்டு பக்திமான்களென்று எண்ணப்படுகிறவர்கள் நடுவில் மிதமில்லாத செலவுகளைச் செய்கிற தைப்பற்றி இப்போது பேசுவோம். அவர்கள் கிருபையின் எத்தனங்களை அடிக்கடி பிரயோகிக்கிறார்கள். சுவிசேஷத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மிதமில்லாத காலமும் அவர்களுடைய பொருட்களில் ஒரு பங்கும் சரியானபடி பிரயோகிக்கப்பட்டதாகத் தோன்றினபோதிலும், அவர்களுடைய வாழ்நாட்களின் மிகுதியான பாகம் சோம்பலில் கழிந்துபோகிறது. தங்களுடைய பணம் உலக உல்லாசத்திலும், பெருந்தீனியிலும் அழிந்துபோகிறது மார்க்கத்துக்குரியதென்று தாங்கள் தப்பாய் எண்ணிக்கொள்ளுகிற காலத்தையும் ஆஸ்தியையும் மாத்திரம் அதற்கு நியமித்துக் கொடுக்கிறார்கள். மீதியானதைத் தங்கள் சொந்தமென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். தேவனைப்பற்றிய விசுவாசம் நமது உள்ளத்திலிருக்கவேண்டுமென்பதையும், நம்முடைய காலத்தையும் நம்முடைய தாலந்தையும் அவருடைய ஊழியத்துக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்பதையும் சந்தேகமாக்குகிறதென்று அறியாதிருக்கிறார்கள். (இவைகளை நிறைவேற்றுதல் பற்பல ஊழியக்காரருடைய வேலைகளைப்போலவும், பற்பல காலங்களில் ஒரே அலுவல்காரன் செய்கிற வேலைகளைப்போலவும் பற்பலதாயிருக்கும்.) இப்படிப்பட்டவர்கள் இரண்டு எஜமான்கள் முறைமுறையாகத் தங்களை ஆண்டு தங்கள் இருதயத்திலே இரண்டு இராச்சியங்களை ஏற்படுத்த இடங்கொடுத்து இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடி போதிக்கப்படவேண்டும்.

கடைசியாக மற்றெந்த எஜமானையும்விட தேவனை முக்கியமாய்ப்பற்றிக்கொள்ளுதலே நல்ல தீர்மானமென்று எல்லாரும் எண்ணிக்கொள்வோமாக. உலகம் தேவனுடைய பெரிய சத்துராதியும் விரோதியுமாயிருக்கிறதென்று மனதில் வைத்துக்கொள்வோமாக. உலகத்திலும் உலகத்தின் பொருளிலும் அன்புகூராதே. எந்த மனிதனாவது உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் தேவனாகிய பிதாவின் அன்பில்லை. வேதத்தில் இது பொல்லாத பிரபஞ்சமென்றும், (கலாத்தியர் 1. 4.) பொல்லாங்கனுக்குட்கிடக்கிற உலகமென்றும வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உயர்ந்த வகுப்பிலுள்ள அநேகர் அதற்கு இசைந்து நடப்பதால் அது கெட்டுப்போகிறதற்கு முக்கியகாரணமாயிருக்கிறது. அதைவிட்டு நீங்குவது மிகவும் வருத்தம்; ஆனால் நாம் தேவனு



டைய சிநேகிதர்களாக விரும்புவோமானால் அதைவிட்டு நீங்கவே நீங்கவேண்டும். விபசாரரே! விபசாரிகளே! உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா! ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். (யாக்கோபு 4. 4.)

இப்படியிருப்பதால் கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றுவோமாக. உலகத்தையல்ல, நம்முடைய சொந்த மாம்ச இச்சைகளையல்ல, வேறெந்த எஜமானையுமல்ல, அவரையே பின்பற்றுவோமாக. நமக்கு இரண்டு எஜமான்கள் உண்டென்பதுபோல கனவிலும் எண்ணாதிருப்போமாக.

---

## Communicant's Companion.

---

## நற்கருணை விளக்கம்.

### ௬. அதிகாரம்.

### தியானமும் ஜெபமும் இந்தப் பந்தியைச் சேர்பவர்களுக்கு அவசியம்.

(தொடர்ச்சி.)

---

(5) நம்முடைய இரக்ஷகருக்கு இப்போதிருக்கிற மகிமையையுந் தியானிக்கவேண்டும். அவர் சிலுவையிலடைந்த பாடுகளையும் நிந்தைகளையுங் கவனிக்கும்போது பரமண்டலத்திலே கிரீடாசுபதியாய் மகிமையுள்ள சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறதையுங் கவனிக்கவேண்டும். அவர் தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்திலே சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கு மேலானவராக சகல நாமங்களுக்கு மேலான நாமத்தைத் தரித்து உன்னதத்திலுள்ள மகத்துவருடைய சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார். எண்ணிறந்த தேவதூதர்கள் இடைவிடாமல் அவருடைய ஆசனத்தைச் சுற்றி நின்று அவருக்கே துதியும், கனமும், மகிமையும் என்றென்றைக்குமுண்டாவதாகவென்று பாடுகிறதையுங் கவனி.

மேலும் அவர் அங்கே உனக்காக என்னசெய்துகொண்டு வருகிறாரென்கிறதையும் கவனி. தம்முடைய மூலமாய்த் தேவனைச் சேருகிறவர்களுக்காக தேவனோடே பரிந்துபேசி அவர்களுக்காக வாசஸ்தலத்தையும் ஆயத்தப்படுத்தி, அப்புறம் அங்கே உன்னைக் கூட்டிக்கொண்டுபோக இங்கே திரும்ப வருகிறாரென்கிறதையுங் கவனி. இவைகளைக் குறித்து நீ சரியானபடி தியானித்து அவர் மறுரூபமாக்கப்பட்டபொழுது அவரோடேகூடவிருந்தவர்கள் சொன்னதுபோல "இங்கேயிருப்பது நல்லது" என்று சொல்லும்படி பார்.

இந்தத் தியானம் உனக்குள்ளே சொழுந்துவிட்டெரிந்து அவரை முகமுகமாய்ப் பார்க்கும்படிக்கான ஆசை உன்னை நெருக்கி ஏவுவதாக.

(6) இந்தப் புது உடன்படிக்கையினாலுண்டாகும் அளவற்ற ஐசுவரியத்தையுந் தியானிக்கக்கடவோம். இது ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொ

ரு காலத்தையும் துவக்கமுதல் படிப்படியாய் சுவிசேஷத்தின் பட்டப்பகலின் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்ட விதத்தையுங் கவனி. அது ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒவ்வொரு சட்டதிட்டத்தையும் இனிமையான வாக்குத்தத்தங்களையுங் கவனி. அதினுள் மறைந்திருக்கும் விலையுயர்ந்த திரவியத்தையும் ஆராய்ந்து பார், அந்தப் பொற் கேணிக்குட் புகுந்து அதிலுள்ளவைகளைப் பாளம்பாளமாக வெடுக்கப்பார். இந்தச் சீயோனைச் சுற்றி நட.

ஆகையால் என் ஆத்துமாவே! நீ நிருமாணிக்கப்பட்டதினாலுண்டான இந்தப் பெரிய சலாக்கியங்களைச் சற்றே கவனி. உனக்களிக்கப்பட்ட பாவமன்னிப்பின் பத்திரத்தாலுண்டாகிய சுயாதீனம், கனம், தனம் முதலிய நன்மைகளைச் சற்றே யோசி. "எவனுடைய பாவம் மன்னிக்கப்பட்டதோ அவனே பாக்கியவான்" நியாயப்பிரமாணமோ, தேவ சாபமோ, துன்பமோ, மரணத்தின்கூரோ, நரகத் தண்டனையோ இவைகளெல்லாவற்றிற்கும் அவன் நீங்கலாயிருக்கிறான். உரோமர் 8. 33 முதல் வாசி.

கிருபையின் நிலைமைக்குட்பட்டிருக்கிறதினாலுண்டாகிய ஆறுதலையும் மேன்மையையுங் கவனி. இப்பொழுது நான் பராபரனுடைய பிள்ளையாயிருக்கிறேன், மறுபடியும் பிறந்து புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறேன். என்னிருப்பிடம் பிதாவோடும், அவர் குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவோடுங்கூட இருக்கிறது. எல்லாம் என்னுடையது. பவுலானாலும், அப்பொல்லோவானாலும், கேபாவானாலும், உலகமானாலும், ஜீவனானாலும், மரணமானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், எல்லாம் என்னுடையது. உலகத்தார் அறியாத போசனமும் சந்தோஷமும் எனக்குண்டு. என் ஆத்துமாவே! நீ இதைத் தியானித்து மாம்ச இன்பங்களையும் உலகலாபங்களையும் அற்பமென்று தள்ளி, போதுமென்கிற மனதுடனே கூடிய மெய்த்தேவபத்தியே மிகுந்த ஆதாயமுள்ளதென்றெண்ணுவாயாக.

(7) பரிசுத்தவான்களோடே நாம் ஐக்கியப்பட்டிருக்கிறதையுங் கவனிக்கவேண்டும். நாம் கிறிஸ்துவோடே ஐக்கியமாயிருக்கிறதினாலுண்டாகிய பிரயோசனங்களில் இதொன்று, நாம் அநேகராயிருக்க ஒரே சரீரமாயும் ஒரே அவயவமாயுமிருக்கிறோம். சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்க்கிறதற்காகவும் கிறிஸ்து மரித்தார். ஒரே சிரசைச் சேர்ந்த அநேக அவயவங்கள் ஒரே சரீரமாயிருக்கிறதுபோலவும், ஒரு வேரைச்சேர்ந்த பல கொடிகளுஞ் சேர்ந்து ஒன்றாய் ஒரு திராக்ஷச்செடியாயிருக்கிறதுபோலவும், ஒரு அஸ்திபாரத்தைச் சேர்ந்த பல கற்களுஞ்சேர்ந்து ஒரே கட்டிடமாயிருக்கிறதுபோலவும் கிறிஸ்துவைச்சேர்ந்து பூலோகமெங்கும் சிதறியிருக்கிற கிறிஸ்தவர்களெல்லாரும் ஒரு சரீரமாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள். பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள தேவபுத்திரர் யாவருக்கும் நீ இனத்தானாக்கப்படுகிறது எவ்வளவு பெரிய சலாக்கியம். அநேகாயிரந் தேவதூதர்களும் பரிசுத்தவான்களனைவரும் உனக்குத் தோழராகிறதென்னக் காரியமோ!



## The first translation of the Bible in Tamil.

## வேதாகமங்கள் தமிழ் பாஷையில் திருப்பப்பட்ட வரலாறு.

(தொடர்ச்சி.)

மேற்சொல்லியபடி 66 ஆகமங்களாகிய சத்தியவேதம் 1727௵த்தில் சர்வாங்கமாய்ப் பிரசித்தமானபோது அது சீக்கிரமாய், தரங்கம்பாடிக்கு மேற்கே மதுரையில் வாசம்பண்ணின வீரமாமுனிவர் கையிலே அகப்பட்டது. அகப்பட்டவுடனே அவர் குறைசொல்லத் தொடங்கினார். அவர் 40 வருஷமாய் இத்தேசத்தில் வாசம்பண்ணினவர். ஆனாலும் தமிழ் நூல் ஆசிரியர் என்று மகா வல்லவராயிருந்தபோதிலும், சாஸ்திர பிரபந்தங்களும், தர்க்கப் பிரபந்தங்களும், தமிழும், லத்தீனுமாக பரமார்த்த குரு கதையும் பிரசித்தம்பண்ணினவராயிருந்தாலும் அவர் வேதாகமங்களில் ஒன்றையாகிலும் சனங்களுக்கு விளங்கும்படி தமிழ்த்திருப்பிப் பிரசித்தப்படுத்தவே இல்லை. அவருக்கு சாவகாசமில்லை என்று பின் வந்த குருக்கள் போக்குச் சொல்லுகிறார்கள். (1) ஆகிலும் "கீழ் திசை பண்டிதர்" என்று அவர் அவமதித்த குருக்கள் பிரசித்தம்பண்ணின மொழிபேர்ப்பை பரியாசம்பண்ணி, இரக்கமில்லாமல் பழிக்கிற பிரபந்தம் எழுத அவருக்குச் சாவகாசமிருந்ததாம். அவர் எழுதிய தூஷணங்களில் சிலவற்றை "லூத்தேரினத்தியல்பு, வேதவிளக்கம்" என்ற புத்தகங்களில் இன்னுள்ளவைக்கும் திருஷ்டாந்தமாகக் காணலாம். ஆகிலும் தூஷணங்கள் எல்லாம் பிரித்துத்தள்ளி நியாயங்கள் மாத்திரம் பார்க்கிறபோது வீரமாமுனிவர் சொல்லிய பெரும்பேச்சுகள் மகா சிறிதாய்க் காணுகிறது. சீகன்பால்கு செய்த மொழிபேர்ப்பில் வீரமாமுனிவர் சில வாக்கியங்களை பிழையுள்ளவைகள் என்றும், சிலவற்றை புரட்டானவைகள் என்றும் கண்டிக்கிறார். அவர் சொல்லுகிற பிழைகள் பெரும்பாலும் பிழைகள்தான் என்று ஒத்துக்கொண்டாலும் வீரமாமுனிவர் முதலாய் வேதாகமங்களை பிழையற மொழிபேர்க்கத்தக்கவரல்லவென்று அவர் (௧ கொரிந்தியர் ௩. உ) குறித்துச் சொல்லியவைகளால் திருஷ்டாந்தப்படுகிறது. சீகன்பால்கு அங்கே "நீங்கள் இன்னம் மாம்சத்தராய் இருக்கிறீர்கள்" என்று திருப்பியிருக்கிறதைக் கண்டு, வீரமாமுனிவர் முறையிடுகிறார். இப்படி அவர்கள் திருப்பினதென்ன? மாம்சமில்லாத மனிதர் உண்டோ? மனிதருக்கு "மாம்சமிருந்தாலும் அபூர்வமோ?" என்கிறார். பின்பு திருப்பவேண்டிய மாதிரியைக் காட்டுவோம் என்று சொல்லி, "உடலாசையில் தாழ்ந்த உணர்வினராய் இருக்கிறீர்கள்" என்று எழுதுகிறார். மூலபாஷையை கவனிக்கும்போது சீகன்பால்க் எழுதினது சரி என்றும், தமிழ்நடையை கவனிக்கும்போது இருவரும் எழுதினது சமானம் என்றும் சொல்லவேண்டும். பின்பு வீரமாமுனிவர் புரட்டென்று கண்டிக்கிற வாக்கியங்களில் 1 கொரிந்தியர் 9. 5. எபிரேயர் 13. 4. 2 பேதுரு 1. 10. மூன்று வாக்கியங்

1857௵ கோவைக் குருக்கள் பிரசித்தம்பண்ணின நாலு சுவிசேஷங்களும், அப்போஸ்தலர் நடபடியும் ஆகிய புஸ்தகத்திற்கு அவர்கள் எழுதிய முகவுரையில் இந்தப் போக்குச் சொல்லியிருக்கக் காணலாம்.

களை பார்ப்போமாக. 1 கொரிந்தியர் 9. 5. சீகன்பால்கு திருப்பின வகையாவது. "மற்ற அப்போஸ்தலன்மார்களைப்போலேயும் ஆண்டவருடைய சகோதரர்களைப்போலேயும், கூடப்பிறந்தவளாயிருக்கிற ஒரு ஸ்திரீயை பெண்சாதியாக எங்களோடே கூட்டிக்கொண்டுபோகவும் எங்களுக்கு வல்லமை உண்டாயிருக்குதல்லவா." வீரமாமுனிவர் இதை விகடமாகக் கணித்து, "பெண்சாதியாக" என்ற வார்த்தையை சீகன்பால்க் சும்மா கூட்டினதாகச் சொல்லி, இப்படிப்பட்ட முறைகேடான போதகம்பண்ணலாமா என்பதாய்க் கூவி, பின்பு சரியாய்த் திருப்பவேண்டுமானால் "நாங்களும் ஒரு பெண்பிள்ளையை தங்கச்சியாகக் கூட்டிக்கொண்டுபோகக் கூடாதோ" என்பதாய்த் திருப்பவேண்டுமென்று சாதிக்கிறார். ஆகிலும் சீகன்பால்க் எழுதிய "பெண்சாதி" என்ற வார்த்தை மேற்படி மூலத்திலும் லத்தீன் பிரதியிலும் கண்டிருக்கிறது மெய். "தங்கச்சி" என்று வீரமாமுனிவர் எழுதின வார்த்தையே மூலத்திலும் லத்தீன் பிரதியிலும் காணாமல் சும்மா கூட்டப்பட்ட வார்த்தை என்று நியாயமுள்ள எவனுக்கும் விளங்கும். சீகன்பால்க் திருப்பின வகையில் கொஞ்சம் பிழை காண்கிறதேயன்றி புரட்டு ஒன்றுமில்லை. வீரமாமுனிவர் எழுதினதில் மாத்திரம் புரட்டும் அபிப்பிராயமும் காண்கிறது. எபிரேயர் 13. 4. சீகன்பால்க் "சகல பேர்களிடத்திலே சமுசாரத்துவம் சங்கிக்கப்படத்தக்கது" என்று திருப்பினார். வீரமாமுனிவர் "எல்லாத்திலும் விவாகம் சங்கிக்கப்படக்கடவது" என்று திருப்புகிறார். இதிலேயும் வீரமாமுனிவர் சொல்லுகிற புரட்டு புரட்டல்ல. 2 பேதுரு 1. 10. வீரமாமுனிவர் திருப்புகிற வகையாவது. "தம்பிமாரே ஆண்டவர் உங்களை அழைத்து தெரிந்துகொண்ட சகாயம் உங்கள் தரும நடக்கைகளைக்கொண்டு நிலைகொள்ளும்படிக்குச் செய்யப் பிரயாசப்படுவீர்களாக." சீகன்பால்க் "தரும நடக்கைகளைக்கொண்டு" என்ற மொழியை விட்டு எழுதினது தப்பிதம் என்று வீரமாமுனிவர் கண்டிக்கிறார். ஆகிலும் கிரேக்க மூலத்திலே அப்படிப்பட்ட வார்த்தையில்லாததினாலே சீகன்பால்க் அதைக் காட்டவும் இல்லை. லத்தீன் பிரதியிலே அந்த வார்த்தைகள் கூட்டப்பட்டதினாலே வீரமாமுனிவர் அவைகளைக் காட்டினார். ஆகையால் புரட்டிருந்தாலும் அது சீகன்பால்க் பேரிலே அதைச் சாற்றக்கூடாது. பொதுப்படப் பார்க்கும்போது பிழை புரட்டென்று சொல்லி வீரமாமுனிவர் எத்தனையாய்க் கோபித்துத் தூஷணித்தாலும் அவைகளைக் குறித்து அவர் கோபிக்காமல் கர்த்தருடைய வசனத்தை சீகன்பால்க் தமிழ்த்திருப்பிப் பிரசித்தப்படுத்தினதினிமித்தமே கோபித்துக்கொண்டாரென்று தோன்றுகிறது. வீரமாமுனிவர் பிதற்றின தூஷணங்கள் எல்லாம் கொஞ்சங்குறைய மறந்துபோயிற்று. ஆனாலும் சீகன்பால்க் செய்த நல்ல வேலை தமிழ்ப் பாஷை முழங்குமளவும் மறந்துபோகாமல் மேன்மேலும் பிரகாசித்து விளங்கும். தமிழ்ப் பாஷை எங்கெங்கே வழங்குகிறதோ அங்கங்கே சீகன்பால்க், ஷுல்ச்சு என்ற மகாத்துமாக்கள் செய்ததும் அவர்களுக்கு நினைவுகூருதலாகச் சொல்லப்படும்.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.** இங்கிலேய தேசத்தில் உள்ள லீட்ஸ் நகரத்திற்குச்



சமீபித்த நிலக்கரிக்குழி ஒன்றில் இயற்கையாய் உண்டான நிலக்கரி ஆவிபற்றி எரிய முப்பது நாற்பது வேலைக்காரர் பிராணசேதமடைந்தார்கள். இங்கிலேயருக்கும் பிரான்சியருக்கும் பிரயோசனகரமாய் 1866ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட வர்த்தக உடன்படிக்கை புதிதாய் நிலைப்பட்டது. அதில்கண்ட பேதம் மிகுசொற்பம். நெப்போலியன் சக்கரவர்த்தியின் குமாரன் பிரான்சில் தமது சிநேகரைப் போய்க் காணும்படி அங்கங்கே படையெழும்பினவரா, பிரஜாதிபத்தியத் தலைவராகிய தேயர் துரை அவர் உபாயமாய் துரைத்தன விஷயமானதே ஏதோவொன்றைப்பற்றி அப்படிப் போய்வருகிறாரென்று சமுசயங்கொண்டு, அவரைத் தேசத்தினின்று விலக்கினார். அவர் பிரான்சிய துரைத்தனத்தார் தம்மை நடத்தினவிதம் சகாசதும் அநியாயமுமாயிருக்கிறதென்றெண்ணி, ஐரோப்பாவைச் சேர்ந்த மற்றத் துரைத்தனத்தாருக்கு முறையிடப்போகிறாராம். பிரான்சிய துரைத்தனம் அத்தனை திடப்படாத நிலையிலில்லை. ரோமான் சபையைச்சேர்ந்த ஹயசின்த் என்னும் பிரான்சிய குரு ஒருவர் தற்காலத்தில் அமெரிக்க தேசத்தில் ஒரு பெண் ஒருத்தியை விவாகம்பண்ணிக்கொண்டார். அவர் தம் ஆயுளின் காலமெல்லாம் விவாகம்பண்ணுவதில்லையென்று பிரமாணிக்கஞ்செய்து குருப்பட்டம் பெற்றிருந்தும், தாம் பண்ணிய பிரமாணம் தேவ கட்டளைக்கு மாறாய் மனிதர் கற்பித்த கற்பனைக்கு இணங்கினதாய் மாத்திரமிருப்பதால் உறுதியற்ற அக்கற்பனையைத் தள்ளிப்போடுவது பாவமல்லவென்கிறார். அவர் செய்த வண்ணம் பிரான்சிய குருக்கள் அநேகர் விவாகஞ்செய்துகொள்வார்களென்று அத்தேச சங்கதிகளையறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

**ஆப்பிரிக்கா** கண்டத்தைச் சேர்ந்த ஜன்ஜிபார் தீவில் அரசுள்ள சுல்த்தான் அனுமதியோடு தலைப்பட்டு நடத்திவருகிற அடிமை வியாபாரத்தை ஒழிவிக்கும்பொருட்டு, ஸ்ரீபார்ட்டில்பிரெயர் என்னப்பட்ட துரையும், அவருக்குத் துணைநிற்க ஒரு கூட்டமும் மற்றும் சிலருடன் இங்கிலந்தினின்று அனுப்பப்படுவார்கள். மகாராஜாத்தியவர்களின் மந்திரியாகிய கிரான்வில் பிரபு கொண்டிருக்கிற அபிப்பிராயத்துக்கு டியூக் ஆர்கயில் பிரபு இணங்கியிருக்கிறபடியால், ஒருவேளை ஸ்ரீபார்ட்டில்பிரெயர் முதலானவர்களுக்குத் துணைநிற்கும்படி சில துரைமார் இந்தியாவினின்றும் அனுப்பப்படுவார்கள்.

**இந்தியாவில்** இருப்புப்பாதை அவ்வவ்விடங்களில் இணைத்துச் செல்லும்படி மகாராஜாத்தியவர்களுடைய மந்திரிமார் உத்தரவு செய்திருக்கிறார்கள். வடமேற்கு இந்தியாவில் உள்ள ஜீலம் என்கிற ஊரினின்று அங்கிலோ இந்திய துரைத்தனத்தாருடைய வடமேற்கு எல்லையில் உள்ள ராயல்பிண்டிமட்டும் பாதைவேலை சீக்கிரமாய் நடக்கத்தொடங்கும். அது முன் உண்டாக்கப்பட்ட இருப்புப் பாதைகளைப்போல துரைத்தன உத்தரவுபெற்ற சங்கத்தாரால் உண்டாக்கப்படாமல், துரைத்தனத்தாராலேயே உண்டாக்கப்படும். திருச்சிராப்பள்ளியிலிருந்து ஆற்றுக்குடிமட்டும் நீடிக்கப்படுகிற தென்னிந்திய இருப்புப்பாதைச் சங்கத்தாரது பாதை வேலையும் நடந்துவருகிறது.

முன் பாளையங்கோட்டை சர்ச்சுமிஷியன் அச்சுக்கூடத்தின் சூப்பிரிண்டெண்டாயிருந்து அப்புறம் திருவனந்தபுரம் துரைத்தன பாடசாலையின் உபாத்தியாயராயிருந்த ஸ்ரீ ஜான் டெவ்ஸ்லி துரை தேகசுகவீனங்கண்டு, சீமைக்குப்போய் அங்கே தேகவியோகமானதென்று கேள்விப்பட்டோம். அத்துரையவர்களின் சுசீலங்களையறிந்த யாவரும் நம்முடன் அனுதாபப்படுவார்களென்பதற்கையமில்லை.

---

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | கஅ | கர்த்தருக்குப் பலியிடும்படி சனங்களைப் போகவிடு. யாத். 8: 8. |
| ச | 2 | கூ | எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை 10. |
| ஞா | 3 | உ0 | மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். 12. |
| தி | 4 | உக | கர்த்தர் மோசேயின் சொற்படி செய்தார். 13. |
| செ | 5 | உஉ | கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார். 1 இரா. 17: 22. |
| பு | 6 | உங | உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை. |
| வி | 7 | உச | ஒபதியா கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவனாயிருந்தான். 18: 3. [24. |
| வெ | 8 | உரு | நான் சிறுவயதுமுதல் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன். 12. |
| ச | 9 | உசா | நானோ சிறுமையும் எளிமையுமானவன். சங்கீதம் 70: 5. |
| ஞா | 10 | உஎ | தேவனே! என்னிடத்தில் தீவிரமாய் வாரும். 5. |
| தி | 11 | உஅ | நீரே என் துணையும் என்னை விடுவிக்கிறவருமானவர். 5. |
| செ | 12 | உகூ | கர்த்தாவே! தாமதியாதேயும். 5. |
| பு | 13 | ங0 | கர்த்தாவே! உம்மை நம்பியிருக்கிறேன். 71: 1. |
| வி | 14 | க | உம்முடைய நீதியினிமித்தம் என்னைக் காத்தருளும். 2. |
| வெ | 15 | உ | நான் எப்பொழுதும் வந்தடையும் கன்மலையாயிரும். 3. |
| ச | 16 | ங | ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் யார்! பிரசங்கி 8: 1. |
| ஞா | 17 | ச | பொல்லாதகாரியத்திலே பிடிவாதமாய் நில்லாதே. 3. |
| தி | 18 | ரு | மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி. 6. |
| செ | 19 | சா | துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கமாட்டாது. 8. |
| பு | 20 | எ | துன்மார்க்கனுக்கு நன்றாயிருப்பதில்லை. 18. |
| வி | 21 | அ | கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியுண்டு. ஏசாயா 45: 24. |
| வெ | 22 | கூ | யாக்கோபின் சந்ததியாரே, எனக்குச் செவிகொடுங்கள். 46: 3. |
| ச | 23 | க0 | நரைவயதுமட்டும் நானும் உங்களைத் தாங்குவேன். 4. |
| ஞா | 24 | கக | யாருக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? 5. |
| தி | 25 | கஉ | இனி அவர்களை நேசிக்கமாட்டேன். ஓசியா 9: 15. |
| செ | 26 | கங | என் தேவன் அவர்களை வெறுத்துவிடுவார். 17. |
| பு | 27 | கச | வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. யோவான் 6: 58. |
| வி | 28 | கரு | ஆவியே உயிர்ப்பிக்கிறது. 63. |
| வெ | 29 | கசா | மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. 63. [24. |
| ச | 30 | கஎ | தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ரோ. 1: |

## விசேஷித்த நாட்கள்.

1. அமாவாசை.
3. கிறிஸ்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் இருபத்துமூன்றாம் ஞாயிறு.
10. கிறிஸ்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் இருபத்து நாலாம் ஞாயிறு.
14. பௌர்ணமி.
17. கிறிஸ்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் இருபத்தைந்தாம் ஞாயிறு.
24. கிறிஸ்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் இருபத்தாறாம் ஞாயிறு.
30. அமாவாசை.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 24. December. No. 12.

## Contents:

Bible Sketches and their Teachings. ... ... ... ... 222
Christian Church History. ... ... ... ... ... ... 224
On the Liturgy. ... ... ... ... ... ... ... 227
Notes on Genesis. ... ... ... ... ... ... ... 229
The Parables of Christ. ... ... ... ... ... ... 231
A Family Commentary on the Sermon on the Mount. ... 234
Communicant's Companion. ... ... ... ... ... 236
Summary of News. ... ... ... ... ... ... ... 239

## அட்டவணை:

பாலபோதனை. ... ... ... ... ... ... ... உஉஉ
கிறிஸ்து சபை சரித்திரம்.... ... ... ... ... உஉச
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ... உஉஎ
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ... உஉகூ
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ... உஙக
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... உஙச
நற்கருணை விளக்கம். ... ... ... ... ... ... உஙசா
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... உஙகூ

Palamcottah;
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.
1872.

# நற்போதகம்.

௰௨. டிசம்பர்மீ. ௲௮௭௨௵.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனே.

### மோசேயின் மரணம்.

உபாகமம் 32 : 48—52 ; 34. அதி.

(தொடர்சசி.)

மோசேயின் மரணத்தைப்பற்றி இரண்டு மூன்று விசேஷங்களே இன்னம் யோசித்துக்கொள்வோமாக.

முதலாவது, அவன் மரிக்கவேண்டியது ஏன்?

அவன் வியாதிப்பட்டிருக்கவில்லை. பலட்சயப்பட்டுப்போனவனு மல்ல. உலகத்திலே நூற்றிருபது வருஷம் சீவித்திருக்கிறுன. என்று ஆம் முட்செடி பற்றியெரிந்தபொழுது அவன் கண் எவ்வளவு பிரகா சமாயிருந்ததோ இப்பொழுதும் அவ்வளவு பிரகாசமாகவேயிருந்தது. சிவப்புக்கடலின் மீது கோலே நீட்டின வேளேயில் அவன் கை எவ்வள வு பலமுள்ளதாயிருந்ததோ இப்பொழுதும் அவ்வளவு பலமுள்ளதா கவேயிருந்தது. யோர்தான் நதியையுங் கடந்து சனங்களே அவர்கள் சுதந்தரத்துக்கு நடத்திக்கொண்டுபோகவும் அவன் கூடியவனுக வேயிருந்தான்.

அன்புள்ள பிள்ளேகளே! மரணமெல்லாம் தண்டனேதான். சிறுகுழந் தை ஒன்று மரிக்கையில் பாவம் எவ்வளவு பயங்கரமானதென்று காண்கிறேம். பாவமானது சகலரையும் பாதாளத்துக்குக் கொண்டு போகின்றது. மோசே என்பவனே விசேஷமாய் ஒரு பாவத்தினிமித் தமாக இப்பொழுது தண்டனேயடைந்தான். அந்தப் பாவம் யாதெ ன்று கேட்கிறீர்களோ? இஸ்ரவேலா பிரயாணமான துவக்கத்தில் கன்மலே யடிக்கப்பட்டதும் தண்ணீர் அதினின்று புறப்பட்டு ஓடின தும் உங்களுக்கு ஞாபகமிருக்குமே. நல்லது, அவர்கள் பிரயாணமுடி யப்போகிற காலத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தருகிற் சேர்ந்து பாளேயமிறங்கியிருந்தபோதும் அவர்களுக்கு தண்ணீர் வேண் டியிருந்தது. முந்திய முறை செய்ததுபோலவே தேவனும் அவர்கள் குறைவை நிவர்த்திபண்ண மனதாயிருந்தார். மோசேயோ கோபமு ண்டவனுன். தேவன் கற்பித்த பிரகாரம் மலேயைப் பார்த்துப் பேச வேண்டியதாயிருக்க, அவன் தன் கோலேயெடுத்து இரண்டு விசை மலேயை யடித்தான். அது மாத்திரமல்ல, ஆரோனும் அவன் பக்கத்தில் நிற்க, சனங்களே நோக்கி, "கலகக்காரரோ கேளுங்கள், நாங்கள் உங் களுக்கு இந்த மலேயிலிருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டுமோ" என் று உரத்த சத்தமாய்ச் சொன்னுன். "நாங்கள்" என்று சொன்னதி ஞல் தானும் ஆரோனும் செய்யப்போகிற காரியம்போல காட்டினு



னே. ஆம் அவன் இவ்வளவுகாலம் தேவனே நம்பி அவருக்கு ஊழியஞ் செய்துகொண்டு வந்திருந்தும், இந்தச் சமையத்தில் அவரை மறந்து விட்டான். அவன் பேசின வார்த்தைகளேப் பார்க்கும்போது, "இஸ் ரவேலரே நீங்கள் ஏன் எங்களே நம்புகிறதில்லே, நாங்கள் உங்களுக்குத் தண்ணீர் கொடுப்போம்" என்ற சாடையாயிருக்கிறதே. ஆகையால் மோசே ஆரோன் என்றவர்களால் சனங்கள் இரட்சிக்கப்படாமல் தம் மாலேயே இரட்சிக்கப்படவேண்டுமென்பதை வெளிப்படையாக கா ண்பிப்பேனென்று தேவன் திருவுளம்பற்றினுர். அதெப்படியென்றுல், அவ்விருவரும் கானுன்தேசத்திற் பிரவேசிக்குமுன்னதாகவே மரித் துப்போகவேண்டும். அதினுல் மோசேயல்ல, தேவன் தாமே அந்தச் சனத்தை நடத்திக்கொண்டு வந்து சேர்த்தாரென்று சகலரும் அறிந் துகொள்ளுவார்களே. (4 மோசே 20: 12.)

இரண்டாவது, மோசே தனக்கு வந்த தண்டனேயைச் சகித்துக் கொண்டதெப்படி?

கானுன்தேசத்திற் பிரவேசிக்குமுன் அவன் சாகும்படி நேரிட்டது அவனுக்கு மகா பெரிய துன்பந்தான். என்றுலும் தாழ்மையாயும் பொ றுமையாயும் அதற்குச் சம்மதித்துக்கொண்டான். தான் செய்தது தப்பிதமென்று க்ஷணத்திற் கண்டுகொண்டான். அதினிமித்தம் தான் தண்டிக்கப்படுவது நியாயம் என்றும் உணர்ந்தான். முந்திய நாட் களில் தேவன் சனத்தின்பேரில் கோபமானபொழுதெல்லாம் அவர் களே அழித்துப்போடாமல் தப்பவிடும்படிக்கு அவர்களுக்காக வேண் டிக்கொண்டான். இப்பொழுதோ தனக்காக அப்படிப் பிரார்த்திக்கி றதைக் காணும். கர்த்தர் மோசேயை மரணமடைவதற்கு மலேயிலே றும்படி கற்பித்தபொழுது மோசே தைரியமாயுஞ் சாந்தமாயும் சொ ன்ன ப்ரார்த்தியான வார்த்தைகளேப் பார்ப்போம். அவைகளே எண்ணு கமம் இருபத்தேழாம் அதிகாரம் பதினேந்து, பதினுறு, பதினேழாம் வாக்கியங்களிற் காணலாம். "அப்பொழுது மோசே கர்த்தரை நோக் கி, கர்த்தருடைய சபை மேய்ப்பனில்லாத மந்தையைப்போல இராத படிக்கு அந்தச் சபைக்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருக்கும் படிக்கும், அவர்களேப் போகவும் வரவும் பண்ணும்படிக்கும், மாம்ச மான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனுகிய கர்த்தர் ஒரு புருஷனே அவர்களமேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும் என்றுன்." இந்த வாக்கியங்களில் அவன் தன்னேக்குறித்து ஒன்றுஞ் சொல்லுகிறதுமில் லே, முறையிடுகிறதுமில்லே. சனங்களுக்காகவே கவலேப்படுகிறதைப் பார்க்கிறேம். "எனக்கு என்ன நேரிட்டாலும் பெரிய காரியமல்ல, இஸ்ரவேலர் பாதுகாக்கப்பட்டு சுகமே தங்கள் வீடுபோய்ச் சேரவே ண்டும்" என்பதுபோல பேசுகிறுன்.

தேவன் அவனுக்குக்குறித்த தண்டனேயை இந்தவிதமாய்ச்சகிக்கிற து தானே சரி. மோசேயின் சாந்த குணத்தைக்கொண்டு நாம் ஒரு காரியம் படித்துக்கொள்வோமாக. நமது குற்றங்களினிமித்தம் நாம் துன்பதலேதச் சகிக்கும்போது, "இதெல்லாவற்றிற்கும் நான் பாத் திரன் தான், என் பாவத்தின் மூலமாய் மற்றவர்களுக்குப் பொல்லாப் பு நேரிடாதிருப்பதாக" என்று மோசேயைப்போல உணர்ந்து சொல் லுவோமாக.

மூன்றுவது, மரணவேளேயில் மோசேக்கு உண்டாயிருந்த ஆறுத லென்ன? துவக்கத்தில் நாம் பார்த்ததுபோல, மக்கள் பெந்துக்களு டைய அன்பான கைகளும் உருக்கமான இருதயங்களுமல்ல அவனுக் கு ஆறுதலேக் கொடுத்தவைகள். அதனிலும் அருமையும் இனிமையுமா

ன வேறென்று. மோசே மரிக்கவேண்டியதென்றாலும் தேவன் அவ
னுக்கு மகா இரக்கமுள்ளவராக விளங்கினார். விசேஷமாய் மோசே
கேட்டுக்கொள்ளாத ஒரு பெரிய ஆசீர்வாதத்தை தேவன் அவனுக்கு
அருளினார். அவன் சாகிறதற்குமுன கானான்தேசத்தைப் பார்த்துக்
கொள்ளும்படிக்கு அவனுக்கு அருள் கிடைத்தது. அவனுடைய கண்
இருண்டுபோகவில்லை. தேவன் அவனை மலையின் உச்சிக்கு அழைத்துக்
கொண்டுபோய் அந்த அழகிய தேசத்தை மறைக்கத்தக்க மப்புமந்
தாரம் முதலிய எதுக்களையெல்லாம் நீக்கிப்போட்டார். தேசமுழுமை
யும் அவனுக்குமுன விரிக்கப்பட்டிருந்தாற்போல தோன்றிற்று. அவன்
பாதத்தண்டை பசுமையான மைதானங்களையும் யோர்தான் நதி
வேகமாய் அவைகளை ஊடுருவிப் பாய்கிறதையுங் கண்டான். வலதுபா
ரிசத்தில் செழிப்பான பள்ளத்தாக்குகளும் அழகான தோப்புகளும்
தானியத்தால் மூடிய வயல் வெளிகளும் தூரத்தில் சிவப்பு நிறமான
பனிக்கட்டி யுறைந்த லீபனோன் மலைகளும் காணப்பட்டன. இடதுபாரி
சத்தில் கடலின் அலைகளைப்போல மலைகள் ஒன்றின்மேல் ஒன்றாய்
அமைந்திருக்கிறதைக் கண்டான். அவன் அவைகளைப் பார்த்துக்கொ
ண்டு நிற்கையில், ஒரு வேளை அசரீரவாக்கு ஒன்று பிறந்தாலும் பிறந்
திருக்கும். “சமாதானபுரம்” என்றர்த்தங்கொள்ளும் எருசலேம் நக
ரம் அதோ அங்கேயிருக்கும்; தேவன் அநேகவருஷக்காலமாய் ஆரா
திக்கப்படும் தேவாலயம் அதோ அந்த இடத்திற் கட்டப்படும்; அதற்
கப்பால் காணப்படுகின்றனவே மலைகள், அந்த மலைகளில் ஒன்றின்
மீது ஒருநாள் ஒரு சிலுவை நிறுத்தப்படும். தேவகுமாரனானவர் உலக
த்தை மீட்கும்பொருட்டு மேற்படி சிலுவையில் தொங்கி “தமது ஜீவ
னை விடுவார்” என்று அந்த அசரீரவாக்கு அவன் காதிலே தொனித்
தாலும் தொனித்திருக்கும். இந்த அழகிய சீமைக்கு அப்புறத்திலிருக்
கும் மெத்தத்தாரணியாக் கடலையும் மோசே சாடையாய்ப் பார்த்தா
லும் பார்த்திருப்பான்.

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 13. அதிகாரம்.

அலெக்சாந்தர் செவீரு இராச்சியபாரந் தாங்கினது.—கோவில்
கள் கட்டப்பட்டது.—அலெக்சந்திரியாவிலுள்ள பிளேத்தோ
வின் கொள்கைக்காரர்.—ஓரிஜன் குருப்பட்டமடைந்து செசாரி
யாவில் ஸ்தாபகமானது.—அவன் எழுதிய நூல்கள்.—மொசிமீ
இராயனால் எழும்பின துன்பம்.—பொதுவான சங்கங்கள்.—ஆத்
துமத்தைக்குறித்த அபிப்பிராயங்கள்.—பிலிப்புவின் அரசாட்சி
இவைமுதலிய விர்த்தாந்தங்களடங்கியது.

(தொடர்ச்சி.)

---

தேமேத்திரியுவுக்கும் ஓரிஜனுக்குமுண்டான இந்த மனஸ்தாபத்



துக்குக் காரணமின்னதென்று விளக்கிக்காட்டப் போதுமான விவ
ரமில்லை. பலஸ்தீனக் கண்காணிமார் தங்கள் சபையைச்சேராத ஒரு
வனுக்கு குருப்பட்டம் கொடுத்ததற்காக அவர்களைக்குறித்து அலெக்
சந்திரியாக் கண்காணியார் முறையிட்டிருக்கலாம். தான் சேர்ந்தி
ருந்த சபையிலிருந்து யோக்கியதாபத்திரங் கொண்டுபோயிராத
ஒரு அன்னியனுக்கு குருப்பட்டங்கொடுப்பது அக்காலத்தில் ஒழுங்
கீனமாக எண்ணப்பட்டிருக்குமே. அப்படிப்பட்ட செய்கை எக்கா
லத்திலும் அவிவேகமென்றுதான் கொள்ளப்படும். ஆனாலும் ஓரிஜன்
தேமேத்திரியுவினிடத்தில் நிருபம் வாங்கிக்கொண்டுபோயிருந்தானெ
ன்று தோன்றுகிறது. அந்த நிருபம் ஒரு சபையிலுள்ளவன் வேறொரு
சபையின் ஐக்கியத்திற் சேர்ந்துகொள்வதற்காக வழக்கமாய்க்கொ
டுக்கப்பட்ட தஸ்தவேசு என்று நினைக்கத்தக்கது. அப்படியானால் ஓரி
ஜனுடைய கொள்கைகள் வேத விரோதமானவைகளல்லவென்று தே
மேத்திரியு ஒப்புக்கொண்டிருக்கவேண்டுமே. அதினால் அவன் குருப்
பட்டத்துக்கு யோக்கியனென்று எண்ணியிருந்தானென்று நாம்
நினைக்கலாகாது. மேலும் அலெக்சந்திரியாப் பாடசாலை உபாத்தியா
யன் கண்காணியாரால் நியமனம்பெற்று, அவ்வுத்தியோகத்திலிருக்கிற
வரையில் அவருடைய அதிகாரத்துக்குட்பட்டிருந்தானென்றும் தோ
ன்றுகிறது. இந்த முகாந்தரத்தினாலேயே ஓரிஜன் என்பவன் பிறதே
சத்துக்குப் போய் குருப்பட்டம் பெற்றுக்கொண்டதினிமித்தம் தே
மேத்திரியு என்பவன முறையிட்டிருப்பான். ஓரிஜன் என்பவன் மிகு
தியும் பிரஸ்தாபமடைந்துகொண்டு வந்ததினால் டிை கண்காணி பொ
றாமைகொண்டு இவ்வாறு செய்ய ஏவப்பட்டானென்று நினைப்பாரு
முண்டு. இவ்விருவருக்குமுண்டான மனஸ்தாபம் அநேக காரணங்க
ளினாலே நாள்வட்டத்தில் பலப்பட்டுக்கொண்டு வந்ததென்று நிதா
னிக்கத்தக்கது. ஓரிஜன் என்பவனுடைய கொள்கைகளும் எதிரிகளைப்
பகைசாதிக்க ஏவிவிட்டிருக்கும் என்பதற்கும் சந்தேகமில்லை.
ஓரிஜன் என்பவன் கிரேக்கை தேசத்தைப்போய்ப் பார்த்தபிறகு
மறுபடியும் தன் ஜனன ஊருக்குத் திரும்பினபோதிலும் அவ்விடத்
திலிருக்க ஏதுவில்லாமற்போயிற்று. தேமேத்திரியு என்பவன் தன்
னைச் சேர்ந்த குருக்கள்மாரையும் எகிப்திலுள்ள கண்காணிமார்களை
யும் வசப்படுத்திக்கொண்டு அவனைக் குற்றப்படுத்த ஆயத்தமாயிருந்
தான். இவன் விஷயமாய் அலெக்சந்திரியாவிலே இரண்டு சங்கங்
கள் கூடின. முதலாம் சங்கத்திற் கூடினவர்கள் அவனைப் போதிக்கப்
படாதென்றும் பட்டணத்தைவிட்டுப் போய்விடவேண்டுமென்றும்
கற்பித்ததுமல்லாமல், இரண்டாம் சங்கத்தார் அவனைக் குருப்பட்
டத்திலிருந்தும் நீக்கி ஈங்கிஷைசெய்தார்கள். ஓரிஜன் என்பவன் அதற்
கு முன்னதாகவே பட்டணத்தைவிட்டுப் போயிருந்தாலும் போயிருக்
கலாம். எப்படியும் அவன் கி. பி. 231ஆம் கடைசிவிசையாய் அதை
விட்டுப்போய்விட்டதுமல்லாமல் அப்புறம அவ்விடத்துக்குத் திரும்பி
வந்ததேயில்லை. பாடசாலையில் அவனுக்குப் பதிலாக, வெகுகாலம்
அவனிடத்திற் கல்வி அப்பியாசஞ் செய்த மாணாக்கனும பின்பு அவ
னுக்கு உதவி ஆசிரியனுமாயிருந்த ஏராக்கிளாஸ் என்பவன் நியமிக்
கப்பட்டான். இவனும் அந்தத் தொழிலை அதிககாலம் நடப்பிக்கவில்
லை. எப்படியெனில் மறுவருஷத்தில் தேமேத்திரியுக் கண்காணியார்
இறந்துபோக, ஏராக்கிளா எனபவன் அவனுக்குப் பிரதியாகத் தெ
ரிந்துகொள்ளப்பட்டான். ஓரிஜனுடைய வேறொரு மாணாக்கன் டியோ
னிசியு என்று பெயர்கொண்டவன் பாடசாலைக்குத் தலைவனானான்.

ஒரிஜன் அதுமுதல் செசரியாவில் நிலையாய் ஸ்தாபகமாகி தண்ட
யில்லாமல் தொடர்ந்தேற்றியாய் வேதாகமங்களை வியாக்கியானம்
பண்ணுகிற அரிய முயற்சியை நடப்பித்துக்கொண்டுவந்தான். பலஸ்
தீனாவிலுள்ள சபைகள் மாத்திரமல்ல, பெனிக்கேயா, அராபியா, அகா
யா தேசங்களிலுள்ள சபைகளும் அவன் பக்ஷமாய் நின்றார்கள். அலெ
க்சந்திரியாக் கண்காணியார் ஒரிஜனைக்குறித்து வேதவிரோதமான
கொள்கைகளைச் சாதிக்கிறவனென்று மற்றச் சபைகளுக்குச் சரிசனை
யாய் எழுதியிருந்தபோதிலும் அவர்கள் அதை அவ்வளவாய் ஒப்புக்
கொண்டதாகத் தோன்றவில்லை. ரோமைக் கண்காணியாரும் இது
விஷயமாய் ஒரு சங்கம் கூடிவரச் செய்ததாகச் சொல்லியிருக்கிறது.
ஷெ சங்கத்தாருடைய தீர்மானங்கள் இத்தன்மையானவைகளென்று
அறிகிறதற்கு வகையில்லை. இக்காலத்தில் ஒவ்வொரு சபையும் தன்
தன் மட்டில் சுயாதீனமாய் தன் தனக்கடுத்த காரியங்களையெல்லாம்
தானே நடத்திக்கொண்டுவந்தபடியால், மற்றக் கண்காணிமார் ஒரி
ஜனையாவது, அவனுடைய கொள்கைகளையனுசரித்தவர்களையாவது
தங்கள் ஐக்கியத்திற் சேர்த்துக்கொள்ளப்படாதென்பதுபோல தே
மேத்திரியு எழுதியிருப்பான். ஆகிலும் ஒரிஜனுடைய மேற்படி கொள்
கைகள் அலெக்சந்திரியா ஒன்றுதவிர மற்றிடங்களில் அவ்வளவாய்த்
தெரியப்படவில்லையென்றும், தேமேத்திரியு நினைத்திருந்த அவ்வளவு
விபரீதமுள்ளவைகளல்லவென்றும் யூகிக்கத்தக்கது. ஒரிஜன் வாச
மாயிருந்த அலெக்சந்திரியாவில் நடந்ததுபோல வேறெந்தச் சபை
யிலாவது சங்கத்தாராலாவது அவன் சபைக்குப் புறம்பாக்கப்பட்
டான் என்பதற்கு அத்தாட்சியில்லை. மேலேகுறித்தபடி சிலர் பகிரங்
கமாய் அவனுக்குத் துணைநின்றார்கள். இக்காலத்தில் சபையிலே
துன்பம் தொல்லையில்லாமல் அமரிக்கையாயிருந்தபடியால், ஒரிஜனு
டைய பிரசங்கங்களைக் கேட்கும் நோக்கமாகவே உலகத்தின் பற்பல
இடங்களிலிருந்தும் அநேகர் செசாரியாவுக்கு வந்தார்கள். இவ்வாறு
வந்த சில பேர்களைக்கொண்டு, கிரேக்கருக்காவது ரோமருக்கா
வது தெரியப்படாத தேசங்களிலும் சுவிசேஷம் பிரபலியமாகியி
ருந்ததென்று நிதானிக்க இடமுண்டாகிறது. இந்நாட்களிலோ, இதற்
குப் பிறகோ கப்பதோக்கியா நாட்டில் கண்காணியாயிருந்த பர்மிலி
யேனு என்பவனும் வந்திருந்தான். இந்தக் காலத்திலே கப்பதோக்
கியாவில் பல சபைகள் அமைந்திருந்தன. மேற்படி சபைகளின் கா
ரியங்கள் ஒழுங்காய் நடந்தேறிவந்தபடியால், கண்காணிமார்கள் வரு
ஷாந்தரம் சங்கங்கள் கூடி தங்கள் நடபடிகள் வேறுபாடில்லாமல்
ஒரே சீராய் நடக்கத் திட்டம்பண்ணி வந்தார்கள். பற்பல நாடுகளிலி
ருந்து ஸ்தானாபதிகள் அனுப்பப்பட்டு ஒரோர் சமையத்தில் பொது
வான சங்கம் கூடினதுமுண்டு. அப்பேர்ப்பட்ட ஒரு சங்கம் இக்கோ
னியாப் பட்டணத்தில் கூடிவந்தது. பர்மிலியேனு என்பவனோடு பிரி
கியா, கலாத்தியா, கிலிக்கியா, கப்பதோக்கியாமுதலிய நாடுகளிலி
ருந்து ஐம்பது கண்காணிமார் அச்சங்கத்துக்கு வந்திருந்தார்கள்.
மொந்தேனியர் தப்பறையே இந்தச் சங்கம் கூடுவதற்குக் காரணம்.
இவ்வகுப்பார் மேலுமேலும் தொகையில் பெருகிக்கொண்டே வந்த
போதிலும், சபைத்தலைவர்களால் அடிக்கடி தடுக்கப்பட்டும் வந்தார்
கள். மொந்தேனியர் கொடுத்த ஞானஸ்நானம் சரியானதோ என்று
இப்பொழுது தர்க்கிக்கப்பட்டதில், இக்கோனியாப் பட்டணத்திற்
கூடின சங்கத்தார் அது சரியானதல்லவென்று தீர்த்தார்கள்.

---



On the Liturgy.

# செபபுஸ்தக வியாக்கியானம்.

## ரு. அதிகாரம்.

### ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

மூன்றுவது. திங்கள் கிழமை காலைக்குரிய முதல் பாடம்.
2 மோ. 16 : இதில் இஸ்ரவேலருக்கு ஆண்டவர் அனுப்பின மன்னாவை
க்குறித்து வாசிக்கிறோம். இது இரக்ஷகருக்கு முன்னடையாளம். வான
த்திலிருந்துவந்த சீவஅப்பம் அவரே. அவரைப் புசிக்கிறவனுக்கு நித்தி
ய சீவனுண்டு. திங்கள் மாலைக்குரிய முதலாம் பாடம். 2மோ. 17 :
இதிலே மோசே தன் கைகளை உயர்த்தினபோது ஆமலேக்கியர் அப
செயப்பட்டதைப்பற்றிச்சொல்லியிருக்கிறது. மோசேயின் நிலை சிலு
வையைப்போலிருந்தபடியால் கிறிஸ்துவின் சிலுவையைக்கொண்டு
கிறிஸ்தவர்கள் தங்கள் ஆத்துமசத்துருக்கள்மேல் அடையும் செயத்தை
யும் குறிக்கும். மலையை அடித்தபொழுது தண்ணீர் வந்ததாகவும் அந்
த அதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. இதுவும் நம்முடைய இரக்ஷக
ருக்கு ஒரு அடையாளம். மலையிலிருந்தோடின தண்ணீர் இஸ்ரவேல
ருடைய தாகத்தை தீர்த்ததுபோல, சிலுவையிலறையப்பட்ட நமது
இரக்ஷகர் நமக்கு சீவதண்ணீரையுந்தருகிறார். அதைச் சாப்பிடுகிறவன்
ஒருபோதும் தாகமடையான். 1கொரி. 10 : 14. இரண்டாம் பாடம்
கள் மத். 28. அப். 3. இதுகள் இரக்ஷகருடைய உயிர்த்தெழுதலைக்
குறித்து மற்றவர்கள் சொன்ன சாட்சியைக் காட்டுகின்றது. மூர்தி
னது அது சரித்திரமாய் நடந்த வரலாற்றைக்காட்டுகிறது. பிந்தினதில்
கிறிஸ்துவின் நாமத்தின்மேலுள்ள விசுவாசத்தினால், ஒரு சப்பாணி
குணமானதைக்குறித்து வாசிக்கிறோம். அவர் அப்பொழுது உயிரோ
டிருந்தார் என்பதற்கு அது போந்த ரூபகாரம்.
செவ்வாய் காலை முதல் பாடம். 2மோ. 20 : இதில் பத்துக் கற்பனை
சொல்லியிருக்கிறது. இதுகள் மோசேயின் மூலமாய் சனங்களுக்குக்
கொடுக்கப்பட்டது. தன்னைப்போலொத்த தீர்க்கதரிசியென்று இர
க்ஷகரை முன்னறிவித்தான். 5மோ. 18 : 15. அதாவது பரலோகத்திலி
ருந்து நூதனமான நியாயப்பிரமாணத்தைக்கொண்டுவந்து தேவசித்த
த்தை அதிகத் தெளிவாய் மனிதருக்குத் தெரியப்படுத்துகிறவனென்று
காட்டினான். மாலை முதலாம் பாடம், 2மோ. 32 : இதில் மோசே இஸ்
ரவேல் சனங்களுக்காகப் பரிந்துபேசுகிறான். அவர்களுடைய பாவங்
களை அவர்கள்மேல் சுமத்துகிறதைவிட தன்னை சீவபுஸ்தகத்திலின்று
கிறக்கிப்போடச் சொல்லுகிறான். இதில் அவன் கிறிஸ்துவுக்கு முன்
னடையாளமாயிருக்கிறான். அவர் நமக்காக மரித்து சாபமானார். காலை
இரண்டாம்பாடம், லூக். 24: 1-13. இதில் கிறிஸ்துவானவர் உயிர்த்தெ
ழுந்ததை பின்னும் ரூபகாரப்படுத்தியிருக்கிறது. மாலை இரண்டாம் பா

டம், 1கொரிந். 15: இதில் கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்தபடியால்
நாமும் உயிர்த்தெழுந்திருப்போமென்று பார்க்கிறோம்.
சுவிசேஷ திருபவாக்கியங்கள் பழைய செபபுஸ்தகங்களில் உள்ளப
டியே இருக்கிறது. செவ்வாய்க்கிழமைக்குரிய சுருக்கசெபம் கடைசி
யாக செபபுஸ்தகம் திருத்தப்பட்டபோது சேர்க்கப்பட்டது. அதற்கு
முன்னே பிந்தின ஞாயிறுக்குரியதை அந்நாளில் வாசித்துவந்தார்கள்.

## XIX. ஈஸ்தருக்குப் பின்வரும் ஞாயிறுகள்.

ஈஸ்தருக்குப் பிந்தின முதல் ஞாயிறில் ஈஸ்தர் நாளுக்குரிய சில
ஆராதனைகளை நடப்பிக்கிறதுண்டு. மேலும் அந்த நாளில் ஈஸ்தருக்
குமுந்தின இரவில் ஞானஸ்நானம்பெற்றவர்கள் தங்களை ஞானஸ்நான
வெள்ளை உடுப்புகளை இந்த நாளில் கோவிலில் வைத்துவிடுவார்களாம்.
ஞானஸ்நானத்தில் தாங்கள் அறிக்கையிட்ட விசுவாசத்தை மறுத
லிக்கும் சமயத்தில் இதை அவர்களுக்கு எடுத்துக் காண்பிக்கிற
துண்டு. திருப வாக்கியத்தில் இதைக் குறிப்பாகக் காட்டியிருக்கிறது.
அதில் தேவனால் பிறந்தவர்கள் ஞானஸ்நானத்தில் தாங்கள் செய்த
தீர்மானத்தின்படி உலகத்தைச் செயிக்கப் பிரயாசப்படும்படி ஏவப்
படுகிறோர். திருப வாக்கியமும் சுவிசேஷ வாக்கியமும் பழைய செ
பபுஸ்தகங்களிலுள்ளபடி காணிருக்கிறது.
இரண்டாவது. ஈஸ்தருக்குப் பின்வரும் மற்ற ஓய்வுநாட்களையும் இர
க்ஷகருடைய உயிர்த்தெழுதலை நினைக்கிறதிலும், தேற்றரவாளனைப் பற்
றிய வாக்குத்தத்தங்களை நினைவுகூருகிறதிலும் சந்தோஷமாய்ப் பின்
னிடுவதுண்டு. ஈஸ்தர்முதல் பரிசுத்தாவியின் பண்டிகைவரையுமுள்ள
சுவிசேஷ வாக்கியங்களெல்லாம் இந்த இரண்டு சந்தோஷமான சங்
கதிகளைக் குறித்தே பேசுகிறது. நம்முடைய சந்தோஷம் உலகத்
துக்குரியதாய்ப் போகாதபடிக்கு கிறிஸ்துவை விசுவாசிக்கவும் பாவ
மாகிய மரணத்தினின்று எழும்பவும் மெய்மனஸ்தாபமும், அன்பும்,
சாந்தமும், மன்னிக்கிற குணமும் உடையவர்களாயிருக்கவும் நம்மை
எழுப்பிவிடுகிறது. இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதில் கிறிஸ்
துவே நமக்கு முன்மாதிரியாயிருக்கிறார். ஆவியைப்பற்றின வாக்குத்
தத்தம் நமக்குப் பெலனும், ஆறுதலும், தைரியமும் கொடுக்கத்தக்
கது.

இரண்டாம் ஞாயிறுக்குரிய சுருக்கச்செபம் கடைசியாகச் செப
புஸ்தகத்தைப் பார்வையிட்டபோது 1549-ம் வருஷத்தில் கூட்டப்
பட்டது. நாலாம் ஞாயிறுக்குரிய சுருக்க செபம் அந்த வருஷத்தின்
துவக்கத்தில் திருத்தப்பட்டது. மற்ற சுருக்க செபங்கள் அதிக பூர்
வீகமுள்ளவைகள்தான். திருப சுவிசேஷ வாக்கியங்களும் அப்படி
யே. இந்தக் காலத்துக்கு அவைகள் மிகவும் ஏற்றது. 5-ம் ஞாயிறுக்
குரிய சுவிசேஷ வாக்கியம் இரண்டு காரணங்கள் நிமித்தம் விசேஷி
த்தது. வியாழக்கிழமையில் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளும் பர
லோகத்துக்கேறின சங்கதியை முன்னறிவிக்கிறதாயிருக்கிறது. இர
ண்டாவது, பிந்தின மூன்று நாட்களுக்குரிய வேண்டுதல்களுக்கேற்
றது.

## XX. பரலோகத்துக்கேறின நாளுக்கு முந்தின மூன்று நாட்கள்.

5-ம் நூற்றாண்டின் மத்தியில் வீயன்னு பட்டணத்துக்கு கண்காணி
யாயிருந்த மெமர்க்கஸ் என்பவர் தன் சேகரத்துக்கு நேரிட ஏதுவா
யிருந்த துன்பங்கள் நிமித்தம் இந்த மூன்று நாட்களில் விசேஷித்த



விதமாய் உபவாசித்து செபம்பண்ணவேண்டுமென்று கற்பித்திருக்
கிறார். இதினால் இதுகளுக்கு விண்ணப்ப நாட்களென்று பெயர். வே
று சில கண்காணிமார்களும் இப்படியே செய்யத் தொடங்கினார்கள்.
6-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆளியன்ஸ் என்னும் பட்டணத்
தில் கூடிய முதற் சங்கத்தில் வருஷந்தோறும் இதுகளை ஆசரிக்க
வேண்டுமென்று சட்டம் உண்டாயிற்று.
இரண்டாவது. இந்த நாட்களில் இரக்ஷகர் பரமண்டலத்துக்கேறி
னதை பத்தியோடு நினைத்து உபவாசிப்பது மாத்திரமல்ல, நம்முடை
ய பாவங்களின் நிமித்தம் தேவகோபம் நம்மைத் தொடாதபடிக்கும்,
பூமியின் பலன்களை ஆசீர்வதிக்கும்படிக்கும், அக்காலத்தில் உண்டாவ
தற்கு ஏதுவான பெருவாரிநோய், யுத்தமுதலிய தேவ தண்டனைகள்
வராதபடிக்கும் உபவாசித்துச் செபம்பண்ணுகிறதுண்டு.

---

## Notes on Genesis.

---

## ஆதியாகம வியாக்கியானம்.

### கூ. அதிகாரம்.

### தேவன் நோவாவோடு செய்த உடன்படிக்கை, நோவா தன் மக்களுக்குச் சொன்ன ஆசீர்வாதங்கள்.

தொடர்ச்சி.

---

27. "யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்" அதாவது
அவன் சந்ததியாரை அதிகமாய்ப் பெருகப்பண்ணுவார் என்றர்த்தம்.
ஐரோப்பாக்கண்ட முழுவதும், சின்ன ஆசியா, மீதியா, அர்மீனியா
வில் ஒருபங்கு, இபேரியா, அல்பானியா, முதலிய நாடுகளில்
தர்த்தாரியருமிருக்கிற வடபாகமுமெல்லாம் யாப்பேத்தியரால் குடி
யேற்றப்பட்டது. இப்படியாக உலகிலுள்ள சனங்களில் பாதிக்கு அதி
கமானபேர் யாப்பேதின் ஏழு புத்திரரால் உண்டானவர்கள். கிறிஸ்
துவின் சுவிசேஷத்தை அங்கீகரித்த புறச்சாதியாரில் மிகுதியானபே
ரும் அவர்களே. 10: 1—5. வியா.
"அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்."
அதி கூடாரம் என்ற வார்த்தை வேதத்தில் 2 கருத்தாய் வழங்கியது.
மனிதர் வாசஞ்செய்யும் வீட்டையும் தேவாலயத்தையும் குறிக்கும்.
இந்த இடத்தில் மேற்காட்டிய 2 அர்த்தப்படியும் தீர்க்க
தரிசனம் நிறைவேறியிருக்கிறது. கூடாரம் என்ற வார்த்தை தேவால
யத்தைக்குறிக்குமானால், சேமியர் ஆராதிக்கிற மெய்த்தேவனை யாப்
பேத்தியரும் ஆராதிப்பார்களென்றர்த்தமாகும். ஐரோப்பாக்கண்டத்
தார்க்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவர்களைக் குணப்படுத்தினவ
ர்கள் சேமியரானதினாலே யாப்பேத்தியர் சேமின் தேவனை இந்நாள்வ
ரையும் ஆராதித்துவருகிறார்கள். கூடாரம் என்ற வார்த்தை வீட்டைக்
குறிக்குமானால், சேமியர் குடியிருக்கிற இடத்திலே யாப்பேத்தியரும்
குடியிருப்பார்களென்றர்த்தமாகும். அப்படியே யாப்பேத்தியரான
கிரேக்கரும் உரோமரும் சேமியர் குடியிருந்த யூதேயாவையும், ஆசி

யாக்கண்டத்தில் இன்னும் சில தேசங்களையும் தங்கள் கையாட்சிக்
குட்படுத்திக்கொண்டிருந்தும், இங்கிலிஷ்க்காரர்முதலான ஐரோப்
பியர்அநேகர் ஆசியாவிலுள்ள இந்தியாமுதலான இடங்களிலுமாயும்
தங்கள் எல்லைகளை விசாலமாக்கி இந்நாள்வரையும் அவ்விடத்தார்
நடுவே குடியிருக்கிறதினாலும் நிறைவேறிற்று.

இந்த வாக்கியத்தை இவ்வொரு வகையாய்த்திருப்பி அர்த்தப்
படுத்துகிறார்கள். எப்படியென்றால், தேவன் யாப்பேத்தை விர்த்
தியாக்கி சேமின் கூடாரங்களில் குடியிருப்பார் என்று தேவ
னைக்குறித்துச் சொல்லுகிறதாகத் திருப்புகிறார்கள். இந்த அர்த்தம்
எபிரேயுபாஷைக்கு இசைவாயிருக்கிறது. ஏனென்றால் இந்த
வாக்கியத்தில் "அவன்" என்ற வார்த்தைக்குச் சரியான பிரதிப்பேர்
எபிரேயுபாஷையிலில்லை. அப்படியானால் இந்தக் கருத்துப்படி "சே
மின்கூடாரங்களில் குடியிருப்பார்" என்ற தீர்க்கதரிசனம், சேமிய
ரான யூதருடைய ஆலயத்தில் கிருபாசனத்தின்மேல் செக்கினா என்ற
திவ்விய சமுகம் வந்து தங்கியிருந்ததினாலும் விசேஷமாய் ஏசு கர்த்தர்
மனிதவதாரம்பண்ணினபொழுது, யூதனாக யூதசனத்துக்குள்ளே
"கூடாரம்போட்டு" அவர்கள் நடுவே வாசம்பண்ணினதினாலும் நிறை
வேறிற்று.

"கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்" எகிப்திய
ரை கடைசியாக யாப்பேத்தியரான கிரேக்கர் ஜெயித்தார்கள். கிரே
க்கரும் ரோமரும் சீரியாவைக் கீழ்ப்படுத்தினதுமல்லாமல், மீதியாயிரு
ந்த கானானியராகிய தீரியரை கிரேக்க இராசாவாகிய அலெக்சந்த
ரும், கார்தேஜினியரை ரோமசேனாபதியாகிய சிப்பியோவும் ஜெயித்
துக் கீழ்ப்படுத்தினார்கள். அதுமுதல் அந்த கீர்ப்பந்த சந்ததியில் மீதி
யானவர்கள் (முதலில் சேமியரான சாரிசனருக்கும், பிற்பாடு) யா
ப்பேத்தியரான துருக்கருக்கும் அடிமைகளாயிருந்
து வருகிறார்கள். இப்படியாக பழைய உலகத்துக்கு நீதியின் பிரசங்
கியும், புதிய உலகத்துக்கு தீர்க்கதரிசியுமாயிருந்த நோவா இச்சமய
த்தில் தேவனால் ஏவப்பட்டுச் சொன்னவைகளெல்லாம் மகா எதார்த்
தமாய் நிறைவேறியிருக்கிறது. இது நம்முடைய வேதம் தேவனால்
உண்டானதென்பதை ரூபிக்கிற தெளிவான உதாரணமல்லவா?

படிப்பினை.

மனிதன் மிருகங்களைப்பார்க்க எவ்வளவு உயர்ந்த சிருஷ்டியாயி
ருக்கிறானோ அவ்வளவு அதிகமாய் தேவன் அவனுக்கு ஆசீர்வாதங்க
ளையும் சலாக்கியங்களையும் அருளியிருக்கிறார்.—தேவஅன்பும் சகோதர
அன்பும் பிரிக்கப்படக்கூடாத சம்பந்தமுள்ளது. ஆகையால், நான்
சகோதரனில் அன்புகூராவிட்டாலும் தேவனை முழு இருதயத்தோடு நேசி
த்து ஆராதித்துவருகிறேன் என்று ஒருவன் சொன்னால் அவன் தன்னை
முழுவதும் வஞ்சித்தவனாயும் வீண்பக்தனாயுமிருக்கவேண்டும்.
கொலைபாதகம் எப்பேர்ப்பட்ட அருவருப்புள்ள பாதகச்செயல்.—
கொலைபாதகனை நாம்காணும்போது அவனை எவ்வளவுதீழ்ப்பாய் எண்ணு
கிறோம். ஆனால் தேவகிருபையில்லாமல் அவனுக்கும் நமக்கும் யாதொ
ரு வித்தியாசமில்லையென்று அறியக்கடவோம். ஏனென்றால் அவனுடைய
இருதயமும் நம்முடைய இருதயமும் ஒன்றுபோல கெட்டது.

தவளை முதலிய சாதுவான ஜெந்துக்களைப் பிடித்து சுண்ணும்
புச் சீலையிலே கல்லைக் கட்டி விளையாடுவதும், பட்சி பறவைகள்
முதலும்பிராணிகள் இவைகளைப்பிடித்து சொக்கைகளைப் பிடுங்கியும் கண்
ணைவிட்டும் பிள்ளைகள் கையில் விளையாடக்கொடுப்பதும், தட்டாரப்பூச்



சிகளைப் பிடித்து வாலில் இழைகோர்த்து பறக்கவிடுவதும், ஆணிக்க
ளுத்துள்ள மாடுகளை நுகத்தில் பூட்டுவதும், கோழிகளை லேசாய்க்
கழுத்தறுத்து தள்ளிவிடுவதும், சாவிலே கழுவேற்றுவதும், பன்றி
வெள்ளாட்டுக்கடா இவைகளைப் பாணியில் ஏற்றி அறுத்து வதைப்ப
தும், நல்லபாம்புமுதலிய விஷஜெந்துக்களால் அபாயத்துக்கேதுவா
கும்போது அடியாமல் மனுஷர் உயிருக்குக் கெடுதியாக விட்டுவிடுவ
தமாகிய இத்தீய செயல்களுக்கு தேவன் ஒருபோதும் உத்தரவுகொ
டுக்கவில்லை. இப்படிச்செய்வது தர்மமல்ல பாவமுமல்ல என்று சிலர்
சொல்வார்கள். இது தப்பிதம். இப்படிப்பட்ட குரூரசெய்கைகளெ
ல்லாம் ஆறாம் கற்பனையினாலே தடைப்பாய் விலக்கப்பட்டிருக்கிற
தென்று சந்தேகமற அறிந்துகொள்ளவும்.

சேம் யாப்பேத்தென்பவர்களுடைய நன்மாதிரியைப் பின்பற்றி
தாய்தந்தைகள் அதிகாரியள் போதகன்மார்முதலான பெரியோர்க
ளைக் கனம்பண்ணும்படி படிக்கவேண்டும். இப்படிச்செய்கிறவர்களுக்
கு விசேஷித்த ஆசீர்வாதம் கிடைக்கும். ஆனால் பரியாசக்காரர் பெ
ரியமனுஷராவதில்லை தேவனுடைய சாபமே அவர்களுக்குக்கிடைக்கும்.

## The Parables of Christ.

## கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

### XI-வது. கெட்ட தோட்டக்காரரைக்குறித்து.

மத்தேயு 21: 33, 44. மாற்கு 12: 1—12. லூக்கா 20. 9—18.

(தொடர்ச்சி.)

இவ்வளவு கொடுமைகள் நடந்தும் எசமானுடைய பொறுமை தணி
யவில்லை. அவர்களுக்குப் புத்தி கற்பிக்க ஊழியக்காரன்மேல் ஊழி
யக்காரனை அனுப்புகிறான். உடனே கிராட்சத்தோட்டத்தைப் பிடுங்
கிக்கொண்டு அவர்களிடத்தில் பழிவாங்கவில்லை. இப்படிச் செய்ய
அவனுக்கு அதிகாரமிருந்ததென்று பின்னால் பார்க்கிறோம். தேவனு
டைய பொறுமை, நீடியசாந்தம் எவ்வளவென்று காட்டும்படிக்கு
இவனுடைய பொறுமையை இவ்வளவு மாட்சிமையாய்க் காட்டியி
ருக்கிறது. நாம் பகைக்கிற இந்த அருவருப்பான காரியத்தை செய்
யாதிருங்களென்று நாம் தீர்க்கதரிசிகளாகிய நம்முடைய ஊழியக்
காரரைக்கொண்டு உங்களுக்கு ஏற்கனவே சொல்லி அனுப்பிக்கொண்
டே இருந்தோம். எரேமியா 44: 4. ஆனால் நாங்கள் கீழ்ப்படியாத
வர்களாகி உமக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, உம்முடைய நியா
யப்பிரமாணத்தை தங்களுடைய முதுகுக்குப் பின்னாக வெறிந்து,
தங்களை உம்மண்டைக்குத் திரும்பும்படிக்கு அவர்களைத் திடச்சாட்
சியாய்க் கடிந்துகொண்ட உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொன்று
போட்டு கோபம் வருவிக்கிற பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள்.
நெகேமியா 9: 26. இந்த அதிகாரம் முழுவதும் இந்த உவமையின்பே
ரில் நல்ல வியாக்கியானமாயிருக்கும்.

கடைசியிலே அவன் தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.

அல்லது மாற்கு உருக்கமாய்ச் சொல்லுகிறபடி, அவனுக்குப் பிரிய
மான ஒரே குமாரனிருந்தான். என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்
றுசொல்லி அவனையுங் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான்.
6-ம் வசனம். வீட்டெசமான் தன் பணிவிடைக்காரரை அந்தத் துஷ்
டர் எவ்வளவு கொடுமையாய் நடத்தினபோதிலும், தன் குமாரனை
கண்யப்படுத்துவார்களென்று சொன்னது ஒரு ஆட்சேபனையாக
சிலர் எண்ணுகிறார்கள். வீட்டெசமானைக் குறித்த தேவனானவர் தம்
முடைய மகனை மனிதர்கள் எவ்விதமாய் நடத்துவார்களென்று ஆதி
முதல் நன்றாயறிந்திருந்தாரே என்பார்கள். மனிதனுடைய சுயாதீன
மும் தேவனுடைய முன் தீர்மானமும் எந்த விஷயத்திலும் இப்படித்
தான் சம்பந்தப்பட்டிருக்கிறது. அதை இங்கே விவரமாய் விஸ்தரிக்
கவேண்டியதில்லை. தேவ இரக்கம் கடைசியாக இதிலேதான் விசே
ஷித்து விளங்கிற்று. தமது குமாரனை அனுப்பினதைவிட அதிக அன்
பைத் தேவன் காட்டவுங்கூடாது. அவரை அசட்டைசெய்கிற பா
வத்தைவிடப் பெரிய பாவத்தை மனிதர்கள் செய்யவுங்கூடாது. கடை
சியாக வந்தவர் குமாரனென்றும், ஒரே குமாரனென்றும், அருமை
யான குமாரனென்றும் சொல்லியிருப்பதினால், கிறிஸ்துவுக்குந் தீர்க்
கதரிசிகளுக்கும் இருக்கிற பெரிய வித்தியாசத்தைப் பார்க்கிறோம்.
மெய்யான தேவ குமாரனுடைய மகிமையும் மகத்துவமும் இதிலே
விளங்குகிறது. எபி. 3: 5, 6. இரட்சகர் சொன்னதைக் கேட்டவர்
கள் இதின் கருத்தை அறிந்திருக்கவேண்டும். தம்மைத்தாமே தேவ
குமாரனாக்கிக்கொண்டாரென்று அவர்பேரில் குற்றஞ்சாற்றக்கூடாத
வர்களாயிருந்தாலும், தமக்குரியவனம் இத்தன்மையுள்ளதென்று அவர்
களுக்கு அவர் சொன்னது நன்றாய்த் தெரிந்திருந்தது.
தோட்டக்காரர் குமாரனைக் கண்டபோது இவன் சுதந்தரவாளி,
இவனைக் கொன்று இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்
களென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். யோ.
11: 47—53. யோசேப்பின் சகோதரர் அவனை நடத்தின விதமும்
இதற்கொத்திருக்கிறது. அவனைத் தூரத்தில் வரக்கண்டு அவன் தங்
களுக்குச் சமீபமாய் வருமுன்னமே அவனைக் கொலைசெய்யும்படி சதி
யோசனைபண்ணி ஒருவரையொருவர் நோக்கி, இதோ சொப்பனக்கா
ரன் வருகிறான், நாம் அவனைக் கொன்று அவனுடைய சொப்பனங்கள்
எப்படி முடியுமென்று பார்ப்போமென்றார்கள். 1 மோ. 36: 19.
யோசேப்பைக் கொன்று தேவன் கொண்ட எண்ணத்தை அவமாக்
க எண்ணிக் கடைசியாய் அதை நிறைவேற்றினதுபோல, யூதத் தலை
வரும் கிறிஸ்துவைக் குறித்திருந்த தேவ தீர்மானத்தை அவமாக்க
வேண்டுமென்றிருந்தாலும் அதை நிறைவேற்றுகிற கருவிகளானார்
கள். அப். 3: 18. 4: 27, 28. இவர்தான் சுதந்தரவாளி, சுதந்தரம்
இவருக்குத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. தகுந்த காலத்தில் இவ
ருக்குத்தான் அது கிடைக்கும். பூமியின் சுதந்தரங்களைப்போல அனு
பவிக்கிறவனுடைய மரணத்தினாலல்ல, அவருக்கென்று ஏற்பாடான
தினாலேயே அவருக்குக் கிடைக்கும். சுதந்தரவாளி என்கிற வார்த்தை
இப்பொழுது ஆஸ்தியை அனுபவியாமல், இனிமேல் அதைக் கட்டி
ஆளப்போகிறவனைக் குறிக்குமென்பதை நாம் நன்றாய் மனதில் வைக்
கவேண்டும். பிலி. 2: 9—11 வரை. கிறிஸ்து சகலத்திற்கும் சுதந்தர
வாளி. எபி. 1: 2. தேவ குமாரனாகவல்ல. இது ஆரியருடைய கொள்
கை. மனித குமாரனாகத்தான் அவர் சுதந்தரவாளியாயிருக்கிறார்.
தேவனாகவல்ல, மனிதனாகவே அவர் சர்வத்தையுஞ் சுதந்தரித்துக்



கொள்ளுகிறார். கர்த்தராவாகிய கிறிஸ்துவாயிருக்கிறார். தேவனுக்
அவர் சர்வத்தையும் சிஷ்டித்தவராச்சுதே.
இருதயஞ் சொல்லுகிறது கர்த்தருடைய செவியிலேறும் இருதயத்
தின் நினைவுதான் சரியானபடி நம்முடைய பேச்சுகள் அதினால்தான்
அவர்கள் சொல்லிக்கொண்டதாகக் கண்டிருக்கிறது. இவனைக் கொல்
லுவோம் வாருங்கள் என்று சொன்னார்கள். பரிசேயர் தங்களுடைய
இரகசியமான துர்யோசனைகளை ஒருவரோடொருவர் சொல்லிக்கொ
ண்டார்களென்றல்ல, தங்களுடைய அக்கிரமத்தை மனதார துணிந்
து நேரே நடப்பிக்கவேண்டுமென்கிற மனதோடு இவர்தான் மேசியா
இவரைக் கொல்லுவோமென்று வெளியரங்கமாய்ச் சொல்லிக்கொண்
டதாகவுமல்ல, சுதந்தரந் தங்களுக்கு வேண்டுமென்று ஆசித்தார்கள்.
கொஞ்சக்காலத்துக்கு இருந்து பிறகு ஒழிந்துபோகவேண்டுமென்று
தேவன் தீர்மானித்திருந்த ஏற்பாட்டை இவர்கள் என்றும் நிலைநிறுத்
தவேண்டுமென்று பார்த்தார்கள். குறைவான தங்களுடைய ஏற்பாட்
டில் இவர்களுக்கு அநேகஞ் சலாக்கியங்களும் அனுகூலங்களுமிருந்
தன. நிறைவான வேறு ஏற்பாடு வரும்போது இதுகளெல்லாம் நின்
றுபோம். நின்றுபோகாவிட்டாலும் வேறு மேலான சலாக்கியங்க
ளாக மாறிப்போம். அதுகளை இவர்கள் ஆசிக்கவில்லை. பெரிய சே
மாளுகிய தேவனே தற்காலத்துக்கென்று போட்ட சாரத்தை இறக்
கிவிட எத்தனமானார். அந்த வேலை முடிந்துபோச்சுது. இவர்க
ளோ அந்த அவருடைய நோக்கத்தைத் தடுக்கப் பார்த்தார்கள்.
என்ன நேரிட்டாலும் அதைத் தடுக்கவேண்டுமென்று எதிர்த்து நின்
றார்கள். மேலும் சுதந்தரவாளியைக் கொன்று சுதந்தரத்தைத் தாங்
களே கட்டிக்கொள்ளலாமென்று நினைத்ததில் இவர்களுடைய சுய
நீதி விளங்குகிறது. சுயநீதியாவதென்ன? திவ்ய சுதந்தரத்தைக்
கட்டிக்கொள்ளப்பார்க்கிறது, தனக்கு மேலான ஒளியானது தனக்
குள்ளேதானே இருக்கிறதாக எண்ணுகிறது. மனிதனுக்குத் தயவாகக்
கொடுக்கப்படுகிறதை மனிதன் சுயமாய் உண்டாக்கித் தன் சொந்த
மாகப் பாராட்டுகிறது. உன்னததிலிருந்து அது வரவேண்டுமென்று
கருத்தமாய் எண்ணாமலிருக்கிறது. தங்களுடையதென்று அதைச் சொல்
லுகிறதினாலேயே அதை அணைத்துக் கெடுத்துப்போடுகிறார்கள். சூரி
யனிலிருந்து வரும் ஒரு கதிரை நாம் அதைவிட்டு விலக்கப்பார்த்தோ
மானால் அது என்னமாய்ப் போம். சுயநீதியிலுண்டாகுங் கெடுத
லைத் தேவதூதரும் மனிதரும் நன்றாய் அறிந்திருக்கிறார்கள்.
அவனைப் பிடித்துத் திராட்சத்தோட்டத்துக்குப் புறம்பே தள்ளிக்
கொலைசெய்தார்கள். மூன்று சுவிசேஷகரும் குமாரனைத்தான் இப்
படித் திராட்சத்தோட்டத்துக்குப் புறம்பாக தள்ளினதாகச் சொல்
லுகிறார்கள். எபி. 13: 12, 13. யோவான் 19: 17. மோசேயின் ஐந்தா
கமங்களில் பாளையத்துக்குப் புறம்பே தள்ளுகிறது தேவனுடைய
சனங்களிடத்திலிருந்தும அவர்களுடைய ஆசீர்வாதங்களில் கிடைக்
கும் பங்கிலின்றும் முற்றிலுந் தள்ளுண்டுபோகிறதைக் குறிக்கும். நா
போது தேவனையும், இராசாவையும் தூஷித்தானென்று சொல்லி
அவனைக் கொன்றபோது, அவனைப் பட்டணத்துக்கு வெளியே கொ
ண்டுபோய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறிந்து கொன்றார்
கள். 1 இராசா 21: 13. கிறிஸ்துவின் மரணத்தையும் அதின் நோக்
கத்தையும் இது செய்கையினால் காட்டுகிற ஒரு தீர்க்கதரிசனம். குமா
ரனை முந்திக் கொன்று சவத்தை வெளியே எறிந்துவிட்டதாக மாற்
கில் கண்டிருக்கிறது. அதாவது, வழக்கப்படி அடக்கஞ்செய்யவில்

லையாம். முதலாளி கனிகளுக்காக அனுப்பினதற்குப் பதில் இதுதான் என்று சொல்லுகிறதுபோல தாங்கள் செய்கிறதை மற்றவர்கள் பார்க்கும்படி வெளியே எறிந்துவிட்டார்கள்.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

---

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 6: 25—34.

(தொடர்ச்சி.)

"ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைப் பானம்பண்ணுவோம், அந்தந்த நாளுக்கு அதினதின் வருத்தம் போதுமே."

கிறிஸ்துமார்க்கம் நாம் நிறைவேற்றவேண்டிய கடமை இன்னதெ
ன்று நமக்குப் போதிப்பதுந்தவிர, நமது ஆறுதலுக்கானவைகளையும்
நமக்குக் காட்டுகிறது. இந்த வசனங்களில் கிறிஸ்துவானவர் கொடுக்
கும் விதிகள் நம்முடைய சுகவாழ்வுக்கானவைகள். வியாகுலமுண்
டாக்கும் கவலைகள், இனிமேல் என்காரியமெப்படியிருக்குமோவென்று
கலக்கமுற்றுப் பயப்படுதல், தெய்வச் செயல்களெல்லாம் நன்மையா
யிருக்குமென்று நம்பாமையாகிய இவைகள் தமது பத்தருக்குள்ளிருக்
கக்கூடாதென்று கிறிஸ்து இந்த வசனங்களில் விதிக்கிறார். உலகம்
துத்தளிப்பு நிறைந்ததாயிருக்கிறது. இன்றைக்கொரு தீங்கைக்குறித்
தும் நாளைக்கு வேறொன்றைக்குறித்தும் அஞ்சுகிறோம். ஒரு காலத்தில்
நமது இஷ்டர்கள் பந்துசனங்களைக்குறித்துக் கலங்குகிறோம். இன்
னொரு காலத்தில் நமக்கே வந்த வியாதியையாவது, இழுக்கண, இடை
யூறுகளையாவது யிட்டுப் பயப்படுகிறோம். நாளைத்தினத்தைக்குறித்த
பயத்தினாலே இப்போதிருக்கிற சுகத்தையனுபவிக்கக்கூடாதவர்களா
யிருக்கிறோம். ஒருக்காலும் வரமாட்டாத தீமைகள் வரும் வருமென்
று ஒருவேளை பார்த்திருந்து நம்முடைய ஆவி குறைந்துபோகிறது.
மனிதருக்கு மிச்சமாய்க் கலக்கமுண்டாக்குவது கிறிஸ்து இந்த வச
னத்திற்சொல்லுகிறபடி அன்றன்றைக்கு வேண்டிய ஆகாரத்தைகுறித்த
கவலைதான். எக்காலத்திலும் எத்தேசத்திலுமுள்ள சனங்களில் மிகு
தியானவர்கள் தங்கள் சீவனார்த்தத்தைக்குறித்துப் பயந்தேவந்திருக்
கிறார்கள். கூலிக்குப் பாடுபடும் ஏழைகள், வேலை எங்கே கிடையாமற்
போகுதோ, வியாதியினாலே எங்கே ஒன்றுஞ் செய்ய ஏலாமற்போகு
தோ, எங்கே தங்கள் பெலத்துக்கு மிஞ்சிச் சமுசாரம் பெருத்து செ
லவு அதிகப்பட்டுப்போய் தங்களால் தாங்கக்கூடாமற் போகுமோ,
அகவிலையுயர்ந்து காலங்கழிப்பது தங்களுக்கு வருத்தமாகுமோ என்
றிப்படி கவலைப்பட்டுப் பயப்படுகிறார்கள். உள்ளவர்களிலும் அநே
கர் தாங்கள் கண்யமாய் சீவனம்பண்ண வகையென்னவென்று
கவலைப்பட்டுக் கலங்குகிறார்கள். இரட்சகரோ சொல்வது "என்னத்
தை உண்போம், என்னத்தைக் குடிப்போமென்று உங்கள் சீவனுக்
காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும்
கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகார
த்தைப்பார்க்கச் சீவனும் உடையைப்பார்க்கச் சரீரமும் விசேஷித்த



தல்லவா" தேவன் உங்களுக்குச் சீவனைத் தந்திருக்கிறார். அந்தச் சீவனைத் தந்தவர் அதைப் போஷிப்பதற்கு ஆகாரத்தையுந் தருவாரென்று நம்பவேண்டாமா! உங்களுக்குச் சரீரத்தை அவர் கொடுத்தார், அதை மூடுவதற்கு உடையையுங் கொடுப்பாரென்று நம்பக்கூடாதா? உங்களுக்குப் பெரியகாரியத்தைச் செய்தவர் சிறியகாரியத்தையுஞ் செய்வாரென்று நம்பக்கூடாதா? "ஆகாசத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களிற் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்." அவைகள் தாங்களே விதைத்து அறுத்துச் சேர்த்ததையல்ல, தேவன் அவைகளுக்கு அநுக்கிரகித்த ஆகாரத்தைத்தான் சேர்க்கிறது. "அவைகளிலும் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா" அவைகளிலும் நீங்கள் தேவனுடைய பார்வையில் அதிக அருமையானவர்களல்லவா? அப்படியிருக்கப் பட்சிகளைக் கவலையாய் விசாரித்துவருகிறவர் உங்களை அதிகக் கவலையாய் விசாரிப்பாரோ. "கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவுக்கு ஒரு முழத்தைக் கூட்டுவான்" அதாவது கலக்கம் நிறைந்த உங்கள் கவலைகளால் உங்கள் சரீர அளவை அதிகரிக்கச்செய்வது கூடாததாயிருப்பதுபோல உங்களுக்குக்கிடைத்த பங்குவீதத்தையும் உங்கள் கவலைகளால் அதிகரிக்கச்செய்வது கூடாது. ஆகையால் நீங்கள் கவலைப்படுவதினாலே என்ன பிரயோசனம்." உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன! காட்டுப் புட்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை" ஆகாசத்துப் பறவைகளுக்குத் தேவன் தவறாமல் போசனங்கொடுக்கிறவர் உங்களுக்கும் ஆகாரங் கொடுப்பாரென்றும், காட்டுப் புட்பங்களுக்கு உடுத்துகிறவர் உங்களுக்கும் உடை கொடுப்பாரென்றும் நீங்கள் ஏன் நம்புகிறதில்லை. அவைகள் உடைக்காகக் கவலைப்பட்டு உழைக்காமலும் நூற்காமலுமிருந்தும், "மகிமைபொருந்திய சாலோமோனும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அப்படியிருக்க அற்ப விசுவாசிகளே இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா. ஆகையால் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப்போமென்று கவலைப்படாதிருங்கள்" இந்த அற்பக்காரியங்களைக்குறித்த கவலை உங்களை வருத்தப்படுத்தவேண்டாம். "இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்." இந்த லௌகிக காரியங்களைக்குறித்துக் கவலைப்படுவது அஞ்ஞானிகள். அதாவது அவிசுவாசிகளுடைய தொழில். தேவனை அறியாதவர்களை இவ்வுலக ஆதாயத்தைக்குறித்த கவலைகள் அரிக்கட்டும், நீங்களோ "முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள்" என் இராச்சியத்தைச் சேர்ந்தவர்களாகவும் என் நீதிக்குப் பங்காளராகவும் முக்கியமாய்க் கவலைப்படுங்கள். இந்த நல்ல பங்கை ஆதாயப்படுத்திக்கொண்டதின்பேரில் மகா பெரிய ஈவாகிய இரட்சிப்பைப் பரிபூரணமாய் அளிக்கிற தேவன் உங்களுக்கு நன்மையாகவும் வேண்டியதாகவுமிருக்கும் உலக ஆசீர்வாதங்களை நிச்சயமாகவே அளிப்பாரென்று நம்பி உங்களைத் தேற்றிக்கொள்ளுங்கள். "இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படுமென்று" நிச்சயமாய் நம்புங்கள். "ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிரும்

கள். நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்" துக்கங்களைக்குறித்து ஓயாமல் பயந்துபயந்து உங்கள் துக்கத்தை அதிகரித்துக்கொள்ளவேண்டாம். இப்போது உங்களுக்கு இருக்கிற நன்மைகளை அனுபவித்துக்கொண்டு அவைகளுக்காகத் தேவனைத் துதித்துப் புகழ்ந்து எதிர்காலத்துக்காகக் கர்த்தரை நம்புங்கள். நீங்கள் அஞ்சுகிற தீமை ஒருவேளை ஒருக்காலும் வராது. வந்தாலும் இப்போது உங்களுக்கெவ்வளவும் தெரியாதிருக்கிற சிலவகைகளினாலே உங்களை ஆதரிப்பார். இன்றைக்காகக் கவலைப்படுங்கள். நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் வருத்தம் போதுமே.

இந்த வாக்கியங்களின் கருத்து இதுதான். இதைக்கொண்டு நாம் வணங்குகிற தேவன் எவ்வளவு இரக்கமுள்ளவரென்பதை அறிந்துகொள்ளலாம். மனிதரைச் சஞ்சலப்படுத்த அவருக்குப் பிரியமில்லை. அவருடைய விதிகள் இவ்வுலகத்தின் வழியாய் நாம் செல்லவேண்டிய பாதையானது மகிழ்ச்சியும் லேசுமாயிருக்கச் செய்யத்தக்கதுகள். இந்த விதிகளைப்போல நோவற்ற விதிகளைக் கொடுக்க எந்த உலக ஞானியாலுங் கூடாது. நாம் மனதில் வைக்கவேண்டியதொன்றுண்டு. அதாவது சுவிசேஷத்தின் நன்மைகளைத் தேடிப் பெற்றுக்கொண்டவர்களுக்குமாத்திரம் இங்கே சொல்லப்பட்ட தேற்றரவுண்டாகுமென்பதைத்தான். முந்த நாம் தேவனில் விசுவாசம் வைக்கவேண்டும். இல்லாவிட்டால் நாம் அவரில் எப்படி நம்பிக்கைவைப்போம். சகலகாரியங்களும் அவருடைய நியமிப்பின்படி நடக்கிறதென்று நாம் முந்தி அறியவேண்டும். இல்லாவிட்டால் அவருடைய தெய்வச் செயலில் என்ன நம்பிக்கை நமக்கிருக்கக்கூடும். மூன்றாவது நாம் தேவனுடைய இராச்சியத்தையும் நீதியையுந் தேடவேண்டும். அப்போது வான இராச்சியத்தையும் நித்திய மகிமையையுங்குறித்து நம்பிக்கையாயிருப்பதுந்தவிர, நமது சரீரத்துக்கு அவசரமாய் வேண்டியவைகளெல்லாம் நமக்குக் கூடக்கொடுக்கப்படும் என்று நம்பலாம்.

---

## Communicant's Companion.

# நற்கருணை விளக்கம்.

## ௯. அதிகாரம்.

### தியானமும் ஜெபமும் இந்தப் பந்தியைச் சேர்பவர்களுக்கு அவசியம்.

(தொடர்ச்சி.)

என் ஆத்துமாவே! நீ இதைத் தியானித்துச் சந்தோஷப்படு. முந்தியாவது பிந்தியாவது நீ அவர்களோடு நித்தியகாலமாயிருந்து முடிவில்லாத சந்தோஷத்தை அனுபவிக்கும்படியாய் அவர்களோடு சேர்க்கப்படுவாய். நீ இங்கே சிறிய கூட்டுக்கூட்டங்களாகிய சில பரிசுத்தவான்களோடே ஐக்கியமாயிருக்கிறாய். அவர்களிலும் மாயக்காரருந் தன்னயக்காரருமானவர்கள் எத்தனை பேருண்டு. அவ்விடத்திலோ களங்கமில்லாத ஆயிரத்தாயிரம் பரிசுத்தவான்களோடே சேர்க்கப்



பட்டுச் சூரியனைப்போல பிரகாசித்துக்கொண்டிருப்பாய். அதுவரைக்கும் இந்த உலகத்தில்தானும் எத்தனையோ பரிசுத்தவான்கள் கிறிஸ்து இயேசுவின்மூலமாய் உனக்கு இனத்தவர்களாயிருக்கிறார்கள். உன்னோடே அடிக்கடி பேசிப் பழகிக்கொண்டிருக்கிறவர்களுமுண்டு. கடிதத்தின்மூலமாய் ஐக்கியமாயிருக்கிறவர்களுமுண்டு. முன்னுமுகமறியாமல் அநேகாயிரம் பரிசுத்தவான்களும் இந்த உலகத்தில் சுவிசேஷ இராக்ஷியத்தில் உன்னோடே ஐக்கியப்பட்டவர்களாயிருக்கிறார்கள். உன்னையும் அவர்களையும் நடத்துகிற சட்டமொன்றே. ஏவி நடத்துகிற ஆவியொன்றே. உனக்கும் அவர்களுக்குமிருக்குஞ் சாயலுமொன்றே. உனக்கும் அவர்களுக்குங் கொடுக்கப்பட்ட பொதுவான வாக்குத்தத்தங்களுமொன்றே. உன்னையும் அவர்களையும் இணைக்கிற சரீரமுமொன்றே. அவர்களோடு சேர்ந்து நாடோறும் அந்த ஒரே கிருபாசனத்தைச் சேருகிறாய். புத்திரசுவிகாரத்தின் ஒரே ஆவியைப் பெற்று அப்பா பிதாவே என்றும் கூப்பிடுகிறாய். இன்னும் கொஞ்சக் காலத்துக்குள்ளாக நீ அவர்களோடுகூட மகிமையின் ஆசனத்துக்கு முன்பாகவும் காணப்படுவாய்.

(8) மோக்ஷ பாக்கியத்தையும்பற்றித் தியானிக்கக்கடவோம். இதைத்தியானிப்பதில் நம்முடைய மனம் எவ்வளவாய்ப் பரவசப்படும்! மோக்ஷம் நம்முடைய கண்ணுக்குமுன்பாய் நிற்பதும் நம்முடைய இருப்பிடம் அங்கே இருப்பதும் நிசமானால் அது நம்முடைய இருதயத்தில் எப்போதுமிருப்பது நிச்சயம். என்னாத்துமாவே! இதைப்பற்றித் தியானிப்பதில் சந்தோஷங்கொள். ஆபிரகாம் தனக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தைச் சுற்றிப்பார்த்ததுபோலவும், மோசே பிஸ்காக் கொடுமுடியினின்று அதைப் பார்த்ததுபோலவும் நீ விசுவாசக் கண்களினாலே உனக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட அந்தப் பரம கானானைப் பார். அங்கேயிருக்கிறவர்கள் செய்துவருகிற வேலை இன்னதென்பதையுங் கவனி. சகல நீதியும் பரிசுத்தமும் அலங்காரமுமுடைய தேவனுடைய திருமுகத்தை எப்போதும் தரிசித்துக்கொண்டிருந்து ஜீவவிருக்ஷத்தின் கனியையும் மறைக்கப்பட்ட மன்னாவையும் புசித்து இரவும் பகலும் ஓயாமல் பராபரனைத் துதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

உன்னுடைய தற்கால நிலைமையையும் இனிமேல் அடையப்போகிற அந்த சிறந்த பாக்கியமுள்ள நிலைமையையும் ஒத்துப்பார். இங்கேயிருக்கிற உன்னுடைய துன்ப துயரமும், பாவப் பாரமும் உன்னைவிட்டு முற்றிலும் எடுபட்டுப்போம். சாத்தான் உன்பேரில் எய்யும் அக்கினி அம்புகளாகிய சகல சோதனைகளும் அங்கே உன்னைச் சேர்வதில்லை. உன் இருதயத்தின் கேடுபாடுகளும், உன் பாவக் குற்றங்களும், உனக்குள்ள சகலவிதமான சந்தேகங்களும் உன்னைவிட்டு முற்றிலும் எடுபட்டுப்போம். அங்கே சரீர வேதனை இல்லை; வியாதி இல்லை; துக்கமில்லை; உன் கண்ணீர் யாவுந் துடைக்கப்படும். இங்கே ஆவிக்குரிய உன் சந்தோஷங்கள் அங்கே பூரணமாகும். தேவனைப்பற்றின அறிவு, சந்தோஷம், அவருக்குள்ளான ஐக்கியம் இவைகளெல்லாம் அங்கே உனக்கு இடைவிடாத நித்திய விருந்தாயிருக்கும்.

II. நம்முடைய தியானத்தோடேகூட ஜெபமுங் கலந்திருக்கவேண்டும். பவுலப்போஸ்தலன் கிறிஸ்தவன் தரித்துக்கொள்ளவேண்டிய போராயுதங்களெல்லாவற்றையும் முடிக்கிறதோடேகூட "எப்போதும் ஜெபம்பண்ணுங்கள்" என்றும் அதோடே சேர்த்துச் சொல்லுகிறார். ஜெபமானது போராயுதங்களெல்லாவற்றையுஞ் சேர்த்துக்

கட்டுகிற கச்சையாயிருக்கவேண்டும். ஜெபமின்றி நம்முடைய பிரயத்தனங்களெல்லாம் அவமும் அபலமுமாம். ஆகையினாலே நாம் இந்தப் பரிசுத்த பந்திக்கு ஆயத்தப்படும்போதெல்லாம் இரண்டு முகாந்தரங்களையிட்டு ஜெபத்தில் தரித்திருக்கவேண்டும்.

(1) ஜெபமானது நமக்குள்ளிருக்குந் தேவகிருபையைத் தூண்டிவிடுகிறதுபோலிருக்கிறது. நாஞ்செய்யும் எந்தத் தேவ ஊழியமும் படிப்படியாய் நடக்கத்தக்கது. ஜெபத்தினுடைய காரியம் அப்படியல்ல. ஜெபத்தின் மூலமாய் நம்முடைய ஆத்துமா ஒரு நிமிஷத்தில் தேவனண்டை சேர்ந்து அவரோடே சம்பாஷிக்கிறது. அதின்மூலமாய்த் தேவனைச் சந்திக்க நம்முடைய மனம் ஆயத்தப்படுகிறது. நம்முடைய அருமை இரக்ஷகரும் தம்முடைய பிராயச்சித்தப் பலியாகிய தம்மைத் தேவனுக்குச் செலுத்துமுன் ஜெபத்திலே பின்னிட்டார். வீட்டிலே நீண்ட ஜெபம்பண்ணினார். தோட்டத்திலே "பலத்த சத்தத்தோடுங் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணினார்." கிறிஸ்து பூமியிலிருந்தபோது தேவன் வானத்திலிருந்து மூன்றுவிசை அவரோடே பேசினதாக வாசிக்கிறோம். இந்த மூன்றுவிசையும் நம்முடைய இரக்ஷகர் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தவராகக் காணப்படுகிறார். இயேசு ஞானஸ்நானம்பெற்று ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும்போது வானந்திறக்கப்பட்டதென்றும், மறுரூபமானபொழுது அவர் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்க மறுரூபமானாரென்றும், அவர் பாடுபடுவதற்குச் சற்றுமுன் பிதாவே உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துமென்று ஜெபம்பண்ணினபோது நான் அதை மகிமைப்படுத்தினேனென்று வானத்திலிருந்து சத்தமுண்டாயிற்றென்றும் வாசிக்கிறோம். தருசுஊரானாகிய சவுல் ஜெபம்பண்ணினான், அப்பொழுதே ஒரு தரிசனையைக் கண்டான். கொர்நேலியு ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான். தரிசனையைக் கண்டான். பேதுருவும் அப்படியே. இந்தத் திருஷ்டாந்தரங்களினாலும், இதைப்போலொத்த திருஷ்டாந்தரங்களினாலும் தேவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றுகிறதற்கு ஜெபமே நம்மை ஆயத்தப்படுத்துகிற கருவியென்று நினைத்துக்கொள்ள வேண்டும்.

(2) தேவன் வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறதும் நமக்கு அவசியமுமான தேவ வரங்களை வாங்கிக்கொண்டு வருகிறதற்கு குறிக்கப்பட்ட கருவியாயிருக்கிறது. தேவனிடத்திலிருந்து நமக்கு ஒத்தாசை வருகிறது. அவரே நமக்கு உதவிசெய்வோமென்றும், நமக்குப் புதிய இருதயத்தைக் கட்டளையிட்டுத், தம்முடைய ஆவியை நமக்குள்ளே வைத்து அவருடைய கட்டளையின்படி நடக்கும்படி செய்வோமென்கிறார். இப்பேர்ப்பட்ட தேவாசீர்வாதங்கள் நமக்குண்டாகும்படி நாம் அவரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்பது அவருடைய சித்தம். ஜெபத்தின்மூலமாய் நாம் அவரை வரவழையாவிட்டால் அவருடைய பிரசன்னம் நம்மோடிருக்குமென்று எப்படி எண்ணலாம்? எப்பேர்ப்பட்ட நன்மைகளும் ஜெபத்தின்மூலமாய் அருளப்படுகிறதென்பதை அறிந்திருக்கிறோம். ஆனால் நாம் தேவனைச் சேரும்போது என்னத்துக்காகச் சேருகிறோமென்பதையும் தியானிக்கவேண்டும். "மனதின் யோசனைகள் மனிதனுடையது, நாவின் பிரதியுத்தரம் கர்த்தராலிருக்கும்" என்று சாலொமோன் சொல்லுகிறார். "நாம் ஜெபம்பண்ணவேண்டியது இன்னதென்று அறியாதிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே சொல்லிமுடியாத பெருமூச்சுகளாலே உதவிசெய்கிறார்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார்.